கும்மிப் பாடல்கள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டாக்டர் ஏ.என்.பெருமாள்

கும்மிப் பாடல்கள்

டாக்டர் ஏ. என். பெருமாள்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
டி. டி. டி. ஐ. அஞ்சல்
தரமணி, சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	KUMMI-P-PAADALKAL
Editor	:	Dr. A. N. PERUMAL Associate Professor International Institute of Tamil Studies, Madras-600 113.
Publication Number	:	52
Language	:	Tamil
Edition	:	First
Copy Right	:	International Institute of Tamil Studies, Madras-600 113.
Date of Publication	:	August 1982
Paper used	:	Mandya 16 kg.
Size of the Book	:	21 × 14 Cms.
Printing types used	:	10 Point Tamil Roman
Number of Pages	:	viii + 392
Number of Copies	:	1200
Price	:	Rs. 16-00
Printing	:	VEK PRINTERS No. 34, Kothawal Street, Alandur, Madras-600 016.
Binding	:	Card Board Lamination
Subject	:	Tamil Literature
Summary	:	Nine Kummi Songs with vivid Comments.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்)
தரமணி,
சென்னை-600 113.

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்
இயக்குநர்

29-9-1982

முகவுரை

டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்களுடைய 'கும்மிப் பாடல்கள்' என்ற நூல் இரண்டு ஆண்டுகளில் நல்ல உழைப்பால் மலர்ந்துள்ள ஒன்று. தொகுத்துள்ள கும்மிப் பாடல்கள் அனைத்தும் இது வரையில் அச்சில் வராதவை. இந்த ஒன்பது கும்மிப் பாடல் களையும் தமிழ் ஆய்வு உலகிற்கு டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்கள் தந்துள் ளமை பாராட்டத்தக்கது. வரலாற்று அடிப்படையில் கும்மிப் பாடல்கள் எல்லா ஆய்வாளருக்கும் பெருந் துணை புரியும் என்பதில் ஐய மில்லை.

இது போன்ற பல நல்ல நூல்களை டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்கள் தமிழ் உலகிற்குத் தரவேண்டும் என்று விரும்புகிறேன்.

நிறுவனத்தில் எல்லாப் பணிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

உரிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத்தந்த 'வெக் பிரிண்டர்ஸ்' உரிமையாள ருக்கு எங்கள் நன்றி.

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்

முன்னுரை

தமிழ் நாடு அரசு பயனுடைய சிறந்த இலக்கியப் பணியாகப் பழஞ் சுவடிகளைத் திரட்டிப் பதிப்பித்து வெளியிட விரும்புகிறது. அத்தகைய நல்ல பணிக்கு நல்லூக்கமும் பேரூக்கமுமாகத் திகழும் மாண்புமிகு கல்வி அமைச்சர் உயர்திரு செ. அரங்கநாயகம் அவர்களின் அன்பான தூண்டுதலை அடிநிலையாகக் கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் உயர்திரு சா. வே. சுப்பிரமணியன் அவர்கள் அரிதின் முயன்று பல்வேறு துறைகளைச் சார்ந்த பல நல்ல சுவடிகளை நிறுவனத்தின் சார்பில் அச்சுருவாக்கி வெளியிட்டுத் தமிழுக்கு அரிய சேவை செய்து வருகிறார்கள். அவர்களின் அன்பான விருப்பத்துக்கு இணங்க 'கும்மிப் பாடல்கள்' என்ற நூல் ஒன்பது சுவடிகளின் இணைப்பதிப்பாக வெளிவருகிறது.

கும்மி ஒரு நாட்டுப்புறக் கலை. அதற்கு உதவும் கும்மிப் பாடல்கள் அருமையான இலக்கியம். இந்த இலக்கியத்தைச் சார்ந்த பல்வேறு வகையான கும்மிப்பாடல்கள் இந்த நூலில் இடம் பெறுகின்றன. கும்மிப் பாடலைப் பற்றிய சிறப்புச் செய்திகள் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்று முதலில் தரப்பெற்றுள்ளன. பின்னர் ஒவ்வொரு கும்மிப்பாடலும் அறிமுகவுரை, விளக்கவுரை ஆகியவற்றுடன் பதிக்கப் பெற்றுள்ளது. சுவடிகளில் செல்லரித்துக் கண்டு பிடிக்க முடியாத அளவுக்குச் சிதைந்த பகுதிகள் புள்ளியிட்டுக் காட்டப் பட்டிருப்பதைக் காணலாம். இப்படி இருக்கலாம் என்று கருதப்பெற்ற பகுதிகள் பிறைக் கட்டுக்குள் தரப்பட்டுள்ளன.

நூலின் இறுதியில் அகரவரிசையில் சிறப்பு விளக்கங்கள் தரப் படுகின்றன. பல அரிய செய்திகளைக் கும்மிப் பாடல்கள் தோன்றிய இடங்களைச் சார்ந்த அன்பர்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. கடிதங்கள் வாயிலாகவும், கலந்துரையாடல் வழியாகவும் சிறப்பான செய்திகளை விளக்கமாகத்

தந்து உதவிய அன்பர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைத்து மனம் களிக்கிறது.

இந்தத் தொகுப்பில் இடம் பெறும் 'மாடன் கும்மி' என்ற சுவடி திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகக்கீழ்த்திசைச் சுவடிக் காப்பகத்தைச் சேர்ந்தது. ஏனைய எட்டுச் சுவடிகளும் சென்னையைச் சேர்ந்த கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து பெற்றவை. சுவடிகளைப் படியெடுக்க அனுமதி தந்த சுவடிக் காப்பக மேலாளர் இருவருக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் நன்றி உரியது. சுவடிகளைப் படியெடுத்துத் தந்த அன்பர்களும் நன்றியுடன் நினைக்கப்படுகிறார்கள்.

கையெழுத்துப் படிகளைச் சரிபார்த்தல், பாடல்களை வழுவின்றி அமைத்தல், நல்ல முறையில் அச்சுப்படிகளைத் திருத்தல் ஆகியவற்றுடன் இந்த நூல் சிறப்பாக அமைவதற்குரிய நல்ல வழிமுறைகளைக்கூறல் போன்றவற்றைச் சோர்வில்லாது செய்து உதவிய அருமை நண்பர் சுவடியியல் அறிஞர் திரு. மு. கோ. இராமன் அவர்களுக்கு உளங்கனிந்த நன்றி உரியது. ஓரிரு சுவடிகளை ஒழுங்கு பெற எழுத முதன்முதலில் உதவிய சுவடியியல் பேராசிரியர் திரு. பூ. சுப்ரமணியன் அவர்களுடைய பணிவான அன்பும் பயனான துணையும் நன்றியுடன் கருதப்படுகின்றன.

வரலாறு, சமயம், சமூகம் போன்றவற்றைப் பற்றிய பல அரிய செய்திகள் இந்தக் கும்மிப் பாடல்கள் வாயிலாக அறியக்கூடியவைகளாக உள்ளன. பல இடங்களைப் பற்றிய பழஞ் செய்திகளைப் பொதுப்படையாக விளக்குவதுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் நாட்டு நிலையைச் சிறப்பாக விளக்குகின்றன.

சுவடிகள் நூலாகின்றன. அவற்றின் வழியாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தூர்ந்து போன பல உண்மைகள் அறியக் கிடைக்கின்றன. இத்தகைய உளநிறைவுடன் 'கும்மிப் பாடல்கள்' என்ற தொகுப்பு நூல் தமிழ் மக்களுக்குப் படையலாகப் பணிவுடன் தரப்பெறுகிறது.

சென்னை-600 113 அன்பன்,
26-8-1982 ஏ. என். பெருமாள்.

பொருளடக்கம்

		பக்கம்
தமிழில் கும்மிப் பாடல்கள்	...	1
Kummi Songs	...	53
ஆவுடையார் கும்மி	...	64
சிங்கை அழகிய அம்மன் கும்மி	...	88
சிவயோகவல்லி கும்மி	...	116
சீரணியம்மன் கும்மி	...	128
சீனய்யங்கார் கும்மி	...	163
சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி	...	226
நல்லாண்டவர் கும்மி	...	242
மருத பாண்டியன் கும்மி	...	262
மாடன் கும்மி	...	291
விளக்கவுரை	...	307
பிற்சேர்க்கை I		
அச்சான கும்மிப்பாடல்கள்	...	361
பிற்சேர்க்கை II		
சுவடியுருவில் கும்மிகள்	...	375
அருஞ்சொல் அகராதி	...	376

தமிழில்
கும்மிப் பாடல்கள்

நாட்டுப்புறக் கலையாகக் கும்மிப் பாடல்கள்

மனித மனம் அகத்தில் எழும் உணர்ச்சி உந்தலின் பயனாக வேகமாக எழுச்சியுற்றுப் பலவிதமான புறச் செயல்களைச் செய்து அவ்வுணர்வின் போக்கையும் தன்மையினையும் பிறருக்குப் புலப் படுத்திக் காட்டும் இயல்புடையது. இத்தகைய உணர்ச்சிப் புலப் பாட்டில் ஓர் ஒழுங்கு அமையும் போது அதில் ஒருவகையான இன்ப மும் கவர்ச்சியும் ஏற்படுகிறது. அதுவே பலவகையான கலைகளாக உருவெடுத்துக் கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும் சுவை பயக் கின்றன.

பெறப்படும் சுவையானது இன்பமாகவோ துன்பமாகவோ இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதில் கலைத்தன்மை உயிர்ப் புடன் தோன்றி உணர்வுடன் வெளிப்படவேண்டும். செம்மை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் உண்மையான உணர்ச்சிப் புலப்பாடு இருக்க வேண்டும். அத்தகைய உணர்ச்சி வெளிப்பாட்டில் அடுத்தவர்கள் தங்களுடைய உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை அடையாளம் காண வேண்டும். அவற்றையே மக்கள் விரும்பி ஏற்பர். கலைகளாக ஒப்புக் கொள்வர். ஒழுங்கு சிறந்து விளங்குமானல் அவற்றைச் சிறப்பாக மதிப்பர். அவற்றை வழங்கும் கலைஞர்களை மனமுவந்து ஆதரித்து மகிழ்வர். திறமைக்குத் தகுந்த பரிசிலும் கொடுப்பர்.

முதன் முதலில் இத்தகைய கதைகள் கட்டுப்பாடுகளுக்கு உட் படாது ஏதோ ஒருவிதமான ஒழுங்கை இயல்பாகக் கொண்டு விளங்கி இருக்கும். அதனையே நாட்டுப் புறக் கலைகள் என்று இன்று கூறுவர். இத்தகைய இயல்பான கலைகளை இன்றும் நாட்டுப் புறமக்கள் ஆதரித்து வருகின்றனர். விழாக்களில் இத்தகைய கலை களுக்குச் சிறப்பான இடம் கொடுத்து வளர்க்கிறுர்கள். கும்மியடித்துப்

பாடும் கலை நாட்டுப்புறத்தில் சிறப்பான இடம் பெற்று தமிழ் நாட்டில் பல ஊர்களில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அது ஆடல் பாடல் ஆகிய இரு கலைகளும் இணைந்த ஒரு கலையாக விளங்கு கிறது.

பெரும்பாலான நாட்டுப்புறக் கலைகள் காலப் போக்கில் பல விதமான ஒழுங்குகளையும் கட்டுப் பாடுகளையும் ஒப்புக் கொண்டு சீர்மையடைந்து செம்மைக் கலைகளாக உருமாறிய மைந்துள்ளன. உருத் திரிந்த கலைகளும் உண்டு. கலைகள் இணைந்து கூட்டாக விளங்கிச் சிறப்பதையும் காணலாம். நாட்டுபுறக் கலைகளாக இருந்து கால மாற்றத்தால் செம்மையும் சீர்மையும் பெற்று உருவானவற்றைத் திருந்திய கலைகள் (Classical Arts) என்று கூறுவர். அவற்றில் நாட்டுப்புறக் கலைகளின் இயல்பான வெளியீட்டுத்தன்மை அடக்கப் பட்டிருப்பது மிகத் தெளிவாகத் தெரியும். விதிகளால் நெருக்குண்டு, கட்டுப்பாடுகளால் அமுக்கப்பட்டு, இயல்பான தன்மைகளிலிருந்து மாறுபட்டு, திருந்திய கலைகளாக வெளிப்படுத்தப்படும். திருந்திய கலைகளின் தோற்றம் நாட்டுப்புறக் கலைகளில் அமைந்துள்ளது என்பது மிகத் தெளிவு. எவ்வளவு மாற்றங்கள் அடைந்தாலும் திருந்திய கலைகள் அவற்றின் தோற்ற நிலையிலுள்ள அடையாளங் களை முற்றிலும் இழந்து விடுவதில்லை.

மனநிறைவுடன் இன்பவுணர்வு பெற்று மகிழும் மனிதன் கை கொட்டிக் களிப்பதுடன் வாய் திறந்து பாடுவதையும் காணலாம். தன் மனம் போன போக்கில் கையடியும் வாய்ப்பாட்டும் நடக்கும். ஆனல் தன் இன்பச் செயல்களை அடுத்தவர் தொடுத்தவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று நினைக்கும் போது உணர்ச்சி வெளியீட்டு முறையை ஒழுங்குக்குக் கொண்டு வர விரும்புவது இயல்பே ஆகும். அத்தகைய விருப்பத்தில் உருவாவதே கலையாக வளர்ச்சியடை கிறது. சிறு குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளைப் பேச்சால் கூற இய லாது கைகளைச் சேர்த்துக் கொட்டி ஒலியை எழுப்பி உணர்த்து வதைக் காணலாம். 'பிள்ளைத் தமிழ்' இலக்கிய வகையில் இதற் கெனவே சப்பாணிப் பருவம் என்பதை அமைத்துப்பாடி இருப்பதைச் சிந்தித்துப் பார்க்கலாம். 'பாணி' என்பது கை ஆகும். கையுடன் கை சேர்வது சப்பாணி ஆயிற்று. இக்கருத்தையும் இணைத்துச் சிந்திக்கலாம்.

கை கொட்டிக் களிப்பதுடன் வாய் திறந்து பாடுவதும் இணைந்து கலைத்தன்மைக்கு ஆட்படுத்தப்படுவதின் வாயிலாகக் கும்மிப்பாடல் கலையாகத் தோன்றி வளரத் தலைப்படுகிறது.

நாட்டுப் புற மக்கள் தாங்கள் விரும்பியவாறு பாடல்களைப் புனைந்து வாய் மொழியாகப் பாடி ஆடி மகிழ்ந்திருப்பர். கோயில் விழாக்கள், சமுதாய நிகழ்ச்சிகள், குடும்பச் சிறப்புக்கள் ஆகியவற்றில் கை கொட்டிக் களிப்பதுடன் வாய் மலரப் பாடி மனம் இனிக்கக் கொண்டாடி இருப்பர். இதுவே கும்மிப்பாடலின் தோற்று |வாயாக அமைந்திருக்க வேண்டும். நாட்டுப்புறத்தில் அனைத்தும் வாய் மொழிப் பாடல்களாகவே இருந்திருக்கும். பின்னர் சிற்றூர்ப் புலவர் கள் பாடுவதற்குத் தகுதியான பாடல்களை எழுதிக் கொடுத்திருப்பர்.

திருந்திய பாடல் அமைப்புக்குத் தக்கவாறு கைகொட்டி ஆடும் முறையிலும் திருத்தம் ஏற்பட்டிருக்க வேண்டும். காலம் செல்லச் செல்லப் பாடல்களில் இலக்கிய நயங்களைப் புகுத்த புலவர்கள்விரும் புவது இயல்பு. அவ்வாறு இயற்றிய பாடல்களே இன்று தமிழில் கும்மிப் பாடல் இலக்கியங்களாகத் தோன்றி இன்று அளவிலும் எண்ணத்திலும் பெருகிக்காணப்படுகின்றன. முன்பு சிற்றூர் மக்களை மாத்திரம் மகிழ்வித்து வந்த கும்மிக் கலையானது நகரத்து மக்களையும் கற்றவர்களையும் கவர்ந்துள்ளது. கும்மியடித்துப் பாடு வதற்குப் பலவிதமான கையடி முறைகளும் கால் பெயர்த்து ஆடுவ தற்கு தகுந்த அடவு முறைகளும் உள்ளன. பாடல் அமைப்பும் பாடும் முறையும் மாற்றமடைந்துள்ளன. இன்று கும்மி ஒரு திருந்திய கலையாகச் சிறந்து விளங்காவிட்டாலும் தமிழக நாட்டுப் புறக்கலை களில் ஒன்முக நின்று வாழ்கிறது.

கும்மி சொற்பொருள் விளக்கம்

பல பெண்கள் இணைந்து இன்ப உணர்வைப் புலப்படுத்தும் பாங்கில் கைகொட்டிக் களித்துப் பல பொருள் குறித்து வரும் கதைப் பாடல்களைச் சமய சமூக விழாக்களில் சுவை ததும்பப் பாடியும் கலை சிறக்க ஆடியும் பிறரை மகிழ்விப்பது கும்மியாகும். இதைக் கும்மியடித்தல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் எனப் பல் வேறு முறையில் கூறுவர்.

'கும்மி கசிந்தடி யுங்கோ'

என்று மாடன் கும்மியிலும்,[1]

'கும்மி யடியுங்கடி'

என்று இசுலாமியக் கும்மிப் பாட்டிலும்[2]

(1) கவிராச குருசாமி, மாடன் கும்மி, பா. 1

(2) ஒ. காதிறு முகைதீன், இசுலாமியக்கும்மிப் பாட்டு, மதுரை, பா. 2.

'பதம்பாடிக் கொம்மி யடியுங்கடி'

என்று கோயிற் கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மிப் பாடலிலும்[3]

'கொம்மி கொட்டுமின்'

என்று குன்றக்குடிக் குமரன் கும்மியிலும்[4]

வருவதைக் காணலாம். 'கொப்பி' என்ற சொல் வழக்கு ஆந்திரப் பிரதேசத்திலும் செட்டி நாட்டிலும் இன்றும் பழக்கத்தில் உள்ளது. கும்மியடித்தல், கும்மி யாடுதல், கும்மி கொட்டுதல் எனப்ட லவாறாகக் கூறுவதில் இக்கலையின் போக்கும் தன்மையும் ஓரளவு விளங்கும்.

'கொம்மை கொட்டல்' என்ற தொடரும் நமது சிந்தனைக்கு உரியதாக உள்ளது. அகநானூறு, குறுந்தொகை போன்ற சங்க இலக்கிய நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் 'கொம்மை' என்ற சொல் லானது 'திரட்சி அல்லது பருத்த' என்னும் பொருளில் வருகிறது.[5] பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த பழமொழியில்,

'நோற்ற பெருமை யுடையாருங் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினுர் இல்'[6]

என்று வருமிடத்தில் 'கொம்மை' என்ற சொல் 'கைகளைக் குவித்துக் கொட்டுதல்' என்ற பொருளைத் தருகிறது.

சீவக சிந்தாமணியில்

'குஞ்சரம் கூற்றொடு கொம்மை கொட்டுவ'[7]

என்று கூறும் இடத்திலும்,

'கூற்றத்தைக் கொம்மை கொட்டிக்
குலத்தொடு முடியுமென்பார்'[8]

என்று வரும் இடத்திலும், நைடதத்தில்,

---

(3) ம. வாசுதேவன்பிள்ளை, கோயிற்கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மி (சென்னை, 1937) பா. 1.

(4) குமாரசாமி, குன்றக்குடிக் குமரன் கும்மி, (சுவடி)

(5) (i) அகநானூறு, 15-3; 29-16; 65-18.
(ii) சிலப்பதிகாரம், 28-16; 29-19-4,5.

(6) பழமொழி, பாடல் 291.

(7) சீவகசிந்தாமணி, பாடல் 2230

(8) மேற்படி, பாடல் 1109

'கூற்றொடுங் கொம்மை கொட்டிக் குனிக்கும்'[9] என்று புகலும் சூழ்நிலையிலும் 'கொம்மை' முன்னர் குறிப்பிட்ட பொருளிலேயே பயன் படுத்தப் பெற்றுள்ளது. ஆனால்,

'அங்கையந் தலத்தினா லப்புதா தையெனக்
கொங்கலர் கண்ணியான் கொம்மைதான் கொட்டலும்'[10]

என்ற சீவகசிந்தாமணி அடிகள் அந்தச் சொல்லின் பொருளைச் சிறிது மாறுபாட்டுடன் கையாள்வதாகக் கருத இடமுள்ளது. 'யானையின் முதுகுப் புறத்தைப் பொய்யாகத் தட்டல்' என்ற உரையும் கூறப் பெற்றுள்ளது.[11] இருப்பினும் இன்னும் சற்று விரிவாக 'அப்பு, தா, தை என தாள முறையில் கைகொட்டலும்' என்று பொருள் கொள் வதாயின் இவ்விடத்துக்கு மிகச் சிறப்பாகப் பொருந்தும். இந்தப் பொருளை ஒப்புக் கொள்வதாயின் 'கொம்மை கொட்டலுக்கும் கும்மி அடித்தலுக்கும் மிக நெருக்கமான தொடர்பு ஏற்படுவதைக் காணலாம். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பொருந்தும் என்பது தெளிவு.

'கும்முதல்' என்பதற்குக் 'கை கொட்டுதல்' என்று பொருள் விளக்கம் தரப்படுகிறது. 'கும்மாளம் போடுவது' என்பது 'குதித்து ஆடுவது' என்ற பொருளில் இன்றும் நாட்டுப் புறங்களில் வழங்கி வருகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு கை கொட்டி ஆடு வதைக் 'கும்மி' என்று அழைத்திருக்கலாம்.

'குழுமி' என்ற சொல்லிலிருந்து 'கும்மி உருவாகி இருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளது.[12] குழுமி என்பது கும்மியாகத் திரிந்து 'குழுமி கொட்டுதல்' என்றிருக்க வேண்டியது 'கும்மி கொட் டுதல்' என்று மாறியிருக்கவும் கூடும். 'கும்மு' என்ற சொல் சாந் துக்கு உரிய பொருட்களைக் கலவை சேர்த்து இடித்தல் என்ற பொருளில் பயன்படுகிறது. அவ்வாறு இடித்துக் கலவையாக்கிய

---

(9) நைடதம், போர், பாடல் 27

(10) சீவக சிந்தாமணி, பாடல் 1834

(11) மேற்படி பாடலுக்கு டாக்டர் உ. வே. சா. உரை

(12) அ. கி. பரந்தாமனார், மே.எ்., சு. சண்முகசுந்தரம், 'கும்மி யின் தோற்றமும் வளர்ச்சியும்' இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்றம், பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 1, (கோயம்புத்தூர், 1978) பக்.216.

சாந்தைக் 'கும்மாயம்' என்று தான் கூறுவர். மேலும் 'குமுக்கு' என்பது துணியை நன்றாக நனைத்துக் கைகளால் பிடித்துத் தப்புதல் என்ற பொருளில் வருகிறது. இவ்வாறு துணியைத் தப்பும் போது ஒருவிதத் தாள ஒழுங்குடைய ஒலி எழுவதைக் கேட்கலாம். இன்னும் சிந்திப்பதாயின் 'கும்' என்பது ஓர் ஒலியைக் குறிப்பிடும் சொல்லாக உள்ளது. அது திராவிட மொழிகளில் காணப்படுகிறது.[13] அத்தகைய ஒலிப்பொருள் சொல்லிலிருந்து குமு, கும்மு, கும்மி ஆகியவைத் தோன்றியிருக்கும் என்று கருதலாம். கையைக் குவித்து அடிப்பதுடன் ஆடிப்பாடி மகிழும் ஆட்டக்கலையே 'கும்மி' என்று வழங்கப்படுகிறது.

கும்மியை 'நன்னன்னா கொட்டுதல், தட்டியாங் கொட்டுதல், கொண்டான் கொட்டுதல்' என்று தென், வட ஆர்க்காடு மாவட்டங்களில் அழைக்கின்றனர். இதனை விளக்கும் தரமாக,

'நன்னன்னா கொட்டவும் நாளாச்சி—அம்மா
நாணயமான ஏரிக்குள்ளே தான்'

என்ற நாட்டுப் புறப்பாடல் உள்ளது. தாள அமைப்புக்குத் தகுந்த கையடி ஓசையும் பண்ணிசையோடு பொருந்தும் பாடலும் பாட்டின் பொருளுக்கு ஒத்த ஆடலும் இணைந்து விளங்கும் கலையைக் கும்மி என்று அழைப்பது மிகவும் பொருத்தமாகவே காணப்படுகிறது.

தோற்றமும் வளர்ச்சியும்

சங்க இலக்கியங்களிலும் அவற்றை அடுத்து வந்துள்ள காப்பியங்களிலும் 'கும்மி' என்ற சொல் இடம் பெறவே இல்லை. ஆனால் கும்மியில் பெண்கள் வட்டமாக நின்று ஆடுவது போன்று சங்க காலத்தில் பெண்கள் குரவைக் கூத்து ஆடியதாகக் குறிப்புக்கள் இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன. கும்மியில் கைகளை அடித்தும் குரவையில் கைகளைக் கோத்தும் ஆடி மகிழ்வதைப் பார்க்கலாம்.

---

(13) ஆறு. இராமநாதன், 'கும்மிப் பாடல்கள்-ஓர் ஆய்வு', இந்தியப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியர் மன்றம், ஒன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-1, (மதுரை, 1977) பக். 77

கும்மியிலும் குரவையிலும் மக்கள் கதைப் பாடல்களைப் பாடி அவற்றிற்குத் தக்கவாறு ஆடி மகிழ்வதை அறியலாம். தனிப் பாடல் களையும் பாடி அவற்றிற்குத் தக்கவாறும் ஆடியுள்ளனர். இவ்விரண்டு கலைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்று யகருதலாம். குரவையிலிருந்து தனியாகக் கிளைத்து வளர்ந்த கலை ாகக் கும்மி வளர்ந்துள்ளது என்று எண்ணவும் இடமுள்ளது கைல களைப் பிணைத்து ஆடுவதினால் குரவையில் கால் வீச்சு கைவீச்சு குறைந்தும், தனித்தனியாக நின்று கைகளைக் கொட்டிக் குதித்து ஆடுவதினால் கும்மியில் அவை மிகுந்தும் காணப்படுகின்றன. மற்ற படி பல்வேறு இயல்புகளில் குரவையும் கும்மியும் இணைந்து அமை வதை ஆய்ந்து அறியலாம்.

புலவர் முத்துசாமி கும்மிப் பாட்டைவிளக்கிக் கூறும் போது,

'வந்திடு மாதர்கள் கொந்தள மாகவே
முந்தியே மூன்று குலவை செய்து
தந்தன தானா தனதன தானான
திந்தோம் திமிதிமி என்றே தான்'[14]

என்று சொல்வது சிந்தனைக்கு உரியதாகக் காணப்படுகிறது. முதன் முதலில் பெண்கள் கூடி மூன்று முறை குரவை ஒலி எழுப்பி அதன் பின்னரே தாளத்துக்குத் தக்கவாறு ஆடிப்பாடுகின்றனர். நாட்டுப் புறங்களில் சில ஊர்களில் கும்மியாடத் தொடங்குவதற்கு முன்னர் பெண்கள் அனைவரும் ஒன்று கூடிக் குரவையிடுவதை இன்றும் காணலாம். இது குரவைக்கும் கும்மிக்கும் இடையில் உள்ள ஒட்டு உறவினை விளக்கும் கூறாக இருக்குமோ என்று கருதும் தன்மை யாகத் தோன்றுகிறது. ஆயர் குல வாழ்க்கையைச் சித்தரிக்கும் கும்மி கள் சிறப்பாகக் குறிப்பிடப் படுகின்றன [15] இத்தகைய கும்மிக்கும் பண்டைய ஆய்ச்சியர் குரவைக்கும் தொடர்பு இருக்கலாம் என்று நினைக்கவும் இடமுள்ளது.

பெரும்பாலான கும்மிகளைப் பெண்களே ஆடிப்பாடி வருகின் றனர். ஒயில் கும்மி என்ற வகையை ஆண்கள் ஆடுவர். பல பாடற் குறிப்புக்களை காணின் பெண்களே அக்கலையில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தோன்றும்.

---

(14) முத்துசாமிப்புலவர், சிவகங்கைச் சரித்திரக் கும்மி, பதி. தி சந்திர சேகரன், (சென்னை, 1954) அடிகள் 117-120.

(15) கலைக் களஞ்சியம், தொகுதி IV, தமிழ் வளர்ச்சிக் கழகம், (சென்னை, 1956)

'கும்மி யடிக்கவே வாருங்கடி நல்ல
கோதைய ரொன்றாகச் சேருங்கடி'[16]

என்று சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மியும்

'கும்மியடி பெண்ணே கும்மியடி—மிகு
கோலா கலமாகக் கும்மியடி'[17]

என்று குன்றக்குடி குமரன் கும்மிப்பாடலும்

'வாருங்கடி தோழிப் பெண்காள்
மகிழ்ந்து கும்மி யடித்தாடச்
சேருங்கடி பெண்க ளெல்லாம்'[18]

என்று சுபத்திரை மாலையிடு நாடகத்திலும் கூறியிருப்பதைக் காணின் பெண்களே கும்மிக் கலை பயில்வது விளங்கும்.

'சித்தம் மகிழ்ந்திந்த சரிதை கேட்டிருந்த
தேவிமார் வாழத் தினம்வாழி'[19]

என்ற பாடலில் பெண்களே கும்மியைக் கண்டும் கேட்டும் இன்புற்ற குறிப்பு காணப்படுகிறது.

'சண்டைக் கும்மி' என்ற ஒரு வகைக் கும்மியும் உள்ளது. இது இன்பவுணர்வை ஊட்டுவதுடன் பெண்களுக்கு உடற்பயிற்சி முறைகளையும் விளக்கிக் காட்டும் பாடல்களையும் கொண்டுள்ளது. கும்மிப்பாடல்கள் அன்றாட வாழ்க்கையில்காணப்படும் சிறு செயல்களான நீரிறைத்தல், பாத்திரம் துலக்குதல், சோறு சமைத்தல், அரிசி அரைத்தல் முதலியவற்றைப் பாடலாகவும், ஆடலாகவும் விளக்கிக் காட்டுகின்றன. கோலமிட்டுக் களிக்கும் பெண்களும் கும்மிப் பாடலைப் பாடுவதாகக் குறிப்பு கிடைக்கிறது.

---

(16) சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மி, பதி. ஆர். ஜி. பதி கம்பெனி, (சென்னை, 1974) பாடல் 6.

(17) பாதிரிகள் வாயாப்புக் கும்மி, ஜீவராக்ச ஜீவரக்ஷார்த்த சித்தர் சபையார், (சென்னை, 1894) பாடல் 3.

(18) சுபத்திரை மாலையிடு நாடகம், பதி: பி. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், (சென்னை, ஆண்டில்லை) பக். 9.

(19) சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மி, பதி: ஆர். ஜி. பதி கம்ெபனி (சென்னை 1974) பாடல் 148.

'கும்மி யடிப்போம் கும்மி யடிப்போம்
கோலத்தைச் சுற்றிக் கும்மி யடிப்போம்
அழகிய கோலத்தைப் போலவே நாமும்
ஒன்றாகச் சேர்ந்து கும்மி யடிப்போம்.' [20]

கும்மிப் பாடல்களை முதலில் குழுவின் தலைவி பாடுவாள். பின்னர் அவளைத் தொடர்ந்து மற்றவர்கள் பாடுவார்கள். அனைவரும் ஒன்றாகச்சேர்ந்து பாடுவதும் உண்டு. சில சமயம் எதிர் எதிராக இரு குழுவினர் பாடுவதையும் கேட்கலாம். இதனை எதிர்ப்பாட்டு என்று கூறுவர். கலை நலத்துடன் பாடப் பெறும் கும்மிப் பாடல்கள் முதலில் இறைவழி பாடாகவே இருந்துள்ளன. இம்மாதிரிப் பாடல்கள் பன்னெடுங் காலமாக வாய்மொழிப் பாடல்களாகப் பலரால் மனப்பாடம் செய்யப்பட்ட நிலையில் வழிவழியாகப் பலரின் நினைவில் தான் வாழ்ந்திருக்க வேண்டும்.

கும்மிப் பாடல்களின் மெட்டமைப்பு மக்களைக் கவர்ந்திருக்க வேண்டும். நடையலுப்பை மாற்றுவதற்குப் பயன்படும் பல வழி நடைப் பாடல்கள் கும்மிப்பாடல் மெட்டில் எழுதப் பெற்றன. பின்னர் பல கதைப் பாடல்கள் கும்மியமைப்பாக உருவாக்கப்பட்டன. அவற்றில் கலைநயமும் உள்ளது. இலக்கிய நயமும் உள்ளது.

பலவகையான நாட்டுப் புறப்பாடல் அமைப்புக்களைப் பக்திப் பாடல்கள், காப்பியப் படைப்புக்கள் ஆகியவற்றில் புகுத்தி இருப்பது போன்று கும்மிப் பாடல் அமைப்பையும் சில ஆசிரியர்கள் பின்பற்றிப் பாடியுள்ளனர். இராமலிங்க அடிகள் சண்முகர் கொம்மி, நடேசர் கொம்மி என்று பாடியுள்ளார். கோபால கிருஷ்ணபாரதி சிதம்பரக் கும்மியை இயற்றியுள்ளார். சுப்ரமணிய பாரதியாரும் கும்மி மெட்டில் அருமையான பாடல்களைப் புனைந்துள்ளார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோரும் கும்மிப் பாடலமைப்பில் இனிய பாடல்களைப் படைத்துள்ளனர். பாரதிதாசன் பில்கணியத் தழுவலில் கும்மிப் பாட்டு பாடியிருப்பதைக் காணலாம். 1981இல் எழுதப்பட்ட 'அன்னை' என்ற கவிதை நூலில் கும்மிப் பாடலாக அம்மனைக் குறித்து ஒரு பாடலைக் குமரிச் செழியன் என்ற கவிஞர் பாடியுள்ளார்.

---

(20) ஸ்ரீமகள் கோலச் சித்திரம், (சென்னை, 1963) பக். 1

இவற்றை நோக்கும்போது கும்மிப் பாடலின் செல்வாக்கு இன்றும் புலவர்களிடம் காணப்படுகிறது என்று கருதலாம். பாடலின் எளிமை, இனிமை, கதை விளக்கத்துக்கு உதவும் தன்மை, ஆடலுக்குப் பொருந்தும் பான்மை ஆகிய பண்புகளே கும்மிப் பாடலின் சிறப்புத் தன்மைகள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கும்மிப் பாடல்கள் மிகுதியாகப் புலவர்களால் பாடப் பெற்றுள்ளன. அவை ஓர் இலக்கிய வகையுள் அடங்கும் இயல்புகளுடன் தனிச் சிறப்பாக வளர்ந் துள்ளன. சிற்றிலக்கியங்கள் போன்ற ஒரு வகையாகக் கருதும் அளவுக்குத் தனித்துவப் பண்புகள் காணப்படுகின்றன.

நாட்டுப் புறக் கலை நிலையில் கும்மி

தமிழக நாட்டுப்புறக் கலையில் கும்மிக்கு மிகச் சிறந்த இடமுள்ளது. இதற்கும் ஆந்திர நாட்டுக் கொப்பிக்கும் கேரள நாட்டுக் கை கொட்டிக் களிக்கும் மிகச் சிறந்த தொடர்பு இருப்பதை அறியலாம். கன்னட நாட்டிலும் இத்தகைய ஆடல் நடைபெறுகிறது. ஒவ்வொரு இடத்திலும் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. குஜராத் நாட்டில் நடைபெறும் கர்பா நடனமும், ராஜஸ்தானில் பழக்கத்தில் இருக்கும் கும்மார் ஆடலும் கும்மியுடன் தொடர்புடைய பாங்கில் அமைந்துள்ளன. பிற நாடுகளிலுள்ள நாட்டுப் புற மக்களின் ஆடல்கள் சில கும்மிப் பாடலைப் போன்று நடைபெறுவதாகக் கூறப்படுகின்றன. இவற்றைக் காணின் கும்மி மனித இனத்துக்கு உரிய ஒரு பொது அமைப்பு ஆடலாகவே தோன்றுகிறது. ஆயினும் தமிழ்நாடு, கேரளம். ஆந்திரம், கன்னடம் ஆகிய நாட்டுக் கும்மி ஆடல்கள் தங்களுக்குள் மிக அணுக்கத் தொடர்பு கொண்டு விளங்குகின்றன. இயல்பாகக் கையடித்துப் பாடிக்களிக்கும் மனிதன் பண்பாட்டு வேறுபாட்டால் இடத்துக்கு இடம் வெவ்வேறு விதமாக கும்மிக் கலையை அமைத்துக் கொண்டுள்ளான் என்று கூறலாம்.

தமிழ் நாட்டில் பெண்கள் கலந்து கொள்ளும் கும்மிக்கே சிறப்பும் மதிப்பும் உள்ளது. கும்மிப் பாட்டுக்கும் இறை வணக்கத்தற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. பெண் தெய்வ வழிபாட்டில் கும்மி ஒரு முக்கிய பங்கு பெறுவதாகக் கூறலாம். இன்னும் தமிழ் நாட்டில் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் போன்ற தெய்வக் கொடை விழாக்களில் பத்து நாட்கள் தொடர்ந்து கும்மிப் பாடல்கள் பெண்களால் பாடப் பெறுகின்றன. மேலும் பொங்கல் பண்டிகை, பெண்கள் பருவமுற்ற சடங்கு நிகழ்ச்சி, மாவிளக்கேற்றல், பெண்கள் விரதமிருத்தல், முளைப்பாரியிடல், இராவண்டை போடல், மழை வேண்டல், நிலாக் காலத்தில் இன்பமாகப்

பொழுதைப் போக்கல் முதலிய நிகழ்ச்சிகளில் கும்மியடித்துப் பாடுவது வழக்கம். இவற்றில் பெரும்பாலனவை பெண்களுக்கே உரிய நிகழ்ச்சிகள். ஆகையினால் பெண்கள் அவற்றில் கலந்து கொண்டு கும்மிப் பாடல் பாடுவதில் பொருத்தமும் பொருளும் உள்ளன.

தமிழ் நாட்டில் பல ஊர்களில் கும்மி இன்றும் நடைபெற்று வருகின்றது. பொங்கலுக்கு மறுநாளைக் காட்டுப் பொங்கலாகவும், காணும் பொங்கலாகவும் மக்கள் கொண்டாடுகின்றனர். அன்று பெண்கள் ஒன்று கூடிக் கும்மியடித்து மகிழும் வழக்கம் பல ஊர்களில் உள்ளது. நெல்லை மாவட்டத்தில் மாவடி என்ற ஊரில் ஆண்டுதோறும் காட்டுப் பொங்கல் ஊர் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. அன்று ஊர் மக்கள் குடும்பம் குடும்பமாகப் பக்கத்திலிருக்கும் மலைப் பகுதியான நம்பிக்கோவில் மலை, தண்ணீர்த் தொண்டு, நெல்லித் தோப்பு, பனங்காய் உருளி ஆகிய இடங்களுக்குச் சென்று பொங்கலும் விருந்தும் சிறப்பாகச் செய்வர். அப்பொழுது பெண்கள் ஒன்று கூடிக் கும்மியடித்துப் பாடுவர். கலை நலம் சிறக்க கும்மியடித்து அவர்கள் அனைவரையும் மகிழ்விப்பர். பாடல்கள் பெரும்பாலும் இறை வாழ்த்தாகவே இருக்கும். சிலசமயம் நகைச்சுவைப் பாடல்களைப் பாடுவதும் உண்டு. இன்பக் களிப்பாக நடைபெறும் கும்மி ஊர் மக்களை இன்பத்தில் மிதக்கச் செய்யும்.

அம்மன் கோயில் திருவிழாக்களில் 'முளைப்பாரி' என்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்படும். மக்கள் பதினெட்டு வகைத் தானியங் களை முளையிடச் செய்வர். அது பத்து நாட்கள் வளர்ந்து குழைந்த தும் அதனைக் கோயிலுக்கு எடுத்து வருவார்கள். புனிதமாகக் கருதி விழா நடக்கும் இடத்திலுள்ள ஒரு வெளியான பகுதியில் முளைப் பாரி புனிதமாக வைக்கப் பெற்றிருக்கும். முதல் ஒன்பது நாட்கள் அதைச் சுற்றி பெண்கள் கும்மியடித்துப் பாடுவார்கள். அவர் களுடைய பாடல் இனிமையாகவும் பொருட் சிறப்புடையதாகவும் இருக்கும்.

'ஒண்ணாங் கிழமை யன்னிக்கு ஓரிலையாம்
முளைப்பாரி
இரண்டாங் கிழமை யன்னிக்கு இரண்டிலையாம்
முளைப்பாரி
மூன்றாங் கிழமை யன்னிக்கு மூன்றிலையாம்
முளைப்பாரி

நாலாங் கிழமை யன்னிக்கு நான்கிலையாம்
முளைப்பாரி,

என்றவாறு ஒன்பது நாட்களுக்கும் பாடுவர். இறுதியாகப்

'பத்தாங் கிழமை யன்னிக்குப் பதமே யடைந்திடுமே'

என்று பாடி முடிப்பர். பாடல் மெட்டு 'தானானே தானானே' என்ற அமைப்பில் இருக்கும். பத்தாம் நாள் விழா நடந்தேறும்போது அனைவரும் முளைப்பாரியை எடுத்து ஆற்றில் அல்லது குளத்தில் விட்டு விடுவர்.

கும்மியடிக்கும்போது பாட்டின் முதலடியைத் தலைவி பாடுவாள். மற்றவர்கள் அவளைத் தொடர்ந்து கூடியாடிப் பாடுவர். எதிராகப் பாடுவதும் உண்டு. மனிதனுக்கு முனைப்பு மிஞ்சி எதிர்ப்பாற்றல் எழுவது இயற்கையாக அமைந்த ஒரு பண்பாகும். இத்தகைய பண்புக்கு எடுத்துக் காட்டு போன்று கும்மியிலுள்ள எதிர்பாடல்கள் அமைகின்றன. அடுத்தவரை மிஞ்சித்தான் தன் திறமையைக் காட்டித் தலையை நிமிர்த்த வேண்டும் என்ற தன் முனைப்பு உணர்வை இங்குக் காணலாம்.

கும்மியில் பல கதைப் பாடல்கள் பாடப்படும். வழிபாட்டுக்கு உதவும் பாடல்கள் மிகுதியாக இடம் பெறும். கும்மிப் பாடலில் காலமாற்றம் பலவிதமான மாற்றத்தையும் வளர்ச்சி நிலையையும் ஏற்படுத்தி உள்ளது. தெய்வக் கதைகளும் தனிப்பாடல்களும் பாடப்படும் சில இடங்களில் கும்மிப் பாடலில் வரும் பாத்திரங்களுக்குத் தக்கவாறு ஆடை அணிகள் அணிவதையும் பார்க்கலாம். ஆனால் பெரும்பாலான இடங்களில் கலைஞர் அனைவரும் ஒரே விதமான ஆடை அணிகளுடன் தோன்றுவதையே காண முடிகிறது. பாடல்கள் விளக்கும் உணர்ச்சிகளை வெளியிட்டுக் காட்டியும் ஆட்டம் நடைபெறும்.

ஆடும்போது வட்டமாகச் சுற்றி நின்று கைகளைக் கொட்டிப் பாடுவர். கைகளை அடிப்பதில் விரல் தட்டு, உள்ளங்கைத் தட்டு, அஞ்சலித் தட்டு, முழுக்கைத் தட்டு எனப் பலவிதங்கள் உள்ளன. கால்களில் சதங்கை கட்டித் தாளத்துக்குத் தக்கவாறு அதனைத் தட்டி ஒலி எழுப்புவர். தாளத்தைக் கட்டத்துக்குக் கட்டம் மாற்றிச் சுவைப் பொருளைக் கூட்டுவர். அவ்வாறு அவர்கள் செய்யும் போது முழுப்பாதம் தரையில் படல், கட்டை விரல் மாத்திரம் படல், முன்னங்கால் படல், எனப் பலவிதம் உண்டு. ஆடும்

போது மேலும் கீழும் இடமும் வலமும் இடையுமாகக் கையை நீட்டியும் குறுக்கியும் கும்மியடிப்பர். அவர்கள் குனிந்தும் நிமிர்ந்தும் பக்கம் திரும்பியும் முன்சென்றும் பின் திரும்பியும் ஆடுவது பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாகவும் இன்பமாகவும் அமையும். சில சமய கும்மிப்பாடல் ஆடுவோர் துள்ளவும் குதிக்கவும் செய்வர்.

கால வளர்ச்சியின் பயனாக நாட்டுப்புற மக்களின் நாவில் மட்டுமே வாழ்ந்து வந்த கும்மிப் பாடல்கள் புலவர்களின் பாடலாக மலர்ந்து இலக்கியங்களாக வளர்ந்துள்ளன. இன்று எழுத்துருவில் காணப்படும் கும்மிப் பாடல்களை நாட்டுப் புறப் பாடல்களிலிருந்து வளமாக வளர்ந்த கலை இலக்கியங்களாகக் கருதுவதில் தவறில்லை.

கும்மியடிப்போரின் எண்ணிக்கை

பொதுவாகப் பல பெண்கள் ஒன்று சேர்ந்து எண்ணிக்கை வரையறை இன்றி கும்மியடிப்பதையே இன்றைய நிலையில் பல இடங்களில் காணலாம். கும்மிப் பாடல்களில் சில பெண்களின் எண்ணிக்கையைக் கூறவும் முற்படுகின்றன.

‘நீங்கள் அன்பது பெண்களும் வாருங்கடி
கலியுக வரதன் குன்றில் வாழ்கின்ற
கந்தன் கொம்மிகனி வாய்ப்பாட’[21]

என்று ஒரு கும்மிப் பாடலும்,

‘உச்சிதமாகிய ரஞ்சிதமே நீங்கள்
ஒன்பது பெண்களும் வாருங்கடி’[22]

என்று இன்னொரு பாடலும் வேறுவேறு எண்ணிக்கை அளவைக் குறிப்பிடுகின்றன. ‘நீங்கள் நாலைந்து பெண்களும் வாருங்கடி’ என்று குறிப்பிடும் கும்மிப் பாடலும் உள்ளது.

பல எண்ணிக்கையுடைய பெண்கள் கும்மியடித்துப் பாடினாலும் ஒன்பது பெண்கள் வட்டமாக நின்று கைகளை அடித்து ஆடுவ

(21) குமாரசாமிப் புலவர், குன்றக்குடி குமரன் கும்மி, (சுவடி நூல்)

(22) சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கும்மி, பதி: ஆர். ஜி. பதி கம்பெனி, (சென்னை, 1974) பாடல் 8.

தையே சிறப்பாகப் பல இடங்களில் கருதுகின்றனர். மேலும் ஒற்றைப் படையில் எண்கள் அமைவதையே சிறப்பாகக் கருதும் மரபு வழக்கமும் உள்ளது. சிலப்பதிகாரம் விளக்கும் ஆய்ச்சியர் குரவையில் ஏழு பண்ணிசை நரம்புகளைக் குறிப்பிடும் முறையில் ஏழு பெண்களே குரவைக் கூத்து ஆடியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். 'அன்பது' என்று கும்மிப்பாடல் குறிப்பிடும் எண்ணிக்கை மிகுதியாகவே தோன்றுகிறது. 'ஒன்பது' என்பதே ஓரெழுத்து மாறி அன்பது' என்று சுவடியில் எழுதப் பட்டு விட்டதோ என்ற ஐயமும் எழுகிறது. 'நாலைந்து' என்று கூறியிருப்பதை 'ஒன்பது' என்று எளிதாகக் கொள்ளலாம் வேறுபாடுடைய எண்ணிக்கையும் சில கும்மிப்பாடல்களில் கூறப் பட்டுள்ளன.

மேலும் கும்மியுடன் தொடர்புடைய 'முளைப்பாரி' என்ற சிறப்பு நிகழ்ச்சியிலும் ஒன்பது என்ற எண்ணுக்குத் தனி மதிப்பு இருப்பதை அறிய முடிகிறது. பெண்கள் பதினெட்டு வகையான தானியத்தை (ஈரொன்பது வகை) முளையாக வளர்த்து அம்மன் கோயிலுக்குக் கொண்டு வந்து அதைச் சுற்றி ஒன்பது நாட்கள் கும்மியடிப்பர். சிலப்பதிகாரம் நீர்ப்படுகாதையில் 'ஒன்பதிற்றிரட்டி' என்பதற்குத் தனிச் சிறப்பு கொடுக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். பலவற்றைக் கருதிப் பார்க்கும் போது 'ஒன்பது' என்ற ஒற்றைப்படை எண்ணுக்குச் சிறப்பு இருப்பதாகவே தோன்றுகிறது

இரண்டு வரிசையில் பெண்கள் எதிர் எதிராக நின்று முன்னும் பின்னும் சென்று கும்மியடித்து ஆடுவதையும் பார்க்க முடிகிறது. இரு வரிசையிலும் ஒத்த எண்ணிக்கை உடையவர்களே ஆட்டத்தில் கலந்து கொள்கின்றனர். ஆகையினால் இருவரிசையையும் கூட்டிப் பார்த்தால் இரட்டைப் படை எண்ணே வரும். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு எதிரிலுள்ள பெண்ணின் கையில் தட்டுவது தனிச் சிறப்பாக அமையும். ஒன்பது என்ற எண்ணிக்கை சிறப்பாகக் கருதப்பட்டாலும் வேறு வேறு அளவிலான பெண்கள் ஆடுவதும் உண்டு.

கலையின் தன்மை

பொதுவாகப் பெண்கள் வட்டமாக நின்று குத்து விளக்கு, தெய்வச் சிலை, மலர்க் கூடை, பலகாரக் கூடை போன்ற ஏதாவது ஒன்றை மத்தியில் வைத்து அதனைச் சுற்றிச் சுற்றிக் கைகொட்டி ஆடிப்பாடுவர். அத்தகைய நிகழ்ச்சி, சிறந்த கலைத் தன்மையுடையதாக அமையும்.

மங்கலப் பெண்களே கும்மியில் கலந்து கொள்வதாகப் பாடல் குறிப்பு உள்ளது.

'குங்குமப் பொட்டுகள் தானணிந்து வண்ணக்
கூட்டங்கள் போலவே சேர்ந்துகொண்டு
மங்கலப் பெண்களெல் லாமபிசேக
மண்டபம் முன்வந்து சேருங்கடி [23]

என்றுவரும் பாடலால் இது செவ்வனே விளங்கும். பெண்கள் இறுக்கமாகக் கட்டிய ஆடையுடன் நன்றாகத் தங்களை ஒப்பனை செய்துகொண்டு ஆடுவதாகக் கும்மிப் பாடல்கள் கூறுகின்றன.

'முன்விழுங் கூந்தலைத் தானொதுக்கிச் சீலை
முந்தி யெடுத்துநன் றாய்ச்சொருகி' [24]

ஆடுதல் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சிதம்பரக் கும்மி இதனை இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல முற்படுகிறது.

'சாந்துப் பொட்டு தளதளென்ன—நல்ல
சந்தண வாடை குமுகுமென
கூந்த லழகிக ளெல்லாங் காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி'

என்றும்,

'விஸ்தா ரமாக நின்று கொண்டு
வீசிக் கும்மி யடியுங்கடி'

என்றும் கூறப்படுகிறது.[25] சுற்றி வந்து சபையை நன்றாகப் பார்த்து இறைவன் திருவுருவைக் கண்டு பணிவாக வணங்கிப் பின்னர் கையை அடித்துப் பாடத் தொடங்க வேண்டும்,[26]

---

(23) மருதப் பாண்டியன் கும்மி, பாடல் 10

(24) கவிராச குருசாமி, மாடன் கும்மி, பாடல் 18.

(25) கோபலகிருஷ்ண பாரதி, சிதம்பரக் கும்மி, பதி: குரு தாத சுவாமி, அம்பாள் அச்சுக் கூடம், (சென்னை, 1897) பாடல் 6, 7.

(26) மேற்படி, பாடல் 21, 36.

கும்மி பாமர நடனம் என்றும் இதில் அமைந்துள்ள தட்டடவு, மெட்டடவு, நாட்டடவு, குதித்தலடவு முதலிய கால் வேலைப்பாடுகளும் பதாகம், அஞ்சலி, சிகரம் முதலிய கையசைவு வகைகளும் பல விதமான உடலசைவுகளும் கலைநலம் ததும்பியதாக இருக்கும் என்றும் விளக்கமாகக் கூறப்படுகிறது.[27] தோள், மார்பு, தொடை ஆகியவற்றுக்கு நெருக்கமாகக் கைகுவித்து அடிக்கும் போதும் குனிந்து நிமிர்ந்து தாளம் தவறாது தட்டும் போதும் கலைத் தன்மை மிகுந்து தோன்றும். இந்தக் கலை விளங்கப் பாடிய பாடல்களே கும்மி இலக்கியங்களாக வளர்ந்துள்ளன.

சௌமிய நாராயணப் பெருமாள் கும்மியில் பல விதமான கலை நுணுக்கங்கள் விளக்கப் படுவதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு குறிப்பும் கலையுடன் தொடர்பு படுத்திக் காண்பதற்குத் தகுதியுடன் உள்ளது,

'வையாளி' (பா. 14) என்ற சொல் குதிரை குதித்துக் குதித்துச் செல்வதைக் குறிப்பதாகும், அதே போன்று துள்ளித் துள்ளி ஆடுவதைக் கும்மியாசிரியர் 'வையாளி' என்று கூறுகிறார். 'முன்னந்தம்' (பா.15) என்ற சொல்லால் 'முன்கை தட்டல்' என்பதையும் 'லாகுகள்' (பா.16) என்பதில் 'கைலாகு கொடுத்து ஆடல்' என்பதனையும் குறிப்பிடுவதை நன்கு கண்டு அறியலாம்.

ஆடுவதிலும் பாடுவதிலும் உள்ள பல்வேறு நுட்பங்களைப் பல வகைத் தொடர்களால் விளக்கும் திறனைக் கண்டு உணரலாம். கும்மியாடலில் ஈடுபட்டுள்ள பெண்களிடம் கூறுவதாக அவற்றைத் தரும் பாங்கு நன்றாகவுள்ளது. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

'தாளங்கள் தீருங்கள்' (பா.3)
'வெகு நாதமாய்க் கீதங்கள் பாடுங்கடி' (பா.4)
'லயங்களைப் பையவே தட்டி' (பா.6)
'விளம்பத்தைப் பிடித்து ஆடுங்கடி' (பா.10)
'மத்திய காலத் துரித காலத்தில்
விசையா ஆடுங்கடி' (பா.11)
'தாளங்கள் அதிர கும்மி யடியுங்கள்' (பா.14)
'முன்னந்தம் போடுங்கள்' (பா.15)

---

(27) கலைக்களஞ்சியம், தொகுதி IV, தமிழ் வளர்ச்சிக் கழகம் (சென்னை, 1956) கும்மியின் விளக்கம் காண்க.

‘இசைவன்னங்கள் பாடுங்கோ’ (பா. 15)

‘லாகுகள் போடுங்கடி’ (பா.16)

‘வெவ்வேறு ராகாந்த கீதங்கள்’ (பா.17)

‘மோகன கும்மி யடியுங்கள்’ (பா.20)

‘மங்களக் கும்மி யடியுங்கள்’ (பா.21)

இவற்றைப் புரிந்து பார்க்கும் போது கும்மியானது இசைக்கலை, ஆட்டக்கலை ஆகியவற்றின் நுட்பங்கள் இணைந்த ஒரு கலையாகத் தோன்றுகிறது இரண்டிலும் இசைக்கலைக்கே மிகச் சிறந்த இடமும் மதிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு இராகங்களிலும் விளம்பம், மத்தியம், துரிதம் ஆகிய மூன்று காலங்களிலும் கும்மிப் பாடல்கள் அமைந்து இருக்க வேண்டும். இசைக்கு முதலிடம் இருப்பதினுல் மாடன் கும்மியில்,

‘சங்கீதக் கும்மி யடியுங்கடி’ (பா.14)

என்று கூறப்படுகிறது. ‘அடியுங்கடி’ என்று சொல்லப்படுவதினுல் ஆட்டத்துக்கும் சிறப்பிடம் உள்ளது என்ற உண்மை தெளிவிக்கப் படுகிறது.

கும்மி இலக்கிய வகைப்பாடு

இலக்கிய இனங்களை வகைப்பாடு செய்யும்போது அவற்றின் அகப்புறக் கூறுகளை நன்றாக அறிதல் வேண்டும். நூலின் உள்ளடக்கம் அமைப்புமுறை ஆகியவற்றைத் தெரிதல் தேவை. சூழல், பாடுபொருள், அமைப்புமுறை ஆகியவற்றுள் எது வகைப் பாடு செய்ய வாய்ப்பாக உதவுகிறதோ அதனை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது சிறப்பாகவும் முறையாகவும் அமையும்.

கும்மிப்பாடல்கள் பாடப்படும் சூழலை இரண்டாகப் பிரிக்கலாம். அவை ஆலய விழாக்கள், சமூகச் சடங்குகள் ஆகும். இந்த இரு பிரிவுக்குள் கும்மிப்பாடல்களை அடக்க முயலின் வகைப்பாடு சிறப்பாக அமையாது. இசையமைப்பைப் பொறுத்தவரை ஒன்றிரண்டைத் தவிர மற்றவை அனைத்தும் கும்மி மெட்டுப் பாடல்களைக் கொண்டுள்ளன. பாடலமைப்பைக் கொண்டு இயற்கும்மி, ஒயிற்கும்மி, ஓரடிக்கும்மி என்று மூன்றாகப் பகுத்துள்ளனர். இவற்றைத் தவிர ஏலேலக் கும்மி, சந்தக் கும்மி, கீர்த்தனைக் கும்மி, கோலாட்டக் கும்மி என்று பிரித்துக் காட்ட முயன்றுள்ளனர். இன்னும் சிறப்பாகக் கும்மிப் பாடல்களை வகைப்படுத்த விரும்பினால் அவற்றின் பாடுபொருளைக் கருத்தில்

கொள்ளுதல் வேண்டும். அவ்வாறாயின் அனைத்துக் கும்மிப் பாடல்களையும் சமூகம், சமயம், வரலாறு ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம்.

சமூகக் கும்மிகள்

சமூகக் கும்மிகளைச் சீர்திருத்தம், நாட்டுப்பற்று, அறிவூட்டல் என மேலும் மூன்றாகப் பிரித்துக் காணலாம். கதைகள் வாயிலாகவோ அல்லது சில விளக்கங்கள் வாயிலாகவோ மக்களுக்கு அறிவூட்டலாம். ஆகையினால் அந்த உட்பிரிவை மேலும் இரு வகையாகப் பிரிக்கலாம். பாழ்மனதுக்கறிவுக் கும்மி, விலைமாதர் கும்மி, நன்னெறிக் கும்மி, மானிடக் கும்மி ஆகியவை மிகச் சிறப்பாகச் சமூகச் சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டவை. அவற்றுள் சில தனி மனிதத் தவறுகளை நயமாகக் கண்டித்து சமூகச் சீர்திருத்தத்துக்கு வழிகாண முயல்கின்றன. ஆரிய தேசாபிமானக் கும்மி இந்திய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும் நாட்டுப்பற்றை மிக நயமாகவும் சிறப்பாகவும் ஊட்டுவதினால் 'நாட்டுப் பற்று' என்ற பிரிவில் சேர்ப்பதே மிகப் பொருத்தமாகப் படுகிறது.

வெள்ளைக்கார ஆட்சியை எதிர்த்துப் போராடிய சின்னமலை என்ற வீரரைச் சிறப்பித்து 'சின்னமலைக் கும்மி' பாடுகிறது. இதில் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் இருந்தாலும் தாய்நாட்டுப் பற்றுடைய பாடல்கள் பலவாக உள்ளன.

'கட்டுக் கடங்காத காளை களைப்போலக்
கட்டிப் பிடித்துக் கவலையுடன்
வெட்டிச் செயங்கொண்ட சின்ன மலைதனை
வெள்ளைக்கா ர்கொண்டு போவதைப்பார்[28]

என்ற பாடலில் அமைந்துள்ள நாட்டுப் பற்றுணர்வை எண்ணிப் பார்க்கலாம்.

நேரே மாற்றமாக வெள்ளைக் காரனிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு அவனுக்கு உதவிய ஒருவனைப் பற்றி 'முத்து வீராயி கும்மி' பேசுகிறது.

---

(28) சின்னமலைக்கும்மி, மேற்கோள், பெரும்புலவர் குழந்தை, சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், ஈரோடு, (1976) பக் 95.

'வெள்ளைக்கா ரன்பணம் சின்னப் பணமது
வேடிக்கை செய்யுதாம் வெள்ளைப்பணம்
வெள்ளிப் பணத்துக்கிங் காசைபட் டேயதில்
வீசும்பேச் சுமுத்து வீராயி'[29]

என்ற பாடலில் தாய்நாட்டுக்கு எதிராகப் பகைவருடன் கூடிக் கலந்த ஒருவனின் இழிசெயலைக் காணலாம். இதிலும் ஆசிரியர் உணர்த்த விரும்பும் செய்தி நாட்டுப் பற்றாகவே உள்ளது. எதிர் பொருளைக் காட்டி செய்ய வேண்டியதைச் சிறப்பாக உணர்த்து வதினால் இதனையும் நாட்டுப் பற்றுக் கும்மியில் சேர்ப்பதே பொருத்தமாகப் படுகிறது.

நுட்பமான அறிவுத்திறனை ஊட்டும் நாலு மந்திரி கும்மி, வாய்மையின் சிறப்பை விளக்கும் அரிச்சந்திரன் கும்மி, மெய்க் காதலைப் போற்றி சூதினைக் கடியும் நளன்கும்மி போன்றவற்றை 'அறிவுறுத்தல்' என்னும் பிரிவில் சேர்ப்பதே சரியாகத் தெரிகிறது. அரிச்சந்திரன், நளன், நாளாயினி, சத்தியவான் சாவித்திரி போன்ற கதைகளுக்குப் புராணங்களுக்கு உரிய வண்ணம் பூசப்பட்டாலும் உண்மையில் அவற்றின் நோக்கம் உலகியல் வாழ்க்கை அறிவுணர் தலே ஆகும். அக்கதைகள் தோன்றிய காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் மனநிலையை நன்றாக உணர்ந்த கதையாசிரியர்கள் தங்கள் படைப்புகளுக்குச் சமயக் கலவை கொடுத்து தாங்கள் கூற விரும்பிய கருத்துகளுக்கு வலிமையும் உறுதியும் தேடியுள்ளனர். கருத்துச் செம்மையின் காரணமாக அவை காலத்தைக் கடந்து மக்களைக் கவர்ந்து வாழ்கின்றன.

மருத்துவத்தின் பெருமைகளைக் கூறும் வைத்தியக் கும்மி, தென்னை மரத்தின் பயன்களை விளக்கும் தென்னை மரக் கும்மி ஆகியவற்றை அறிவூட்டல் பகுதியில் சேர்ப்பதே முறை. வைத்தியக் கும்மி மனிதனுக்குச் சாதாரணமாக வரும் நோய்களைக் கூறி அவற்றிலிருந்து எளிதாகக் குணமடையும் மருந்துகளைச் சுவைபட விளக்குகிறது. தென்னை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு மக்களுக்குப் பயன்படுகிறது என்பதைத் தனித்தனியாகத் தென்னைமரக் கும்மி கூறுகிறது.

சமய விளக்கக் கும்மிகள்

தமிழில் பல்வேறு சமயங்களைப் பற்றி விளக்கமாகக் கூறும் கும்மிப் பாடல்கள் பல உள்ளன. முக்கியமாக அவற்றை இந்து,

(29) மேற்படி, பக். 89.

கிருத்தவம், இசுலாம் ஆகிய மூன்று பிரிவுகளாகப் பகுக்க முயலலாம். இந்து சமயக் கும்மிகளைப் புராணம், இதிகாசம், தத்துவம், சிறு தெய்வக் கதைகள், தெய்வத் துதிகள் என ஐந்தாகப் பிரிக்கலாம். புராணத்தைப் பொதுப்புராணம், தலபுராணம் என மேலும் இரண்டாகக் கூறிட்டுக் காணலாம். சிதம்பரக் கும்மி, திருவையாறு ஸ்ரீ ஆட்கொண்டான் கும்மி, ஸ்ரீரங்கநாதர் கும்மிப் பாடல் போன்றவை தல புராணங்களில் அடங்கும். அவை அந்தந்த இடங்களிலுள்ள நிகழ்ச்சிகளையும் தத்துவங்களையுமே விளக்கும்.

சிதம்பரக் கும்மியில் தில்லை நிகழ்ச்சியான நடராசர் மாகாளி ஆகியோரின் நடன வாதத்தைக் கண்டு களிக்கலாம்.

'தில்லைமா காளியோ டாடி வரவவள்
சித்தங் கலங்கித் தலைகுனிந்தாள்
வெல்லுவ தெப்படி யென்றொரு காலை
விண்ணி லெடுத்தார் பாருங்கடி'.[30]

மேலும் தில்லையிலுள்ள ஆகாயலிங்கத் தத்துவத்தையும் சிதம்பரக் கும்மி வாயிலாகக் கோபாலகிருஷ்ண பாரதி விளக்கி விடுவதையும் பார்க்கலாம்.

'ஆகாய லிங்கத்தைக் கண்டேண்டி யிங்கே
ஆருமறி யாமல் நின்றேண்டி
ஏகாந்த மாக விருந்தேண்டி — மன
தேக்கந் தொலைந்தது பாருங்கடி'[31]

இவ்வாறு குறிப்பிட்ட இடச்சிறப்புக்களை விளக்கிக் கூறும் தலபுராணக் கும்மிகள் தமிழில் மிகப் பலவாக உள்ளன.

பொதுப்புராணக் கும்மிகளில் சில முழுக் கதைகளையும் சில பெரிய புராணக் கதைகளிலுள்ள முக்கிய நிகழ்ச்சிகளையும் விளக்கும் பாங்கில் எழுதப் பெற்றிருக்கும். சிறுத்தொண்ட நாயனார் திவ்வியச் சரித்திரக் கும்மி, வள்ளியம்மன் கும்மி

---

(30) கோபால கிருஷ்ண பாரதி, சிதம்பரக்கும்மி, பதி. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், (சென்னை, ஆண்டு இல்லை) கண்ணி 15.

(31) மேற்படி, கண்ணி 30.

ஆகியவை முழுமையான புராணக் கதைகளையும் திருமணிக்கும்மி, பிட்டுத் திருவிழா யாகமண்டபச் சிங்காரக் கும்மி ஆகியவை முக்கியமான நிகழ்ச்சிகளையும் கொண்டு எழுதப்பட்டவை.

இந்து இதிகாசங்களான இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டையும் கொண்டு பல கும்மிப் பாடல்கள் தமிழில் பாடப் பட்டுள்ளன. இராமாயணக் கும்மி, இராவணக் கும்மி ஆகியவை இராமாயண நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. மகாபாரதக் கும்மி, பஞ்சபாண்டவர் வைகுந்தக் கும்மி போன்றவை பாரதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை. இதிகாசத்திலிருந்து மாறுபடாது மக்களுக்கு எளிதாக விளங்கும் தன்மையில் கும்மிக்கு உரிய இசைப்பாடல்களால் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளன.

வாலைக் கும்மி பராசக்தியின் தத்துவத்தை அரிய முறையில் விளக்கும் கும்மியாக உள்ளது. மாடன் கும்மி (குலசை சுடலை மாடன்) ஜெகதீஸ்வரி சந்தக் கொம்மிப் பாடல் (பரசுராம புரத்து முப்பிடாரி) ஆகியவை நாட்டுப்புறத் தெய்வக் கதைகள், மீனாட்சி யம்மன் கொம்மி, தில்லை மாகாளியம்மன் கும்மி ஆகியவை அந்தந்தத் தெய்வத் துதிப் பாடல்களாகக் காணப்படுகின்றன.

கிருத்தவ சமய உண்மைகளையும் ஏசுபெருமானின் அற்புதச் செயல்களையும் விளக்கும் தரமாகப் பல கிருத்தவ கும்மிகள் எழுதப்பட்டுள்ளன. திருவாசகக் கும்மி, ஞானோபதேசப் பேரின்பக் கும்மி ஆகியவை கிருத்தவ சமயத்தைச் சேர்ந்தவை. இவை போன்று இசுலாம் சமயத்தைச் சேர்ந்தக் கும்மிப் பாடல்களும் பல உள்ளன. நபிகள் நாயகம் அவர்களின் அன்புமிக்க வாழ்வையும் அருள் நிறைந்த செயல்களையும் விளக்கி, நபியுல்லா பேரில் காரணக் கும்மி, சலவாத்துப் பாட்டில் கும்மி ஞானக்கும்மி போன்ற பல கும்மிப் பாடல்கள் உள்ளன.

மேலும் பாதிரிகள் வாயாப்புக் கும்மி, சுன்னாகம் முத்துக்குமார கவிராசர் பாடிய ஞானக் கும்மி ஆகியவை வேதாந்தத்தை ஆதரித்துக் கிருத்தவ சமயத்தை எதிர்த்துப் பேசும் கும்மிகளாகக் காணப்படுகின்றன.

வரலாற்றுக் கும்மிகள்

நாட்டில் நினைக்கத் தகுந்த முக்கிய நிகழ்ச்சிகளைச் சுவை படக் கூறி விளக்கும் கும்மிப் பாடல்களை வரலாற்றுப் பிரிவில் சேர்க்கலாம். அவற்றில் தனி மனித வரலாறு, நாட்டு வரலாறு,

சிறந்த நிகழ்ச்சிகள் ஆகிய மூன்று வகைகள் உள்ளன. காமிலொலி நயினா முகம்மது சாகிப்பைப் புகழ்ந்து பாடியுள்ள காரணக் கும்மி, கந்தப்ப செட்டியாரைச் சிறப்பித்துப் பேசும் சிங்காரக் கும்மி, சுப்புத் தேவரைப் புகழும் கும்மி, சீனய்யங்கார் கும்மி, சின்னமலைக் கும்மி, மருதப் பாண்டியன் கும்மி, கட்ட பொம்மன் கும்மி ஆகியவை தனிமனித வரலாறு பாடும் கும்மிகள் ஆகும். கட்டபொம்மன் கும்மி பாஞ்சாலங்குறிச்சியின் ஒரு காலத்து வரலாற்றையே விளக்கினாலும் முழுவதும் ஒரு மனிதனின் வாழ்வைச் சூழ்ந்து இருப்பதினால் தனிமனித வரலாறாக கருதப்படுகிறது.

சிவகங்கைச் சரித்திரக்கும்மி, விடுதலைக் கும்மி, மதறாஸ் கும்மி போன்றவற்றை நாட்டு வரலாற்றுப் படைப்புகளாகக் கூறலாம். சிவகங்கை சரித்திரக் கும்மியும் மருது பாண்டியர் கும்மியும் ஓரளவு தம்முள் ஒன்றுபடுவதாக இருப்பினும் பின்னது மருதுபாண்டியர் வரலாற்றையே மையமாகக் கொண்டுள்ளது. விக்டோரியா மகாராணி ஜுபிலித் திருநாள் கும்மி, வேலூர் கும்பாபிஷேகக் கும்மி, இராயபுரம் ரயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மி, தாது வருஷத்துப் பஞ்சக் கும்மி ; ஆகியவை குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மாத்திரம் விளக்கும் கும்மிப் பாடல்களாக உள்ளன. இக்கும்மிகளைக் காணின் அவை அரசியல், சமயம், சமூக நன்மை, சமுதாயத்துக்குக் கேடு ஆகிய பொருள் குறித்த முக்கிய நிகழ்ச்சிகள் என்பதை அறிதல் வேண்டும்.

கும்மிப் பாடல்களின் கூறுபொருளைக் கொண்டு அவற்றை இவ்வாறு பலப்பல பிரிவுகளாகப் பகுத்துக் காண முடியும். இவ்வாறு பலநிலைகளில் கும்மிப் பாடல்களைப் புலவர்கள் எழுதி யிருக்கிறார்கள், என்றால் அவற்றிற்குச் சமுதாயத்தில் எவ்வளவோ செல்வாக்கு இருந்திருக்க வேண்டும். கும்மியை விரும்பத்தக்க ஒரு கலையாக மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் இவ்வளவு எண்ணிக்கையிலும் இத்தகைய பிரிவுகள் செய்யத்தக்க முறையிலும் கும்மிப் பாடல்கள் எழுதப்பட்டு இருக்காது என்று கருதலாம். இன்று மக்களிடம் கும்மிப் பாடல் ஓரளவு செல்வாக்கு இழந்து விட்டாலும் ஒரு காலத்தில் அதன் மதிப்பு ஓங்கி இருந்திருக்க வேண்டும் என்பது உண்மை.

நோக்கமும் பயனும்

கலையின்பம் விளங்க ஆடிப்பாடுவதும் மக்கள் அதை விரும்பிக் கண்டு இன்பம் அனுபவிப்பதும் கும்மிப் பாடல் கலையின் முக்கிய பயன்களாகக் கருதலாம். கும்மிப் பாடல் இலக்கியத்தில்

வகைப்பாடுகள்



கும்மிப்பாடல்
சமூகம்
சமயம்
வரலாறு
சீர்த்திருத்தம்
அறிவூட்டல்
நாட்டுப்பற்று
இந்து
கிருஸ்தவம்
வரலாறு
வாழ்க்கை வரலாறு
நாட்டு வரலாறு
சிறப்பு நிகழ்ச்சிகள்
கதை
விளக்கவுரை
புராணம்
இதிகாசம்
தத்துவம்
நாட்டுப்புறத் தெய்வக் கதை
தெய்வத் துதி
சமயம்
அரசியல்
சமூகம்
தலபுராணம்
பொதுப்புராணம்
இராமாயணம்
பாரதம்

கலை நலன், கவி நலன் ஆகிய இரண்டும் இணைந்து விளங்குவதினால் அதில் கலையின்பம், இலக்கிய இன்பம் ஆகியவை கிடைக்கின்றன. பலவிதமான பொருட்கள் நிறைந்த கும்மிப் பாடல்கள் பாடப் பெறுகின்றன.

மிகப் பெரும்பாலான கும்மிகள் சமயக் கொள்கைகளை விளக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளன. புராணக் கதைகளை விரும்பிக் கேட்டு இன்பத்துடன் அனுபவிக்கும் கால கட்டமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு விளங்குகிறது. பலவிதமான கலையமைப்பில் புராணக்கதைகளை மக்களுக்கு முன் இனிமையாக கலைஞரும் கவிஞரும் விதைக்க முற்பட்டுள்ளனர். அத்தகைய முறைகளில் ஒன்றாகக் கும்மிப் பாடலைக் கருதலாம்.

நூலைத் தொடங்கும் போது காப்புப் பாடுவது புலவர்களின் வழக்கம். அதில் எடுத்துக் கொண்ட நூல் வெற்றிகரமாக முடிவுற வேண்டும் என்று தாம் வணங்கும் தெய்வங்களை வேண்டிப்புலவர் பாடுவர். வேண்டுதலைத் தொடர்ந்து நூலின் நோக்கத்தை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ புலவர் கூறிக் காட்டுவதைக் காணலாம்.

'சித்தர்கள் போற்றிடும் வாலைப் பெண்ணாமந்த
சத்தியின் மேற்கும்மிப் பாட்டுரைக்க'[32]

என்று வாலைக் கும்மி தொடங்கப்படுகிறது. பின்னர்,

'தில்லையில் முல்லையில் எல்லையுள் ஆடிய
வல்லவள் வாலைப்பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் த ழைப்பாடவரும்
தொல்லை வினைபோகும் வாலைப் பெண்ணே[33]

என்று கூறிக் கருத்தை விளக்கிக் கும்மியின் நோக்கத்தை ஆசிரியர் வெளிப்படையாகப் புலப்படுத்துகிறார்.

அரிச்சந்திரன் கும்மி பாடும் புலவர் 'வாய்மை'யின் சிறப்பை வலியுறுத்த இந்த இலக்கியத்தை எழுதியிருப்பதைக் குறிப்பாகக் காட்டுகிறார்.

---

(32) வாலைக் கும்மி, பதி. ஆர். ஜி. பதி. கம்பனி, சென்னை, பாடல் 1.
(33) மேற்படி, பாடல் 7.

'சத்திய வாய்மை தவறா அரிச்சந்திரன்
தாரணி யாண்ட கதையுரைப்பேன்'[34]

என்பது ஆசிரியர் கூற்று. அரிச்சந்திரன் வாய்மை தவறாமல் இருந்ததினால்தான் அவனுடைய கதையைப் பாட விரும்புகிறார். வாய்மை தவறாப் பண்பு மனிதர் அனைவருக்கும் அமைய வேண்டியது. அதன் சிறப்பை அறிவிப்பதே அரிச்சந்திரன் கும்மியின் நோக்கம்.

புலவர் காதிறு முஹய்த்தீன் தான் பாடியுள்ள கும்மிப்பாடல் முழுவதுமே இறைநாமப் பெருமையினையும் நபிகள் நாயகத்தின் உயர்வையும் உணர்த்திக் காட்டுகிறார்.

'எல்லா வஸ்தும் படைத்தவனா மென்றும்
ஈரேழு உலகையும் காப்பவனாம்
அல்லா வென்னும்பேர் கொண்டவன் தூதரை
அடுக்கக் கும்மி யடிங்கடி—பாவம்
விடுக்கக் கும்மி யடிங்கடி'[35]

என்ற பாடலில் அல்லாவையும் நபிகள் நாயகத்தையும் பற்றிக் கூறுவதைக் காணலாம்.

குருசு மேஸ்திரி தன்னுடைய ஏலேலக்கும்மியின் நோக்கத்தைச் சமயப் பின்னணியில் சமூக அடிப்படையில் விளக்குவது குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் ஆசிரியர் கூற விரும்புவது அலேக்சியருடைய தியாக வரலாறாகும்.

'கற்புவள மோங்கக் கருதியிக் காசினியில்
பொற்புறு மாதவம் பூண் தூய—அற்புதஞ்சேர்
சேனா ரலேக்சியார் திவ்யசரி தைபுகல
கோனேசு வேயருள் கூர்'[36]

என்ற காப்புச் செய்யுள் வாயிலாகக் கும்மியின் நோக்கத்தைப் புலப்படுத்துவதைக் காணலாம்.

---

(34) அரிச்சந்திரன் கும்மி, பதி. ஆர். ஜி. பதி. கம்பனி, சென்னை. பாடல் 1.

(35) கும்மிப் பாட்டு, புதுச்சேரி ஓ. காதிறு முஹிய்யித்தீன், அல்-அமீன் புக் டிப்போ, மதுரை-1, பாடல் 5

(36) அர்ச் அலேக்சியார் சரித்திரம் ஏலேலக் கும்மி, ஜே. குருசு மேஸ்திரி, (நாகர் கோயில் 1930) காப்புச் செய்யுள்.

கீழையூர் வீரபத்திரன் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றிய இராமாயணக் கும்மியைப் பற்றி அறியப்படும் செய்தி சிந்தித்துக் காணத்தக்கதாகும். கும்மி விளையாட்டிற்காக இயற்றப் பட்ட இந்த நூலைத் தற்போது மரணவாயிலில் கிடப்பவர்கள் நற்கதி அடைவதற்கென்று பயன்படுத்தப்படுவதாகக் கூறப் படுகிறது. மரணப்படுக்கையில் கிடப்பவர் கேட்குமாறு மெல்லிய குரலில் ஒருவரே அருகில் அமர்ந்து இதனைப் பாடுவார். குடும்பத் தொல்லைகளைப் போக்கும் என்ற நம்பிக்கையில் இதை வீட்டில் படிக்கச் செய்து பட்டாபிஷேகம் செய்வதும் சிற்சில சமயங்களில் நிகழ்வது உண்டு.[37]

இந்தக் கும்மிப்பாடலைக் கேட்போர் பெறும் பயனைக் கும்மி ஆசிரியரே கூறுவதைக் காணலாம்.

'மீனாமை பன்றி சிங்கம்
மிக்க மெய்க்குறளுக்குக் கப்பால்
தானாகும் ரர்மச் சந்திர
தயாபதி முதலைத் தானே
தேனாகும் அமிர்தம் போலச்
செப்பிய கும்மியைக் கேட்போர்
வானாகும் பதிக்கு மேலாம்
வைகுந்தம் பெறுவர் தாமே'[38]

இதனைக் கேட்போருக்கு வைகுந்த பதவி கிடைக்கும் என்பதை வெளிப்படையாக யாருக்கும் தெளிவாகத் தோன்றுமாறு ஆசிரியர் திறந்து கூறியிருப்பதைப் பார்க்கலாம்.

சிதம்பரக் கும்மி ஒரு தத்துவ விளக்கமாகவே தோன்றுகிறது.

'விதியி னெழுத்தைக் கிழித்தாச்சு முன்னே
விட்ட குறைவந்து தொட்டாச்சு
மதிய மிர்தமு முண்டாச்சு தென்று
வாழ்த்திக் கும்மி யடியிங்கடி'[39]

என்பதில் கும்மியின் நோக்கம், பொருள், தத்துவம் அனைத்தும் அடங்கியுள்ளன.

---

(37) ச. சுபாஸ் சந்திர போஸ், இராமாயணக் கும்மி, "செந் தமிழ்", தொகுதி 75, பகுதி 4, டிசம்பர் 1981, பக் 386.
(38) மேற்படி, இராமாயணக் கும்மி, பாடல் 3.
(39) கோபாலகிருஷ்ண பாரதி, சிதம்பரக் கும்மி, பாடல் 36.

சமுதாயத்தைச் சீர்திருத்தும் மிகச் சிறப்பான நோக்கத்துடன் சில கும்மிகள் பாடப்பெற்றுள்ளன. விலைமாதர் கும்மியின் ஆசிரியர்,

'வால வயதினில் புத்தி யில்லாமலே
மங்கையர் மோகத்தில் விழாமலே
வாலிபர் கண்டு தெளியவே கும்மி
வழங்கினேன் கண்டறி மானிடனே'[40]

என்ற பாடலில் நூலின் நோக்கத்தை உணர்த்திக் காட்டியுள்ளார்.

தென்னமரக் கும்மியின் ஆசிரியர் தன் பாடல் நோக்கத்தைக் குறிப்பாகச் சுட்டுகிறார்.

'புல்லுந் தெங்கின் புகழுஞ் சரிதையை
வெல்லும் மாந்தர்க்கு விரும்பி யுரைக்குவாம்'[41]

எனக் கூறித் தென்னை மரத்தின் வரலாற்றை விளக்குவது தன்னுடைய கும்மிப் பாடலின் நோக்கம் என்பதைச் சிறப்பாகப் புலப்படுத்துகிறார்.

வரலாற்றுக் கும்மிகள் அந்தந்த வரலாற்றைக் கூறுவதுடன் அதனால் விளையும் நன்மை தீமைகளையும் சொல்லவும் விரும்புகின்றன. சீனய்யங்கார் கும்மியானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கம்பெனி ஆட்சியிருந்த நிலையையும் அவர்களுக்குக் கீழுள்ள தாசில்தார்கள் குடிகளைத் தொல்லைப் படுத்தும் போக்கையும் நன்றாக விளக்கும் வரலாற்றுக் கும்மிப் பாடலாக உள்ளது. நடந்ததை விளக்குவதுடன் இவ்வாறு நடந்தால் இத்தகைய பலன் விளையும் என்பதையும் உணர்த்துகிறது. தீயதைத் தவிர்த்து நல்லதை நாடி அதனால் ஏற்படும் பயனை அனுபவிக்குமாறு மனிதனை வேண்டுகிறது. தன்னலங் கொண்டு தான்தோன்றித்தனமாக நாட்டை ஆள்வோர் விரைவில் வீழ்ச்சியடைவர் என்ற உண்மையினைச் சீனய்யங்கார் கும்மி தெளிவாக விளக்குகிறது.

---

(40) விலைமாதர் கும்மி, பதி. சின்னைய நாடார் பிரஸ், (திருப்பத்தூர், 1888) பாடல் 2.

(41) தென்னமரக் கும்மி, பெரியநாயகியம்மன் அச்சுக்கூடம், (சென்னை, 1923) பாடல் 1.

சிவகங்கை நகரைப் புகழுடன் கெவுரி வல்லவேந்திர ராசன் ஆட்சி செய்ததும், கிழக்கிந்தியக் கும்பினியர் மருது பாண்டியரை வென்று அடக்கியதும் முக்கியமான வரலாற்றுச் செய்திகள். இவற்றை விளக்குவதே 'சிவகங்கைச் சரித்திரக் கும்மியின் நோக்கம் என்று நூலின் தொடக்கத்திலேயே ஆசிரியர் கூறி விடுகிறார்.

'சீர்புகழும் சேதுநகர் அரசைச் சேர்ந்த
சிவகங்கை நகரை முன்னாளில்
பேர்புகழும் கவுரிவல்ல வேந்திர ராசன்
பிரபலனா ரரசாட்சி செய்ததுவும்
போர்புகழும் கும்பினி யார்கள் வந்து
பொல்லாத மருதிருவரைச் செயித்ததுவும்
பாருலகில் கும்மிப் பாட்டுரைக்கப் பார்வதி
மைந்தன் கணபதி பதம்போற்றி'[42]

இவ்விரண்டு பாடல்கள் முற்கூறிய வரலாற்று உண்மைகளைக் கும்மிப் பாடலின் நோக்கமாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

கும்மிப் பாடல்களின் நோக்கம் அவை எழுதப்பட்ட காலத்துக்குப் பொருந்துமாறுதான் இருக்க முடியும். சமயக் கருத்துக்களும், கதைகளும் மிகுதியாக இடம் பெற்றிருக்கும். இத்தகைய தன்மையினையும் அமைப்பினையும் அக்கால மக்கள் விரும்பி ஏற்றனர். பாடிக் கேட்டனர். பற்றுடன் ஒப்புக் கொண்டனர். கும்மிப் பாடல்களில் புலவர்கள் தத்துவக் கருத்துக்களைப் புகுத்தி விளக்கவும் முயன்றுள்ளனர். அக்காலத்தில் சமய வேறுபாடு, சமய காழ்ப்பு போன்றவை இல்லாமல் இல்லை. சில தங்களுடைய பிற சமய வெறுப் புணர்ச்சியை மிகவும் வேகமாகக் காட்டியுள்ள கும்மிப் பாடல்களும் உள்ளன.

கிருத்தவ சமயத்துக்கு எதிராகப் பாதிரிகள் வாயாப்புக் கும்மி, யாழ்ப்பாணத்து ஞானக் கும்மி போன்றவை தோன்றியுள்ளன. கிருத்தவ சமயக் கருத்துகளுக்கு எதிர் அம்புகளாக அவை அமைந்துள்ளன.

---

(42) முத்துசாமிக் கவிராயர், சிவகங்கைச் சரித்திரக் கும்மி, பதி. தி. சந்திரசேகரன், தமிழக அரசு, (சென்னை, 1954) பாடல் 1, 2.

[நூலில் கும்மிப் பாடல் அமைப்பு மாறி அச்சிடப் பட்டுள்ளதை திருத்தி இங்கு இந்த இரு தாழிசைகளும் சரியான அமைப்பில் தரப் பெற்றுள்ளன.]

'தன்னுரு போல பராபர னாதாமைத்
தான்படைத் தாரென்று சாற்றுகிறீர்—நீங்கள்
பின்னையும் ரூபமில் லாதவ ரென்றுதான்
பேசுவ தென்னகாண் பாதிரியே'[43]

என்ற கும்மிப் பாடலும்,

'சீர்கொண்ட வேதா கமங்களைப் பொய்யென்று
செப்பு மிலேச்சர் விவிலிய நூலினிற்
சார்கொண்ட பொய்யை விளக்கவோர் மெய்க்கும்மி
சாற்ற பரசிவன் காப்பாமே'[44]

என்ற கும்மிப் பாடல் காப்புச் செய்யுளும் சமயக் காழ்ப்பையும் கசப்பையும் வெளிப்படையாகப் புலப்படுத்திக் காட்டும் தன்மை உடையன. இரண்டாவது பாடல் நூலின் நோக்கமே விவிலிய நூலின் பொய்ம்மைத் தன்மையை எடுத்துக் காட்டுவதுதான் என்று விளம்புகிறது.

நன்னெறிக் கும்மி, பாழ்மனதுக்கறவுக் கும்மி, லாக்காஸ்பத்திரி கும்மி, விலை மாதர் கும்மி, மாதர் நீதிக் கும்மி ஆகியவை மிகச் சிறப்பாக மனித வாழ்வுக்கு உதவக்கூடிய நல்ல சமூக நீதிகளையும் அறிவுரைகளையும் எடுத்துக் கூறுகின்றன. மாதர் நீதிக் கும்மியில் பெண்கள் சமத்துவம், மாதருயர்வு, பெண்கல்வி, மாதர் அறம், பதிபக்தி, புதல்வர்ப் பேணல், கற்பின் மேன்மை, இல்லற நெறி ஆகியவை சிறப்பாக விளக்கப்படுகின்றன. பலப்பல நீதிகளை எடுத்துக் கூறுகிறது. மாதர் விடுதலை பற்றிய சிறப்புச் செய்தியைச் செம்மையாகக் கூறுவதைக் காணலாம்.

'ஆடு மாடுகளைப் போலே வீட்டினில்
அடைத்து வைக்கவேபார்ப்பார்கள்

---

(43) பாதிரிகள் வாயாப்புக் கும்மி, ஜீவரக்ஷார்த்த சித்தர் சபையார், இந்து தியாலாஜிக்கல் அச்சியந்திர சாலை, (சென்னை, 1894) பாடல் 5.

(44) யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராசர், ஞானக்கும்மி, (நாகபட்டினம், அங்கீரச ஆண்டு, ஆனி மாசம்) காப்புச் செய்யுள்.

நாடு நகரங் காட்டார் களிவர்
நல்லவரோ சொல்லு நங்கையரே'[45]

வயித்தியக்கும்மி நோய்கள் பற்றியும் நோய்களுக்கு உரிய மருந்துகள் பற்றியும் விரிவாகவும் தெளிவாகவும் கூறுகிறது.

'பித்தம் நாற்பத் திரண்டாகும்—பிற
மேக மிருபத் தொன்றாகும்
எத்து வாத மெண்பத்து நாலென்றே
ரத்திக் கும்மி யடியுங்கடி'[46]

என்பது போன்ற கும்மிப் பாடல்கள் வாயிலாக நோய்கள் பற்றிய செய்திகளையும்,

'ஏலம் சுக்கு சீரகம் மூன்றையும்
ஏற்கநல் லெண்ணெயிற் பொடித்திட்டு
பால சூரியன் முன்வைத் துப்பூச
பறக்குங் கரப்பனென் றடியுங்கடி'[47]

போன்ற பாடல்களைக் கொண்டு நோய்களுக்கு உரிய மருந்து களையும் விளக்கும் வைத்தியக் கும்மி மிகவும் பயனுள்ள நூலாகக் காணப்படுகிறது.

நல்ல நோக்கமும் சிறந்த பயனும் கொண்ட கும்மிப் பாடல்கள் பல உள்ளன. காலம் சில கருத்துக்களைக் கரைத்து காலங் கடந்தவைகளாக ஆக்கி விட்டாலும் காலத்தால் வெல்ல முடியாத ஒப்பற்ற உயர்ந்த கருத்துக்கள் கும்மிப் பாடல்களில் இல்லாமல் இல்லை. அறிய வேண்டிய பலவற்றை அருமையான இசைப் பாடல்கள் வாயிலாக எளிய மக்களுக்கும் இனிமையாக விளங்கும் முறையில் கும்மிப் பாடல்கள் தருவது அவற்றின் சிறப்பில் ஒன்றாக அமைகிறது.

சமுதாயத்திலும், தனி மனித வாழ்விலும், நாட்டு நடப்பிலும் காணப்படும் தவறுகளை எடுத்துக்காட்டி அவை இனி நடக்கக்

---

(45) வி. வைத்தியநாத ஸ்வாமி ஸ்தபதியார், மாதர் நீதிக் கும்மி, நித்தியானந்தா பிரஸ், (திருவாரூர் 1938 (பாடல் 70)

(46) அகத்திய முனிவர், வயித்தியக் கும்மி, ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக் கூடம், (திருவாரூர், 1898) பாடல் 33.

(47) மேற்படி, பாடல் 48.

கூடாது என்ற சிறந்த நோக்கத்துடன் சுவையாக தட்டித் திருத்துவது கும்மிப் பாடலின் ஒரு சிறப்பாக உள்ளது. எக் காலத்தில் கும்மிப் பாடல் தோன்றியதோ அக்காலத்தைப் பற்றிச் செவ்வகையாக அறியத் தக்க முறையில் கருத்துக்களைச் சுமந்து கொண்டுள்ளன. வரலாற்று உண்மைகளை நன்றாக அறிய உதவும் அளவுக்குச் செய்திகளைக் கும்மி நூல்கள் பாதுகாத்து வந்துள்ளன. ஆகையினால் சமூகம், சமயம், அரசியல், வரலாறு, பண்பாடு ஆகியவற்றைப் பற்றி ஆய்வோருக்குக் கும்மி இலக்கியங்கள் பேருதவியாக அமையும் என்பது உறுதி.

கும்மிகளின் அமைப்பு முறை

குறிப்பிட்ட ஓர் இலக்கிய இனத்துக்குள் ஒரு நூலை அடக்க வேண்டுமானால் அந்த இலக்கிய இனத்துக்கு உரிய தனித்துவ கூறுகள் எடுத்துக் கொண்ட நூலில் மிகச் சிறப்பாக அமைந்து இருக்க வேண்டும். கும்மிப் பாடல் நூல்களைச் சிறப்பான அமைப்புடைய ஓர் இலக்கிய இனமாகக் கருத முடியுமா என்பதைச் சிந்திக்கலாம்.

கும்மி காப்புச் செய்யுளில் தொடங்கி கதைப் பாடல்கள் வளர்வது போன்று வளர்ந்து எடுத்துக் கொண்ட பொருளை முழுமையாக விளக்கி வாழ்த்துப் பாடலுடன் முடிவடைகிறது. இத்தகைய அமைப்பும் போக்கும் பொதுவாக எல்லா வகை சிற்றிலக்கியங்களிலும் இருப்பதைக் காணலாம். பெரும்பாலான கும்மிப் பாடல்கள் தங்களை அறிமுகப் படுத்தியவாறு தொடங்கப் படுகின்றன. கும்மித்தமிழ் பாடுவதற்கு இறைவன் அருள் செய்ய வேண்டும் என்று படைப்பாசிரியர்கள் காப்புச் செய்யுளில் வேண்டுவதைக் காணலாம்.

பின்னர், கும்மிப் பெண்களை விளித்துப் பாடுவதற்காக அழைப்பர். அவர்கள் எவ்வாறு கும்மியடித்துப் பாடவேண்டும் என்பதையும் ஆசிரியர் விளக்கி விடுகிறார்கள். மாதர் நீதிக் கும்மியில்,

'கும்மியடி பெண்காள் கும்மியடி உங்கள்
கூந்தல் குலுங்கிடக் கும்மியடி
நம்மையாளும் விக்கி னேசுவரன் பாதத்தை

நாடிக் கும்மி யடியுங்கடி—நீங்கள்
கூடிக் கும்மி யடியுங்கடி'[48]

என்று பாடுவதில் ஆசிரியர் தாம் பாடுவது கும்மிப் பாடல் என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்த்துவதற்காகவே என்று தெளிவாகத் தோன்றும் இம்முறையிலிருந்து சிறிது மாறுபட்டு,

'கொப்பி யள்ளோ கொப்பியென்று பாடுங்கடி
கோமளப் பெண்களே—நீங்கள் கொப்பியள்ளோ'[49]

என்றவாறு 'சுப்பிரமணியர் வள்ளியம்மையைச் சிறையெடுத்தக் கொப்பிப் பாட்டு' தொடங்கப்படுகிறது. இந்தப்பாடல் அடியானது திரும்பத் திரும்பப் பல்லவி போன்று பாடக் கூடியதாகக் காணப் படிகிறது

'புகழ்ந்து கும்மி யடியுங்கடி—அகம்
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி'[50]

என்று வேதாந்தக் கும்மியும்,

'கும்மியடி பெண்ணே கும்மியடி—குபிர்
ஒடுங்கி யோடவே கும்மியடி'[51]

என்று காதிறு முஹிய்யித்தீன் எழுதிய கும்மிப் பாடலும் கூறுவது கருதத் தக்கவை. இவ்வாறு பெரும்பாலான கும்மிப் பாடல்களில் கும்மி அடித்துப் பாடவேண்டிய குறிப்பை ஆசிரியர்கள் தவறாது காட்டிச் செல்கின்றனர்.

கைகொட்டி ஆடுவதற்குத் தகுந்த மெட்டு அமைப்புகளைப் பாடல்களாக இடையில் ஆசிரியர்கள் இணைத்தும் பாடியிருப்பதையும்

---

(48) வி. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதியார், மாதர் நீதிக் கும்மி நித்தியானந்தா பிரஸ், (திருவாரூர், 1938 பாடல் 3.

(49) சுப்பிரமணியர் வள்ளியம்மையைச் சிறையெடுத்தக் கொப்பிப் பாட்டு, பெரியநாயகி அம்மன் அச்சுக்கூடம். (சென்னை, 1923) முதலடி.

(50) நா. பெ. நா. மு. முத்துராமையா, வேதாந்த கும்மி, (தேவ கோட்டை, 1920) பாடல் 52.

(51) புதுச்சேரி ஒ. காதிறு முஹிய்யித்தீன், கும்மிப் பாட்டு அல்-அமீன் புக்டிப்போ, மதுரை-1, பாடல் 1.

பார்க்கலாம். தகுந்த மெட்டுக்களையே குறிப்பிட்டுக் காட்டுவர். இராயபுரம் ரெயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மியில்,

'நன்னா நன்னா நான நன்னா
நன்னா நானே நானே நானே
நன்னா நானே'[52]

என்ற மெட்டு அமைப்பையும், சிவகங்கைச் சரித்திரக் கும்மியில்,

'தந்தனத் தானா தனதன தானான
திந்தோம் திமிதிமி யென்றே தான்'[53]

என்ற மெட்டு அமைப்பையும் காட்டியிருப்பதைப் பார்க்கலாம். இத்தகைய மெட்டுகளில் பாடல்களை இயற்றிக் கும்மியடித்துப் பாடுவதற்குக் தகுந்ததாக அவற்றை ஆக்கி விடுகின்றனர். இத்தகைய இயல்பும் தகுதியும் கும்மிக்குச் சிறப்பாக அமைந்து விடுவதைக் குறிப்பிட்டுக் கூறலாம். வேறு வகை கலைஞர்களுக்கு உரிய பாடல்களில் மெட்டுமுறை மாறுவதைக் கண்டறியலாம்.

சில குறிப்பிட்ட சொற்களை மகுடமாகக் கொண்டு பாடல்கள் முடிவதைக் காணலாம். சிதம்பரக்கும்மி (கோபால கிருஷ்ண பாரதி, 1897) வயித்தியக் கும்மி (அகத்தியர், 1898) ஆகியவை 'கும்மியடியுங்கடி' என்று முடியும் பாடல்களைக் கொண்டவை. ஒருசில பாடல்கள் 'பாருங்கடி' என்றும் முடியும். ஸ்ரீ பிருந்தாவனக் காட்சிக் கும்மி (வேப்பம்மாள், 1894) பிருந்தா வனத்தில் கண்டேனே — கண்டேன்' என்று முடிவடையும் பாடல்களைக் கொண்டது. இத்தகைய சொற்கள் கும்மியின் இசைக்கும் தாளக் கட்டுக்கும் ஊன்று கோல்கள் போன்று அமைவதால் இவற்றை 'ஊன்றுகோல் தொடர்கள்' என்று அழைக்கலாம்.

கும்மியடித்துப் பாடும் பெண்களே தங்களுக்குள் பேசியவாறு கதையை வளர்த்துச் செல்லும் முறை சில கும்மிகளில் கையாளப் படுகின்றது.

---

(52) இராயபுரம் ரயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மி, ஸன் ஆப் இந்தியா அச்சுக் கூடம், சென்னை, பாடல் 6.

(53) சிவகங்கை சரித்திரக் கும்மி, பதி. தி. சந்திரசேகரன், தமிழக அரசு, (சென்னை, 1956) அடி 119-120.

'கேளுங்கடி பெண்களே கேளுங்கடி—இந்தக்
கிழவன் சொல்வதைக் கேளுங்கடி'[54]

என்ற பாடலில் 'பெண்கள்' என்பது கும்மி பாடும் பெண்களையும் 'கிழவன்' என்பது கதைப் பாத்திரமான முதுமை கோல முருகனையும் குறிக்கின்றன.

கும்மி ஆசிரியர் தானே கதை கூறுவதையும் பாத்திரங்களின் உரைகளை அதனுடன் இணைப்பதையும் கும்மிப் பாடலில் இடை யிடையே காணலாம்.

'வளைகிச் செட்டிசொல் தெரிந்திட்டாள்—இவன்
வஞ்சகக் காரனென் றறிந்திட்டாள்
அழகா யிருக்கு துன்பேச்சு—என்ன
ஆள்மிரட்டும் விருதா வீச்சு'[55]

என்ற பாடலில் முதலடி ஆசிரியர் தானே கதை சொல்லும் போக்கிலும் இரண்டாமடி கதைப் பாத்திரமான வள்ளியின் கூற்றாக வும் இருப்பதைப் பார்க்கலாம்.

இதைவிடவும் தெளிவாக ஆசிரியர் தலையிட்டுக் கதையை அவரே கூறும் இடமும் உள்ளது. சிவகங்கைச் சரித்திரக் கும்மியில்,

'இப்படியாக மருதிருவரும் கும்பினிக் கேற்ற
பிள்ளையா யரசாண் டிருந்தார்
அப்படியாக இருக்கையிலே மன்னர்க்கு
அழிவு வந்ததைச் சொல்லுகிறேன்'[56]

என்பது ஆசிரியர் கூற்று.

இடையிடையே நாடக அமைப்பில் பாடல்களைப் பாத்திர உரையாடல்களாகக் கோர்த்துச் செல்வது கும்மியின் கட்டுக் கோப்புக்குச் செம்மை சேர்ப்பதாக அமைகிறது. சிறுத்தொண்டரும்

---

(54) வள்ளியம்மன் கும்மி, பதி. ஆர். ஜி. பதி. கம்பெனி, சென்னை-1, பாடல் 185.

(55) மேற்படி, பாடல் 158.

(56) சிவகங்கைச் சரித்திரக் கும்மி, பதி. தி. சந்திரசேகரன், தமிழக அரசு, (சென்னை, 1954) பக் 48.

பைரவரும் உரையாடும் சொற்களை ஒரே பாடலில் அமைத்து ஆசிரியர் ஒரு காட்சியை நாடக பாங்கில் விளக்கிக் காட்டுவதைக் கண்டு களிக்கலாம்.

பைரவர் : 'அன்னம் புசிக்க என்னை யழைத்தாய்—பத்தா
ஆனாலும் என்ன கறிபடைப்பாய்?

சிறுத்தொண்டர் : என்ன கறிவகை கேட்டாலும்—சுவாமி
என்னாலே தான்தர ஆகுமையா!'[57]

இவ்வாறு பல உரையாடல் காட்சிகள் கும்மிகளில் இடம் பெறுகின்றன. நான்கு ஐந்து பாடல்கள் வரை தொடர்ந்து பாத்திர உரையாடலாக அமையும் இடங்களும் உண்டு. அரிச்சந்திரன் கும்மியில் அறுபத்தொன்றிலிருந்து அறுபத்தி நாலாம் பாடல் வரை நாடக உரையாடலாகவே அமைந்துள்ளது.

அறிவுரை கூறும் கும்மிகளில் ஆசிரியர் கூற்று மிகுதியாக வருகின்றது. தானே பொது மக்களை அழைத்துப் பேசத் தொடங்கி விடுகின்றனர். அவர்களுடைய பேச்சு வளர வளரக் கதையும் வளர்கின்றது

கும்மிப் பாடல்கள் உரையாடலாகவும், வருணனையாகவும் பொருள் விளக்கமாகவும் அமையும். அவற்றில் பொருள் நயச் சொற்கள் ஆகியவை இணைந்து காணப்படும். இசைப் பண்பு பாடல் முழுவதும் பரவியிருக்கும். படித்தால் கருத்துக்கும் பாடினால் செவிக்கும் இன்பம் தருவதாகக் கும்மிகள் இருத்தல் வேண்டும்.

'முத்தும் பவளமும் கோர்வை செய்தாற்போல்'[59] கும்மிப் பாடலின் அமைப்பு இருக்க வேண்டும் என்று முருகர் ஒயிற் கும்மிப் பாடலாசிரியர் கூறுகிறார். விதம் விதமாக இருப்பது சிறப்பு என்பது இதனால் விளங்கும். ஒரே இசையிலோ ஒரே வித விளக்கமாகவோ இருப்பின் அது அலுப்பைத் தருவதாகவே இருக்கும்.

'மாதர் நடக்கையைச் சொன்னது மல்லாமல்
வந்திடுந் தீங்கையும் நன்குரைத்தேன்

---

(57) சிறுத் தொண்ட நாயனார் கும்மி, பதி. ஆர். ஜி. பதி. கம்பெனி, சென்னை-1, பாடல் 74.

பாதகி யாசையை நீக்கிச் சிவஸ்துதி
பண்ணுவா யெப்போதும் மானிடனே'[58]

என்ற பாடல் முன்கூறிய கருத்தை நன்கு விளக்கும். ஆசிரியர் கூற்றான அறிவுரைதான் கும்மிப் பாடலைச் சுவைபட இங்கு வளர்க்கிறது.

பல்வேறு சுவைகளையும் பல்வேறு சொற்றொடர் அமைப்புடைய பாடல்களில் மிகப் பொருத்தமாகக் கலந்து கும்மியின் கட்டுக் கோப்பை ஆசிரியர்கள் சிறப்பாகச் செய்துள்ளனர். பஞ்சபாண்டவர் வைகுந்த கும்மியில் உணர்ச்சியைப் பெருக்கியவாறு கதையை வளர்த்துவதற்காக, ஆசிரியர் கையாளும் முறையை இங்கு சிந்திக்கலாம். பீமன் இறந்ததும் தருமனைக் கதறும்படிச் செய்து உச்சநிலை அவலவுணர்க்கு ஒரு தகுந்த இடத்தைத் தேடி விடுகிறார். தருமரின் அழுகுரல் கேட்கிறது.

ஆனைமிரட்டி யதட்டிய நீயு மஞ்சாமல்
முன்னின்ற ஆண்மை எங்கே?
கானகத்தில் வந்து சிங்க மெதிர்த்திடக்
கையாற் கிழித்த பலமுமெங்கே?
ஆரிருந் தென்ன நீயிருந் தாலெனக்
கானதுணை யென்று நானிருந்தேன்
பாரி வனந்தனி லொண்டியாய் விட்டாயே
பாவியென்றே தருமர் தானழுதார்'[60]

இத்தகைய அவலச்சுவைப் பாடல்கள் மக்களை, குறிப்பாகப் பெண்களை, மிகவும் கவர்ந்து இழுக்கக் கூடியவை என்பது உண்மை. இவ்வாறே இன்பச் சுவைப் பாடல்களும் வரும். முருகர் ஒயிற் கும்மியில் தெய்வயானை நாரதரை நையாண்டி செய்யுமிடம் நகைச்சுவை ததும்புவதாக உள்ளது.

---

(58) விலைமாதர் கும்மி, சின்னையா நாடார் பிரஸ், (திருப்பத்தூர், 1888) பாடல் 44.

(59) முருகர் ஒயிற் கும்மி, பதி. ஆர். ஜி. பதி கம்பெனி, (சென்னை) பாடல் 13.

(60) பஞ்ச பாண்டவர் வைகுந்தக் கும்மி, பதி. ஆர். ஜி. பதி. கம்பனி, (சென்னை) பாடல் 202, 203.

'தொட்டிலை யாட்டித் தொலட்டயை நெருடிய
தோதக வித்தையை யானறிவேன்[61]

என்று கூறியவாறு நாரதரின் கபட நாடகச் செயலைக் கண்டிக்காமல் கண்டித்து தெய்வயானை எள்ளி நகையாடுகிறாள். நாரதரைக் குழப்பத்தின் கொள்கலம் என்று கருதும் மக்களுக்கு இத்தகைய உரை நல்ல முறையில் நகைச்சுவை விருந்து அளிக்கும் என்பது உறுதி.

கும்மியடித்துப் பாடும்போது இவ்வாறு அமையும் பகுதிகள் மக்களை மிகவும் கவர்ந்து களிப்பாங் கடலில் ஆழ்த்தும் என்பது உண்மை. வருணனைப் பகுதிகள் இடையிடையே வருவது கும்மிப் பாடலின் இலக்கிய நயத்தைக் கூட்டுவதாகும். வள்ளியிடம் காதல் கொண்டு முருகன் மயங்கித் தயங்கி வேட்டுவ உருவில் அவளிடம் வரும்போது வள்ளியின் பாதாதி கேச வருணனையைப் பதினாலு பாடல்களில் விளக்குவது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.[62]

தர்மர் வல்லியாற்றங் கரை கடந்து 'தெய்வமலை தன்னை நின்றங்கே கண்ணாரக் கண்டாரே' என்று கூறும் கும்மி ஆசிரியர் அந்த மலையிலுள்ள சோலையை விளக்க முயல்கிறார். அழகான பாடல். சுவை ததும்பிச் சிறப்பதைக் காணலாம்.

மாங்கனி தேங்கனி காய்த்திருக்கு மங்கே
மாதளை மல்லிகை பூத்திரிக்கும்
தாங்காத வாழைக் குலைசாயும் மங்கே
தாழைமலர் வாசமே பாயும்'[63]

என்பன போன்ற இனிய வருணனைகள் கும்மி பாடலுக்கு ஏற்றம் கொடுப்பது உண்மை. இவற்றால் கலையின் விறுவிறுப்புக் குறைவதாகவும் தோன்றவில்லை. பாடல்களின் ஒலியமைப்பும் கலையுடன் அவை இணையும் சிறப்பும் இத்தகைய வருணனைகளின் பொருத்தத்தை புலப்படுத்திக் காட்டும். மேலும் அவை அந்த இடங்களுக்கு எவ்வளவு தூரம் தேவை என்பதையும் உணர்த்தும்.

---

(61) முருகர் ஒபிற் கும்மி, பாடல் 106.
(62) மேற்படி, பாடல் 65-78.
(63) பஞ்சபாண்டவர் வைகுந்தக் கும்மி, பாடல் 225.

கதை கூறல், அறிவுரை கூறல், நிகழ்ச்சிகளை அடுக்கிக் கூறல் போன்று பல முறைகளில் கும்மிப் பாடல்களை ஆசிரியர்கள் பின்னியுள்ளனர். வினாவும் விடையுமாகச் சில வேதாந்த கும்மிகள், அமைந்து காணப்படுகின்றன. சில கும்மிகள் பாடல் எண்ணிக்கையில் குறைந்து உள்ளன. அவை ஒரு நாளில் ஆடிப் பாடுவதற்குத் தகுந்த அளவில் இருப்பதாகக் கருதலாம். சில கும்மிகளோ மிக நீண்டு வளர்ந்து காணப்படுகின்றன. நாலு மந்திரிகள் கும்மியில் இருநூற்று நாற்பத்தி மூணு பாடல்களும் நீதிக் கும்மியில் இருநூற்று ஐம்பத்தொரு பாடல்களும் உள்ளன. பெண்கள் பருவமெய்தும் சடங்கு விழாக்களில் பன்னிரண்டு அல்லது பதினாறு நாட்களும், இத்தகைய நீண்ட நெடுங் கும்மிகளைப் பலநாட்கள் தொடர்ந்து ஆடியிருப்பர். பொதுவாக அம்மன் விழாக்களில் பத்து நாட்களும் கும்மியடித்துப் பாடுவதாக அறிகிறோம். இத்தகைய தொடர் விழாக்களுக்கு உரிய கும்மிப் பாடல்கள் நீண்டதாகவே இருக்கும்.

நீண்ட கும்மிப் பாடல்களைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பாடியிருப்பர். சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் இயற்றிய ஞானக் கும்மி மதவிகற்ப இயல்பு, எகோவா இயல்பு, ஏசு இயல்பு, பரிசுத்தா இயல்பு, சீவன் இயல்பு, கிரியை இயல்பு, நரக இயல்பு, முத்தி இயல்பு, மோசே முதலியோர் இயல்பு, கிருஸ்தவர் இயல்பு என பத்துப் பிரிவுகளாக அமைந்துள்ளது. மாதர் நீதிக் கும்மி, நாலு மந்திரிக் கும்மி ஆகியவையும் இவ்வாறு பல பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன.

சென்னைக் கந்தர் திருவிழாக் கொம்மி முப்பதே பாடல்களை யுடைய சிறிய கும்மி நூலாயினும் அது பகுதி பகுதியாகவே வளர்ந்துள்ளது. முதலில் தலவிசேடம், திருவிழாச் சிறப்பு முதலியன கூறிய பின்னர் பதினெட்டு நாட்கள் விழா யாரால் எப்படி நடைபெறுகிறது என்ற விளக்கம் தரப்படுகிறது. ஒன்பதாவது நாள் விழா நடப்பதை,

'கயிலை யங்கிரி மீதுசற் குருவாய்க்
கந்தர் சிவபிரா னுக்குப தேசித்த
ஐதீக மாய்வரத் தேங்காய் வர்த்தகர்
அற்புத உற்சவம் பாருங்கடி'[64]

என்று கும்மி ஆசிரியர் சுந்தர முதலியார் விளக்கிக் கூறுகிறார்.

(64) வி. சுந்தர முதலியார், சென்னைக் கந்தர் திருவிழாக் கொம்மி, கிச்சினர் அச்சுக் கூடம், (சென்னை, 1911) பாடல் 20.

இவ்வாறு நடப்புகளைச் சுருக்கமாகத் தந்து படிப்படியாக வளர்க்கும் கும்மிப் பாடல்களும் உள்ளன.

மூலக்கதையை விளக்கிக் கொண்டு செல்லும் போது சில கிளைக் கதைகள் துணை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஊடிணைப்பாக இடை நுழைத்துப் பொருத்தமாக விளக்கி யிருப்பதையும் காணலாம். நாலு மந்திரிக் கும்மியில் கீரிப்பிள்ளையின் கதை அவ்வாறு இடம் பெற்றுள்ளது.

‘தொட்டிலிற் பிள்ளைப் படுத்திருக்கக் கீரிப்
பிள்ளையும் பத்திரமாய்க் காத்திருக்கப்
பெட்டி யெடுத்தரைக் கீரைக் காகவே
போனாள் தன்கொல்லைக் கிணற்றருகே’[65]

என்ற பாடலில் தொடங்கிக் கதையைச் சற்று விரிவாகவே கூறுகிறார். சில கும்மி ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களை விளக்க முன்னூல்களிலிருந்து கருத்துக்களையும் தொடர்களையும் எடுத்தாண்டுள்ளனர். அவற்றை இடங்களுக்குத் தக்கவாறு பொருத்தமாக மேற்கோள்களாகக் காட்டி விளக்கி இருக்கின்றனர். மாதர் நீதிக் கும்மியில் திருக்குறள், நாலடியார், காசிக் காண்டம், உபதேசக் காண்டம் போன்ற இலக்கியங்களிலுள்ள அரிய கருத்துக்களையும் தொடர்களையும் எடுத்தாண்டுள்ளதைக் காணலாம். இவை கருத்து விளக்கத்துக்கும் கட்டுக் கோப்புக்கும் பயனாக அமைந்துள்ளன.

கும்மிப் பாடல்கள் பலநிலைகளில் சிற்றிலக்கியக் கூறுகளைக் கொண்டு விளங்கினாலும் சில இடங்களில் அவற்றிற்கே உரிய தனித் தன்மைகளைப் புலப்படுத்துகின்றன. இவற்றின் பாடல் அமைப்பும் இசை அமைப்பும் தனிச் சிறப்பும் தனிப் போக்கும் உடையவை. கருத்தூன்றிக் காண்பதாயின் கும்மியானது ஒரு தனியான இலக்கிய இனத்துக்கு உரிய சிறப்பியல்புகள் பலவற்றைக் கொண்டுள்ளது. கதைப் பாடலைக் கும்மியடித்துப் பாடுவதற்குத் தகுந்த முறையில் கவிஞர்கள் மாற்றி அமைத்துள்ளனர். அத்தகைய மாற்றத்தின் பயனாகக் கும்மிப் பாடலில் இலக்கியத் தன்மையுடன் கலைத் தன்மையும் கலந்து காணப்படுகிறது.

---

(65) சின்னத்தம்பிப் புலவர், நாலு மந்திரிக் கும்மி, வடக்கு யாழ்ப்பாணம், (1934) பாடல் 100.

கும்மியின் மொழிநடை

கும்மிப் பாடல்கள் பெரும்பாலும் இரண்டு அடிகளால் ஆக்கப் பட்டிருக்கும். இயற்கும்மியின் கண்ணிகள் தாழிசைகளாக அடிக்கு ஏழு சீர்களைக் கொண்டதாக இருக்கும். முதற் சீரும் ஐந்தாம் சீரும் மோனை பெற்றிருப்பதால் அந்த இடத்தில் அடி மடக்கி எழுதுவர். ஏழாவது சீர் காய்ச்சீராக வருவது மிகவும் சிறப்பு. வெண்பாவுக்கு உரிய தளைகள் வருவதே உயர்வெனக் கருதப்படுகிறது.

'ஊமை யெழுத்தே யுடலாச்சு மற்றும்
ஓமென் றெழுத்தே யுயிராச்சு
ஆமைந் தெழுத்தை யறிந்து கொண்டுவிளை
யாடிக் கும்மி யடியுங்கடி'[66]

இது தவிர ஒவ்வொரு அடியிலும் நாலாவது சீர் தனியசைச் சீராக வருவதும் உண்டு.

'கற்புள்ள மாதர் குலம்வாழ்க—நிறை
கற்பை யறிந்த வரேவாழ்க
தற்பரனைப் போற்றிக் கும்மியடி—குரு
சிற்பரனைப் போற்றிக் கும்மியடி'[67]

என்ற பாடல் தனியசைச் சீர் வருவதற்கு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது. அருகிய நிலையில் எட்டுச் சீர்களையுடைய இரண்டடிக் கண்ணிகள் வருவதும் உண்டு.

'விட்ட பணத்தைப் பிடிக்க நாடியப்போ
முன்னும் பின்னும் வைத் தாடிடுவாய்
பெட்டி பணத்தை யிழுத்துக்கொள் ளும்கெட்ட
பேய்போல் அலைவாயே மானிடனே'[68]

இவை தவிர இன்னொரு அடியும் சேர்ந்து ஓர் இடைச்சொல்லின் துணையுடன் இணைந்து வருவதையும் சில கும்மிப் பாடல்களில் பார்க்க முடியும்.

---

(66) வாலைக்கும்மி, பாடல் 13.

(67) மேற்படி, பாடல் 45.

(68) நன்னெறிக் கும்மி, சகலகலா நிலைய அச்சுக் கூடம், (சென்னை, 1887), பாடல் 11.

'காஞ்சீ புரந்தனில் வந்திறங்கி—அம்மா
கம்மா நதியில் ஸ்நானம் செய்து
ஏகாம்பர நாதரைக் கண்டு தெரிசித்து
இப்பொழுதே வாராள் பாருங்கடி—அம்மன்
மொய்ம்புடனே வாராள் பாருங்கடி'[69]

இறுதி அடி மடக்கின் அமைப்புடன் இருப்பதைக் காணலாம். கோயிற் கொம்மியில் முதல் பதினொரு பாடல்கள் ஐந்து அடிகளுடனும் மீதி நூற்றி இருபது பாடல்கள் நான்கு அடிகளுடனும் பாடப்பெற்றுள்ளன.

கும்மியில் சந்தப் பாடல்கள்

ஒயிற்கும்மிப் பாடல்கள் சந்தக் கவிகளாக விளக்குகின்றன. ஒலிச் சிறப்புடைய கண்ணிகளாக அவை உள்ளன. இயற் கும்மியின் இரண்டாவதடியின் முதல் நான்கு சீர்கள் முடுகி வருதல் ஒயிற் கும்மி என்று கூறப்படுகிறது. அம் முடுகியலடி முதலடியின் மோனை உடையதாக வரும். முடுகியலின் மோனையாக அடுத்த அரையடியின் முதற்சீர் வரும். முடுகு சீர்களில் வெண்டளை வரவேண்டும் என்பதில்லை.[70]

வள்ளி வேடனைப் பார்த்துக் கூறும் ஓர் ஒயிற்கும்மிப் பாடல் இரண்டடியாகச் சந்த இசையுடன் வருவதைக் காணலாம்.

'எட்டாத தேனுக் கொருநொண்டி யண்ணாந்து
கொட்டாவி விட்ட கதைபோல
ஏங்கிக் கணைத்தாங்கி பணைவாங்கி மிகவோங்கி
எதிரென் முன்னே நில்லாதே வேடுவனே'[71]

ஒலிநயமும் ஒப்புமையும் உடைய சொற்களைப் பொருள் சிறப் படையுமாறு கோர்த்துச் சந்தம் பொலிந்துள்ள பாடலாக இது விளங்குவதை அறியலாம்.

---

(69) காவேரியம்மன் கும்மிப்பாடல், சங்கநிதி விளக்க அச்சுக் கூடம், (சென்னை, 1927), பாடல் 9.

(70) புலவர் குழந்தை, தொடையதிகாரம் (சென்னை, 1967) பக். 281.

(71) முருகர் ஒயிற் கும்மி, பதி. ஆர். ஜி. பதி கம்பெனி, (சென்னை, 1973) பாடல் 136.

இவற்றிலிருந்து மாறுபட்டு சந்தக் கவிகளாகச் சில கும்மிப் பாடல்கள் மாடன் கும்மியில் பாடப் பெற்றுள்ளன. முதல் இரண்டடிகள் தாழிசை போன்று ஏழேழ் சீர்களாக வந்து அதற் கடித்து முடுகியலடிகள் இணைந்து இறுதியில் இரண்டு அடிகள் அடிமடக்காக வந்துள்ளன.

'செங்கனி வாய்மேல் வீசையுடன்—திகழ்
கழுத்தில் முத்தாரமும் சல்லடமும்
எங்கும் பிரதாபன் மடலிலெழு தியரூபன்
மங்கைய ருக்கிசைந்த சல்லாபன்
நவக்கிரகங் களையெடுக்கும்
கலையுடுக்கும் வினைமுடுக்கும்
வரங்கொடுக்கும் மாடன்
இடத்தில் கும்மி யடிப்பமடி—அன்பன்
இடத்தில் கும்மி யடிப்பமடி.'[72]

இந்த இசைப் பாட்டின் அமைப்பும் போக்கும் ஒயிற் கும்மிப் பாடல்களிலிருந்து மாறுப்பட்டிருப்பதை அறிய வேண்டும். சந்த இசைப்பாடல் சுவைப் பெருக்கத்துடன் இங்கு தரப்பெற்றுள்ளது இதனைத் தாழிசை முடுகியல் இசைப்பாடல் என்று அழைக்கலாம்

இன்னொரு வகை இசைப்பாடலும் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. தாழிசையின் இரண்டாமடி நான்கு சீர்களாகக் குறைந்துள்ளது. முடுகிசை இடைநடுவில் வராது இறுதியில் இரண்டு அடிகள் அடிமடக்காக வந்துள்ளன.

'சுந்தரனாம் அதியோகன் சுடலைமுத்து மகீபன்
சந்தியில் மாடனை முன்வைத்துச்
சந்தி ரான்னந் தானங் கொடுத்தான்
சங்கீதக் கும்மி யடியுங்கடி—தோழி
இங்கீதக் கும்மி யடியுங்கடி'[73]

இவ்வாறு வந்துள்ள பாடல்களை ஓரடி முச்சீர் குன்றிய தாழிசை இசைப்பாடல் என்று கூறலாம்.

---

(72) மாடன் கும்மி, பாடல் 4.
(73) மேற்படி, பாடல் 14.

இன்னொரு வகை இசைப்பாடல் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மியில் வந்துள்ளன. அதில் முதல் மூன்றடிகள் ஏழு சீர்களுடன் கும்மிப் பாடலடிகளைப் போன்று வந்துள்ளன. அவற்றிற்குப் பின்னர் நான்கு குறுகிய அடிகள் முடுகியல் ஓசையுடன் ஒரே வழி அடிமடக்காக வருவதைக் காணலாம். இசையாகப் பாடி மகிழ ஏற்ற ஒரு நல்ல அமைப்பாகவே தோன்றுகிறது.

'பொன்மகன் சொக்கநா ராயணர் கோட்டிப்
புரியில் வாழ்வேத பாராயணர்
தன்னடி மேலே கும்மித் தமிழினை
இன்னிசை யாலே விளம்பவே
நன்னய மாகவே துன்றுபுகழ் சேனை
நாதர் மலர்ப்பாதம் காப்பாமே—மனு
நீதர் மலர்ப்பதம் காப்பாமே—திரு
நாவீறன் மகிழ்மாலை மாறன்தன்
நறைமலர்ப் பதங்காப் பாமே—தமிழ்
மறைகளெப் போதும் காப்பாமே'[74]

இவ்வாறு வரும் இசைப் பாடல்களைச் சிந்தியல் மடக்கிசைப் பாடல்கள் என்று கருதலாமா என்பதைச் சிந்திக்கலாம்.

வேற்று வகைப் பாடல்கள்

ஓரடிக் கும்மி இயற்கும்மி போலவே முதற்சீரிலும் ஐந்தாஞ் சீரிலும் மோனை அமைந்துள்ளதைப் பார்க்கலாம். அடியெதுகையை விடவும் அடிமோனையே சிறப்பாகக் கருதப்படும்.

'ஆளுடன் ஆளு முகையாம லேநீங்கள்
ஆளுக் கொருமுழந் தள்ளிநில்லும்'[75]

இவ்வாறு மிக அழகான ஓரடிக் கும்மிப் பாடல்களைத் தென்னமரக் கும்மியில் கண்டு சுவைக்கலாம். தென்னமரக் கும்மி எண்பத்தெட்டு தனி அடிகளைக் கொண்ட கும்மிப்பாடல் ஆகும். சுப்பிரமணியர் வள்ளியம்மையைச் சிறையெடுத்தக் கொப்பிப்பாட்டு நூற்றுப் பத்தொன்பது அடிகளைக் கொண்டுள்ளது. சிவகங்கைச்

(74) சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி, பாடல் 1.

(75) மேற்கோள், புலவர் குழந்தை, தொடையதிகாரம், பக்.282.

சரித்திரக் கும்மியைத் தனித்தனி அடிகளாகவே அச்சிட்டுள்ளனர். ஆனால் அந்தப் பாடல்கள் இயற்கும்மிக்கு உரிய எழு சீர் அடிகள் இரண்டினையுடைய தாழிசைகளால் ஆன கண்ணிகளுக்குப் பொருந்தும் தன்மையுடன் உள்ளவை. இந்த உண்மையை முதல் எட்டு அடிகளைப் பார்த்ததுமே மிக எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இரட்டைக் கும்மி என்று ஒருவகைப் பாடலைப் பற்றிக் கூறப்படுகிறது. இது நாலடியாக வரும். இரண்டிரண்டாகப் பிரித்தால் தனித்தனிக் கும்மிப் பாடலாக அமைய வேண்டும்.

'தாசரச் சிங்கைப்பதி வாழுமழ கியநாயகி
தன்னை யென்னாளும் மறவேனே
ராசர்கள் மெச்சிய சிங்கை யங்காளியின்
நற்பிர தானிக் கருப்பருடன்
நேச மதாகிய முன்னோடித் தெய்வத்தை
நெஞ்சிற் துதித்துப் பணிவேனே
வாசக் கடம்பணி குன்றக் குமரேசர்
வள்ளி தெய்வானையுங் காப்பாமே'[76]

என்ற சிவயோக வல்லிக் கும்மிப் பாடலை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இதில் நான்கு அடிகளும் எதுகை ஒப்புமை யுடன் இருப்பதினால் எழு சீர் விருத்தம் போன்று தோன்றுகிறது. இரட்டைக் கும்மியில் இரண்டிரண்டடிகள் எதுகை இருந்தால் போதும், நான்கடி எதுகை வழுவன்று.

இவை தவிர வெண்பா, விருத்தம், கலித்துறை போன்ற பாக்களும் பாவினங்களும் கலந்து வரும் கும்மிப் பாடல்களும் உள்ளன. சிவயோக வல்லிக் கும்மி இத்தகைய கலவைப் பாடலமைப்புக் கும்மிக்குச் ஆவுடையார் கும்மியின் காப்புச் செய்யுள் எண்சீர்விருத்தமாக அமைந்துள்ளது. இது இதற்குச்சிறந்த காட்டாகஉள்ளது. கலைத் தன்மையிலிருந்து சிறிது நழுவி இலக்கிய தாக்கத்துக்குக் கும்மி ஆட்பட்டிருந்த நிலையையே இது காட்டும்.

ஒலி நயப் பாடல்கள்

கும்மிப் பாடல்களில் ஒலிநயம் மிகமிகச் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். தாளத்துக்குத் தக்கவாறு கையடித்துப் கால்பெயர்த்து ஆடிப்பாட வேண்டிய கலையாக இருப்பதினால் ஒலிக்கு மிகச்

---

(76) சிவயோக வல்லிக் கும்மி, பா. 7.

சிறந்த முக்கியத்துவம் உண்டு. ஒலி நயம் மிக்க பொறுக்குச் சொற்களைத் தாளக்கட்டுக்குத் தக்கவாறு பொருள் சிறப்பு சிதையாதவாறு அமைத்துக் கும்மிப் பாடல்களைப் புலவர்கள் பாடித் தங்களது புலமையினைச் சிறப்பாகப் புலப்படுத்துவர்.

நடராஜர் கும்மியில் நடன ஒலிக்குத் தக்கவாறு சொற்களைத் தெரிந்தெடுத்துப் பாடல்களைப் புனைந்திருப்பதைப் பார்த்துச் சுவைக்கலாம்.

'டமருக சப்தத்தால் டாம்பீகப் பொய்நீக்கி
டிண்டிமி வாத்தியத்தால் மெய்தீட்டும்
டூங்கார டெக்கையோ டெட்டோ டெட்டோடி
நெட்டை யிட்டாடிய நாட்டியம்பார்'[77]

ஒலியைக் கூட்டிச் சுவையைப் பெருக்குவதற்காக இலக்கண விதியை மீறி மொழிக்கு முதலில் வராத எழுத்துக்களால் சொற்களை உருவாக்கியுள்ளமை அறியலாம். சில சொற்களுக்கு ஒலிப் பொருளன்றி வேறு பொருள் இல்லாமை சிந்திக்க வேண்டியதாகும். இதே போன்று வடசொற்களையும் ஒலிச்சிறப்பு கருதி மிகுதியாக ஏற்றுப் பாடல்கள் அமைந்துள்ளதையும் காணலாம்,

'லக்ஷண லச்சித மூர்த்தி நடனத்தில்
லாவண்ய ரூபத்தில் காந்தி தோன்றும்
லிங்காதி பேத சாரீரத் திலுமவர்
லீனமாய் நின்றங்கு நடனஞ் செய்வார்'[78]

மேலும் ஒலிச் சொற்களைக் கற்பனையின் உதவியாகப் படைத்துப் பாடல்களைப் புலவர்கள் படைத்துள்ளனர். சிவகாமியம்மன் அரக்கரை வதம் செய்ய வேகத்துடன் வருகிறாள். கையில் வில்லைத் தாங்கி அரக்கரைக் கொன்று குவிக்கிறாள். அம்மனின் அரிய செயலையும் அதில் அடங்கியுள்ள அரிய தத்துவத்தையும் கும்மிப் பாடல் வாயிலாகக் கலைநயம் சிறக்க விளக்குவதற்காக ஒலிச்சொற்களைப் படைத்துப் பாடலை ஆசிரியர் அமைத்துள்ளார்.

---

(77) நடராஜர் கும்மி, பிரேஸர் அச்சுக் கூடம், (குன்னூர்), பாடல் 29.

(78) மேற்படி, பாடல் 38.

'டங்கார சப்தச் சிலர்பை யணிந்தவள்
டங்கார வில்தனைக் கையிலேந்த
ஓங்கார பாணத்தைத் தொடுத்துவிட்டுத் தேவி
பயங்கர ராக்ஷஸ வதஞ்செய்தாள்'[79]

என்ற பாடல் முற்கூறிய கருத்துக்குச் சிறந்த காட்டாக உள்ளது. இத்தகைய ஒலிச் சொற்கள் தாளத்துக்கு உதவும் தரமாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

வழக்குத் தொடர்களும் மொழியும்

பேச்சு வழக்கை மிகுதியாகப் பயன்படுத்தும் கும்மிப் பாடல்களும் உள்ளன. அவைதான் பொது மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. அவற்றைக் கேட்டதும் மக்கள் கருத்துக்களை மிக எளிதாகப் புரிந்து கொள்வதுடன் தங்களையும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்கின்றனர். கட்டப்பொம்மன் கும்மியில் காலடிக் கருப்பன் என்ற காரியக்காரர் கட்டபொம்மனைப் பார்த்து,

'இப்ப பாக்கியைத் தாருமய்யா
எடுபடுத்திரேன் பட்டாளத்தை'[80]

என்று சொல்வது நெல்லை மாவட்டத்துப் பேச்சு வழக்கு சீனய்யங்கார் கும்மியில் வரும்,

'அளப்புகள் தான்பேசி'
'இன்னும் ஒருசந்தை பார்ப்போம்'

போன்றவை கோவை மாவட்டத்துப் பேச்சு முறை. அதே கும்மியில்

நாட்டாண்மைக் காரரைக் கொண்டு வந்தரை
நாளிகையிற் பணம்வாங் கவென்று
கோட்டைக் கிழித்தங்கே தானிருத் திப்பணம்
கொடுத்துவிட் டப்பாலே போங்களென்றான்'[81]

என்று கூறிபிருப்பது கோவை, நெல்லை, மதுரை போன்று பல மாவட்டப் பழக்கம். இவ்வாறு வட்டார மொழித் தொடர்கள்,

(79) சிவகாமியம்மன் கும்மி, பிரேஸர் அச்சுக் கூடம், (குன்னூர்), பாடல் 29.
(80) கட்டப் பொம்மன் கும்மி, (அச்சேறாத சுவடி)
(81) காளியண்ணன், சீனய்யங்கார் கும்மி, பாடல் 61.

பழக்க வழக்கங்கள் கொண்டு பாடல்களை எழுதியிருப்பது சுவையாகவும் பயனாகவும் உள்ளது.

நாட்டுப் புறப்பாடல் தன்மையும் பழமொழிகளும்

கும்மி தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிறந்த நாட்டுப் புற கலை என்பது முன்னரே விளக்கப் பட்டுள்ளது படிப்படியாக வளர்ந்து கும்மிப் பாடல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரு சிற்றிலக்கியத்தின் தகுதியைப் பெற்றது. இருப்பினும் கும்மிப் பாடல் தனது பிறப்பை மறவாது நாட்டுப் புற பாடல்களின் சில கூறுகளைக் கொண்டு விளங்குகிறது.

சில கும்மிகளில் தாலாட்டு, ஒப்பாரி, ஊசல், ஓடப் பாட்டு முதலிய நாட்டுப் புறப் பாடல் வகைகள் இடையிடையே கலந்து ஒலி மாற்றமும் பொருள் மாற்றமும் கொடுத்துச் சுவை பெருக்குவதைக் காணலாம். அர்ச் அலேக்சியர் ஏலேலக் கும்மியில் ஓடப் பாட்டின் ஒலியமைப்பு மிகத் தெளிவாகத் தெரிகிறது. இது போன்று கோயிற் கொம்மியில் பல்லாண்டு பாடுவதைப் பார்க்கலாம்.

'பல்லாண்டு பல்லாண்டு பாடுங்கடி—பஞ்ச
பாபங்கள் பஞ்சாய் பறக்குமடி
மல்லாண்ட திண்டோளன் மணிவண்ண னாகிய
மாதவன் பாத மடைவோமடி'[82]

என்ற பாடலைப் படித்தால் ஓசையும் சுவையும் நாட்டுப் புறப் பாடலை நினைவுப் படுத்தும் முறையில் அமைந்துள்ளதை உணரலாம். இதை தவிர,

'கொம்பிளவிற் பட்ட மந்தியைப் போல்நின்று'[83]
'ஆசைகொண்ட பேர்க்கு ரோஷ மில்லை'[84]

போன்ற பழமொழிகள் பலவற்றை இடத்துக்குத் தக்கவாறு பொருத்தமாகப் பயன்படுத்தி உள்ளனர். சில பழமொழிகளைப் பாடல் அமைப்புக்காக மாற்றங்களுடன் புகுத்தியுள்ளனர். இன்னும் சிலவற்றைப் பொருள் விளக்கத்துக்காக விரித்துக் கூறியுள்ளனர்

---

(82) ம. வாசுதேவர் பிள்ளை, கோயிற் கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மி, (சென்னை, 1837) பாடல் 118.
(83) முருகர் ஒயிற் கும்மி, பாடல் 144.
(84) மேற்படி பாடல் 163.

இத்தகைய பழமொழிகள் நாட்டுப் புற மக்களுக்கு பழகியவையாக இருந்திருக்கும். இவற்றால் அவர்கள் கவரப்படுவது உண்மை.

உவமைகளும் உருவகங்களும்

உவமைகள் உருவகங்களைக் கவினுற அமைத்து தெளிவுறப் பொருளை விளக்கிக் காட்டுவதிலும் பல கும்மிப் பாடல் ஆசிரியர்கள் தங்களுடைய திறனைக் காட்டியுள்ளனர். புராண நிகழ்ச்சிகள், இயற்கைக் காட்சிகள், வாழ்க்கை அனுபவங்கள் போன்றவற்றை உவமைப் பொருளாகக் கொண்டுள்ளனர்.

'பெற்ற தகப்பனிடம் பிள்ளை வந்து
கற்ற வித்தைகாண் பித்ததுபோல்
சித்தங் கலங்கிக் கருத்தான
சிறுமருது தாளடி வீழ்ந்தழுதான்',[85]

இந்தப் பாடலில் காணப்படும் வாழ்க்கை அனுபவ உவமை இந்த இடத்துக்கு மிகவும் பொருந்தி பொருள் விளக்கத்துக்கு உதவுவதை அறியலாம்.

தத்துவப் பொருளை உருவகமாகக் கூறி விளக்கி இருக்கும் இடமும் உண்டு.

'ஆடும் மனக் குரங்கை யடக்கி—அது
ஐந்து வழியும் செல்லாமல்
நீடும்படிச் செய்துபோற்றி நின்றால்—பாவம்
நில்லாது கண்டறி மானிடனே'[86]

இவ்வாறு பலவித அணிகளைப் பல இடங்களிய் பொருத்தமாகக் கையாண்டு பொருளைச் சிறப்பாகக் கும்மிப் பாடல் ஆசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

வேற்று மொழிச் சொற்கள்

மக்களின் பேச்சு வழக்குக்கு ஒத்தும் விளக்கப்படும் பொருள், சூழ்நிலை ஆகியவற்றிற்குப் பொருந்தும் முறையிலும் வேற்று மொழிச் சொற்களைப் பயன் படுத்தி இருப்பதைக் காணலாம்.

---

(85) சிவகங்கைச் சரித்திரக் கும்மி, பதி. தி. சந்திரசேகரன் (சென்னை, 1954), பக்கம் 81.

(86) மானிடக் கும்மி, பாடல் 171.

ஆங்கிலேயர் தொடர்புடைய சிவகங்கைச் சரித்திரக் கும்மியில் கிளார்க் சோல்சர், பிஸ்துால் வெடி, கலெக்டர், மேசத்திரட்டார், கோர்ட்டு முதலிய ஆங்கில சொற்கள் வருகின்றன. அது போன்று சீனய்யங்கார் கும்மியில் கவன்மண்ட், கம்பனி, மான்காட், இண்டாசு போன்ற ஆங்கில சொற்கள் உள்ளன. பெரும்பாலான கும்மிகளில் சந்தோஷம் கஷ்டம், துஷ்டன், இஷ்டம், ரம்மியம், இலச்சணம், அபிஷேகம், வருஷம் போன்ற வடசொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. தமிழ் ஒலிக்கு ஒத்த முறையில் பல சொற்களை உரு மழுங்கச் செய்தும் உள்ளன. மக்களுக்குப் புரியும் தரமாகவே அவை கும்மியில் இடம் பெற்றுள்ளன. முசுலீம் தொடர்புள்ளவற்றில் சில்லா, சமஸ்தானம், முன்சீப், தாசில்தார் முதலிய சொற்களைக் காண முடிகிறது மொழித் துய்மை பற்றிய கவலை அக்காலப் புலவர்களுக்கு இல்லை. தங்கள் மனக் கருத்தை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களுடைய மொழி நடையின் நோக்கம்.

கும்மிகளில் படித்தவர்கள் மாத்திரமன்றி பாமரர்களுக்கும் எளிதாகப் பொருள் விளங்கும் அளவுக்கு மொழி நடை எளிமையாகவும் இனிமையாகவும் உள்ளது. கடினமான தத்துவ விளக்கங்களையும் ஒரு முறை பாடிக் கேட்டதும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவுக்குச் சாதாரண மொழிநடையில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. பாமர மக்களைக் கவரும் முறையில் ஒலியும் சொல்லும் இணைந்து சிறந்துள்ளன. ஆயினும் இலக்கிய சிறப்பு கும்மிப் பாடலுக்கு இல்லாமல் இல்லை. கற்றவரும் மற்றவரும் விரும்பத் தக்க நடையமைப்பைக் கொண்டு கும்மிப் பாடல்கள் விளங்குகின்றன.

சிறப்புச்செய்திகள்

கும்மியைத் தமிழருக்கே உரிய கலையாகக் கூற முடியவில்லை. ஆந்திராவிலுள்ள கொப்பியும் கேரளாவில் உள்ள கைகொட்டிக்களி, கூடியாட்டம், பிராமணிப் பாட்டு ஆகியவை கும்மியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. கன்னட நாட்டிலும் இதே போன்று ஒரு கலை நாட்டுப்புற மக்களிடம் பழக்கத்தில் உள்ளது. மேலும் குஜராத், இராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களிலும் இத்தகைய கலை இருந்து வருகிறது. உலகின் பல நாடுகளும் இத்தகைய அமைப்புக் கலைக்கு அன்னியமாகத் தெரியவில்லை. ஆகையினால், இத்தகைய நாட்டுப் புறக் கலை மனித இனத்துக்குப் பொதுவானது என்று கூறலாம். ஆனால், இடத்துக்கு இடம் மாற்றம் கொண்டு இக்கலை விளங்குகிறது.

தமிழ் நாட்டில் நடைமுறையிலுள்ள கும்மிப் பாடல் கலை தனித்துவச் சிறப்புகளுடன் விளங்குகிறது. இந்த அளவுக்கு வகைப்படுத்தி விரிவாகக் கூறும் தரமாகப் பிற இடங்களில் இத்தகைய கலை வளர்ந்துள்ளதாக அறிய முடியவில்லை. குஜராத்திலுள்ள கர்பா, இராஜஸ்தான் கும்மார் கேரளக் கைகொட்டிக் களி ஆகியவற்றில் பாடல்கள் இருந்தாலும் இந்த அளவுக்கு இலக்கியச் சிறப்புக்களுடன் வளர்ந்ததாகத் தெரியவில்லை.

கும்மி, ஆடிப்பாடி மகிழும் எளிய கலையாகத் தோன்றிச் சமயத் தொடர்புடன் வளர்ந்திருக்கும். புராணக் கதைப்பாடல்கள் மக்களைக் கவர்ந்திருந்த காலத்தில் பலவற்றைக் கும்மிப் பாடல்களாகப் புலவர்கள் எழுதியுள்ளனர். கிருஸ்தவ முசுலீம் சமயத்தவரும் தங்களுடைய சமயக் கருத்துக்களைக் கும்மிப் பாடல்கள் வாயிலாக மக்களிடம் பரப்ப முயன்றுள்ளனர். வேதாந்தக் கருத்துக்களை விளக்கும் கும்மிகளும், மக்களுக்கு நன்னெறி புகட்டும் கும்மிகளும் பல புலவர்களால் எழுதப்பட்டுள்ளன. சமுதாயம் நெறிவழுவிச் செல்வதைக் கும்மிப் பாடல்கள் வாயிலாகத் தடுக்க ஆசிரியர்கள் விரும்பி இருப்பர். சமூகம் அறமெனக் கருதியதையும் நெறியெனக் கொண்டதையும் கும்மியாசிரியர்கள் சரியென ஒப்புக் கொண்டுள்ளனர். புரட்சிக் கருத்துக்கள் அதிகம் இருந்ததாகத் தோன்றவில்லை.

கும்மிப் பாடல்களை மக்கள் விரும்பி ஏற்றுக் கொண்டது வரை, அவை பரவலாக மக்கள் அரங்கில் கலையாக நடத்தப் பெற்றிருக்கும். இன்னும் பல சிற்றூர்களில் அது வழக்கில் உள்ளது. இலக்கியப் பாடல்களாகப் பாடும் வழக்கமும் குறைந்து விட்டது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கூடக் கும்மிப் பாடலுக்கு நல்ல மதிப்பு இருந்திருக்க வேண்டும்.

தூத்துக்குடியில் விசுவநாதய்யர் தேசபக்தி ஊட்டும் நல்ல பாடலுக்குப் பரிசு கொடுப்பதாக அறிவித்திருந்தார் [அதில் கலந்து கொண்டு பாரதியார் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாடலை அனுப்பி இருந்தார்.] அ. மாதவையா என்பார் 'இந்தியக் கும்மி' என்ற கும்மிப் பாடலை எழுதியனுப்பினார். அன்று அந்தக் கும்மிப் பாடலே பரிசுக்கு உரியதாகத் தெரிந்து எடுக்கப் பட்டது. அதிலுள்ள பாடலமைப்பை அறிதல் நலம்.

'கும்மியடி பெண்ணே கும்மியடி—மனம்
குளிர்ந்து மகிழ்ந்து கும்மியடி

நம்மவர் நன்மையை இந்திய அம்மையை
நாடிக் கும்மி அடியுங்கோடி—புகழ்
பாடிக் கும்மி அடியுங்கோடி'

இப்பாடல் இறுதி அடி மடக்காயுள்ளது. அடி மடக்கு இல்லாது சதாரண இயற்கும்மிப் பாடல் போன்றும் அதில் கண்ணிகள் இருக்கின்றன.

'பூமா தேவிமுகம் போலும் இந்திய
புண்ணிய நாட்டுக் கும்மிபாட
நாமகள் நல்லதமிழ் தருவாய் என்தன்
நாவினில் வந்து நடம்புரிவாய்'[87]

இக்கும்மிப்பாடல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கும்மிப் பாடலுக்கு இருந்த மதிப்புக்கு நல்ல சான்றாக அமையும். மக்கள் கும்மிப் பாடல்களை ஏற்று ஆதரித்த வரை அவை கலையாக வாழ்ந்தன. இன்று இலக்கியச் சிறப்புடைய நூல்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

வரலாற்று உண்மைகளைக் காண்பதற்குத் தகுந்த சான்றுகளாகக் கும்மிப் பாடல்கள் சிறந்து விளங்குகின்றன. கட்டப் பொம்மன் கும்மி, மருதப் பாண்டியன் கும்மி, சிவகங்கைக் கும்மி, சீனய்யங்கார் கும்மி போன்றவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

ஆங்கிலக் கம்பனி ஆட்சி தமிழ் நாட்டில் வேரூன்றத் தொடங்கிய போது இங்கிருந்த நிலையை உண்மையாகக் கூறும் இனிய சான்றுகளாக இவை விளங்குகின்றன. ஆங்கில ஆட்சியை எதிர்த்த வீரராக நெல்லையில் கட்டப்பொம்மனும் கோவையில் தீரன் சின்னமலையும் இருந்ததை இரு கும்மிப் பாடல்கள் விரிவாகக் கூறுகின்றன. அவர்களுடைய வீரச் செயல்கள் கண்முன் காட்டப் படுகின்றன.

சிவகங்கைக் கும்மி அக்காலச் சிற்றரசர் நிலையையும், மருதப் பாண்டியன் கும்மி ஜமீன்தாரின் நிலையையும் கூறுகின்றன. சீனய்யங்கார் கும்மி ஆங்கில கம்பெனிக்குக் கீழ் பணிபுரிந்த

---

(87) மேற்கோள், பெ. சு. மணி, பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும், பூங்கொடிப் பதிப்பகம், (சென்னை, 1981) பக். 168, 169.

தாசில்தார்கள், மக்களை எவ்வளவு கொடுமை படுத்தினர் என்பதையும் அத்தகைய கொடியவர்களை மக்கள் எவ்வாறு வீழ்ச்சியடையச் செய்தனர் என்பதையும் விளக்கிக் காட்டுகிறது இத்தகைய கும்மி நூல்களைக் கொண்டு தூர்ந்து போன வரலாற்று உண்மைகளை உலகுக்குக் காட்டி விடலாம் என்ற நம்பிக்கை தளிர்க்கிறது.

கும்மியில் இசையுடன் பல்வேறு சந்த இசைப் பாடல்களும் இருப்பதினால் அவற்றைக் கொண்டு தமிழ் இசைப் பாடல் தன்மைகளை அறிய முடியும். அந்த மெட்டுக்களைக் கொண்டு பின்னர் வந்த புலவர்கள் எப்படிக் கவிதைகளைப் புனைந்துள்ளனர் என்றும் தெரிய முயலலாம். குலசை மாடன் கும்மியும் திருக் கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மியும் இசைப்பாடல் வளர்ச்சிக்கு உறுதியாகத் துணை செய்திருக்கும் என்று நம்பலாம்.

வரலாறு, அரிய கருத்து ஆகியவற்றைக் கொண்டு எழுதப்பட்ட கும்மிப் பாடல்கள் இலக்கிய உலகில் என்றும் வாழும். தமிழ் இலக்கிய வானில் தனக்கே உரிய தனித்துவத் தன்மைகளுடன் தனி இலக்கிய இனமாக விளங்கும் தகுதியுடன் கும்மிப் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. முந்திய தலைமுறைக்குக் கலையின்பம் கொடுத்த கும்மிப் பாடல்கள், இனிவரும் தலைமுறையினருக்கு இலக்கிய இன்பம் கொடுத்து வாழும் என்று உறுதியாக நம்பலாம்.

KUMMI SONGS

KUMMI A FOLK-ART

Human mind is capable of emotions. The display of emotions in a regulated form becomes an art when it feeds the minds and pleases the senses. The experience revealed in an artistic way also wins universal appeal when it mirrors what others have in mind but is difficult to express.

Originally such arts unconfined to any set regulations were prevalent in the country side and were called folk-arts. The art of giving by a group accompanied by dancing and hand claps is one that has a special place in the villages of Tamilnadu during festivals. It is a combination of two arts viz. dancing and singing.

The classical arts have the basic natural qualities of the folk-arts but adhere to set rules and regulations in their expression. Kummi Poem is a form of literature and the kummi dance is a folk-art. It finds expression when man in his joyful mood wants to share his experience in an orderly fashion by singing and clapping hands. It must have had its origin in the rural areas during festivals, social functions and family gatherings. Kummi literature might have been a development from the 'Oral Songs' to the orderly poems written by village poets.

Over the years there have been several changes in Kummi Songs. The mode of clapping hands and dancing has undergone a variety of modifications. The poet have also enriched the literary contents. The poem once popular in villages has gradually attracted the attention of the educated and those living in urban areas. It has grown in size and number

too. Several forms of clapping (kummiyadi) and leg positions (Adavus) have been developed. The poem achieves classical quality when clapping, singing and dancing are in tune with 'Thalam', situation, music and meaning of the poem.

ORIGIN AND DEVELOPMENT

In Sangam Literature, though there is no reference to kummi, there are very many occurances of kuravai-k-kuttu, a kind of dance performed by women-folks, forming a circle. There is very good reason to believe that kummi is an off-shoot of kuravai as they have so many common characteristics. An obvious difference is, while there is limited movement for hands and legs in kuravai (as the hands are often times interlinked) they are profusely used in kummi.

Usually the songs in kummi are sung by the leader of the group followed by its members. Some times the whole group sings at the same time. Most of the kummi poems in the early stages were nothing but popular songs sung by the folks. Gradually drawn by the attractive tunes (Mettus) various themes and stories came to be treated in 'Kummi Mettu'. Just like any other form of folk art used in religious and literary works, kummi poems have also been found to be preferred by many writers.

Ramalinga Swamigal, Gopalakrishna Bharati, Subramania Bharati, Namakkal Kavingar Ramalingam Pillai, Kavimani Desigavinayagam Pillai and Kumari Cheliyan have used 'Kummi' as a literary form. Simplicity, melodious nature, ability to narrate stories, adaptability for dance sequances etc. are the common features of kummi that have secured a unique place for it in Tamil Literature.

MODE OF DISPLAY

In almost all the states in India, in some form or other, kummi is in vogue. Kummi in Tamilnadu, koppi in Andhra Predesh, kaikotti-kali and Kudi Attam in Kerala, Karba in Gujarat, Kummar in Rajasthan etc. have common

characteristics. The difference between one another can be best explained by the difference in the culture of people separated by regional factors.

Kummi is mostly played by women. In Tamilnadu it is commonly performed during the festivals conduc ed in honour of the village deities like Muttaramman, Mariyamman, Bagavathiyamman etc. Festivals like Pongal and occasions like girls coming to age are also celebrated with Kummi Dance.

Religious stories, historical events, serious happenings and attractive incidents form the subject matter of kummi. Uniform costumes quite appropriate to the charactors they impersonate were worn by the participants when kummi was performed in a special way in earlier days. The participants represented certain characters and performed their actions as detailed in the story which would make the Kummi Dance very attractive.

Usually the participants form a circle and perform the dance. Viral Thattu, Ullangai Thattu, Anjali Thattu, Mulukkai Thattu, are some of the modes of clapping. Jingling anklets worn by the participants accelerate the musical effect.

Though there is no limit to the number of the participants, usually it is nine. It is customary to prefer an odd number. In Tamil Literature there are referneces to seven, eight, nine, fifty and sometimes even five participants. For kuravai also people seemed to have preferred seven or nine members.

It is the custom of the kummi group to form a circle around an idol, a pole, a flower basket, a light or a basket of eatables and perform the dance. Sometimes they stand in two rows, one facing other. Equal number of dancers are found in both the rows. In such cases only even number of participants can be possible. The clapping of one's hand with the other standing just opposite, seems to be a good sight.

Even though kummi is a folk-dance, the calculative movements of the legs and the rythmic beatings of the hands appear to be artistic and attractive. The leg positions used are Tattadavu, Mettadavu, Nattadavu, Kuthittaladavu etc. Besides the hand movements like Patakam, Anjali, Cikaram and the bodily movements are really attractive and highly artistic. The shoulder, breast and thigh movements render exquisite beauty to the performance.

KUMMI LITERATURE-CLASSIFICATION

From the form of folk-songs kummi gradually developed and reached a growth to consider it as a form of literature. Those which were sung by the village bards afterwards were composed by poets with literary eminence. During the nineteenth century a number of kummies were written. They seem to be a minor literature called 'Pirabandam' in Tamil. For a clear understanding of the kummi literatures they should be classified.

Kummi poems are generally sung on two occasions namely temple festivals and social functions. The same kummi poem would be sung in both the occasions. So it is not possible to classify these poems according to the situations of performance. Based on the form of the songs and the nature of dancing they have been brought under three heads viz Oyil kummi, Iyal kummi and Oradik kummi. Also there has been an attempt to classify them into Elelak Kummi, Chandak Kummi, Kirthanaik Kummi, Kolattak Kummi and Oradik Kummi which is also not satisfactory. A broader classification has its base on the three major themes-Society, Religion and History.

SOCIAL KUMMI

Social Kummi poems usually deal with reformation and nationalism and provide advice to the audience. When stories and situations are treated to give advice, poems like 'Paazh Manatukku Arivu Kummi, Vilai Mathar (Prostitute) kummi, Nanneri kummi, Manida kummi etc. aim at social reformation. Ariya Desabimana kummi though deals with

Indian History, can be included among the 'national poems' owing to its patriotic contents. Nalu Mantri kummi, Arichandran kummi, Nalan kummi etc. try to promote the values like keen intelligence, truth, real love etc. Vaithiya kummi and Thennaimara kummi can also be included as social kummi poems as they are dealing with matters relevent to the society.

RELIGIOUS KUMMI

Religious kummi can be grouped under Hindu, Christian and Muslim poems. Hindu Kummi poems can be further divided into Puranam, Idhikasam, Philosophy, Stories of Village deities, and Prayer Songs. Puranam is further classified into general (Potupuranam) and Local (Stalapuranam). General Puranam deals with either stories or selected events from the accepted well known puranams. Local puranams are concerned with the stories connected with the temples on particular villages. Such kummi poems have had only local importance which can interest the people of the particular locality.

Kummi Poems on the miracles performed by Jesus Christ and the principles come under the Christian Kummi Poems. Muslim Kummi poems have their themes of the life of Mohamed the prophet and his renowned followers. The Worship of one God is insisted in such kummi poems.

HISTORIC KUMMI

Historic kummmi poems deal mostly with important incidents to be remembered in history. They also brought out the life and role of historic personalities. Kattapomman kummi, Marutuppandian kummi etc. gives an account of the historic role of valourous [heroes in whose name the Kummi poems] are called after.

Ceenaiyankar kummi expounds the atrocities of a Thasildar which is a historical fact. This kummi helps to know much about the nature of the Company rule and the position of the people under their yoke during the latter half

of the nineteenth century. Karanakummi, Sinkara kummi, Subbu Thevar kummi are mere praises of munificent persons who had encouraged art and literature. Since they contain certain historical facts they have to be considered as historic kummi poems.

AIMS OF KUMMI

Kummi songs provide artistic and literary pleasure to the audience. Usually the poems start with invocation to various gods. The poets afterwards re eal the purpose of their literary creations. Arichandran kummi has its aim as the revelation of the quality of truth. Even at the risk of one's life one must keep the path of truth and be honest at all circumstances.

Poet Kathiru Mohideen speaks much of the greatness of Mohamed the prophet and calls all to follow the path of one God who is the most compassionate and the most merciful. Cruz Maistry has his aims as Alexier's love for sacrifice. One should live a life to give as much help as possible to others who are in need.

Some kummi poems have social reformation as their aim. By narrating the advantages and disadvantages in certain developments in history, a few kummi poems try to achieve a change in the social outlook. And so their aims can be taken as appropriate for the ages they were written in.

When a large number of kummi poems are dealing with religious principles and moral stories some poets tried to introduce an element of Philosophy. There are also occasions when this form of art was used as a weapon against other religions. Pathirigal Vayappuk kummi and Yalpanattu Gnana kummi are examples of this kind and they are levelled as serious criticism against Christianity.

Mostly kummi poems have positive aims. They try to point out in a humorous language the ills of the society and

also the life of certain individuals and try to bring about a reformation.

FORM AND STRUCTURE OF KUMMI POEMS

Normally a kummi poem starts with invocation called 'Kappu' and develops into a story poem dealing with theme fully and ends with greetings to all which is known as 'Valthu'. Most of the poems introduce themselves in the beginning. Then the dancing girls are called to perform kummi.

With all kinds of ornaments they decorate themselves and come out neatly and attractively dressed. The poem also describes how the dancing girls should perform the dance. These lines sound like 'Chorus' and are repeated as intervals. In some cases even the 'Mettu' in which the songs tobe sung is also introduced in the middle. It reveals how, after writing the poem even the tune is composed suitably by the poet himself.

Many poems end with striking words like 'Kummi Adiyungaladi, Parungadi' etc. These words support the accompanying music and the 'Mettu' of the songs and so may be called as 'Oontukol Thodargal' or 'phrases of support'.

There are occasions when the poet tells the story in the first line of a stanza and in the second a charactors picks up the thread. At intervals the poems are also composed of 'dialogues' as in drama.

Sometimes the poems are conversational and descriptive in nature and elucidate even the meaning of certain words. Such words used are replete with meaning and are capable of producing sound effect.

There are very long kummi poems which can be played and sung for days together. For instance 'Nalu Mantri Kummi' consists of 243 stanzas. Unless it is played continuously for several days it cannot be completed. During

Amman festivals and while celebrating girls' coming to age, people have to perform kummi for ten or twelve or even sixteen days. So these long poems serve such purposes satisfactorily well. Such of the long kummi poems are divided into several parts. Gnana 'Kummi' is a best example for such divisions.

Also there are instances when the writer, while dealing with the main story, makes a digression and introduces sub-plots with secondary themes. In 'Nalu Mantri Kummi' the story of mangoose is an example of such a sub-plot.

STYLE OF KUMMI

Invariably most of the kummi poems are of two lines. (Adigal) The Kannigal (stanzas) in Iyal kummi are ordinarily be in' Thalisai' which consists of two lines with seven 'seer' in each of them. Since the first and the fifth 'seers' have 'monai' the lines is broken into two at that place. It would be desirable to have 'Kayseer' in the end of every line. A well composed kummi poem would contain 'Thalaigal' as in Venpa metre. In some cases, in each of the lines the fourth 'seer' comes as a separate word called 'Thani Asai Seer'. Some poems have an additionai line with a supporting 'Idaiccol'. In 'Koyil Kummi the first eleven stanzas are with three lines written as five lines and the remaining 120 poems have two lines each.

Oyil kummi poems are 'Chanda kummi' items capable of producing very fine musical effect when singing aloud. Words with phonatic similarities are knitted together to make the songs more attractive.

Madan kummi differs from other kummi works with regard to the metre of the songs. The first two lines are just the Talisai metre. Then a three lines in 'Mudukisai' are enjoined with the Talisai. In the end there are two lines with similar sound. This is also 'Chanda Isai Kummi, but different from the former kummi songs. The author has paid more importance to music.

SONGS PRODUCING SOUND EFFECT

Kummi is an art in which dancing and hand to hand clapping are in harmony with the tune of the songs. The poets selected suitable words to produce the desired sound to go with the tune

'Natarajar Kummi' is a good example where the words used are in tune with the 'dancing sound'. The poet has even taken liberty to use letters in the beginning of words which are disallowed by grammatical ordinances. Most of these letters are used merely to produce sweet musical sound and not for conveying any meaning. In a few songs Sanskrit words are used in order to give sound effect. Words used only for the sake of providing 'musical effect' have not affected the creative talents or the imaginative ability of the poets.

Colloquial speech forms are also used in some of the Kummi Songs. Such usages must have been very common among the people in those days. The poets might have thought that such of them are easy for popular understanding. The people found it easy to identify themselves in those speech forms. Local dialects found their places in the Kumm Songs. They can be easily identified to which place they belong by their dialectical forms. Ceeni Aiyangar Kummi can easily be found out to be the work of an author belonging to Coimbatore District. Likewise Maruta Pandian Kummi is the work of a Thirunelveli man.

SPECIAL FEATURES OF KUMMI POEMS

In some kummi poems various types of folk-songs like Lullaby, Lamenting, Swing song and Boating song etc. are mixed in order to provide sound and sense effect. Some songs are mere proverbs but the words are arranged in such a way that they confirm to kummi form. The poets have

even attempted to explain the meaning of the proverbs they have used.

The kummi poems are rich with examples, allusions, similes, anecdotes, symbols, metaphers etc. Philosophic ideas too have found place in poems dealing with events from day to day life.

Usages of words from other languages is a common feature in most of the kummi poems. In the Sivaganga Kummi, which is historical, English words like clerk, soldier, pistol, company, collector, court etc. are found used of and again. Further Sanskrit words like Abishekam, Santhosam, Kastam, Tushtan etc. are found frequently used as to the speech habits of the people. Obviously, the poets did not seem to have cared much for the purity of language. Their real concern was to get their ideas across to people in an understandable language. So chastity of language was left uncared for.

Kummi poems have been found to be used to serve special purposes. Though kummi developed as a simple art gradually it acquired religious connections. Many story poems are based on the Hindu Puranas, Christian and Muslim poets have also used this art for religious propaganda. Some kummi poems have philosophic and morality motives.

Historical facts have been dealt with in some of the kummi poems. Kattapomman kummi, Marutu Pandian kummi, Sivagangai kummi, Chinna Malai kummi, Ceeni Aiyangar kummi etc. have facts regarding the East India Company's rule in India. The power and position of the chieftains, the Paligars and Indian officers like Thasildar and Magistrate can be known from these Kummi Songs. The struggle of the people under the Company's regime can be well known from some of the Kummi poems. They were taxed heavily and

treated cruelly. So historically and anthropologically kummi poems are very important.

The nature of the society can be studied from these minor literature. The occupation of the people is also described. The position of the common people and the powerful position of the rich can be known from the kummi Songs.

The music in the songs can help to know about the position of the particular art in Tamil nadu. 'Chanda Isai' might have been very famous in those days. The various 'Mettus' have to be analysed so that the musical standard of the age can be understood.

Kummi poems with historical and rare ideas are of permanent value. The poems which gave artistic pleasure to the people of the older generation has proved to be a source of literary pleasure for the present generation.

ஆவுடையார் கும்மி

ஆவுடைநாதர்

இராமநாதபுரம் மாவட்டத்தின் வட பகுதியிலுள்ள மிதிலைப் பட்டியில் கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெயர் ஆவுடை நாதர். அன்னையின் பெயர் சிவயோக வல்லி. சிவலிங்கத்தின் கீழ்ப் பகுதியை ஆவுடை என்று கூறுவார். அது பசுவின் பின்பகுதி (இடை) போன்று இருப்பதினால் 'ஆவிடை' என்று கூறப்பட்டுள்ள தாகவும் ஒரு கருத்து உண்டு. இந்தச் சொல்லே 'ஆவுடை' யாகியதாகக் கூறுவர். இந்த அமைப்பில் இருப்பதனால் இறைவனை ஆவுடையார் என்று அழைத்துள்ளனர். 'ஆவுடை' என்பது பராசக்தியின் அடையாளம் என்று பேரகராதி குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கும்மிப் பாடல் ஆவுடையார் பேரில் பாடப்பெற்றுள்ளது மிதிலைப் பட்டியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மழை இல்லாமல் பயிர் பச்சைகள் வாடி வதங்குகின்றன. விளைவில்லாமல் பஞ்சம் வந்து மக்களை வாட்டி வதைத்து விடும் என்று அனைவரும் நினைக்கின்றனர். அப்பொழுது புலவர், ஆவுடையாரின் அருளால் மழை பெய்ய வேண்டும் என்ற வேண்டுதலுடன் அமைதியாகப் பணிந்து இந்தப் பாடலை அவருக்குப் படையலாக்குகிறார். இந்தக் கும்மி பாடியதினால் மழை பொழிந்ததாகவும் இதில் கூறப் பெற்றுள்ளது.

ஆசிரியர்

ஆவுடையார் கும்மிப் பாடலில்,

'மாரன் குமார சுவாமி மனமது
மகிழ்ந்துரைக் கொம்மித் தமிழ்தனக்கே' (பா.36)

என்று கூறப்பட்டிருப்பதைக் கொண்டு இதன் ஆசிரியர் குமார சுவாமிப் புலவர் என்று எளிதாகக் கண்டு கொள்ள முடிகிறது. இவர் மல்லையூர்க் கவியான அழகிய சிற்றம்பலக் கவிராயருடைய பரம்பரையில் உதித்தவர்.

இவருடைய முன்னோர்களைப் பற்றியும் கும்மிப் பாடல் சிறிது குறிப்பிடுகின்றது. இப்பாடல் ஆசிரியரின் பரம்பரையைப் பற்றிக் கூறும் போது,

'தில்லை நடேசரை என்றும் மறவாத
தீரன்குழந் தைநரவா ணன்மைந்தன்
மல்லை யழகிய சிற்றம் பலக்கவி
மாதவத் தாலே மகிழ்சுதனும்' (பா. 34)

என்று சொல்லப்பட்டுள்ளது. இதைக் கொண்டு ஆசிரியரின் பாட்டனார் குழந்தை நரவாணன் என்றும் தந்தையார் அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்றும் அறிந்து கொள்ளலாம்.

வெங்களேந்திரன் பேரில் குறவஞ்சி பாடி மிதிலைப் பட்டியைத் தானசாசனமாகப் பெற்ற சிற்றம்பலக் கவிராயரே அந்தப் பரம்பரையில் முதன்மையானவர். அவர் மல்லையூரைச் சேர்ந்தவர். அவருடைய இரு பிள்ளைகளின் வழியைக் கொண்டு இக்கவிஞரின் வம்சவழியினர் மிதிலைப்பட்டி வழி, காரைச்சூராம் பட்டி வழி, என இரண்டாகப் பிரிந்தனர். அவற்றுள் மிதிலைப்பட்டி வழியினர் காலங்காலமாகக் கவிகளை இயற்றும் கவிவாணர்களாக விளங்கினர்.

மிதிலைப் பட்டி வழியில் தோன்றிய மங்கை பாகக் கவிராய மருங்காபுரி ஜமீன்தாரின் பேரில் பல பிரபந்தங்கள் இயற்றிப் பொன்னும் பொருளும் பரிசில்களாகப் பெற்றவர். இவருடைய மகன் குழந்தைக் கவிராயர் மான் விடு தூது பாடியவர். இவருக்கு மகனாகப் பிறந்த அழகிய சிற்றம்பலக் கவிராயரின் மகன் குழந்தைக் கவிராயர். இவரையே கும்மிப் பாடல் குழந்தை நரவாணர் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது. இவர் திருப்புகழ்ச் சந்தக் கவி பாடுவதில் வல்லவர். தில்லை நடராசர் பேரில் பற்றுடையவர்.

குழந்தைக் கவிராயரின் இரு மக்களில் மூத்தவர் அழகிய சிற்றம்பலக் கவிராயர். இளையவர் பாண்டுக் கவிராயர். மூத்தவரின் இளைய மகனாக இக்கும்மிப்பாடல் ஆசிரியர் குமாரசாமிக் கவிராயர் தோன்றுகிறார்.

குமாரசாமிக் கவிராயர் தன்னைப் பற்றியும் தான் பாடும் கும்மிப் பாடலின் நோக்கம் பற்றியும் குறிப்பிடுகிறார்.

'கந்தரை நெஞ்சிற் பதித்திடு வானந்தக்
காலுறை மானைத்துதித் திடுவோன்
சொந்த மிதிலைப் பதிசெழிக் கமழை
சொரிய விக்கும்மி சொல்லலுற்றேன்' (பா. 35)

நூலின் காலம்

ஆவுடையார் கும்மியின் காப்புச் செய்யுளைக் குமாரசாமிக் கவிராயர் தொடங்கும் போது,

நந்தனத் தாண்டதனில் விருச்சிக மாதத்தில்
நரவாணன் வாழ்மிதிலை நகரந் தன்னில்
அந்தமுள்ள ஆவுடையார் குளத்தின் தென்பால்
அமர்ந்தருளு மானைமுக ரடியைப் போற்றிச்
செந்தமிழா லிக்கும்மி யைய வரைந்தேன்' (பா. 1)

என்று குறிப்பிடுகிறார். இந்நூலைப் பாடும்போது ஆசிரியரின் பாட்டனாரான குழந்தை நரவாணர் வாழ்ந்திருக்கிறார். 'நந்தன ஆண்டு விருச்சிக மாசம்' என்று கூறி இருப்பதனால் இந்தக் கும்மிப் பாடலைக் கவிராயர் 1892 ஆம் ஆண்டு கார்த்திகை மாசம் தான் பாடி இருக்க வேண்டும். இதற்கும் அறுபது ஆண்டுகளுக்கு முன்வரும் நந்தன ஆண்டை எடுப்பதானால் கூறப்பட்டுள்ள வம்ச பரம்பரையில் வேறுபாடுகள் ஏற்பட்டு விடும். ஆகையினால் இந்த ஆண்டில்தான் ஆவுடையார் கும்மி தோன்றியிருக்க வேண்டும்.

பின்னர், நந்தன ஆண்டு பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

'வட்டியில் சோறிட்டு மன்னையில் கைபோட்டு
வாரச்சே யிந்த வருடந்தன்னில்
அட்டியில் லைதாது வருடம் நல்லது'
அதனில் மெத்தவனி யாயமிது (பா. 25)

என்று கூறியிருப்பதிலி நந்து தாது வருடப்பஞ்சம் நந்தன ஆண்டுப் பஞ்சத்துக்கு முந்தியது என்பது உறுதி. கொடிய பஞ்சம் நிலவிய தாது வருடத்துக்குச் சரியான ஆங்கில ஆண்டு கி. பி. 1876 ஆகும். அதற்குப் பின்னர் வரும் நந்தன ஆண்டு 1892 என்பதை யாரும் அறியலாம். ஆகையினால், ஆவுடையார் கும்மி இயற்றப் பட்ட ஆண்டு 1892 என்பது மிக உறுதி.

கும்மியால் விளக்கப்படும் பொருள்

முதற் பாட்டில் நூலின் காலம் கூறி நோக்கத்தை விளக்கிக் கணபதி, ஆவுடையார், சிவயோகவல்லித் தாய் ஆகியோரை வணங்கிக் காப்புப் பாடப் பெற்றுள்ளது. பிறகு, தனித்தனியாக ஒவ்வொரு தெய்வத்துக்கும் வணக்கப் பாடல் பாடப்பெறுகிறது.

நந்தன ஆண்டு பஞ்சத்தின் கடுமை

நாட்டைச் சனி பிடித்து விட்டமாதிரி பயிர்பச்சைகள் வளர்ந்து பலன்கொடுக்க முடியாத அளவுக்கு மழை ஏதும் இல்லாமல் நாடு வருந்துகிறது. இதனைப் புலவர்,

> 'நட்ட பலன் கையிற்கிட் டாமலா கியதே
> வெட்ட வெளியாகி விட்டதுவே' (பா. 6)

என்று உணர்ச்சியுடன் தன் கருத்தை ஆசிரியர் வெளியிட்டுக் காட்டியதாகக் கூறலாம்.

குன்றத்திலிருந்து ஆறுமுகப் பெருமானைப் புலவர் அழைத்துத் தங்களைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றும்படி. வேண்டுகிறார். உணவின்றி இறக்கும் நிலையும் கொள்ளை விலை விற்கும் நிலமையும் வராமல் காக்க முருகனைக் கெஞ்சுகிறார்.

கரடிப்பெருமாள், கருப்பண்ணசாமி, சன்னாசித் தெய்வம், மன்மதன், ஆகிய தெய்வங்களையும் மழை தருமாறு இறைஞ்சுகிறார். மிகமிக இரக்கமாக வேண்டுகிறார். ஒரு பாடலில் கவிராயர்,

> 'குன்றை மலைவளர் என்குருவே இங்கு
> குடங்கள் கொண்டுமே கொட்டுதலாய்
> இன்றை வைத்தாகிலும் பெய்த தென்றால்பலன்
> இட்டது வீணாகா தென்துரையே' (பா. 16)

என்ற அளவுக்குத் தாழ்ந்து கேட்கிறார்.

சித்திரை வைகாசிக் கோடை போன்று வெயில் தீயாக எரிகிறது. இதை விட உயிரை வதைத்துக் கொல்லக் கடுமையான வழி வேறில்லை.

ஆவுடையாரை வேண்டுதல்

கடுமையான பஞ்சத்திலிருந்து மக்களை இறைவனாகிய ஆவுடைநாதர் காக்க வேண்டும் என்று குமாரசாமிக் கவிராயர்

பணிவோடு வேண்டுகிறார். முன்னால் நான்முகனின் தலை யொன்றைக் கிள்ளிப் பழியேற்றது போல் இன்று மக்களைப் பஞ்சத்தாற் கொன்று பழியேற்க வேண்டாம் என்று இறைவனைக் கேட்டுக் கொள்கிறார்.

மக்கள் பயிர் செய்வதற்காகப் பட்ட பாட்டை விரிவாகக் கூறுகிறார்.

'செட்டியிடஞ் சென்று வட்டியொன் றாகவோர்
சீட்டை எழுதி விதைவாங்கி
அட்டி யில்லாமலே தான்விதைத் துநிலம்
ஆழ வுழுத தனில்நட்டோம்' (பா. 20)

கையிலிருந்த விதையும் கடன் வாங்கிய பணமும் தீர்ந்து விட்டது. உண்ண உணவில்லை. இனிவாழ வழியுமில்லை. அன்று யமனை உதைத்து மார்க்கண்டேயனுக்கு ஆயுள் அளித்தது போல் இன்று பஞ்சத்திலிருந்து விடுதலை அளித்து வாழ்வளிக்க ஆவுடை நாதரைக் கவிராயர் வேண்டுகிறார்.

ஒருமழை பொழிந்தாலே பயிர் பிழைக்கும். பயிர் பிழைத்தால் வருந்தும் மக்களின் உயிர் பிழைக்கும். தேவர்களுக்கு அமுதளித்த ஆண்டவன் பயிர் வளர்த்து உணவு ஊட்டவேண்டும்.

'மூவரில் ஒன்றான முதன்மை தெய்வநீர்
முற்றுங் கெடுத்தால் முறையேது' (பா. 24)

என்ற வினாவைக் கவிஞர் இறைவனிடத்தில் கேட்டுக் கெஞ்சி நிற்கிறார். விலைகள் மலிய வேண்டும். இட்ட பலன்கள் திட்ட மாய் விளைய வேண்டும். அதற்காகப் பூமி செழிக்க மழை பொழிய வேண்டும்.

பகீரதனுடைய தவத்தைக் கண்டு கங்கையை உலகுக்குக் கொடுத்த இறைவன் தன் தலையிலிருக்கும் கங்கையை இப் பொழுதும் உலகில் பாய அருள்செய்தல் வேண்டும். தாய் இரங்கா விட்டால் பிள்ளைக்கு வாழ்வில்லை. அதுபோல் ஆதிநாதனாகிய ஆவுடையப்பன் இரங்காவிட்டால் இவ்வுலகம் வாழுமோ? குண்டோதரனுக்காக வைகையை அழைத்த இறைவனுக்கு மழை தருவது ஒரு பெரும் வேலையா? ஆகையினால்,

'வெய்ய பசியினால் மானிடர் மாளாமல்
வெள்ளம் மிகுக்க விளம்புவீரே' (பா. 32)

என்று ஆசிரியர் மேலும் வேண்டுகிறார்.

பள்ளம், குண்டு, குழி, ஏரி, குளம், மடு எங்கும் வெள்ளம் நிறைந்திட அருள் செய்ய வேண்டும். இவ்வாறு ஆவுடைநாதரின் அருள் வேண்டிப் பாடுகின்றார்.

கும்மிப் பெண்கள்

நந்தன ஆண்டிலே நன்றாக விளைய நல்ல மழையினை நாதன் தருவானென்று கும்மியடித்து பெண்களைப் பாட வேண்டுகிறார் கவிராயர். சின்னி, வள்ளி, செல்வி, நல்லி, மோகனமாலை, முத்தழகி, நாகரத்தினம், அபிராமி ஆகிய நாலைந்து பெண்களையும் ஆடிப்பாட அழைக்கிறார்.

நீராடி, செந்தூரப் பொட்டு வைத்து, ஆடை அணிகள் பூண்டு பெண்கள் வரவேண்டும்.

'பட்டுப் பீதாம் பரங்கட்டி ரவுக்கையும்
பாலர் மயங்கப் பளபளப்பாய்
பொட்டு பளீரெனவே விளங்க மெய்யிற்
பூசுங் கலவை யும்துலங்க' (பா. 41)

கும்மிப் பெண்கள் ஆடிப்பாடுதல் வேண்டும்.

மழையில்லாமைக்குக் காரணம்

வாலிபர்கள் தவறு செய்கிறார்கள். கூலி வேலை செய்யும் பெண்களைத் தவறான முறையில் கூடி விடுகிறார்கள். மண் வெட்டிய பள்ளத்தில் பாவையரின் கற்பைச் சூறையாடியுள்ளனர். அவர்களுடைய முட்டாள் தனத்தாலே மழை பிழைத்து விட்டது. மானமும் வெட்கமும் இன்றி சில பெண்கள் அறியாப் பாலரை அழைத்துக் கெடுத்துள்ளனர். இத்தகைய தீய செயல்களால் அறங் கெட்டு மழையும் இல்லாமல் எங்கும் பஞ்சமாகி விட்டது.

கும்மியடிக்கும் கோலம்

கும்மிப் பெண்கள் சக்ரவாகப் புள்போல வட்டமாகச் சுற்றி நின்று,

'ஒன்றுபடக் கையைக் கொட்டியே இக்கும்மி
உல்லாச மாகவே யடிக்கலுற்றார்' (பா. 47)

ஆடும் போது விழிகள் மிரண்டு ஆடுகின்றன. மார்பகங்கள் திரண்டு ஆடுகின்றன. கொண்டையில் வண்டுகள் கலைந்து

ஆடுகின்றன. அணிந்துள்ள முத்து வடங்கள் அசைந்து ஆடுகின்றன. தண்டையும் சதங்கையும் காலில் ஒலிக்கத் தங்க வளைகள் கையில் குலுங்குகின்றன. பக்கமெல்லாம் மணம் வீசப் பெண்கள் அசைந்து ஆடுகின்றனர். வியர்வை வழியக் கும்மிப் பெண்கள் ஆடும் அழகு அனைவரையும் மயக்கமுறச் செய்கின்றது.

பெண்களின் பஞ்சப் பாட்டு

மழை இல்லாததினால் மக்கள் படும் அவதியினைக் கும்மிப் பெண்கள் பாடலாக எடுத்துக் கூறுகிறார்கள். மழை மேகங்கள் பறந்து போகின்றன. வானம் வெட்ட வெளியாகி விடுகிறது. கார்த்திகை மாதம் கனமழை பெய்யும் காலத்தில் ஒரு துளியும் வானத்திலிருந்து விழாது அனல் பறக்கிறது. சாத்திரங்களும் பொய்த்து விட்டதாகத் தோன்றுகிறது.

இறைவன் நினைத்தால் முடியாதது இல்லை. இந்த மாதத் துக்குள் ஏரி குளங்கள் எல்லாம் நிரம்பி வழிய அருள் செய்ய வேண்டும். பஞ்சம் பஞ்சம் என்று பலரும் கூறுவதால் மனம் பதைக்கிறது. இறைவன் தஞ்சம் கொடுத்து மழையைப் பெய்விக்க வேண்டும். எல்லோரும் பஞ்சத்தால் படும் பாட்டுக்கு அளவே இல்லை.

வட்டிக்குக் கூட யாருக்கும் பணம் கிடைப்பதில்லை. அளவில்லாமல் செலவுகள் ஆகிக்கொண்டே இருக்கின்றன. நெல்லை வைத்துக் கொண்டு இல்லை என்று சொல்கிறார்கள். இரந்தாலும் தருவார் இல்லை. இறைவனே மக்களைக் காக்க வேண்டும்.

> 'சீவப் பயிர்களுங் கோடாமல்—அவர்
> செய்த பயிர்களும் வாடாமல்
> பாவலர் சொல்பழு தாகாமல் சங்கரா
> பாருமுமது பாதந் துணையே'. (பா. 58)

மனிதன் பஞ்சத்தின் கொடுமையால் மாண்டு விடாது காக்க வேண்டியது இறைவனுடைய கடமையாகும். நாட்டிலுள்ளவர்கள் அகவிலையை ஏற்றி விடுவதினுல் மக்கள் எதையும் வாங்க இயலாது வாடுகின்றனர்.

உயிர்களை ஆதரிப்பது சிவன். இறந்தபின் உணவு கொடுப்பதில் பயனில்லை. அவர்கள் சாவதற்கு முன் உணவு கொடுத்து இறைவன் அருள் செய்ய வேண்டும். இறைவன் அடைமழையைப்

பொழியச் செய்தல் வேண்டும். இவ்வாறு இரக்கமாகப் பாடிப் பெண்கள் கும்மி கொட்டினர்.

மழை பொழிதல்

இறைவன் இரங்கினான். ஏழு முகில்களையும் அனுப்பி மிதிலையிலும் சுற்றுப் புறங்களிலும் மழைபொழிய ஆணை இட்டான். மழை பொழியத் தொடங்கியது.

'வந்து பொழியுது சொல்லவும் போசாது
வாரியு மோர்முழம் வற்றவுண்டு
கொந்து கொந்தாகவே சத்த முகிலேழுங்
கொண்டுண் டதுவைக் கொட்டுதடி' (பா. 64)

மழை மிக அதிகமாகப் பெய்கிறது. கண்மாய்கள் நிறைந்து வழிகின்றன வயலிலுள்ள வாய்க்கால் வரப்புகள் தெரியாத அளவுக்குத் தண்ணீர் பெருகி ஓடுகிறது. எங்கும் மழை! இனிக் கவலை இவ்வாண்டு இல்லை. அருமையான பாடலைப் பாடித் தாய்க்குத் தாயாகும் ஆவுடையார் நாயகியின் அருளால் அனைத்தும் எளிதாக நடக்கும் எங்கும் மழை பொழிந்து மக்கள் அனைவருக்கும் ஆறுதலைக் கொடுத்தது. தாய்க்குத் தாயாகிய ஆவுடை நாயகி அம்மனின் அருளால் மழைபெய்து வாய்க்கால் வரப்புகள் தோன்றாமல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

சிறப்புச் செய்திகள்

மக்கள் இறையாற்றலில் முழுக்க முழுக்க நம்பிக்கை வைத்துச் செயல்பட்ட காலத்தில் பாடப்பெற்றது இந்தக் கும்மிப் பாடல் மழை வளம் குன்றி பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணமாக மனிதன் செய்த தவறுகளைக் கும்மிப் பாட்டு ஆசிரியர் கூறுகிறார். 'அறம் பிழைத்தால் வற்கடம் தோன்றும்' என்பது மக்களின் நம்பிக்கை. இறையருளால் இறுதியில் மழைபொழிந்ததாகக் கருதுகின்றனர்.

தென்னாட்டில் தாது வருடப் பஞ்சத்தைப் பற்றி பலரும் குறிப்பிடுவர். அது மக்களை மிகவும் வாட்டி வதைத்து விட்டதாகக் கூறுவர். அதற்குப் பின்னர், நந்தன ஆண்டில் ஒரு பஞ்சம் வந்ததாக இந்தக் கும்மிப் பாடல் மூலம் அறிய முடிகிறது. பஞ்சத்தால் ஏற்படும் கொடிய தீமைகளை விரிவாக இதுகூறி விளக்குகிறது

ஆவுடையார் கும்மி

காப்பு

1. நந்தனத்தாண் டதனில்விருச் சிகமா தத்தில்
நரவாணன் வாழ்மிதுலை நகரந் தன்னில்
அந்தமுள்ள ஆவுடையார் குளத்தின் தென்பால்
அமர்ந்தருளு மானைமுக ரடியைப் போற்றிச்
செந்தமிழா லிக்கும்மியை வரைந்தேன் கண்டு
செகநாத ராவுடைநா தீசர் மேவும்
பைந்தொடியாள் சிவயோக வல்லித் தாயார்
பதம்பணிவீர் மழைபொழியப் பாலிப் பாளே,

2. பூமி புகழும் மிதிலைப் பதியினில்
பொருந்து மாவுடை யார்குளத்தின்
தாமி யின்மையாகிய தென்கரையில் வளர்ந்த
தந்தி முகவர் நற் றாள்துணையே.

---

1. நந்தனம்—தமிழ் ஆண்டுகள் அறுபதில் ஒன்று.
விருச்சிக மாதம்—கார்த்திகை மாதம்
நரவாணன்—ஒரு சிற்றரசன்
மிதுலை—ஓரிடம், மிதிலைப்பட்டி
ஆவுடையார்—இறைவன், சிவன்
ஆனைமுகரடி—ஆனைமுகக் கடவுளாகிய கணபதியின் திருப்பாதத்தை
சிவயோக வல்லி—உமாதேவி
பாலிப்பாள்—அருள்வாள்

2. தாமி—பேரிருள்
தந்திமுகவர்—யானை முகக் கடவுளாகிய கணபதி

3. பொய்யா மொழியாமென் றேபேர் புனைந்திடும்
புண்ணிய ரிப்பதி யிற்புகழாய்
மெய்யாக யிவ்வூரில் சென்னெலுங் கைப்பலன்
மேலாகச் செய்யும் வினாயகரே.

4. அண்ட சராசர மெங்கும் நிறைந்திடும்
ஆவுடை நாதரென் அன்னையுடன்
மண்டல மெச்ச மழையை அழைத்திடும்
மாதங்கி யானை மறவேனே.

5. சத்தி சிவயோக வல்லியென் றேபெயர்
சாற்றுவார் நாத்தழும் பாகவுமே
வெத்தி வெத்தியென் றிட்ட பலங்கள்
விளையு மென்று விளம்புவளே

6. அட்டமச் சனிபிடித் திட்டது வோபூவில்
ஆர்செய்த வஞ்சனை யோஅறியேன்
நட்டபலன் கையிற் கிட்டாம லாயதே
வெட்ட வெளியாகி விட்டதுவே.

---

3. பொய்யா மொழியார்—மிதுலைப்பட்டி விநாயகரின் பெயர்.

4. சராசரம்—உலகம்
மெச்ச—புகழ
மாதங்கியான்—காளியின் நாயகன்

5. சாற்றுவார்—சொல்லுவார்
நாத்தழும்பாகும்—சொல்லிச் சொல்லி நாவில் தழும்பேறும்
விளம்புவள்—சொல்லுவள்

6. அட்டமத்துச் சனி—ஏழரை நாட்டுச் சனி
பூவில்—பூமியில்
நட்ட பலன்—பயிரை நட்டுப் பலனைப் பெறல்
கிட்டாமல்—கிடைக்காமல்
வெட்டவெளி—பயிர் கரிந்த பாழ்வெளி

7. ஆல மமுதுண்டார் பாலக னே குன்றத்(து)
ஆறுமுகா உன்னடைக் கலங்காண்
காலன் கடாவினி லேறியே பாசத்தால்
கவரும் முன்னே காருமையா.

8. உணவினா லேயிறக் காமல்கொள் ளைவிலை
உயராமல் வேணுமே யும்மருளால்
பிணம தென்னத் தெரியாது சீர்மைகள்
பேசுகி றாருன் பலத்தாலே.

9. கண்ணன் மருகனே வண்ணமயில் கந்தா
கர்த்தனே உன் தன் கருணையினால்
எண்ணப் படியாகி யாடிடவே நின்று
என்தன் கருத்தை மகிழச் செய்வீர்.

10. ஊர்தனைக் காத்தக் கரடியா ரென்றுனை
ஓதுதல் என்றைக்கும் உண்மையென்ற
பேர்குறை வாகாமல் இட்ட பலன்களும்
பெருக மாரி பெருகச் செய்வாய்

---

7. ஆலம் அமுதுண்டார்—சிவன்
பாலகன்—முருகன்
காலன்—எமன்
கடா—எருமைக்கடா
பாசம்—கயிறு
காருமையா—காப்பாற்று இறைவா

8. சீர்மை—எண்வகை ஊறுகளுள் ஒன்று.

9. கண்ணன் மருகன்—திருமாலின் மருமகனாகிய முருகன்

10. கரடியார்—கரடிப் பெருமாள் (தெய்வம்)
ஓதுதல்—கூறல்
மாரி—மழை
இட்டபலன்—பயிரிட்ட பலன்

11. காராள னெனும் முத லாகமிதிலைக்
கரையில் வளர்ந்த கருப்பண்ணரே
தாராள மாக விளையும் மழையைத்
தருகவும(க்) கருத்தற மாமே.

12. சிறுவா னேந்தல் பெரியகிணற் றங்கரை
சிறந்தசன் னாசித் தெய்வமென்றால்
பொறுக்காதே முகில்தன்னை யழைத்திங் குடனே
பொழியச் செய்யத்தான் சமையமே.

13. ஆவுடை யார்குளத் தரசின் கீழுறை
அப்பனே ஐந்து கணைவேளே
நாவுடை யார்கள் துதிக்குங்கா மத்தேவே
நானுமறவேன் நன்னீர் பொழிந்தால்.

14. நந்தனத் தாண்டினி லிந்தக் கொடுமைகள்
நாவலந் தீவுள்ளோ ருமறியார்
பந்தனம் செய்யாமல் கார்த்திகை மாசத்தில்
பாரில் மழையும் பலமாக

15. வந்து பொழியச்செய் கந்தரை நாவார
வாழ்த்து வோருள்ளம் மகிழ்ந்திடவே
பந்து சனங்கிளை யோடு மடியாமல்
பாரில் மழையருள் பாவலனே.

---

11. கருப்பண்ணர்—ஒரு தெய்வம்
தாராளம்—மிகுதியாக
12. சிறுவானேந்தல்—ஓரிடம்
சன்னாசி—ஒரு தெய்வம்
முகில்—மேகம்
13. ஐங்கணைவேள்—ஐந்து மலர்களைக் கணைகளாகவுடைய மன்மதன்
நன்னீர் பொழிதல்—மழை பொழிதல்
14. இந்தக் கொடுமைகள்—மழை இல்லாத கொடுமை.
நாவலந் தீவு—இந்தியத் துணைக் கண்டம்
பந்தனம்—காவல் செய்தல்
15. கிளையோடு—உறவினர்களுடன்
மடியாமல்—செத்து விடாமல்

16. குன்றை மலைவளர் என்குருவே யிங்கு
குடங்கள் கொண்டுமே கொட்டுதலாய்
இன்றை வைத்தாகிலும் பெய்ததென் றால்பலன்
இட்டது வீணாகா தென்துரையே.

17. சித்திரை வைகாசி மாசத்தைப் போலாகச்
சிறந்தே வெயிலெரிப் பதுண்டோ
சத்திராதி வேறே வேண்டுமோ சீவரைச்
சாகவகை செய்தாய் சங்கரனே.

18. அன்றயன் சிரசொன் றைத்தி ருகிநீர்
ஆடின தன்மை யறியீரோ
இன்றுல கினிலுள் ளவரைக் கொல்ல
எண்ணினீர் ஈன்றவரே யழித்தால்?

19 வேறே கதியில்லை எங்கள் பழியும்மை
விட்டக லாதுமெய்ப் பொருளே
பாரே! திருநேத் திரத்தாலே எளியரை
பரனே யுன்றன் பதந்துணையே.

---

16. குன்றை மலை — காரைக்குடியை அடுத்த குன்றைக்குடி, குன்றக்குடி என வழங்கப் பெறுகிறது.

17. சத்திராதி—பகைவர் முதலாயோர்
சீவர்—மனிதர்
சங்கரனே—சிவபெருமானே

18. அயன்சிரசைத்திருகல் (விளக்கவுரை காண்க)
அயன்—பிரம்மன்
ஈன்றவர்—பிறப்பித்த இறைவன்

19. திருநேத்திரத்தாலே—சிறந்த கண்களால் (திருப்பார்வை யாலே)

20. செட்டியிடஞ் சென்று வட்டியொன் றாகவோர்
சீட்டை யெழுதி விதைவாங்கி
அட்டி யில்லாமலே தான்விதைத் துநிலம்
ஆழவுழு ததனின் நட்டோம்.

21. கையிலிருந் திட்ட கம்பையுங் கேப்பையும்
கவிழ்த்தே நட்டிடுங் கன்னியர்க்கே
மெய்யுஞ் சிலிர்த்துமே தாமிருந் தோமிது
விளையு மென்றே மிகமகிழ்ந்தோம்.

22. புஞ்சைப் பலன்களுங் கைப்பலன் காணது
போகுதே ஓர்மழை தன்னாலே
நஞ்சைக் கொடுத்துநீரோர் நாளினிற் கொன்றால்
நாங்கள் வருத்த மடையோமோ.

23. மார்க்கண்டன் சங்கர சம்போவென் றேபூசை
மாற்கமாய்ச் செய்ய மறலிதன்னைக்
காற்கதியா லுதைத்தே விழச்செய் தாட்டி நீர்
காக்கலையோ கண்ணுதல் மூர்த்தி

24. தேவர்க் கமுதை யளித்துப் பசியாற்றுந்
தெய்வஞ் சிவமன்றி வேறுமுண்டோ ?
மூவரில் ஒன்றான முதன்மைத் தெய்வநீர்
முற்றுங் கெடுத்தால் முறையேது.

---

20. அட்டியில்லாமல்—மறுப்பில்லாமல்

21. கம்பு, கேப்பை } பயிர்கள்

23. மார்க்கண்டன் (கதை விளக்கம் பின்னர் காண்க)
மாற்கம்—வழிமுறை
மறலி—எமன்
கண்ணுதல்—நெற்றிக்கண்ணையுடைய சிவன்

24. மூவர்—சிவன், நான்முகன், திருமால்

25. வட்டியில் சோறிட்டு மன்னையில் கைபோட்டு
வாரச்சே யிந்தவரு டந்தன்னில்
அட்டி யில்லைத் தாதுவருடம் நல்லது
அதனில் மெத்தவனி யாயமிது.

26. நெற்பொதி யொன்று பதினைந்து ரூபாயாய்
நேர்ந்த விலையும் மலியவேண்டும்
பற்பல தானியமும் விலையொத் தேறியதே
பரமனே யருட்கண் பாராயோ.

27. இட்ட பலன்கள் இறக்காமல்—மனு
இரந்த பேருக்கீய்ந் ததுபோல்
நட்ட மடையாமல் வட்ட வுலகத்தில்
நன்றாய் மழையழை நம்பரனே.

28. கெடுப்பதூ முணவை மழையே மற்றுங்
கங்கா தரக்கொற் றவனே
கொடுப்பதூ முணவை யம்மழையே அதனால்
கொடுத்துதவும் மழைபொழிய அருள்வாய்

29. சங்கர சம்போ சதாசிவனே என்று
சாற்று மடியார் தயங்காமல்
பொங்கர வாபர ணாபரி பூரணா
பூமி செழிக்கமழை பொழிவாய்

---

25. தாது வருடம்—அறுபது ஆண்டுகளில் ஒன்று. (கி.பி. 1876)

26. பரமனே—இறைவனே

28. கங்காதரக் கொற்றவன்—கங்கையை தலையில் வைத்திருக்கும் தலைவனாகிய சிவன்

29. பொங்கரவு—படமெடுக்கும் பாம்பு.

30. அன்று பகீரதன் வேண்டற் கருள்செய்த
அப்பனே ஆதிபரம் பொருளே
இன்று வருந்துறார் நின்சடா பாரத்தி
லிருந்த கங்கைக் கியம்புவையே

31. பெத்தவள் சேய்க்கமு தங்கொடா விட்டால்
பின்னர் வேறு பிழைப்புளதோ
பத்த சனங்களைக் காக்க முகிலேழைப்
பார்த்து மழைபொழி யென்றுரைப்பீர்.

32. வையகந் தன்னிலே குண்டோ தரற்காக
வைகை யழைத்திட்ட வல்லவர் நீர்
வெய்ய பசியினால் மானிடர் மாளாமல்
வெள்ளம் மிகுக்க விளம்புவீரே.

33. பள்ளம் படுகுழி ஏரி குளம்மடுப்
பார்த்த பார்த்த யிடமெங்கணும்
வெள்ள மிகுதியால் பொங்கி வழிந்திட
வேலவர் தாதைநீர் விள்ளுவீரே

---

30. பகீரதன் வேண்டல் (விளக்கவுரை காண்க)
சடாபாரம்—சடைமுடி
இயம்பு—சொல்லு

31. பெத்தவள்—பெற்றதாய்
சேய்—பிள்ளை
முகிலேழ்—ஏழு மேகங்கள் (சப்த மேகங்கள்)

32. வையகம்—உலகம்
குண்டோதரன்—பூத கணங்களில் ஒருவன்
வைகையழைத்தல்—வைகை நதியை அழைத்தல் (விளக்கவுரை காண்க)
வெய்ய பசி—கொடும்பசி
மாளாமல்—சாகாமல்
விளம்புவீர்—சொல்லுவீர்

33. வேலவர் தாதை—சிவன்
விள்ளுவீர்—திறப்பீர், பேசுவீர்

34. தில்லை நடேசரை என்றும் மறவாத
தீரன்குழந் தைநரவா ணன்மைந்தன்
மல்லை யழகிய சிற்றம் பலக்கவி
மாதவத் தாலே மகிழ்சுதனும்

35. கந்தரை நெஞ்சிற் பதித்திடு வானந்தக்
காலுறை மானைத் துதித்திடுவான்
சொந்த மிதிலைப் பதிசெழிக் கமழை
சொரிய விக்கும்மி சொல்லலுற்றேன்.

36. மாரன் குமார சுவாமி மனமது
மகிழ்ந்துரைக் கொம்மித் தமிழ்தனக்கே
தீர முடன்மழை பெய்ய வருள்தருந்
தெய்வம் சிவனன்றி செப்பரிதே

37. நன்றாய் விளைந்திடு நந்தனத் தாண்டினில்
நங்கையரே சோடி நங்கையரே
குன்றா மலேமழை கொண்டு விளைவிப்பார்
குன்றை மலைவாழ் குமரோனே.

38. பந்து போலே தனமுள்ள வளேசின்னி
பாரடி நம்தோழிப் பாவையரைச்
சிந்து கவிபாடும் நம்சிங்கார வள்ளியைச்
செல்லியை நல்லியை சிற்றிடையாம்

---

34. குழந்தை நரவாணன்—நூலாசிரியரின் பாட்டனார்
மல்லை—மல்லை நகர்
அழகிய சிற்றம்பலக் கவி—மிதுலைப் பட்டியைச் சேர்ந்த கவிஞர்
சுதன்—குமாரன்

36. குமாரசாமி—நூலாசிரியர்

37. சோடி—இரண்டு
குன்றாமல்—குறையாமல்
குன்றைமலை—குமரன் குன்று

38. சின்னி, வள்ளி, செல்வி, நல்லி } கும்மியடிக்கும் பெண்கள்

39. மோகன மாலையைக் கூட்டிக் கொண்டுநல்ல
மொய்க்குழ லேயடி முத்தழகி
நாகரத் தினமவள் தங்கை யபிராமி
நாலைந்து பெண்களும் வாருங்கடி.

40. செட்டி குளத்திலே நீராடி யப்பெண்கள்
செந்தூ ரத்தாலே திலகமிட்டு
அட்டிப் பண்ணாமலே மெட்டுடனே வந்து
ஆபர ணங்கள ணிந்து கொண்டு.

41. பட்டுப்பீ தாம்பரங் கட்டிர வுக்கையும்
பாலர் மயங்கப் பளபளப்பாய்
பொட்டு பளீரென வேவிளங்க மெய்யிற்
பூசுங் கலவை யும்துலங்க

42. வாலிபர்கள் கண்டு வாடை மயக்கத்தால்
வந்து வளையுறார் பாருங்கடி
கூலிவேலை செய்யுங் கொள்ளாத பெண்களைக்
கூடித் திரியுங் குழாமரடி

---

39. மோகனமாலை, முத்தழகி, நாகரத்தினம், அபிராமி — கும்மிப் பெண்கள்

40. செட்டிகுளம்—ஒரு குளத்தின் பெயர்
திலகம்—பொட்டு
அட்டி பண்ணாமல்—மறுப்புக் கூறாமல்
மெட்டுடன் வரல்—மிடுக்குடன் வரல்

41. பீதாம்பரம்—பொன்னாடை

42. வாடை மயக்கம்—மணத்தால் ஏற்பட்ட மயக்கம்
வளையுறார்—சுற்றுகிறார்கள்
குழாமரடி—கூட்டமடி

43. பட்டப் பகல்பேசி அஸ்தம னத்துக்குள்
பாழ்மனை மண்வெட்டும் பள்ளத்திலுங்
கெட்டதொழில் செய்து முட்டாப் பயல்கள்
கிளைத்ததா லேமழை கெட்டதடி.

44. சண்டிச் சிறுக்கிகள் மானம்வெட் கம்விட்டுச்
சாண்வயி றோம்பத் திரங்கள்கெட்டுக்
கொண்டி மாடுபோலே அறியாப் பாலரைக்
கூடி யழைக்குங் கொடுமைகண்டோ.

45. நட்ட பயிரெலாங் காயுதென்றே யூரார்
நம்மைக் கும்மிகொட்ட வாங்களென்றார்
தட்டாம லேவந்து கூடின மேமழை
தனைத்தர வேண்டும் தருண மிதே.

46. ஆவுடைய நாதர் சிவயோக வல்லிபால்
யாவ ரும்வந் தடிவணங்கி
நாவுண ராமலே கும்மி பாடியே
நடிப்போம் வாருங்கள் நங்கையரே.

47. என்றுசொல் லிச்சக்ர வாகப்புள்போல் வட்ட
மிட்டுநின் றந்த ஏந்திழையார்
ஒன்றுபடக் கையைக் கொட்டியே இக்கும்மி
உல்லாச மாகவே யடிக்கலுற்றார்.

---

43. முட்டாப் பயல்கள்—அறிவற்றவர்கள், பேச்சு வழக்கு
கிளைத்தல்—முளைத்தல், பிறத்தல்
மழை கெடல்—மழை தவறுதல்

44. சண்டிச் சிறுக்கிகள்—தவறாக வாழும் பெண்கள்
கொண்டி மாடு—பட்டி மாடு; பயிரழிக்கும் மாடு

45. தட்டாமல்—மறுக்காமல்

47. சக்கரவாகப் புள்—ஒரு பறவை

48. கெண்டை விழிகள் மிரண்டாட—உயர்
கிண்ணத் தனங்கள் திரண்டாட
கொண்டையில் வண்டு கலைந்தாடப்—பணிக்
கோர்வை வடங்க ளசைந்தாட

49. தண்டை சதங்கைசல் லென்றாடக்—கையில்
தங்க வளைகள்கல் லென்றாட
அண்டையில் வாசங்கள் கம்மென்று வீசிட
ஆயிழை யார்க ளசைந்தாட

50. சாலென்று வேர்வைகள் தானோட வேபெண்கள்
சல்லாப மாக நடிக்கையிலே
வேலென்று சொல்லும் விழிக ளுள்ளோர்
விள்ளுவார் தம்மை விளம்பலுற்றார்.

51. முகில்மே கங்கள் பறந்து போகுது
[பரனே வான்மதி தான்தெரிய]
மிகவு யர்ந்துமே லேகிடு துவானில்
மிக்க நட்சத்திரம் தோன்றிடுதே.

52. கார்த்திகை மாசத்துக் கனமழை நற்றுளி
காணாத தாலே கவலையுற்று
ஆர்த்திடும் பஞ்சாங்க மதனிற் சொற்கேடு
அதுவுந் தப்பிய னீதஞ்செய்தாய்.

---

48. கெண்டை--மீன்

49. ஆயிழை—பெண்

50. சால்—ஊறிவழிதல்
சல்லாபம்—இன்பம்
விள்ளுவார்—பேசுவோர்
விளம்பல்—கேட்டல்

51. மேலேகி—மேற்சென்று

52. அன்னீதம்—அநியாயம்

53. சாத்திரங் கூடவும் பொய்யா மோசிவ
சங்கர சம்போ சதாசிவனே
ஆத்திரப் பட்டுமை வேண்டு மடியவர்க்
காகவருள் செய்யு மாநிதியே.

54. இந்தமா சத்துக்குள் ளேரிகுளங்கள்
நிறையச் செய்யுமென்குருவே
பந்தயம் வைத்தாற் போலாக வேண்டுமுன்
பாதங் கெதியன்றி வேறுளதோ.

55. பஞ்சம் பஞ்சமென்று யாவருஞ் சொல்வதால்
பாவி யென்மனம் பதைத்திடுதே
தஞ்சந்தஞ்ச மடியார்க் கடைக்கலம்
தந்துகாக்க நல்ல தருணமிதே.

56. வட்டிக்கு வாங்குவோ மென்றாலு மோர்காசு
வார வழியாகத்தோணவில்லை
அட்டி யில்லாமல் ஓயாச் சிலவுகள்
ஆகு தெங்கிருந் தேயடைப்போம்.

57. நெல்லைவைத்துக் கொண்டே இல்லையென்று சொல்லும்
நெட்டூரர்க் காகின்ற காலமிது
பல்லைத் திறந்து இரக்க வென்றால்
பழம்பொருள் கொடுப்பா ரைக்காணோம்

---

55. பதைக்குது—வருந்துகிறது
கார்க்க—காப்பாற்ற
தருணம்—வாய்ப்பான சமயம்

57. நெட்டூரர் (நிஷ்டூரர்)—தீயவர்

58. சீவப் பயிர்களுங் கோடாமல்—அவர்
செய்த பயிர்களும் வாடாமல்
பாவலர் சொல்பழு தாகாமல்—சங்கரா
பாரு முமதுபா தந் துணையே.

59. நாட்டி லுள்ளார்கள் அகவிலை யைப்பேச
நம்செவி கேட்டு நடுங்கிடுதே
ஏட்டி லடங்காதால் என்னெண்ணஞ் சொல்கிலேன்
எந்தா யுமக்கிங்கியம் புவதா !

60. சீவ கோடியெல்லா மாதரித் தாள்வதுஞ்
சிவமென்றே வேதஞ் செப்பிடுதே
சீவனைப் போக்கியே உணவைத் தந்திடில்
செத்தவர் வந்து செனிப்பரேர.

61. அப்படிப் போலாகக் கைப்பலன் போகாமல்
ஆதார மாக அடைமழையை
எப்படி யாகிலும் வருணற் கோதினீர்
இக்கு சென்னெல்விளை வேற்றுவீரே.

62. இந்த வகைப்பாடிப் பெண்கள் கும்மிகொட்ட
ஈசர் மனதுமிக விரங்கி
சிந்தைக் களிப்புடன் வருணர்க் கோதிநீ
சிங்கமுழக் கத்தோடு வாவென்ன

---

58. சீவப்பயிர்—மனிதப் பிறவிகள்
பழுது—தவறு

59. எந்தாய்—என் தந்தையே

60. செனிப்பரோ—பிறப்பார்களா

61. அடைமழை—விடாத மழை
வருணன்—மழைக் கடவுள்
ஓதி—சொல்லி
இக்கு—கரும்பு

63. சத்த முகில்களை யழைத்து நீங்கள்போய்ச்
சண்ணு மிதிலைப் பதிதழைக்க
மெத்தசோ னைமழை யாகச் சொரியென
மேலான ஆக்கினை செய்தனரே.

64. வந்து பொழியுது சொல்லவும் போகாது
வாரியு மோர்முளம் வற்றவுண்டு
கொந்து கொந்தாகவே சத்த முகிலேழுங்
கொண்டுண் டதுவைக் கொட்டுதடி.

65. கண்மாயெல் லாநிறை வாச்சுத டியதின்
கால்கள் விடுகிறார் காணுங்கடி
தண்குமுத வல்லி செங்கழு நீரோடுந்
தாவுங் குளங்களைத் தான்பாரும்

66. வாய்க்கால் வரப்புகள் தோன்றாமல் வெள்ளங்கள்
வாரசிங் காரத்தைப் பாருங்கடி
தாய்க்குத் தாயாகிய ஆவிடை நாயகித்
தாயார் கிருபை யிதாகுமடி.

67. இந்தக் கும்மியை எழுதிப் படித்தோர்கள்
என்னாளும் வாழி யிறையருளால்
பைந்தொடி யார்களுமே வாழி யிதனைட்
பாடி நடிப்பவரும் வாழி.

---

63. சத்தமுகில் (சப்தமுகில்)—ஏழுமேகம்
சண்ணு (சட்டென)—விரைவாக; பொருந்திய
சோனைமழை—பெருமழை
ஆக்கினை—ஆணை

64. வாரி—கடல்
கொந்து கொந்தாக—இடத்துக்கு இடம்

65. கண்மாய்—ஏரி; குளம்

68. கந்த னருள்பெற் றிந்தப் பதிவளர்
காளைய ரெல்லோ ரும்வாழி
பந்த சமூகத்த ரோடுநன் மைதரும்
பாவாண ரென்றைக்கும் வாழியவே.

69. சீர்வாழி ஐந்துகரத் தெய்வம் வாழி
சிறந்த ஆவுடை நாதர் செல்வி வாழி
பார்வாழி இம்மிதிலைப் பதியும் வாழி
பாடிவிளை யாடும் மைந்தர் பலரும் வாழி
ஏர்வாழி இட்டபல னெல்லாம் வாழி
எழுதிஇவை படித்தார்களென்றும் வாழி
நீர்வாழி நெடியோன்றன் மருகன் வாழி
நின்னடி யார்வாழி யென்றேநினைக்
கின்றோமே.

---

68 பாவாணர்—கவிஞர்
69. ஐந்துகரத் தெய்வம்—கணபதி
நெடியோன்—திருமால்
மருமகன்—முருகன்

சிங்கை அழகிய அம்மன் கும்மி

சிங்கை அழகிய அம்மன்

சிவகங்கையைச் சிங்கை என்று கூறும் வழக்கமும் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விக்கிரம சிங்கபுரத்தையும் சுருக்கமாகச் சிங்கை என்று சொல்லும் பழக்கம் உண்டு. திருப்பத்தூருக்கு அடுத்திருக்கும் சிங்கம்புணரியைச் சிங்கப்பிடாகை என்று அழைப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் கும்மி நூல் குறிப்பிடும் சிங்கை நாடு எது என்று சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

'கானாடு கோனாடு கல்வா சல்நாடு
கதிபெறும் பூங்குன்றை நாட்டுடனே
நானாடு வந்து வளங்கேட் குமெங்கள்
ராசசிங் கைப்பதி நன்னாட்டில்' (பா. 26)

என்ற பாட்டினைக் கொண்டு இந்த இடத்தின் இருப்பை அறிய வேண்டியதாக உள்ளது. கானாடு என்பது கானாடு காத்தான் போன்ற இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகளாக இருக்க வேண்டும். கோனாடு மிதிலைப் பட்டியைச் சுற்றியுள்ள பகுதிகளாகும். 'கோனாடு சூழ் விராலி மலை' என்று கூறும் திருப்புகழ் மூலம் சில உண்மைகள் தோன்றும். கோனாடு வெள்ளாற்றுக்கு வடக்கிலுள்ள இடம் என்று கூறப்பட்டுள்ளது. இப்பொழுது கோநகர் என்று சொல்லப்படும் இடம் அதில் சேர்ந்ததாக இருக்கலாம். இப்பொழுது வேலங்குடி இருக்கும் இடமே பூங்குன்றை நாடு. இதற்கு கல்வெட்டுச் சான்று உள்ளது.

கல்வாசல்நாடு எது என்பதும் சிந்தனைக்கு உரியதாகவே உள்ளது. 'இளையாற்றங் குடியிருக்கும் கல்வாயில் நாடு' என்பது

ஒரு பாழம்பாடல். செட்டி நாட்டுப் பகுதியில் வழங்கி வருவது. அதனைக் கொண்டு நோக்கினால் இராமநாதபுரம் மாவட்டத்தி லுள்ள இளையாற்றங்குடிப் பகுதியையே கல்வாயில் நாடு என்று கூறவேண்டும். வணிகர் பூம்புகாரிலிருந்து வெளியேறி இப்பகுதி யில் முதன் முதலில் குடியேறியதாக அவர்களுடைய வரலாறு புகலும்.

இராஜராஜனின் கல்வெட்டு ஒன்றில் 'கல்வாயில் நாடாழ்வான்' என்ற தொடர் காணப்படுகிறது. (S.I.I., Vol. II) இதில் குறிப்பிடப் பெறும் கல்வாயில் நாடு புதுக்கோட்டையின் வட எல்லையில் தஞ்சை செல்லும் வழியிலிருக்கும் பகுதி. இப்பகுதியில் செம்பூராங் கல்லைக் கொண்டு அணை கட்டித் தண்ணீரைத் தடுத்துப் பயிர் செய்வர். இத்தகைய தடுப்புக்களிலுள்ள திறப்புக் களைக் கல்வாசல் என்று கூறுவர். இவ்வாறு அமைந்த கல்வாசல்கள் நிரம்ப இருப்பதினால் இந்த இடத்தைக் கல்வாசல் நாடு என்று கூறி இருக்கலாம்.

இந்த விளக்கங்களைக் கொண்டு பார்க்கும்போது கானாடு, கோனாடு, கல்வாசல் நாடு, பூங்குன்றை நாடு ஆகிய நான்கு நாடுகளும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இருமாவட்டங் களும் இணையும் பகுதியில் பரந்து இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். இந்த நான்கு நாடுகளும் வந்து வளம் கேட்கும் 'ராச சிங்கைப் பதி' என்று கூறப்பெற்றிருப்பதினால் சிங்கை என்பது ஒரு மேலாணையுடைய வலிமையான இடமாக இருந்திருக்கும் என நினைக்கலாம். குறிப்பாக அது எந்த இடம் என்று கூற முடியவில்லை.

சிங்கைப் பதியில் சக்தியின் கூறாகிய அழகிய நாயகி அம்மன் கோயில் இருப்பதாக இந்தக் கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது. அந்த அம்மனின் சிறப்பை இக்கும்மி பாடுவதுடன் இக் கோயிலுக்குக் குமாரசாமி என்பர் செய்த சிறப்புக்களையும் விரிவாகக் கூறுகிறது.

நூல் விளக்கும் செய்திகள்

நூலுக்குப் பரவாசுதேவராகிய திருமால் காப்பாக அமைய வேண்டும் என்று ஆசிரியர் வேண்டுவதினால் இவர் வைணவராக இருக்க வேண்டும் என்று கருதலாம். இரண்டாவது பாடலிலேயே கும்மிப் பெண்களை அழைக்கும் முறை பிற கும்மி நூல்களி லிருந்து மாறுபட்டதாகவே இருக்கிறது.

முதலில் ரதிமான், இந்திராணி, பூமான் ஆகிய 'மூன்று பெண்களும் வாருங்கடி' (பா. 2) என்று ஆசிரியர் அழைக்கிறார். பின்னர் தமயந்தி, சுகந்தி, சந்திரமதி, ரம்பை, திலோத்தமை, சித்திராங்கி ஆகிய 'நாலிரு பெண்களும் வாருங்கடி' (பா. 3) என்று பாடுகிறார். இதனை அடுத்து பூரண வல்லி, சரசவல்லி அம்போருக வல்லி, அமுத வல்லி, நாரண வல்லி, சுமுக வல்லி போன்ற 'நாலைந்து பெண்களும் வாருங்கடி' (பா. 4) என்று கூப்பிடுகிறார். அனைவரும் சிங்கை அழகிய அம்மன் திருப்பாதத்தைப் பாடவேண்டும் என்று வேண்டுகிறார்.

கும்மி பாடுவதற்கு ஆயத்தம் செய்தல்

அனைவரும் நீரில் படிந்து மஞ்சள் பூசித் தூய்மையுடன் வருதல் வேண்டும். ரஞ்சித மாலை, மணி மாலை, நவரத்தின மாலை, சீமாலை, அஞ்சுக மாலை, குண மாலை முதலிய ஆறேழு பெண்களும் வரவேண்டும் என்று அழைக்கின்றனர். கையில் கந்த மலரை எடுத்துக் கொள்வர். குளத்தில் சென்று மலரெடுக்க விரும்பி அதற்கு முயன்றபோது வண்டுகள் பறந்து சென்றன. கண்கள் சிவந்தன. முத்துக்கள் உருண்டு புரண்டன. கண் சிவப்பைக் கண்டால் அன்னையர் வருந்துவர். ஆகையினால் அனைவரும் கரையேறி ஈரப்புடவைகளைக் களைந்து உள்ளாடை அணிகின்றனர்.

மேலாடையாகச் செம்பட்டை உடுத்துகின்றனர். அதற்கு மேல் மேகலை பூணுகிறார்கள். ரவிக்கை அணிந்து கொள்கின்றனர், தலையில் மல்லிகை முல்லை மலர் சூடி நெற்றியில் மாணிக்கச் சுட்டியைத் தொங்க விடுகிறார்கள். சவ்வாது, சாந்து, புனுகு, பரிமளம், சந்தனம், பன்னீருடன் கலந்து மேனியெல்லாம் மணக்கப் பூசுகின்றனர். மார்பில் தொய்யில் எழுதுகிறார்கள். நெற்றியில் நீறுபூசிச் செந்தூரப் பொட்டு வைக்கின்றனர். நீல விழிக்கு அஞ்சனம் தீட்டி அழகு படுத்துகிறார்கள். காதில் கொப்பு, வைரத்தோடு, சிமிக்கி ஆகியவற்றை அணிகின்றனர்.

மூக்கில் முத்து மூக்குத்தியும், கையில் சதங்கைக் காப்பும். கைவிரலில் கணையாழியும் தரிக்கிறார்கள். மார்பின் மேல் மாலையைப் புரளச் செய்கின்றனர். காலில் மிஞ்சி, பீலி முதலிய வற்றையும், கால்விரலில் காலாழியும், பாதத்தில் பாடகம், தண்டை, சிலம்பு ஆகியவற்றையும் அணிந்து கும்மிப் பெண்கள் கோலாகலமாக வருகிறார்கள்.

கும்மியடிக்கத் தொடங்கல்

சிங்கை அழகிய நாயகியின் பொற்பாதத்தைக் கும்மிப் பெண்கள் முதலில் பணிகின்றனர். அன்னையாம் அழகிய தேவியை வாழ்த்திப் பாடுகிறார்கள். அன்னையானவள் அழகான முடியைப் புனைந்துள்ளாள். முழுமதி போன்ற முகமுடையவள். அழகான கண்களையுடையவள். நெற்றியில் திருநீறு பூசியுள்ளாள்.

பொற்குழை யணிந்தவள். வளைந்த கோரைப் பற்களுடன் காட்சி தருபவள். பருத்த முத்தால் செய்த மூக்குத்தி அணிந்தவள். மலை போன்று உயர்ந்த எட்டுத் தோள்களையுடையவள். சங்கு போன்ற கழுத்தும், தாமரை மலர் போன்ற எட்டுக்கைகளை உடையவள்.

உலகை ஆளும் தன்மையுடைய தேவியின் பெருமையைச் சொல்லில் அடக்கி கூறக்கூடியது அல்ல. அவளது அன்பு அனைவருக்கும் இசைந்தது, வாழைத் தண்டு போன்ற தொடையினையும் மன்மதனின் அம்பறாத்தூணியின் அமைப்பை ஒத்தக் கணைக்காலையும் உடையவள். பொத்தகம் போன்று அமைந்துள்ள பாதம் அவளை அனைவரும் வேண்டட்டும். அவளுடைய அருள் உறுதியாகக் கிடைக்கும். சிங்கை நாட்டில் அன்னை அழகு அம்மன் இருப்பதினால் அதைப் புலவர் மிகச் சிறப்பாகப் பாடுகிறார்.

சிங்கை நாட்டு விளக்கம்

கானாடு, கோனாடு, கல்வாசல் நாடு, பூங்குன்றை நாடு ஆகிய நான்கு நாடுகளும் வந்து வளம் கேட்கும் அளவுக்குச் சிறப்புடையது சிங்கை நாடு. அதில் அழகான கோபுரமும் சூரியன் உராயும் அளவுக்கு உயர்ந்த மதில்களும், மேகங்கள் தாவும் அளவுக்கு நீண்டு உயர்ந்த கம்பங்களும் (ஸ்துாபிகள்) உள்ளன.

மால், அயன், சந்திரன், சூரியன், இந்திரன், காலபைரவன், முருகன் விநாயகன், வீரப்பண்ணன் போன்ற கடவுளர் இருக்கவும், தும்புரு நாரதர் புகழ்ந்து பாடவும், பெண்கள் வணங்கிப் புகழவும், உலகத்து கவிவாணர் பணிந்து வணங்கவும் அந்தணர் வேதத்தை ஒலிக்கவும் சிங்கை அழகிய நாயகி அம்மன் ஊர்வலம் வருகிறாள்.

தோழியர் அடப்பம், காளாஞ்சி ஆகியவற்றைத் தாங்கியவாறு இருபக்கமும் வருகிறார்கள். அழகியர் மஞ்சள் பாவாடையும் பஞ்சவண்ணப் பாவாடையும் அணிந்து நிற்கின்றனர். சந்திர

வட்டக்குடை நிழல் கொடுக்கவும், வெற்றிசாமரத்தை ரம்பையர் வீசிக் கொண்டிருக்கவும் சித்தர்கள் தீ வட்டி பிடித்துக் கொண்டு வருகிறார்கள்.

சிங்கை அழகிய அம்மனின் அருள் ஆற்றல்

பூதகணங்கள் தடி, கம்பு முதலிய ஆயுதங்களுடன் இருக்கிறார்கள். பல விதமான வாத்திய இசை கேட்கிறது. சங்கு, சேகண்டி, இலவண்டை, மல்லாரி, தடாரி, நவபத்து, நகரா ஆகிய ஏழு கருவிகள் ஏழு மேகங்கள் போன்று ஒலிக்கின்றன. வாங்கா, கொம்பு, நாதசுரம், பூரிகை, எக்காளத்தோடு பல கருவிகள் ஒலிக்கின்றன.

புலித்தண்டை வீரமல்லாரி போன்ற வீரர்களை உடையது சிங்கை. ஏழு நகரத்தார்களும் சிறந்து வாழ அருள் செய்யும் அன்னையாக அழகிய அம்மன் விளங்குகிறாள். தஞ்சமென்று வந்தவர்களுக்குப் பில்லி, சூனியம் போன்ற எந்த நோய் இருந்தாலும் அவற்றைப் போக்கிக் காக்கும் ஆற்றலுடைய தெய்வமாக விளங்குகிறாள்.

'சொந்த அடியவ ரென்று தினந்தினந்
தோத்திரஞ் செப்பிப் பணிந்தவர்கள்
மைந்தர் பதினாறு பெற்றிடவே—பெரு
வாழ்வு கொடுக்கும் பரிபுரையாள்' (பா. 40)

என்று கும்மிப்பாடல் குறிப்பிட்டு அன்னையைச் சிறப்பாக வாழ்த்திக் கூறுகிறது. குறைவற்ற சங்கநிதியைக் கொண்டு வந்து தேவர்கள் அவளைப் பணிகிறார்கள். அழகிய நாயகியின் ஆலய வாயிலைக் கருப்பண்ண சாமி காவல் காத்துக் கொண்டிருக்கிறார். அவரையும் வாழ்த்திக் கும்மியடிக்கின்றனர்.

கும்மியடித்துப் பாடல்

கும்மிப் பெண்கள் ஆடுகிறார்கள். அவர்களுடைய காலில் சிலம்பு ஒலிக்கிறது. கைவளை குலுங்குகிறது. மேலணிந்துள்ள அணிகலங்கள் பளபள என்று மின்னிக் கொண்டிருக்கின்றன. மேகலை கொஞ்சியவாறு அசைந்து ஆடுகிறது.

மோகன மாலை அசைந்து ஆடும்போது முத்து வடங்கள் அவற்றுடன் இசைந்து ஆடுகின்றன. தோளணி ஆடுகிறது. வியர்வை வழிந்து ஓடுகின்றது. விழிகள் புரள்கின்றன. மார்பகங்கள் குலுங்கி

ஆடுகின்றன. கொண்டையிலிருந்து வண்டுகள் கலைந்து ஓடுகின்றன. அழகிய நாயகியைப் புகழ்ந்து பாடி கும்மியடிக்கிறார்கள். அவர்களுக்கு நினைத்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

அழகிய அம்மனின் வீதிவலம்

அம்மனைப் பல பெயர்களைச் சொல்லிக் கும்மிப் பாடல் ஆசிரியர் வாழ்த்துகிறார். அவள் மாதிரி, பாலி, த்ரிசூலி, வராகி, ராகினி மாயவனார்சோதரி, வாமி, கலியாணி, அழகியசுந்தரி, தேவி, மகமாயி எனப் பல்வேறு பெயர்களையுடையவள். அவள் அழகுருவாகி செம்பொற் கொடி பறக்கத் தெருவீதியில் வலம் வருகிறாள். அவளைப் பணிந்து வணங்க அரசர் பலர் வருகிறார்கள்.

ஆளும் அரசர் பற்றிய செய்திகள்

உலகமெல்லாம் ஒரு குடைக்குக் கீழ் வைத்து ஆளும் ஆங்கிலக் கும்பினியார்கள் மனம் மகிழ அவர்களை மதித்து வாழும் புதுக்கோட்டை சமஸ்தானத்தை நீதியில் சிறந்த விசைய ரகுநாத ராய பகதூர் தொண்டைமான் ஆண்டு கொண்டு வருகிறார். அவருடைய தயவில் சிங்கை நாட்டை ஆவுடையப்பனின் (அண்ணன்) மகன் ஆண்டு வருகிறார்.

அவர் வீர மிக்கவர். ஆணைச்சக்கரத்தை நீதி வழுவாது செலுத்துகிறவர். மாதவம் செய்தவர். கோடிக்குமார சுவாமி என்பது அவருடைய பெயர் (பா. 53) அருணாசல ராசன் என்பவருடைய மகனான ஆவுடையப்பன் என்பாரைச் சிறிய தந்தை என்று கூறுபவர் குமாரசாமி.

இந்தக் குமாரசாமி சிதம்பரம் என்பவரை மாமன் என்று அழைக்கும் உறவுடையவர். குமாரசாமி மகாரசன் மங்கையரை மயல் கொள்ளச் செய்யும் அழகையுடையவர். தன்னுடைய குல தெய்வமான சிங்கை அழகிய நாயகி அம்மனிடம் மாறாத பற்றும் பக்தியும் உடையவர்.

குமாரசாமியின் தோற்றம் வீரமும்

குமாரசாமி முடியைக் கொண்டையாகக் கட்டி அதில் தலைப் பாகை கட்டியிருப்பார். காதில் வைரக் கடுக்கன் அணிந்திருப்பார். முருகு என்ற அணியும் உண்டு. நெற்றியில் திருநீறணிந்து அதில் பொட்டும் வைத்திருப்பார். கண்டிகை, ஆரம், பதக்கம், சரப்பணி,

கண்டசரம் ஆகிய மாலையணிகளைக் கழுத்தில் அணிந்திருப்பார். எட்டுத் திசைகளையும் தாங்கிக் காக்கும் புயத்தில் வாருவலையம் பூண்டிருப்பார்.

முத்தமிழ் வாணருக்கு இருநிதி வழங்கும் கைகளில் வச்சிரக் கடையம் அணிந்திருப்பார். பத்து விரல்களிலும் பத்தரை மாத்துத் தங்கத்தால் செய்த மோதிரங்கள் பளபளக்கும் அங்கியும் நிசாரும் அணிந்து காட்சி தருவார். மேலாடையாகத் துப்பட்டாவும் உத்தரீயமும் இருக்கும். காலில் பாதசரம் அணியப் பெற்றிருக்கும்.

அரசர் வீதிவலம் வருதல்

வீரமாக நடந்து செல்லும் வேகமுடையவர் குமரேச சவுந்திரம் என்ற குதிரையில் பவனி வருபவர் ஆவுடையப்பன் அச்சு மட்டத்தில் (குதிரையில்) ஏறி வரவும் சிறிய தந்தையான ஆவுடையப்பர் பஞ்சகல்யாணி என்ற குதிரையின் மீது வருவார். இவர்கள் பவனி வரும் போது பெண்கள் மயில்பீலி கொண்டு வீசுவர். சிலர் அடப்பம். காளாஞ்சி சுமந்து வருவர். மேலும் சிலர் பொன் ஆலவட்டங்களை வீசியவாறு இருபக்கமும் வருவர்.

தானாபதியார், தளபதியார், சட்டமிடும் பிரதானியார், நான வகைக் கருணீகர், ஆகியோர் அரசரை அண்டி வருவர். துப்பாக்கிக் காரர், சுண்டு வில்காரர், சிப்பாய்கள், போலீஸ்காரர், தீவட்டிக் காரர் ஆகியோர் மிகப் பலராகத் துணை வருவார்கள். நாலுபுறமும் அனைவரும் புடை நெருங்கி வருவர். வட்டக் குடை மேலே தோன்றும். வேலும், வாளும் கொண்டு வீரர் அரசருடன் ஒத்து வருவர். எண்ணூறாயிரம் எதிரிகளைப் போரில் வென்று வீரம் விளங்கிய கண்ணனூர்ப் படை வீரர்கள் அரசரைச் சூழ்ந்து காரென வருவார்கள்.

பலவகையான இசைக்கருவிகள் ஊர்வலம் வரும்போது ஒலிக்கப் படும். துத்தி, புல்லாங்குழல், தம்புரா, நகரா, நவபத்து, மத்தளம், தக்கை, தப்பு, கொம்பு, வாங்கா, எக்காளம் ஆகியவற்றின் முழக்கம் வானை முட்டும். குதிரைப் படையினை வென்று வீரம் கொண்ட படை வீரர் முன்னால் செல்வர்.

இத்தகைய சீரும் சிறப்பும் கொண்டு பூரணமதி போன்ற அழகுடைய நீதிமான், வீராதி வீரன் குமாரசாமி வேந்தன் உலா வருகிறார். அவர் வெள்ளைக் குதிரை மீது அமர்ந்து பொலிவுடன் வரும் காட்சி அனைவரையும் கவரும். அவரையடுத்து அச்சுக் குதிரையில் ஆவுடையப்பன் வருவது மிகச் சிறப்பாக இருக்கும்.

அருணாசல பூபதியின் மகன் ஆவுடையப்பன் பஞ்ச கல்யாணிக் குதிரையில் வரும் அழகு காணத் தக்கதாகும். அரசனான குமார சாமியின் இருபக்கத்திலும் அவருடைய சிறிய தந்தையான ஆவுடையப்பனும் (பஞ்ச கல்யாணிக் குதிரையில் வருபவர்) தம்பி ஆவுடையப்பனும் (அச்சுக் குதிரையில் வருபவர்) வரும் சிறப்பு மிகமிக அழகான காட்சியாகும்.

அரசன் குமாரசாமி இவ்வாறு ஊர்வலமாக வந்து அழகிய அம்மன் திருவிழாவின் போது தேர் வடம் தொட்டுக் கொடுத்து விழாவைச் சிறப்புடன் நடத்தி வைத்தார்.

அழகிய அம்மனின் அருள்

மன்னன் குமாரசாமி விழா நடத்தி அன்னையின் முன்னால் பணிந்தார் அவருக்கு அனைத்து நலங்களும் அம்மனின் அருளால் வாய்த்தது. மக்கள் கூடி வணங்கி நின்றனர். சித்திர மாமணி மண்டபத்திலே அன்னை கொலுவிருக்கிறாள். அந்த அன்னை யாகிய பத்திர காளியைப் பார்த்துக் கும்மியடிக்குமாறு ஆசிரியர் பெண்களை வேண்டுகிறார்.

ராசாதி ராசரான விசைய ரகுநாத ராய பகதூர் தொண்டை மானுடைய ஆட்சி செழித்து ஓங்க அழகிய அம்மன் செங்கோல் கொடுத்துள்ளாள். தினமும் பூசை நடத்தி மாதந்தோறும் விழா எடுத்துத் திருத்தேர் நடத்தும் மன்னன் குமாரசாமியையும் தன் அருளால் காக்கும் அம்மனாக அவள் விளங்குகிறாள். குமாரசாமி மகிழ அவருடைய தம்பி ஆவுடையப்பனையும் காத்து வருகிறாள்.

அனைவரும் நலமும் வாழ்வும் பெற்றுச் சிறக்க அழகிய அம்மனைப் பணிந்து பாடி கும்மியடியுங்கள் என்று மேலும் மேலும் ஆசிரியர் கும்மிப் பெண்களை வேண்டிப் பாடுகிறார். நாட்டு நலத்துடன் வீட்டு நலமும் மங்கையர் கற்பு நலமும் வேண்டு கிறார். மழையும் வேண்டி மன்னனின் கொடையும் வேண்டுகிறார். அனைத்துக்கும் உறுதியான ஆதரவாக அன்னையின் அருளை வேண்டிக் கும்மிப் பாடலை ஆசிரியர் நிறைவு செய்கிறார்.

சிறப்புக் குறிப்புகள்

சிங்கை அழகிய அம்மன் கும்மி விசய ரகுநாத ராய பாதர் தொண்டைமான் என்ற அரசர் புதுக்கோட்டை நாட்டை அரசாண்ட குறிப்பைத் தருகிறது. (பா. 52) இந்தத் தொண்டைமான் அந்த நாட்டைக் கி. பி. 1817 முதல் 1825 வரை ஆண்டுள்ளார்.

1817 முதல் இருபத்தெட்டாவது வயதில் அவர் இறந்த 1825 வரையுள்ள காலத்தில்தான் இக்கும்மி எழுதப் பெற்றிருக்க வேண்டும். இவருக்குப் பின்னர் இராமச் சந்திரத் தொண்டைமான், மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான், இராஜகோபாலத் தொண்டைமான் ஆகியோர் ஆளுகின்றனர். யாரும் கும்மிப்பாடல் குறிப்பிடும் பெயரில் இல்லை (ஆ.ல. சிரஞ்சீவி, புதுக்கோட்டை வரலாறு, சென்னை, 1980)

இக்கும்மிப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடும் சிங்கை நாட்டுத் தலைவரான குமாரசாமி இந்தக் காலத்தில் வாழ்ந்த ஒரு சிறு அரசராக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவருக்கு மேலாணையுடையவராகத் தொண்டைமான் இருப்பதினால் அவரையும், அவருக்கு மேல் அதிகாரமுடைய ஆங்கிலக் கம்பனியையும் கும்மிப் பாடல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பொதுவாக சிற்றரசுகளைப் பரம்பரை உரிமை பாராட்டி அரசர் ஆண்டு வந்துள்ளனர். சில குடும்பங்களில் அரசுக்கு உரிமையுடைய ஓரிருவர் இருக்கலாம். அந்நிலை ஏற்படும்போது அரசு கட்டில் ஏறும் அறிவுடைய மன்னர் மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து அவர்களை ஆறுதல் படுத்துவதைச் சில இடங்களில் காணலாம்.

சிங்கை நாட்டை குமாரசாமி என்பார் ஆண்டு வருகிறார் அவருடைய சிறிய தந்தையான ஆவுடையப்பனும், தம்பி முறையாக வரும் ஆவுடையப்பனும் நாட்டாட்சி உரிமை பெறும் தகுதியுடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

குமாரசாமி அவர்கள் இருவரையும் அரசவுலா நடைபெறும் போது தன் இருபக்கத்திலும் வருமாறு செய்து பெருமைப் படுத்துவதாகக் கும்மிப் பாட்டு கூறுகிறது. (பா. 78-79) இதை ஓர் அரசியல் செயல்திறம் என்று மதிக்கத் தக்க அளவுக்குச் சிறப்பு உள்ளது. நாட்டில் குடியுரிமைப் போர், ஆட்சிக் கவிழ்ப்பு ஆகியவை கூடியவரை வராது இத்தகைய அரசியல் போக்கு தடுக்கும்.

அந்தக் காலத்தில் ஆட்சியானது அடியடியாக இறங்கியுள்ளதைக் காணலாம். உச்ச ஆணையுள்ளவர் அடிநிலையிலும் இருப்பதைக் காணலாம். இந்தக் கும்மி வாயிலாக இந்த வரலாற்று உண்மையை விளக்கலாம். ஆங்கிலக் கம்பெனி உச்ச நிலை ஆணையுடையதாகவும் புதுக்கோட்டை சமஸ்தானம் அதற்கு

அடுத்த நிலையிலும் சிங்கை அதற்குக் கீழும் இருந்ததை மிகத் தெளிவாக அறியலாம்.

பொதுமக்கள் தங்களை உடனடியாக மேலாணை செலுத்துவோரையே (Immediate Superiors) நன்கு அறிந்துள்ளனர். அவர்களுக்கும் மக்களுக்கும்தான் நேரடியான தொடர்பு இருந்துள்ளது. மற்றைய நிலைகளில் ஆணை செலுத்துவோரும் ஆள்வோரும் ஒருவருக்கொருவர் வரி கொடுப்பதிலும் வாங்குவதிலும் தங்கள் ஆணையின் மதிப்பையும் தன்மையையும் காட்டிக் கொள்வர். இவ்வாறுதான் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டின் ஆட்சி பரிபாலன முறை அமைந்திருக்கின்றது.

இத்தகைய உண்மைகளைக் கும்மிப் பாடல்கள், வில்லுப் பாட்டுக்கள், கதைப் பாடல்கள், அம்மானைப் பாடல்கள், திருமுக விலாசங்கள் போன்ற சிற்றிலக்கியங்கள் வாயிலாக மிகக் தெளிவாக அறிய முடிகிறது.

சிங்கை அழகிய அம்மன் கும்மி

1. நங்கைப் பயிரவி சிங்கை யழகிய
   நாயகி மேல்கும்மிப் பாட்டுரைக்க
   சிங்கைப் பதியிற் செழிக்கும் பரவாசு
   தேவா னவரும் காப்பாமே.

2. சீரிற் சிறந்த ரதிமா னே நவஞ்
   சேருமிந் திராணி யெனுந்தேனே
   மூரிச் சிலைநுதல் பூமா னே நீங்கள்
   மூன்று பெண்களும் வாருங்கோடி.

3. அம்பை நிகர்த்த விழியணங்கே—தம
   யந்திசு கந்தி சொற்சந்திரமதி
   ரம்பை திலோத்தமை சித்ராங்கி நீங்கள்
   நாலிரு பெண்களும் வாருங்கோடி.

4. பூரண வல்லி சரசவல்லி — அம்
   போருக வல்லி அமுதவல்லி
   நாரண வல்லி சுமுகவல்லி—நீங்கள்
   நாலைந்து பெண்களும் வாருங்கோடி.

---

1. பரவாசுதேவன்—திருமால்
2. நவம்—புதுமை
   பூமானே—மலர் போன்ற மெல்லிய பெண்ணே

5. மங்கைய ரெல்லோரும் வாருங்கோடி—இங்கே
வாரிதா ளாரென்று பாடுங்கோடி
சிங்கை யழகிய தேவியின் பாதத்தைச்
சேவித்துக் கும்மி யடிப்பமடி.

6. பாற்கட லான அறப் பெருமாப்
படித்துறை நீரில் படிந்து கம்ப
மாற்கமாய் மஞ்சள் குளிப்பமடி—குச்ச
மாமல ரெல்லா மெடுப்ப மடி

7. ரஞ்சித மாலை மணிமாலை—நவ
ரத்தின மாலைச் சீமாலை
அஞ்சுக மாலை குணமாலை—நீங்கள்
ஆறேழு பெண்களும் வாருங்கோடி.

8. வாலக் குயிலிசை காமக் கலாநிதி
வாணிகல் யாணி சுரர்தான
ஏலக் குழற்றிரு வேணிமின் னே நீங்கள்
எட்டுப் பெண் களும் வாருங்கடி.

9. அங்கைக்குக் கந்த மலரெடுக்கப்—புன
லாமென் றாலு நறுங்களபக்
கொங்கைக் குடங்கொண்டு நீந்தி மலரெல்லாம்
கொய்திடு வோமடி தோழிப் பெண்காள்

---

5. வாரிதாளார்—தண்மையான பாதமுடையவர்
சேவித்து—வணங்கி

6. அறப்பெருமாப் படித்துறை—அறப்பெருமாள் என்ற பெயருடைய படித்துறை
கம்பம்—தூண்
மார்க்கம்—வழி, நெறி

8. ஏலக்குழல்—மயிர்சாந்து பூசிய மணமுடைய கூந்தல்

9. அங்கை—அழகான கை

10. வாவியில் நீந்தி மலரெடுத் தால்வரி
வண்டினம் விண்ணிற் பறப்பானேன்
தாவிய னங்கடை கண்கள்சிவந்தது
தரளங்கண் டருண்டடி தோழிப் பெண்கள்

11. கண்கள் சிவந்தா லினிநேரே
கலங்கி நினைப்பார் அனைமாரே
பெண்கள்எல் லாருங் கரையேறி —ஈரப்
புடவை களைந்துள் ளுடையணிந்து

12. மெல்லிய செம்பட் டுடையுடுத்தி—மணி
மேகலை கட்டி ரவிக்கை யிட்டு
மல்லிகை முல்லை மலர்தரித்துப்—பிறை
மாணிக்கச் சுட்டி யுடன்தரித்து

13. சாந்துசவ் வாது புனுகுபரிமள
சந்தனம் பன்னீ ருடன்கலந்து
மாந்துளிர் மேனியெல் லாந்திமிர்ந்து—மேல்
மாமுலை மேற்றொய்யில் தானெழுதி

14. நெத்திக்கு நீறிட்டு சிந்தூரமிட்டு—இரு
நீல விழிக்கஞ் சனந்தீட்டி
சுத்திக்கிரண மாடுங் கொப்பு வச்சிரத்
தோடுஞ் சிமிக்கியுங் காதிலிட்டு

15. மூக்கினில் முத்துமூக் குத்தியிட்டுச்—சரி
முன்கைக்குச் சலங்கைக் காப்புமிட்டு
தாக்கிய செங்கை விரற்குத் திருந்திய
தங்கக் கணையாழி யுந்தரித்து.

16. கொங்கைக் குடத்தில் துவண்ட ரத்னக்
கோர்வைமின் மோகன மாலையிட்டு
……………………………………………………
……………………………………………………

17. ஆடக மிஞ்சி மயில்ஆடப் பீலிகா
லாழி விரலி லணிந் தடுக்கி
பாடகத் தண்டை சிலம்புமிட் டுப் பெண்கள்
பண்புட னெல் லோரும் வாருங்கோடி

18. நந்து விளங்கிய சிங்கை யழகிய
நாயகி பொற்பதந் தான்தொழுது
வந்தும டந்தையெல் லோருமஞ் சணதி
வாசலில் கும்மி யடியுங்கோடி

19. அம்மை யழகிய தேவி பராபரை
அம்புய பங்கயத் தாள்வாழ்த்தி
கொம்மை முலையார்கள் எல்லா ருங்கூடிக்
கொண்டாடிக் கும்மி யடியுங்கோடி

20. அற்புத சிற்பரை யாமழ கம்மன்மேல்
அன்பாகக் கும்மித் தமிழ்பாட
விற்புரு வக்கயற் கண்ணரிய ரெல்லோரும்
வேடிக்கை யாய்விளை யாடுங்கோடி

---

17. ஆடகம்—பொன் வகைகளில் ஒன்று
மிஞ்சி—காலணி
பீலி—காலணி
பாடகம்—சிலம்பு

18. நந்து—சங்கு
மஞ்சணதி வாசல்—பள்ளி கொண்டுள்ள அறைவாயில்

19. அம்புயம் } தாமரை
பங்கயம் }

20. சிற்பரை—பராசக்தி

21. வாமக்கி ரீடம் மு டித்தா ளைப் புது
மாமதி போலு முகத்தாளை
நேமத் திரிநய னத்தாளைத்திரு
நீறணி விற்புரு வத்தாளை

22. தோடணி செம்பொற் குழையாளைக்—கனி
தொண்டை நிகரத ரத்தாளை
நீடெழில் வக்கிர எயிற்றாளைப்—பரு
நித்தில மூக்குத்தி யிட்டாளை

23. நாலிரு குன்றப் புயத்தாளைத்—தோணி
நந்து நிகர்கந்த ரத்தாளை
நாலிரு கஞ்சக்'கரத்தாளைக்—கவி
நாவிரு குன்றத் தனத்தாளை

24. தாரணி யாளும் கரத்தாளை—மற்று
தான்சே வஞ்சிக் கிசைந்தாளை
தோரண வாழைத் துடையாளை — மதன்
தூணி யெனுங்கணைக் காலாளை

---

21. வாமம்—அழகு, ஒளி
நேமம்—முறையாக
நயனம்—கண்

22. தோடணி—தோட்டை அணிந்த
தொண்டை—கொவ்வைக்கனி
அதரம்—வாயிதழ்
வக்கிரம்—வளைந்த
எயிறு—பல்
நித்திலம்—முத்து

23. நாலிரு குன்றம்—எட்டு மலை
தோணிநந்து—சேற்றில் வாழும் சங்கு
கந்தரம்—கழுத்து

24. தாரணி—உலகம்
தூணி—அம்புக் கூடு

25. பொத்தக மான பதத்தாளைச்—செழும்
பூரண யோக விதத்தாளை
வித்தகி சிங்கை யழகிய தேவியை
வேண்டிக் கும்மி யடியுங்கோடி

26. கானாடு கோனாடு கல்வா சல்நாடு
கதிபெறும் பூங்குன்றை நாட்டுடனே
நானாடு வந்து வளங்கேட் கும்எங்கள்
ராசசிங் கைப்பதி நன்னாட்டில்

27. சுந்தர மேவிய கோபுரமுங் கதிர்ச்
சூரியன் மேவிய மாமதிளும்
கந்தரந் தாவும்பொன் தூபிக ளும்வச்ரக்
காவன முந்திகழா லையத்தில்

28 மால்அயன் சந்திர சூரிய னுந்திரு
வாசவன் கால வயிரவன்சேய்
வேலயன் தொந்தி விநாயகன் பைந்திறல்
வீரனப் பண்ணன் தற்சூழ

---

25. பொத்தகம்—ஏடு, இதழ்

26. நானாடு—கானாடு, கோனாடு, கல்வாசல் நாடு,
பூங்குன்றை நாடு
சிங்கை—சிவகங்கை

27. சுந்தரம் —அழகு
கந்தரம்—மேகம்
தூபிகள் —முகடுகள், (ஸ்தூபிகள்)

28. மால் —திருமால்
அயன் —நான்முகன்
வாசவன்—இந்திரன்
சேய்வேலயன்—முருகன்

29. தும்புரு நாரத ரும்புகழச்—சில
தோகையர் வந்த னம்பயில
அம்புவி வாணர்கள் துதிக்கப்—பல
அந்தணர் வேதங்க ளார்ப்பரிக்க

30. பாங்கியர் சேர்ந்தே அடப்பங்கா ளாஞ்சி
பரிவுடன் கொண்டிரு பக்கநிற்க
மாங்குயி லார்மஞ்சப் பாவாடை பஞ்ச
வர்ணப்பா வாடையும் வீசிநிற்க

31. சந்திர வட்டக் குடை நிழற்ற—செய
சாமரம் ரம்பையர் தானிரட்ட
செந்திரு மிகுமுத்தத் தினில்சுத் தத்தங்கத்
தீவட்டி சித்தர் கணம்பிடிக்க

32. சிங்கப் பதாகை சுருட்டி யடக்கியஞ்
சித்தால வட்டங் கனத்துவச
பொங்கத் துடனே பொற்கம்புத் தடிகளைப்
பூத கணங்க ளெடுத்துநிற்க

---

29. தோகையர்—பெண்கள்

30. பாங்கியர்—தோழிப் பெண்கள்
அடப்பம்—வெற்றிலை
காளாஞ்சி—தாம்பூலக் கமலம்
பரிவுடன்—பணிவான அன்புடன்
மாங்குயிலார்—பெண்கள்

32. சிங்கப் பதாகை—சிங்கத்தின் அடையாளமுள்ள விருதுக் கொடி
சித்தால வட்டம்—சிறிய ஆலவட்டம் (வழக்குச் சொல்)
பொங்கம்—பொலிவு

33. சங்குசே கண்டில வண்டை மல்லாரி
தாடாரி நவபத் தொடு நகராச்
சங்கீத மேளங் கனகதப் புத்துடிச்
சத்த முகிலெனத் தான் முழங்க

34. வாங்காக் கொம்பு மணிச் சின்னத் தொன்மை
மாறாத நாக சுரந்தானா
பாங்காய்ப் பூரிகை எக்கா ளந்திருப்
பாற்கடல் போலநின் றார்ப்பரிக்க

35. — — — —

36. — — — —

37. வாடாத மாலைப் புலித்தண்டை—வீர
மல்லாரி யுள்ள மறமன்னர்
தாடாள ராகப் பரிவுட னேபெற்ற
தாய்போலக் காக்குந் தயாபரியே

38. நாட்டவ ரேழு நகர்வணி கர்செய
ரஞ்சித ராணுவத் தாராதியர்
தாட்டிக ராகத் தழைத்திடவே—யருள்
தந்துரெட் சிக்கும் செகவாலை.

---

33. சேகண்டி—சேமக்கலம்
லவண்டை—ஒருவகைத் தோற்கருவி
மல்லாரி—பம்பைமேளம்
தடாரி—பேரிகை
நவபத்து—ஒருவகை தோல் வாத்தியக் கருவி
நகரா—ஒருவிதப் பறை
சத்தமுகில்—ஏழுமேகம்

34. வாங்கா—கொம்பு போன்று ஊதுங்கருவி
பூரிகை—ஊதப்படும் ஒருவகைக் கருவி
ஆர்ப்பரிக்க—ஒலிக்க

35. படிக்க இயலாதவாறு சிதைந்துள்ளது.

36. படிக்க இயலாதவாறு சிதைந்துள்ளது.

37. தாடாளர்—முயற்சியுள்ளோர்

38. தாட்டிகர்—வலியவர்
செகவாலை—உலகமகாசக்தி

39. தஞ்ச மெனவந் தடுத்துப் பணிபவர்
தங்களை நோக்கிக் குறித்து வைத்து
வஞ்சனை பில்லி அடங்காப் பிணியையும்
மாற்றிப் புரந்தருள் சுந்தரியாம்.

40. சொந்த அடியவ ரென்று தினந்தினந்
தோத்திரஞ் செப்பிப் பணிந்தவர்கள்
மைந்தர் பதினாறு பெற்றிட வேபெரு
வாழ்வு கொடுக்கும் பரிபுரையாள்

41. மங்காத சங்க நிதிகொணர்ந் தன்போடு
வானவர் வந்து திறையளக்க
சிங்கா தனத்தில் இருக்கும் அழகிய
தேவியைப் பாடிக்கொண் டாடுங்கடி

42. தேசப்பிர தாபர் பணிந்தேத் துஞ்செய
சிங்கை அழகிய நாயகிதன்
வாசல்பிர தானி கறுப்பண்ண சாமியை
வாழ்த்திக் கும்மி யடியுங்கோடி.

43. காலீற் சிலம்பு கலகலென—மணிக்
கைப்புனை வண்டு கிலுகிலென
மேலிற் கணங்கள் பளபளென மணி
மேகலை கொஞ்சத் தளதளென

---

39. பில்லி—பில்லி சூனியம்

30. தோத்திரம்—வணக்கம்
பதினாறு—பதினாறு பேறுகள்
பரிபுரையாள்—பாதச் சிலம்புடைய தேவி

42. தேப்பிரதாபர்—மிக்க புகழுடையவர்
வாசப்பிரதானி—வாயில் காக்கும் தெய்வம்

43. வண்டு—கைவளை

44. மோகன மாலை யசைந்தாடப்—பரு
முத்து வடங்க ளிசைந்தாட
மாகன காசலத் தோளாடப்—புது
மாமதி யாமுக வேர்வாட

45. கெண்டை விழிகள் புரண்டாடத்—தங்கக்
கிண்ண முலைகள் தாமாட
கொண்டையில் வண்டு கலந்தாடக்—கதிர்
கொந்தள ஓலை அசைந்தாட

46. கூடிக் கும்மியடியுங்கோடி—செயங்
கொண்ட வழகிய நாயகியைத்
தேடிக் கும்மி யடியுங்கோடி—பலன்
சிந்திக்கக் கும்மி யடியுங்கோடி

47. மாதிரி வீரிக பாலித்ரி சூலி
வாராகி ராகினி மாயவனார்
சோதரி வாமி கலியாணி - யழகிய
சுந்தரி தேவி மகமாயி

48. சிங்கார மானகொ லுப்பெருகித்—திரு
செம்பொற் கொடியை நயந்தேற்றி
மங்காத வீதியில் அங்கப்பவனி
வருகிறாள் பாருங்கள் தோழிப்பெண்காள்

49. தேசாதி தேசத் திருந்தே யழகிய
தேவி திருத்தேர் தரிசிக்க
ராசாதி ராசர் எல்லோரும் பாரா
ரஞ்சிதம்......................

---

45. கெண்டை—மீன்

48. அங்கப் பவனி—தெருவலம் வருதல்

50. அம்புவி எல்லாம் ஒருகுடைக் கீழ்க்கட்டி
ஆளும் இங்கிலீ சுச்செபித்த
கும்பினி யார்கள் மனமகிழ்ந்தே வந்து
கொண்டாடு மாபெருஞ் சமஸ்தான

51. எட்டன்முடிபுனை யுஞ்சர ணம்புகழ்
இந்திர குலத்தில் வருஞ்சந்திர
மட்டவிழ் கோடி நகரா னகன
வக்காலத் தார்கள் எனும்நீதர்

52. நீதி பெருகிய ராச விசைய—ரெகு
நாதராய பாதர் தொண்டைமான்
மாதய வாழ்மகிழ் ஆவுடையப்ப
மகபதி பெற்ற மகராசன்.

53. ஆதவன் சோதி மறைந்திடவே—சக்க
ராயுதம் தொட்ட வெகுவீரர்
மாதவன் கோடிக் குமார சுவாமி
வலங்கொண்ட எங்கள் மகராசன்

54. அன்ன நடைபயில் மின்னனை யார்மதன்
ஆவுடை யப்பன் துணை படைத்த
மன்னவன் கோடிக் குமார சுவாமி
வலங்கொண்டா னெங்கள் மகராசன்

55. துங்க வருணாசலராசன்—அவன்
சொல்புத்ரன் ஆவுடை யப்பனெனுந்
தங்க நிதியைப் புனிதமுடன்—சிறு
தந்தை யெனமகி ழிந்திரகுலன்

---

51. எட்டான்—எட்டைய புரத்து மன்னன்
வக்காலத்து—வழக்கு ஏற்றுப் பேசும் உரிமை.

52. பாதர்—பகதூர்

53. ஆதவன் சோதி—சூரிய ஒளி

56. சூரன்றன் சேகர மாய்ந்திட வேபொரு
சுந்தரச் சேய்கதிர் வேல்பிடித்த
வீரன்குமாரசு வாமி வலங்கொண்ட
வேந்தன் தருண ரதிகாந்தன்

57. சோமன் மணிக்கு மாரசு வாமியே
சக்கர மேவு சிதம்பரத்தை
மாம னெனவே மகிளுங்கு மாரசு
வாமி வலங்கொண்ட வச்சிரத்தான்

58. ஆரந் (தயங்கு) பயோதர மங்கையர்
அகம கிழ்ந்து மடல்தீட்டும்
மாரன்தென் கோடிக் குமாரசு வாமி
வலங்கொண்ட எங்கள் மகராசன்

59. தன்குல தெய்வமாஞ் சிங்கையழகிய
தற்பரை யாள்திருத் தேர்நடத்த
அங்குடன் கட்டுவர் கந்தரத் துச்சக
லாபர ணங்க ளலங்கரித்து

60. மாமுடி மேற்கெண்டைப் பாகுகட்டிக்—காதில்
வச்ரமுத் தொண்டியும் தான்தரித்து
நேமுக மான முருகணிந்—துதிரு
நீறணி நெற்றியில் பொட்டு மிட்டு

---

59. கந்தரம்—கழுத்து
சகலாபரணம்—எல்லாவித நகைகள்

61. கண்டிகை, ஆரம், பதக்கம், சரப்பணி, கண்டசரம் } அணிகலங்கள்
வாகு வலையம்—தோள்காப்பு

61. கண்டிகை யாரம் பதக்கஞ் சரப்பணி
கண்ட சரமுங் கழுத்திலிட்டு
எண்டிசை தாங்கும் புசத்துக் கிசைய
இலகிய வாகு வலையமிட்டு

62. முத்தமிழ் வாணர்க் கிருநி திதரும்
முன்கைக்கு வச்சிரக் கடையமிட்டு
பத்தரை மாத்துப் பசுந்தங்க மோதிரம்
பத்து விரலுக்குந் தானீந்து

63. அங்கி நிசார்தொட் டுயர்ந்த கெண்டத்துப்பட்
டாவுத்த ரீகந் தரித் துடையில்
வங்கிசத் தோடு சேர்த்துப் பதந்தனில்
மாவீர கண்ட சரமணிந்து

64. மின்னிய செம்பொன்....... நந்தியல்
மிஞ்சி யணிந்து மகராசன்
மன்னிய ராஜஸ்ரீ மா...............
மாகச் சிங்கார முகப்பில்

65. பாரப்பிர காசக்கி ரீடத் தரியலர்
பாளையந் தூள்பட வேநடக்கும்
வீரப்பிர தாபர்கு மாரசவுந்திர
வெம்பரி மீதி லெழுந்தருளி

66. மங்கையர் மோகனா மிந்திர குலசந்த்ரன்
மார்க்கண்டன் வச்சிர தேகனெனும்
அங்கச னாமெங்கள் ஆவுடை யப்பமால்
அச்சு மட்டத்தி லேறிவர

67. அன்புடன் சொந்தச் சிறுதந்தை
ஆவிடை யப்பவ ரோதயமால்
வன்புகளார் பஞ்ச கல்யாணித் துரகத
வாசியின் மீதில் ஏறிவர

68. மின்னா ரடப்பங்கா ளாஞ்சி மயில்த் தொம்பை
வெண்சா மரங்குஞ்சம் பாவாடை
பொன்னா னாலவட்டம் விசிறிக் கொண்டே வெகு
பொற்பாய் விரைந்திரு பக்கம் வர

69. தானா பதியும் தளபதியும்—வரச்
சட்டமி டும்பிர தானிகளும்
நானா வகைக்கர் ணீகர்களும்—திரு
நாட்டமா யீட்டம்பா ராட்டிவர

70. துப்பாக்கிக் கார ரொருகோடி—வறு
சுண்டி வில்க்காரர் ஒரு கோடி
சிப்பாய்க் காரர் ஒருகோடி—போலீஸ்
தீவட்டிக் காரர் ஒருகோடி

71. நாலுபுறமும் புடைநெருங்க—அப
ரஞ்சி வட்டக் குடைதுலங்க
வேலுங் கனவடி வாளுங்கையிற் கொண்டு
மேலான ராசர் ஒத்துவர

---

67. வரோதயன்—வரத்தையளிப்பவன்
துரகதவாசி—காற்றைப் போன்று விரைவாகச் செல்லும் குதிரை

71. புடைநெருங்க—பக்கத்தில் நெருங்க
அபரஞ்சி—புடமிட்ட தங்கம்

72. எண்ணநூ றாயிரம் மாற்றல ரைச்சம
ரிட்டு விரட்டிச் சயம்படைத்த
கண்ணனூர் ராணுவத் தார்கள னைவோருங்
காரெனச் சூழ்ந்திரு பாலும்வர

73. துத்திபுள் ளாங்குழல் தம்பூரா
சிறந்த நகரா நவபத்து
மத்தளந் தக்கை தப்புக் கொம்பு
வாங்காயெக் காள முழங்கிவர

74. வருகுதி ரைப்படை தத்தளித் தோடவே
மருட்டி விரட்டி யுடற்கிழித்து
அருமயிற் கட்டி யீட்டி பிடித்தகா
லாடியா ளாடிமுன் ஓடிவர

75. தாராக் கணத்தில் கலைநிறை யும்பூர்ண
சந்த்ரோ தயம்போல் மநுநீதி
வீராதி வீரன் குமாரசு வாமிமா
வேந்தன் வருகிறார் பாருங்கோடி.

76. வேந்தன் குமாரசு வாமி வலங்கொள
வெள்ளைக் குதிரையின் மீதேறி
மாந்தர் எல்லா ரும்புகழ்ந் திடவே
வாரசிங் காரத்தைப் பாருங்கோடி

77. கச்சுக்குச் சிக்கினுந் தத்திக்குங் கும்பக்
கனமுலை தாங்கிய வஞ்சியரே
அச்சுக் குதிரையில் ஆவுடை யப்பமால்
அன்பாய் வருகிறார் பாருங்கோடி

---

72. கண்ணனூர்—சமயபுரம்
75. தாராக்கணம்—விண்மீன் கூட்டம்

78. வஞ்சியர் மாலரு ணாசல பூபதி
மைந்தனா மாவுடை யப்பமுகில்
மிஞ்சிய பஞ்சகல் யாணிப் புரவியை
வீறாக நடத்துறார் பாருங்கோடி

79. ராமன் லக்குவன் போலவே ஆவுடை
ராசன் தவத்திற் பிறந்தவராம்
வீமன் குமாரசு வாமி வலங்கொண்ட
வேந்தன்வந் தான்பாருந் தோழிப்பெண்காள்

80. வந்து வடந்தொட்டுச் சிங்கை யழகிய
வல்லி திருத்தேர் நடத்திவைத்தான்
சிந்தை மகிழ்ந்து தயாபரி தான்திருச்
சேர்வை சென்றானடி தோழிப்பெண்காள்

81. வந்து பணிந்த குமாரசு வாமி
வலங்கொண்டான் மார்க்கண்டன் போலிருக்க
சந்தான வாழ்வு சவுபாக் கியமிகத்
தான்கொடுத் தான்பாருந் தோழிப்பெண்காள்

82. தத்தை மொழிச்சியர்க் குச்சித மாகவே
சன்னதி முன்னர் வந்து நிற்க
சித்த சனங்கள் முடிவணங் கத்தவத்
தேவ கணங்கள் புடைநெருங்க

83. பத்த சனங்க ளடிவணங்கப் பராக்
பராக்கென கெட்டியந் தான்முழங்க
சித்திர மாமணி மண்டபந் தன்னிலே
சிங்கா சனத்திற் கொலுவிருக்கும்

---

78. பஞ்சகல்யாணி—குதிரையின் பெயர்
புரவி—குதிரை
வீறாக—வீரத்தருக்குடன்

82. தத்தை மொழிச்சியர்—கிளி போன்ற மொழியுடையர்

84. பத்திர காளி யழகிய தேவியைப்
பார்த்துக் கும்மி யடியுங்கோடி
……………………………………
……………………………………

85. ராசாதி ராசர் விசைய ரகுநாத
ராய்பாதர் தொண்ட மானதிக
தேசாதி பத்தியஞ் செழித்தோங்கச்செயச்
செங்கோல் கொடுத்த மகமாயி

86. மாறாத பூசை யபிடே கந்தின
மாகமா சந்திரு நாள்திருத்தேர்
வீறாய் நடத்துங் குமாரசு வாமிமால்
மைந்தரைக் காக்கு மபிராமி.

87. சீதரன் கோடிக் குமாரசு வாமிவ
சீகரன் சிந்தை களிகூர
சோதர னாவுடை யப்பவிதுரவுத்
துங்கனைக் காக்கும் பரஞ்சோதி

88. எல்லைக் கடங்காத செந்தமி ழைத்துதித்
தெப்போதும் வந்து பகர்ந்தினிய
சொல்லைக் குழைத்துப் பதம்பா டிக்கும்மி
தோத்திரஞ் செப்புங்கள் தோழிப்பெண்காள்

89. மந்திரி எண்புய தந்திரி யம்பிகை
வாமி பரம கலியாணி
சுந்தரி யெங்கள் அழகிய தேவி
துணைப்பதம் எந்நாளும் வாழியவே

90. வேதியர் வேத நெறிவா ழிமழை
மென்மே லும்பெய்யும் முகில்வாழி
மாது பரிவார தேவ ரனைவரும்
மங்கள மாய்நிதம் வாழியவே.

91. ரஞ்சித ராசா விசைய ரகுநாத
ராயபா தர்தொண்டை மான்வாழி
வஞ்சியர் மோகன்கு மார சுவாமி
வலங்கொண்ட லாமென வாழி

92. மாதுப திக்கவி ராசன் அனைவோரும்
வாழ்த்திய செந்தமிழ்தான்வாழி
சேதுப திக்கிணை யான மறமன்னர்
சீருடன் எந்நாளும் வாழியவே.

93. நன்னய கம்பைய ராச்சிய வகைப்பதி
நாட்டவ ராணுவத் தார்வாழி
மன்னர் தமைவணங் கார்இளை யசைவ
வணிக ரானவருந்தான் வாழி

94. சிங்கை யழகிய தேவியின் ஆலய
சந்நிதி வாசலி லேகூடியே
கொங்கை குலுங்கிடத் தோழிப் பெண்காள்
கும்மி யடித்தி டுங்கோடி.

சிவயோக வல்லிக் கும்மி

சிவயோக வல்லி

இராமநாதபுரம் மாவட்டத்தின் வடபகுதியிலுள்ள மிதுலைப் பட்டியில் கோயில் கொண்டுள்ள ஆவுடை நாதரின் ஆவுடை நாயகியைச் சிவயோக வல்லி என்றும் அழைப்பர். அன்பர்களுக்கு அருளை வழங்கி அவர்களுடைய வாழ்வை வளமாக்கும் பேரருள் அன்னையாக இந்த நாயகி விளங்குகிறாள் இத்தகைய சிறப்புடைய அன்னையைப் போற்றிப் புகழ்ந்து இந்தக் கும்மி பாடப்பட்டுள்ளது. சுவடிவுருவில் கிடைத்த இந்த நூலின் முழுப் பகுதியும் இருப்பதாகத் தோன்றவில்லை. இடைப் பகுதியில் சில பாடல்கள் இல்லாமல் உள்ளது. கிடைத்தவற்றிலுள்ள குறிப்புக்கள் இங்குத் தரப்படுகின்றன.

ஆசிரியர்

சிவயோகக் கும்மியைப் பாடிய கவிராயர் மிதிலைப்பட்டியில் வாழ்ந்த மல்லையூர்க் கவிஞரான திருச்சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையில் தோன்றியவராக இருத்தல் வேண்டும்.

'மல்லைக் கவிஞனான் வங்கிசத் தர்ல்விடுத்த

சொல்லையா கொம்மி' (பா. 2)

என்று குறிப்பிடும் பாடலிலிருந்து இதனை அறியலாம். வேறொன்றும் இந்த ஆசிரியரைப் பற்றி அறிய முடியவில்லை. காலத்தை அறிவதற்கு உரிய குறிப்புகளும் தெளிவாக இல்லை.

கூறும் பொருள்

மிதுலைப் பட்டிக் கவிஞர் சிவயோக வல்லி அம்மையின் பேரில் கும்மி பாடுவதற்குக் கணபதி, முருகன் முதலிய கடவுள்களை வேண்டுகிறார். காளியை வென்ற அப்பன், தண்டிகேசன் ஆகியோர் அருளினை வேண்டிப் பாடுகிறார்.

கயிலை நாதனின் கருத்துக்கு இனியவளும், பெண்கள் அனைவருக்கும் அன்னையாக இருப்பவளும், எண்ணாகி எழுத்தாகி எழுதாத மறையாகி மறையின் முடிவாகி, பண்ணாகி, பண்ணின் சுவையாகி நின்ற இறைவியாக இருப்பவளும் இக்கும்மிப் பாடல் இனிது நிறைவேறக் காத்தல் செய்ய வேண்டும் என்பது கவிஞரின் வேண்டுதல். அன்னையானவர் நாவிலிருந்து அருள் பாலிக்க வேண்டும்; எல்லாவுயிரும் எல்லாப் பொருளும் அன்னையின் உயிரும் பொருளுமாக இருக்கின்றன. அவற்றில் கவிஞர் ஓர் அணுவின் உருவே ஆவர். அத்தகைய சிறுமையானவரை பெருமையுடைய அன்னை காத்தருளிக் கும்மிபாட உதவவேண்டும்.

மேலும் ஆவுடைநாதரின் அருகமரும் ஆவுடை நாயகி பேரில் கும்மி பாட அருள் செய்ய வேண்டும் என்று மாமுகத்து ஐயனான கணபதியையும் ஆறுமுகத்திறைவனான முருகனையும் ஆசிரியர் வேண்டுகிறார். முருகன் சக்திதேவி கொடுத்த வேலைப் பிடித்துச் சூரனைத் தடிந்தவன். எத்திசையும் புகழ் மணக்க எல்லா நலங்களையும் அருளத்தக்க ஆற்றலையுடையவன். அவனே பரிபூரணன். அவன் கும்மிபாட அருள் செய்யட்டும்.

வேதனின் நாவிலிருக்கும் கலைமகளும், இராகவனின் துணைவியான சீதாதேவியும், கரடிப் பெருமாளும், கருப்பண்ணனும், மாரிமுத்தம்மனும், சிங்கைப்பதி வாழும் அழகியநாயகி அம்மனும் வள்ளி தெய்வயானையம்மனும் இந்தக் கும்மி பாட உதவ வேண்டும்.

ஆவுடை நாயகியம்மனின் நாட்டுவளம்

அண்டர் நாயகியின் நாடு வளம் மிக்கதாக உள்ளது எங்கு பார்த்தாலும் சோலைகளால் நிறைந்தது. அங்கு மரங்கள் மிகவும் வளர்ந்து வானத்தை முட்டுவது போன்று தோன்றும். பூவும் காயும் கனியும் பூமியில் விழுந்தால் மாத்திரமே அது இன்ன மரமென்று சொல்ல முடியும். அந்த அளவுக்கு அவை உயரமாக உள்ளன.

காவில் கணக்கில்லாத எண்ணிக்கையில் சந்தனம், வில்வம், கருங்காலி, மூங்கில், ஆகிய மரங்கள் நிறைந்திருக்கின்றன. புன்னை, பூவரசு, புளி, நெல்லி ஆகிய மரங்கள் மின்னை, வன்னி, கடம்பு, கோங்கு போன்ற மரங்களுடன் நெருங்கிப் பிணைந்து காணப் படுகின்றன.

மாதம் மும்மாரி பொழியும். அன்னையின் அருளால் ஏழ் முகில்களும் நீர் வார்த்துச் செடி கொடிகளை வளர்த்து வரும். ஏரி, வாவி, ஓடை, தடாகம் ஆகியவை நீர் நிறைந்து காணப்படும்.

உலகில் இடையர், வலையர், மன்னர் ஆகியோர் பக்குவமாய் விதை விதைப்பர்.

பயிர் செய்தல்

ஆவணி மாதம் உழுது உரம் செய்வர். பின் நடவு செய்து பயிராக்குவர். மேலும் மொச்சை, தட்டப் பயிறு, உளுந்து, கேழ்வரகு ஆகியவற்றை விதைத்துப் பயிர் செய்வார். விளைவு எடுக்க எடுக்க அறுவடை செய்து மேலும் மேலும் பயிர் செய்யும் அளவுக்கு வளமுடைய நாடாக அது இருந்தது.

நட்ட நாற்று நன்றாக வளரும். களையெடுத்ததும் தூர் கட்டிப் பல்கும். பின் அவை மிக வளர்ந்து கதிர்கள் முழம் முழமாய் நீள செழிப்பாக இருக்கும்.

'எங்கும் பயிர்கள் விளைவில் பெருகி
எவர்க்கு மின்பம் தந்திடவே
தங்கும் மங்களம் எங்கும் பொலிய
தரணி மகிழக் காணீரே' (பா. 32)

என இறைவனைப் போற்றி இக்கும்மி இனிது முடிகிறது.

கும்மியைப் பற்றிய செய்திகள்

சிவயோகக் கும்மியைப் படிக்கும் போது ஒரு குழப்ப நிலையே தோன்றுகிறது. முதலில் ஒரு நிலையில் காப்பு பாடிய ஆசிரியர் பின்னரும் ஆவுடையம்மன் பேரில் காப்பு பாடும் பாடல் வருகிறது. சிவயோக வல்லியே ஆவுடைநாயகி என்றிருந்த போதிலும் இவ்வாறு இருமுறை வேறுவேறு பெயரில் காப்பு பாடுவது இக்கும்மிக்கு இரட்டை உரு கொடுப்பது போன்று தோன்றுகிறது. தனியாக 'ஆவுடைநாயகி கும்மி' என்ற நூல் இருப்பதும் இங்கு சிந்திப்பதற்கு உரியது.

இந்த நூலில் வேற்று நூல் பாடல்கள் கலந்து காணப்படுகிறதோ என்ற ஐயமும் ஏற்படுகிறது. மேலும் கிடைத்துள்ள நூல் முழுமையுடையதுதானா என்ற எண்ணமும் தோன்றுகிறது. ஒரு கும்மி நூலாக இத்தனைப் பாடலும் சுவடியுருவில் உள்ளன.

இக்கும்மிப் பாடல் தரும் சோலை விளக்கமும் பயிர்வளமும் சிறப்பாகக் காணப்படுகின்றன. அன்னையின் அருள் சிறப்பு அதிகம் பேசப் படாதிருப்பது வியப்பாக உள்ளது. இந்த நூல் முழுமையற்றது என்று கருத இதுவும் ஒரு முக்கிய காரணம் ஆகும். கிடைத்துள்ள பாடல்களைக் கொண்டு இவ்வளவுதான் கூற இயலும்.

சிவயோக வல்லிக் கும்மி

(நேரிசை வெண்பா)

1. சீரார் மிதுலைச் சிவயோக வல்லிதன்மேல்
பேரார்ந்த கொம்மிதனைப் பேசுதற்கு—நேராக
வந்தருள்பொய் யாமொழியின் வாசகத்தை மாமுகத்தாய்
தந்தருள்செய் நல்வாக்க தாய்.

2. ஆறுபடை வீட்டிலும்நின் னன்பரடி யார்மனத்தும்
ஏறுமயில் வாகனத்து மேயிருப்பாய்—நீறுபுனை
மல்லைக் கவிஞனான் வங்கிசத் தால்விடுத்த
சொல்லையா கொம்மிக்குச் சொல்.

3. இந்தமிது லைப்பதியை யென்றுமே காவல்கொள்
ஐந்தருவே காரிவென்ற அப்பனே—செந்தமிழால்
கொம்மியொன்று கூறுமென்றார் கூறுவாயே காப்பாய்
ரம்மியமாய் வந்தருளிந் நாள்.

---

1. சீரார்—சிறப்புமிக்க
பேரார்ந்த—சிறப்புடைய; புகழ் மிக்க
மாமுகத்தாய்—யானைமுகக் கணபதியே

2. ஆறுபடை வீடு—முருகப் பெருமானின் இருப்பிடங்கள்
நீறுபுனை—திருநீறணியும்
மல்லைக்கவிஞன்—மல்லை நகரைச் சேர்ந்த கவிஞர்
வங்கிசம்—வமிசம்

3. ஐந்தரு—ஐந்து மரங்கள்; ஐந்தருநாதன் இந்திரன்
காரி—நஞ்சு; சனி
ரம்மியம்—மேன்மை; சிறப்பு

4. தந்தைகழ லைத்தடி ந்த தண்டிகே சன்றாளைச்
சிந்தைசெய்து வல்லிதும்மி செப்பிடவே—வந்தருள்செய்
வாயே மனமகிழ் வாயே முனம்வரு
வாயே இனிதருள்வா யே.

(விருத்தம்)

5. கண்ணே கண்ணிற் கருமணியே
கயிலைக் கரசன் கருத்துவக்கும்
பெண்ணே பெண்கட் கனையென்ற
பெருமை படைத்த பெருந்தேவே
எண்ணே யெழுத்தே எழுதாத
இருக்கே இருக்கின் முடிவுரைத்த
பண்ணே பண்ணின் சுவையறிந்த
பாவாய் காவாய் பாடுதற்கே.

6. அழகியதே வித்தாய் யடிமை எனைக்கொண்டாய்
பழகியசெல் வத்தையும் பாலித்தாய்—இளகிமனம்
என்கான் முளைபாட எப்போதும் நாவிருந்தாய்
அன்பாகப் பாவைத் தருள்.

7. எவ்வுயிரு நின்னுயிரே எப்பொருளுநின் பொருளே
அவ்வுயிரில் யானோர் அணுவுருவே—இவ்வுயிர்தான்
இங்கிருக்க நின்பாகத் தேயிருக்கும் ஈஸ்வரியென்
பங்கிருக்க கொம்மி பகர்.

---

4. கடிந்த—வெட்டிய
தண்டிகேசன்—சண்டிகேசுவர நாயனார்
(விளக்கவுரை காண்க)

5. பெண்கட்கனையென்ற—பெண்களுக்கு அன்னை என்ற
எழுதாத இருக்கே—எழுதப்படாத ரிக் வேதமே

6. பாலித்தல்—அருள் செய்தல்
பாவைத்தருள்—பாவினை நவில வைத்து அருள்செய்

7. பங்கிருக்க—உதவியாக இருக்க

கட்டளைக் கலித்துறை

8. ஆவுடை நாத ரிடப்பாகங்
கொண்டவென் அன்னை யின்மேல்
நாவுடை யோர்படிக் கக்கொம்மி
கொட்டடி நானி யற்றச்
சேவிடை யேயுவந் தாட்கொளுமீசர்
தினமும் கண்டீர்
தாவிடை யென்தனுக்கே பிரம நாவுறை
தாயவளே.

9. சீரார் மிதுலைப் பதியில் அரசாட்சி
செய்திடும் ஆவுடை நாதரிடம்
பேரா திருக்கின்ற ஆவுடை நாயகி
பேராலிந்தக் கும்மி பேசிடவே
காரானை மாமுகத் தையன் பொய்யாமொழிக்
காரண னார்பதத் தைத்துதித்து
நேராக யிக்கொம்மி சொல்லுதற்கே இங்கு
நேராக வந்துநிறை பெறச்செய்வீர்.

10. ஆறு முகத்திறை முருகா யென்தன்
ஆகந்தனிலு நிறை யிருகால்
ஏறு மயில்பரி வாகனனே நிறை
வேற இக்கும்மி யருள்குகனே.

---

8. தாவிடை—பற்றுக் கோட்டை நாடும்; இளைப்பாறுதல் நாடும்

9. பேராதிருக்கும்—நீங்காதிருக்கும்
காரானை—கரிய யானை

10. கடிந்தவன்—எதிர்த்து இல்லாமல் செய்தவன்
சோதி—ஒளி
பூரணம்—நிறைவு

11. சத்தி தரும்வேல் பிடித்தவனே
சத்தான சொற்றமிழ் நடித்தவனே
வெத்தி கொண்டசூர் தடிந்தவனே—தீரா
வெம்பகை தன்னைக் கடிந்தவனே
எத்திசையும் புகழ் பெற்றவனே சொல
எந்தன் மனதுக்குள் நின்றவனே
புத்தியிற் சென்றிதைச் சொல்பவனே சோதிப்
பூரண மாக்கியும் கொள்பவனே.

12. அண்டர் துதிக்கின்ற ஆவுடை நாயகி
அம்பிகை மேற்கும்மி யான்பாட
வெண்டாமரை தன்னில் வீற்றி ருப்பாள்
வேதன் மென்னாவில் தோற்றிருப்பாள்

13. ஆயிரம் வேதத்தைச் சிக்கறுத்தோன்—தேவர்
அடங்கலும் வென்று கொக்கரித்தோன்
மாயிரத் திற்கு வகைசெய் ராகவன்
மாதென்ற சீதையுங் காப்பாமே.

14. ஆங்காரத்திற் செனி வீரபத் திரனுடன்
அய்யன் கரடியான் காப்பாமே!
வாங்காய் தகையரி வாள்பிடித்த நல்ல
வரதன் கருப்பண்ணன் காப்பாமே.

---

12. அண்டர்—வானவர்
வேதன்—நான்முகன்

13. சிக்கறுத்தல்—குற்றம் களைதல்
அடங்கல்—கூட்டம்
கொக்கரித்தல்—ஆர்ப்பரித்தல்

14. வரதன்—அரன்; வரமருள்வோன்
கருப்பண்ணன்—கருப்பண்ணசாமி (தெய்வம்)

15. அன்னை யென்றுவந்து சீரணியூர் வளர்ந்து
ஆதிமானே தங்கையாக வந்தாள்
தன்னைத் தனக்கு நிகரான மாரிமுத்தென்ற
தாயின் பதத்தைப் பணிவேனே

16. தாசரச் சிங்கைப்பதி வாழுமழ கியநாயகி
தன்னை யென்னாளும் மறவேனே
ராசர்கள் மெச்சிய சிங்கை அங்காளியின்
நற்பிர தானிக் கருப்பருடன்
நேச மதாகிய முன்னோடித் தெய்வத்தை
நெஞ்சிற் துதித்துப் பணிவேனே
வாசக் கடம்பணி குன்றக் குமரேசர்
வள்ளி தெய்வானையுங் காப்பாமே.

17. மங்கள மாகிய ஆவுடை நாயகி
மாதங்கி மேற்கும்மி யான்பாட
எங்கள் குலதெய்வந் தில்லை நடராசர்
எப்போதுங் காப்பாய் இருந்திடுவார்.

18. பன்னை வளருஞ் சிறு[வால] வயலைப்
படைத்த பராசக்தி பாடலுக்கே
கொன்னை யூர்வர்ழ் கின்றமா முத்தன்னை
கோகன கமுகங் காப்பாமே.

---

15. சீரணியூர்—சீரணியம்மன் இருக்கும் ஊர்

16. தாசர்—அடியார்
மெச்சிய——போற்றிய
முன்னோடித் தெய்வம்—ஏவலுக்குதவும் சிறு தெய்வம்
கடம்பணி—கடம்பமாலையணிந்த
குன்றம்—மலை

17. மாதங்கி—காளி

18. பன்னை—ஒரு செடி
கொன்னையூர்—ஓர் ஊர்
கோகனகம்—செந்தாமரை

19. அண்ட சராசர மீன்ற பராசக்தி
ஆவுடை நாயகி அன்னை தன்மேல்
தண்டமிழாய் கொம்மி யான்சொலவே கற்றோர்
தன்கவி யென்னச் சகிப்பீரே.

20. ஏது பிழைக ளிருந்தாலுஞ் சக்தி
என்பவள் கொம்மியீ தாதலினால்
வாதுகள் செய்வாரோ தன்குதலைச் சொற்கு
வாசித் தறிந்தறி வாகரத்தோர்.

21. ஆயிரங் கண்பெற்ற இந்திர னுங்குரு
டாகப் பிறவியில் ஆனவன்தான்
காயிர சூரியன் செல்லும் வழிதனைக்
கைக்கோல் பிடித்தவன் காட்டுதலாம்.

22. மின்னற் கிணையாக மின்னி மறைகின்ற
மின்மினிப் பூச்சிக் கிணையாக
நன்னய மாய்க்கவி கற்ற புலவர்முன்
நான்கொம்மி சொலத்துணிந் ததுதான்
அன்ன நடைக்கிணை யாகுவ மென்றே
அனேக மடவார் நடப்பதுபோல்
இன்னகவி சொலவாசை யுற்றேன் வாணர்
என்பவ ரின்பமா யெண்ணுவீரே.

---

19. சகித்தல்—பொறுத்தல்

20. வாதுகள்—வழக்குகள்; வாதமிடுதல்
குதலை—மழலை; அறிவில்லாச் சொல்
ஆகரத்தோர்—இருப்பிடமானவர்கள்

21. காயிர—காய்கிற (வழக்கு மொழி)
கைக்கோல்—கையிலிருக்கும் ஊன்று கோல்
அல்லது எழுது கோல்

22. நன்னயமாய்—நல்ல முறையாய்
மடவார்—பெண்கள்
வாணர்—கவிவாணர்

23. அன்னையாம் ஆவுடை நாயகித் தாய்நாட்
டணியினை அன்பாய் அறைவதற்கே
பின்னை யென்னாட்டை யிதற்கிணை தானென்று
பேசப் படுமோ பிழையாமோ.

24. ஒன்று மறிந்திலேன் என்னைக் குமரய்யன்
ஓதென்றா ராதலினா லுரைத்தேன்
சென்று வான்மட்டும் வளர்ந்திருக்குஞ் சோலை
[சீர்சிறப்பைச் சொல்லவும் படுமோ !]

25. பூவுடன் காய்கனி பூமியில் வீழ்ந்திடில்
புகல லாம்மரத் தின்பெயரை
காவு நிறைந்திட்ட சந்தனம் வில்வமும்
கருங்காலி மூங்கிலும் கணக்கிலவே.

26. புன்னையும் பூவரசும் புளியுடன் நெல்லியும்
பொருந்து மந்தப் பொழில்தனிலே
மின்னையுடன் வன்னியுங் கடம்புங் கோங்கும்
மிகுந்து நெருக்கமா யிருக்கும்.

27. மாதம் மும்மாரி பொழிந்திடுமா மெங்கள்
வமிசங் காத்திடும் மாதாவின்
பாதம் பணிந்திட ஆசைகொண் டேழ்முகில்
பண்ணைச் செடிகொடியை வளர்க்கும்,

---

23. தாட்டாணி—நாட்டு வளம்

24 குமரய்யன்—முருகன்
ஓதென்றார்—சொல்லென்றார்

25. புகலலாம்—சொல்லலாம்
காவு—சோலை

26. பொழில்—சோலை
மின்னை—ஓர் மரம்

27. ஏழ்முகில்—(சப்தமேகம்) ஏழு மேகங்கள்

28. ஏரிகள் வாவிகள் ஓடை தடாகங்கள்
எங்கினும் நீர்நிறை வாயிருக்கும்
பாரி லிடையர் வலையர்கள் மன்னரும்
பக்குவ காலம்விரை தெளித்து.

29. ஆவணி மாசத்தி லேயுழு தேயுரம்
ஆனநிலத் தைநடவு செய்துந்
தாவணி கட்டிப் புரு........லால்........யந்
தன்னுடன் மொச்சைதட் டப்பயறும்

30. உளுந்து கேழ்வரகு நாத்தும் போட்டுநன்றாய்
உழவு செய்துயர்ந் தவுடன்
அளந்து நன்றாய்ப் பயிறடித் துப்பலன்
ஆனவுடனே மறுபடியறுத் தடித்தும்

31. கொண்டிடு களஞ்சியஞ் சேர்த்து வயல்பயிர்
கொண்ட வுடன்களை யும்பறித்து
மண்டியுத் தாவினைப் போலத்தா ருங்கட்டி
வளர்ந்து கதிர்முழ மாய்நீண்டு

32. எங்கும் பயிர்கள் விளைவில் பெருகி
எவர்க்கு மின்பம் தந்திடவே
தங்கும் மங்களம் எங்கும் பொலிய
தரணி மகிழக் காணிரே.

---

28. தடாகம்—குளம்; பொய்கை

29. தாவணி—மாட்டைப் பிணிக்கும் தாம்பு

31. மண்டியும்—நெருங்கியும்
தாருங்கட்டி—பயிர் பலவாக நெருங்கி முளைத்தல்

31. பொலிய—சிறக்க
தரணி—உலகம்

(கலித்துறை)

33. தீவிகை தீபஞ் சுடரொளி யென்றுதினம் துதித்தால்
ஆவியை மட்டு மகலாது மங்கள மானதனால்
தூவிய புட்பத் துடன்திருச் சூர்ணத்துதி யடக்காய்
நாவினிற் சொல்லிப் பணிவாற் கெந்நாளும்
நரகில்லையே

34. பாருதி பாற்கரனே போற்றி
பதங்க ளுதித்தோன் போற்றி
தாரணி செங்கதிரோன் போற்றி
தானன் சான்றோர் போற்றி

35. அரிபானு அவரே போற்றி
அண்டரொழி கனவரிமாப் போற்றி
இருள்வலி சவிதா போற்றி
எல்லையிலா சுடரே போற்றி.

---

33. தீவிகை—தீபிகை; விளக்கு
ஆவியிறுமட்டும்—இறப்பது வரை
சூர்ணம்—குங்கிலியம்
துதியடக்காய்—அடக்கமாய்த் துதித்தல்

34. பாருதி—சூரியன்
தாரணி—மாலையணிந்த
தானன்—மேலோர்
பாற்கரன்—தீ; ஆதித்தன் (பாஸ்கரன்)

35. அரிபானு—சூரிய நாராயணன்
அரிமா—சிங்கம்
சவிதா—சூரியன்

சீரணியம்மன் கும்மி

சீரணியம்மன்

சீரணியம்மன் கும்மியானது சீரணி என்ற ஊரிலுள்ள அம்மனைப் பற்றிப் பாடுவது என்பதை இந்தப் பெயரிலிருந்து அறியலாம். இந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது என்பதைக் கும்மிப் பாடலிலிருந்து தெரிய முடிகிறது. ஆனால் அந்த மாவட்டத்தில் இது எந்த ஊர் என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை.

சிவகங்கைத் தாலுகாவில் செவாஊரணி (Sevaoorani) என்ற ஊரும் திருவாடனைத் தாலுகாவில் சிறுநலூர் (Sirunallur) என்ற ஊரும் சிறிது பெயர் தொடர்புடைய ஊர்களாக உள்ளன. ஆனால் அவை இரண்டும் இத்தகைய கும்மிப்பாடல் பாடுவதற்கு ஒத்தனவாகத் தோன்றவில்லை. ஒருவேளை இவ்வூர் குருவிக்கொண்டான் பட்டியை அடுத்த் கீரணியூராக இருக்கலாமோ என்ற எண்ணம் எழுகிறது. இங்கு அம்மன் கோயில் உண்டு. இங்குச் சித்திரை மாதம் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

கும்மிப்பாடலில் ஒரு இடத்திலும் கீரணியூர் என்ற சொல் வரவில்லை. ஆனால் 'கீரணி' தான் 'சீரணி' என்று தவறாகச் சுவடியில் குறிக்கப்பட்டு இருப்பதாகக் கருதலாம். முதற் பாடலில்,

'சீர்பொ ருந்திய சீர ணி யூர்வளர்

தேவி முத்துமாரி யம்மன் மேல்'

என்று வருவதிலுள்ள மோனைத் தொடர்பைப் பார்த்தால் அது 'சீரணியூராக'த்தான் இருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது. சீரணியம்மனைக் குறிப்பிடும்போது,

'பூமதி கல்வாசல் நாடதில் மேவும்
புராதனி மாரிமுத் தம்மன்' (பா. 9)

என்று கூறியிருப்பதனால் சீரணியூர் கல்வாசல் நாட்டைச் சேர்ந்ததாகத்தான் இருக்கவேண்டும். 'இளையாற்றங் குடியிருக்கும் கல்வாயில்நாடு' என்ற ஒரு பாடல் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதை நோக்கினால் இளையாற்றங்குடிக்குப் பக்கத்தில் சீரணியூர் இருக்கலாம். அந்த ஊரிலுள்ள மாரிமுத்தம்மனே சீரணியம்மன் என்று அழைக்கப்படுகிறாள்.

இந்த இறைவி காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாட்டுக்கு ஒரு மன்னனின் அழைப்பின் பேரில் வந்தவளென்று கும்மிப் பாடல் கூறுகிறது.

காவிரிப் பூம்பட் டினத்தி லிருந்தொரு
காவலன் மாற னழைத்துவர
பூவிரிப் புனல்மிகுப் பாண்டிய நாட்டினிற்
பொங்கத் துடன்வந் தமர்ந்தாளே (பா. 59)

என்ற பாடலின் வாயிலாக இதனை அறியலாம். அன்போடு வந்து பணிவோடு வணங்கும் பக்தர் அனைவருக்கும் அருள் செய்யும் தேவியாகச் சீரணியூர் முத்தம்மனைக் கும்மிப் பாடல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர்

சீரணியம்மன் கும்மியின் ஆசிரியர் யாரென்பது பற்றித் தெளிவாக அறிய முடியவில்லை. இந்த நூல் எழுந்த காலத்தில் கல்வாசல் நாட்டைப் பெரிய உடையாத்தேவன் என்பார் ஆண்டிருக்க வேண்டும். இவரைப் பற்றிக் கும்மிப் பாடல் குறிப்பிடும் போது,

'மங்காத நீதி பதிக்கே வுரிய
வல்லபி பெரியவுடை யாத்தேவன்
சிங்காசனத் திலிருந் தரசு செய்யச்
செங்கோல் கொடுத்த மகமாயி' (பா. 55)

என்று கூறுகிறது. இவருடைய காலத்தைத் தெளிவாக அறிய முடியவில்லை. இதோடு,

'நன்மை யதான சிவஞானந் தொழுதிடும்
நாற்பத்து முக்கோண யெந்திரத்துள்

சின்மய மானமுத்து மாரியம்மனைச்

சேவித்துச் கும்மியடியுங்கடி' (பா. 53)

என்ற குறிப்பு இடையில் இடம் பெறுகின்றது. இதில் பெயர் சுட்டப்பெறும் சிவஞானம் என்பார் இந்தக் கும்மிப்பாடலின் ஆசிரியராக இருக்கலாம். இதனை மேலும் சிந்திக்க வேண்டும்.

சீரணியம்மன் கும்மிப் பாடல் கும்மிப் பெண்களைப் பற்றியும் சீரணியம்மனைப் பற்றியும் சிறப்பான விளக்கம் தருகின்றது. அம்மனை எவ்வாறு மக்கள் வழிபடுகின்றனர் என்றும் அம்மன் எவ்வாறு அருள் செய்கின்றாள் என்றும் கூறப் பெறுகிறது. முதன் முதலில் பிள்ளையார், கைலாசநாதர், நித்யகல்யாணி, சுப்பிரமணியர், ஐயனார், சீதரனார், கருப்பண்ணர், நாமகள், முன்னோடிகள், பரிவாரங்கள் அனைவருக்கும் காப்புப் பாடி ஆசிரியர் நூலைத் தொடங்குகிறார்.

சீரணியம்மனைப் போற்றிக் கும்மியடிப்பதற்காகக் கும்மிப் பெண்கள் அழைக்கப்படுகிறார்கள். காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, அபிராமி, சிவகாமி, கல்யாணி, நாரணி ஆகிய ஏழு பெண்களும் பெயர் சொல்லிக் கூப்பிடப்படுகிறார்கள். பின்னர் 'நீங்கள் ஏழெட்டுப் பெண்களும் வாருங்கடி' என்று கூறப்படுகிறது. அடுத்த பாடலில்,

'இங்கித வள்ளி தெய்வயா னையம்மை

இந்திராணி சந்திர மதிகோதை

உங்கள் குலக்கொடி லெட்சுமி யுங்கூட

ஒன்பது பெண்களும்வா ருங்கோடி' (பா. 14)

என்று ஒன்பது பெண்களைக் கூப்பிடுவதாக உள்ளது. அடுத்த பாடலில் 'பத்துப் பெண்களும் வாருங்கோடி' என்று திரும்பவும் கூறப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் போது எத்தனைப் பெண்கள் கும்மியடிக்க வேண்டும் என்ற எண்ணிக்கை வரையறை இல்லாதது போன்று தோன்றுகிறது. 'ஒன்பது' என்ற எண் பல கும்மிகளில் வந்துள்ளதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

மாத ரெல்லோரும் வாருங்கடி—நம்ம

மங்களப் பெண்களைச் சேருங்கடி' (பா. 16)

என்ற அடியை நோக்கினால் மங்களப் பெண்களே கும்மியடிக்கத் தகுதியுடையவர்கள் என்பது மிகத் தெளிவாகத் தோன்றுகிறது.

கும்மிப் பெண்கள் மஞ்சள் குளித்துச் செம்பட்டு உடுத்தி இருக்க வேண்டும். கூந்தலில் மலர் சூடி நெற்றியில் நீறு பூசிப் பொட்டு இட்டிருக்க வேண்டும். கண்ணுக்கு மை தீட்டி அழகு செய்திருக்க வேண்டும். அடுத்து, பெண்கள் அணிந்திருக்கும் அணிகலன்களைக் கும்மிப் பாடல் அடுக்கிக் கூறுகிறது.

காதில் முருகு, தோடு, சிமிக்கி, கொப்பு ஆகிய அணிகள் உள்ளன. மூக்கில் நந்து, பில்லாக்கு, மூக்குத்தி அணிந்துள்ளனர். கழுத்தில் அட்டியல், முத்தாரம், இரத்ன வடம், பதக்கம் ஆகியவை இருந்தன. மோகன மாலை மார்பில் புரண்டது. கையில் கங்கணம், வைரக்கடயம் காப்பு ஆகியவை உள்ளன. தோளில் வலையமும் விரலில் கணையாழியும், அரையில் மேகலை, ஒட்டியாணம் ஆகிய அணிகளும் காணப்பட்டன. காலில் பாடகம், தண்டை, சிலம்பு, கொலுசு ஆகியவை அழகாக அணியப் பெற்றிருந்தன. இத்தனை அணிகலன்களுடன் அழகுக் கோலம் பூண்டு கும்மிப் பெண்கள் வந்தார்கள்.

சீரணியம்மனின் அழகுத் தோற்றம்

சீரணியூரிலுள்ள மாரிமுத்தம்மன் செயக்கிரீடம் அணிந்துள்ளாள். அவள் நுதலில் செந்தூரப் பொட்டு இருந்தது. மாணிக்கச் சுட்டி தரித்துள்ளாள். காதில் இரத்தின தாடங்கம், வச்சிரத்தோடு, சங்கு ஆகியவற்றை அணிந்திருக்கிறாள். தாமரை போன்ற முகத்தையும், பவளம் போன்ற நிறத்தையும், பிறைமதி போன்ற வளைந்த பற்களையும் உடையவள். மூக்குத்தியை அழகாக அணிந்துள்ளாள். கழுத்து கமுகு போன்று இருக்கிறது. தோள் பசுமையான மூங்கில் போன்று அமைந்துள்ளது.

அன்னை கையில் திரிசூலம் ஏந்தியுள்ளாள். மார்பில் சந்தனம் அணிந்துள்ளாள். மாலையும் கூடவே புரண்டது. ஆலிலை போன்ற வயிற்றை உடைய மாரிமுத்தம்மன் இடையில் மேகலையும் தங்க ஒட்டியாணமும் அணிந்துள்ளாள்.

வாழைத் தண்டு போன்ற தொடையும், மன்மதனின் மலரம்பு போன்ற பதமும் உடையவள். நான்முகனை விதியின் நாயகன் என்று கூறுவர். அவனுடைய விதியையே வெல்லும் ஆற்றல் மிக்கது அன்னையின் திருப்பாதம். சீரணியூருக்கு வந்து பணிவோர் அனைவருக்கும் அன்னையின் அருள் கிடைக்கும்.

சீரணியூரின் சிறப்பு

கல்வாசல் நாட்டிலுள்ள சீரணியூர் சிறப்பு மிகக் கொண்ட பழமையான ஊராகும். இங்கு நாமகளும் பூமகளும் இணைந்து விளையாடுவார். இந்த ஊரிலே,

'கூடமும் மன்னும் மணிமுகப் புந்திருக்
கொம்பனை யாருறை யந்தரங்க
மாடமும் தோரண வாயிலும் மருங்கு
மகிழ்ந்திடுஞ் சீரணி யூர்தனிலே' (பா. 33)

இவைதவிர அங்கு வாவி, கோபுர வாசல், சித்திர மண்டபம், மாமதில், வணங்குவதற்குத் தங்கத்தினால் செய்யப்பட்ட ஆலயம் உண்டு. அந்த இடத்தில், நான்முகன், திருமால், கணபதி, வேலன், சிவன், வயிரவர் ஐயனார் ஆகியோர் முன்னோடித் தெய்வங்களாகச் சூழ்ந்து இருப்பர்.

சீரணியம்மனை வணங்குவோர்

தேவரும் இவ்வுலக மானிடரும் சீரணியம்மனை வணங்கி நிற்பர். கவிவாணர் அம்மனைப் பாடிப் புகழ்வர். அரம்பை அடப்பை சேவை செய்ய, திலோத்தமை காளாஞ்சி ஏந்தி வர, பணிசெய்யும் பாங்கியர் விசிறி வீசுவர். சந்திர வட்டக் குடை, பாவாடை, குஞ்சம், சந்திரகாவி, சுருட்டி ஆகியவற்றைப் பணிமாதர் எடுத்து வருவர். தொண்டர்கள் தீவட்டி பிடித்து நிற்பர். நாதசுரம், மணிமுரசு, எக்காளம், வாங்கா, போன்ற வாத்திய இசைக் கருவிகள் பொங்கும் மாக்கடல் போன்று முழங்கும்.

ஏவற்கு உரிய ஏழுமாதர்களும் வணங்கி நிற்கின்றனர். தமிழன்னையும் பூமாதேவியும் அன்னை மாரிமுத்தம்மனின் முன்னர் இணங்கி நிற்கிறார்கள். பூத கணங்கள் ஒருங்கு கூடிப் போற்றிப் பணிகின்றனர். அதோடு வேண்டிய குற்றேவல்களை விரும்பிச் செய்கிறார்கள். தும்புரு நாரதர் இசை நுணுக்கத்துடன் கின்னரி வீணைகளை வாசித்து அன்னையின் புகழைப் பாடு கின்றனர். தாளக் கருவிகளான மத்தளம் முதலியவை முழங்க நடன மாதர் ஆடுகிறார்கள்.

பகைவரை வெட்டி வீழ்த்தும் ஆற்றலுடைய வீரர்கள் இசை கூட்டுகின்றனர். பல்வேறு திசைகளில் வென்று அடக்கப்பட்ட பகை மன்னர் இங்கு வந்து திறை செலுத்துகின்றனர். கட்டியபங் காரன் இடிமுழக்கம் போன்று அன்னையின் வருகையினைக்

கட்டியங்கூறி அனைவருக்கும் அறிவிக்கிறான். இத்தகைய சிறப்புகளுடன் ஒய்யாரமாக வீற்றிருக்கும் அன்னையின் முன் கும்மிப் பெண்களை ஆடிப்பாடும்படி விரும்புகின்றனர்.

> 'பீடுயர் மண்டபந் தன்னில் நவமணிப்
> பீடிகை மீது கொலுவிருக்குஞ்
> சேடுயர் சுந்தர மார்முத் தம்மனைச்
> சேவித்துக் கும்மி யடியுங்கடி' (பா. 44)

என்பது பாடல். சீரணியம்மன் மகிடாசுரனை வென்றவள். அவளுடைய வாயிலைக் காக்கும் கருப்பண்ண சாமியை வணங்கிக் கும்மி அடிக்க வேண்டும் என்பது முறை.

கும்மியடிக்கும் பெண்களின் நிலை

ஆடிப்பாடும் அழகு மிக்கக் கும்மிப் பெண்களின் நிலை அடுத்து விளக்கப்படுகிறது. அவர்களுடைய காலில் அணியப்பெற்றுள்ள பாடகம், தண்டை ஆகியவை கலகலவென ஒலிக்கின்றன. இடையில் அணிந்துள்ள மேகலை துலங்க கையிலுள்ள தங்க வளையல் குலுங்குகிறது. பூசப் பெற்றுள்ள மான்மதச் சாந்து கலங்கிக் கரைகிறது.

மார்பு குலுங்க இடை துவண்டு ஆடுகிறது. பவள முத்து மாலைகளும் மார்பிலும் புயத்திலுமாக மாறி மாறி விழுந்தாடுகிறது. விழிகள் அங்கும் இங்கும் ஓடுகின்றன. காதணியானது தோளில் தோய்ந்து ஆடுகிறது. கூந்தலில் வண்டுகள் சூழ்ந்து ஆடுகின்றன. உடம்பிலுள்ள அணிகலன்கள் ஆடப் பூசிய மஞ்சள் கரைந்து ஓடுகின்றது. வியர்வை பாய்ந்து வழிகிறது. கும்மிப் பெண்கள் ஆடிப்பாடுகின்ற போது இவ்வாறு நடைபெறுகின்றன.

சீரணியம்மனின் பெயர்கள்

மாரிமுத்தம்மனாக விளங்கும் சீரணியூர் அம்மனுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவற்றுள் ஆதி, அனாதி, வராகி, புராதனி, யாமளை, கோமளை ஆரணங்கு, சோதி, பராபரை, நீலி, இடாகினி, சூலி, கபாலி, மகாமாயி, ஆரணி, பூரணி, காரணி, நாரணி, அந்தரி, சுந்தரி, அம்பிகை ஆகிய பெயர்களை இக்கும்மிப்பாடல் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

சீரணியம்மனின் சிறப்பு

சீரணியம்மன் நாற்பத்து முக்கோணச் சக்தி இயந்திரத்தில் சின்மயமாகி இருக்கின்றாள். அதைக் கொண்டு அவளைத் தொழுதல் வேண்டும். அவள் மெய்யன்பர்களின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறாள். அவள் பெரிய உடையாத் தேவனுக்குக் கல்வாசல் நாட்டை ஆட்சி செய்வதற்கு உரிய செங்கோலைக் கொடுத்தவள். அவள் அன்பரின் பூசையினை ஏற்றுக் கொள்வாள். அவர்களை அருளோடு காப்பாற்றுவாள். கல்வாசல் நாட்டு மக்களை அன்போடும் அருளோடும் அரவணைத்துக் காப்பாள். அவளே மகமாயியாக விளங்கி அனைவருக்கும் அருள்பாலிக்கிறாள்.

பூசனை முறை

சீரணியம்மனை அன்பர்கள் ஆர்வமுடன் வந்து பணிவோடு வணங்குவர். தினமும் பூசனைகள் நடைபெறும்.

'என்று மபிடேக மென்றும் நைமித்திய
மென்றுந் திருவிளக் கென்றுமலர்
என்றுந் திருப்பணி யென்றும் பொற்பணி
யென்றுந் திருநாள் நடத்தி வைப்பர்' (பா. 58)

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மாரிமுத்தம்மனை ஒரு பாண்டியன் சீரணியூருக்கு அழைத்து வந்துள்ளதாகக் கும்மிப் பாடல் கூறுகிறது. (பா 59) அவள் இளசை மாநகரில் அமர்ந்து வணிகர்களுக்கு அருள் செய்கிறாள் தாயென்று யார் வந்தாலும் அவளுடைய அருள் உண்டு. அனைவரையும் தன்னுடைய மக்களாக மதிப்பவள். எல்லாருடைய பூசனைகளையும் ஏற்று மகிழ்வாள்.

நோயகற்றும் தன்மை

மாரிமுத்தம்மன் எத்தகைய பிணிகளையும் தீர்க்கும் அரிய ஆற்றலுடையவள்.

'நாலா யிரத்துநா னூற்றுநாற் பத்தெட்டு
நச்சுப் பிணிக ளணுகாமல்
பாலா யிறகும் வெண்ணீறுந் தந்தவை
பஞ்சு பஞ்சாக்கு மகாமாயி' (பா. 64)

அம்மை நோய், செய்வினை, பில்லி, சூனியம், வஞ்சனை செய்தல் ஏவல், பேய் பிடித்தல் போன்ற தீமைகள் அணுகாமல் காக்கும் திறமையுடையவள்.

திருவிழா எடுத்தல்

அம்மனுக்குத் திருவிழாவை ஆதி வாரத்தில் நடத்துவர். அன்று முதல் எட்டு நாட்கள் வரை அம்மன் வீதி வலம் வந்து அன்பர்களுக்கு அருள் செய்வாள்.

'ஒன்பதாம் நாளில் பையனொருத்தனை
ஓங்கு செடில்குத்தி வீதிசுத்தி
அன்பதாய் வாற விசேட சிங்கார
அதிசயம் பாரடிதோழிப்பெண்ணே' (பா. 68)

பின் அன்னைக்குப் பொங்கலிட்டு பூசனை நடத்துவர். அவளுடைய சன்னதியின் முன்னர் கடாய் பலி கொடுப்பர். வெட்டிய ஆட்டுத்தலை கோழித்தலைகளை முன்புறமுள்ள பந்தலில் குவித்து வைப்பர். அவற்றிலிருந்து குருதி கொட்டிக் கொண்டிருக்கும். மக்கள் அனைவரும் கூடிப் பொங்கலிடும்போது எழுகின்ற புகைப்படலமானது கடலில் இறங்கிய மேகமானது தாழ்ந்து வளைந்து பணிவது போன்று தோன்றுகிறது.

துள்ளும் மா, பானகம், மஞ்சள் நீர், தோசை, வடை, அவல் மோதகம் ஆகியவற்றை ஆவலுடன் படைப்பர். அவர்களுடைய உள்ளத்திலும் இல்லத்திலும் நிறைவு இருக்கும். அன்னையானவள் வேப்பந் தளிரும் வெண்ணீறும் தந்து வினைகளைப் போக்கிவிடும் ஆற்றலுடையவள். வெப்பு நோய் அண்டாது தடுப்பாள். வேப்பந் தழையாடையினைப் புனைந்து அன்னையைப் பணிவர். எப பொழுது அன்னையிடம் சென்றாலும் அவளுடைய அருள் அனைவருக்கும் உண்டு.

அம்மனின் அருளாற்றல்

கையகத்தே காணிக்கை கொண்டு மக்கள் அணிஅணிபாக வருகின்றனர். அவர்கள் அனைவரையும் அருள்காட்டி அரவணைக்கும் அன்னையாகச் சீரணியம்மன் விளங்குகிறாள்.

'நெய்யினால் மாவிளக் கேற்றிடு வோர்கள்
நினைத்த வரங்கள் கொடுத்திடுவாள்
மெய்யினால் கும்பிட்டுத் தெண்டம் பண்ணுவோர்
வெய்ய வினையைத் தீர்த்திடுவாள்' (பா. 77)

அவள் கோயிலைச் சுற்றி உடலால் உருண்டு வருவோருக்கு அருங்காட்சி கொடுத்து அருள்வாள். சிலாகைக் கயிறு குத்தித்

துள்ளுவோர்களுடைய உள்ளத்தில் நிறைந்திருப்பாள். மஞ்சள் பாவடையும் சிலம்பும் அணிந்து வரும் அன்பர்களுக்கு உதவும் அன்புடையவள். மஞ்சள் நீர் குடிப்பாள். இந்த மாநிலமெங்கும் தன் ஆற்றலால் காத்திடுவாள்.

கல்வாசல் நாட்டுப்பாளையக்காரர்

சீரணியம்மனை விழாவெடுத்து பணிந்து வணங்கும் கல்வாசல் நாட்டுப் பாளையக்காரரைப் பற்றிய சில செய்திகள் இந்தக் கும்மிப் பாடலில் இடம்பெற்று வரலாற்று உண்மைகளைக் காணத் துணை செய்கிறது. பாளையக்காரரை அறிமுகம் செய்யும்போது,

'பாளையக் காரரெழு வத்தொரு பேருக்குள்
பாரம் பரிக்கை படைத்தமுதற்
பாளையக் காரரெனப் புறத்தே யிந்தப்
பாராள வந்த மனுநீதன்' (பா. 82)

எழுபத்தொரு பாளையக்காரருள் முதலாவதாகக் கருதக்கூடிய பரம்பரைச் சிறப்புடையவராகக் கல்வாசல் நாட்டுப் பாளையக் காரரைக் கும்மிப்பாடல் சிறப்பித்துக் கூறுகிறது.

போர்க்காலத்தில் வீரத்தைக் காட்டியவர். பெண்களின் மானங் காக்கப் போராடியவர். பாண்டியன் என்று தன்னைப் பணிவோர்க்கு உதவும் பண்புடையவர். திறமையுடைய வித்வான்களை ஆதரிக்கும் வள்ளல். முத்துப் பாலாண்டி, இந்தப் பரம்பரைக்கு முன்னோராக விளங்குகின்றவர். மாகாளி மகராசன் வந்தார் அவரையடுத்து வீரப்ப வாரச்ச மாகாளித்துரை பட்டமேற்றார். பின்னர் பழனியப்பேந்திர கோப்புலி வாரச்ச மாகாளித்துரை அரியணையில் அமர்ந்தார். வாரச்ச மாகாளி என்பது இந்தப் பரம்பரைக்கு உரிய பட்டப் பெயர்களாகத் தோன்றுகின்றன.

வீரப்ப வாரச்ச மாகாளித் துரையைப் பற்றிக் கும்மிப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

'கொற்றவர் மெச்சுங் கொடையா ளிசெயங்
கொண்டவர் மெச்சும் படையாளி
கற்றவர் மெச்சிய வீரப்ப வாரச்ச
மாகாளி எவர்க்கும் திறலாளி' (பா. 87)

இவரும் நெற்றியில் நீறணிந்து சவ்வாது பொட்டிட்டு சீரணியம்மனைப் பணிந்து வணங்கியவர். பழனியப்பேந்திர கோப்புலி வாரச்ச

மாகாளித்துரை வீரப்ப வாரச்ச மாகாளியின் மகனாக இருக்க வேண்டும். இவர் சிங்க முகமுடைய பச்சைப் பல்லக்கில் பவனி வரக் கூடியவர்.

மந்திரிமார், காணிக்கர், தளகர்த்தர், தானாபதியர் குயப்பட்ட ராயர், உத்தம நாயகர் ஆகியோர் இவருடைய அதிகாரிகளாக உள்ளனர். அனைவரும் இவர் பவனி வரும்போது உடன் வருகின்றனர். சவனம், கதை, வேல், கத்தி, சிலை, அம்பு ஆகியவை ஏந்திக் கொண்டு காரியக்காரர் முன் நடக்கின்றனர்.

வெள்ளை எருத்தின் மேலிருந்து ஒலிக்கப்படும் டாங்கா என்ற கருவி மேகம் போன்று குமுறுகிறது. தவில் நாதசுவர வாத்தியம் இனிமை கூட்டுகிறது. வீமன், விசயன், ரதிகாந்தன், காமன், மலர்த்தாமன் என்று புகழ்ந்து கட்டியங்காரன் பாரட்டுகிறான். சீரணியூருக்கு வந்த மன்னன் தெருவை மும்முறை வலம் வந்து கோயில் முன்னர் பணிவுடன் வந்து நிற்கிறான்.

சீரணியம்மன் வரமருளல்

இறுதியாகச் சில பாடல்களில் சீரணியம்மனின் அருட்டிறனைக் கூறக் கும்மி ஆசிரியர் விரும்புகிறார். செடில் குத்திக் கொண்டு அம்மனிடம் வருவோருக்கு வரங்களை வாரி வாரி வழங்குகிறாள். அன்னை அன்பே உருவாகக் கொண்டு அரிய பேறுகளை அள்ளி யள்ளி வழங்குகிறாள்.

சிறப்புச் செய்திகள்

சீரணியூரிலுள்ள மாரிமுத்தம்மன் அன்னை பராசக்தியே என்பதைப் பல இடங்களில் ஆசிரியர் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காட்டியுள்ளார். ஆனால் வணக்கமுறை நாட்டுப்புறத் தன்மையுடன் உள்ளது. உயிர்ப் பலியும் உணவுப் பலியும் கொடுக்கும் முறையில் இது மிகவும் தெளிவாகத் தோன்றுகிறது. மஞ்சள்நீர் குளித்தல், வேப்பந்தளிராடை உடுத்தல், செடில் குத்திக் கொள்ளல் போன்றவை நாட்டுபுறத் தன்மையுடன் விளங்குவதைக் காணலாம். சக்தி தத்துவத் தோற்றத்தை விளக்க இத்தகைய கும்மிகள் உதவலாம்.

பொதுவாக எத்தகைய வணக்கமாக இருந்தாலும் அது நாட்டுப் புறத் தன்மையிலிருந்து திருந்தியதாகவே தோன்றுகிறது. திருத்த மடையும் போது சில வழக்க முறைகளை விட்டுவிடுகின்றனர்.

புனிதத் தன்மையடைந்ததாகக் கருதுகின்றனர். எவ்வாறாயினும் வணங்கும் இறையும் வணக்கமுறையும் நாட்டுப்புற மக்களிடம் இருந்தே தோன்றியுள்ளதாகக் கருதலாம்.

இத்தகைய கும்மிகள் சமயச் சார்பு கொண்டு விளங்கினாலும் அவற்றிலுள்ள வரலாற்றுச் செய்திகளுக்கு மதிப்பு கொடுக்காமல் இருக்க முடியாது. கல்வாசல் நாடு, கானாடு, கோனாடு, பூங்குன்ற நாடு ஆகியவை பற்றிய செய்திகள் வந்துள்ளன. கல்வாசல் நாட்டை ஆண்ட பாளையக்கார பரம்பரை எழுபத்தொரு பாளையக்காரர் களிலும் முதன்மையானது என்று இக்கும்மிப்பாடல் குறிப்பிடுவதைச் சிந்தித்துப் பார்க்கலாம்.

பாளையக்காரர் அமைதியை நிலைநாட்டி கலைஞர்களையும் கவிஞர்களையும் ஆதரித்து நாட்டை நடத்தி வந்துள்ளனர். விழாக்கள் நன்கு எடுத்துச் சமயத்துக்கு ஊக்கமும் உணர்வும் கொடுத்துள்ளனர். மக்களின் அமைதியான இன்ப வாழ்வில்தான் ஆட்சியாளருடைய பெருமையும் புகழும் அடங்கி இருப்பதை அழகாகக் கும்மிப் பாடல்கள் உணர்த்துகின்றன.

சீரணி அம்மன் கும்மி

1. சீர்பொ ருந்திய சீரணி யூர்வளர்
தேவி முத்துமாரி யம்மன்மேல்
பேர்பொ ருந்திய கும்மித் தமிழ்சொல்ல
பிள்ளையார் பொற்பதங் காப்பாமே.

2. பொற்பு நிறைந்திடு சீரணி யூர்வளர்
பூரணி மாரிமுத் தம்மன்மேல்
அற்புதக் கும்மித் தமிழினைப் பாடக்
கைலாச நாதருங் காப்பாமே.

3. நாயகி யாமளை சீரணி யூர்வளர்
நாரணி மாரிமுத் தம்மன்மேல்
நேய கவிக்கும்மி யான்பாட எங்கள்
நித்திய கல்யாணியுங் காப்பாமே.

---

1. பேர் பொருந்திய—சிறப்புமிக்க; புகழுடைய

2. பொற்பு—அழகு; பொலிவு
பூரணி—நிறைவுடையவள்; பூதேவி
கைலாசநாதர்—சிவபெருமான்

3. யாமளை—உமாதேவி
நாரணி—துர்க்கை
நித்திய கல்யாணி—பார்வதி தேவி

4. நித்திய பராபரை சக்தி யிடாகினி
நின்மலா மாரிமுத் தம்மன்மேல்
துத்திய கும்மித் தமிழ்பாடச்செய
சுப்பிர மணியருங் காப்பாமே.

5. மணித ரித்திடு மழகு லட்சுமி
மங்கல மாரிமுத் தம்மன்மேல்
அணித ரித்திடுங் கும்மித் தமிழ்சொல
ஐயனா ரம்புயத்தாள் துணையே.

6. அம்புயத் திருவினை நம்புஞ் சீரணி
யம்பதி மாரிமுத் தம்மன்மேல்
தெம்பு பெற்றிடுங் கும்மித் தமிழ்ச்சொல்லச்
சீதரனார்பதங் காப்பாமே.

7. சீதரன் தன்னுடன் பிறந்த சங்கரி
தேவி முத்துமாரி யம்மன்மேல்
ஆதர வோடு கும்மித் தமிழ் சொல்ல
அண்ணல் கருப்பண்ணன் காப்பாமே.

---

4. நித்திய—அழிவில்லாத
பராபரை—பார்வதி
சக்தி இடாகினி—ஆற்றல் மிக்க காளிதேவி
நின்மலா—தூய்மையானவள்
துத்திய—துதித்த
ஸ்துத்யம்—தோத்திரம்

5. மணி—சங்குகளாலான மணி; நவமணி, பொன்னாலான மணி; உருத்திராக்கம்
அணி—பல்வகை அணிகள் (அலங்காரம்); அழகு; ஒழுங்கு
ஐயனார்—அரிகரபுத்திரன்; சிவன்; சாத்தன்

6. தெம்பு—மனவேகம்; இன்பவுணர்வு
சீதரன்—இலக்குமியை மார்பில் வைத்துள்ள திருமால்

7. சங்கரி—பார்வதிதேவி
கருப்பண்ணன்—ஒரு சிற்றூர்த் தெய்வம் (விளக்கவுரை காண்க)

8. கருத்தழிவார் குலத்தை நீறு செய்யக்
கதித்த மாரிமுத் தம்மன்மேல்
பொருத்தமாய்ச் செம்பொருள் கும்மித் தமிழ்சொல்லப்
பூமகள் நாமகள் காப்பாமே.

9. பூமதி கல்வாசல் நாடதில் மேவும்
புராதனி மாரிமுத் தம்மன்மேல்
வாம மதாகியக் கும்மித் தமிழ்சொல்ல
வாசல் முன்னோடியுங் காக்கவே.

10. வண்புகழ் பெற்றிடு மிங்கிதச் செயல்வளர்
வாச முத்துமாரி யம்மன்மேல்
பண்பு பெற்றிடும் கும்மித் தமிழ்சொல்ல
பரிவாரத் தேவருங் காக்கவே.

11. தழைத்த மின்கொடி காமாட்சி—மலர்
[தரித்த நன்கொடி மீனாட்சி]
குழைத்த பொற்கொடி விசாலாட்சி நீங்கள்
மூன்று பெண்களும் வாருங்கடி.

---

8. கருத்தழிவார்—அறிவற்ற செயல் செல்வோர்
நீறு செய்ய ஒழிக்க; பொடி படுத்த
கதித்தல்—எழுதல்; விளங்குதல்
செம்பொருள்—சிறந்த பொருள்

பூமகள்—நிலமகள்
நாமகள்—கலைமகள்

9. பூமதி—பூமியில் சிறந்த; உலகம்; மதிக்கும்; போற்றும்
கல்வாசல் நாடு—ஒரு நாட்டின் பெயர்
புராதனி—பழமையானவள்
வாசல்—வாயில்
வாமம்—அழகு
முன்னோடி—முன்வந்து உதவும் முன்னோடித் தெய்வம்

10. வண்புகழ்—வளமையான புகழ்; நிறைந்த புகழ்
இங்குதம்—இனிமை; கருத்து
பரிவாரத்தேவர்—ஏவல் தெய்வம்

12. அங்கயற் கண்ணி யபிராமி—மலர்
அம்புயச் செல்வி சிவகாமி
நங்கையர் மெச்சுங்கல் யாணிநாரணி
நாலு பெண்களும் வாருங்கடி

13. ஆரமணிந் திடுபூ முலைதரு
முத்தே அடியம்மே யழகு முத்தே
ஏரணிந் திடுந்தங்க முத்தே நீங்கள்
ஏழெட்டுப் பெண்களும் வாருங்கடி

14. இங்கித வள்ளி தெய்வயா னையம்மை
இந்திராணி சந்திரமதிகோதை
உங்கள் குலக்கொடி லெட்சுமி யுங்கூட
ஒன்பது பெண்களும்வா ருங்கடி.

15. ஆடற் கிசைந்த பரத மின்னே திரு
வன்னையர்க் கிசைந்த சுரதமின்னே
பாடற் கிசைந்த சரசமின்னே நீங்கள்
பத்துப் பெண்களும் வாருங்கடி.

16. மாத ரெல்லோரும் வாருங்கடி—நம்ம
மங்களப் பெண்களைச் சேருங்கடி
சீதரன் கங்கை மாரிமுத் தம்மனைச்
சிந்தித்துக் கும்மி யடிப்பமடி.

---

12. அங்கயல்—அழகிய மீன்
அம்புயம்—தாமரை; அழகான கை
13. ஏரணி—அழகுமிக்க
14. இங்கிதம்—இனிமை
15. பரதம்—கூத்து
16. மங்களப் பெண்கள்—வாழ்த்துப் பாடும் பெண்கள்

17. பூங்கயல் துள்ளச் செந்தாமரைப் போதினில்
பொங்கிய தேனைப்பெருக் குமம்மன்
சேங்கயல் நீந்தி விளையா டிக்கொண்டு
சேர்க்கையினால் மஞ்சள் குளிப்பமடி.

18. மஞ்சள் குளித்துக் கரையேறி வந்து
வாய்த்த செம்பட் டுடையுடுத்திப்
புஞ்சத் தனத்தில் ரவுக்கை தொட்டும்
புதுப்பூ மலரெல்லா முடிக்கணிந்து

19. வாணு தற்குத் திருநீறிட்டுப் பொட்டிட்டு
வாள்விழிக் கஞ்சனக் கீற்றுமிட்டு
தோணு தற்குச் செவிமீதில் முருகுடன்
தோடுஞ் சிமிக்கையுங் கொப்புமிட்டு.

20. நத்துபில் லாக்கு மூக்குத்தியிட் டுச்சுகம்
நண்ணுங் கழுத்தினி லட்டியலுங்
கொத்து முத்தாரமும் ரத்தின வடத்துடன்
கோர்த்த பதக்கனும் தானணிந்து

---

17. பூங்கயல்—அழகிய மீன்
போது—மலர்

18. புஞ்சம்—திரண்ட

19. வாணுதல்—ஒளி பொருந்திய நெற்றி
அஞ்சனம்—சாந்து; மை
தோன்றுதற்கு—தோளுடன் பேசுவன போல
முருகு, தோடு, சிமிக்கி, கொப்பு } காதணிகள்

20. நத்து, பில்லாக்கு, மூக்குத்தி } மூக்கணிகள்
அட்டியல், முத்தாரம், ரத்தினவடம் } கழுத்தணிகள்
பதக்கம்—மார்பணிகளில் ஒன்று
சுகம்நண்ணும்—சிறப்பு மிக்க

21. மோகன மாலை முலைக்கணிந் துகுழல்
மொய்ப்பினில் வாகு வலயமிட்டு
வாகான சரிகங் கணமுன் கையில்
வச்சிர கடயமும் காப்புமிட்டு,

22. மின்னிய கைவிர லாழி வகைவகை
மீண்டும் தரித்துப் பளபளென
மன்னிய மேகலை ஒட்டியா ணத்துடன்
வாய்த்த மருங்கினில் தானணிந்து

23. பாடகந் தண்டை சிலம்பு கொலுசுபொற்
பாத மதற்குத் தரித்துடனே
நாடகந் தாங்கிய கும்மி விளையாட
நங்கைய ரெல்லோரும் வாருங்கடி.

24. நாயகி மாரிமுத்தம்மனை நாடியே
[நன்றாய் கும்மி யடியுங்கடி]
செங்கையால் போற்றிப் பணியுங் கோடி—நின்று
செம்மையாய்க் கும்மி யடியுங்கடி.

---

21. மோகனமாலை—கலைத்தன்மையுடைய மாலை
அழகான மாலை
மொய்ம்பு—தோள்
வாகு—அழகான
வலயம்—கைக்கடகம்; தோளணி
கங்கணம்
கடயம்
காப்பு } கையிலணியும் அணிகள்

22. ஆழி—கணையாழி; கைவிரலணி
மேலை
ஒட்டியாணம் } இடையில் அணிவன
மருங்கு—இடை

23. பாடகம்
தண்டை
சிலம்பு
கொலுசு } பாதத்திற்குரிய அணிகள்

25. செயக்கி ரீடமு டித்தா ளைக்கமழ்
செந்தூர மிட்ட நுதலாளை
வையக மேற்றிடும் போது மதியுடன்
மாணிக்கச் சுட்டி தரித்தாளை

26. வில்லு வரிசைப் புருவத்தா ளைப்படை
வேலெனும் கூர்மதி விழியாளைச்
சொல்லு மிசைரத்தினத் தாடங்கம் வச்சிரத்
தோடணி சங்கச் செவியாளை

27. பங்கய மானும் முகத்தாளைச்—செழும்
பவள நிறத்தாளைப் [பிறை மதியைச்]
சங்கை செய்வக் கிரயெயிற் றாளைப்பருந்
தரள மூக்குத்தி யிட்டாளை.

28. கமுகை மானும் கழுத்தாளைப் பசுங்
களையைப் போலும் புயத்தாளை
சுமுக மான குணத்தா ளைத்திரி
சூல மிருக்கும் கரத்தாளை

29. ஆரம ணிந்த தனத்தாளைத் தளிர்க்கும்
ஆலிலை யான வயிற்றாளை
சார மணிந்த விடையினில் மேகலை
தங்கஒட் டியாண மணிந்தாளை.

---

25. கிரீடம்—முடி
சுட்டி—நெற்றியில் சூடுமணி

26. தாடங்கம், தோடு, சங்கம் } காதணிகள்

27. பங்கயம்—தாமரை
வக்கிரயெயிறு—வளைந்தபல்

28. களை—மூங்கில் (கழை)

29. ஆரம்—சந்தனம்—மாலைகளும் ஆம்

30. கட்டிய வாழைத் துடையா ளைமதன்
கணைகொ ழுங்கணைக் காலாளை
எட்டிய வேதமொருநான் குமயன்
எழுத்தைப் போக்குந் தாளாளை.

31. சீரணி யம்பதி வந்தா ளைத்தினஞ்
சீரேத்திச் சொல்வோர்க்கருள் தந்தாளை
வாரணி யுந்தன மாரிமுத் தம்மனை
வாழ்த்திக் கும்பி யடியுங்கடி.

32. நல்வாசல் நாடென்னும் நாமங்கை பூமங்கை
நாடோறும் வந்து விளையாடுங்
கல்வாசல் நாடோறும் வந்து விளையாடுங்
கதித்த சீரணி யூர்தனிலே.

33. கூடமு மன்னும் மணிமுகப் புந்திருக்
கொம்பனை யாருறை யந்தரங்க
மாடமும் தோரண வாயிலும் மருங்கு
மகிழ்ந்திடுஞ் சீரணி யூர்தனிலே.

---

30. மதன்—மன்மதன்
அயன்—நான்முகன்

31. சீரேத்தி—சிறப்புகளைப் புகழ்ந்து
வாரணியும்—மார்புக்கச்சினை அணிந்த

32. நாமங்கை—கலைமகள்
பூமங்கை—நிலமகள்

33. மன்னும்—விளங்கும்
கொம்பனையர்—கொடிபோன்ற பெண்கள்
தோரணவாயில்—சித்திர கோபுரவாயில்;
தோரணம் கட்டியுள்ள வாயில்;
தலைவாயில்

34. வாவியுங் கோபுர வாசலும் சித்திர
மண்டபஞ் சேர்ந்திடு மாமதிலுஞ்
சேவிக்கத் தங்கத் தினால்சமைத் தேசெக
சோதிய தாகிய ஆலயத்தில்

35. வேதனும் மாலும் [கண]பதி யுங்கதிர்
வேலனும் மைந்தரு நீழலுறை
நாதனும் கால வயிரவ னேமுனி
நல்லய்ய னாருந் துதித்திருக்க.

36. முத்துக் கருப்பனும் வீர பத்திரனும்
முன்னோடித் தெய்வங்க ளனைவோரும்
சுத்துப் பரிவார தேவரா னவரும்
சூழ்ந்து கொண்டாடித் துதித்துநிற்க.

37. விண்டலத் தோர்கள் துதித்து நிற்க
வேத்தரசு மதித்து நிற்க
மண்டலத் தோர்கள் மகிழ்ந்தேற் றக்கவி
வாணர் களென்றும் புகழ்ந்தேற்ற.

38. அரம்பை யடப்பை வரிசை செயத்தினம்
போற்றி திலோத்தமை காளாஞ்சிப்
பரம்பரை யாய்க்கொண்டு வந்து நிற்கப்பணிப்
பாங்கி விசிறிப் பணிமாற.

---

34. வாவி—குளம்
35. வேதன்—நான்முகன்
மால்—திருமால்
ஐந்தரு நீழலுறைநாதன்—இந்திரன்
வயிரவர்—பயிரவ மூர்த்தி (விரிவுரை காண்க)
37. விண்டலத்தோர்—தேவர்கள்
வேத்தரசு—வேற்று நாட்டரசர்
மண்டலத்தோர்—மண்ணுலகிலுள்ளோர்
38. அடப்பை வரிசை—வெற்றிலை கொடுக்கும் செயல்
காளஞ்சி—எச்சிற்படிக்கம்; தாம்பூலக் கமலம்
பணிமாற—இரட்டல்; அசைத்தல் (விசிறி வீசல்)

39. சத்திரஞ் சாய்மானம் பாவாடை குஞ்சம்
சத்திரகாவி சுருட்டி யிடால்
சித்திர மாதரெ டுத்துநிற்கத் தங்கத்
தீவட்டி தொண்டர்பிடித் துநிற்க.

40. பெரிய நவபத்து நாக சுரம்தவில்
பேசு மம்மா மணிமுரசு
(புரிய)யெக் காளமுடன் வாங்கா கொம்பு
பொங்கு கடலெனத்தான் முழங்க

41. மாதராதி மாதர் வணங்கி நிற்கத்தமிழ்
மாதும் பூமாது மிணங்கிநிற்க
பூதாதி பூதகணங் களெல்லாம் வந்து
போற்றிப் பணிந்துகுற் றேவல்செய்ய

42. சுரத லெச்சண கின்னரி வீணைகள்
தும்புரு நாரதரும் புகழ
பரத மத்தளத் தாள வகைப்படி
பாவையர் வந்து நடமாட

---

39. சத்திரம்—வெண்குடை
சாய்மன்—சாய் மனத்திண்டு
சுருட்டி—ஆலவட்டம்

40. நாகசுரம், எக்காளம், வாங்கா, கொம்பு } குழலிசைக்கருவிகள்
தவில், முரசு } தோற்கருவிகள்
புரிய—ஒலிக்க

41. மாதராதி மாதர்—சிவனுக்கு ஏவற்குரிய மாதர்;
சப்த மாதர் (விளக்கவுரை காண்க)
தமிழ் மாது – தமிழன்னை
பூமாது—நிலமகள்
பூதாதி—பூதகணம்—பூதசேனை

42. சுரதம்—இசை நுணுக்கம்
லெட்டசணம்—இலக்கணம்
கின்னரி—வீணை

43. வெட்டிய வீர ரிசைமுழங் கத்திசை
வேந்தர் வந்து திறையளக்க
கட்டியக் காரர் பாரக் கெச்சரிக்கைக்
கனமுகி லெனத்தான் கூற.

44. பீடுயர் மண்டபந் தன்னில் நவமணிப்
பீடிகை மீது கொலுவிருக்குஞ்
சேடுயர் சுந்தர மாரிமுத் தம்மனைச்
சேவித்துக் கும்மி யடியுங்கடி.

45. பூசல் கருப்பு மயிடனை வென்ற
பூரணி மாரிமுத் தம்பிகையாள்
வாசல் கருப்பண்ண சாமியைச் சேவித்து
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி.

46. பாடகந் தண்டை கலகலென—புனை
பன்மணி மேகலையுந் துலங்கச்
சூடகந் தங்க வளைகுலுங்கப் —போடுஞ்
சுந்தர மான்மத முங்கலங்க.

47. கும்ப முலைகள் திரண்டா டத்துடி
கொண்ட நுசுப்புத் துவண்டாடச்
செம்பவள முத்து மாணிக்க மாலையுஞ்
சேர்ந்து புயத்தில் துவண்டாட.

---

43. வெட்டிய வீரர்—பகைவரை வெட்டியெறியும் வீரர்
திசை வேந்தர்—நாட்டைச் சுற்றி வாழும் அரசர்
திறையளக்க—கப்பங்கட்டிப்பணிய

44. பீடுயர்—சிறப்புமிக்க
பீடிகை—இருக்கை

45. பூசல்—போரிடும்
மயிடன்—எருமைத் தலையுடைய அரக்கன்; மகிடாசுரன்

46. மான்மதம்—கஸ்தூரி
சூடகம்—கைவளை—சங்கினாலாகியவளை

48. வண்டைப் பழித்த விழியாடக்—கோடி
வள்ளைச் செவியணி தோளாட
கண்டைப் பழித்த வுரையாடக்—கூந்தல்
காவினில் வண்டு நிரையாட

49. மெய்யில் தரித்த பணியாட—மண
மிஞ்சிய மஞ்சள் கரைந்தோட
தொய்யில் தனத்தினில் வேர்வா டப்புழைத்
தொங்கல் சொருக்கு நெகிழ்ந்தாட

50. இசைந்து கும்மி யடியுங்கடி யெங்கள்
ஈஸ்வரி மாரிமுத்தம் மன்முன்னே
விசைந்து கும்மி யடியுங் கடிபலன்
வேண்டிக் கும்மி யடியுங்கடி.

51. ஆதி யனாதி வராகி புராதனி
யாமளை கோமளை யாரணங்கு
சோதி பராபரை நீலி யிடாகினி
சூலி கபாலி மகாமாயி.

---

47. கும்பம்—குடம்
நுசுப்பு—இடை
48. கண்டு—கற்கண்டு
நிரை—கூட்டம்
49. தொய்யில்—சாந்தினால் உடலிலிடும் கோலம்
புழை—துளையுடையது
சொருக்கு—சொருகியுள்ள ஒருவகைக் கூந்தலணி
51. அனாதி—தொடக்கமில்லாதவள்; இறைவி
வராகி—தேவி கொண்ட மூர்த்தங்களுள் ஒன்று;
சப்த மாதர்களில் ஒருத்தி
புராதனி—பழமையானவள்
யாமளை—உமாதேவி; காளி; சியாமளை என்பதன் திரிபு
கோமளை—இளமைச் செல்வி
பராபரை—பார்வதி
நீலி—காளி; பார்வதி
இடாகினி—கடுமையான தேவதை; பிணம் தின்னும் பேய்
சூலி—காளி; துர்க்கை; சூலத்தையுடையவள்
கபாலி—உமை; கபாலந்தரித்தவள்
மகாமாயி—துர்க்கை

52. ஆரணி பூரணி காரணி நாரணி
அந்தரி சுந்தரி அம்பிகையாள்
சீரணி யூர்முத்து மாரியம் மன்முன்னே
கெம்பீரக் கும்மி யடியுங்கடி.

53. நன்மை யதான சிவஞானந் தொழுதிடும்
நாற்பத்து முக்கோண யெந்திரத்துள்
சின்மய மான முத்துமாரி யம்மனைச்
சேவித்துக் கும்மி யடியுங்கடி

54. மெய்யர் மனத்தில் குடியிருப்பாள் துதிக்கும்
வசனர்க் குவரங் கொடுப்பாள்
பொய்ய ரகத்தணு காதிருப் பாள்பரி
பூரணி யான செகமாதா.

55. மங்காத நீதி பதிக்கே வுரிய
வல்லபி பெரிய உடையாத் தேவன்
சிங்காசனத் திலிருந் தரசு செய்யச்
செங்கோல் கொடுத்த மகாமாயி

56. வென்றி கொள்பூசை யெந்நாளுஞ் சிறந்திட
வேண்டிக் காக்கு முதவிசெய்து
நன்றி கொள்வாள் மாகாளி பூபாலரை
நன்மையாய்க் காக்கும் மகாமாயி.

---

52. ஆரணி—காளி; பார்வதி
காரணி—அனைத்துக்கும் காரணமான இறைவி
பூரணி—பரிபூரணத் தன்மையுடையவள்
நாரணி—பார்வதி தேவி

53. சின்மயம்—ஞானமயம்

55. வல்லபி—திறமையுடைய தேவி

56. பூபாலர்—உலகை பரிபாலிக்கும் அரசர்கள்

57. தேட்ட மொடு வந் திறைஞ்சித் திறைதந்து
சிந்தித்துக் கொண்டு செய்கல்வாசல்
நாட்டவர் தங்களை யன்புவைத் தெந்த
நாளும் ரெச்சிக்கு மகாமாயி.

58. என்று மபிடேக மென்றும் நைமித்தியம்
என்றுந் திருவிளக் கென்றுமலர்
என்றுந் திருப்பணி யென்றும் பொற்பணி
என்றுந்திரு நாள்நடத்தி வைப்பர்.

59. காவிரிப் பூம்பட் டினத்தி லிருந்தொரு
காவலன் மாற னழைத்துவர
பூவிரிப் புனல்மிகும் பாண்டிய நாட்டினிற்
பொங்கத் துடன் வந் தமர்ந்தாளே.

60. இளசை மாநகர் தன்னில் வந்தேபிரி
வேனோ சிவதலங் கண்டதங்கே
விளசை பூசை நடத்தியென் றென்றைக்கும்
மிஞ்சி வாழ்வு படைத்திடுவோர்.

61. தந்தையைத் தாயைக் குருவைப் பிராமணர்
தங்களைச் சைவத் தபோதனரை
விந்தையாய்க் கண்டு பணிவதல்லால் சுற்றும்
வேந்தரைச் சற்றும் பணியாதார்.

---

57. தேட்டம்—கவலை; பேரவா
இறைஞ்சி—வணங்கி
திறை—கப்பம்; அரசிறை

58. நைமித்தியம் (நைமித்திகம்)—சிறப்புப் பூசனை

59. மாறன்—பாண்டியன்
பொங்கம்—பொலிவு

60. இளசை மாநகர்—எட்டையாபுரம்
விளசை பூசை—ஆரவாரத்துடன் விளங்கும் பூசனை

62. சீரக மாலையணி மார்பர் தினமுஞ்
செம்பொருள் மீளும் வணிகர்தமை
பாரகந் தன்னிற் குபேரர்கள் போல்வைத்துப்
பார்த்து ரெச்சிக்கும் மகாமாயி.

63. தாயென்று வந்து பணிந்தேற்றும் பக்த
சனங்களைத் தினந்தா னருளுஞ்
சேயென்று வந்து தயாபரித்துக் கிருபை
செய்து ரெச்சிக்கும் மகாமாயி.

64. நாலாயிரத் துநானூற் றுநாற்பத் தெட்டு
நச்சுப் பிணிக ளணுகாமல்
பாலா யிறகும் வெண்ணீருந் தந்தவை
பஞ்சு பஞ்சாக்கு மகாமாயி.

65. பனசை விச்சுலூற் பானயம்மை கோணிய
நெட்டுடன் முக்குளிப் பானரம்பு
வினைசெய் கெட்டி பிணிகள் வராமல்
விலக்கிடு மெங்கள் மகாமாயி.

66. பில்லியும் வஞ்சனை ஏவல் தொடர்ந்து
பிடித்திடும் பூதப் பிசாசுமிடுஞ்
சல்லிய மெல்லா மகற்றிப் பரிவோடு
சந்தானம் நல்கும் மகமாயி.

---

62. செம்பொருள்—சிறந்த பொருள்
சீரக மாலை (சீர் அக்க மாலை)—சிறந்த உருத்திராக்கமாலை

64. பிணிகள்—நோய்கள்

65. பனசை—ஒரு பட்டினம்

66. பில்லி—சூனிய வித்தை
சல்லியம்—சச்சரவு; கலக்கம்
பரிவு—அன்பு
சந்தானம்—மகப்பேறு

67. ஆதி வாரத்தில் ஆடிப் பணிந்தோம்
அன்று முதலெட்டு நாட்கள்வரை
வீதி வாற பவனி கண்டு
விளையாடிக் கும்மி யடியுங்கடி.

68. ஒன்பதாம் நாளில் பையனொ ருத்தனை
ஓங்கு செடில்குத்தி வீதிசுத்தி
அன்பதாய் வாற விசேட சிங்கார
அதிசயம் பாரடி தோழிப்பெண்ணே.

69. பொங்க லிட்டு கிடாய் வெட்டி பெலியிட்டுப்
பூரணி சன்னதி முன்னே
தொங்க லிட்டுக் குழாத்தோடு மற்றெல்லோரும்
தொழுது நிற்கிறார் பாருங்கடி.

70. தறித்த ஆட்டுத் தலைகோ ழித்தலைச்
சன்னதிப் பந்தலின் மேல்குவித்துக்
குறித்த ரெத்தம் பொலபொல பொழியுங்
கோலத்தைப் பாரடித் தோழிப்பெண்ணே

71. பூமியி லுள்ளசனங் களெல்லாம் வந்து
பொங்க விடும்புகை மண்டுவது
நேமியில் மேகம் வளைந்து பணிந்திடு
நேரொக்கும் பூரடித் தோழிப்பெண்ணே.

---

67. ஆதிவாரம்—ஞாயிற்றுக்கிழமை

68. செடில் குத்தல்—நேர்ச்சைக்காக உடம்பில் குத்திக் கொள்ளுதல்

69. குழாம்—கூட்டம்

70. சன்னதிப் பந்தல்—கோயிலின் முன்புறம் போடப்பட்ட பந்தல்
கோலம்—தோற்றம்; அழகு

71. மண்டுவது—கூடிக்குவிவது
நேமி—கடல்

72. துள்ளு மாவுடன் பானக மஞ்சள் நீர்
தோசை வடையவல் மோதகமும்
விள்ளு மாவலுடன் படைப்போர் தங்கள்
வீட்டி லிருந்து குடிகாப்பார்.

73. வேப்பந் தளிருடன் வெண்ணீ றுந்தந்து
வினைக ளெல்லாம் தடுத்திடுவாய்
வேப்பந் தளிரைப் புனைந்திடுவார் மக்கள்
வெய்ய பகையைக் கடிந்திடுவாள்.

74. எந்தச் சமயத்திலுங் காப்பாள் மிகப்பணிந்
தேற்றுவோ ரவளிடம் வந்தால்
அந்தச் சமயத்தில் வந்து தயாபரி
அஞ்சலென் றாட்கொண் டருளுவாளே.

75. கையகத்தே வெகுகா ணிக்கையுங் கொண்டு
காரணியாள் திருநாள் பார்க்க
வையகத் தோரணி யணியாய்க் கூடி
வாற சிங்காரத்தைப் பாருங்கடி.

76. கத்த லூரிலி ருந்து வந்தேநலங்
கண்ட விளசை நகர்புகுந்து
நித்திய மான துருவனைப் போல
நிலைமை படைத்த மனுநீதான்

---

72. பானகம்—வெல்லம் கரைத்த இனிய நீர்
விள்ளும்—தழுவும்

73. புனைதல்—அணிதல்

74. தயாபரி—தயவுடையவள்

75. சிங்காரம்—சிறப்பு

76. துருவன்—துருவ நட்சத்திரம் (விளக்கவுரை காண்க)
மனு—நீதிமுறை வகுத்தோன் (விளக்கவுரை காண்க)

77. நெய்யினால் மாவிளக் கேற்றிடு வோர்கள்
நினைத்த வரங்கள் கொடுத்திடுவாள்
மெய்யினால் கும்பிட்டுத் தெண்டம் பண்ணுவோர்
வெய்ய வினையைத் தீர்த்திடுவாள்.

78. அங்கப் பிரதக்ஷணம் புரிந்திடு வோர்தமக்
கப்போது காட்சி கொடுத்திடுவாள்
துங்கச் சிலாகைக் கயிறு குத்திக்கொண்டு
துள்ளு வாருள்ள நிறைந்திருப்பாள்.

79. மஞ்சள் பாவாடை புனைந்து சிலம்பிட்டு
முந்து வந்தானைத் தானடிக்கும்
....
....

80. அஞ்சொல் இளங்கச் சியர்க்காயப் பூமியில்
அருள்செய்து நித்தியமும் காத்திடுவாள்
புஞ்சப் பாஞ்சால விளங்கச் சியர்களைப்
பூமியில் வைத்து வளர்த்திடுவாள்.

---

77. மாவிளக்கு—மாவினால் செய்த நெய் விளக்கு
தெண்டம் பண்ணுவோர்—விழுந்து வணங்குவோர்
வெய்யவினை—கடுமையான பாவவினை

78. அங்கப் பிரதட்சணம்—தெருவில் புரண்டுவலம் வந்து வணங்கல்
துங்கம்—பரிசுத்தம்; பெருமை
சிலாகை (சலாகு; சலாகை—அம்பு; ஈட்டி; ஊசிக்காந்தம்; அகன்மணி; தெய்வமணி

79. புஞ்சம்—புஞ்சை நிலம்
பாஞ்சாலன்—(இலட்சணவான்) பாஞ்சாலங் குறிச்சி
கச்சியர்—மார்புக் கச்சணிந்த பெண்கள்

80. நித்தியம்—என்னாளும்

81. மந்தைகள் தோறும் நடித்திடுவாள் வேகும்
மஞ்சள் தண்ணீருங் குடித்திடுவாள்
விந்தையாய் சித்து விளையாடி யிந்த
மேதினி யெல்லாங் காத்திடுவாள்.

82. பாளையக் காரரெழு வத்தொரு பேருக்குள்
பாரம் பரிக்கை படைத்தமுதற்
பாளையக் காரரெனப் புறத்தே யிந்தப்
பாராள வந்த மனுநீதன்.

83. வெங்களந் தொறும்பரி யேறுகின் றான்கொடி
வீழச் சொன்னோர் வாய்கிழிந்தோர்
மங்கல மான மடவார் களுக்கு
மானங் காத்த மனுநீதன்.

84. சுடையில் சந்தனம் பூசிடுவோன் மற்ற
துட்டர் கொட்டந்தனைத் தூளிடுவோன்
கடையில் சந்தித்துத் தன்னா லேயொரு
காங்கையன் தன்னை விலைகொண்டோன்

85. பாண்டிய னென்ற டிதொழ வேயொரு
பாரப் புரவியி லேறுகின்றோன்
வேண்டிய மாநிதி படைத்திடு வோன்தினம்
வித்துவ சனங்களைக் காத்திடுவோன்.

---

81. விந்தை—வியப்பு; துர்க்கை விற்பன்னம் (நூதனம்)
சித்து—மாயவித்தை
மேதினி—உலகம்

82. பாரம் பரிக்கை—பாரம்பரிய உரிமை; சந்ததி, வழிவழியாய் வந்தடையும் உரிமை
பாராள வந்த—உலகை ஆள வந்த
மனு—நீதிமிக்க அரசன்

83. மடவார்—மங்கையர்

85. பாரம்—குதிரைச்சேணம்
புரவி—குதிரை

86. வரத்தினைச் சேர்புகழ் முத்துப் பாலாண்டிநம்
வம்சமா காளி மகராசன்
கரத்தின் தவத்தில் புகழ்ந்து விளங்கிய
காண்டிப னாமிவ் வகளங்கன்.

87. கொற்றவர் மெச்சுங் கொர்டையா ளிசெயங்
கொண்டவர் மெச்சும் படையாளி
கற்றவர் மெச்சிய வீரப்ப வரச்ச
மாகாளி யெவர்க்குந் திறலாளி.

88. மன்னிய ரவிகுல ராம னெனஇந்த
மானிலங் காக்குந் துரைராசன்
கன்னியர் மாரன் வீரப்ப வாரச்ச
மாகாளி துரந்தர பாஞ்சாலன்.

89. [தலமெ லாம்புகழ்] மாரி முத்தாள் தேவி
திருநாள் தெர்சனங் காணவே
[நலமாக] வெண்ணீ றிட்டு நெற்றியில்
நண்ணுஞ் சவ்வாதுத் திலதமிட்டு.

90. [சித்திர]க்க வித்தலைப் பாக்குக் கட்டிச்
சாலுவை வல்லவாட்டும் போட்டு
[மித்திரன்] போலக் கவச மிட்டுப்
பொளிடான வங்கித மானரர்த்து.

---

86. காண்டிபன்—அருச்சுனன் (விளக்கவுரை காண்க)
அகளங்கன்—மாசிலான்; ஒரு சீமான்; புத்தன்; கடவுள்; களங்கமற்றவன்
87. கொற்றவர்—அரசர்
மெச்சும்—பாராட்டும்
படையாளி—படைசெலுத்தி வெற்றி பெறும் வீரன்
திறலாளி—பலசாலி
88. துரந்தரன்—பாரந்தாங்குவோன்; வல்லோன்
89. திலதம் (திலகம்)—பொட்டு
90. சாலுவை—மேல் துண்டு (பெரும்பாலும் சரிகையுடன் இருக்கும்)
வல்லவாட்டு—உத்தரீயம்; மேற்பார்வை
பொளிடான வங்கிதம்—விளங்கவில்லை

91. [இச்சக]ராய் வைத்து முத்து முருகன் முன்
தோண்டி வச்சரெண்டு காதிலிட்டு
துச்சகப் பணிகோத்துச் சரப்பணி
தூக்கிய பதக்கந் தானணிந்து

92. செங்கையில் வச்சிரக் கடைய மிட்டுவால
சீவகன் போல எழுந்தருள
மங்கையர் பரதங்கள் கையாடு கரத்தர்கள்
வாசல் முகப்பில் வந்துநின்று

93. தருண மாதர டப்பங் கட்டச்சில
தாதியர் காளஞ்சி யேந்திவர
வருண நீலத் துரகத்தின் மேல் செய
மாரனைப் போலு மிசைந்தூர்ந்தோன்

94. கீர்த்தி விளங்கும் பழனியப் பேந்திர
கோப்புலி வார்ச்ச மாகாளித்துரை
பார்த்திபர் மெச்சிய சிங்கமுகப் பச்சை
பல்லக்கின் மீதினி லேறிவர

---

91. துச்சகம்—நறுமணம்
சரப்பணி—ஒருவகை அணிகலன்
பதக்கம்—மார்பில் தொங்கும் அணி

92. கடையம்—காப்பு; கடகம்

93. தருண மாதர்—இளம் பெண்கள்
அடப்பம்—வெற்றிலைச் சிமிழ்
காளாஞ்சி—உமிழும் பாத்திரம்
துரகம்—குதிரை
வருணன்—கடல்

94. பார்த்திபர்—அரசர்

95, கோப்புலி, வாரச்ச மாகாளித்துரை
சேயரா மெங்கள் கருத்தத் தம்பி
மேப்ப ரும்புர வியிலேறிச் சமரேச
வேடிக்கையாக நடத்தி வாராய்

96. மந்திரிமார் காணிக் கர்தள கர்த்தர்
வாய்ந்திடு சிறந்த தானா பதியர்
முந்துகுயப் பட்டராயர் வுத்த மனாயகர்
முன்னே நடந்து விரைந்துவர.

97. [சக்கரவாளக்] குடை குஞ்சம் வெண் சாமரஞ்
செய்வெற்றி மயில்தேர் மரிப்பாவாடை
[பக்கமிரு] காயம் வெள்ளைச் சுருட்டி
விருது பலதும் எடுத்துவர.

98. எடுத்துப் பார்க்க சவனங் கதைவேல்கத்தி
எய்யுஞ் சிலையம்பு சக்கரமுந்
தொடுத்துக் காரியக் காரர்கையில் கொண்டு
சார்ந்து முன்னேபடை சேர்ந்துவர

99. வெள்ளை யெருத்தின் மேலதிர் டங்காமழை
மேகக் கெற்சிதம் போற்குமுறத்
தள்ள லில்லாத் தவில்நாக சுவரம்
தம்பட்டங் கொம்புவாங் காவதிர

---

96. காணிக்கர்—நில வருமான அதிகாரி
தளகர்த்தர்—படைத் தலைவர்
தானாபதி—நிதித்துறை அதிகாரி
98. சவனம்—புனித நீர்
காரியக்காரர்—செய்கருமம் இயற்றுவோர்
புடைசேர்ந்து—நெருங்கி
99. கெற்சிதம்—இடியொலி
குமுற—ஒலிக்க
தள்ளலில்லா—தவறு இல்லாத
வாங்கா—ஒரு வித ஊது குழல்
டங்கா—டாமரம்
எருத்து—காளை

100. வீம னென்றும் விசயனென் றும்மனு
வேந்தனென்றும் ரதிகாந்த னென்றும்
காம னென்றும் மலர்த்தாம னென்றுஞ் செய
கட்டியக்காரர் துதித்துவர

101. வீரனைப் போலும்பா ரிடமா ளும்மனு
வேந்தனைப் போலும் பரியேறி
மாரனைப் போலும் உல்லாச பவனி
வருகிறான் பாரடித் தோழிப்பெண்ணே.

102. நாயகி சீரணி யூரில்வந் தேயொரு
நாலு வீதியு மூணு தரம்
தாயக மாகப் பிரதட்சணஞ் செய்து
சன்னதி முன்னே பணிந்தேற்றி.

103. வந்துசெடிலை நடத்தி வைத்தா னெங்கள்
மாரி முத்தம்மன் மனமகிழ்ந்து
சந்திரன் போலவே வாழ்ந்திருக் கவரம்
தந்தாள் பாரடித் தோழிப்பெண்ணே.

104. அன்னையே அன்பே முத்து மாரியம்மை
அம்புயப் பாதமலர் வாழி
நன்னய வேத பாராயணஞ் செய்ய
நடந்த பராபரை தாள்வாழி.

---

100. விசயன் — அருச்சுணன்
ரதிகாந்தன் — மன்மதன்
தாமன் — மாலையணிந்தவன்; திருமால்

101. பவனி — ஊர்வலம்

102. பிரதட்சணம் — வலம் வருதல்

103. செடிலை — செடில் குத்தல்

104. பராபரை — உமாதேவி; காளி

105. கோடு வாழி வாழிவாழியிளங்
கோதை முத்துமாரி யம் மைதிரு
நாடு வாழி நகர்வாழி—புவி
ராசர் கவிராசர் வாழியவே.

106. கும்மி யடித்து விளையாடு கின்ற
கொம்பனை மாத ரனைவோரும்
ரம்மிய மாகவே சோபனம் பெற்றார்
நாளுஞ் செகத்தினில் வாழியவே.

107. நாட்டி லரிய வர்முத்து மாரிதெய்வ
நாயகி மேற்கும்மிப் பாட்டதனை
ஏட்டி லெழுதிப் படித்து விளையாடும்
இங்கிதத் தோரென்றும் வாழியவே.

---

105. கோடு—மலை
கோதை—மாலை

106. ரம்மியம்—இன்பம்; அழகு
சோபனம்—சுபம்; வாழ்த்து
செகம்—உலகம்

107. இங்கிதத்தோர்—இனியவர்

சீனய்யங்கார் கும்மி

கும்மி தோன்றிய சூழல்

ஆங்கில ஆட்சி தென்னாட்டில் வேரூன்றத் தொடங்கிய காலத்தில் பல சிற்றரசர்கள், பாளையக்காரர் இந்த பகுதியைச் சிறுசிறு துண்டுகளாக ஆண்டு கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் ஆங்கிலேயர் மிகவும் தந்திரமாக அடக்கித் தங்களுடைய ஆட்சியைப் பரப்பினர். கி. பி. 1792 ஆம் ஆண்டு திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் ஓர் உடன் படிக்கை ஏற்பட்டது. அதன்படி சேலம், மதுரை மலையாள மாவட்டங்கள் ஆங்கிலேயருக்குக் கீழ் வந்தது. 1799 ஆம் ஆண்டு திப்பு கொல்லப்பட்டதும் மைசூருக்கு உட்பட்டிருந்த கோவை மாவட்டம் ஆங்கிலேயருக்கு உரிமையானது.

1792 முதல் கர்நாடக நவாபு ஆங்கிலேயருக்கு வரியைப் பிரிக்கும் உரிமையைக் கொடுத்தான். 1799 முதல் தென்னாட்டு மக்கள் படைக்கலம் வைத்திருக்கக் கூடாது என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. 14ஆம் நூற்றாண்டு முதல் சிற்றரசர், பாளையக் காரர் ஆட்சி தமிழ் நாட்டில் நடந்து வந்தது. அதுவரை நடந்த முடியுடை மூவேந்தர் ஆட்சி முடிவடைந்தது. பாளையக்காரர் தங்களுடைய தகுதிக்குத் தக்கவாறு படைகள் வைத்திருந்தனர், ஆனால் ஆங்கில ஆட்சி ஏற்படத் தொடங்கியதும் பாளையக் காரரும் மற்றவர்களும் படை வைத்திருக்கும் உரிமையை இழந்து விட்டனர்.

அடிமைப்படுத்திய இடத்தில் வரி பிரிப்பதற்குத் தகுதியானவர் களைத் தாசில்தார்களாக ஆங்கிலேயர் நியமித்தனர். மக்களுக்கு மதிப்புக் கொடாது ஆதிக்க ஆங்கிலேயருக்கு அடிபணிவோரையே இத்தகைய பதவிகளில் நியமித்தனர். வரி பிரிப்பதற்குக் கடுமை யான வழிகளைத் தாசில்தார்கள் பின் பற்றினர். மக்கள் கொதித் தனர். ஆங்கிலேயருக்குக் கொடுப்பதுடன் தாங்களும் பணத்தைப் பலவாறு பிரித்துச் சேர்த்தனர். இத்தகைய கொடுமையான

சூழ்நிலை தமிழ் நாட்டில் இருந்த போது பழனிப் பகுதிக்குத் தாசில்தாராகச் சீனய்யங்கார் இருந்தார். அவர் மிகக் கொடுமையான முறைகளைக் கையாண்டு மக்களிடமிருந்து வரியைப் பிரித்தார். மக்கள் அவருக்கு எதிராக எழும்பினர். அத்தகைய மக்கள் எழுச்சியை விளக்கிக் காட்டும் வரலாற்றுக் கும்மி பாடலாகச் சீனய்யங்கார் கும்மி தோன்றியுள்ளது.

கும்மியின் காலம்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனித் தாலுகா 1792 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் ஆங்கிலேயருக்குக் கீழ் வந்தது 1799 ஆம் ஆண்டு திப்பு மரணமடைந்த பின்னர்தான் கோவை மாவட்டம் ஆங்கிலேயருடைய ஆட்சிக்குக் கீழ் வந்தது. சீனய்யங்கார் கும்மிப் பாடலின் விளக்கத்திலிருந்து பழனி, மதுரை, கோவை, திண்டுக்கல் ஆகிய பகுதிகள் ஆங்கிலேயருக்குக் கீழ் இருந்ததாக அறியலாம். ஆகையினால் கும்மிப் பாடல் நிகழ்ச்சிகள் கி. பி. 1799 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் உறுதியாக நடந்து இருக்க வேண்டும்.

சீனய்யங்கர் தாசில்தார்பதவி ஏற்ற ஆண்டைக் கும்மிப் பாடல் கூறுகிறது.

'சித்திர பானு வருஷம்வை காபுரிச்
சீர்மையில் தாசிலுஞ் செய்யுமென்று
முத்திரை மோதிரந் தான்கொடுத் துத்துரை
மூர்த்தமுட னங்கே தானனுப்ப' (கண்ணி 18)

என்ற கண்ணியின் வாயிலாகச் சித்திர பானு ஆண்டில் சீனய்யங்கார் பதவி ஏற்க உரிமை வழங்கப்பெற்ற செய்தியை அறியலாம். அறுபது ஆண்டுக்கு ஒரு முறை சித்திரபானு ஆண்டு வரும். ஆங்கில ஆட்சி உறுதியான கி.பி. 1799 ஆம் ஆண்டுக்குப் பின் 1822ஆம் ஆண்டில்தான் சித்திரபானு ஆண்டு வரும். ஆகையினுல் அந்த ஆண்டில் சீனய்யங்கார் பதவிக்கு வந்துள்ளார். ஒரு சில ஆண்டுகள் அவருடைய கடுமையான ஆட்சி நடந்திருக்கும். மக்கள் எதிர்த்து எழும்பி இருக்கின்றனர். ஆங்கில ஆட்சி அவர்களை அடக்க முயன்றுள்ளது. பின்னர் சீனய்யங்காரைப் பதவியிலிருந்து நீக்கம் செய்துள்ளது. அதற்கு மேல்தான் இக் கும்மிப் பாடல் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

சீனய்யங்கார் பதவிக்கு வந்தபோது போது ராபர்ட் (Robert) என்ற ஆங்கில அதிகாரியைப் பற்றியும் மதுரையில் பீற்றர் (Peter) என்பாரைப் பற்றியும் கும்மிப்பாடல் பேசுகிறது. இறுதியில் நெல்சன் (Nelson) என்பவர் சீனய்யங்காரைப் பதவி நீக்கம் செய்கிறார். அவருடைய காலம் 1830 ஆண்டுக்கு முன்னரும் பின்னருமாக அமைகிறது. ஆகையினால் இந்தக் கும்மிப்பாடல் கி. பி. 1840 ஆம் ஆண்டை அடுத்து எழுதப்பட்டிருக்கும் என்று கூறலாம்.

கும்மி தோன்றிய இடம்

பழனித் தாலுகாவை மேற்பார்வை செய்த தாசில்தாரைப் பற்றிக் கூறுவது இந்தக் கும்மிப் பாடல். தொடக்கத்தில் தென் பழனாபுரி என்று இந்த இடத்தைக் கும்மி கூறுகிறது. மேலும் வைகாவூர் என்றும் குறிப்பிடுகிறது. பழனியைச் சுற்றியுள்ள அய்யம் பள்ளி, பூவம் பட்டி, புளியநகர், சரவணப்பட்டி, தாளையம், திண்டுக்கல் பேட்டை, கோவை, மதுரை, அப்புநகர், அப்பிப்பாளையம், மேகரைப்பட்டி, அலங்கை நகர், தாராபுரம், காடை நகர் ஆகிய இடங்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

காடை நகரைச் சேர்ந்தவர் இந்தக் கும்மிப் பாடலை எழுதியிருப்பதாகக் குறிப்புத் தரப்படுகிறது. (கண்ணி 195) காடை நகர் என்பது தாராபுரம் தாலுகாவைச் சேர்ந்த காங்கேயம் நாட்டின் முக்கிய இடமான காடையூராகத்தான் இருக்க வேண்டும். இவ்விடத்தில் மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வீர மரபைச் சேர்ந்தவர்கள் என்று "தீரன் சின்னமலை" போன்ற வரலாற்று நூல்கள் கூறும். 1756ஆம் ஆண்டு பிறந்த சின்னமலை ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த புகழுடையவர். உரிமை வேட்கையுடைய காடைநகரில் இந்தக் கும்மிப் பாடல் உருவாகியுள்ளது.

கும்மியின் ஆசிரியர்

சீனய்யங்கார் கும்மிப் பாடல் ஆசிரியர் மிகத் தெளிவாகத் தன் ஊரையும் பெயரையும் கூறுவதைக் காணலாம்.

'உல்லாச மாய்த்தமிழ்ப் பாடின வன்பேரும்
ஊரும் உரைசெய்யக் கேளுமையா' (கண்ணி 194)

என்று சொல்லியே விளக்கம் தருகிறார்.

வரிசைகள் மிகுதியாகப் பெற்ற பரஞ்சோதி என்பாரது வர்சம் காடை நகரில் மிகவும் புகழுடையது. கருமையான காளியைக் குல

தெய்வமாகக் கொண்டவர்கள். அவளுடைய அருளை நற்பேறாகப் பெற்றவர்கள். மின்னும் முடியினைத் தலையில் புனைந்த மன்றாடியாரின் பரம்பரையாக அது விளங்குகிறது. அந்தக் குடும்பத்தில் நாச்சி முத்து என்பார் ஒருவர். அவருக்கு நான்கு மக்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் மெய்யண்ணன். இந்த மெய்யண்ணனின் மகனான காளியண்ணன் சீனய்யங்கார் கும்மியின் ஆசிரியரராவார்.

நூலாசிரியர் தன் பெயரை நூலுக்குள் சொல்லும் வழக்கத்தையும் மரபையும் பின்பற்றி இந்நூலாசிரியர் தன் பெயரையும் பரம்பரைக் குறிப்பையும் நூலின் இறுதியில் மிகவும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

உணர்த்தும் பொருள்

ஆங்கிலக் கம்பனியாரின்கீழ் பணியாற்றிய இந்திய அதிகாரிகள் மக்களை எவ்வாறெல்லாம் கொடுமைப் படுத்தி வரி வசூல் செய்தனர் என்பதை இக்கும்மிப் பாடல் விளக்குகிறது. மக்கள் கொடுங்கோலை எதிர்த்து அதனை வெல்லுவதைப் பற்றியும் கூறுகிறது. சீனய்யங்கார் என்ற தாசில்தாரின் கொடுமையான ஆட்சியும், அவருக்கு எதிராக மக்களின் எழுச்சியும், முடிவில் அவருடைய வீழ்ச்சியும் விரிவாக விளக்கப் படுவதைக் காணலாம்.

ஆங்கில ஆட்சி முறை

ஆங்கிலக் கம்பனியார் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தி தென்னாட்டை ஆண்டு வருகின்றனர். அவர்களை எதிர்ப்பவர்களையும் தீமைகள் புரிபவர்களையும் ஆங்கிலேயர் தவறாது தண்டிக்கின்றனர். ஏரி குளங்களை உடைத்து விடுபவர்களையும், ஊரைத்தீ வைத்து அழிப்பவர்களையும் உயிர்க்கொலை புரிபவர்களையும் கடுமையான தண்டனைக்கு ஆட்படுத்துவர். நீர் செல்லும் வாய்க்கால்களை அழிப்பவர், கையூட்டு (லஞ்சம்) பெறுவோர், சாலைகளை இல்லாமல் செய்வோர், மக்களை அரசுக்கு எதிராக கூட்டுவோர் அனைவரும் ஆங்கில ஆட்சியின் தண்டனையிலிருந்து தப்பமுடியாது.

தாயாக இருந்தாலும் சரி பிள்ளைகளாக இருந்தாலும் சரி தவறு செய்தவர்களை உறுதியாகக் கண்டிக்க ஆங்கில அரசு தவறுவதே இல்லை என்று கூறுகிறது இந்தக் கும்மிப்பாட்டு. இவ்வாறு ஒழுங்காக நடந்து வந்த ஆட்சியில் சீனய்யங்கார் தாசில்தாராகப் பதவி ஏற்கப் பெரு முயற்சி செய்கிறார்.

சீனய்யங்கார் பதவிக்கு வரல்

சீனய்யங்கார் உடல் வலிமை மிக்க வெங்கிட்டு ஐயரின் மகனாகப் பிறந்தவர். அவர் தாசில்தாராக வர வேண்டும் என்ற ஆவல் கொள்கிறார். அதற்காக அப்பொழுது ஆங்கில அதிகாரியாக இருந்த பீற்றர் (Peter) துரையைக் கண்டு வணங்கி நிற்கிறார். பீற்றர் சீனய்யங்காருக்கு உரிய மதிப்புக் கொடுத்து வரவேற்கிறார். சித்திர பானு வருடம் (கி. பி. 1822) பழனித் தாலுகாவுக்குத் தாசில்தாராகச் சீனய்யங்கார் நியமிக்கப்படுகிறார்.

சீனய்யங்கார் பதவி கிடைத்த மகிழ்ச்சியில் மதுரை மீனாட்சியம்மனையும் சொக்கநாதக் கடவுளையும் வணங்கிய பின்னர் பழனித் தாலுகாவுக்கு வருகிறார். மதுரை நகரை விட்டு வாகன மீதேறி வெளியே வருகிறார். பின் பல்லக்கில் பயணம் தொடர்கிறது. குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குதிரை வண்டியில் வருகின்றனர். அவருக்கு இருபுறமும் காவல் மல்லர்கள் போன்று படை வீரர்கள் காத்து நிற்கவே பல்லக்கு நடுவாக நகர்ந்து கொண்டிருந்தது. சீனய்யங்கார் பதவிப் பொறுப்புடன் வருகின்றார் என்றதும் தாலுகாவைச் சேர்ந்த மக்கள் ஒரு விதமான துடிப்புடன் காணப் பட்டனர். சீனய்யங்கார் பதவி ஏற்றதும் பேரதிகாரப் போதையுடன் காணப்பட்டார்.

சீனய்யங்காரின் குறிக்கோள்

சீனய்யங்கார் ஒரு சாதாரண அதிகாரியாகப் பதவியில் இருக்க விரும்பவில்லை.

'சீனய்யங்கார் வெகுதுஷ்டன் என்றே பேர் எடுக்கவேணும்' என்று விரும்பினதாகக் கும்மிப் பாடல் கூறுகிறது. (பா. 28) தன்னை அனைவரும் வீரன் என்று கருத வேண்டும் என்று விரும்புகிறார். பணம் இல்லையானால் எதுவும் செய்ய முடியாது. ஆகையினால் பதவியில் இருக்கும் போது எவ்வளவு பணம் பெற முடியுமோ அவ்வளவு பணம் பெற வேண்டும் என்று எண்ணுகிறார்.

'கண்ணுள்ள மட்டினிற் கண்காட்சி—பணம்
காசுள்ள மட்டிங் கனயோகம்
விண்ணுள்ள மட்டுமிந்த சீனய்யங் கார்வெகு
வீர னென்றேசொல் விளங்குமென்று' (பா. 29)

திடமாக நம்பிப் பணத்தை எப்படியாவது சேர்க்க வேண்டும் என்ற முடிவுக்குச் சீனய்யங்கார் வருகிறார். பீற்றர் துரையின் தயவு

தனக்கு இருப்பது வரையிலும் யாரைப்பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை என்று நினைத்துச் செயல்படத் தொடங்குகிறார்.

தீய வழிகளில் பணம் சேர்க்க வேண்டும் என்ற துணிவுடன் சங்கிலித் தேவன், பூலாம்பட்டியைச் சேர்ந்த குப்பண தீரன், கருத்திக் கவுண்டன், பாலகிருஷ்ண பிள்ளை, சையது ரவுத்தர், வெங்கிடாச்சாரி ஆகியோரைத் தனக்கு உகந்த காரியக்காரர்களாக சீனய்யங்கார் நியமனம் செய்து கொண்டார்.

சீனய்யங்காரின் கொடுஞ் செய்கைகள்

சீனய்யங்கார் பதவி கொடுத்த காரியக்காரர், தானாபதிகள், மந்திரிகள் ஆகியோர் பல கருத்துக்களைத் தெரிவித்தனர். முகமன் கூறி சீனய்யங்காரை மயங்கச் செய்தனர். அவர்கள் ஊதும் குழலுக்கு ஆடும் பாம்பாகச் சீனய்யங்கார் மாறினான்.

நாட்டாண்மைக்காரர்களை வரவழைத்து நாட்டையும் ஊரையும் அளக்க வேண்டும் என்று ஆணையிடக் கூறினார். அளவு சங்கிலியை நாட்டாண்மைக்காரர் கொண்டு வருதல் வேண்டும் அதோடு அமையாமல்,

'மலையிற் சென்று கிராமங்கள் தோறும்
மராமரங் களைத்தான் பிளந்திடவும்
விலையில் லாமலே வெட்டியாள் பிடித்து
விட்ட மநேகம் வேணுமென்று' (பா. 41)

ஆணையிடுகிறார். நாட்டாண்மைக்காரர் ஆணைக்கு அஞ்சி வேண்டா வெறுப்புடன் சீனய்யங்கார் கொடுத்த சாபிதாவை (சாப்தாவை) வாங்குகின்றனர். ஊருக்கு வந்து குடிகளிடம் அதனைப் படித்துக் காட்டுகின்றனர். குடிகள் சினம் பொங்கி எழுகின்றனர். நிலம் அளப்பதையும் மரம் பிளந்து விட்டம் கொடுப்பதையும் அவர்கள் விரும்பவே இல்லை. எதிர்ப்புக் குரல் எல்லாத் திசையிலும் எழுகின்றது. அவர்களைத் தாசில்தார் சீனய்யங்காரிடம் சென்று கூறுமாறு நாட்டாண்மைக்காரர் கூறுகிறார்கள்.

மக்களின் எழுச்சி

கிராமங்கள் தோறும் மக்களின் எழுச்சி தோன்றுகிறது. ஒவ்வொரு ஊரிலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு பேர்கள் செல்ல வேண்டும் என்று முடிவு செய்கின்றனர். புளிய நகரைச் சேர்ந்த

சாமியண்ண தீரன், செல்லப்ப தீரன் ஆகியோர் நன்கு சிந்தித்துச் சில முடிவுகளுக்கு வருகின்றனர். சரவணப் பட்டி பெரிய தம்பி, தாளையம் சின்னத்தம்பிக் கவுண்டன், காளியண்ண தீரர் ஆகியோரும் கூடிப் பழனிக்குச் செல்ல தீர்மானிக்கின்றனர். அடுத்த நாள் அனைவரும் பழனியில் சீனய்யங்காரைச் சந்தித்துப் பேசுகின்றனர்.

சீனய்யங்காரின் செயல்

தன் விருப்பத்துக்கு மாறாகக் கிராமத்திலுள்ள வீரர்கள் கூடிக் கலந்து தன்னிடம் விளக்கம் கேட்க வந்துள்ளனர் என்பதை அறிந்த சீனய்யங்கார் சிறிது வேகம் கலந்த குரலில் அவர்களைப் பார்த்து,

'ஆளுக்குப் பத்தஞ்சு
அபரா தம்கொடுப் பீரென் றார்'. (பா. 52)

மக்களிடமிருந்து வீரர் மறுத்து விடுகின்றனர்.

எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அவர்களைக் கொன்றாலும் மரம் வெட்டல் செய்வதில்லை என்று கூறி விடுகின்றனர். அதைக் கேட்டதும் சினத்தால் கொதித்து எழுந்த சீனய்யங்கார் அந்த வீரர்களை 'மேங்காட்டில்' அடைத்து விடுமாறு ஆணையிடுகிறார். அந்த இடத்தில் அடைபட்டுச் செயலின்றி இருப்பது சரியன்று என்பதை அனைவரும் கருதினர்.

மக்களின் மேற்செயல்

கம்பனியைச் சேர்ந்த வெள்ளைக்கார அரசு நல்லது செய்யும் என நம்பி மக்களின் தலைவர்கள் திண்டுக்கல்லுக்குச் செல்ல முடிவு செய்தனர். சீனய்யங்கார் தங்களைக் கோட்டைக் கீறி நிறுத்தியதை நினைத்து கலங்கினர். இறுதியில் சீனய்யங்காரைப் பார்த்து,

'விறுதாவிலே எங்களைக் கொன்றா லும்பணம்
வீட்டி விருந்து கொடுப்போமா? (பா. 62)

என்று உறுதி தளராது கிரமத்து வீரர் கேட்டனர். தங்களை அச்ச முறுத்திப் பண பெறமுடியாதென்று கடுமையாகக் கூறினார்கள். உயிர் போனாலும் உறுதியில் தளருவதில்லை என்று சீறினர். பின்னர் மக்கள் கம்பனிக்காரரிடம் செல்வதே முறையெனக் கருதினர்.

மக்கள் திண்டுக்கல் செல்லல்

திண்டுக்கல்லில் இருக்கும் கம்பனி அதிகாரியிடம் சொல்லித் தங்களுடைய குறையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று பல

ஊர்களிலுள்ள தலைவர்கள் முடிவு செய்தனர். அப்பு நகரைச் சேர்ந்த வெள்ளையண்ண தீரன், மாரப்ப தீரன், உத்தண்டிக் கவுண்டன் ஆகியோர்,

'சாந்த சற்குண தீர னதிபரன்
தண்டமிழ் வாணர்க் குபகாரன்
வேந்தர் சூடாமணி அப்பிப் பாளையம்
வீரண கவுண்டன் தன்னுடனே' (பா. 66)

புறப்பட்டனர். இவர்களுடன் புளிய நகரைச் சேர்ந்த புகழ்பெற்ற தேவண்ன், சின்னயன் ஆகிய இருவரும் இணைந்து கொண்டனர்

'எல்லோருங் கூடியே சீனய்யங் கார்தனை
இகழ்ந்து விட்டு வெளியேறி
நல்லதோர் சாலைவழி கூடி யங்கே
நாடினார் திண்டுக்கல் நன்னகரில்' (பா. 68)

திண்டுக்கல்லில் கம்பனி அதிகாரியாக இருக்கும் ஆங்கிலேயர் ராபர்ட் துரை என்பார். அவரிடம் தாங்கள் சீனய்யங்காரைப் பற்றிப் பேச வேண்டிய குறைகள் அனைத்தையும் ஆதியோடு அந்தமாக மிக விரிவாக எழுதிக் கொடுத்தனர்.

அனைத்தையும் ஆங்கில அதிகாரி படித்துப் பார்த்து சீனய்யங்காரை வரவழைத்துக் கேட்டான். தாசில்தார் மேல் மிகுதியான குற்றங் குறைகள் இருப்பதைக் கண்டறிந்ததும் அவரைக் கண்டித்து அனுப்புகிறார். பின் நாட்டாண்மைக்காரரையும் மற்றுள்ள குடிமக்களையும் கண்டு ஆறுதல் கூறி,

'தாலுகா முன்சென்று வாயிதாப் பணங்களை
தற்கமில் லாமற் கொடுங்களென்று' (பா. 74)

வேண்டுகிறான். குடிகள் மனம் மகிழ்ந்து திரும்பிச் செல்கின்றனர். சீனய்யங்காரைப் பதவி விலக்கி விட்டதாகவே கருதினார். அந்த மகிழ்ச்சியில் கந்தசுவாமி கோயிலில் விழாவும் எடுத்தனர்.

சீனய்யங்காரின் தந்திரமும் அதிகாரக் கடுமையும்

சீனய்யங்கார் மிகவும் தந்திரமாக மதுரைக்குச் சென்றார். அங்குக் காண வேண்டியவர்களைக் கண்டு பணம் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து தான் பதவியைக் காப்பாற்றிக் கொண்டு விடுகிறார். மதுரையில் இருந்த ஆங்கில மேலதிகாரியான

பீற்றர் துரையின் நல்ல மதிப்பைக் கையூட்டு, கால் கை பிடிப்பு ஆகியவற்றின் மூலம் சீனய்யங்கர் உறுதி செய்து விடுகிறார். கம்பனி அதிகாரிக்கு வேண்டியது பதவி. பணம் கைமாறியதும் பதவி உறுதி செய்யப்படுகிறது.

'நல்லவ னாக அனுப்பிக் கொண்டந்த
நன்னகர் விட்டு வெளியேறி
வல்லவ னாகிய சீனய்யங் கார்பின்னும்
வந்தார் பழனிப் பதிதனிலே' (பா. 79)

பழனிக்குச் சீனய்யங்கார் பதவியுறுதியுடன் வந்ததும் காரியக் காரர்களை வரவழைக்கிறார். தாடிக்காரர்களாகிய ஆங்கில அதிகாரிகளுக்கு இடமில்ல மல் பணம் வாங்குவது எப்படி என்று அவர்களுடன் ஆலோசிக்கிறார்.

மந்திரியாக இருந்த சங்கிலித் தேவரும் மற்றுமுள்ள காரியக் காரர்களும் தந்திரமாகவே பணத்தைத் தரகாகப் பலமுறைப் பெற்றவர்கள். அவர்கள் தீயவழிகளைச் சீனய்யங்காருக்குச் சொல்லி கொடுப்பது உறுதி. நிலங்களில் பயிரிடுவோர் ஒருவருக் கொருவர் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவது இயல்பு. அந்த வழக்குகளைத் தாசில்தாரிடம் சொல்லி நியாயம் வழங்குமாறு வருவர். அவற்றை முறையாகக் கேட்டுச் சீனய்யங்கார் நியாயம் வழங்குவதில்லை. ஆகையினால் குடிமக்களிடம் அமைதியின்மை நிலவத் தலைப்பட்டது. வழக்குகளுடன் வரும் இருவரையும் ஓர் அறைக்குள் அடைத்து வைத்து அவர்களிடம் 'பத்தஞ்சு' பணமாக வாங்குவதும் உண்டு.

வரிப்பணத்தை வாங்க வேண்டிய நாட்களில் கண்டிப்புடன் வாங்கினாலும் பலசமயம் சிறிது பிந்தி விட்டது என்று கூறி 'அபராதம்' வாங்கும் அநியாயத்தைக் கூசாமல் செய்யும் கொடு மைக்காரராகச் சீனய்யங்கார் விளங்கினார். சிறிது வாய்ச் சொல் தவறினாலும் அவர்களுக்கு அபராத கொடுத்து விடுவார். வீதியில் கண்டவர்களையும் தற்காலிகச் சிறையிலடைத்து கையிலிருக்கும் பணத்தைப் பிடிங்கிக் கொள்வதும் உண்டு. வம்பாக அடிப்பதும் தவறாகக் கொள்ளையடிப்பதும் சீனய்யங்கார் வாழ்வின் வழக்க மாக நடக்கும் முறையற்ற செயல்களாகும். பழனி கம்பனியருக்குக் கீழுள்ள இடம் என்ற எண்ணமே இல்லாமல் சீனய்யங்கார் தன் போக்கில் ஆட்சி செய்து வந்தார்.

சீனய்யங்காரின் தூண்டுதலின் பேரில் இலட்சுமணன், இருளாண்டி ஆகிய இருவரும் குடிகளுக்குச் செய்த துன்பங்களுக்கும்

கொடுமைகளுக்கும் அளவே இல்லை. தங்கள் விருப்பம் போல் கொள்ளையடிக்கத் தொடங்கி விட்டனர். மேலும்,

'கச்சேரி யிலுள்ள பேர்களெல் லாமின்னங்
கைலஞ்சம் வாங்கத் துணிந்தார்கள்
அச்ச மில்லாதொரு பழனிச் சீர்மையில்
அனியா யங்கள் பெருத்ததுகாண்' (பா. 91)

இவ்வாறு தாங்க முடியாத அளவுக்குப் பழனியில் கொடுமைகள் பெருகின. மக்கள் மனங்கலங்கினர். இனித் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூடிக் கலந்து பேசத் தொடங்கினர்.

மக்கள் மதுரை பெரிய அதிகாரியைக் கண்டுரைத்தல்

குடிகள் ஒன்று கூடி மேலதிகாரியிடம் சொல்லி கொடுமை நீக்கம் பெற விரும்பினர். பல ஊரைச் சேர்ந்த மக்கள் சேர்ந்தார்கள்.

'மாகரை யருகுள்ள மேகரைப் பட்டியார்
மற்று மெண்ணான்கு கிராமத்தார்
சேகர மாகவே தான்கூடி யங்கே
சென்றார் மதுரைத் திசைநோக்கி'

அந்த மக்களுக்குத் தலைமை தாங்கிச் சிங்கம் போன்ற வீரன் தாளை நகரத்தில் தோன்றிய சின்னத் தம்பிக் கவுண்டன் முன்னால்நடந்தான். ஓங்கிய மலைகடந்து உற்ற சாலை வழிநடந்து வைகை நதி சூழும் மதுரை நகரில் வந்து சேர்ந்தார்கள். தங்களுடைய குற்றம் குறைகள் அனைத்தையும் ஒரு தாளில் எழுதி மதுரை மாவட்டத் தலைவரான (Collector) பீற்றர் துரையிடம் Peter) கொடுத்தனர்.

குடிமக்கள் கொடுத்த தாளைக் கோபமுடன் பார்த்த அதிகாரி சீனய்யங்கார் அனுப்பியதை ஆவலுடன் அமைதியாகப் படித்துப் பார்த்தார். பின்னர் சின்னத் தம்பி தீரன் யாரென்று கேட்டார். உடனே சின்னத் தம்பி தீரன் மரியாதையாக முன் சென்று வணக்கம் செலுத்தினார். அவரைக் கண்டதும் ஆங்கில அதிகாரியான பீற்றர் கோபத்துடன் தாசில்தார் சீனய்யங்காருக்கு எதிராகக் குடிகளை எழுப்பி விடும் துரோகி நீதானா! என்று கேட்கிறார். சின்னத் தம்பியைச் சிறையிலடைத்து விடுவதாக அச்சுறுத்தினார். இவை அனைத்தையும் கேட்ட சின்னதம்பித் தீரனுக்குச் சினம் பொங்கி விட்டது.

ஆங்கில அதிகாரி அநியாயமாகச் செயல்படுவதை வீரமாக எடுத்துக் கூறினார். அஞ்சா நெஞ்சத்துடன் அவரைப் பார்த்து,

'தோசித் துரையே! சுழிகேடா! நாங்கள்
சொன்ன பிராதொன்றுங் கேளாமல்
தாசிலு தாரன்சொல் மேன்மைகொண்டா யுன்தன்
தாயினுக் கிளையவர் தன்மகனோ' (பா. 105)

என்று சின்னத் தம்பி வேகமாகக் கேட்டு விடுகிறார். சீனய்யங்கார் பழனியில் அதிகாரியாக இருப்பது வரையிலும் தாங்கள் அங்கு இருப்பதில்லை என்று உறுதியாக மொழிகிறார். இனி அங்கு சென்றால் சீனய்யங்கார் தங்களைக் கொன்றிடுவான் என்று மதுரை அதிகாரியிடம் எடுத்துச் சொல்கிறார்.

இவற்றைக் கேட்ட மதுரையிலுள்ள ஆங்கிலப் பெரிய அதிகாரியான பீற்றர் துரை சிறிது தணிந்து தான் பழனிக்கு வந்து நேரில் அனைத்தையும் கேட்டுத் தீர்ப்புக் கூறுவதாக வாக்களித்தார். அனைவரையும் அவரவர் ஊருக்குத் திரும்பிப் போகுமாறு வேண்டினார். அதைக் கேட்டதும் குடிமக்கள் மனந்தேறி இன்னொரு முறை பார்க்கலாம் என்று முடிவு செய்து திரும்பிச் சென்றனர்.

பீற்றர் துரை பழனிக்கு வரல்

பீற்றர் துரை சொன்ன சொல் தவறாது பழனிக்கு வந்து சேர்ந்தார். சீனய்யங்காரைத் தனியாகச் சந்தித்துத் தனியாகச் சிலவற்றைத் தந்திரமாகக் கூறினார், சீனய்யங்காரிடம் எதற்கும் அஞ்ச வேண்டாம் என்று உறுதி கூறியபின் மக்களைச் சந்திக்க முன் வந்தார்.

சின்னத் தம்பி கவுண்டனை உடனே அழைத்து வருமாறு மதுரை அதிகாரி ஆணையிட்டு ஆள் அனுப்பினார். சின்னத் தம்பி மிகவும் மகிழ்ச்சியாக அவரைச் சந்திக்க ஆவலுடன் விரைந்து வந்தார். நல்லது செய்யவே பீற்றர் துரை பழனிக்கு வந்திருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் சின்னத்தம்பி அவர் முன் வந்து வணங்கி நின்றார். அவரைப் பார்த்ததும் ஆங்கில அதிகாரி சீறிச் சினந்து,

'தாசிலு தாரன்முன் நீதா னோவெகு
தாக்க முடன்வந்து பேசினவன்

கூசாமலே யிந்த சீர்மை யழிந்தனை
குத்திரஞ் செய்தவன் நீதானா? (பா. 120)

என்று பெருங்குரலில் கேட்டார். குடிகளிடம் வரி பிரித்து அவர்களை ஆட்சிக்கு எதிராக மூட்டிவிட்ட துரோகி என்று சின்னத் தம்பியை ஆங்கில அதிகாரி குற்றம் சுமத்திப் பேசினார்.

சற்றும் எதிர்பாராது இப்படி நேர்மாறாக மதுரை அதிகாரி பேசியதைக் கேட்டதும் சின்னத்தம்பி கோபத்தால் துடித்து எழுந்தார். வேகமாகப் பேச முனைந்தார்.

'தாசிலு தாரனுக் கொத்தாசை யாய்வெகு
சார்புடனே ஞாயம் பேசுகிறாய்
காசு பணங்க ளனேக முனக்கவன்
கைலஞ்ச மாகக் கொடுத்தானோ' (பா. 123)

என்று ஆங்கில அதிகாரியைப் பார்த்துச் சின்னத் தம்பி கேட்கிறார். அவர் பேசுவது 'தடியடி ஞாயம்' என்று வெளிப்படையாகக் கூறுகிறார். எழுபத்திரண்டு பாளையப்பட்டுக்குத் தலைவராக இருக்கும் அதிகாரி இவ்வாறு பேசுவது சரியில்லை என்று சொல்கிறார். இவ்வுரையினைக் கேட்டதும் ஆங்கில அதிகாரி கோபத்தால் கொதித்து எழுந்தார்.

பீற்றர் துரை சினத்தில் என்ன செய்யப் போகிறார் என்று அனைவரும் அச்சத்துடனும் ஆவலுடனும் நின்ற போது,

'தென்னவன் மெச்சிய கண்டிய கவுண்டன்
தெம்புள்ள மாரப்ப தீரனையும்
சின்னத்தம் பிக்கவுண்டன் தன்னுடன் மூன்றுபேர்
சில்லா வைவிட் டகலுமென்றான்'. (பா. 127)

இந்த ஆணையைக் கேட்டதும் சின்னத் தம்பிகவுண்டன் சிறிதும் அஞ்சாது நகைப்புடன், இந்த இடத்தை விட்டால் வேறு புகலிடம் இல்லை என்று நினைத்து விட வேண்டாம் என்று கூறினார். இவ்வுலகில் வாழ்வதற்கு எவ்வளவோ இடமிருக்கிறது என்று சொல்லி அவ்விடத்திலிருந்து சின்னத் தம்பிக் கவுண்டன் அகன்று சென்றார்.

குடிகள் பலர் அலங்கை நகரில் கூடித் தங்கள் எதிர்காலம் பற்றி விரிவாகப் பேசினர். பின்னர் ஒன்றாக இணைந்து,

'தாபக மாகிய தாரா புரந்தனில்
தாசீலு தாரனைச் சென்றுகண்டு
கோயம் புத்தூருத் துரைக்கெழு தியங்கே
குடியிருப் புக்கிடம் வாங்கிடுவோம்' (பா. 131)

என்ற முடிவுக்கு வந்தனர். இதனை அறிந்த ஆங்கில அதிகாரி சீனய்யங்காருடன் தனியாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்தார். அதனை ஒரு தாளில் எழுதி குடிகளுக்கு அனுப்பினார். அதனை ஏற்று மக்கள் திரும்பவும் பழனிக்கு வந்தனர். குடிகள்,

'சென்று நடந்து பழனி நகர்தனிற்
செல்லுமுன் னேதுரை தானெழுந்து
இன்று பிழைத்தோம் பிழைத்தோ மென்றே
ஏகினார் சாலை வழிகூடி' (பா. 139)

குடிகள் பீற்றரை விடவில்லை. அவரைத் திரும்பவும் சந்தித்தனர். ஆங்கில அதிகாரி சற்றுத் தணிந்து தங்கள் குற்றங் குறைகளை மேலதிகாரியிடம் கூறலாம் என்று அனுமதி எழுதிக் கொடுத்து விடுகிறார். இத்தகைய அனுமதியினை எழுத்து மூலம் பெற்ற குடிமக்கள் அதற்காக இறைவனுக்கு நன்றிகூறி இன்பமாக இருந்தனர்.

சீனய்யங்காரின் ஆடம்பர நிலை

சீனய்யங்கார் எதற்கும் மயங்கவில்லை முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்பொழுது ஆடம்பரமாக வாழத் தலைப்பட்டு விட்டார். தெருவழியாக உலா வரத் தொடங்கினார்.

சிவிகை மீது ஏறிக் கொம்புகள் ஒலிக்க வாண வெடிகள் அதிர சீனய்யங்கார் பவனி வருகிறார் இசைவாணர் பாடி வர, குழல் மாதர் ஆடி வர, காரியக்காரர் இருபுறமும் நடந்து வர உலாத் தொடர்கிறது. சாரட்டு வண்டிகளும் செல்லுகின்றன. பஞ்சவர்ணக் குடை மேலே நிற்கின்றது. சேவகர் சூழ்ந்து வருகின்றனர். இத்தகைய வருகையை ஊருக்கு ஊர் அறிவிக்குமாறு சீனய்யங்கார் ஆணை பிறப்பித்தார்.

ஆணையைக் கண்டு அஞ்சிய குடிமக்கள் தங்கள் ஊரை அலங்காரம் செய்தனர். தடிக்கஞ்சும் குரங்கு போலச் செயல் பட்டனர்.

'பூலோகத் தெய்வச் சிவாலயம் போலவே
பூப்பந் தலிட்ட லங்கரித்து
மேலாக வேசிறு மாத்துகள் கட்டினார்
மெய்யிற் புழுதியுந் தாவமல்' (பா. 156)

வாயில்களில் வாழை மரங்கள் நாட்டினர். மணமலர் மாலைகளைத் தொங்க விட்டனர். பலவிதமாகத் தோரணங்கள் கட்டி ஒப்பனை செய்து வைத்தனர். இந்நிலையில் சீனய்யங்கார் ஒய்யாரமாக வந்து இறங்குகிறார். அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் குடிகள் குறையின்றி செய்ய வேண்டும். இல்லையானால் சேவகர் கொள்ளையடித்து விடுவர். சீனய்யங்காரின் மதி கெட்ட நிலையில் பல விதி கெட்ட செயல்களைச் செய்யத் தொடங்கினார்.

சீனய்யங்காரின் சீர்கேடுகள்

சீனய்யங்காரின் கொடுமையான செயல்கள் பெருகின. யாராவது அறியாமல் கிணற்றில் விழுந்து மடிந்தாலும், மதிமோசம் தெரியாமல் ஏமாற்றப் பட்டாலும், மறைவான இடத்தில் திருடர்களால் அடிக்கப் பட்டாலும், ஊரில் ஏதாவது திருட்டு நடந்தாலும்,

தாவும் விசனம் பொறுக்கா மலொருத்தன்
தன்னாலே தானே மடிந்தாலும்ர்' (பா. 162)

அவற்றால் ஏற்படும் சிரமங்களும் சேதங்களும் போதாதென்று சீனய்யங்காருக்கு ஐந்நூறு அல்லது ஆயிரம் என்று ரூபாய் கொடுக்க வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. தனக்கு வேண்டியவரை நாட்டாண்மைக்காரராக்கி வேண்டாத பேர்களை விலக்கி விடுவது வழக்கமாகி விட்டது. தான் செய்யும் பழி பாவங்களைப் பற்றிக் கவலைப் படாமல் தானே தலைவன் என்று கருதிச் சீனய்யங்கார் செயல் பட்டார். குடிகள் கொடுமை தாங்காது வருந்தினர்.

குடிகள் கடவுளை வேண்டல்

கம்பனி அதிகாரிகளைக் கண்டு முன்னர் சொல்லியும் பயனில்லாததினால் மக்கள் அவர்களை நம்பாது கடவுளை வேண்டினர்.

'கும்பினியார் ஞாயங் கேள்வி யில்லாமலே
கொள்ளைக் கிடமாச்சு தென்றுசொல்லி

தம்பி ரானாகிய கந்த சுவாமியைத்
தஞ்சமென் றெல்லோரு மபையமிட்டார்’ (பா. 167)

பழனியாண்டவனை வணங்கிப் பணிந்தனர். எங்கும் நிறைந்த இறைவனை வேண்டினர். முருகனைப் பலவாறு புகழ்ந்து தங்கள் துயரைக் களைந்து காக்க வேண்டும் என்று இறைஞ்சினர். முன்னாளில் சூரனை அழித்துத் தேவர்களின் துயரைப் போக்கியது போல் இன்னாளில் சீனய்யங்காரைப் போக்கித் தங்கள் துன்பத்தை நீக்க வேண்டும் என்று இரக்கத்துடன் பணிந்து கேட்டனர்.

குடிமக்களின் வேண்டுதலுக்கு அருள்செய்யக் கருதிய இறைவன் கம்பனி அதிகாரிக்குக் கனவாகச் சில செய்திகளைக் கூறினார். அதைக் கேட்டு நெல்சன் துரை (Nelson) பழனிச் சீமையில் நடக்கும் தீமைகளைக் கண்டறிய ஆட்களை அனுப்பினார்.

சேவகர் உண்மை அறிதல்

சேவகர்கள் பழனிச் சீமைக்கு விரைந்து சென்றனர் மக்கள் சீனய்யங்காரைப் பற்றிக் கூறுவதை மறைவாகக் கேட்டு அறிந்தனர். மாதர்கள், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் அனைவரும் சீனய்யங்காரைப் பற்றி மிகக் குறைவாகப் பேசியதை எங்கும் நிறையவே கேட்டனர். அனைவரும் சீனய்யங்காரைப் பாதகன் என்றே கூறினர். இதனை அவர்கள் நெல்சன் துரையிடம் கூறினர். அவர் அடுத்த நாள் அதைப் பற்றி நேரில் கேட்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

சீனய்யங்காரின் ஐயப்பாடும் ஆலோசனையும்

சேவகர்கள் பழனிச் சீமையில் வந்து செல்வதை அறிந்த சீனய்யங்கார் ஏது ஒன்று நடக்கப் போவதாகக் கருதி மனதில் வருத்தமும் ஐயப்பாடும் கொண்டார். தீமைதான் நடக்கும் என்று கருதினர்.

தனக்கு உதவியாக உள்ள மந்திரிகளை அழைத்து ஆலோசனை கேட்கிறார். தானாபதியும் மந்திரிகளும் தந்திரமாகப் பதில் சொன்னார்கள். மறைமுகமாக நெல்சன் துரை விசாரணைக்கு வருவதையும் கூறிவிட்டார்கள். சீனய்யங்காருக்கு அது ஒரு சோதனைக் காலம் என்பதை உணர்த்தினர். தங்களால் ஒன்றும் உதவ இயலாது என்ற உன்மையினைக் கூறிவிட்டனர் கம்பனி அதிகாரி நடப்புகளை நன்ருகத் தெரிந்து கொண்டார்

'சீனய்யங்கார் தீரன் தான் கேட்டங்கே
சீக்கென் றடங்கினான் வீடுதன்னில்
தானாபதியாரும் மந்திரி மார்களும்
தனித்தளப் புகள்தான் பேசிடவே' (பா. 185)

சீனய்யங்கரை விட்டுவிலகினர். தீங்கு வருவதற்கு முன் அனைவரும் ஒதுங்கி விட வேண்டுமென முடிவு செய்தனர்.

'தாயப் படுகின்ற சீனய்யங் காருக்குத்
தந்திர மொன்று முரையாமல்
சீவன் பிழைத்தா லேபோது மென்றவர்
திக்கெங்கு மோடி யொழிந்தாரே' (பா. 188)

பழனிச் சீமையில் குடிகளுக்கு எதிராகக் கொடுங்கோல் செய்த சீனய்யங்காரும் அவருக்கு உதவிய அநியாயக்காரரும் நடுநடுங்கி நாடு விட்டோட நாடித் தவித்தனர்.

நீதியுள்ள நெல்சன் துரையின் நற்செயல்

திண்டுக்கல்லில் இருந்து நெல்சன் துரை பழனிக்கு வருகிறார் அவரிடம் குடிகள் சீனயங்காரின் கொடுமையான செயல்கள் பற்றிக் குறை கூறுகின்றனர். அனைத்தையும் அமைதியாகக் கேட்டு அறிந்த நெல்சன் துரை உடனே சீனய்யங்காரைப் பழனித் தாலுக்காவை விட்டு வெளியேற்றி,

'அரசு நிலைகுலை யாம லிந்த
அம்புவி யெங்கு மொருநிரையாய்
திராசு போலவே நிறையாக யிந்தச்
சீமைக ளெங்கும் செளித்திடவே.' (பா. 193)

வழிவகைகளை முயன்றார். மக்கள் மன அமைதியடைந்தனர். பழனிச் சீமை சிறப்படையும் என நம்பி மகிழ்ந்தனர்.

வரலாற்றுச் செய்திகள்

சீனய்யங்கார் கும்மியின் வாயிலாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பனியரின் ஆட்சியின் கீழ் பழனித் தாலுக்காவின் நிலை என்ன என்பதைச் சிறப்பாகவும் மதுரை மாவட்ட நிலை என்ன என்பதைப் பொதுவாகவும் அறிய முடியும். சென்னை மாகாணத்தின் கீழுள்ள ஒரு மாவட்டம். (ஜில்லா) மதுரை. இதற்கு உட்பட்டது பழனிச்

சீமை, மதுரையில் ஒரு பெரிய ஆங்கில அதிகாரி இருக்கிறார். அவருடைய அனுமதியின் பேரில் பழனியில் சீனய்யங்கார் என்ற தமிழர் தாசில்தாராக இருந்து வருகிறார். ஆங்கில அதிகாரியின் அரவணைப்பு இருப்பது வரையிலும் இந்தத் தமிழரை யாராலும் எதுவும் செய்ய முடியாது. அப்பகுதிக்கு அவரே அரசர் போன்று ஆண்டு அனுபவிக்கலாம்.

குடிகளிடம் இவ்வளவுதான் வரி பிரிக்க வேண்டும் என்ற வரம்பை மேலிடம் வகுப்பது இல்லை. ஆனால் ஒவ்வொரு தாலுகாவிலிருந்தும் இவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்ற கணக்கு உண்டு. தாசில்தார் எவ்வளவு பணம் பிரித்தாலும் இந்தக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவிட வேண்டும். இல்லையென்றால் மேலதிகாரி தாசில்தாரிடம் வினா எழுப்பிக் காரணம் கேட்கலாம். சில தாசில்தார்கள் குடிகளிடம் அன்புடன் நடப்பார். சிலர் கொடுமையாகச் செயல்படுவர். சீனய்யங்கார் கொடுமையான முறைகளில் குடிகளைக் கசக்கிப் பிழிந்தவர். அவருடைய ஆட்சியில் அமைதியும் இல்லை; ஆதரவும் இல்லை.

மக்கள் ஆட்சியாளருக்கு எதிராகப் பேசுவதோ செயல்படுவதோமிக மிகக் கடினம். அதிகாரிகள் அவர்களை எவ்வளவு-கொடுமைப் படுத்தினாலும் கேட்பதற்கு ஆள் இல்லாதது போல் தான் நிலைமை இருக்கும். தவறு செய்யாமல் இருப்பவரையும் தண்டிக்கும் தறுதலையான போக்கு சீனய்யங்கார் போன்ற தாசில்நார்களிடம் இருந்தது. கையூட்டு (லஞ்சம்) வாங்குவதைக் கண்டிக்கும் மேலதிகாரிகள் மிகவும் குறைவு. கட்ட வேண்டியதை மேலே கட்டி விட்டால் கையூட்டு வாங்குவதைப் பற்றியோ கை விலங்கு போடுவதைப் பற்றியோ மேலதிகாரிகள் சிறிதும் கவலைப்படுவதில்லை.

மக்கள் பொறுமை இழந்து அதிகாரிக்கு எதிராகக் கிளம்புவதும் உண்டு. அவர்களைக் கொடுமைப் படுத்தி அடக்கவே அதிகாரிகள் முயல்வர். பல மேலதிகாரிகள் கீழதிகாரிகளுக்கு ஆதரவாகவே இருப்பர். அவர்கள் செய்தவை தீயவாக இருந்தாலும் அதைப் பற்றிச் சற்றும் கவலைப் படாது கீழதிகாரிகளை ஆதரிப்பர் மக்களை ஏமாற்றுவதற்கு அஞ்சுவதே இல்லை. ராபர்ட்(Robert) போன்ற மேலதிகாரர்கள் இத்தகைய போக்கை உடையவர். ஆனால் நெல்சன் போன்றவர் நேர்மாறான போக்குடையவர். உண்மைகளைக் கண்டறிந்து தீயவற்றைக் களைய முயல்வர். அதிகாரிகள் தவறு செய்தாலும் அவர்கள் விடுவதில்லை. குடிகள் வரிசெலுத்துவதுடன் நன்றாக உழைத்துக் கருத்தாக வாழவேண்டும் என்ற கொள்கையுடையவர்.

மக்கள் எவ்வளவுதான் ஒற்றுமை கொண்டு ஆட்சியிலிருப் பவரை எதிர்த்தாலும் எளிதில் அதிகாரிகளை ஒன்றும் செய்ய முடியாது. பணமும் பதவியும் அவர்களுக்கு அளவற்ற பலத்தை அள்ளிக் கொடுத்து விடுகிறது. பதவியிலிருப்பவர்களை மக்கள் அதிகமாக மதித்து பாராட்டுகிறார்கள். பெரும்பாலும் எதிர்க்கத் துணிவதே இல்லை. எதிர்த்தால் கடுமையான வழிகளில் அடக்கப் பட்டு விடுகிறார்கள்.

தாசில்தார் போன்ற அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களை மாத்திரமே காரியக்காரர் போன்ற பணிகளில் நியமனம் செய்கின் றனர். இத்தகைய கீழ்ப் பணியாளர்கள் குடிகளிடம் நடந்து கொள்ளும் முறை கண்டிக்கத் தக்கதாக இருக்கும். இவ்வாறு நடப்பதைத் தடுப்பதற்கு விதிமுறைகள் இல்லை.

பொறுப்பது வரை பொறுக்கும் குடிகள் முடியாத நிலையில் ஆட்சிக்கு எதிராகக் குரல் எழுப்புகின்றனர். மேலதிகாரிகளைச் சந்திக்கின்றனர், ராபர்ட் போன்றவர்கள் மக்களை ஏமாற்றுகிறார் கள். நெல்சனைப் போன்ற நல்ல அதிகாரிகள் மக்களுக்கு ஆதரவாகத் தவறு செய்தவர்களைப் பதவி இறக்கம் செய்து தண்டிக்கத் துடிக்கிறார்கள். அதிகாரிகளில் நல்லவரும் தீயவரும் உள்ளனர். தீயவர் பதவியிறக்கப் படுவது உறுதி என்பதை இந்த வரவாற்றுக் கும்மி நிறுவியுள்ளது.

மக்கள்குடி என்று இக்கும்மிப் பாடல் பொதுவாகக் கூறினாலும் தனியாகக் குறிப்பிடுவது ஊரிலுள்ள வலியவர்களைத்தான் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு ஊரிலும் பணத்தாலும் பலத்தாலும் வலிமையுடையவர்களே பொதுமக்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கிறார்கள். பல ஊர்களைச் சேர்ந்த வலியவர்கள் கூடிச் சேர்ந்து மேலதிகாரிகளைச் சந்திக்கிறார்கள். அவர்களில் திறமை யானவரே தலைமை தாங்கிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார். தீரன் சின்னத் தம்பி அத்தகைய தலைவராக இக்கும்மியில் தோன்றுகிறார். தலைவர்கள் கூறுவதைக் குடிமக்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்.

சாதாரண மக்களைப் பற்றி வெளிப்படையாகக் கும்மிப்பாடல் பேசவில்லை. ஆனால் அவர்களுடைய அவல நிலையைக் குறிப்பாக உணர்ந்து கொள்ள சில இடங்கள் உள்ளன. இயற்கை யின் சீற்றத்துக்கு எதிராக ஒன்றுமே செய்ய முடியாது தவிக்கும் இன்றைய மனிதனைப் போன்று அன்றைய குடிமக்கள் அதிகாரி களின் வெறித்தனத்தை எதிர்க்க முடியாது அவதிப்பட்டிருக்

கின்றனர். அறிவியலார் (Scientists) இயற்கையை கட்டுப்படுத்த முயல்வது போன்று அன்றைய ஊர்ப்பெரியவர்கள் அதிகாரிகளின் ஆணவப் போக்கைக் கண்டித்து அடக்க முயன்றுள்ளனர்.

பொதுமக்கள் அச்சத்துக்கு ஆட்பட்டு அதிகாரத்துக்கு அடங்கி வாயில்லாப் பிள்ளையாகவே வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் சீனய்யங்கார் மிகக் கொடிய அதிகாரியாக இருந்த போதிலும் அவர் ஊர்கோலம் வருகிறார் என்றதும் அந்த ஊரை அலங்கரித்த காட்சியைக் கும்மிப் பாடல் விளக்குகிறது. உழைத்துக் களைப்பதும் அச்சத்துடன் அடங்குவதும் அதிகாரத்துக்குப் பணிவதும் பழியினை ஏற்பதும் வரிப்பாரம் சுமப்பதும் அக்காலத்துப் பொதுமக்களின் அவலநிலை என்று நினைக்க இடமுள்ளது.

கும்மியின் நடைப் போக்கு

சீனய்யங்கார் கும்மியிலுள்ள பாடல்கள் கும்மிக்கு உரிய கண்ணிகளாகவே உள்ளன. அவற்றில் புலவர் கையாளும் மொழி நடையில் சில தனித்தன்மைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. ஒரே ஊரைஅதற்கு உரிய பல பெயர்களால் சிறப்பாக அழைக்க ஆசிரியர் விரும்பியுள்ளார். பழனியைத் தென்பழனாபுரி (பா. 1) வைகாபுரி (பா. 18) போன்று பலவாறு கூறுகிறார்.

மக்களிடம் பழக்கத்திலுள்ள சொற்களையே பயன்படுத்தியுள்ளார். பல வடமொழிச் சொற்கள் இவ்வாறு இக்கும்மியில் இடம் பெற்றுள்ளதாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக,

'தானிய சம்பத்துத் தந்தென்னை ரெட்சிக்கும்' (பா. 7)
'விசைய லட்சிமி தன்னருளால்' (பா. 15)
'சந்தோஷ மாகச்சலா முஞ்செய்து' (பா. 16)
'துஷ்டன்' (பா. 35)

போன்றவற்றைக் கூறலாம்.

ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதுடன் ஆங்கிலேயருடைய பெயர்களையும் ஒலிமாற்றம் செய்துள்ளார்.

I. ஆங்கிலச் சொற்கள்

'கும்பினியாருடன்' (Company) பா. 9
'கவண்மண்டு துரைமார்கள்' (Government) பா. 13
'மேங்காடு' (Manguard) பா. 57

'கலக்கட்டர்' (Collector) பா. 98
'இண்டாசு' (Endorsement) பா. 145

II. ஆங்கிலேயரின் பெயர்கள்

'பீத்தரு சாய்பு' (Peter) பா. 16
'நெல்லீசன் துரை' (Nelson) பா. 1 9
'றாப்பருட்டுத் துரை' (Robert) பா. 70

வழக்கையும் மொழியியல்பையும் ஒட்டிச் செய்த ஒலி மாற்றங்களாக இவற்றைக் கருதலாம்.

வட்டார வழக்குச் சொற்களைக் கருத்தாய் எடுத்துக் கவினுறப் பயன்படுத்தி இக்கும்மிக்கு ஓர் ஏற்றமும் எடுப்பும் கொடுத்துள்ளார்.

'எச்சுத் தக்கா மொழிசெய்தாலும்' (பா. 5)
'இப்படித் துச்சினஞ் செய்திடும் பேர்களை' (பா. 12)
'பத்தஞ்சு பேர்களும்' (பா. 24)
'பத்துஞ்சு வாங்குவதும் (பா. 85)
'சீளிதஞ் செய்து' (பா. 63)
'கசகருணைகள் செய்தாலும்' (பா. 182)
'கூடியளப்புகள் தான்பேசி' (பா. 81)
'இதுவொரு சந்தை பார்ப்பமென்றி' (பா. 110)

இத்தகைய சொற்களைக் கொண்டு கும்மி ஆசிரியர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர் என்பதை உறுதி செய்ய முடியும்.

பழமொழிகள் பேச்சு வழக்குத் தொடர்கள் ஆகியவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி கூறியுள்ள கருத்துக்களுக்கு ஆக்கமும் தெளிவும் தேடிக் கொடுத்துள்ளதைச் சிறப்பாக எடுத்துச் சொல்லலாம்.

'வானில் மதியத்தைக் கண்டு சிறுமைந்தர்
வாவென் றழைத்த கதைபோலே' (பா. 6)
'சீலைக்கு மேலே சொறிந்தாலும் ஞாயஞ்
சும்மா விடுமோ' (பா. 104)
'தனக்கு வந்த விருந்தாளி யல்லென்று
தள்ளினா லப்பாலே போவேனோ' (பா. 183)

'உந்தன்

தாயினுக் கிளையுவர் தன்மகனோ' (பா. 105)

'தடியடி ஞாயம் பேசுகிறாய்' (பா. 124)

கும்மியைச் சரியான அளவில் புரிவதற்கு இத்தகைய பழமொழிகளும் வழக்குத் தொடர்களும் நன்கு உதவுகிறது.

பழமொழகளை விளக்கியுரைக்கும் போக்கும் இக்கும்மியாசிரியரிடம் காணப்சடுகிறது.

'மச்சுக்கு வந்த வறுமையும் செல்வமும்
மாநிலந் தன்னில் நடபடியும்
குச்சுக்குங் கூடவே சாருமென் றங்கே
கூடி யளப்புகள் தான்பேசி' (பா. 186)

'மச்சுக்கு வந்தது குச்சுக்கும் உண்டு' என்ற பழமொழியைக் கூறும் இடத்துக்குத் தக்கவாறு விளக்கியுரைத்து ஆசிரியர் தன் திறமையைக் காட்டியிருப்பதுடன் பொருள் தெளிவுக்கும் சிறப்பாக உதவியுள்ளார்.

புதிய சொல்லாக்கங்களையும் கா ர ண காரியத்துடன் உருவாக்கிப் பயன் படுத்தியுள்ளமைப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளன.

'வெள்ளி வில்லைக் காரன்' (பா. 136) [A Messenger or the attender of the Company Officials wearing White Metal seal.)

'தாடிக் காரர்' (பா. 18) [A higher white officials having beard.]

இவ்வாறு சில ஆக்கச் சொற்கள் உள்ளன. அவற்றின் நயங்கண்டு உணரத் தக்கது.

நயமான உவமைகளைக் கையாண்டு நல்ல முறையில் பொருளை விளக்க ஆசிரியர் முயன்றுள்ளார்.

'ஆலயம் போலவே சாரட்டு வண்டியில்
அம்மா மார்கள் மிகவரவும்' (பா. 23)

'கோளரி போல்சின்னத் தம்பிக் கவுண்டன்
கூட நடந்தான் அதிவீரன்' (பா. 95)

'வேங்கையைக் கண்ட கலைபோ லவிரைந்
தேகினான் வெங்கிடா ச ரியரும்' (பா. 187)

முறையே ஆடம்பரம், வலிமை, மெலிவு ஆகியவற்றிற்குத் தகுந்த உவமைகளைப் பொருத்தமாகக் கையாண்டுள்ளதை இம்மூன்று எடுத்துக்காட்டுகளிலும் காணலாம்.

இலக்கிய நயமும், வரலாற்றுச் சிறப்புக், கலை நலனும் இணையப் பெற்ற ஒரு நல்ல கும்மிப் பாடலாக சீனய்யங்கார் கும்மிப்பாடல் விளங்குகிறது.

சீனய்யங்கார் பேரில் கும்மி

1. சீர்கொண்ட தென்பழ னாபுரித் தாசில்தார்
   சீனய்யங் கார்தீரன் தன்மீதில்
   பார்கொண்ட கும்மித் தமிழ்பாட—நல்ல
   பார்வதித் தாயே யருள்செய்வாய்.

2. சிந்தை மகிழ்ந்துநான் சீனய்யங் கார்மீதில்
   சீருடனே கும்மிப் பாட்டுரைக்கத்
   தந்தி முகனே கணபதி யேஉன்தன்
   தாளிணை மென்மேலுங் காப்பாமே.

3. ஏது மறியேன் செயலறியே னின்னம்
   ஏட்டி லெழுத்துவகை யறியேன்
   மாது சரஸ்பதி யம்மாளே யென்தன்
   வாக்கி லனுதினம் நீயிருப்பாய்.

---

1. சீர்கொண்ட—சிறப்புமிக்க
   தாசில்தார்—Thasildar
   பார்கொண்ட—உலகம் விரும்பும்
2. சிந்தை—மனம்
   தந்திமுகன்—யானைமுகக் கடவுள் (கணபதி)
   தாளிணை—இணைந்த பாதம், இரண்டு பாதங்கள்
3. அனுதினம்—எப்பொழுதும்

4. பாரினி லுள்ள புலவோ ரேயிந்தப்
பால னுரைத்திடும் புன்சொல்தனில்
சீருரை வழுவி யிருந்தாலு மின்னஞ்
சித்தம் பொறுப்பீர் கவிவாணர் !

5. எச்சுத் தக்கா மொழிசெய் தாலுமிதில்
ஏது பிழைக ளிருந்தாலும்
ரச்சித் தருள்செய்ய வேணுமையா யிந்த
நாட்டி னிலுள்ள பெரியோர்கள்.

6. வானில் மதியத்தைக் கண்டு சிறுமைந்தர்
வாவென் றழைத்த கதைபோலே
நானிலத் தோர்கள் பதம்போற் றியிதை
நன்றாகப் பாடினேன் கேளுமையா.

7. சீனய்யங் கார்மீதிற் கும்மியைப் பாடுறேன்
சிந்தனை யொன்று மணுகாமல்
தானிய சம்பத்துந் தந்தென்னை ரட்சிக்கும்
சண்முக நாதனுங் காப்பாமே.

8. அம்புவி தன்னிலே நம்பின பேர்களை
ஆதரிக்கு மெங்கள் தர்மதுரை
கும்பினி யாருட சட்ட திட்டங்களைக்
கூறுகிறே னின்னங் கேளுமையா.

---

4. பாலன்—சிறுவன்
புன்சொல்—பொருளற்ற சொல்
வழு—தவறு

6. நானிலம்—உலகம்
பதம் (பாதம்)—கால்கள்

7. சம்பத்து—பொருள்

8. அம்புவி—உலகம்
கும்பினியார்—ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனியார்
(English East India Company)

9. எத்திசை புகழுங் கும்பினி யாருடன்
எதுத்துச் சண்டை கொடுத்தவரும்
புத்தியில் லாமலே துச்சினங் கள்செய்து
பூமியில் கொள்ளை யடித்தவரும்

10. ஏரி குளத்தை முறித்தவ ரும்வழி
இடைநடு வேமறித்தவரும்
ஊரினிற் றீவைத்த பேர்களையும் வம்பில்
உயிரைக் கொன்றிடும் பேர்களையும்

11. காலை யொழித்திடும் பேர்களையு—மின்னங்
கைலஞ்சம் வாங்கிடும் பேர்களையும்
சாலை யழித்திடும் பேர்களை யுஞ்சனக்
கூட்டங்கள் செய்திடும் பேர்களையும்

12. இப்படித் துச்சினஞ் செய்திடும் பேர்களை
எள்ள ளவுந்தய வில்லாமல்
அப்படி யாக்கொற்ற பேர்களைக் கண்டித்து
ஆக்குனை செய்வதுந் தப்பாமல்.

13. தாயென்றா லுஞ்சிறு பிள்ளையென்றாலும்—இன்னுந்
தன்னுடன் பிறந்தா ரானாலும்
ஞாயங்கள் சோர விடமாட் டாரின்னம்
நல்ல கவண்மண்டு துரைமார்கள்.

---

9. எதுத்து—எதிர்த்து (பேச்சு வழக்கு)
துச்சினங்கள்—தீச்செயல்கள்
10. முறித்தவர்—உடைத்து அழிவு செய்பவர்
வம்பு—தீயசெயல்
11. கைலஞ்சம்—கையூட்டு; கைக்கூலி (bribary)
12. துச்சினம்—தீச்செயல்
எள்ளளவும்—ஒரு சிறிதும்
அப்படியாக் கொற்ற—அப்படிப்பட்ட (வழக்கு மொழி)
ஆக்கினை—ஆணை
தப்பாமல்—தவறாமல்
13. சோர—தவற
கவண்மண்டு (Government) அரசாங்கம்

14. கும்பினி யார்வந்த நாள்முதலா—யின்னங்
குற்றங்க ளில்லாமல் வாழ்ந்திருந்தோம்
வம்பன் அதிதீரன் சீனய்யங் கார்செய்த
வயணஞ் சொல்கிறேன் கேளுமையா.

15. புசபெல முள்ள வெங்கிட் டய்யர்க்குப்
புத்திர னாகவே வந்துதித்து
விசைய லட்சிமி தன்னருளா—லின்னம்
வீரஞ் செலுத்தவே வேணுமென்று

16. தேசம் புகழ்பெற்ற பீத்தரு சாய்பையுஞ்
சீனய்யங் கார்தீரன் சென்றுகண்டு
தாசிலு வாங்கவே வேணுமென்று—துரையைச்
சந்தோஷ மாகச்சலா முஞ்செய்து

17. செய்யபுகழ் மன்னன் பீத்தரு சாய்பந்த
சீனய்யங் கார்மீதி லன்புவைத்து
சிந்தை மகிழ்ந்துயர் மீனாட்சி யம்மனைச்
சீர்பாதங் கண்டு மிகவணங்கி

---

14. வம்பன்—தவறு செய்யக் கூடியவன்
வயணம்—தவறுகள்; ஞாயமற்ற செயல்கள்

15. புசபெலம்—கைப்பலம் (உடல்வலிமை)
விசையலட்சிமி—வெற்றித்தெய்வம்

16. பீத்தரு—ஆங்கிலத் தலைவன் (Peter)
சாய்பு—தலைவன்
தாசிலு—தாலுகாவை ஆளும் ஆணை
சலாம்—வணக்கம்

17. செய்யபுகழ்—சிறந்த புகழ்
வையகம்—உலகம்
அமல்—விசாரணை

18. சித்திர பானு வருஷம் வைகாபுரிச்
சீர்மையில் தாசிலுஞ் செய்யுமென்று
முத்திரை மோதிரந் தான்கொடுத் துத்துரை
மூர்த்தமுடனங்கே தானனுப்ப.

19. சந்தோஷ மாகவே சீனய்யங் காரின்னஞ்
சாமி தெரி சனங்காண வென்று
சிந்தை மகிழ்ந்துயர் மீனாட்சி யம்மனைச்
சீர்பாதங் கண்டு மிகவணங்கி

20. காரணி மீனாட்சி யம்மனுக்கு நல்ல
கனகா பிசேகஞ் செய்துவைத்து
தாரணி போற்றிய சொக்கலிங் கீஸ்வரர்
தங்கப் பாத மிகவணங்கி

21. சாமி தெரிசனங் கண்டய்யம் புள்ளித்
தாலுகாவைச் சேரவேணு மென்று
நேமி கமாகவே சீனய்யங் காரங்கே
நேரிளை தன்னுடன் சேகரமாய்.

22. சதிகார வழியே நடக்க வென்று
தண்டிகை வாகன மீதேறி
மதுரை விட்டு வெளியிலே வந்தங்கே
வாகான சாலை வழிகூடி

---

18. மூர்த்தமுடன்—நல்ல சமயத்தில்
19. சாமிதெரிசனம்—இறைவணக்கம்
சிந்தை—மனம்
சீர்பாதம்—சிறந்த பாதம்
20. கனகாபிசேகம்—பொன்னால் குளித்தல்
தாரணி—உலகம்
தங்கப்பாதம்—பொற்பாதம்
காரணி—உவமையில்லாத; அனைத்துக்கும் காரணமான
21. நேமிகம்—நியமனம் (வழக்குச் சொல்)
சேகரமாய்—கூட்டமாய்
22. தண்டிகை—சிவிகை; பல்லக்கு
வாகான—ஒழுங்கான

23. சாலைப் பாதைசூடிச் சீனய்யன் பல்லக்குச்
சந்தோச மாகவே தானடக்க
ஆலையம் போலவே சாரட்டு வண்டியில்
அம்மா மார்கள் மிகவரவும்.

24. மல்லர்கள் போலவே தனது சேவகர்
மார்க்க முடனே யிருபுறமும்
பல்லக்கு முன்பொரு பத்தஞ்சு பேர்களும்
பருசனங் களுமுன் னடக்கவுமே.

25 ராமனே ராம செயமென வே நல்ல
நாவிற் றுதியும் மறக்காமல்
தாமனம் பூரித்துச் சீனய்யங்கார்—பழனித்
தாலுகா முன்வந்து சேர்ந்தாரே.

26. சீனய்யங் காரிங்கே வந்தாரென் றுயிந்தச்
சீமைக ளெங்குந் துடிப்பெழும்ப
தானய மாகவே சீனய்யங் கார்வெகு
சந்தோச மாகவே தானிருந்து

27. கச்சேரி யாடிய வாறெல் லாந்துகை
கணக்குட னங்கேதிட் டஞ்செய்து
அச்ச மில்லாமலே சீனய்யங் கார்தீரன்
அன்னகர் தன்னிலே வீற்றிருந்தான்.

28. இப்படி நாமளி ருந்தோமென் றாலிது
ஏற்குமோ பார்க்கின்ற பேர்களுக்கே
சொற்படி யாகவுஞ் சீனய்யங் கார்வெகு
துஷ்ட னென்றேபே ரெடுக்கவேணும்.

---

23. சாரட்டு வண்டி—குதிரை வண்டி
24. பருசனம் (பரிசனம்)— உறவினர்
27. கச்சேரி—தாலுகா அலுவலகம்; (கசேரி—இருக்கை)
28. துஷ்டன்—கொடியவன்

29. கண்ணுள்ள மட்டினிற் கண்காட்சி பணங்
காசுள்ள மட்டுங் கனயோகம்
விண்ணுள்ள மட்டுமிந்த சீனய்யங் கார்வெகு
வீரனென் றேசொல் விளங்குமென்று

30. இந்தப் பிறப்பி(னிலை) யத்த வாழ்விது
என்றைக்கோ நம்மை விட்டேறும்
சொந்தமுடன் ரொக்கம் தேடிச்கொண் டோமானால்
சுகமுடன் வாழலாம் உள்ளமட்டும்

31. தின்று தனபதி யாகவே நாமளுந்
தீர்க்க மாகவே வாழ்ந்திடலாம்
என்று மனதி லெண்ணிக் கொண்டங்கே
ஏதுசொன்னானந்தச்சீ னய்யங்கார்

32. பீற்றரு சாயபு மகா னுக்கு நம்ம
பேரில் தயவி ருக்குமட்டும்
நாற்றிசை யெல்லோருங் கூடினா லுமென்ன
நம்மை யசைக்க முடியாதே.

33. என்னிலை யில்ரொக்கம் அதிகம் தேடினால்
என்மீது பிராதுசெய் வாரென்று
தன்னிலை தானே புகழ்ந்து தனக்குச்
சரியொத்த பேர்களு மில்லாமல்

34. வேதிய ராகிய சீனய்யங் கார்வெகு
வீரிய ஆண்மைகள் தான்பேசி
சாதித் தொழிலை மறக்கா மல்சீர்மை
சாத்திச் செய்ததைக் கேளுமையா.

---

31. தனபதி—பெருஞ்செல்வந்தன், (குபேரன்)

33. ரொக்கம்—கையிருப்பு நாணயம்
பிராது—பராது கூறல்

34. வேதியர்—அந்தணர்; பார்ப்பனர்
வீரியம்—வீரம்

35. சங்கிலித் தேவனா மென்றவன் கும்பினிச்
சட்டத்துக் காகாத துஷ்டனையும்
இங்கித மாகிய சங்கிலித் தேவனை
இனிய சொல்லுக் குதவியென்று

36. மாலா வாசகன் பூலாம் பட்டியில்
வாழ்ந்திடுங் குப்பண தீரனையும்
மேலாய் விளங்கிய கருத்திக் கவுண்டன்
மெய்க்கன் பாலகிருஷ்ண பிள்ளையுடன்

37. சைது றாவுத்தர் உள்பட வெங்கிடா
சாரி யென்றேயொரு வேதியனும்
உய்த மாகவே நாலஞ்சு பேர்தனக்
குகந்த காரியக் காரர்களும்

38. காரியக் காரர்கள் தானா பதிகள்
மந்திரிகள் பஞ்ச தந்திரிபோல்
வீரிய மாகவே சீனய்யங் காருக்கு
விண்ணப்பஞ் செய்ததைக் கேளுமையா.

39. மன்னவனே சீனு பாண்டியனே எங்கள்
வாசகந் தட்டாத தேசிகனே
தென்னவனே உந்தனா வசைந்தாற் போதுஞ்
சீர்மையை நாங்களளப்ப போமென்றார்.

---

36. மெய்க்கும்—பாராட்டும்
37. உய்தம்—உசிதம் என்பதின் பேச்சு வழக்கு; தகுதி
உகந்த —பொருத்தமான
காரியக்காரம்—செயல் திறமுடையோர்
38. தானாபதி—பொருளாளர்; நிதியதிகாரி
வீரியம்—வீரம்
விண்ணப்பம்—வேண்டுதல்
39. சீனு பாண்டியன்—சீனய்யங்கார்
வாசகந் தட்டாத—வேண்டுதலை மறுக்காத
தேசிகன்—அரசன்; அழகன்
தென்னவன்—தென்னாட்டுத் தலைவன்; பாண்டியன்
உந்தனா (உந்தன் + நா)—உன்னுடைய நாக்கு

40. உறுதி சொல்லியே நாட்டாண்மைக் காரரை
ஒருநொ டியில்வர வளைத்ததுடன்
அறுதி யாகக் கிராமங்கள் தோறும்
அளவு சங்கிலி வேணுமென்று.

41. மலையிற் சென்று கிராமங்கள் தோறும்
மரங்க ளைத்தான் பிளந்திடவும்
விலையில் லாமலே வெட்டியாள் பிடித்து
விட்ட மநேகம் வேணுமென்று

42. தாக்குடன் சொல்லியே சீனய்யங் கார்தீரன்
சாப்தா வைக்கையிற் றான்கொடுத்தான்
வாக்கிடம் பேசாமல் நாட்டாண்மைக் காரர்கள்
வாங்கினார் சாப்தாவைக் கைதனிலே.

43. சாப்தா வாங்கிக் கிராமங் களில்வந்து
சார்ந்த குடிகள் தமையழைத்து
வாப்த மாகவே சாப்தாவை யங்கே
வாசித்துச் சொன்னார் குடிகளுக்கு.

44. குடிக ளெல்லோருந் தாங்கேட் டங்கே
கூறுவார் கோப முடன்சினந்து
அடிய ளந்து பணம்வாங்கி யின்னம்
அளவு சங்கிலி வேணுமென்று.

---

40. அறுதி—முடிவு

41. விட்டம்—உத்திரம்

42. தாக்குடன்—வேகமாக; உறுதியாக
சாப்தா—(சாபிதா—List)
வாக்கிடம் பேசாமல்—மறுத்துரைக்காமல்

43. வாப்தம்—வாப்பியம் என்பதின் வழக்குமொழி; கோஷ்டம்; ஆரவாரம்; கூட்டம்

45. மலையி லேறி மரம்பிளந்து நல்ல
வாகான விட்டங்கள் வேணுமென்று
நிலையில் லாதொரு காரியத்தை யிங்கே
நிறுத்த வந்தாரே சீனய்யங்கார்.

46. மதகரி கரடி புலிசிங் கம்வாழும்
மலையிலே ஏறிச் சென்றுடலம்
வதைபட நாங்கள் சீனய்யங் காருட
மானியந் தின்றமோ சொல்லுமென்றார்.

47. நாட்டாண் மைக்காரர் கள்தான் கேட்டிதை
நம்முடன் சொன்னால்விடி யாதென்று
தாஷ்டி மையாகிய தாசிலு தாரன்முன்
தரவு கேட்கவே போங்களென்றார்.

48. அப்படி யாகட்டு மென்று கிராமத்தில்
ஆளுவிட் டோசனை யைமுடித்து
ஒப்புடன் பேசிக் கிராமங்கள் தோறும்
ஊருக்கு ரெண்டொரு பேர்களுமாய்,

49. புளிய நகர்தனில் சாமி யண்ணதீரன்
பேரசன் செல்லப்ப தீரனையும்
நளின மாகவே மற்றுமுள்ள பேரும்
நன்கு யோசனை தான்முடித்து

---

45. வாகு—ஒழுங்கு; அழகு
46. மதகரி—மதம் மிக்க யானை
உடலம்—உடம்பு
ததைபட—வேதனை படுவதற்கு
மானியம்—அரசர் சன்மானமாகக் கொடுத்த நிலம்
47. விடியாது—அனுகூலமாகாது
தாஷ்டிமை—(தாட்டிகம்)—அகந்தை; ஆணவம்
தரவு—கட்டளை; தண்டற்காரனின் ஆணை
48. ஓசனை—ஆலோசனை
ஒப்புடன்—பொருத்தமாக; சம்மதமாக
49. புளியநகர்—ஓரிடம்
நளினம்—இங்கிதம்; இனிமை

50. சரவணப் பட்டிப் பெரிய தம்பியுடன்
தாளையஞ் சின்னத்தம் பிக்கவுண்டன்
கருணை சேர்புகழ் புரக்கும் கர்வலர்
காளியண்ண தீரன் மெய்யண்ணனும்.

51. ஒருமுக மாகத் தான்கூடி யங்கே
உகந்து சென்றார் பழனிதனில்
மறுநாள் காலமே சீனய்யங் கார்தீரன்
வரவளைத்துக் குடிகள் தன்னை

52. எல்லோருங் கூடியே சொன்னபடிக் கேட்டு
ஏவல் தொழில்செய்ய வந்திரா
அல்லாம லேயிப்ப ஆளுக்குப் பத்தஞ்சு
அபரா தம்கொடுப் பீரென்றார்.

53. என்றந்த சீனய்யன் தான்கேழ்க்கவதுக்
கேது சொல்லுவரார் குடியானவர்
இன்று பயந்துமக் காகநாங்கள்
இல்லாத காரியஞ் செய்யோமென்றார்.

54. எங்களுக் குள்ள நடபடியை யின்னம்
எடுத்து ரைக்கிறோங் கேளுமையா
வங்களா வெட்டி தயிறுமுட்டி சுவாமி
வையந் திருவிழா வெட்டி செய்வோம்

---

50. சரவணப்பட்டி—ஓரிடம்
தாளையம்—ஒரூர்

51. ஒருமுகமாக—ஒரே கருத்துடன்
உகந்து—விரும்பி
காலமே—காலை நேரத்தில்

52. அபராதம் (fine)—தண்டம்

53. கேழ்க்கவதுக்கு—கேட்க அதற்கு (வழக்கு மொழி)

55. மற்றுநீ ரெங்களைக் கொன்றாலும் நாங்கள்
மலைவெட்டிச் செய்வ தில்லையென்றார்
உற்ற வசன முறைகேட் டுக்கோபம்
உக்கிர மாகிய சீனய்யங்கார்

56. இந்தப் பயல்களைச் சும்மாவிட் டால்நமக்
கேது கிருபையு மில்லையென்று
சிந்தையி லெண்ணிய சீனய்யங் காரங்கே
சேவகர் கையிலே ஒப்பிவைத்து

57. பங்கப் படுத்திய மேங்காடு தன்னிலே
பாருவசம் பண்ணிக் கொண்டார்கள்
இங்கே யிருந்து விசனப் படநாமள்
ஏதுகுறை களைச்செய் தோமென்று

58. பார்புகழ் கும்பினி யாரிருக்க நாமள்
பங்கப்பட ஞாய மில்லையென்று
சீறிக் குடிக ளனைவோரு மந்தச்
சேவுகர் தம்மை யிகழ்ந்துவிட்டு

59. கும்பினியார் முன்னே நாமள்சென்று—யின்னங்
கூறுவோ மிந்தப் புதுமையெல்லாம்
நம்பிக்கை செய்து குடிகளெல் லாமந்த
நன்னகர் விட்டு வெளியேறி.

---

55. மலைவெட்டி—மலையிலுள்ள மரங்களை வெட்டி
உக்கிரம்—மிக அதிகம்; கடுமை

56. கிருபை—கருணை; அருள்
ஒப்பிவைத்து—சொல்லி ஒப்படைத்தல்
சிந்தையில்—மனதில்

57. பங்கம்—அவமானம்; குற்றம்
மேங்காடு—ஓரிடம்; சிறை
பாருவசம்—(பார் வசம்) படுக்கும் வசதி
நாமள்—நாம்

58. சேவுகர்—சேவகர்

59. புதுமையெல்லாம்—வழக்கத்துக்கு மாறான செயல்களை யெல்லாம்

60. சேரத் திரண்டொரு முகமா யந்தத்

திண்டுக்கல் பேட்டையில் வந்திறங்கி

சீரற்ற மன்னவன் சீனய்யங் கார்தீரன்

தீது வருமென் றறியாமல்

61. நாட்டாண்மைக் காரரைக் கொண்டு வந்துஅரை

நாளிகை யிற்பணம் வாங்கவென்று

கோட்டைக் கிழித்தங்கே தானிறுத் திப்பணங்

கொடுத்துவிட் டப்பாலே போங்களென்றான்.

62. சிறிது நேர மிருந்த லும்மந்தச்

சீனய்யங் காருட னேதுரைப்பார்

விருதாவிலே எங்களைக் கொன்றா லும்பணம்

வீட்டி லிருந்து கொடுப்போமா.

63. சில்லாவை விட்டுக் குடிகள் தன்னைவெகு

சீனிதஞ் செய்து முடிக்கிவிட்டு

வல்லமை யாற்பணம் வாங்க வேணுமென்று

வம்புகள் செய்தால் விடியாதென்று

---

60. சேரத்திரண்டு—ஒன்றாகச் சேர்ந்து கூடி.
திண்டுக்கல்—ஓரிடம்
சீரற்ற—முறையில்லாத

61. அரநாளிகை—அரை நாழிகை நேரத்தில்
கோட்டைக் கிழித்து—ஒருவரைச் சுற்றிக் கோடிட்டு
(விளக்கவுரை காண்க)

62. விருதாவில்—வீணாக

63. சில்லா —மாவட்டம்
முடிக்கிவிட்டு—தூண்டிவிட்டு
வேணம்—வேண்டும்

64. சீவனம் போனாலும் போகட் டென்றுவெகு
தெம்புகளா கவேதே றிக்கொண்டு
கோவ முள்ளதுரை கும்பினி யாருடன்
கூறுவோ மிந்தப் புதுமையெல்லாம்.

65. அப்புநகர் வளர்வெள்ளை யண்ண தீரன்
அன்புள்ள மாரப்ப தீரச் செல்வன்
இப்புவி மெச்சிய உத்தண் டிக் கவுண்டன்
இம்மையில் காட் டணன் தன்னுடனே,

66. சாந்த சற்குண தீர னதிபரன்
தண்டமிழ் வாணர்க் குபகாரன்
வேந்தர் சூடாமணி அப்பிப் பாளையம்
வீரண கவுண்டன் தன்னுடனே.

67. தேசம் புகழும் புளிய நகர்தனில்
தென்பால் மணியங்கள் தான்செலுத்தும்
வாசம் புகழ்பெற்ற தேவணன் சின்னய்யன்
மன்ன னிவர்கள் தம்முடனே

---

64. சீவனம்—உயிர்
தெம்பு—மனவலிமை
கோவம்—கோபம்

65. அப்பு நகர் ஓரிடம்
வெள்ளையண்ணன், மாரப்பன், உத்தண்டிக் கவுண்டன், காட்டணன் } அப்புநகரைச் சேர்ந்தோர். சீனய்யங்காரின் கொடுமைகளை எதிர்த்து முறையிட்டவர்'

66. சற்குணன்—நற்பண்புடையவன்
அதிபரன்—எதிரியை வெல்லும் ஆற்றலுடையவன்
வாணர்—கவிவாணர்
சூடாமணி—சிறப்புடைய மணி
அப்பிப் பாளையம்—ஓரூர்
வீரண கவுண்டன்—மக்களில் ஒருவர் (விளக்கவுரை காண்க)

67. புளியநகர்—ஓரிடம்
மணியம்—அரசுக்குச் செலுத்த வேண்டிய தீர்வை. அதைப் பிரிக்க வேண்டிய பொறுப்பு மணியக்காரருடையது
தேவணன், சின்னய்யன் } சீனய்யங்கரை எதிர்க்கும் இருவர் புளிய நகரைச் சேர்ந்தவர்கள்

68. எல்லோருங் கூடியே சீனய்யங் கார்தனை
இகழ்ந்து விட்டு வெளியேறி
நல்லோர் சாலைவழி கூடி யங்கே
நாடினார் திண்டுக்கல் நன்னகரில்.

69. முன்னே சென்ற குடிக ளுடன்வெகு
முறைவிதங் களைத்தா னுரைத்து
பின்னே நடந்த சமாசா ரம்வெகு
பிரபலங் களைத்தான் பேசினரே.

70. எல்லோருங் கூடியே சீனய்யங் கார்மீதில்
எழுதி யந்தப் பிராதுதன்னை
வல்லமை யாகிய றாப்ப ருட்டுத்துரை
மன்னனி டத்திலே தான்கொடுத்து.

71. தாசிலுதார் செய்த குற்றமெல்லா மங்கே
சாற்றினா ரந்தத் துரையிடத்தில்
தேசம் புகழ்மன்னன் தான்கேட் டந்தச்
சீனய்யங் காரை வரவழைத்து.

72. இருவர் ஞாய முந்தான் கேட்டுதுரை
எழுதிக் கொண்டொரு காயிதத்தில்
மறுபடி யும்பிரா துகளை யங்கே
மன்னன் ருசுவு டனேவிளக்கி

---

69. முறை விதங்கள்—முறையாகச் செய்ய வேண்டியவை
சமாசாரம்—செய்திகள்
பிரபலம்—கீர்த்தி

70. பிராது—பராதி, வழக்கு
றாப்பருட்டுத்துரை—(Lord Robert)

71. சாற்றினார்—சொன்னார்

72. காயிதம்—தாள்
சுவடு—அடையாளம்

73. தாசிலு தாரன்மேல் குற்ற மனேகங்கள்
சாட்சியு டனேசுமத் திக்கொண்டு
வாசனை சேர்புகழ் நாட்டாண்மைக் காரரும்
மற்று முண்டான குடிகளையும்

74. தாலுகா முன்சென்று வாயிதாப் பணங்கள்
தற்கமில் லாமற் கொடுங்களென்று
மாலுமை யாக அனுப்பிட்டவே யங்கே
மனமகிழ்ந் திருந்த குடி களெல்லாம்

75. சீனய்யங் காரை எடுத்துவிட் டோமென்று
தெம்புக ளாகவே தான்பேசி
நானிலம் போற்றிய கந்த சுவாமிக்கி
நன்றா யபிஷேகஞ் செய்துவைத்து.

76. ஏது பயங்களு மில்லாம லங்கே
இருந்தார் கூடி யனைவோரும்
மாது பயில்மன்னன் றாப்பருட் டுத்துரை
மன்னவன் சீனய்யங் கார்தனையும்

77. கைப்பிடி யாக மதுரை த்னிற்சென்று
காவலுடன் வைத்துக் கொண்டிருந்தார்
பொய்ப்புடனே யந்தச் சீனய்யங் கார்பணம்
வேணுமென்ற பேர்க்குத் தான்கொடுத்து.

---

74. வாயிதாப் பணம்—அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணம்
தற்கம்—எதிர்ப்பு
மாலுமை—நம்பிக்கைக்கு ஏற்றவாறு

75. நானிலம்—உலகம்
கந்தசாமி—முருகன் (விளக்கவுரை காண்க)
அபிஷேகம்—படையல்; புனிதநீராட்டல்

76. மாது—திரு

78. தோத்திரஞ் செய்யும் பிராமணர்க் குப்பணம்
சொன்னபடி லஞ்சந் தான்கொடுத்து
பீத்தரு சாய்பையுஞ் சென்று கண்டங்கே
பிலமா யுறுதிகள் தான்வாங்கி.

79. நல்லவ னாக அனுப்பிக் கொண்டந்த
நன்னகர் விட்டு வெளியேறி
வல்லவ னாகிய சீனய்யங் கார்பின்னும்
வந்தார் பழனிப் பதிதனிலே.

80. கீர்த்தி யபகீர்த்தி யிரண்டும் பழனிக்
கிரியுள்ள மட்டும் நிலைக்குமென்று
பார்த்தந்த சீனய்யன் காரியக் காரர்களைப்
பண்புடனே யங்கே தானழைத்து.

81. தாடிக் காரர்க் கிடமில்லா மலினித்
தந்திர மாய்ப்பணம் வாங்கவென்று
கூடி யளப்புகள் தான்பேசிப் பின்னுங்
கொள்ளை யடிக்கவே தானினைந்து.

82. மந்திரி யாகிய சங்கிலித் தேவனும்
மற்றுமுள்ள காரியக் காரர்களும்
தந்திர மாகவே சீர்மை யிலேபணம்
தரகு கொண்ட தநேகமுண்டு.

---

78. தோத்திரம்—வணங்கிப் பணிதல்
லஞ்சம்—கையூட்டு; கைக்கூலி
பீத்தரு சாய்பு—ஆங்கில அதிகாரி
பிலமா—பலமாக (வழக்குச் சொல்)

81. சாடிக்காரர்—குற்றம் சாட்டுவோர்
அளப்புகள்—பலவற்றை அலுக்க அலுக்கப் பேசுதல்

82. சங்கிலித் தேவன்—சீனய்யங்காரின் அமைச்சன்

83. அதுவு மல்லாமல் சீனய்யங் கார்செய்த
ஆக்கினை சட்டத்தைக் கேளுமையா
பதுவுட னனேக கிராமங் களின்னம்
பயிரி டுங்குடி தங்களிலே

84. தக்க மதாயொரு சங்கதி நிமித்தியந்
தாசிலு தாரின்முன் தேர்வமென்று
வக்கிர மாகவே சண்டையிட்டுக் கொண்டு
வந்தவர் ஞாயமுங் கேளாமல்

85. மேங்காடு தன்னிலடைத் துவைத்து ரெம்ப
மேவி யுடனே வாதைசெய்து
சாங்க மதாக யிருவ ரிடத்திலுந்
தப்பாது பத்தஞ்சு வாங்குவதும்

86. காயிதப் படிகிரா மத்திலே பணங்கள்
கண்டிதமாய் வந்து சேர்ந்தாலும்
வாயிதா நாளிகை தப்பிச் சென்றங்கே
வரியப ராதம் வாங்குவதும்

---

83. ஆக்கினை—ஆணை
பதுவுடன்—பதிவுடன்

84. சங்கதி—காரியம்
தேர்வம்—தெளிவடைவோம்
வக்கிரம்—பகையுணர்வுடன்

85. மேங்காடு—சிறை
வாதை செய்து—நோவைச் செய்து
மேவியுடனே—துன்பம் செய்யும் ஆசையில்
சாங்கமதாக—தவறாது பிரித்தல்

86. கண்டிதம்—உறுதி; கண்டிப்பு; முழுமை
வாயிதா—குறிப்பிட்ட நாள்; தவணைநாள்
தப்பி—தவறி

87. வாய்ச்சொல் தவறினடச்சண மேயொரு
வழுவு கண்டுட னபராதம் !
கூச்ச மில்லாமலே சீனய்யங் கார்செய்த
குற்றங் களின்ன மநேகமுண்டு.

88. வீதியிற் கண்டபேர் தங்களைப் பிடித்து
மேங்காடு தன்னி லடைத்துவைத்து
வாதினை செய்த வர்கையிற் பத்தஞ்சு
வாங்கிக் கொண்டே விடுகிறதும்.

89. வம்பினில் கட்டி யடித்து வெகுபேரை
மான சேதங்கள் செய்யிறதும்
கும்பினி யாருடை சீமையென் றெண்ணாமல்
கொள்ளை யிட்டந்த சீனய்யங்கார்

90. லட்சு மணனுட னிருளாண் டியிவர்
ரெண்டுபேர் செய்திடுந் தொந்தரவு
இச்சை யினாற்பணம் கொள்ளை யடித்தது
இம்மட் டென்றுசொல்லப் போகாது !

91. கச்சேரி யிலுள்ள பேர்களெல் லாமின்னங்
கைலஞ்சம் வாங்கத் துணிந்தார்கள்
அச்ச மில்லாதொரு பழனிச் சீர்மையில்
அனியா யங்கள் பெருத்ததுகாண்.

---

87. அச்சணமே—அக்கணமே
அபராதம்—தண்டம்
அநேகம்—பல
88. வாது—துன்பம்
90. லட்சுமணன் } சீனய்யங்காருக்குத் தவறான முறையில்
இருளாண்டி } துணைநின்று குடிகளைத் துன்புறுத்துவோர்
தொந்தரவு—குறும்புகள்;துன்பங்கள்
இச்சை—பேராசை
இம்மட்டென்று—இவ்வளவுதானென்று
91. கச்சேரி—தாலுகா அலுவலகம்
கைலஞ்சம்—கையூட்டு
பெருத்தது—மிகுந்தது

92. இப்படி யாகவே சீனய்யங் காருக்கு
என்னேரங் கொள்ளைகள் தான்கொடுத்து
எப்படி நாமள் குடித்தனம் பண்ணுவோம்
என்று குடிகள் மனங்கலங்கி.

93. நாடெங்குங் கூடி யொருமுக மாயங்கே
நாமள் அளப்புகள் தான்பேசி
கோடெங்குஞ் சென்று துரைமுன் பிராதுகள்
கொடுப்ப மென்றங்கே தானிணைந்து.

94. மாகரை யருகுள்ள மேகரைப் பட்டியார்
மற்று மெண்ணான்கு கிராமத்தார்
சேகர மாகவே தான்கூடி யங்கே
சென்றார் மதுரைத் திசைநோக்கி

95. தாளை நகரிலுதித் தவனாந் தீரன்
தாஷ்டிமை தன்னிற் கதித்தவனாம்
கோளரி போல்சின்னத் தம்பிக் கவுண்டன்
கூடநடந்தா னதிவீரன்

96. ஓங்கி யுயர்ந்த மலைகடந் தங்கே
உற்ற சாலைவழி தான்கூடி
தாங்கிய வைகைநதி சூழும் மதுரை
சமஸ்தா னத்திலே வந்திறங்கி

---

92. கொள்ளைகள் - அநியாயமாக வாங்கும் கையூட்டுப் பணம்
93. அளப்புகள்—பலவற்றைப் பேசுதல்
கோர்டு (Court)—நீதிமன்றம்
பிராது—வழக்கு
94. மாகரை—ஒரூர்
மேகரைப்பட்டி—ஒரூர்
எண்ணான்கு கிராமத்தார்—முப்பத்திரண்டு ஊரினர்
சேகரம்—கூட்டம்
65. தாளை நகர்—ஒரூர்
தாஷ்டிமை—வீரம்
கதித்தவன்—விளங்கினவன்
கோளரி—சிங்கம்

97. கூட்ட மதாக வனைவோ ருமங்கே
கூடி யளப்புகள் தான்பேசி
நாட்ட மதாகத் துரையைக் கண்டினி
நாமன் பிராது கொடுப்பமென்று

98. மதுரை சில்லாக் கலக்கட் டராகிய
மன்னவன் பீத்தரு சாய்பிடத்தில்
எதிரே சென்று பிராது வகையுடன்
எழுதிக் கொண்டொரு காயிதத்தில்.

99. கொடுத்த பிராதுங் கேழாம லங்கே
கோவித்தா ரந்தக் கலக்கட்டரும்
சடுத்த மாகவே பீத்தரு சாய்பந்த
தாசிலுதார் விட்ட காயிதத்தை

100. அன்புடன் பார்த்ததில் சின்னத்தம்பி தீரன்
ஆரென்று கேட்டுவிசா ரிக்கையில்
தென்புடனே தீரன் சின்னத்தம்பி யங்கே
சென்று துரைக்கி யெதிராக.

101. மதுரைச் சமஸ்தான மெச்சிடவே தீரன்
வங்களா வேறிச்சலா முஞ்செய்து
எதிராய் நிற்கவும் தான்பார்த்த துரை
ஏதுசொல் வாரதி கோபமுடன்

---

98. நாட்டம்—விருப்பம்
காயிதம்—தாள்

99. கோவித்தார்—கோபப்பட்டார் (வழக்குச் சொல்)

101. வங்களா—பங்களா; மாளிகை
சலாம்--வணக்கம்

102. முனைகள்—எதிர்ப்புகள்

102. சின்னத் தம்பி தீரனீ தானோயிந்தச்
சீமைக் குடிகளைக் கூட்டமிட்டு
எண்ணிக்கை யில்லாமல் தாசிலு தாரனுக்
கெதிராக முனைகள் செலுத்தலாமோ

103. மித்திர மாகவே செய்ததுக் குன்னை
மேங்காடு தன்னி லடைப்பமென்றான்
குத்திர மான மொழிகேட் டங்கே
கோப முடன்சினந் தேதுரைப்பான்.

104. சீலைக்கு மேலே சொறிந்தாலும்—ஞாயஞ்
சும்மா விடுமோ சின்னதம்பி
வேலைக் கிடங்க ளிருக்குதையா, நம்மை
வீணிலே சும்மா மிரட்டாதே.

105. தோசித் துரையே சுழிகேடா நாங்கள்
சொன்ன பிராதொன்றுங் கேளாமல்
தாசிலு தாரன்சொல் மேன்மைகொண்டா யுந்தன்
தாயினுக் கிளையவர் தன்மகனோ.

106. ஆனதி னாலேநீ ரெங்களை யுமிப்போ
ஆசுறுக் காட்டிலடைப் பேனென்றீர்
சீனையங் காரங்கே தானிருந்தா லந்தச்
சில்லாவில் நாங்க ளிருப்பதில்லை.

---

103. மித்திரம்—நட்பு
குத்திரம்—சுடுசொல்; வஞ்சகவுரை

104. மிரட்டல்—அச்சப்படுத்தல்

105. தோசித்துரை—கேடுகள் செய்பவன்
சுழிகேடா—மூர்க்கனே

106. ஆசுறு—குற்றமுடைய
காடு—மேங்காடு

107. கொன்றிடு வானந்தச் சீனையங்கார் நாங்கள்
குடியி ருக்கவும் போகாது
என்றுசொல்லித் தீரன் சின்னத் தம்பியங்கே
எடுத்துரைக் கவுமிவ் வார்த்தைகளை

108. மாலுமை யாகவே தான்கேட் டுத்துரை
மார்க்க மதாகவே யென்னசொல்வான்
தாலுகா முன்வந் துங்கள் பிராதையும்
சாட்சியத் தாட்சி யுடன்விளங்கி

109. தீர்க்க விசாரித்துக் குத்த வாளிகளைச்
சிட்சைகள் பண்ணுவேன் தப்பாமல்
ஊருக்குப் போமென்று கண்டித மாகவே
உத்தரவு செய்தா ரப்போது.

110. எல்லோருங் கூடியொரு முகமா யின்னம்
இதுவொரு சந்தை பார்ப்பமென்று
நல்ல தப்படியா கட்டென்று சொல்லி
நடந்தார சாலை வழிகூடி.

111. பாவி யிந்தத்துரை நம்மள் பிராதையும்
பாரபட்ச மாயிகழ்ந் தானென்று
ஆவி யசைந்து பழனி நகர்தனில்
அன்புட னேவந்து தான்சேர்ந்தார்.

---

108. மாலுமை—வெறுப்பு
மார்க்கம்—வழி
அத்தாட்சி—சான்று

109. குத்தவாளி—குற்றவாளி
சிட்சைகள்—தண்டனைகள்
தப்பாமல்—தவறாமல்
கண்டிதம்—உறுதி

110. சந்தை—முறை (விளக்கவுரை பார்க்க)

111. பாரபட்சம்—ஒருதலை பச்சமாக
ஆவியடைந்து—மனம் வருந்தி

112. மன்னவ னாகிய பீத்தரு சாய்பந்த
மதுரை விட்டு வெளியேறி
சொன்ன மொழியுந் தவறா மல்துரை
தோற்ற முடனே பழனிதனில்

113. வந்திறந் கித்துரை தாசிலு தாரனை
வரவழைத் தங்கொரு நொடியினிலே
தந்திர மாகவே சீனையங் காருடன்
தனித்தளப் புகள் தான் பேசினனே

114. ஒன்றுக்கு மஞ்சாதே சீனையங் காரேநான்
உன்மன தின்படி செய்திடுவேன்
என்று சொல்லித் துரைகுறிச்சி மீதினில்
ஏற்கை யாகவே தானிருந்து

115. சின்னத் தம்பிக்கவுண் டனென்கிற துஷ்டனைச்
சீக்கிரங் கொண்டாரு மென்றுசொல்லி
அன்னவ னாரென்று நாலஞ்சு சேவகர்
ஆடம் பரத்துட னோடி வந்து

116. துரையழைக் கிறார் வாவென்று சேவகர்
துண்டிக்கை யாகத் தானுரைக்க
புரையில்லா வீரன் சின்னத் தம்பியங்கே
பூரித் தகமகிழ்ந் தேதுரைப்பான்

---

112. துஷ்டன்—கெட்டவன்
சீக்கிரம்—விரைவாக
ஆடம்பரம்—கோபம்

113. தனித்தளப்புகள்—தனிமையாக உரையாடல்
ஒரு நொடியில்—மிக விரைவில்

114. குறிச்சி—மடக்கு நாற்காலி ('குருசி' என்ற வேற்றுச்சொல்லின் மரூஉ); சிற்றூர் என்ற பொருள் இங்கு பொருந்தாது
ஏற்கை—இணக்கம்

116. துண்டிக்கையாக—கண்டிப்பாக
புரையில்லா—குற்றமில்லாத
பூரித்தல்—மனமகிழ்தல்
வண்டன்—திண்மையன்

117. அன்னை பிதாவுட தன்வயிற் நில்நாம்
ஆண்பிள்ளை சிங்கமென் றேபிறந்து
பின்னை யிடருகள் வந்துற்றாலும் நாமள்
பின்வாங்க வெண்ணா தெனமொழிந்து

118. அஞ்சாத மன்னவன் சின்னத்தம்பிக் கவுண்டன்
ஆலித் துக்கொண் டெழுந்திருந்து
வஞ்ச கனாகிய பீத்தரு சாய்புமுன்
வந்தவுடன் சலாஞ் செய்துநின்றான்

119. மன்மதன் போலே யெதிரேநின் றானந்த
வண்டன்வலுக் காரன்சின் னத்தம்பி
தின்மை நினைந்தவன் பீத்தரு சாயபு
சீறிமுகம் பார்த்தங் கேதுரைப்பான்

120. தாசிலு தாரன் முன்நீ தானோவெகு
தாக்க முடன்வந்து பேசினவன்
கூசாமலே யிந்த சீர்மை யிழந்தனை
குத்திரஞ் செய்தவன் நீதானோ

121. குடிகள் பேரில் வரிவாங் கிவெகு
கூட்டங்கள் செய்தவன் நீதானோ
துடிய னேகமுங் கேட்டிருந் தேனந்த்
துஷ்டன் சின்னத்தம்பி நீதானோ

---

117. தின்மை—தீமை

118. தாக்கம்—வீரம்; வேகம்
குத்திரம்—வஞ்சகம்; குத்திப் பேசுதல்

119. இடருகள்—துன்பங்கள்

120. ஆலித்தல்—களித்தல்
சலாம்—வணக்கம்

121. துடியன்—கோபமுள்ளவன்
துஷ்டன்—கொடியவன்

122. என்று சொல்லித் துரை தான் கேட்கவதற்
கேதுசொல்வான் தீரன்சின் னத்தம்பி
நன்று காண்துரையே உன்னிடத்தில் வந்து
நாங்கள் பிராது கொடுத்ததினால்.

123. தாசிலு தாரனுக் கொத்தாசை யாய்வெகு
சார்புடனே ஞாயம் பேசுகிறாய்
காசு பணங்க ளனேக முனக்கவன்
லைலஞ்ச மாகக் கொடுத்தானோ.

124. குடிகள் வந்து பிராதுசெய் தாலதைக்
கூர்மை யாகவுங் கேளாமல்
தடியடி ஞாயம் பேசு கிறாயிது
சங்கதி யல்ல துரையளுக்கு.

125. எழுபத்தி ரெண்டு பாளையப் பட்டுக்கும்
எசமான னாகவே தானிருந்து
பிழைவைத்துக் கொள்ள வேண்டாங் காணிது
பேரரசுத் துரைக்கியேற் காதென்றான்.

126. அந்த மொழிகேட்டு பீத்தரு சாய்புக்கு
அதிகக் கோபங்கள் தானாகி
செந்தணல் போலே விழிசிவந்தேதுரை
சீறிச் சினந்துமங் கேதுரைப்பான்.

127. தென்னவன் மெச்சிய கண்டிய கவுண்டன்
தெம்புள்ள மாரப்ப தீரனையும்
சின்னத்தம்பிக் கவுண்டன் தன்னுடன் மூன்றுபேர்
சில்லாவை விட்ட கலுமென்றான்.

---

123. ஒத்தாசை—ஆதரவு

125. எசமானன்—ஆணைத் தலைவன்
ஏற்காது · பொருந்தாது

127. தென்னவன்—பாண்டியன்

128. அகலுமென்ற மொழிதான் கேட்டுத் தீரன்
அம்புவி மெச்சியசின் னத்தம்பி
புகலி டங்கள் கிடையாதோ வென்று
பூமி நமக்கு விளையாதோ.

129. கும்பினி யாருட சீமையிலே இன்னம்
கொழுமுனைக் கொருகை யகலம்தான்
அம்புவி தன்னிற் கிடையாதோ வென்று
அகன்றானே தீரன்சின் னத்தம்பி.

130. வங்களா விட்டு வெளியில்வந் தெல்லோரும்
வாகான சாலை வழிகூடி
சிங்கார மாக அலங்கை நகர்தனிற்
சென்ற ளப்புகள் தான்பேசி.

131. தாயக மாகிய தாரா புரந்தனில்
தாசிலு தாரனைச் சென்றுகண்டு
கோயம் புத்தூருத் துரைக்கெழுதி யங்கே
குடியிருப் புக்கிடம் வாங்கிடுவோம்.

132. விஷ்த்தாரம் பேசி யலங்கை நகர்தனில்
வீற்றிருந் தாரே குடிகளெல்லாம்
தஷ்த்தூரி செய்திடு பீத்தரு சாய்பந்தத்
தாசிலு தாரன் தனையழைத்து,

---

128. அம்புவி—அழகான உலகம்
புகலிடம்—பாதுகாப்பிடம்

29. கொழுமுனை—ஏர்முனை
அகன்றான்—இடம் விட்டுச் சென்றான்

130. வாகான சாலை—ஒழுங்கான பாதை

131. தாயகம்—தன் சொந்த இடம்
தாராபுரம்—ஓரூர்

132. விஷ்த்தாரம் (வித்தாரம்)—விளக்கம்
தஷ்த்தூரி—ஆணையிடுபவன்

133. புத்தியில்லா[வு]மக்கா நானும்
போமென்று சொன்ன குடிகளையும்
குத்த மில்லாமற் குடியை முடிக்கினான்
கும்பினி யாருக்கா காதென்று.

134. தாயக மாகிய சீனையங் காருடன்
தனித்தளப் புகள் தான் பேசினரே
காயக மாக வேதான் பேசியொரு
காயிதந் தன்னி லெழுதலுற்றார்.

135. சீராடிப் போன குடிக்கி முகாந்தரஞ்
சின்னத்தம்பி யென்று தானெழுதி
நேராக வுங்கள் மனதின் படியொரு
நேமுகஞ் செய்யரே னென்றுசொல்லி

136. தெள்ளிய காயிதந் தானெழு தியொரு
சேவகன் கையிற் கொடுத்துவிட்டார்
வெள்ளி வில்லைக்காரன் தான்வாங்கி யங்கே
விரைந்து சென்றான் ஒருவினாடி.

137. காயிதங் கொண்டந்த வெள்ளி வில்லைக்காரன்
கண்டான் குடியான பேர்களையும்
வாயிதா சொல்லியே காயிதத்தை யங்கே
வைத்தான் குடியான வர்முன்னே

---

134. காயகமாக—மருட்டுதலாக; தந்திரமாக

135. சீராடி—கலங்கி; சிதறி
முகாந்தரம்—நியாயம்

136. தெள்ளிய—தெளிவான
வெள்ளிவில்லைக்காரன்—வெள்ளியிலான் வில்லையை அணிந்த சேவகன்

138. வாசித்துப் பார்த்தந்த காயிதந் தன்னிலே
வல்லகவி பரங்க ளுள்ளதெல்லாம்
யோசித்துக் கொண்டனை வோரு மிதனை
உறுதி யென்றெ ழுந்திருந்து.

139. சென்று நடந்து பழநி நகர்தனிற்
செல்லுமுன் னேதுரை தானெழுந்து
இன்று பிழைத்தோம் பிழைத்தோ மென்றே
ஏகினார் சாலை வழிகூடி.

140. வந்த குடியான பேர்களெல் லாமிந்த
வர்த்த மானங்களைத் தான்கேட்டு
சிந்தை தனிலே அநேக விபரமுஞ்
சிந்தித் தளப்புகள் தான்பேசி.

141. இன்ன மொருதரங் கேட்டு விடுவோமென்
றேவினார் நாலஞ்சு பேர்களையும்
பின்னே தொடர்ந்து வழிநாடி யந்தப்
பீத்தரு சாய்பையுஞ் சென்றுகண்டு

142. சந்திச்சு முன்னே சலாமுஞ்செய் துதங்கள்
தபுதாயங் களுரைக்க லுற்றார்கள்
விந்தை யாகத் துரைதான் கேட்டங்கே
விளம்ப லுற்றானே ஒருவசனம்

---

140. வர்த்தமானம்—செய்திகள்
விபரம்—விளக்கம்

141. ஏவினார்—ஏவியனுப்பினார்

142 தபுதாயம்—குறைகள்
விந்தை—வியப்பு
விளம்பல்—சொலல்

143. உங்கள் பிராதடிக் கடிவந் தாலும்
ஒருபொழு தும்நான் துறப்பதில்லை
எங்கே யாகினும் பிராது குடுவென்று
இண்டாசு எழுதியே தான்கொடுத்தான்

144. இண்டாசு வாங்கியே நாலஞ்சு பேர்களும்
ஏகினார் குடிமுன் பாகவேதான்
கண்டந்த மன்னவன் சின்னத்தம்பி தீரன்
காரிய மேதென்று தான்கேட்க

145. போய்வந்த சேதி குடியான பேர்களும்
பெருமையுடன் மொழியத் தான்கேட்டு
தெய்வந் துணையென்று தானிருந்தா னந்தத்
தீரனதி வீரன்சின் னத்தம்பி.

146. ஆனபடி யெல்லா மாகுதென் றெல்லொரும்
அன்னவர் தன்னிலே வீற்றிருந்தார்
சீனையங்கார் பின்னுஞ் சந்தோஷ மாகவே
சீமைக் கதிபதி யாயிருந்து.

147. தன்னுடைய காரியக் காரர் களைவெகு
சந்தோச மாகவே தானழைத்து
என்னுடைய காரியக் காரர்களே நமக்கினி
நிகருண் டோசொல்லு மென்றாரே.

---

143. துறப்பதில்லை—திறப்பதில்லை (வழக்கு)
குடுவென்று கொடுவென்று (வழக்கு)
இண்டாசு (Endorsement) —பெற்றுக் கொண்ட அடையாளம்

144. ஏகினார்—சென்றார்
காரியம்— அங்கு நடந்தவை

146. அதிபதி—தலைவன்

147. காரியக்காரர்—அணுக்க உதவியாளர்
நிகருண்டோ—சமமுண்டோம்

148 கெச்சித மாகவே பேசிய நாமள்
கிராம வழியிலே செல்வமென்றார்
உச்சித மாகவே சீனையங் கார்வர
உல்லாச சத்தை யின்னங் கேளுமையா.

149. வம்பனதி துஷ்டன் சீனையங் காரிங்கே
வர்ணச் சிவிகையின் மீதேறி
கொம்புத் தொனிகள் முழங்கிடவே நல்ல
கூர்வெடி வேட்டுகள் நின்றதிர.

150. சங்கீத வாத்தியம் தான்முழங்க நல்ல
தாழ்குழல்மாது நடனமிட
இங்கித மாகிய காரியக் காரர்கள்
இருபுரத் திலுஞ் சூழ்ந்துவர'

151. கச்சேரி தன்னிற் கணக்கர்களும் நல்ல
காரியக் காரர்களு மிருந்தார்கள்
எச்சரிக்கை யாகத் தானெழுந் தவரும்
ஏற்கன வாகவே முன்னடக்க

---

148. கெச்சிதம்—(கெர்ச்சிதம்) முழக்கமாக; வேகமாக
உச்சிதம்—உயர்வு;அழகு
உல்லாசம்—மகிழ்ச்சி;மிகக் களிப்பு

149. வம்பன்—தீயவை செய்யக்கூடியவன்
துஷ்டன்—கொடுமைக்காரன்
வர்ணம்—அழகு; வண்ணம்
சிவிகை—பல்லக்கு
கொம்புத்தொனி—குழலொலி; கொம்பு வாத்தியஒலி
வேட்டு—வெடி முழக்கம்

150 சங்கீத வாத்தியம்—இசைக் கருவிகள்
தாழ்குழல்—நீண்டு வளர்ந்து கீழே தாழ்ந்து தொங்கும் கூந்தல்
இங்கிதம்—மகிழ்ச்சி

151. கச்சேரி—தாலுக்கா அலுவலகம்

152. சஞ்சீப மாடசு பங்கள் பத்தஞ்சு
சாரட்டு வண்டிகள் தானடக்க
பஞ்ச வர்ணக் குடைதா னிழற்றநல்ல
பாங்கான சேவகர் சூழ்ந்துவர.

153 மார்க்க மதாகக் கிராம வழியிலே
மன்னவன் சீனையன் வாரானென்று
ஊருக் கூர்வெகு கண்டித மாகவே
உத்திரம் போட்டாரே சீனையங்கார்.

154 உத்திரங் கண்டு கிராமத்தார் களங்கே
உள்ளம் நடுங்கி மனம்பதறி
சித்திரம் போல விடுதி முழுதையும்
சிங்கார மாக வலங்கரித்தார்.

155 தடிக்கஞ் சிக்குரங் காடினாப் போலவே
தாசிலு தாரனுக் கேபயந்து
நொடிக்கு முன்னே நடுங்கி வேலைவெகு
நுண்ணித மாகவே தான்முடித்தார்.

156. பூலோகத் தெய்வச் சிவாலயம் போலவே
பூப்பந் தலிட்ட லங்கரித்து
மேலாக வேசிறு மாத்துகள் கட்டினர்
மெய்யிற் புழுதியுந் தாவாமல்.

---

152. சாரட்டு வண்டி—அழகான குதிரை வண்டி
பாங்கான—அழகான

153. மார்க்கம்—வழி
கண்டிதம்—கண்டிப்பு
உத்திரம்—அறிவிப்பாணை

154. சித்திரம்—படம்
சிங்காரம்—அழகு

155. நொடித்தல்—கை சொட்டல்
நுண்ணிதம்—நுட்பம்; சிறப்பு

156. மாத்து—துணி விரிப்பு
மெய்யில்—உடம்பில்

157. வாசற் புரத்திலே சிங்கார மாகவே
வாழைக் கம்பங்கள் தானாட்டி
வாச மலர்களா லனேக சுகந்தங்கள்
வகைவகை யாகத் தொங்கவிட்டு.

158. சொல்படி யாகத்தயார் செய்து வெளியில்
தோரணங் கட்டிய லங்கரித்தார்
மெய்ப்புடனே தீரன் சீனையங் கார்வெகு
மேட்டிமை யாகவே வந்திறங்கி.

159. சேனை பதாதி சனங்களுக் குமொரு
செல்லுந் தளவாட மேகுறைந்தால்
சீனையங்கார் ஞாயங் கேள்வி யில்லாமலே
சேவகர் கொள்ளை யடிப்பதுவும்

160. கேடு வரும்போது சீனையங் காருக்குக்
கெடுமதி களுந்தோற் றாமல்தான்
தேடும் பொருளைச் சதமென்று சீமையில்
தெண்டப் பிடித்ததைக் கேளுமையா.

---

157. சுகந்தம்—நறுமணம்
தொங்கல்—மலர் மாலைகளைத் தொங்கவிடல்

158. தயார்—ஆயத்தம்
தோரணம்—மாவிலை, மலர்மாலை முதலியவற்றால் செய்யப்படும் அழகுத் தோரணம்
மெய்ப்பு—மெய்ச்சல்
மேட்டிமை—அகந்தை; தற்பெருமை

159. பதாதி—காலாட்படை

160. தோற்றாமல்—தெரியாமல்; தோன்றாமல்
சதமென்று—துணையென்று; உறுதியென்று
தெண்டப்பிடித்தல்—வணங்கிப்பற்றல்

161\. விதிவசங் கள்தவ றாம லொருத்தன்
வீழ்ந்து கிணத்தில் மடிந்தாலும்
மதிமோ சங்கள் தெரியா மலூரில்
மாயங் சுடராகத் தாவினாலும்

162· காவினில் கள்ள ரடித்தாலும் ஊரில்
கன்னக் களவுகள் போனாலும்
தாவும் விசனம் பொறுக்கா மலொருத்தன்
தன்னாலே தானே மடிந்தாலும்.

163\. சேதங்கள் போவது மல்லா மலந்தச்
சீனையங் காருக்கே தான்பயந்து
பேதக மில்லா மலாயிர மஞ்னூறு
பேசாமல் வைத்தால் விடுவதுவும்,

164\. நானிலம் புகழும் கும்பினியார் வைத்த
நாட்டாண்மைக் காரர் கணக்கர்கள்
வேணுமென்ற பேரைவைத்துக் கொண்டு தனக்கு
வேண்டாத பேர்களைத் தள்ளிவைத்து

165\. சுமக்கும் பழிபாவம் பின்னு லேயிது
துன்பம் வருமென் றறியாமல்
நமக்கு நாமே துரையொன்று சீனையன்
நாட்டி லனேகம் பொன் கொள்ளையிட்டு

162\. விசனம்—துன்பம்
மடிதல்—இறத்தல்

163\. சேதம்—அழிவு
பேதம்—வேறுபாடு

164\. நானிலம்—உலகம்

166. எள்ள ளவும்பய மில்லாமல் தீரன்
இருந்தா னஷ்ட்டா வுதாரனுமாய்
கொள்ளை கொடுக்கவு மாட்டாம லின்னம்
கோவென்று சீமைக் குடிகளெல்லாம்

167. கும்பினியார் ஞாயங் கேள்வி யில்லாமலே
கொள்ளைக் கிடமாச்சு தென்றுசொல்லி
தம்பிரா னாகிய கந்த சுவாமியைத்
தஞ்ச மென் றெல்லோரு மபையமிட்டார்.

168. சங்கர சம்பு சதாசிவ னேதமிழ்த்
தாண்டவனே பழனி யாண்டவனே
எங்கும் நிறைந்த மகாமூர்த்தி யின்னம்
ஏழைக் கிரங்கிய சண்முகனே.

169. சக்தி யுமையவள் புத்திரனே சூர
சங்கார மிட்ட தயாபரனே
வெற்றி மயிலேறும் வீரிய னேவுயர்
வேள முகவனுக் கிளையோனே.

170. முன்னாளில் தேவர்க் கிடர்தவிர்த் தாயன்று
மூர்த்தியே முக்கண்ணன் தன்மகனே
இன்னாளில் எங்களைக் காத்திட வேணுமென்
றெல்லோருங் கூடி யபயமிட்டார்.

---

167. தம்பிரான்—ஆளும் அரசன்
அபயமிடுதல் —அடைக்கலம் வேண்டுதல்

168. மகா மூர்த்தி—பெருந்தேவன்

169. சங்காரம்—கொல்லுதல்
தயாபரன்—இரக்கம் மிக்கவன்
வீரியன்—வீரன்
வேளமுகவன்—யானை முகக்கடவுளாகிய பிள்ளையார்

170. முக்கண்ணன்—சிவபெருமான்

171. அவய மிட்ட குடிகளுக்கு முன்னம்
அருளி ரங்கிய சண்முகனார்
குவல யம்புகழ் கும்பினி யாருடன்
கூறி வந்தார்புகழ் சொற்பனம்போல்

172. கூறிய சொற்பனந் தான்கேட் டுத்துரை
கும்பினி யாரங் கெழுந்திருந்து
வீரிய மாகவே நெல்லீ சன்துரையை
விருசுட னங்கே தானழைத்து.

173. திக்குள்ளோர் போற்றிய தண்டா யுதபாணி
தீமையய்யம் புள்ளி தான்சேர
முக்கிய மாகவே கொள்ளை யிடுகிற
மூர்க்கமான பேரைத் தான்பிடித்து.

174. துஷ்டத் தனத்தை யடக்கு மென்றுபுத்தி
சொல்லி யனுப்பினார் கும்பினியார்
அஷ்ட திசைபுகழ் நெல்லி சன்துரை
யாமென்று சொல்லிய துக்கிசைந்து.

175. எண்டிசை யெங்கும் புகழ்விளங் குதுரை
யெழுந்து பெருகிய கோபமுடன்
திண்டுக்கல் மார்க்கமாய் வந்திறங்கிய துரையின்
சேவகர் தம்மை வரவழைத்து.

---

171. அவயம்—வேண்டி முழங்கல்
குவலயம்—உலகம்
சொற்பனம்—கனவு

172. நெல்லீசன்துரை (Lord Nelson)
விருசுடன்—விரைவுடன்

173. திக்குள்ளோர்—எத்திசையிலும் வாழ்வோர்
தண்டாயுதபாணி—தண்டாயுதத்தையுடைய பழனியாண்டவர்
மூர்க்கம்—கொடூரம்

174. அஷ்டதிசை—எட்டுத்திசை

175. எண்டிசை—எட்டுத்திசை

176. நாட்டிற் சனங்கள் மொழிவதை யுமின்னம்
நகரில் சோதனை பாருமென்று
தீட்டும் புகழ்மன்னன் நெல்லீ சன்துரை
சேவகர் தம்மை யனுப்பிடவே.

177. சேவக ராமென்று சம்மதித் தங்கே
சென்று பழனிக் கிராமங்கள்
கூவுங் குயில்மொழி மாதர்களு மூரில்
கூடிய பேர்கள் குழந்தைமுதல்.

178. பார்த்த விடமெல்லாஞ் சீனையங் கார்வெகு
பாதக னென்ற மொழிகேட்டு
வார்த்தை வகையுடன் வெள்ளி வில்லைக்காரர்
வந்து சொன்னார்துரை முன்பாக.

179. வேளைக் குதவிய நெல்லீ சன் துரை
விபர மாகவே தான்கேட்டு
நாளைக் கறியப் போறோ மென்றுதுரை
நகைத்துக் கொண்டங்கே தானிருந்தான்.

180. சேவகர் வந்து லாவியதை யந்தச்
சீனையங்கார் தீரன் தான்கேட்டுக்
கேவல மாகவே தோணு தென்றுவெகு
கிலேசப் பட்டானே சீனையங்கார்.

181. மந்திரி மார்களைத் தானழைத் திந்த
மாலுமை யேதென்று தான்கேட்க
தந்திர மாகிய மந்திரி மார்களும்
தானா பதியுமங் கேதுரைப்பார்.

---

179. வேளைக்குதவிய—சமயத்திற்குதவிய

180. உலாவியதை—அங்குமிங்கும் சென்றதை

கிலேசம்—கவலை

181. மாலுமை—இவ்வாறு நடைபெறும் செயல்

182. விசாரணைக் காகவே நெல்லீ சன்துரை
விரைந்து வாராரே கோபமுடன்
கசகரு ணைகள்செய் தாலும் நம்மைக்
கண்டினை செய்வதுந் தப்பாது.

183. தனக்கு வந்த விருந்தாளி யல்லென்று
தள்ளினா லப்பாலே போவானோ
உனக்கு யோகங்க ளெப்படியோ நாங்கள்
உறுதி சொல்லவும் போகாது.

184. கும்பினி யாருடைய அன்னமின் னாள்மட்டும்
கொடுத்திருந்து நம்ம ளுக்கெல்லாம்
தம்பிரான் தன்செய லெப்படியோ வென்று
தானா பதிமார்க ளீதுரைக்க.

185. சீனய்யங் கார்தீரன் தான்கேட் டங்கே
சீக்கென் றடங்கினான் வீடுதன்னில்
தானா பதியாரும் மந்திரி மார்களும்
தனித்தளப் புகள்தான் பேசிடவே.

186. மங்சுக்கு வந்த வறுமையும் செல்வமும்
மானிலந் தன்னில் நடபடியும்
குச்சுக்குங் கூடவே சாருமென் றங்கே
கூடி யளப்புகள் தான்பேசி,

---

182. கசகருணை—பெருந்தந்திரம் (கஜகர்ணம்)
கண்டினை—கண்டித்தல்
அன்னம்—சோறு

184. தம்பிரான்—இறைவன்; அரசன்
தானாபதி—நிதியதிகாரி

185. சீக்கு—நோய்

186. மச்சு—மாடிவீடு
குச்சு—குடிசை
சாரும்—சேரும்

187. தீங்கு வருமுன்னே நாமனை வோரும்
சென்று நடந்திட வேணுமென்று
வேங்கையைக் கண்ட கலைபோ லவிரைந்
தேகினான் வெங்கிடா சாரியாரும்.

188. தாயப் படுகின்ற சீனய்யங் காருக்குத்
தந்திர மொன்று முரையாமல்
சீவன் பிழைத்தா லேபோது மென்றவர்
திக்கெங்கு மோடி யொழிந்தாரே.

189. நட்டணை செய்திடும் பேர்களெல் லாமங்கே
நடுநடுங் கிமனம் பதறிடவே
பட்டண மெங்குங் கதிசலங்கி யங்கே
பயந்தி ருக்கிற வேளையிலே.

190. துய்ய புகழ்மன்னன் நெல்லீ சன்துரை
திண்டுக் கல்விட் டெழுந்திருந்து
வையம் புகழும் பழனிப் பதிதனில்
வந்திறங் கினாரப் போதங்கே.

191. நீதியுள்ள துரைவந் தாரென் றெல்லோரும்
நிச்சயங் கண்டுகுடி களெல்லாம்
வாதனை யாகவே சீனையங் கார்செய்த
வர்த்த மானங்களைத் தானுரைத்தார்.

---

187. வேங்கை—புலி
கலை—மான்
வெங்கிடாசாரி—ஒரு அலுவலர்
188. தாயப்படுகின்ற—துன்பப்படுகின்ற
189. நட்டணை—கொடுமை; தவறு
190. வையம்—உலகம்
191 வாதனை—துன்பம்; வேதனை
வர்த்தமானம்—செய்திகள்

192. தந்திரஞ் சேர்மொழி நெல்லீ சன்துரை
சொன்ன பிராதையுந் தான்கேட்டு
தந்திர மாகவே சீனையங் காரைத்
தாலுகா விட்டு வெளியேற்றி.

193. அரசு நிலைகுலை யாம லிந்த
அம்புவி யெங்கு மொருநிறையாய்
திராசு போலே நிறையாக யிந்தச்
சீமைக ளெங்குஞ் செளித்திடவே.

194. நெல்லீ சன்துரை மகாரா சனென்று
நீள்நில மெங்குந் துதித்திடவே
உல்லா சமாய்த்தமிழ்ப் பாடினவன் பேரும்
ஊரு முரைசெய்யக் கேளுமையா.

195. வாடை மிகுந்த பரஞ்சோதி யெங்கள்
வாங்கிஷக் காரர் குலதெய்வம்
காடை நகருக் கதிபதி யாகிய
கரிய காளியருள் படைத்தோன்.

196. மின்னுங் கிரீடம் புனைந்த மன்றாடியார்
மன்னன் கிளையி லுதித்தவனாம்
கன்னல் மொழித்துரை நாச்சிமுத் தேந்திரன்
கண்மணி நால்வரில் மொய்யணற்கு.

---

192. தாலு—தாலுக்கா

193. அம்புவி—உலகம்
திராசு—துலாக்கோல்

194. வாடை—வரிசைகள்
வங்கிஷம்—வம்சம்
காடைநகர்—ஓரிடம்

196. கிரீடம்—முடி
புனைந்த—அணிந்த
கன்னல்—கரும்பு
மன்றாடியார்—ஒரு உயர்ந்த பரம்பரை (விளக்கவுரை காண்க).

197. கண்மணி யாகவே வந்துதித்த தீரன்
காளி யண்ணன்தமிழ் பாடினவன்
இம்மா னிலத்திற் படிப்ப வருமிதை
இன்பமுடன் சொல்லக் கேட்டவரும்.

198 கூடிக் குலாவுஞ் சபைதனி லேயிதைக்
கூர்மை யுடன்மிகக் கேட்பவரும்
வேடிக்கை யாகவே கந்தசு வாமியார்
மிக்க வரங்களைத் தான்கொடுப்பார்.

199. தென்னவர் வாழி செகம்வாழி இன்னம்
செந்தமிழ் வாணர் கவிவாழி
வன்ன மயிலேறுங் கந்தசு வாமியார்
வள்ளிதெய் வானை மிகவாழி.

200. நீணிலம் புகழும் கும்பினி யார்வாழி
நெல்லீ சன்துரை தான்வாழி
சீனையங் காருடன் வாது செலுத்திய
சின்னத்தம் பித்தீரன் தான்வாழி.

201. பாடிப் படித்தவர் தான்வாழி இன்னும்
பழனிச் சீமையார் தான்வாழி
கூடிய பேர்களும் அப்பு நகர்வளர்
குடிக ளனைவோருந் தான்வாழி.

---

197. தீரன்—வீரன்
காளியண்ணன்—நூலாசிரியர்

198. கந்தசாமி—முருகன்

199. செகம்—உலகம்
தென்னவன்—பாண்டியன்
வாணர்—புலவர்
வன்னமயில்--பலவண்ணமுடைய அழகான மயில்

200. வாது—வழக்கு
அப்புநகர்—ஓரூர்

சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி

கும்மி தோன்றிய இடமும் போற்றும் இறைவனும்

திருக்கோட்டியூரில் கோயில் கொண்டுள்ள சௌமிய நாராயணப் பெருமாள் பேரில் இந்தக் கும்மி பாடப் பெற்றுள்ளது இது எப்பொழுது யாரால் பாடப்பட்டுள்ளது என்பதை அறியத் தக்க சான்றுகள் ஏதுவும் இதுவரைக் கிடைக்கப் பெறவில்லை

திருக்கோட்டியூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூருக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவில் சிவகங்கைச் சாலையில் உள்ளது. இங்குள்ள திருமால் கோயில் மிகச் சிறப்புடையது. நாலாயிரம் திவ்வியப் பிரபந்தத்தில் திருபல்லாண்டுக்கு அடுத்த முதற்பாசுரத்தில் இந்த இடம் 'வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்' என்று சிறப்பாகக் கூறப்படுகிறது. இங்குள்ள வைணவக் கோயில் வரலாற்றில் இடம் பெற்றுள்ள சிறப்புடையது. மங்கள சாசனம் பெற்றது.

கோயில் அமைப்பு குறிப்பிட்டுக் கூறத்தக்கது. ஆலயத்தின் கருவறையின் மேல் அரங்க விமானம் உள்ளது. எட்டு பாகங்களுடன் விளங்குவதால் இப்பெயரைப் பெறுகிறது. இதன் நிழலும் தரையில் விழுவதில்லை. இக்கோயிலிலுள்ள மூலவரை (திருமால்) வணங்கச் செல்ல வேண்டுமானால் சிவனது சன்னதி வழியாகத்தான் போக வேண்டும். சைவ, வைணவ வேறுபாடற்ற ஓர் உன்னத நிலையை இது குறிப்பிடுவதாகக் கருதலாம்.

திருமால் மூவேறு அமைப்பில் இந்தக் கோயிலில் இருக்கை கொண்டிருப்பதைக் காணலாம். அடித்தளத்தில் கிடந்த கோலத்தில் பள்ளி கொண்ட பெருமாள் என்ற பெயரிலும், இரண்டாவது தளத்தில் நின்ற கோலத்தில் சௌமிய நாராயணப் பெருமாள் என்ற பெயரிலும், மூன்றாவது தளத்தில் இருந்த கோலத்தில் வைகுண்ட பெருமாள் என்ற பெயரிலும் விளங்கிச் சிறப்புறுவதைப் பார்க்கலாம்.

திருக்கோட்டியூர் பெருமாளைப் பெரியாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஐவரும் புகழ்ந்து பாடியுள்ளனர். கோட்டியூர்க் கலம்பகம், கோட்டி யூர்ப் பிள்ளைத் தமிழ் ஆகியவை இவ்வூரைச் சிறப்பித்துப் பாடப் பெற்ற நூற்களாகும். நல்லந்தையார் என்ற சங்கப்புலவர் இவ்வூரைச் சேர்ந்தவர் என்று கூறுவர். இராஜராஜ சோழனின் கல்வெட்டுக்கள் இந்தக் கோயிலில் காணப்படுகின்றன. திருக்கோட்டியூர் மகாத்மியம் கோயிற்சிறப்பை விளக்குவதாகும். திருமால் இந்த ஊரில்தான் நரசிம்ம அவதாரம் எடுத்தார் என்ற நம்பிக்கையும் உள்ளது.

இராமானுஜருக்கும் திருக்கோட்டியூருக்கும் மிகவும் நெருக்கமான தொடர்பு உண்டு இவர் திருவரங்கத்திலிருந்து திருக்கோட்டியூர் நம்பி யின் புகழைக் கேள்விப்பட்டு இங்கு வருகிறார். வைணவமந்திரத்தின் சீரிய பொருளைப் பலமுறை முயன்று மிகவும் அரிய வழியில் நம்பியிட மிருந்து அறிகிறார். அதை அடுத்தவருக்கு கூறினால் தலை வெடித்து விடும் என்று கூறப்பட்ட போதும் சற்றும் அஞ்சாது ஒரு மதில் மேல் ஏறி அனைவருக்கும் கேட்குமாறு விளக்கிக் கூறுகிறார். அனை வரும் மந்திரப் பொருளை அறிந்து மகிழ்கிறார்கள். இராமானுஜரின் தலை வெடிக்கவில்லை. அவர் அருள் வழங்கிய இடமானதினால் திருக்கோட்டியூர் 'திவ்ய தேசம்' என்று அழைக்கப்படுகிறது. அருளுப தேசம் செய்த இடத்தில் இராமானுஜரின் திருமேனி இன்றும் உள்ளது.

'சௌமிய' என்பது அனைத்துச் செல்வங்களையும் அருளும் ஆற்றல் என்ற பொருளைக் குறிப்பது. ஆகையினால் திருமகள் அந்தப் பெயரால் அழைக்கப்பெறுகிறார். திருமகளுடன் அழகுத் திருக்கோ லத்தில் நின்ற நிலையிலிருக்கும் பெருமாளைச் சௌமிய நாராணப் பெருமாள் என்று கூறுகிறார்கள்.

கும்மிப் பாடலின் உள்ளடக்கம்

காப்பு

கும்மிப்பாடல் ஆசிரியர் முதன்முதலில் சேனைநாதர், மனுநீதர், மகிழ் மாலையாறன், தமிழ் மறைகள் பேரில் காப்புப் பாடி நூலைத் தொடங்குகிறார். வைணவ மரபின்படிச் சக்கரத் தாழ்வாரைச் சேனைநாதர் என்று கூறுவர். சைவர்கள் பிள்ளையார் வாழ்த்துடன் நூலைத் தொடங்குவது போன்று வைணவர்கள் சேனைநாதரைப் பாடுவார். இவரை விஷ்வக்சேனர் என்றும் கூறுவர். தமிழ் மறைகளைப் போற்றி நூலுக்குக் காப்புப் பாடுவதிலிருந்து இந்தக் கும்மி ஆசிரியரின் தமிழ்ப்பற்று புலனாகும்.

கும்மிப் பெண்கள் வரிசையாக அரங்க விமானத்தை வலமாக வந்து கும்மியடிக்கத் தொடங்குதல் வேண்டும். நலம் வேண்டியும் நன்மை நாடியும் கும்மியடிக்க வேண்டும். திருமாமணி மண்டபத் திலிருக்கும் நித்திய வாசரைப் போற்றிக் கொண்டாடுதல் கும்மிப் பெண்களின் கடமை ஆகும். தினம் தினம் இவ்வாறு எல்லாப் பெண்களும் ஆடிப்பாடிக் கோட்டியூர் மாயன் முன் கும்மியடிக்க வேண்டும். காலில் சிலம்பு ஒலிக்க, அணிகலன்கள் அசைந்தாடி ஒலியெழுப்ப, மாலைகள் புரண்டு ஆட, வயலால் சூழப்பெற்ற திருகோட்டியூர் மாயன் முன் கும்மியடித்ததல் வேண்டும்.

மார்பில் இறுக்கமான கச்சினைக் கட்டி, காலில் ஒலிக்கும் கொச்சங்கட்டி, கையைக் கொட்டித் தாள ஒலியை ஒழுப்பி, திருக் கோயில் இறைவன்முன் ஆட்டம் நடைபெறுதல் வேண்டும். திரும்பியும் மனம் விரும்பியும் கும்மியடிப்பதாக இந்தக் கும்மிப் பாடல் கூறுகிறது. சுற்றிச் சுற்றிப் பெண்கள் வட்டமிட்டு ஆடுவது மிக நன்றாக அமைந்துள்ளதாக ஆசிரியர் கூறுகின்றார்.

பல்வேறு திருநாட்கள்

சௌமிய நாராயணப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறும் விழாக்களைக் கும்மிப்பாடல் விளக்குகிறது. சித்திரை மாதத்தில் பதினொரு நாட்கள் தொடர்ந்து நடக்கும் விழாக்கள் தனித்தனி யாக விளக்கம் பெறுகின்றன,

சித்திரையானது ஆண்டின் முதல்மாதம். அம்மாதம் நடை பெறும் சித்திரைத் திருவிழாவின் முதல்நாள் 'வருடத்தில் உண்டிதொழு நாளாகக்' கொண்டாடப்படுகிறது. அன்று அண்டர் தொண்டர் அனைவரும் வணங்கி நிற்க நாராயணர் பூஞ்சப்பரத்தில் பவனி வருகிறார். அவர் தெருவலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. அனைவரும் அவரை வணங்கி அருள் பெறுதல் வேண்டும் என்பது ஆசிரியரின் விருப்பம்.

இரண்டாம் திருநாளில் திருமால் சிங்கத்தில் ஏறி தெருச்சுற்றி வருகிறார். அவருடைய வீரமும் வேகமும் அன்று தோன்றும். தீயதைக் கடியும் தன்மையுடன் சீறிச் சினந்து வ ம் நாள க அது விளங்கும். அன்று கும்மிப் பெண்கள் வைபோகத் திருக்கும்மி அடிக்க வேண்டும் என்று ஆசிரியர் வேண்டுகிறார். உடம்பில் பூசும் களபவாசனை எங்கும் வீசக் கும்மியடிக்க வேண்டும் என்பது அவரது ஆசை.

மூன்றாம் திருநாளில் கண்ணர் சௌரிய நாராயணர் மாருதியின் மேலேறி வீதிவலம் வருவதைக் காணலாம். அன்று அவர் அறச்

சீருடன் வரும் திருக்கோலம் நெடுந்திரை வாரிதிபோல் இருப்பதாக ஆசிரியர் கூறுகிறார். கும்மிப் பெண்கள் அமிர்தம் போன்று சுவைக்கும் இசையில் பாடி சிங்காரமும் அலங்காரமும் மிக்க கும்மி யடித்து விளையாட வேண்டும்.

நாலாம் திருநாளில் திருக்கோட்டியூர் இறைவனாகிய பச்சை முகில் வாமன் பறவைகளுக்கு அரசனாகிய கருடன் மீது அமர்ந்து மிகவும் சிறப்பாக வலம் வருகிறான் அவனை வாழ்த்தி வணங்கிப் பாடவேண்டும். பளிங்குக் கைவளை குலுங்க விளம்ப காலத்தைப் பிடித்துக் கும்மிப் பெண்கள் ஆடிப் பாடுவது நன்றாக அமையும்.

ஐந்தாம் திருநாளில் அரிராமனாகிய அனந்த பத்மனாபன் ஆதிசேடன் மீது எழுந்தருளி வீதியைச் சுற்றி வருகிறார். தன் இருவிழிகளும் இரு புயங்களும் குளிர்ந்ததாக ஆசிரியர் கூறுகிறார். அன்று கும்மிப் பெண்கள் வீதியின் மத்தியில் அமர்ந்து மிகவும் இன்பமாகக் கும்மியடிக்கிறார்கள். மத்திய காலத்திலும் துரித காலத்திலும் பாடி ஆடுகின்றனர்.

ஆறாம் திருநாளன்று திருக்கோட்டியூர் வாழ்கின்ற சொக்க நாராயணர் அன்பாகக் கோதைவல்லியாகிய திருமகளுக்கு மாலைகள் சூட்ட நீலமலை போன்ற யானையின் மீது அமர்ந்து தெருவைச் சுற்றி வருகிறார். அக்காட்சி எழில்சேவை தருவதாக அமைகிறது. அன்று மிக நேர்த்தியாய் வெகுகீர்த்தியாய்க் கும்மியடிக்க வேண்டும் என்று ஆசிரியர் கேட்டுக்கொள்கிறார்.

ஏழாம் திருவிழாவை நான்முகனே போற்றிப் புகழ்வதாக ஆசிரியரே கூறுகிறார். அன்று மலர் சூடி, மஞ்சனமாடித் திருமக ளுடன் பூஞ்சப்பரத்தில் சௌமிய நாராயணர் பவனி வருகிறார். அன்று அவரைப் பணிந்தும், தணிந்தும், கும்பிட்டும், குனிந்தும், நிமிர்ந்தும் கும்மியடிக்க வேண்டும் என்பது கருத்து.

சிஷ்டர்கள் வணங்கும் எட்டாம் திருநாளன்று திருக்கோட்டியூர்ப் பெருமாள் குதிரை வாகனத்தில் ஏறித் தெருவலம் வருகிறார். வேகமும் காட்சி நயமும் இந்தக் காட்சியில் மிகுதியாக உள்ளன. அந்தக் குதிரை முகத்தெதிரே தாளங்கள அதிரும்படிக்குக் கும்மி யடிக்க வேண்டும்.

ஒன்பதாம் திருநாள் சௌரியமால் கோயிலைச் சுற்றிவரும் போது களபம், கத்தூரி மலர் முதலிய நன்மணப் பொருளை அணிந்துள்ளார். தண்மையான அருளைக் காட்டி அன்புடன்

அன்ன வாகனத்தில் வருகிறார். அவருக்கு முன் கும்மிப் பெண்கள் முன்னநதம் போட்டு ஆடிப் பாடுகின்றனர் அதோடு வர்ணங்கள் (வன்னங்கள்) பாடவேண்டும் என்பது ஆசிரியருடைய கருத்து.

பத்தாம் திருநாள் மிகச் சிறப்புடைய விழாநாளாக அமைகிறது, அன்று தேவர்கள் வணங்க திருக்கோட்டியூர்ப் பெருமாள் திருத்தேரில் எழுந்தருளித் தெருவலம் வருகிறார். அன்று பசுந்தோகை போன்று எழில் ததும்பக் கும்மிப் பெண்கள் ஆடுதல் வேண்டும் அவர் சரணம் போற்றிக் கரணம் போட்டு ஆட வேண்டும் என்று ஆசிரியர் விரும்புகிறார். மேலும் வைபோக இலாகுகள் போட்டுக் கும்மியடிக்க வேண்டும்.

பதினொராம் திருநாளில் சௌமியமால் பாரோர் பணிந்து நிற்க விண்ணோர் பனிமலர் தூவி வணங்கிநிற்கத் தமிழ் மறையுடன் பழமறை இணங்கி முழங்குகின்றது. அப்பொழுது வெவ்வேறு இராகக் கீர்த்தனங்கள் (இசைப் பாடல்கள்) பாடி இறைவனை வேண்டுதல் வேண்டும். பணிவாக வணங்கி அவன் தாளினைப் பற்றுதல் வேண்டும்.

கோயில் வீதிகளும் மண்டபங்களும

அழகான திருவீதி (நாற்புற வீதி), உள்மாட வீதி ஆகிய வற்றிலும் இறைவன் வலம் வருகிறான். கொடி மண்டபம் சிங்க மைய மண்டபம், சோபன மண்டபம் ஆகியவற்றில் அரிய சேவைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. திருமகளுக்கு மாமணி மண்டபத்தில் நாராயணர் அருள் செய்கிறார். இவை அனைத் தையும் கும்மிப் பெண்கள் மிகவும் உயர்வாகப் போற்றிப் புகழ்ந்து பாடுதல் வேண்டும்.

இறையருள் வேண்டுவோர்

அனந்தன், கருடன், சேனையர் கோன், தமிழ் ஆழ்வார், திருக்கோட்டியூர் நம்பி, புனித நீதர், ஸ்ரீ பெரும்பூதூர் நாதராகிய இராமனுஜர், பிற தொண்டர்கள், அண்டர் அனைவரும் திருக் கோட்டியூர், சௌமிய நாராயணப் பெருமாளை வந்து வணங்கிப் பணிகின்றனர். இறைவனுடைய நல்லருள் அனைவருக்கும் வாய்க்கப் பெறுகின்றது. அவன் பெருமைகளையும், சிறப்புக்களை யும், தசாங்கங்களையும், கேசாதிபாதங்களையும் உயர்வாகப் போற்றிப் பாட வேண்டும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சிறப்புச் செய்திகள்

திருக்கோட்டியூரைச் சேர்ந்த ஒரு வைணவ பக்தர் சௌமிய நாராயணப் பெருமாளின் பெருமைகளை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆவலில் இந்தக் கும்மிப் பாடலைப் பாடி இருக்க வேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும் பாலும் எல்லாக் கோயில்களிலும் கும்மியடித்துப் பாடும் வழக்கம் இருந்துள்ளது. ஆகையினால் அத்தகைய ஆடலுக்கு உதவும் தரமாக அந்தந்த இடத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் போற்றிப் பாடல்கள் புனைந்து நூலாகவும் எழுதியுள்ளனர். இத்தகைய கும்மி நூல்கள் வாயிலாக இறைப்பெருமை மாத்திர மன்றி அக்கோயிலில் நடைபெறும் விழாக்கள் பற்றிய செய்திகளை யும் அறிய வழி பிறக்கிறது. மேலும் பல நடைமுறை வழக்கங் களையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

திருக்கோட்டியூர் கோயிலில் சித்திரைமாதம் நடைபெறும் பெருவிழாவில் பதினொரு நாட்கள் என்ன என்ன நடந்தன என்பதை இந்தக் கும்மி பாடல் மூலம் அறியலாம். மக்களின் மனப் பக்குவத்துக்கும் விருப்புக்கும் இசையவே விழாக்கள் பெரும்பாலும் நடக்கின்றன. புராண நிகழ்ச்சிகளை மக்கள் சிறப்பாக நம்பியதினால் விழாக்கள் கும்மியில் விளக்கப்பெற்றிருப்பது போன்று நடந்துள்ளன. அடக்கமான தத்துவப் பொருட்கள் ஆடம்பரமான விழாக்களாக உருவாகி இருப்பது புலனாகும்.

காலத்தின் இயல்பு, மக்களின் நம்பிக்கை, சமூகத்தின் போக்கு, சமயத்தின் நிலை, கலையின் தன்மை ஆகியவற்றை ஓரளவு அறிய இத்தகைய கும்மிப்பாடல்கள் நன்கு உதவும்.

திருக்கோட்டியூரில் வைணவ சமயம் வேரூன்றி வலிமை யுற்றிருந்த கால கட்டத்தில் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி எழுதப் பெற்றுள்ளது. வைணவத்தைத் தவிர வேறு எந்தச் சமயக் குறிப்பும் இந்தக் கும்மிப் பாடலில் இடம்பெற முடியவில்லை. சௌமிய நாராயணரை எத்தனையோ பெயர் சொல்லி அழைத்தா லும் உள்ளம் நிறைவுறாது. மேலும் மேலும் வாழ்த்திப் போற்றவே ஆசிரியரின் மனம் நாடுகிறது. இதிலிருந்து அவருடைய சமயப் பற்று தெரிவதோடு அக்காலத்தில் அவ்விடத்திலுள்ள சமய நிலையும் நன்கு தெரிகிறது.

சௌமிய நாராயணைப் பெருமாள் கும்மி

1. பொன்மகன் சொக்கநா ராயணர் கோட்டிப்
புரியில்வாழ் வேதபாராயணர்
தன்னடி மேலே—குமித்தமிழ் இன்னிசையாலே
விளம்பவே.
நன்னய மாகவே துன்று புகழ் சேனை
நாதர் மலர்ப்பதம் காப்பாமே—திரு
நீதர் மலர்ப்பதம் காப்பாமே—திரு
நாவீறன் மகிழ் மாலைமாறன்றன்
நறை மலர்ப்பதம் காப்பாமே—தமிழ்
மறைகளைப் போதும் காப்பாமே.

2. கருணைகள் தேடித்—திருக்கோட்டிக்
கண்ணனைப்பாடத்—தினந்தினம்
வரிசையா கவள ரரங்கவி மானத்தை
வலமாய்க் கும்மி யடியுங்கோடி—நீங்கள்
நலமாய்க்கும்மி யடியுங்கோடி
திருமாமணி மண்டபத்தே மருவும் நித்திய
வாசரைப் போற்றிக்கொண்டா டுங்கோடி—பட்சி
வாகனை வாழ்த்திக்கொண் டாடுங்கோடி

---

1. கோட்டிப்புரி—திருகோஷ்டியூர்
குமித்தமிழ்—கும்மித்தமிழ்
நறைமலர்—மணமிக்க மலர்

2. மருவும்—விளங்கும்
பட்சிவாகனை—கருடவாகனத்திருக்கும் திருமால்

3\. நிதம்கும்மி யடியுங்கோடி—மங்கையரே வளை
குலுங்கக் கமலச் செங்லைகயரே.
இம்மகி மேலே அனைவரும் பொன்மயில்போலே
இந்திரன் சொன்மயப் போற்றிய கோட்டியூர்
மாயன்முன்
துலங்கக் கும்மி யடியுங்கோடி—வடி(வு)
இலங்கக் கும்மி யடியுங்கோடி—தத்தைச்
சொல்லியே புன வல்லியே—மோகன
வல்லிய ரெல்லாரும் வாருங்கோடி—மட
மெல்லியே தளேங்கள் தீருங்கோடி.

4\. காலிற் கனகச் சிலம்பலம்ப—மலர்
மேலிற் புனைந்த கலன் புலம்ப
மாலை யசைய குழை நிறப்பொன் னோலையசைய
எல்லோரும்
கோல வயற்றிருக் கோட்டியூர் மாயன்முன்
குலாவிக் கும்மி யடியுங்கோடி—பரந்
துலாவிக் கும்மி யடியுங்கோடி
அடி கோதைய ரேயெழிற் பேதையரேவெகு
நாதமாய்க் கீதங்கள் பாடுங்கோடி அரிக்
காசையைக் கொண் டாடுங்கோடி மலர்
கொண்டையரே பிறைத் துண்டு நுதல்முலைச்
செண்டு மடவாரே வாருங்கோடி கரு
வண்டு விழியாரே பாருங்கோடி.

---

3 மகி—பூமி; உலகம்
இலங்க—விளங்க
தத்தை சொல்லியே—கிளி போன்ற சொல்லையுடையவளே

4\. கனகம்—பொன்
சிலம்பலம்ப—சிலம்புஒலிக்க
கோலவயல்—அழகான வயல்
மாயன்—திருமால்
கோதையர்—பெண்கள்
நாதமாய்—இனிய ஒலியுடன்
கீதங்கள்—பாடல்கள்

5. மத்தக மொத்த முலை குலுங்க மார்பில்
முத்துவடங்கள் நிரை துலங்க—தந்த
தித்தத் திங் கண தந்தந் திந்தவெனச் சொல்லிச்
சித்தமிர்தென் கோட்டியூர் மாயன்முன்
சேர்ந்து கும்மி யடியுங்கடி—யிறு
மாந்து கும்மி யடியுங்கடி
மையல் தீரலாம் புகழ் சேரலாங்—களி
கூரலாமடி தோழிப்பெண்ணே—மனந்
தேரலாமடி தோழிப் பெண்ணே.

6. பொய்யிடை யிறுக்கக் கச்சுக்கட்டி—யரும்
பூமலரடியில் கெச்சங்கட்டி
கைகளைக் கொட்டி லயங்களைப் பையவேதட்டி
தெங்கிடத் தெய்ய வென்றே—திருக்
கோஷ்டியூர் மாயன் முன்
திரும்பிக் கும்மி யடியுங்கடி—மனம்
விரும்பிக் கும்மி யடியுங்கடி
திட்டமாய் நாமனத் திட்டமாய் கும்பிட்டு
கொட்டமிட்ட டாடுவோம் வாருங்கடி—சுற்றி
வட்டமிட் டாடுவோம் வாருங்கோடி.

---

5. மத்தகம்—யானையின் மத்தம்
நிரை—கூட்டம்
இறுமாந்து—செருக்குடைந்து
மையல்—மயக்கம்
தேரலாம்—தேறலாம்

6. கச்சுக்கட்டி—மார்புக்கச்சுக்கட்டி
கெச்சங்கட்டி—சிறுசதங்கை கட்டி
லயம் தாளம்
பைய—மெதுவாக

7. கொண்டல்சூழ் கோட்டி நகர்ப் பெருமாள்
சூர்ந்திடு சித்திரைத் திருநாளன்று
முதல்நாள் வருடத்தில் உண்டி தொழுநாள்
பவனியாய் அண்டர்தொழப் பூச்சப்பரத்தினிலே
அழகாய் வருகிறார் பாருங்கோடி
புகழாய் வருகிறார் பாருங்கோடி—கிட்ட
வண்டியே திக ரன்றியே—நீங்கள்
மண்டியி லிருந்தாடுங்கோடி—நயங்
கொண்டெழுந்திருந் தாடுங்கோடி.

8. பொங்கு புகழிரண் டாந்திருநாள்—வளர்
எங்கள் சவுமிய நாரண மால்
சிங்கத்திலேறி யமருல்லா சங்கத்தைச் சீறி
பவனியாய்ப் பொங்கமாய் வீதி வருகிறாரிந்த
வைபோகத் திருக்கும்மி யடியுங்கோடி—மெய்யிற்
பூசுங் களபவா சனையெங்கும்
வீசக் கும்மி யடியுங்கோடி—நயம்
பேசக் கும்மி யடியுங்கோடி.

---

7. கொண்டல்—மேகம்
உண்டி—உணவு
பவனி—ஊர்வலம்
அண்டர்—தேவர்
மண்டியிலிருந்து—மண்டியிட்டு (பணிவாகஅமர்ந்து)

8. பொங்கம்—பொலிவு
வைபோகம்—நிகழ்ச்சி

9. காருதித் துலவு சோலைசூழ் கோயிலிற்
கண்ணர் சவுமிய நாரணமால்
மாருதி மேலே நெடுந்திரை வாரிதிபோலே
வடிவுடனே யறச் சீருடனே திரு வீதிவருகிறார்
சிங்காரக்கும்மி யடியுங்கோடி
யலங்காரக் கும்மியடியுங் கோடி—அடி
சித்தச வல்லியே மைத்தடங் கண்ணியே
தத்தைகள் போலநின் றாடுங்கோடி அமிர்
தத்தை நிகரிசை பாடுங்கோடி.

10. பச்சை முகில் வாமன் முகுந்தன் கோட்டிப்
பதியில் வளருங் கோவிந்தன்
சச்சி தானந்தன் தவள வழகிய தந்தன் பவனியாய்
பட்சிராசன் மிசை யுச்சிதமாய் வாரான்
பரவிக் கும்மி யடியுங்கோடி—நாலாந்
திருநாட் கும்மி யடியுங்கோடி—முழுப்
பளிங்குக் கைவளை குலுங்கக் கிலுங்க
விளம்பத் தைப்பிடித் தாடுங்கோடி—துதி
விளம்பிக் கிளம்பி யாடுங்கோடி.

---

9. கார்—மேகம்
மாருதி—அனுமன்
வாருதி—கடல்
சித்தசவல்லி—ரதி போன்றவளே
தத்தைகள்—கிளிகள்
நிகரிசை—போன்ற இசைப்பாடல்கள்

10. வாமன், முகுந்தன், கோவிந்தன் — திருமால்
தவளம்—முத்து
பட்சிராசன்—கருடன்
உச்சிதமாய்—சிறப்பாய்
வாரான்—வருகிறான்
பளிங்கு—கண்ணாடி
விளம்ப—விளம்பகாலம்—இசைபாடுவதில் ஒரு முறை

11. கருவனந் தழை யரிராமன் புய

மருவனந் தழைத்திடு தாமன்

திருவனந்தன் மிசை யெழுந்தருளி—யென்றன்

விழிகளுமிரு புயங்களுங் குளிரவே—வீதி

வருகிறானிதோ பாருங்கோடி—சேவை

தருகிறானிதோ பாருங்கோடி—வீதி

மத்தியி லெல்லோரு மார்த்தியிலேநின்று

மத்திய காலத்தில் ஆடுங்கோடி—துரி

தத்திலும் விசையா யாடுங்கோடி.

12. ஞாலம் புகழ்திருக் கோட்டியூர் வாழ்சொக்க

நாரணர் கோதைவல் லிக்கன்பாய்

மாலைகள் சூட விண்—தேவர்மருமலர்போட..

கருணையாய் நீலமலைபோல—யானைவா
கனத்திலே

எழுந்தருளி வாராரடி— யினிதா

எழிற்சேவை தாராரடி

நேர்த்தியாய் வெகு கீர்த்தியாய் நீங்கள்

மாத்திக் கும்மி யடியுங்கோடி—தொழு

தேத்திக் கும்மி யடியுங்கோடி.

---

11. கருவனம்—செடிகள் தழைத்து கருமை வண்ணம் பொலிந்த
காடு

தாமன்—மாலையணிந்தவன்

திருவனந்தன்—ஆதிசேடன்

ஆர்த்தியில்—விருப்பமுடன்

13. சதுமுகன் போற்றுமே ழாந்திருநாள் கோட்டிச்
சவுமிய நாராயணமால்
மதுமலர் சூடி குளிர்திரு மஞ்சனமாடி புவிமாது
பதும மாதுடன் பூஞ்சப்பரத்திலே
பவனி வந்தார் காணுங்கோடி—போற்றிப்
பணிந்து பணிந்து தணிந்துகும் பிட்டு
குனிந்து கும்மியடியுங்கோடி—உடன்
நிமிர்ந்து கும்மியடியுங்கோடி.

14. சிஷ்டர் பரவு மெட்டாந் திருநாள் வளஞ்சேர்
திருக்கோட்டி நகர்ப் பெருமாள்
கிட்டமிதித்தே யங்கவடி யெட்டமிதித்தே
தொட்டுயர் வையாளி யிட்டு வரப்பரி
கொட்ட மிடுவதைப் பாடுங்கோடி—சுற்றி
வட்ட மிடுவதைப் பாடுங்கோடி—அந்த
குதிரை முகத்து கெதிரே தாளங்கள்
அதிரக் கும்மி யடியுங்கோடி.

15. மன்னுங் களபகத் தூரிகளும் மலர்
வாடைகள் தரும் வேரிகளும்
துன்னு தென் கோட்டிச் சவுமியமால்
தன்னருள் காட்டிப் பவனியாய்
அன்னந் தனிலெழுந் தின்னா ளானந்தமாய் வாரார்
முன்னந்தம் போடுங்கோ தோழிப் பெண் காளிசை
வன்னங்கள் பாடுங்கோ தோழிப் பெண்கள்— ஓன்ப
தாந்திரு நாளின் றேந்திழை யாரே
சேர்ந்து கும்மி யடியுங்கோடி—யிறு
மாந்து கும்மி யடியுங்கோடி.

---

13. சதுமுகன்—நான்முகன்
மதுமலர்—தேன் செட்டும் மலர்
புவிமாது—நிலமகள்
பதுமமாது—திருமகள்
14. வையாளி—குதிரையின் கதி (ஓட்டம்)
15. வேரிகள்—வாசனை
வன்னம்—வர்ணம் (இசை)
வம்பவிழ்—மணம்மிக்க மலர்கள் விரிந்த

16. வம்பவிழ் கோட்டி நகர்ப்பெரு மான்பேரில்
இன்ப மிகுந்தபத் தாந்திருநாள்—உம்பர்கள்
தஞ்சப் பரிசனரன்பொ டிறைஞ்சத் திருத்தேரில்
சம்பிரமமா யெழுந்தருளி வாரார்
சரணம் போற்றுங்கோ தோழிப் பெண்கள்—நின்று
கரணம் போடுங்கோ தோழிப்பெண்கள்
மோசமதாகவே நாக ரிகவை போக
லாகுகள் போடுங்கோடி—பசுந்
தோகை பேர லேநின்றாடுங்கோடி

17. சீரான தோளிக் கினியரான் மேற்பதி
னோராந் திருநாளிற் சவுமியமால்
பாரோர் பரவ விண்ணோர் தேவர்கள்
பனிமலர்த் தூவத்
தமிழ் மறையோடு பழமறை முழங்க வெவ்வேறா
ராகாந்த கீதங்கள் பாடுங்கோடி மிக
விங்கிதஞ் சிறந்த வங்கணம் பொருந்த
வணங்கிக் கும்மி யடியுங்கோடி வந்து
வணங்கிக் கும்மி யடியுங்கோடி.

18. செய்யதிரு வீதி யோநா ளும்வளஞ்
சிறந்த வுண்மாட வீதிகளுங்—பைய
எழுந்து கொடி மண்டபத்தினில் வந்து—வளர்
சிங்கமைய்ய மண்டபஞ் சோபனமண்டபம்
மன்னிய சேர்வையைப் பாடுங்கோடி—திரு
மாமகள்க்கருளி வாழ்திரு மாமணி
மண்டபம் வந்தா ரென் றாடுங்கோடி—யிசை
கொண்டு படியேற்றப் பாடுங்கோடி.

---

16. உம்பர்—வானவர்
சம்பிரமமாய்—அழகாய்
பசுந்தோகை—மயில்

17. வங்கணம்—உற்றநேசம்; சிறந்த அன்பு
இங்கிதம்—இனிமை

18. கொடி மண்டபம்—கொடி மரம் நிற்கும் மண்டபம்
மன்னிய—விளங்கிய
திருமாமகள்—திருமகள்

19. அனந்தன் கெருடன் சேனையர் கோன்தமிழ்
ஆழ்வார் திருக் கோட்டியூர் நம்பிபுனித
நீதர் ஸ்ரீபெரும் பூதூரின்நாதர் தொண்டர்
அண்டரனைவருந் தொழ வந்து சேர்கையில்
அன்பா யிருந் தாடுங்கோடி யவர்
தம்பெரு மையைக் கொண்டாடுங்கோடி—மாத
சாங்கமுங் கேசாதி பாதமுஞ் சொல்லியே
யன்பாகக் கும்மி யடியுங்கோடி திரு
முன்பாகக் கும்மி யடியுங்கோடி

20. பருவ மோகன மின்னாரும்—பச்சைப்
பைங்கிளி போல்வரு மின்னாரும்
சொருப ரஞ்சித மின்னாரும் பசுந்
தோகை மயில்மின் னாரும்ரச
பாகு நயமொழி மின்னாரும்
மேகக் கருங்குழல் மின்னாரும்—ரம்பை
மேனகை யாகிய மின்னாரும்
கோகில நேரிசை மின்னாரும்
கோமள மாமுலை மின்னாரும்
காமன் ரதிக்கொத்த மின்னாரும்.
கலந்து கும்மி யடியுங்கோடி--திருக்
ககலக் கும்மி யடியுங்கோடி
துலங்கக் கும்மி யடியுங்கோடி—யது
மோகனக் கும்மி யடியுங்கோடி.

---

19. மாதசஅங்கம்—பெருமைக்குரிய பத்து அங்கம்

20. மின்னார்—மின்னலைப் போன்று இலங்கும் கொடியுடையார்
கோகிலம்—கிளி; குயில்
கோமளம்—இளமை
காமன்—மன்மதன்
திருக்ககல → திருக்கு + அகல = வஞ்சம் அல்லது குற்றம்அகல
யது—யதுகுலம்; யாதவகுலம்

21. மங்களக் கும்மி யடியுங்கோடி—நல்ல
வாங்கான கும்மி யடியுங்கோடி
இங்கிதக் கும்மி யடியுங்கோடி—மண்டி
இருந்து கும்மி யடியுங்கோடி—எழுந்
திருந்து கும்மி யடியுங்கோடி.

22. தேவலங் காரனை வாழ்த்துங் கோடி
செங்கண்மால் தன்னடி போற்றுங்கோடி
ஆவலுடன் புகழ் தேடுங்கோர்டி—வெகு
அன்பாயிருந்து கொண்டாடுங்கோடி—மனந்
தென்புட னேவாழி பாடுங்கோடி.

---

21. வாங்கான—சிறப்பான
மண்டி—கூடி

22. தேவலங்காரன்—சன்மார்க்கமுடையவன்; சிறந்தவன்

நல்லாண்டவர் கும்மி

நல்லாண்டவர்

கோதண்டம் என்னும் வில்லைக் கையில் தாங்கியிருக்கும் திருமாலின் அவதாரமாகிய இராமன் மாவை நகரில் நல்லாண்டவர் என்ற பெயரில் வணங்கப்பட்டுள்ளார். மாவை நகரம் இராமநாத புரம் மாவட்டத்தின் வடபகுதியிலிருக்கும் மிதிலைப்பட்டியை அடுத்து இருக்க வேண்டும். நல்லாண்டவர் பற்றிய கும்மிப் பாடலை மிதிலைப்பட்டி குழந்தைக் கவிராயர் இயற்றியுள்ளதாகக் குறிப்பு உள்ளது.

கும்மிப் பாடலின் ஆசிரியர்

மிதிலைப் பட்டியைச் சேர்ந்த மல்லையூர் சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையே கவிதை இயற்றும் திறமுடையவர்கள். நல்லாண்டவர் கும்மியைப் பாடிய ஆசிரியர் குழந்தைக் கவிராயர் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதை,

'கன்னல் கதலி மிகுமா வைநகர்க்
காவல ரானநல் லாண்டவர்மேல்
சென்னெல் மிகுமல்லை நற்குழந் தைக்கவிச்
சேயன் தமிழ்க்கும்மி பாடியதை' (பா. 68)

என்று வரும் பாடலால் உணரலாம். 'மல்லை' என்ற சிறப்புப் பெயரைச் சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையினர் சூட்டிக் கொள்வது வழக்கம். மேலும் சுவடியின் முகப்பில் 'மிதிலைப்பட்டி குழந்தைக் கவிஞர் இயற்றியது' என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையினரின் மூவருக்குக் குழந்தைக் கவிராயர் என்று பெயர் இருப்பதாக அறிய முடிகிறது. அதில் முதலில் வருபவர் சிற்றம்பலக் கவிராயரின் மகனான மங்கைப் பாகக் கவிராயரின் மகன். இவர் மான் விடு தூது

பாடியவர். அடுத்து இவரது பேரரான குழந்தைக் கவிராயர். இவர் திருப்புகழ் சந்தக் கவிபோன்று பாடிப் புகழ் பெற்றவர். இவருக்கு அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்றும் பாண்டிக் கவிராயர் என்றும் இரண்டு மக்கள். அவர்களில் மூத்தவருடைய மக்களாகக் குழந்தைக் கவிராயர், குமாரசாமிக் கவிராயர் ஆகிய இருவரும் விளங்கினர். இந்தக் குழந்தைக் கவிராயர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் 'பிற்பகுதியைச்' சேர்ந்தவர். இவர் தான் 'நல்லாண்டவர் கும்மியைப்' பாடியுள்ளார். இவருடைய தம்பியான குமாரசாமிக் கவிராயர் 'ஆவுடையார் கும்மியைப்' பாடியிருக்கிறார்.

கும்மி விளக்கும் பொருள்

நல்லாண்டவர் கும்மி பாடுவதற்காக ஆசிரியர் குழந்தைக் கவிராயர் கணபதி, ஈஸ்வரி, முத்துக் கருப்பர், மதுரை வீரன், சன்னாசித் தெய்வம், யக்ஷி (எச்சி அல்லது இயக்கி), காவல் தெய்வம், விமலர், நல்லையர், வீரபத்திரன், முன்னோடி, சவுந்தரவல்லி, மனோன்மணி, வேலவர், பிடாரி, பரிவாரதேவர் ஆகிய தெய்வங்களை வரிசையாக வேண்டுகிறார். பதினாலு பாடல்கள் காப்பாக அமைவது மிகுதியானாலும் இவற்றில் நல்லாண்டவரைப் பற்றிய சுவையான குறிப்புக்களைத் தந்து விடுகிறார்,

கும்மிப் பெண்களை அழைத்தல்

பஞ்சு போன்ற மென்மையான அடிகளையும், மஞ்சு போன்று கருமையான கூந்தலையும், மீன் போன்று துள்ளும் விழிகளையும் உடைய பெண்களைக் கும்மியடிப்பதற்கு அழைக்கிறார்கள். அதிருபவல்லிகளாக அவர்கள் விளங்குகிறார்கள். இன்பமும் சுறுசுறுப்பும் மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். கரும்பு, சங்கு முதலியவற்றில் கிடைக்கும் ஒளி மிக்க முத்துப் போன்றவர்களாகத் தோன்றுகிறார்கள். கிளி போன்றும் குயில் போன்றும் இருக்கும் கும்மிப் பெண்கள் இளமையும் அழகும் மிக்கவர்களாகத் தோன்று கிறார்கள்.

அவர்கள் ரம்பை, ஊர்வசி, இந்திராணி போன்ற தேவ மங்கையர் போன்று தோன்றுகிறார்கள். சந்திரமதி, தமயந்தி மண்டோதரி, சம்போக வல்லி, சரசவல்லி, இந்திரை, நீலாம்புசவேணி என்று பெயர்களையுடைய மென்னடை மகளிர் பலர் கும்மி யடித்துப் பாட வந்துள்ளனர். இவர்கள் புகழ் மிக்கவர்கள். மண்ணவர் போற்றும் திறமுடையவர்கள்.

கும்மியடிக்க ஒப்பனை செய்தல்

கும்மிப் பெண்கள் அனைவரும் நீராடுவதற்காக ஒன்று கூடுகிறார்கள். கும்பக் குடமெடுத்து வரிசையாகச் சென்று வைகை நதியில் புனலாடுகின்றனர். கொச்சி மஞ்சள் அரைத்துப் பூசிக் குளிக்கிறார்கள். தலைமுடியை இரு கூறாக வகிடெடுத்துச் சீவுகிறார்கள். ஈரத்துகில் களைந்து பட்டாடை உடுத்துகின்றார்கள். நெற்றியில் பொட்டு வைத்துக் கண்ணுக்கு மை தீட்டுகிறார்கள். வாடை, சவ்வாது, புனுகு ஆகியவற்றை மேனியில் பூசிக்கொள் கிறார்கள்.

மார்பில் கச்சு அணிந்து கொள்கிறார்கள். இரத்னக் கொத்து டைய பொன்னோலையைக் காதிலிடுகின்றனர். பத்து விரல்களிலும் கணையாழியும் காலில் பாடகம், தண்டை, கொலுசும் அணிந்து கொள்கிறார்கள். கையில் தங்கக் கடகமும், வளையும் பூண்டுள் ளார்கள். நெற்றியில் இரத்னக் கல்லுடைய சுட்டி ஒளிவீசித் தொங்குகிறது. கொண்டையில் முத்துப் பதித்த பொற்கொப்பி அணிந்து காணப்படுகிறார்கள். மார்பில் முத்தாரம் புரள்கிறது.

இவ்வாறு கும்மிப் பெண்கள் தங்களை மிகவும் அழகாக ஒப்பனை செய்து கொள்கிறார்கள். பின்னர் செப்புக் குடம் எடுத்து அதில் புனலை நிரப்பி எடுத்து வருகிறார்கள். நல்லாண் டவர் வாசலில் குடத்தை இறக்கி வைக்கிறார்கள். அதற்கு மேல் பெண்கள் அனைவரும் கூடி கும்மியடிக்கத் தொடங்குகின்றனர்.

கும்மியடித்துப் பாடல்

பலவித இசையமைப்புடைய பாடல்களை மிக இனிமையாகப் பாடி கும்மியடித்தனர். கெண்டை மீன் போன்ற விழிகள் புரண்டு ஆடுகின்றன. மார்புகள் திரண்டு ஆடுகின்றன. சிவந்த கைகளில் வளையல் ஓடியாடுகின்றன. முத்துமாலை வடங்கள் துவண்டு ஆடுகின்றன.

மூக்கில் மூக்குத்தியும், கழுத்திலுள்ள மாலையும், காதிலுள்ள சவடியும், காலிலுள்ள தண்டையும் ஒரேசமயம் ஆடிக் களிக்கின்றன. பெண்கள் ஒன்று கூடி நல்லாண்டாரைப் புகழ்ந்து பாடியும் அவரைப் பணிந்து வேண்டியும் பாடுகிறார்கள்.

மாவை நகரின் தலைவன்—குமார லெக்கய்யன்

மாவை நகருக்குத் தெய்வ சிகாமணியாகச் சேர்வையின் மகன் வந்து உதித்தார். அவர் பாவலரின் பாடல்களைப் படித்து

அவர்களுக்குப் பொருளைக் கொடுத்துத் தனக்குப் புகழைத் தேடிக் கொண்டவர். வீரத்துடன் மலைக்குச் சென்று பரிவாரத் துடன் வேட்டையாடுவார். தண்டிகை, யாளி, குதிரை ஆகிய வற்றில் சென்று மலையில் வேட்டையாடி வருபவர்.

பன்றி, முயல், யாளி, சிங்கம் ஆகியவற்றை ஆரவாரம் செய்து வளைத்துப் பிடித்துக் கொல்வர். கொடிய புலியைக் கதையாலே அடித்துச் சாகடிப்பார். பின் அதைத் துண்டாக வெட்டுவர். தன் வீரத்தை வேட்டையில் காட்டிய பெருமித உணர்வுடன் பட்டத்து யானையின் மீது ஏறி அரசன் மாவை நகருக்கு வருவான்.

தோற்றப் பொலிவுடையவன் மாவை நகருக்கு மன்னனான குமார லெக்கய்யன். அவன் கொடைத் தன்மை மிக்கவன். ஆதவன் போலும் வெண்கொற்ற குடையை உடையவன். பாடும் புலவருக்கு மிகுந்த பொருளைக் கொடுத்து ஆதரிக்கக் கூடியவன். நல்ல பண்புடையவன், மதியின் வருகை போன்ற முகப் பொலிவை உடையவன்' அவனது புகழ் எல்லாத் திசைகளிலும் பரந்திருந்தது மேலும் இம்மன்னன்,

'பொய்யொன் றுரையாத புண்ணியவான்—அவன்
போச னெனுங்கன கண்ணியவான்
மெய்யனென் றேசொலும் வாக்கியவான்—அம்
புவிதனில் அழகன்வெகு பாக்கியவான்' (பா. 48)

இவன் மிகச்சிறந்த பண்புடையவன். பாஸ்கரன் என்று சொல்லும் படியாக உலகில் பிறந்த மன்னன். கவிவாணர்கள் மகிழ மாநிலத்தில் தோன்றியவன்.

குமார லெக்கய்யன் தண்டிகையில் ஏறி உலா வருவான் இரு பக்கமும் வெண்சாமரை வீசுவர். சேனைகள்மண்டி யவனைச் சூழ்ந்து வரும். அவர் ஊர்கோலமாக வரும்போது காணும் மங்கையர் காமவுணர்வில் கலங்கித் தவிப்பர். இவ்வாறு பல்வேறு சிறப்புடைய குமார லெக்கய்யன் நல்லாண்டவரை வணங்கி நல்லாட்சி செய்து வந்தான்.

நல்லு செட்டியார்

நல்லு செட்டியாரும் தன் பந்து பரிவாரத்துடன் சிறப்பாக அங்கு வாழ்ந்து வருகிறார். அவர் நிரம்பப் பொருள் உடையவர். வீரராக விளங்கியவர். வில்லிலும் சொல்லிலும் வல்லவராக விளங்கினார். தஞ்சமென்று யார் வந்தாலும் அவருக்கு வேண்டிய உதவிகளை மனமாரச் செய்யும் பண்பாளர். கவிவாணருக்குப் பொருள் கொடுத்து ஆதரிக்கும் வள்ளல். பாடும் புலவருக்குப் பட்டாடையும் நாடும் உழவருக்கு நல்ல மயிலைக் காளையும் கொடுத்து ஆதரித்த புரவலர் அவருடைய பேரும் புகழும் எங்கும் பரவியிருந்தது. இவரும் நல்லாண்டவரைப் பற்றுடன் பணியும் அன்பராக விளங்கினார்.

நல்லாண்டவரை வணங்கிப் பணிதல்

அனைவரும் நல்லாண்டவரை முழுமுதற் கடவுளாக நம்பிப் பணிகின்றனர். கும்மியடிப்போர் மனம் மகிழ நிரம்பப் பொருள் பெறுகின்றனர். அனைவரும் நல்வாழ்வு பெற்றிடவே நல்லாண்டவரைப் பற்றுடன் பணிதல் வேண்டும். நாற்றிசையிலும் வாழ்வோர் நல்லாண்டவரை வேண்டிப் பணியத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு நல்லாண்டவரின் அருள் கிடைக்கத்தான் செய்கிறது. அனைவரும் நல்வாழ்வு வாழ நல்லாண்டவரை வேண்டி கும்மியைக் குழந்தைக் கவிராயர் முடிக்கின்றார்.

சிறப்புச் செய்திகள்

நல்லாண்டவரின் அருளாற்றலைப் பற்றிச் சில கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளன. குமார லெக்கனைப் பற்றியும் நல்லுச் செட்டியார் பற்றியும் சிலசில குறிப்புக்கள் கிடைத்துள்ளன. இவை விரிவான சிந்தனைக்கு உதவும் கருவூலங்களாக உள்ளன. மறைந்தும் தூர்ந்தும் போன பல உண்மைகளை அறிய இத்தகைய கும்மிகள் உறுதியாகப் பயன்படும்.

பரிசில் கொடுக்கும் வள்ளல்கள் யாராக இருந்தாலும் புலவர்கள் அவர்களைப் புகழ்ந்து பாடும் இயல்பு கொண்டவர்கள் என்பதை இக்கும்மி தெளிவுபடுத்துகிறது. நாட்டுக்குத் தலைவன் குமார லெக்கய்யன், அவருக்கு பொருள் வளமும் உண்டு அதிகாரச் சிறப்பும் உண்டு. ஆகையினால் அவரைப் புகழ்ந்து பாடுதல் இயல்புதான். ஆனால் நல்லுச் செட்டியார் ஆட்சித் தலைவருக்கு

அடங்கியவர். இருப்பினும் வளத்தாலும் கொடையாலும் சிறந்து விளங்கியமையால் இவரையும் குழந்தைக் கவிராயர் புகழ்ந்து பாடுகிறார்.

இந்தக் கும்மியின் காலத்தில் சைவ வைணவக் காழ்ப்பு இல்லை என்றுதான் கூறவேண்டும். மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரை தில்லை நடராசரை வணங்கும் சைவ சமயத்தினர். அந்தக் குலத்தின் வழிவந்த குழந்தைக் கவிராயர் வைணவக் கடவுளான நல்லாண்டவரைச் சிறப்பித்துக் கும்மி பாடுகிறார் காப்பாகப் பல சைவ சமயக் கடவுளரை வேண்டுகிறார். இவற்றை நோக்கும்போது இரு சமயவுணர்வும் ஒன்றிக் கலந்த கால கட்டமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டைக் கருதலாம். சிறந்த பள்ளுகளின் காலமான பதினெட்டாம் நூற்றாண்டில் இரு சமயத்துக்கும் இடையில் சிறிது வேறுபட்ட உணர்வு இருந்ததைக் காண முடிகிறது.

நல்லாண்டவர் கும்மி

1. பூமண்ட லாதிபர் போற்றிசெய் யும்பரி
 பூரண மாவைநல் லாண்டவர்மேல்
 மாமண்ட லக்கும்மிப் பாட்டுரைக் கமத
 வாரண மாமுகங் காப்பாமே.

2. பூரணன் மாவைநல் லாண்டவர் மேற்பரி
 பூரண மாய்க்கும்மி தான்பாட
 நாரணி யென்னவ ளர்சத்தக் கன்னித்தாய்
 நாயகி பொற்பாதம் காப்பாமே.

3. கொங்குவங் காளர் பணிமா வைநகர்
 கோதண்ட பாணிநல் லாண்டவர்மேல்
 பொங்கு தமிழ்க்கும்மிப் பாட்டுரைக்க முத்துக்
 கறுப்பர் பொற்பதங் காப்பாமே.

4. எட்டாந் தேசம் பணிமா வைநகர்
 ஆதிபரணர்நல் லாண்டவர் மேல்
 கட்டா கக்கும்மித் தமிழ்பாடக் காசி
 மாமரு தைவீரன் காப்பாமே.

---

1. பூமண்டலாதிபர்—நாடளும் மன்னர்
 மாவை—ஒரூர்
 மதவாரணம்—யானை(கணபதி)

2. சத்தகன்னி—ஏழுகன்னியர்
 நாரணி—பராசக்தி

3 கோதண்டபாணி—இராகவன்

5. மங்கமாச் சாலையில் மேவி வளரெங்கள்
மாதவ ரானநல் லாண்டவர்மேல்
பொங்கமாய்க் கும்மித் தமிழ்பாடசுத்த
சித்தசன் னாசிபொற் றாள்துணையே.

6. சங்குசக் கரங்கதா பாணிநல் லாண்ட
சாமிமேல் கும்மிப் பாட்டுரைக்க
எங்கும் புகழ்க்கும்மிப் பாட்டுரைக்க நல்ல
எச்சியெந் தாய்மலர்த் தாள்துணையே.

7. பத்தர்க்கு அன்புசேர் தயாபர னாகிய
பார்த்திபன் மாவைநல் லாண்டவர்மேல்
சித்திர மிகுகும்மிப் பாட்டுரைக்க ஊருக்
காவலன் செம்பொற் பதம் துணையே.

8. வர்த்தகன் சேர்மாவை யம்பதி மேவிய
வாசக ரானநல் லாண்டவர்மேல்
விர்த்தி பெருதமிழ் கும்மிபா டற்ககத்
தீச விமலர் பதந்துணையே.

9. குன்று குடையாய் நிறுத்திப் பசுவின்பின்
கோலித் துயிலும்நல் லாண்டவர்மேல்
நன்றுகும் மித்தமிழ்ப் பாட்டுரைக் கமாவை
நல்லைய னார்நிதங் காப்பாமே.

---

5. மங்கமாசாலை—இராணி மங்கம்மா அமைத்தசாலை
பொங்கம்—பொலிவு, மகிழ்ச்சி, ஒழுங்கு

6. எச்சி—யட்சி, இயக்கி

8. குன்று குடை—கோவர்த்தனகிரியைக் கண்ணன்
குடையாகப் பிடித்தல்

10. ஊமை குருடுசப் பாணிகள் தன்வினை
ஓட்டிடு மாவைநல் லாண்டவர்மேல்
பாமய மானகும் மிப்பாட் டுரைக்க—வீர
பத்திரன் முன்னோடி காப்பாமே.

11. கண்கண்ட தெய்வம் எனவரு மாவைக்
கருப்பண்ண ரானநல் லாண்டவர்மேல்
மண்கண்ட கும்மித் தமிழ்க்குச் செவந்தா
வல்லி மனோன்மணி காப்பாமே.

12; கண்டிக்குந் தரமான கடும்பே யைநிதம்
தெண்டனை செய்யுநல் லாண்டவர்மேல்
விண்டித மாய்க்கும்மிப் பாட்டுரைக் கவடி
வேலர்பொற் பாதங் காப்பாமே.

13. பூசனை சேர்மாவை நல்லையன் மேற்பரி
பூரண மாய்க்கும்மி தான்பாட
வாசனை யாகிய மாவைப் பிடாரி
மனோன்மணி பொற்பாதங் காப்பாமே.

14. வாச மிகுத்தநல் லாண்டவர் மேல்வெகு
நேசமாய்க் கும்மித் தமிழ்பாட
தேசமதிப்பரி வாரதே வாதிபர்
சேவடி யெந்நாளுங் காப்பாமே.

---

10. சப்பாணி—நடக்க இயலாதவன்
பாமயம்—பாக்கள் நிறைந்த

12. கண்டிக்குந் தரமான—தண்டிக்கும் தரமான்
விண்டிதழ்—அலர்தல், சிறப்பு, இளமைத்துடிப்பு

14. பரிவாரதேவாதிபர்—பரிவாரமாகவுள்ள காவல், தெய்வங்கள்

15. பஞ்சின் மெல்லடி மங்கையரே—தமிழ்
ரஞ்சித மாகிய நங்கையரே
மஞ்சி னிருண்ட குழலாரே கயல்
மிஞ்சுநேர் துள்ளும் விழியாரே.

16. காம லயன்பணி சுரதாணி ரதி
காமி யெனுமதி ரூபவல்லி
சோமக் கயகுண மான வல்லி
சொர்ணகாத் யாயனி மாவைவல்லி

17. சல்லாப வல்லி சரசவல்லி—நய
சன்னை மிகுத்திடு சரசவல்லி
உல்லாச வல்லிஉத் துங்கவல்லி நீங்கள்
ஒல்லாச மாகவே வாருங்கோடி.

18. கன்னல் தருமுத் தேருசி யானமுத்தே
கயிலாசமுத்தே ஒயி லான்முத்தே
பன்னல் முத்தே பாருக்குதவும் முத்தே
பணிலமுத்தே பணியின் முத்தே.

---

15. மஞ்சின்—மேகத்தின்
கயல்—மீன்

16. காமல்—வசந்தம்
சுரதாணி—அன்புமிக்க
சோமன்—அமுதம், சந்திரன்
கயகுணம்—மென்மையானபண்பு,பெருமையுடையபண்பு
சொர்ணம்—பொன்

17 சல்லாபம்—சரசப் பேச்சு
சரசம்—இனியபண்பு, இன்பப்பேச்சு, காமச் செயல்
சன்னை—சாடை. சரசம்
உத்துங்கம்—உயர்வு. மேன்மை

18 ஒல்லாசம்—உல்லாசம்
கன்னல்—கரும்பு
ஒயில்—அழகு
இச்சை—விருப்பம்

19. மோகன கோகில கோமள மேசெக
மோகன ராகவ சீகரமே
நாகரீ கவனு போகம தாகிய
ரம்பை ஊர்வசி யிந்திராணி

20. சந்திர மதிதம யந்தி வண்டோதரி
சம்போக வல்லி சரசவல்லி
யிந்திரை நீலாம் புசவேணி யன்ன
மென்னடை கொளுகன மயிலாகி

21. பெண்ணர சாகிய பூமியில் பன்னலம்
பேசிப் பேட்டிகாண் மாங்குயிலே
விண்ணர சாகிய பாங்கியரே இந்த
மேதினி யோர்புகழ் மங்கையரே

22. வாருங்கள் நங்கைய ரெல்லோரும்
வந்து நலந்தனில் நீராடச்
[சேருங்கள் மங்கைய ரெல்லோரும்
சித்திரப் பதுமையாய் ஏர்பாக.

23. கொந்தளர் கும்பக் குடமெடுத்து—வெகு
கோருவை யாகப் புனலெடுத்து
வந்தனர் மங்கையர் எல்லாரும் தான்கூடி
மாவைகை நதியில் புனல்ஆடி.

---

19. கோகிலம்—கிளி, குயில்
கோமளம்—இளமை, அழகு
சீகரம்—இலக்குமீகரம்

22. ஏர்பாக—அழகாக

23. கொந்தளர்—பூங்கொத்து நிரம்பிய
கும்பம்—கரகம்
கோருவை—வரிசை (வழக்குச் சொல்)
புனல்—தண்ணீர்

24. கொச்சி மஞ்சளரைத் தேகுளித்து மயிர்க்
 கூந்தலும் வாரி வகிடெடுத்து
மெச்சிய வீரத் துகிலவிழ்த்தே [துடி]யிடை
 மீதினில் மேல்பட்டுந் தானுடுத்தி

25. நெத்தியி லஞ்சனப் பொட்டுமிட் டுக்கயல்
 நேர்கடைக் கண்ணுச்கு மையுமிட்டு
பத்திய வாடை புனுகுசவ் வாதுகள்
 பாங்குடன் மெய்யினில் தான்பூசி

26. குத்து முலைக்குப்பொற் கச்சணிந் துரத்னக்
 கொத்தளப் பொன்னோலை காதிலிட்டு
பத்து விரல்கணை யாழி யிட்டே காலில்
 பாடகந் தண்டை கொலுசுமிட்டு

27. தங்கக் கடகமஞ் சரியுமிட்டு முனங்
 கட்டித் தங்கவளை தான்பூண்டு
துங்கப் பிறைநுதல் நெற்றிக்கு மேல் ரத்னச்
 சுட்டியுங் கட்டி ஒயிலாக

28. கொண்டையில் முத்துபொற் கொப்பியிட்டு மார்பில்
 கோர்த்துமுத் தாரங் குலுங்கவிட்டு
கெண்டை நிகர்விழி மின்னார்கள்—வெகு
 கெம்பீர மாக அலங்கரித்து

---

24. வகிடெடுத்தல்—பங்குசெய்தல், இரு பாகமாகப் பிரித்தல்

25. அஞ்சனம்—மை, கருஞ்சாந்து

26. பாடகம்—சிலம்பு

27. கடகம்—காப்பு
 சரி—கைவளை

28. தொப்பி—தலையணி
 கெம்பீரம்—சிறப்பு

29. பாரி யாது செப்புக் குடமெடுத் துப்புனல்
பாங்குடன் நன்றாய் வடித்தெடுத்து
ஆரியன் மாவைநல் லாண்டவர் வாசலில்
அன்ன கும்ப குடமிறக்கி

30. கூடியு மேர்மயில் போலாகத்—தமிழ்க்
கும்மியைப் பாடி யடிக்கலுற்றார்
பாடிய சங்கீத மெட்டு நயத்துடன்
பாருவை யால்விளை யாடலுற்றார்

31. கெண்டை விழிகள் புரண்டாடத்—தங்கக்
கிண்ண முலைகள் திரண்டாட
வண்டுகளின்செங்கை வளையாட முத்து
மாலை வடங்கள் துவண்டாட

32. மூக்கில் மூக்குத்தி யசைந்தாடப்—பரு
மோகன மாலை யிசைந்தாட
தாக்குஞ் சவடி யிரண்டாடக்—காலில்
தண்டை கலின்கலின் என்றாட

33. மண்டியிட் டுந்தி யெழுந்திருந்து பத்து
மண்டியிட் டாடி மனமகிழ்ந்து
தண்டியாய்ப் பெண்களுந் தாண்டிநல்ல
சாமிநல் லாண்டவரைப் பாடி

34. வேண்டியே கும்மி யடிக்கலுற்றார்—வெகு
விந்தைய தாகக் குரலோடி—மிகத்
தாண்டியே சந்தத் தமிழ்பாடி—மிகச்
சல்லாப மாக விளையாடி.

---

29. பாரியாது—காலங்கடத்தாமல்
ஆரியன்—சிறப்புடையவன், மேலோன்

35. பன்னய மேரணி மாவை ரதிகள்—நிதம்
நன்னய மாகக் கரந்தேற்றி
சொர்ன்ன நிறமான மங்கையர்—புகழ்
சொல்லியே கும்மி யடிக்கலுற்றார்

36. சித்து வனத்தினில் வீற்றிருந் தோர்மாவைத்
தெய்வசி காமணி யாவுதித்தோர்
பொத்துப் புவிதனி லேயுதித்தோர் சேர்வைப்
புத்திர னாகவே வந்துதித்தோர்.

37. நாவை யறுத்துப்பா வாடமாட் டோர்க்கு
நாத்துவாய் நீரால் வளரவைத்தோர்
பாவைப் படித்துப் பாவாணர்க் குச்சவு
பாக்கியம் தந்து புகழ்வளர்த்தோர்

38. மந்தி மிகுந்து குதிப்போமே வீர
மலைக்கே வேட்டை தானாட
பந்தி நிறைந்த பரிவா ரத்துடன்
பாருவை பார்க்கவே தான்நடந்து

39. தண்டிகை யாளிபரி மீதினி லேறிச்
சாரங்க பாணிநல் லாண்டவர்தான்
மண்டிய சேனா தளத்துட னேவீர
மாமலையில் வேட்டை தான்புரிய

---

35. பன்னயம்—இலை,ஓலை முதலியவற்றால் பின்னும் அழகு

37. நாத்துவாய் நீர்—உமிழ்நீர்

38. மந்தி—பெண் குரங்கு
பந்தி—ஒழுங்கு

39. தண்டிகை—சிவிகை, பல்லக்கு
சாரங்கபாணி—திருமால்
மண்டிய—நெருக்கிய, கூடிய

40. எண்டிசை யோர்பணி மாவைநல் லாண்டவர்
இங்கித மாய்வேட்டை செய்யலுற்றார்
பன்றி முயல்யாளி சிங்கமதை ஆர
பாரத்துடன் குத்தித் தான்வளைத்தே

41. துட்ட புலியைக் கதையா லேகொன்று
துண்டாக வெட்டி மனமகிழ்ந்து
பட்டத்து வெள்ளானை மீதேறி—மாவைப்
பார்த்திவன் வந்து மதர்த்துநிற்கும்

42. சட்டத்தைக் கண்டு வெகுமா தர்கூடிச்
சல்லாப மாகக் கொலுவிருந்த
கட்டழ கான குமார லெக்கய்யன்
கானந்தனத்துடன் காட்டிலுற்றார்

43. வட்டமி டும்பரி மீதேறி—மாவை
பாதபரன் நல்லாண்டவனை
திட்ட முடனே பணிய தாக்குவார்
சிங்காரம் பாரடி வல்லியரே.

44. சுந்தரஞ் சேர்குமாரலக் கய்யன்புகழ்
சொல்லுறே னிங்கடி வல்லியரே
ஐந்தரு வான கொடையாள னம்புவி
ஆதவர்போலும் மெய்க் குடையர்

45. சந்தான வாழ்வு பெருயோகன்
....
பந்தான மான புகழரங்கன்—பர
காரிய மிகுந்தநற் சீராளன்

---

40. இங்கிதம்—இன்பம், அடையாளம்

41. கதை—கதாயுதம்
பார்த்திவன்—அரசன்

42. குமாரலக்கையன்—குமாரசாமி

46. பாடும்புலவர் கவியைக் கற்றத்—தன
பாக்கிய வான்மிகு யோக்கியவான்
[ஏடு]மஞ்சள்சே கிற்பிறப்பனன்கு—மார
லெக்கையன் ராச நயகுணவான்

47. விந்திச்சந் திரோதயம்போல் முகத்தான் புவி
எத்திசை யும்புகழ் நிறைத்தான்
....
....

48. பொய்யொன் றுரையாத புண்ணியவான்—அவன்
போச னெனுங்கன கண்ணியவான்
மெய்யனென் றேசொலும் வாக்கியவான்—அம்
புவிதனில் அழகன்வெகு பாக்கியவான்

49. ரஞ்சிதஞ் சேரும் ரதிமதனன்—அப
ரஞ்சித மானும் மிருதுவசனன்
பஞ்சினேர் மெல்லடி யார்மோ கன்மிழ்ப்
பாண்டிய னான கனயோகன்

50. [பாற்]கரன் என்ன அவதரித் தானிந்தப்
பாரில் கோடிபுகழ் படைத்தோன்
மார்க்கண்ட ரென்ன வளர்ச்சியுற் றோன்கவி
வாணர் மகிழ மிகவுதித்தோன்.

51. ஆதிலக் கன்னன் பரிபாலன்—மனு
யாவர்க்கு மிக்கநி தானபரன்
....
....

52. தண்டிகை யேறித் தளநெருக்கிக் கொடிச்
சாமரை வீசத் தளத்துடனே
மண்டிய சேனைப தாதியுடன் துரை
மக்கள் மருமக்கள் தான்சூழ

53. ராசர் சேயரும் பின்னடக்கச் சேர்ந்து
ராணுவத் தார்களு முன்னடக்க
ரோசன் குமார லக்கய்ய மகள் [சுபேச]
………… நல்லாண்டவர்தான்

54. வேண்டிப் பணிந்தன்பு கண்டிடவே—வார
வேடிக்கை கண்டு வெகுமாதர்
காதல் பொருந்திக் கலைநெகிழ்ந்து—இரு
கண்ணும் மனமும் வெவ்வேறாகி

55. சாடியுன் மேல்மயல் மீறுதென்றார் யாரே
சாமானை வெல்லச் சமத்தனென்றாள்
காமனெனவந் தணையு மென்றார்—என்னைக்
கட்டி ஒருமுத்தந் தாருமென்றாள்

56. இப்படிப் பெண்கள் மயங்கிடவே—மதன்
என்னப் புகழ்ந்து துலங்கிடவே
செப்பிடு கன்னியர் மால்மோகன்குமார
லெக்கைய்ய பூப செகராசன்

57. அண்டர் பணியுநல் லாண்டவர் தாளிணை
அன்புடன் போற்றி அடிபணிந்து—மார்க்
கண்டனைப் போல்க் கம்பன்றாசரிந்தக்
காசினி யில்வாழ்ந் திருந்தானே.

58. பக்கத்தி லுள்ள பரிசனங் கள்கோடி
சாகர மாகவே யங்குகூடி
பொக்கிச முப்பூசை புரிவதெல் லாங்கண்டு
பூரித் திருக்குநல் லாண்டவரை

---

54. கலை—ஆடை
நெகிழ்ந்து—அவிழ்ந்துவிடுதல்
55. சமத்தன்—திறமைசாலி
56. துலங்கிடவே—விளங்கிடவே
57. அண்டர்—தேவர், வானவர்
காசினி—உலகம்

59. நற்குண செய்து புகழோங்க ரதிமாரன்
நல்லுச் செட்டி யாரெழுந்து
திற்பனை யாகத்தன் மக்க ளுடன்வார
சேகரம் பாரடி தோழியரே.

60. நல்லுச் செட்டியார் புகழைக் கொஞ்சம்
வாழ்த்துறேன் கேளடி தோழியரே
........................தன்புருடன்
தேகிய இன்ப சுபகுமுணன்

61. .... நெற்குடையாளன்—இந்தக்
காசினி மெச்சுஞ் சிரியாளன்
........ணாகிவ் வில்விசையன் யார்க்கும்
........மெய்ப்புக ழாதி சொல்விசையன்

62. வையக மீதினில் யாவருக்கும் நிதம்
வெய்ய வானெனப் பெயர் விளங்க
....
....

63. தஞ்சமென் றேவந்திருந்தோ ரைரெட்சித்
தாதரித் தேபுக ழெய்திடுவான்
கஞ்ச மலர்த்திரு மாமுகத் தாரணங்(கு)
கவி வாணர்க் கேநிதி செய்கிறதில்

---

59. திற்பனை—உண்மை, கலைநுட்பம், திண்மை, உறுதி
சேகரம்—கூட்டம்

60. குமுணன்—குமணன்

61. காசினி—உலகம்
வில்விசையன்—அருச்சுனன்
சொல்விசையன்—சொல்வல்லான், வெற்றியடைவோன்

62. வையகம்—உலகம்
வெய்யவன்—கடுமையானவன்

63. கஞ்சமலர்த்திரு—தாமரைமலரில் அமர்ந்திருக்கும் திருமகள்

64. பாடும் புலவர் தமிழ்க்குகந்து—கலை
பட்டுச் சுடர்சோம னும்கொடுத்து
நாளும் புகழால் ஊர்க்கட்டி உழுதிட—நல்ல
மயிலைக் காளை யுங் கொடுத்து

65. பேரு பிரபல மாயிருக் கும்பிர
பூடிகன் வருவதை பாருங்கோடி
ஏருங் கனதைப் பெருமா வைநகர்க்
கிங்கித மானநல் லாண்டவர் தான்

66. சீருடன் வந்து பணிந்தேத்தி—வேண
செல்லப்ப நெய்யு மிகப்பெய்து
பாடும் பூமியும் புத்திரருஞ்சவு
பாக்கிய மெல்லம் மிகவாங்கி

67. மந்திர மானதென் மாவை நகர்த்துறை
மாதவரானநல் லாண்டவர் தாள்
தந்திர மாகப் பணிந்தானே—யிந்தத்
தாரணி யில்வாழ்ந்திருந்தானே

68. கன்னல் கதலி மிகுமா வைநகர்க்
காவல ரானநல் லாண்டவர்மேல்
சென்னெல் மிகுமல்லை நற்குழந் தைக்கவிச்
சேயன் தமிழ்க்கும்மி பாடியதை

69. பாடி யடித்து விளையாடி—நாமள்
....
நாடி வரிசை மிகவாங்கி—நாமள்
நாலைந்து பெண்களு மாய்வருவோம்

---

62. சோமன்—பன்னிரண்டு முழமுள்ள ஆடை
65. ஏரும் கனமும்—அழகும் புகழும்
67. தாரணி—உலகம்
68. கன்னல்—கரும்பு

70. வம்பிட்ட மங்கைய ரெல்லோருந் மனத்
தெம்பிட்டு மாவைநல் லாண்டவரை
கும்பிட்டுப் பணிந்துபுகழ்ந்து மாவைக்
கோதண்ட பாணிநல் லாண்டவரை

71. நாடி'ய கும்மி யடிப்ப தற்கு—மாவை
நல்லய்யன் மெத்த மனமகிழ்ந்து
கோடிதிரவிய முங்கொடுத்து—வளர்
கோதண்ட முங்கையில் தான்பிடித்து

72. நீட்டிய சானகி மோகனராய்—கொலு
நீத மாகவே தான்வழங்க
சேடியள் சூழ்ந்து நல்லாண்டவர் பொறப்பதஞ்
செந்....ச...யதுமாகத் தானேபணிந்து

73. வாழ்த்தியே கும்மி யடித்திடவே—யிந்தச்
நான்கு திசையோர்கள் துதித்திடவே
வாழ்த்திய நல்லாண் டவர்பதத்தை—நிதம்
போற்றிய மால்குழந்தைக் கவிஞன்

74. நந்தமிழ் கும்மித் தமிழ்வாழி யிந்த
நானிலத்தோர்கள் நிதம் வாழி
பாடும் பிரபந்தத் தமிழ்க்கருள் கோதண்ட
பாணிநல் லாண்டவர் தான்வழி

---

70. வம்பிட்ட—மார்புக்கச்சணிந்த
தெம்பு—எழுச்சி
கோதண்டபாணி—திருமால், கோதண்டமாகிய வில்லை
ஆயுதமாகக் கொண்ட இராமன்.

மருத பாண்டியன் கும்மி

ஊற்றுமலை ஜமீன்

திருநெல்வேலி மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் ஊற்று மலை ஜமீன் பகுதி உள்ளது. இதன் தலைமை இடமாக வீரகேரளம் புதூர் அமைந்துள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கேரளன் பாண்டிய மன்னனை வென்று ஒரு புது ஊரை ஏற்படுத்தினான். இதனை வீர கேரளன் புதூர் என்று இன்றும் அழைத்து வருகின்றனர். இங்குதான் ஊற்றுமலை மன்னர் பரம்பரை அரண்மனை கட்டி வாழ்கின்றனர். இது ஊற்றுமலையிலிருந்து ஏழு கல் தொலைவில் வடகிழக்காக உள்ளது.

வீரகேரளம்புதூர் தெப்பத் திருநாள் மிகச் சிறப்பாக மதிக்கப் பெறுவதாகும். இவ்வூரில் நடைபெறும் திருவிழாவில் பல்லக்குச் சுற்றல் என்ற நிகழ்ச்சி தனிச் சிறப்பு மிக்கதாகும். இந்த ஊரில் வாழ்ந்து ஊற்றுமலைக்கு அரசனாக இருந்த இருதயாலய மருதப்ப தேவரைச் சிறப்பித்துப் பாடுவது மருதப் பாண்டியன் கும்மி.

இந்தச் சிற்றரசுப் பகுதியைப் புகழ்ந்து பல நூல்கள் பாடப் பெற்றுள்ளன. ஊற்றுமலைப் பிரபந்தத் திரட்டு அவற்றுள் ஒன்று. மேலும் மருதப்பன் திருவருட்பா மாலை, மதனவித்தார மாலை என்று இரு நூல்கள் சுவடியுருவில் திருவனந்தபுரம், கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ளன. (சுவடி எண்கள் 6429A, 6429B) இவை ஊற்றுமலை ஜமீன்தாரான மருதப்பப் பாண்டியரைப் பற்றியதாகக் கருதப்படுகின்றன.

மருதப்பன் திருவருட்பா மாலை என்ற நூல் சங்கரன் கோயில் சங்கர நாராயணப் பெருமாளைப் போற்றி வணங்கித் திருப்பணிகள் செய்த மருதப்பன் என்ற அரசன் மீது கன்றாப்பூர்க் கவிராயர் பாடிய கலிவெண்பா மாலை. இதில் 144 கண்ணிகள் உள்ளன. இந்த மருதப்பன் ஊற்றுமலை ஜமீன்தாராக இருக்கலாம். (சுவடிக் குறிப்பு)

ஊற்றுமலை மன்னர்கள் நவநீத கிருஷ்ண சுவாமியை வணங்குபவர்கள். மருதப்பன் திருவருட்பா மாலையின் முதற்பாடல் குறிப்பிடத் தக்கதாகும்.

'பொன்னும் புவியும் பொருந்துமரு தப்பனுக்கு
மன்னும் திருவருட்பா மாலைசொல்ல—மின்னுலவு
சங்குசக்க ரத்தான் தனிமருகன் தந்திமுகத்
தங்குசக்க ரத்தான் தாள் காப்பு'

என்ற காப்புப்பாடலில் 'சங்கு சக்கரத்தானுக்குத்' தரப்படும் சிறப்பைக் கருதலாம். அதனை அடுத்து 'சுவாமி நவநீதகிருஷ்ண சுவாமி கிருபையுண்டாகச் சண்முக நாதன் துணை, என்ற சுவடித் தொடரும் சிந்தனைக்கு உரியதாகும்.

இருதயாலய மருதப்பதேவர் நவநீதகிருஷ்ணசாமி பேரில் மிகுந்த பற்றுடையவர் என்பதை அவருடைய அவையிலிருந்த புலவர்கள் அனைவரும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். சுப்பையா என்ற புலவர்,

'எச்சகமும் புகழ்படைத்த தென்னூற்று
மலைமருதப் பேந்திரன் போற்றும்
நச்சரவி னடிப்பவர்க்கு நைவேதித்
திட்டதிவ்ய லாடு லட்டு'

என்று பாடியுள்ள பாடல் இக்கருத்தை விளக்குவதாகும். இதனை டாக்டர் உ. வே. சா. தான் எழுதிய 'நான் கண்டதும் கேட்டதும்' என்ற நூலில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். (பக். 27)

மதனவித்தாரமாலை என்னும் நூல் மருதப்பன் மீது கடிகை முத்துப் புலவர் பாடியது. இதில் மருதப்ப சீவலவன் முன்னோன் திருவேங்கடநாதன் ஆவலுறு மைந்தன் எனக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டும் டாக்டர் உ. வே. சா. இது மேலும் ஆராயத் தக்கது என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூல் குறிப்பிடும் 'மருதப்பன்' ஊற்றுமலை ஜமீன்தாராக இருக்கலாம். சுவடியிலுள்ள இறுதிப் பாடல் பல உண்மைகளைப் பொதித்துள்ளதாகக் காணப்படுகிறது.

'வாழி திருவேங் கடநாதன் மைந்தனென்றும்
வாழி கிளுவை மருதப்பன்—வாழியவே

என்னாளுந் தன்கிளைசூ ழின்பமெய்தி ஊற்றுமலைத்
தென்னாடும் வாழி செழித்து'

நவநீதகிருஷ்ண சுவாமியைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் பரம்பரையாக இருப்பதினால் மருதப்பனைத் 'திருவேங்கட நாதன் மைந்தன் என்று கூறியிருக்கலாம். இவர் தென்னாட்டைச் சேர்ந்த ஊற்றுமலைக்குத் தலைவர் என்பது உறுதி.

கும்மியின் காலம்

மருதப்பாண்டியன் கும்மிப் பாடலின் ஆசிரியர் யாரென்பது இன்னும் சரியாக அறிய முடியவில்லை இந்த நூல் மிகவும் அண்மைக் காலத்தைச் சேர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். 'விருதுப்பட்டி' என்ற ஊர் 'விருது நகர்' என்று அழைக்கப் பட்டதற்குப் பின்னரே இது பாடப்பட்டிருக்க வேண்டும். இதில் 'விருதுநகர்' என்ற சொல்லாட்சியே பயன்படுத்தப் பெற்றுள்ளது. (கண்ணி 48) மேலும் இருதயாலய மருதப்பனை டாக்டர் உ.வே.சா. சந்தித்திருக்கிறார். ஆங்கில ஆட்சியைக் குறைவாகக் கருதாது சிறப்பித்துக் கூறுவதினால் இக்கும்மிப்பாடல் இந்திய விடுதலைப் போர் வேகம் பெறுவதற்கு முன்பே எழுதப் பெற்றிருக்க வேண்டும். பெரும்பாலும் 1890 முதல் 1910 வரையுள்ள காலத்தில் இக்கும்மிப் பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வளவு அண்மைக் காலத்தில் தோன்றிய நூலாக இருந்த போதிலும் இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதை நினைக்கும் போது மிகவும் வருத்தமாகவே உள்ளது அரியதையும் அறிவுரைகளையும் காப்பதில் இன்னும் சரியான அளவு திறமை இல்லையோ என்றே நினைக்க வேண்டியுள்ளது. மருதப் பாண்டியன் கும்மி முழுமையாகக் கிடைத்தால் திருநெல்வேலிப் பகுதியைப் பற்றிய வரலாறு, சமூகநிலை, சமயவுணர்வு ஆகிய வற்றை இன்னும் சற்றுத் தெளிவாக அறியும் வாய்ப்பு கிடைக்கலாம்.

கும்மியில் கூறப்பெற்றுள்ளவை

பெண்கள்

முழுமையாகக் கிடைக்கப் பெறாத மருதப் பாண்டியன் கும்மிப் பாடலின் தொடக்கம் கும்மிப் பெண்களின் உரையாடலாக அமைகிறது. அதற்கு முன்னர் காப்பு முதலிய பகுதிகள் இருந்திருக்க வேண்டும். பெண்கள் அன்ன பூரணி, நாரணி நாச்சியார் ஆகிய தேவிகளைப் பணிந்து சிறப்பிக்கின்றனர்.

பின்னர் தேவி உலகாளுக்கும் செஞ்சடையானுக்கும் தெப்பத் திருநாள் நடத்துவதற்காகக் குளம் வெட்டிக் கொடுத்த வள்ளலான சரவண முத்து வேள் மன்னரின் கட்டளைக்கு இணங்க தாங்கள் வந்ததாகக் கூறுகின்றனர். அவர்கள் அணிகலன்களை அணிந்து தங்களைச் சிறப்பாக ஒப்பனை செய்து கொண்டு ஆடுவதற்கு ஆயத்தமாக உள்ளனர். சரவண முத்துவேள் மன்னரின் சிறப்புகள் பாடப்படுகின்றன.

கும்மிப் பெண்களின் ஒப்பனைச் சிறப்பு பின்னர் விளக்கப் படுகிறது மூக்கில் புல்லாக்கு, நத்து. மூக்குத்தி ஆகிய அணிகலன்கள் உள்ளன. பச்சை வண்ண இரத்தினமான புட்பராகக் கல்லைப் பதித்து ஒளி உமிழத் தொங்க விட்டுள்ளனர். காமியரின் கண்கள் மொய்க்கும் தரமாக அவை உள்ளன. மார்புக் கச்சணிந்து நல்ல வண்ண ஆடை உடுத்தியுள்ளனர். கூந்தலை அழகாகச் சீவி முடித்து அதில் செண்பகம், முல்லை ஆகிய மலர்களைச் சூடியுள்ளனர். கண்களுக்கு மைதீட்டியும் கைகளுக்கு வளை சூட்டியும் ஒப்பனை செய்துள்ளனர். குங்குமப் பொட்டுகள் வைத்துள்ளனர். பச்சை மரகதம், மாமணி இரத்தினப் பதக்கம் ஆகியவற்றை அணிந்துள்ளனர். விண்ணுலகிலிருந்து மண்ணுல கிற்கு வந்த அரம்பையர் போன்று கூடிக் குழுமியுள்ளனர்.

மன்மதனைச் வெல்லும் அழகுடைய ஆடவரை மயக்கமுறச் செய்யும் கவர்ச்சியுடன் கும்மிப் பெண்கள் சரவண முத்து வேள் மன்னனின் புகழ்பாட வந்துள்ளனர். மார்பு குலுங்க அதன்மேல் தொங்கும் முத்துவடம் அசைய, கைவளை கிலுங்க மாதர்கள் இணைந்து ஆடுகிறார்கள். அனைவரும் வட்டமாக நின்று ஆடுவதைக் காண சரவண முத்து மகிபன் மிகவும் மகிழ்ச்சியடை கிறார். அவருடைய புகழைப் பாடும்போது அதற்கிசையப் பெண்கள் ஆடுகின்றனர்.

சரவண முத்தைய்யன்

சரவண முத்துவேள் பின்னர் எந்த எந்த இடங்களுக்குச் சென்றாரோ அங்கெல்லாம் வாவிகள் (குளங்கள்) வெட்டியுள்ளார். தென்காசியில் அவர் மிகச் சிறப்பாக வாழ்ந்திருக்கிறார். அங்கே ஓர் அழகான குளம் அமைத்துள்ளனர். பலவிதமான தான தருமங்கள் செய்திருக்கிறார்.

சரவண முத்துவேள் மன்னருடைய வம்ச வரலாற்றைக் கும்மிப் பாடல் கூறுகிறது. காராளர் குல வம்சத்தில் கலிங்கத் தாய கோத்திரத்தைச் சேர்ந்த முத்துக் குமரேந்திரன் பாராள்கின்றார்.

அவருக்கு மூன்று மைந்தர்கள் உள்ளனர். அவர்களில் மூத்தவர் நெல்லையப்பேந்திரன் என்பார். இவருடைய இளைய மகனாகத் தோன்றியவர் சரவண முத்தய்ய மன்னர். கந்தனைப் பணிந்து வாழும் சரவண முத்தய்யனின் கனிஷ்டனாகச் (இளைய மகன்) சுப்பிரமணியன் என்பார் பிறக்கிறார். இவர்கள் நெல்லையில் மிக அழகான வீடு கட்டி வாழ்கிறார்கள்.

நெல்லை அரண்மனை

நெல்லை நகரத்திலுள்ள சரவண முத்தய்ய மன்னரின் வீட்டின் சிறப்பு விளக்கப் படுகிறது. அகில் தடியினால் தூண்கள் செய்யப் பெற்றுள்ளன. மேலுள்ள மெத்தை நல்வாசலையுடையது. அதனை அழகுடைய கண்ணாடி மேடை என்று கும்மிப் பாடல் கூறுகிறது. அந்த மேடையின் நான்கு புறமும் கண்ணாடிகள் பதிக்கப் பெற்றுள்ளன. அந்த மேடையிலிருந்து சரவண முத்தய்யன் படிப்பது உண்டு. அங்கு சூரிய ஒளியும் சந்திர ஒளியும் கீழ்வாயில் வழி புகுந்து அந்தப் புரமாவதைக் காணலாம் என்று கும்மிப் பாடலாசிரியர் வியந்து கூறுகிறார்.

வாசுதேவ நல்லூருக்குத் தலைவனான சுப்பிரமணியன் தங்கியுள்ள மேடைக்குள் மேகங்கள் வந்திறங்கும் என்று சொல்லப் பட்டுள்ளது. மேகம் போன்று வாரி வழங்கும் இடம் எனக் கருதுமாறு அவ்வாறு எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கலாம்.

நெல்லையிலுள்ள பெரிய வீட்டின் வடபுறம் நெல்லையப் பேந்திரனின் மகனான சரவண முத்துக் குமார சுவாமி வாழ்ந்து வருகிறார். தரையிலிருந்து மேல்மேடை வரையிலும் படி கட்டி யுள்ளனர். அதன் உயரத்தையும் அழகையும் பார்த்தால் அது வானவர் பூவுலகுக்கு வருவதற்கும் இவ்வுலகினர் மேலுலகம் செல்வதற்கும் தகுதியானது என்று வியந்து கூறும் அளவுக்கு உயரமாக அமைந்துள்ளது.

பைந்தமிழை நன்கு ஆராயும் நெல்லையப்பேந்திரன் தான் முன்பு வாங்கிய புத்தகங்களைப் பேழைகளில் மிகவும் அழகாக அடுக்கி வைத்துள்ளார். அவர் செந்தமிழ்க் கும்ப முனிவருக்கு இணையானவர் என்பது கும்மியாசிரியரின் கருத்து. நெல்லையப பேந்திரன் சந்தி விநாயகன் பேரில் ஒரு கும்மிப் பாடல் பாடியுள்ளார்.

ஓவியம் வரைந்த கண்ணாடிகள் பலவற்றைச் சுவருக்குள் அழகாகப் பதித்து வைத்துள்ளனர். அதில் ஒரு படத்தை

ஆசிரியர் விளக்குகிறார். அழகான பெண்கள் மத்தியில் ஒருவன் சித்தன் போன்று ஒன்றும் பேசாமல் நிற்கிறான். பெண்களுடைய அழகுக்கு மயங்காத ஆண்களைச் சிறப்பிக்கும் நோக்கத்துடன் இந்தப் பாடலைக் குறிப்புடன் ஆசிரியர் பாடியுள்ளாரா என்பதைச் சிந்தித்து உணரலாம்.

உயரமும் பருமையுமுடைய பல தூண்கள் சொர்ணஉறை (தங்கப் பூச்சு) இட்டு நிறுத்தப் பட்டுள்ளன. சிங்கங்கள் தாங்கியது போன்று சப்பர மஞ்சங்கள் உள்ளன. அதில் பொம்மைகள் சாமரம் வீசுவது போன்ற சூத்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. முகட்டிலிருந்து தொங்கும் பொன் சங்கிலிகளால் ஊஞ்சல் பலகை பிணிக்கப் பட்டுள்ளது. அந்த ஊஞ்சலை அங்கும் இங்கும் ஆட்டி யசைப்பதற்கு இயந்திரப் பொறிகள் உள்ளன. அந்தப் பொறி யானது ஒரு பாவையின் கைக்குள் இருப்பது போன்ற அமைப்பு காணப்படுகின்றது.

பெண்கள் பஞ்சவண்ணக் கிளிகளை வளர்த்து அவற்றுடன் கொஞ்சி விளையாடுவதற்குத் தகுந்த மேடையும் உள்ளது. பொன்னால் செய்த பாவைகளின் கையில் அழகான சூட்சக்கயிறு கொடுத்து அவற்றை முடுக்கி விட்டு வேடிக்கை காணும் இடமும் அமைக்கப்பட்டுள்ளது. அழகான நிலைக் கண்ணாடி ஒன்று அங்கு வைத்துள்ளது. அதில் பார்த்தால் நகரின் சீர்மிகுந்த அமைப்பைக் காண முடியும். ஓர் ஐந்து வண்ணக் கண்ணாடிக்குள் சரவண முத்தய்யனின் உருவம் மிகவும் அழகுடன் வரையப் பட்டிருப்பதைக் காணலாம்.

ஐரோப்பியரின் அரிய அமைப்புகளையும் அந்த மேடையில் பார்க்கலாம். தெற்குப் பக்கம் சென்றால் அங்குப் பாவைகள் கைகாட்டி அழைக்கும் கோலத்தை காண முடியும். மேலுலகி லிருந்து வந்த பெண்களைப் போல் அந்த உயரமான மேடையில் நடந்து செல்லும் போது பூவுல மன்னனாகிய சரவண முத்தய்ய னின் மேடை வீட்டை நன்கு காணலாம்.

சரவண முத்தய்யனின் அறச்செயல்கள்

சரவண முத்தய்யன் எவரையும் அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வேண்டியவற்றை அறவுணர்வுடன் செய்யும் தன்மை யுடையவர். அவர் நிலவுலகைக் காக்கத் தேவேந்திரன் போன்று பிறந்திருப்பதாகக் கும்மிப்பாடல் கூறுகிறது. அவருடைய தர்மம் தழைத்தோங்க அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

பணமாபுரியில் ஒரு தெப்பக்குளம் வெட்டியுள்ளார். கங்கையைத் தலையில் தாங்கியுள்ள சொக்கநாதரின் கோயிலுக்கு முன்புறமுள்ள வாவியைத் தூர்வை அகற்றி ஆழப்படுத்த இருக்கிறார். முன்னாள் விருது நகரில் சப் மேஜிஸ்டிரேட்டாக இருந்த போது அங்கும் ஒரு குளம் வெட்டியிருக்கிறார். செட்டி நீராவியைக் கற்களைக் கொண்டு சுற்றிக் கட்டி சீர்படுத்திய சிறப்பு இவருடையது.

இன்னும் சில வாவிகளை அமைக்க வேண்டும் என்று சரவண முத்தய்யன் விரும்பியபோது அவர் தென்காசிக்கு தாசில்திபதியாக ஆக்கப்பட்டார். அந்த ஊரில் தன் நீதிக் கடமை ஒரு சிறிதும் தவறாது அரசாங்கத்தை நடத்திச் சென்றார். பல சாலைகள் அமைத்தார்.

மலையின் மீது செல்வதற்கு உகந்த பாதையமைத்து இரு புறமும் கைகள் நிறுத்தி பக்கத்தில் பாதுகாப்பு கம்பிகளையும் நிறுத்தியுள்ளார். அத்தியூத்தெல்கையில் தங்கிடம் (கடிஸ்தலம்—Halting Spot) இருப்பதினால் அதனை நன்கு அமைத்து அங்குச் சத்திரங்கட்டியதுடன் சுற்றி நல்ல சோலையும் அமைத்துள்ளார். தென்காசியை நன்கு ஆண்ட அதிவீர ராம பாண்டியனே திரும்பவும் உலகத்தில் பிறந்தது போல் சரவண முத்தய்யன் தாசில்தாராக மக்களுக்கு உதவ உலகில் பிறந்துள்ளார். தண்ணீர் அருந்துவோர் மகிழ்ந்து பலவகையான தானங்கள் செய்து இறைவனை வணங்குகிறார்கள். அவர்களுக்காக வெட்டின குளத்தில் தெப்பத் திருநாளைச் சிறப்பாக நடத்த எண்ணம் கொண்டுள்ளார். இத்தகைய நன்மைகளை நாடிச் செய்த சரவண முத்தய்யனைச் நன்கு அறிந்தவர் இருதயாலய மருதப்பன் என்னும் ஊற்றுமலை அரசராவார்.

இருதயாலய மருதப்ப தேவர்

சிவ சமயமே சிறந்து விளங்கும் தென்காசிப் பகுதியைச் சேர்ந்த ஊற்று மலைக்கு மன்னராக இருதாலய மருதப்பன் விளங்கினார். அவர் நவநீத கிருட்டின சுவாமியைத் தன் குல தெய்வமாக ஏற்று வணங்கி வருகிறார். அவர்—மழை மேகம் போன்று வாரி வாரி வழங்கும் வள்ளலாக விளங்கினார் யானைகளைக் காவலாகவுடைய கோட்டை கொத்தளங்களை உடையவர். பல்விடத்து மன்னர் வந்து செல்லும் வாயிலைத் தனதாகக் கொண்டவர். செல்வச் சிறப்பு மிக்கவர்.

ஐஞ்சிவப்புடைய குதிரையில் வருபவர் தானே ஐஞ்சிறப்பும் (பஞ்ச இலக்ஷணம்) உடையவர். மாதர்கள் மயங்கும் உடலமைப்புக் கொண்டவர். செந்நெல் வயலும் அகிழய சோலையும் நிறைந்த தென் னாட்டில் எல்லா உயிர்க்கும் காவலனாய் இருதயாலயர் வந்து தோன்றியுள்ளார்.

ஊற்றுமலைச்சிற்றரசின் (ஜமீன்) பரப்பை எட்டுத் திசைகளிலும் அளந்து திட்டப் படுத்திக் கொண்டு இருதயாலய மருதப்பர் அரசாளத் தொடங்கினார். நெற்றிப் பட்டத்தை உடைய யானை மீது அமர்ந்து பாராள வந்தவராக இருதயாலய மருதப்பரைக் கும்மிப் பாடல் பாராட்டுகிறது பத்துப் பதக்கங்கள் தொங்கும் முத்து வடத்தை மார்பில் அணிந்திருந்தார். எல்லாத் திசைகளையும் காக்கும் திறமுடையவர். வெற்றிக் குடை நாட்டிய அரியாசனத்தில் அமர்ந்து அவனியை ஆண்டவர்.

நல்ல பண்புடையவர். அரசர்கள் விரும்பும் தன்மையுடையவர். மன்னர்கள் கூட்டத்தில் சிங்கவேறு போன்று தோன்றும் வள்ளலாக மருதப்பர் விளங்கினார். தனக்கு அஞ்சித் தன்னிடம் ஆதரவு கேட்டு வருவோருக்கு நல்ல துணைவராகவும், தருக்குடன் மிஞ்சுபவர்களுக்கு எதிராக வீரத்தை மிகத் தைரியமாகக் காட்டும் வீரராகவும் விளங்கினார்.

சங்கையைத் தலையில் சுமக்கும் இறைவன் மகிழ்ந்திடும் அம்பிகைக்கு, திருவிழா நடத்துகிறார் உலக மக்களுக்கு ஆதரவாகப் பிறந்து நாட்டை நன்கு ஆள்வதற்கு இருதயாலய மருதப்பன் நற்பேறாகக் கிடைத்தார். இவர் மிகவும் சிறப்புடைய மன்னராக விளங்கினார்.

தேவர்கள் பணிந்தேத்தும் தன்மையுடையவர். அரசர்கள் மத்தியில் மிகச் சிறப்புடையவர். இப்படிப்பட்ட சிறப்புடைய இருதயாலய மருதப்பர் தென்னூற்றுமலைக்கு அதிபதியாகி விட்டார். சந்திர சூரியர் இருக்கும் வரை உலகநாயகியின் பூசனை நடக்க செய்ய வேண்டும் என்று அனைவரும் விரும்பியதை ஏற்றுக் கொண்டார். தன்னால் இயன்றதைச் செய்தவர். (இந்தக் கும்மிப் பாடல் முற்றுப் பெறவில்லை.)

சிறப்புச் செய்திகள்

இருதயாலய மருதப்பர் கும்மி

இருதயாலய மருதப்பர் ஊற்றுமலைக்கு மன்னராக (ஜமீன் தார்) இருந்தபோது அவரை டாக்டர் உ. வே. சாமிநாதையர் சந்தித்திருக்

கிறார். இருதயாலய மருதப்ப தேவர் தமிழராய்ச்சி மிக்கவர். தினமும் காலை எட்டு மணிமுதல் பத்து வரையிலும் மாலை இரண்டு மணி முதல் நாலு வரையிலும் புலவர்களைக் கொண்டு தமிழ் நூல்களைப் படித்து ஆய்வது வழக்கம் என்று விளக்குகிறார்.[1]

இருதயாலயரின் அவைப்புலவர்கள் நால்வர். அவர்களில் முக்கியமானவராகப் புளியங்குடி முத்து வீரப்புலவரைக் கூறலாம். இவர் இருதயாலய மருதப்பரைப் பாராட்டிப் பல பாடல்களைப் பாடி இருக்கிறார். அவை ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு என்ற நூலில் காணப்படுகின்றன.

'.......................கரரனைய
வண்ணத்தான் வீரை மருவுநவ நீதகிருஷ்ண
திண்ணத்தான்..................'[2]

என்று கூறுவதில் மன்னரின் கருமையான நிறத்தையும் நவநீத கிருஷ்ண பக்தியையும் அறிய முடிகிறது. கும்மிப் பாடலும்,

'நவநீத கிருட்டின சுவாமியை நித்தமும்
நாடிடுஞ் சிந்தையும் புத்தியுமுள்ளோன்'[3].

என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

எல்லா வளமும் பொருந்த வளரும் ஊற்றுமலை மன்னனாகிய இருதயாலய மருதப்பரை,

'வீரை நகரில் விளங்கன்ன சத்திரமுப்
பாருலகு முண்ணும் படிக்கமைத்தோன்—ஏருலவு
புண்ணியமெ லாமோ ருருவாய்ப் புகுந்ததன்ன
கண்ணியவான் கல்வியெல்லாங் கற்றறிந்தோன்'[4]

என்றும்,

---

1. டாக்டர் உ. வே. சாமிநாதையர் நான் கண்டதும் கேட்டதும் (சென்னை, 1959, VII பதிப்பு), பக். 26
2. புளியங்குடி முத்து வீரக்கவிராயர், ஊற்றுமிலத்தனிப் பாடற்றிரட்டு, வாழ்த்து, பக். 113
3. மருதப் பாண்டியன் கும்மி கண்ணி 59.
4. ஊற்றுமலைத் தனிப்பாடற்றிரட்டு, பக். 114

'அபயமென வந்தடைந்தார்க் காதரவு செய்யும்
உபயகுலோத் துங்க வுசிதா—சுபமா
மதயானை வேந்தர் குழாம் வந்துவந்து போற்றும்
இதயா லயமருதப் பேந்திரா'[5]

என்றும் புளியங்குடி முத்து வீரக் கவிராயர் மிகவும் சிறப்பித்துப் பாடுகிறார். இருதயாலயர் அபயமென வந்தவர்களுக்கு ஆதரவு கொடுப்பவர் என்று இக்கவிஞர் பாராட்டி இருப்பது போன்று கும்மிப்பாடல் ஆசிரியரும் சிறப்பித்துக் கூறியுள்ளார்[6]. கல்விமான், அன்ன சத்திரம் வைத்தமை போன்ற சிறப்புக்கள் கும்மிப்பாடலில் காணப்பெறவில்லை. கிடைக்காத பிற்பகுதியில் இருக்கலாம்.

சரவண முத்தய்யனின் குலவரலாறு

மருதப் பாண்டியன் கும்மியில் ஒரு குலத்தின் பரம்பரை வரலாறு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். காராளர் வம்சத்தைச் சேர்ந்தவன் முத்துக் குமரேந்திரன். இவனைக் கலிங்கத் தாயக் கோத்திரவான் என்று கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது.[7] இந்தப் பரம்பரை கலிங்கத்தைச் சேர்ந்த காராளர் வகுப்பைச் சார்ந்ததா என்பதையும் சிந்திக்கலாம்.

முத்துக் குமரேந்திரனுக்கு மூன்று மக்கள் இருந்துள்ளனர். அவர்களில் மூத்தவர் நெல்லையப் பேந்திரன் என்பார். இவர் நெல்லையில் பெரிய வீடு கட்டிக் குடியிருந்ததாகக் கும்மிப்பாடல் விளக்கிக் கூறுகிறது. இவர் நெல்லையில் குடியிருந்ததினால் இப்பெயர் பெற்றாரா என்பதையும் அறிய முயலலாம். நெல்லையப் பேந்திரனின் இளைய மகன் (கனிஷ்ட புதல்வன்) சரவண முத்தையன் (கண்ணி 78) அல்லது முத்துக் குமார சாமி (கண்ணி 26) என்று அழைக்கப் படுகிறார். இவரை பற்றியும் கும்மிப்பாடல் விரிவாகப் பேசுகிறது.

மேலும், 'சரவண முத்தேந்திரன் வந்த கனிஷ்டன் அருள் தங்கும் சுப்பிரமணியன் என்போன்'[8] என்று கூறுவதினால் சரவண முத்தேந்திரனுக்குச் சுப்பிரமணியன் என்பார் இளைய

---

5. மேற்படி, பக. 119.
6. மருதப் பாண்டியன் கும்மி, கண்ணி66
7. மேற்படி, கண்ணி17
8. மேற்படி, கண்ணி 19

மகனாகத் தோன்றியுள்ளார் என்று தெரிகிறது. இவர்கள் இருவரும் நெல்லையில் ஒரு வீட்டில் வாழ்ந்ததைக் கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது. (கண்ணி 20) பின்னால்,

'தேவ நல்லூருக் கதிபதி யானநல்
தீரனருள் சுப்பிர மணியனெங்கோன்'[9]

என்று கூறியிருப்பதினால் இந்தச் சுப்பிரமணியன் வாசுதேவ நல்லூருக்கு அதிபதியாகச் சென்றிருக்க வேண்டும் என்பதை அறியலாம். இவற்றைக் கொண்டு முத்துக்குமரேந்திரன், நெல்லையப்பேந்திரன், சரவண முத்தையன், சுப்பிரமணியன் ஆகிய நாலு தலைமுறையினர் பற்றிய செய்திகள் இந்தக் கும்மிப்பாடலில் கிடைக்கின்றன.

இருதயாலயருக்கும் சரவண முத்தய்யருக்குமுள்ள தொடர்பு

ஊற்றுமலைக்கு அதிபதியான இருதயாலய மருதப்ப பாண்டியனைப் பற்றிய முதற்குறிப்பு

'எப்பொழுதுந் தர்ம சிந்தனை யுள்ளோன்
இருதயத் தையன் மருதப்பமால்
தெப்பக் குளஞ்செய்த மன்னவ னுள்ளத்தில்
தேர்ந்து குறிப்பதைத் தானறிந்தான்'[10]

என்ற முறையில் கும்மிப் பாடலில் வருகிறது. இதனோடு பதின்மூன்று பாடல்களே இருதயாலயரைப் பற்றி இந்தக் கும்மிப் பாடலில் கிடைத்துள்ளன. நூலின் தலைப்பு 'மருதப் பாண்டியன் கும்மி' என்று இருப்பதினால் இவரைப் பற்றி மிகவும் விரிவாகப் பாடி இருக்க வேண்டும். அப்பகுதி இன்னும் கிடைக்கப் பெற வில்லை.

மேற்காட்டியுள்ள பாடலில் 'தெப்பக் குளஞ்செய்த மன்னவன்' என்று குறிப்பிட்டிருப்பது சரவண முத்தையனைத்தான் என்பது முந்திய பாடல் வாயிலாக நன்கு விளங்கும். இவர்கள் இருவருக்கும் இடையிலுள்ள தொடர்பு எந்தப் பாட்டிலும் குறிப்பிடப் படவில்லை.

9. மேற்படி, கண்ணி 24
10. மேற்படி. கண்ணி 58

சரவண முத்தையனின் இல்லம் நெல்லையில் இருந்ததை மிகவும் தெளிவாகக் கும்மிப்பாடல் குறிப்பிடப்படுகிறது. (கண்ணி 20) இருதயாலய மருதப்பன் 'தென்காசியைச் சேர்ந்த தென்னாரிய நாட்டதிபன்' என்றும் (கண்ணி59) தென்னூற்று மலைக்கதிபன்' என்றும் (கண்ணி39) கும்மிப்பாடல் உறுதியாகக் கூறுகிறது. இந்தக் கும்மிப்பாடல் பகுதியைக் கொண்டு இருவருக்கும் இடையிலுள்ள தொடர்பைச் சரியாக அறிய முடியவில்லை. இருப்பினும் கருதுகோளாகச் சிலவற்றைக் கூற இடமுள்ளது.

சரவண முத்தையன் நெல்லையிலே மேடை வீடு கட்டிச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர். இவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். ஆங்கிலேயருக்கும் இவருக்கும் நல்ல தொடர்பு இருந்துள்ளது மேனாட்டுத் தொடர்பு இருந்ததால் வீட்டின் நாகரிகப் போக்கில் மாற்றம் காணப்படுகிறது. (கண்ணி 40, 41. அன்றிருந்த ஆங்கிலேயரின் அரசு சரவண முத்தையனை விருது நகரில் சப்மேஜிஸ்திரேட் (Sub Magistrate) பதவி கொடுத்துள்ளது) (கண்ணி 48)

பின்னர் அவர் தென்காசிக்குத் தாசிலபதி பதியாக வருகிறார். (கண்ணி 51) அங்கு நீதி வழுவாத ஆட்சி செய்வதுடன் பல சாலைகள் அமைக்கின்றார். திருமலை வேலன் கோயிலுக்கு என்னாளும் கட்டளைகள் சிறப்பாக நடந்தேற வழி செய்கிறார். மலையேற வசதியான படிகளும், பக்கங்களில் கைப்பிடிகளும் செய்து பக்தர்களுக்கு உதவி செய்கிறார். அத்தியூத்து எல்லையில் சத்திரம் கட்டி வைக்கிறார். அதனைச் சுற்றி நல்ல சோலைகள் அமைக்கிறார். தென்காசியில் தெப்பத் திருநாள் மிகவும் சிறப்பாக நடக்க வழி செய்கிறார். இத்தகைய நல்ல செயல்கள் ஊற்று மலையை ஆண்ட இருதயாலய மருதப்பரை நன்கு கவர்ந்துள்ளது. ஆகையினால் இருவருக்கும் இடையில் நல்ல நட்பும் மதிப்பும் இருந்திருக்க வேண்டும். ஊற்றுமலை மன்னருக்கும் சரவண முத்தயன் பலவழிகளில் உதவி இருக்கலாம். ஆகையினால் கும்மிப்பாடல் ஆசிரியர் அவரையும் இணைத்துப் பாடியிருக்கலாம்.

கிடைக்கப் பெற்றிருக்கும் கும்மிப்பாடலைப் பார்த்தால் இதில் மிகுதியான இடங்கள் சரவண முத்தையனின் சிறப்புகளைப் பாடுவதாகவே உள்ளன. ஆனால் பாடலின் தலைப்பு இருதயாலய மருதப்பனைக் குறிப்பிடுவதால் கிடைக்கப் பெறாத பிற்பகுதி பாடல்கள் இவருடைய சிறப்புக்களைப் புகழ்ந்து கூறுவனவாக அமைந்திருக்கலாம். இவர்கள் இருவரிலும் பின்னவர் சிற்றரசராகவும். முன்னவர் அரசு அதிகாரியாகவும் இருந்திருக்கவேண்டும்

அக்கால கட்ட வரலாற்றினையும் வளர்ச்சிக் கூறுகளையும் ஒழுங்காகக் கூற விரும்பினால் இருவரைப் பற்றியும் சிறப்பாகப் பாடித்தான் ஆகவேண்டும். அந்த அளவுக்கு சரவண முத்தையனின் இறைப்பணி மக்களின் உண்மையான உணர்ச்சியுடன் ஒன்றி இருப்பதைக் காணலாம். பல இடங்களுக்கு அதிபதியாக இருந்து சென்ற இடமெல்லாம் புகழோங்கச் செயல்பட்ட சரவண முத்தையனை முதலில் சிறப்பித்து ஆசிரியர் பாடியதில் தவறில்லை என்றே கூறலாம்.

சிறந்த வரலாற்றுக் குறிப்புக்கள்

இந்தக் கும்மிப் பாடல் பல வரலாற்று உண்மைகளைத் தாங்கியதாகக் காணப்படுகிறது. ஆங்கில ஆட்சியின் கீழ் தாசில்தார், சப் மாஜிஸ்திரேட் முதலிய உயர்பதவிகளை வகித்து பலவிதமான நன்மைகளை நாட்டுக்குச் செய்த சரவண முத்தையனின் செயல் திறன், பக்தி ஈடுபாடு, நாட்டு நலம் பேணல், வீட்டமைப்பு, முன் தலைமுறையினரைப் பற்றிய சிறப்புச் செய்திகள் போன்றவைச் சிறப்பாக இந்தக் கும்மிப் பாடலில் விளக்கம் பெற்றுள்ளது. மேலும் ஊற்றுமலை அரசரான இருதாலய] மருதப்பரின் ஆட்சித் தன்மை, இறையீடுபாடு, கல்விச் சேவை ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன. கும்மிப்பாடல் முழுமையாகக் கிடைத்திருப்பின் பல அரிய வரலாற்றுச் செய்திகள் கிடைத்திருக்கலாம்.

மருத பாண்டியன் கும்மி

1. அன்னமே யன்ன பூரண மேயுனக்
கன்புள்ள ரெங்க நாயகியே
சொன்னமே யம்மனி மாணிக்கவல்லியைச்
சூழ்ந்துடன் வந்தவென் தோழியரே.

2. நாரணி நாச்சியார் கோமதியே வெங்கு
லச்சிமி பின்வந்த பார்வதியே
வாரணியுந் தனமுத்து கிருஷ்டி னாளுடன்
வந்ததைச் சொல்லுங்கோ தோழியரே.

3. தேவியுல காளுக்குஞ் செஞ்சடை யானுக்குந்
தெப்பத் திருநாள் தானடத்த
வாவியைச் செய்த சரவண முத்துவேள்
மன்னவன் கட்டளைக் காகவந்தோன்.

---

1. அன்னம்—அன்னப்பறவை; அமிழ்தம்; சாதம்
சொன்னம்—பொன்
மாணிக்கவல்லி —உமாதேவி

2. நாரணி—துர்க்கை
கோமதி—உமாதேவி
வாரணியும்—கச்சணியும்

3. உலகாள்—உலகநாயகியாகிய உமாதேவி
செஞ்சடையான்—சிவபெருமான்
வாவி—குளம்

4. மன்னவன் கட்டளைக் காகவந்தால் நல்ல
காணிக்க முத்து வயிடூரியம்
சொன்னத்தில் செய்த பணிகளை நீங்கள்
சோடனை செய்யுங்கள் தோழியரே.

5. பொன்னுலகத் தேவர் பூமாரி பெய்யப்
புரந்தரன் மற்றுள்ளோர் வந்தேவல் செய்ய
கின்னரர்கிம் புருடர்வந்து யாழ்வா சிக்கக்
கீதமொழி யரம்பையர் பல்லாண்டு கூற
அன்ன நடை யிந்திராணி தீப மேந்த
அழகான ஈஸ்வரன் ஈஸ்வரிக்கு முன்னிற்கும்
இன்னிலத்தோர் புகழ வந்த ராசனாலே
யாவர்க்கும் கிடைத்ததே கனமென்று
சொல்வேன்

6. சோமனொடு வீமன்புகழ் பொய்த்திட் டாலுஞ்
சொன்னமொழி பொய்யாத சுகுண னான
வாமஉல காள்மகிழ வபிசே கங்கள்
மங்களமாய்த் தீபதூபம் வாரவாரஞ் செய்த

4, பணிகள் —அணிகலன்கள்
சோடனை—அலங்கரித்தல்; ஒப்பனை செய்தல்

5. பொன்னுலகம்—தேவருலகம்
புரந்திரன்—இந்திரன்
கின்னரர்—தேவரினத்தவர்
கிம்புருடர்—பதினெண்கணத்தொருவர்
கீதமொழி—இசையிற்சிறந்த
அரம்பையர்—தேவமாதர்
பல்லாண்டுகூறல்—வாழ்த்துக் கூறல்
கனம்—சிறப்பு

6. சோமன்—சந்திரன்
சுகுணன்—பண்பிற்சிறந்தவன்
வாமம்—அழகு
அபிசேகம்—புனிதநீராட்டுதல்

காமனெனுஞ் சரவணமுத் தேந்திர யோக
கனவானின் மான்மியத்தைக் காத லோடு
பூமிபுக ழபிசேகமண் டபத்தின் முன்னே
புகலுகிறேன் தோழிகளே இன்பாய்க்கேட் பீரே.

(கண்ணிகள்)

7. புல்லாக்கு நத்துடன் மூக்குத்தியும் நல்ல
புஷ்ப ராகத்தின் முத்தணிந்த
கல்லாற் பதித்த பணிகளைக் காமியர்
கண்கள் மெய்நாட்ட வணிந்திடுங்கோ.

8. வங்காரக் கச்சைகள் தானெடுத்துத்—தன
மாட்டியே வர்ணத் துயிலுடுத்தி
சிங்காரமாய்ச் சீவிக் கட்டுங் குழலதிற்
செண்பக முல்லைகள் சூட்டுங்கடி

9. கண்ணுக்கு அஞ்சனந் தீட்டுங்கடி யுங்கள்
கைதனில் வளையைப் பூட்டுங்கடி
விண்ணுலகம் வாழ்ந்த ரம்பையர் போலிந்த
மேதினி வந்தயென் தோழியரே.

மான்மியம்—சிறப்புகள்
புகலுதல்—சொல்லுதல்

7. புல்லாக்கு, நத்து, மூக்குத்தி — மூக்கணிகள்
புஷ்பராகம்—நவமணிகளில் ஒன்று
காமியர்—காமமுடையவர்
மெய்நாட்ட—மொய்த்துக் காண

8. வங்காரம்—பொன்வணிதம்; பொன்னால் செப்பம் செய்யம் பெற்ற
மாட்டியே—கட்டியே
வர்ணம்—நிறம்
துயில்—ஆடை
சிங்காரம்—அழகு

9. அஞ்சனம்—மை
மேதினி—உலகம்

10. குங்குமப் பொட்டுகள் தானணிந்து வண்ணக்
கூட்டங்கள் போல வேசேர்ந்து
மங்கலம் பொன்னுல கபிசேகங் கொண்டு
மண்டபம் முன்வந்து சேருங்கடி

11. பச்சை மரகதம் மாமணி ரத்தினப்
பதக்க மணிந்தவள் கட்டளைக்கு
இச்சையுடன் வந்த தோழியரே நீங்கள்
ஈஸ்வரி யைத்தெழு தேத்துங்கடி

12. மன்மதனை வெல்லும் ஆடவரை நித்தம்
மய்யல் கொள்ளுமட மாதர்களே
தன்மம் புரியுஞ் சரவண முத்தய்ய
சாமியடி வந்து போற்றுங்கடி

13. கொங்கைக் குடங்கள் குலுங்கிடவே மார்பில்
கோர்த்த முத்தாரந் துலங்கிடவே
செங்கை வளைகள் கிலிங்கிடவே நீங்கள்
சேர்ந்து கும்மி யடியுங்கடி.

14. கட்டளை செய்யுஞ் சரவண முத்தெனுங்
கன்னன் மனமகிழ்ந் தேயிருக்க
வட்டம தாகவே சேர்ந்துட னெல்லோரும்
வாழக் கும்மி யடியுங்கடி.

---

10. பொன்னுலகு—தேவருலகம்

11. பச்சைமரகதம்—நவமணிகளில் ஒன்று
பதக்கம்—மார்பில் அணியும் கலன்
இச்சை—விருப்பம்

12. மய்யல்—மயக்கம்
தன்மம்—தருமம்

13. கோர்த்த—தொடுத்த, கோத்த
துலங்கல்—விளங்கல்
கிலிங்கல்—குறுங்கல் (வழக்குச்சொல்)

14. கன்னன்—கொடையிற் சிறந்தவன்

15. தோழியரே யடி தோழியரே நம்ம
சுவாமிக் குகந்தவன் தான்மகிழ
ஆழிய னான சரவண முத்துபல
வதிசயஞ் செய்ததைக் கேளுங்கடி.

(விருத்தம்)

16. அந்தரத்தோ புகழவந்த சரவணமுத்
தேந்திரனே அன்பு கூர்ந்து
வந்தநக ரங்களெல்லாம் வாவிசெய்து
வாழ்வருள்தென் காசி வந்து
தந்திரமாய் வாவிசெய்திவ் வுலகமெல்லாந்
தானியற்றுந் தன்ம மெல்லாந்
சுந்தரமாய்ச் சூழ்ந்துவந்த தோழியரே
யானெடுத்துச் சொல்வன் கேளீர்.

17. காரா ளர்குல வம்மிச வானுயர்
கலிங்கத் தாய கோத்திரவான்
பாராள வந்தவன் முத்துக் குமரேந்திரன்
பண்ணிய மாதவத் தாலுதித்த

18. மைந்தர்கள் மூவரில் முன்தோன்றி வந்த
மாதவ நெல்லையப் பேந்திர னுக்கு
வந்த கனிஷ்ட சரவண முத்தய்ய
மன்ன னிவனடி தோழியரே.

---

15. உகந்தவள்—ஏற்றவள்
ஆழியன்—ஆணை செலுத்துவோன்

16. அந்தரத்தோர்—வானவர்
வாவி—குளம்
தென்காசி—ஓரிடம்

17. காராளர்—பூவைசியர்; வேளாளர்; சூத்திரர்
கோத்திரம்—குலம்

18. கனிஷ்டன்—இளையவன்

19. கந்தனடி நித்தம் போற்றியே வாழ்கின்ற
கன்னன் சரவண முத்தேந்திரன்
வந்த கனிஷ்ட னருள்தங்குஞ் சுப்பிர
மணிய னென்போனிவர் தங்களுக்கு

20. நெல்லை நகரதில் வீடதைக் கேளடி
நேர்ந்தகில் காலினால்த் தூணதடி
எல்லைமேல் மெத்தைநல் வாசலடி—யது
ஏர்பெற்ற கண்ணாடி மேடையடி.

21. நாலு புறஞ்செய்த கண்ணாடி மேடையை
நாலஞ் சுதரம் பாரடியோ
பாலுக்கொப் பானசொல் பெண்களே நீங்களும்
பார்த்ததுண்டோ சொல்லும் தோழியரே.

22. மாதவ நெல்லையப் பேந்திர னிருந்தங்கு
வாசிக்கும் மேடையின் மீதாக
ஆதவன் கீழ்த்திசை வந்து புகுந்தவன்
அந்தப்புர மாவான் தோழியரே.

23. தன்மம் புரியுஞ் சரவண முத்தய்ய
சாமி யிருக்கின்ற மேடையதில்
மன்மத னுக்குக் குடையான் சத்திரன்
வாசல் வழிவந்து போய்வருவான்.

---

19. நித்தம்—தினமும்

20 அகில்—ஒருமரம்
ஏர் பெற்ற—அழகுடைய
மெத்தை—மாடி

21. நாலஞ்சுதரம்—நாலைந்து தடவை

22. ஆதவன்—சூரியன்

24. தேவ நல்லூருத் கதிபதி யானநல்
தீரருள் சுப்பிர மணியனெங்கோன்
ஆவ லுடனவன் தங்கிய மேடைக்குள்
ளாகவே மேகங்கள் வந்திறங்கும்.

25. பங்களா மேடை வடபுறமா—மதில்
பண்பான நெல்லையப்பேந் திரன்மைந்தன்
திங்கள்வந் ததென்னமுத்துக் குமார சுவாமி
திருநாம மிட்டதில் வாழுகிறான்.

26. இன்னமுஞ் சூளிகை மாளிகைக் குள்ளாய்
இருக்கின்ற வேடிக்கை யானுரைப்பேன்
கன்னிய ராய்வந்த தோழியரே நீங்கள்
காசலையாய் வந்து கேளுங்கடி.

27. பொன்னுல கோரிங்கே தான்வரவோ இந்தப்
பூவுலகோ ரங்கே போய்வரவோ
இன்னிலந் தொட்டுமேல் மேடைக் கேகவே
ஏறும் படியதைப் பாருங்கடி

28. பைந்தமிழ் ஆராயும் நெல்லையப் பேந்திரன்
பார்க்கமுன் வாங்கிய புத்தகங்கள்
அந்த முள்ள பீரோவில் வைத்த
அழகையென் சொல்லுவேன் தோழியரே.

---

24. தேவநல்லூர்—வாசுதேவநல்லூர்

25. பங்களா—வசதியானவீடு

26. சூளிகை—அரமியம்; நிலாமுற்றம்
காசலையாய்—ஆர்வமாய் (வழக்குச்சொல்)

27. ஏகல்—செல்லல்

28. பீரோ—பேழை

29. செந்தமிழ்க் கும்ப முனிக்கிணையா னல்லன்
தீர னருள்நெல்லை யப்பேந்திரன்
சந்தி வினாயகன் பேரினில் சாற்றிய
தண்டமிழ்க் கும்மியைப் பாருங்கடி.

30. சித்திர வகைக்கண் ணாடிப் படத்தைச்
சேர்த்தொழுங் காகவே பித்திக்குள்ளாய்
பத்தியாய் வைத்து மதிக்கும் புதுமையைப்
பார்த்தொழுங் காகவே வாருங்கடி.

31. சித்திர வண்ணக்கண் ணாடிக்குள் செய்த
சித்திரப் பெண்ரூப மத்தியினில்
உத்திரம் பேசாமல் சித்தசன் போல்நின்ற
ஓவியம் பாருங்கள் தோழியரே.

32. துங்கமு டன்பல தூண்நிறுத்திச் சொர்ணத்
தூணுறைப் போட்டிருக் கின்றதனைப்
பங்கப் படாதுறை தன்னைக் கழற்றியே
பார்த்தபின் போட்டிடுந் தோழியரே.

---

29. கும்பமுனி—அகத்திய முனிவர்
இணையாக—சமமாக
சாற்றிய—சொல்லிய; பாடிய

30. சித்திரம்—படம்
பித்திக்குள்—சுவருக்குள்
பத்தியாய்—வரிசையாய்

31. உத்திரம்—பதில்
சித்தசன்—மன்மதன்
ஓவியம்—படம்

32. துங்கம்—உயர்வு; பெருமை
சொர்ணம்—பொன்
பங்கப்பாடது—குறைவராது

33. சிம்மங்கள் தாங்கிய சப்பர மஞ்சமுன்பு
சீமான் நெல்லையப் பரம்மனுக்கு
பொம்மைகள் சாமரம் போடு மேய்ந்த
புதுமையைப் பாருங்கள் தோழியரே.

34. சித்திர கூடப் பருவதம் போலவே
சேர்ந்தமேல் மோட்டினில் கோர்த்திட்ட
பத்தரை மாத்துப்பொன் சங்கிலி யூஞ்சல்
பலகையைப் பாருங்கள் தோழியரே

35. மாத்து மிகுந்த பொன்னால் செய்தவூஞ்சல்
வந்தங்குபோய் வரப்பண்ணு மியந்திரம்
பாத்து வருகின்ற தோழியரே இந்தப்
பாவையின் கைக்கு ளமைந்ததடி.

36. வஞ்சியர் கொஞ்சவே பஞ்ச வர்ணக்கிளி
வைத்து வளர்க்கின்ற மேடையிலே
கொஞ்சுங் குயில்மொழி மாதர்களே உங்கள்
கொவ்வை யிதழ்மூடிப் பாருங்கடி

37. ஆணிக் கிசைந்தபொற் பாவைகள் கையில்
அழகான சூட்சக்கயி றுகொடுத்து
பேணியே பொம்மைகள் பாங்காய் விழுகின்ற
பெட்பினைப் பாரடி தோழியரே.

---

33. சிம்மம்—சிங்கம்
சப்ரமஞ்சம்—அழகுவேலைப்பாடுகள் நிறைந்த படுக்கை
சீமான்—செல்வன்; தலைவன்

34. சித்திரகூடப் பருவதம்—சித்திரகூடமலை
மோட்டினின்—வீட்டின் மேற்பகுதியில்

32. பாவை—சூத்திரப்பாவை

36. வஞ்சியர்—பெண்கள்
கொவ்வையிதழ்—கோவைப் பழம் போன்ற சிவந்த இதழ்

37. பெட்பினை—அழகினை

38. ஏர்மிகுந் தந்லைக் கண்ணாடி வைத்தங்
கிருக்கும் புதுமையை நீர்பார்க்கில்
சீர்மிகுந் தோங்கிய தேவ நகரத்தின்
சீரதைக் காணலாம் தோழியரே.

39. தாரணி யோர்களுக் காதர வான
சரவண முத்தய்யன் மால்ரூபம்
வாரணி யுந்தன மாதர்களே பஞ்ச
வர்ணக்கண் ணாடிக்குள் பாருங்கடி.

40. பந்து முலையுள்ள தோழி யரேவளம்
பத்தும் வருமந்த மேடைகளில்
இந்திரை நீங்காத மேல்மேடை தன்னிலே
ஈரோப்பியர் சட்டத்தின் திட்டங்கள்

41. எந்தரத்துத் தோழிப் பெண்களே நீங்கள்
இச்சையுடன் தெற்கு மேடைவளம்
சுந்தரமாய்ச் சென்று பார்க்கவே பாவைகள்
சூட்சக் கைகாட்டி யழைக்குமடி

42. மேலோகத் தில்வந்த நங்கையர் போலந்த
மேடையில் செல்கின்ற காலமதில்
பூலோக ராசன் சரவண முத்தய்ய
பூமானார் மேடையைப் பாருங்கடி.

---

38. ஏர்மிகுந்த—அழகுமிக்க
சீர்—அழகு

39. தாரணியோர்—உலகத்தார்
மால்ரூபம்—மயக்கம்தரும் உருவம்

40. இந்திரை—இலக்குமி; அரிதாரம்
ஈரோப்பியர்—மேனாட்டினர்; ஐரோப்பியர்

41. எந்தரத்து—சூத்திரபாவை போன்ற
இச்சை—விருப்பம்
சுந்தரம்—அழகு

42. பூமானார் - அரசன்

(விருத்தம்)

43. சந்தணி முலையார் முன்னம்
மாளிகை வளங்கள் சாற்றி
இந்தமா நிலத்தோர்க் கெல்லாம்
இனிதுடன் மகிழச் செய்ய
சிந்தனை யுடையப் பூமன் திறல்
சரவண முத்தோதிர மகிபன்
எந்தநா ளிலும்பேர் சொல்ல
இயற்றிய தர்மம் சொல்வேன்.

44. ஆரையுங் காக்கின்ற காரையே காத்த
அதிசயப் பேரே காராளன்
ஊரையும் பேரையும் பாரையும் காக்க
உதித்து வந்தானி வன்குலத்தில்

45. மன்னன் சரவண முத்தேந்திரன் பூபதி
வளஞ்சேர்த்த நெல்லைப்பதி மானகரில்
பொன்னை இகழுந்தே வேந்திரன் போலவே
பூமி புரக்கவே வந்துதித்தான்.

46. தன்மப் புரியுஞ் சரவண முத்துத்
தயாநிதிச் செல்வந் தழைத்தோங்க
பொன்மனத் தாவிள மங்கையரே வந்த
மன்னவன் செங்கோ லோங்கியநாள்

---

43. மகிபன்—அரசன்
திறல்—வீரம்; வலிமை

44. ஆர்—பூமி

45. புரக்கவே—காக்கவே

46. தன்மம்—தர்மம்

47. பங்கயஞ் சூழந்த பணமா புரியினில்
பண்பான தெப்பக்குள முஞ்செய்து
கங்கை யணியுஞ்சொக் கேசர்க்கு முன்பாகக்
கட்டிய வாவியையுந் துலக்கி

48. மேனாள் விருது நகரத்திலே—சப்
மேஜிஸ் திரட்டாக மேவியந்நாள்
வானிலத் தோர்கள் துதிக்கும் படிக்கந்த
மானிலத்தில் வாவி செய்துவைத்து

49. செட்டி நீராவியுங் கற்களைக் கூட்டியே
சீர்பெற வேபணி செய்துவைத்து
மட்டவி ழுங்குழல் மாதர்களே—வாழும்
மன்னன் சரவணமுத் தேந்திரன்

50. இன்னஞ் சிலதெப்ப வாவிகள் செய்வமென்
றெண்ணி யிருந்தர சாளுகையில்
கன்னல் மொழியுள்ள தோழியரே கேளீர்
கர்னன் சரவண முத்தேத்திரன்

---

47. பங்கயம்—தாமரை
பணமாபுரி—ஓரூர்
சொக்கேசர்—சொக்கநாதபெருமாள்
வாவி—குளம்
துலக்கி—தூரெடுத்துத் துலக்கல்

48. விருதுநகர்—ஓரிடம் (விளக்கவுரை காண்க)
சப்மேஜிஸ்திரட் (Submagistrate)
மேவிய—இருந்த
வானிலத்தோர்—தேவர்
மானிலத்தோர்—உலகினர்

49. நீராவி—கேணி
மட்டவிழுங்குழல்—தேன் சொட்டும் மலர்களை அணிந்த கூந்தல்

50. தெப்பவாவி—தெப்பக்குளம்
கன்னல்—கரும்பு
கர்னன்—கொடையில் சிறந்தவன்

51. ஆல மயின்ற சிவனுமை யாளுக்கு
அற்புத மான நல் வாவிசெய்ய
தாலமெல் லாம்புகழ்ந் தேற்றுந்தென் காசிக்குத்
தாசிலதி பதியாக வந்தான்.

52. தென்காசி வாழுங் குடிகட்கு நீதி
செலுத்தி வருகின்ற நாளையிலே
பொன்காசி தேச நகரத்தின் வீதிகள்
போலவே றோட்டுகள் போட்டனனே.

53. பண்பை நகரத்தா ராட்டுமிட் டான்வள்ளி
பங்கன் திருமலை வேலனுக்கு
நண்புடனே நல்ல கட்டளை நித்தம்
நடக்கும்படித் திட்டஞ் செய்துவைத்தான்

54 விண்ண ளவுந்திரு மாமலை மீதினில்
மேதினி யோர்களுக் காதரவாய்
வண்மை யதான படிகளுஞ் செய்தந்த
மாற்கத்தில் கையிட்டுக் கம்பியிட்டான்

55. அத்திபூத் தெல்கை உயர்ந்த கடிஸ்தலம்
ஆனதால் யாவரும் வந்திருக்கச்
சத்திரங் கலப்பணி மேலியற் றியதைச்
சுற்றியுஞ் சோலைதனை யமைத்தான்

---

51. ஆலம்—நஞ்சு (ஆலகாலவிஷம்)
தாலம்—உலகம்
தாசிலதிபதி (Thasildar)

52. றோட்டுகள் (Roads)

54. மேதினியோர்—உலகமக்கள்
வன்மையாதான படிகள்—மலையில் ஏறுவதற்கு வசதியான படிகள்
மாற்கம்—வழி
கையிட்டு—பாதையின் இருபுறமும் பாதுப்புக் கம்பிகள் அமைத்து

56. காசியைக் கருத்தாய்ப் பெருக்கியராமபாண்டியன்
காசினி தன்னிலுதித் ததுபோல
தாசில் சரவண முத்தையனே வந்து
தரணி யோர்களுக் காதரவாய்.

57. தண்ணீ ரெடுத்துண்டோர் தான்மகிழ வந்து
தானங்கள் செய்தவர் பூசைசெய்ய
பண்ணின வாவியில் தெப்பஞ் செய்துற்சவம்
பாங்காய்நடத் தவேயெண்ணம் வைத்தான்

58. எப்பொழுதுந் தர்ம சிந்தனை யுள்ளோன்
இருதயத் தையன் மருதப்பமால்
தெப்பக் குளஞ்செய்த மன்னவ னுள்ளத்தில்
தேர்ந்து குறிப்பதைத் தானறியான்

59. சிவமத மேவளர்ந் தோங்குந் தென்காசியைச்
சேர்ந்த தென்னாரிய நாட்டதிபன்
நவநீத கிருட்டின சுவாமியை நித்தமும்
நாடிடுஞ் சிந்தையும் புத்தியுள்ளோன்.

60. கொண்டல் கைதங்குங் கொடையுடையான்—மதக்
குஞ்சரந் தாங்கிய கோட்டையினான்
மண்டலி கர்தங்கும் வாசலினான்—மலர்
மாது விளையாடும் வாசலினான்.

---

59. காசினி—உலகம்
தரணி—உலகம்

59. நவநீதகிருஷ்ணன்—வெண்ணெய் தின்னும் திருமால்

60. கொண்டல்—மேகம்
குஞ்சரம்—யானை
மலர்மாது—திருமகள்

61, பஞ்சலக் கணப்பரியில் வந்தான் நல்ல
பஞ்ச இலக்கணத்தா லுயர்ந்தோன்
வஞ்சியர் கெஞ்சு மதனனைப் போலவந்த
மன்னன் மருதப்ப ராசேநதிரன்

62. தேன்மொழி சோலையுஞ் செந்நெல் வயல்வளஞ்
சேர்ந்த தென்னாடு வளர்ந்தோங்க
வான்பொழிந் தெவ்வுயிரையுங் காப்பதற் கொப்பாக
வந்துதிந்தான் மருதப் பேந்திரன்.

63. அட்ட திசைகள் மட்டுந் திடமதாக
அளந்துமுன் வாங்கி யரசாள
பட்டத்து யானையில் நெற்றிப் பட்டத்துடன்
பார்புரக்க வந்த பாண்டியனவன்

64. கொத்துமுத் தாரத்தில் பத்து பதக்கங்கள்
கட்குய மார்பழகன் மயில்போல
எத்திசையுங் காக்கும் வெற்றிக் குடைக்குள்
இருந்தர சாளுஞ்சிம் மாசனத்தான்.

65. நன்னய மாங்குண சீல முள்ளோன்
மகராச சமூகத்தை நாடவந்தோன்
மன்னர்கள் கூட்டத்தில் சிம்மயேறு போலவந்த
வள்ளல் மருதப்ப ராசேந்திரன்.

---

61. பஞ்சலக்கணப்பரி—ஐந்து இலக்கணமுடைய குதிரை

63. அட்ட திசைகள்—எட்டு திசைகள்
திடமாக—உறுதியாக
பார்புரக்க—நிலங்காக்க; அரசாள

65. நன்னயம்—நற்பண்பு
சிம்மயேறு—ஆண்சிங்கம்

66. அஞ்சியே தஞ்சமென் றெண்ணியே வந்தவர்க்
காதர வாந்தளகர்த் தனாவான்
மிஞ்சிய பேர்வந்து கெஞ்ச வடிக்கிற
வீரம் செலுத்துந் தைரியவான்

67. ஆறணி யுஞ்சடை யோனுக் குகந்திடும்
அம்பிகைக் குற்சவந் தானடத்த
தாரணி வாழ்மக்கட் காதர வானநற்
றாயதுபோ லுதித்தாளும் மன்னன்.

68. இருத யாலய மருதப்ப பாண்டியன்
என்றென் னாளுமே பேர்விளங்க
பெருத யாவுள்ள பூமான் விடவந்த
பேர்பெற்ற மானியங் கேளடியோ

69. அந்தரத் தோர்பணிந் தேற்றும் புனிதனான்
அரசர்மகு டபதியருள் சேர்பூமான்
வந்தருள் தென்னூற்று மலைக்கதி பனான
மாலிருதா லயமருதப் பேந்திரன்

70. சந்திர சூரியருள நாள்வரை யிலுந்தத்
தாயுலகாட் குறபதத்தைத் தழைக்கச்செய
வந்தவனே மானிய சாதனமு மீயத்து
மானிலமும் விடுத்ததையான் வழுத்துவனே,

---

66. தளகர்த்தன்—தலைவன்; படைத்தலைவன்
அடிக்கிற—தோற்கடிக்கிற

67. ஆறணியும்—கங்கையைத் தலையில் தாங்கியுள்ள
சடையோன்—சடைமுடியையுடைய சிவன்
உகந்திடும்—பொருந்திடும்
தாரணி—உலகம்

68. பூமான்—அரசன்
மானியம்—நிவந்தம்

69. அந்தரத்தோர்—வானவர்

மாடன் கும்மி

மாடன் - விளக்கம்

சுடலைமாடன் ஒரு நாட்டுப்புறத் தெய்வம். நெல்லை, குமரி மாவட்டங்களில் இத்தெய்வ வணக்கம் இல்லாத இடமே இராது. பல விதமான பெயர்களில் மாடன் வழங்கப்படுவதைக் காணலாம். முக்கியமாகச் சுடலைமாடன், மயான மாடன், சந்தி மாடன், சங்கிலி மாடன், பெலமாடன், வண்ணார மாடன், பன்றி மாடன், அக்னி மாடன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் வெவ்வேறு கதையும், வணக்க முறையும் கொண்ட வேறுவேறு தெய்வங்கள். ஆயினும் அவர்களுக்குள் சில தொடர்புகளும் இல்லாமல் இல்லை. 'மாடன்' என்பது இத்தகைய தெய்வங்களுக்கு ஒரு பொதுப் பெயராகவே தோன்றுகிறது.

'மாடன் கும்மி' சுடலை மாடனைப் பற்றியே சிறப்பித்துப் பாடுகிறது. இந்தத் தெய்வத்துக்குத் துணையாக மாடத்தி என்ற பெண் தெய்வமும் உள்ளது. அவளைக் கும்மிப் பாடல் குறிப் பிட்டுக் காட்டத் தவறவில்லை. (பா. 11) சுடலை மாடனை மிகக் கொடுமையான தெய்வமாகக் கருதிப் பலர் வழிபடுவதைக் காணலாம். இவனுடைய கதை வில்லுப் பாட்டாக கோயில்களில் பாடப்படுகிறது.

சுடலைமாடன் கதை

சுடலைமாடன் சிவனுக்கும் பார்வதிக்கும் மகனாகக் கைலா யத்தில் பிறந்தவன். இவன் நல்ல தெய்வங்களுக்கு உரிய தன்மை இழந்து காணப்படுகிறான். இரவில் சுடுகாட்டுக்குச் சென்று பிணங்களைத் தின்று வருகிறான். கொடுமையான போக்கும் இவனிடம் உள்ளது. இதனை அறிந்த சிவபெருமான் வெகுண்டு இவனைப் பூவுலகத்துக்கு அனுப்ப முடிவு செய்கிறார். இவனுக்குத் துணையாக மாடத்தி என்பவளையும் உருவாக்கி இவனோடு அனுப்புகிறார்கள்.

பூவுலகிலும் இவன் அமைதியாக வாழவில்லை. தன்னுடைய திறமையினைக் காட்ட முற்படுகிறான். இவனைத் தடுத்துத் திருத்தப் பார்வதி தேவியும் வேற்றுருவில் மண்ணுலகுக்கு வந்திருக்கிறாள்.

சுடலைமாடன் மலையாள நாட்டுக்குச் செல்ல விரும்புகிறான். தாய் தடுக்கிறாள். அங்கு மந்திரவாதிகள் இருப்பதாகக் கூறுகிறாள். சுடலைமாடன் தடையை மீறி மலையாள நாட்டுக்குப் போகிறான். அங்குள்ள திறமையான மந்திரவாதியை வெல்ல முடிவு செய்கிறான். அவனுடைய மகளான மாவிசக்கியைக் கெடுத்து விடுகிறான். அதை அறிந்த மந்திரவாதி இவனை ஒரு சிமிளுக்குள் அடைக்க முயல்கிறான். சுடலைமாடன் தன்னுடைய ஆற்றலினால் மந்திரவாதி. மாவிசக்கி, மன்னனின் பட்டத்துயானை ஆகிய மூன்று பலிகளைச் செய்து விட்டு மீண்டுவிடுகிறான்.

சுடலைமாடனின் பல செயல்களை மக்களால் தாங்க முடியவில்லை. அவனை யாராலும் அடக்கவும் முடியவில்லை. இறுதியில் நாகலாபுரத்துக் கோடங்கி என்ற மந்திரவாதி சுடலைமாடனின் அனுமதியின் பேரில் அவனை அடக்கி விடுகிறான். சுடலை மாடனுக்கு ஊர் ஊராக விழாக்கள் நடத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. அதன்படி இன்று வரைத் தென் மாவட்டங்களில் மாடனுக்குக் கொடை விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குலசேகரத்தில் கோயில் கொண்டுள்ள சுடலைமாடனைப் பற்றி இந்தக் கும்மிப் பாடல் பாராட்டிக் கூறுகிறது.

குலசேகரப்பட்டினம்

தென்பாண்டிய நாட்டிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செந்தூருக்கு சுமார் எட்டு கல் தொலைவு தெற்கே குலசேகரப்பட்டினம் உள்ளது இதனைக் குலசை என்று சுருக்கமாகக் கூறுவர். மாடன் கும்மி இதனைத் 'தென் குலசை' (பா. 1) என்றும் 'குலசை வளாகம்' (பா. 16) என்றும் குறிப்பிடுகிறது. இவ்வூரில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் வீரகாளியம்மன், பத்திரகாளியம்மன், முப்பிடாரியம்மன், முத்தாரம்மன், சுந்தரா ஜ்ஜியா அம்மன், அங்காளம்மன், உச்சி மாகாளியம்மன் ஆகிய எட்டு அம்மன் கோயில்கள் சிறப்புடையன. இது தவிர ஒரு புளிய மரத்தில் 'பப்பரபுளி அம்மன்' என்ற அம்மனுக்கு வணக்கம் நடைபெறுகிறது. இவள் ஒரு இசக்கி என்றும் அவளுடைய ஆற்றலினால் அந்தப் புளிய மரம் கி.பி. 1272 முதல் அங்கு நிற்பதாகவும்

மக்கள் நம்புகின்றனர். (அவ்வூர்ச் செய்திகளைக் கேட்டு அறிந்தது) ஊரின் தெற்குப் பகுதியில் மகாதேவி கோவில் உள்ளது.

குலசேகரப்பட்டினத்தின் வடகிழக்குத் திசையில் ஒத்தப்பனை மாடன் கோயில் என்ற ஒன்று உள்ளது. மேற்குப்பகுதியில் இன்னொரு சுடலை மாடன் கோயிலும் காணப்படுகின்றது. இவற்றுள் இந்தக் கும்மிப்பாடல் குறிப்பிடும் மாடன் கோயில் எது வென்று உறுதியாகக் கூற முடியவில்லை.

மேலும் இந்த ஊரில் அறம் வளர்த்த அம்மன் கோயில் உள்ளது. இதன் மூலக் கோயில் திருவையாற்றிலுள்ள ஐயாறப்பன் ஆலயம் என்று கூறப்படுகின்றது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இந்தக் கோயில் குலசேகரப்பட்டினத்தில் ஏற்படுத்தப் பெற்றதாக வரலாற்றுக் குறிப்பு காணப்படுகிறது.

'குலசை உலா' என்று நூல் இந்த ஊரில் எழுந்தருளியுள்ள கச்சி கொண்ட பண்டீசுவரர் மேல் பாடப்பெற்றுள்ளது. கி,பி 1268 முதல் 1310 வரைப் பாண்டிய நாட்டை ஆண்ட மாறவர்மன் குலசேகர பாண்டியனே இந்த ஊரையும் கச்சி கொண்ட பாண்டீசுவரன் கோயிலையும் அமைத்துள்ளான் என்று கருதப் படுகிறது.[1] இந்த அம்பிகையின் பெயர் அறம் வளர்த்த நாயகி. காஞ்சீபுரம் காமாட்சியம்மனின் பெயர்களில் இதுவும் ஒன்று. திருவையாறு ஐயாறப்பனின் நாயகியின் பெயரும் இதுவே.

குலசேகரப்பட்டினம் இருக்கும் பகுதியை வீரை வள நாடு என்று கூறுவர். இது பாண்டிய நாட்டைச் சேர்ந்தது பாண்டிய மன்னன் வேண்டியதற்கு இணங்க இறைவன் இந்த இடத்தில் வந்து அமர்ந்ததாகக் குலசை உலா கூறுகிறது.

'தேராரும் வீதித் திருக்குலசை மாநகரில்
பாராரும் கீர்த்தியொரு பாண்டியன்முன்—ஆராத
ஆசையோ டுந்தவஞ்செய் தன்பாய் அவன்வேண்ட
மாசில்வடி வாயுதித்து வாழ்ந்திருப் போன்'[2]

இந்த உலாவில் 'தேராரும் வீதித் திருக்குலசை மாநகரில்' என்று குறிப்பிட்டிருப்பது போன்று மாடன் கும்மியிலும் ஒரு குறிப்பு வருகிறது.

---

1. குலசை உலா, பதி. டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, 1972 (பதிப்புரை)
2. குலசை உலா, கண்ணி 23—24

'தேர்வீதி மேலத் தெருவினிலே பார்வைத்
தென்றிசை யாகநின் றேவளரும்
ஊரினில் கோலன்............' (பா. 5)

என்று சுடலைமாடனின் நிலையைக் கூறுகிறார். தேரோடும் வீதி இரண்டு நூற்களிலும் மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இன்றும் குலசையிலுள்ள வீதிகள் மிகச் சிறப்பாகவே காணப் படுகின்றன. சுடலை மாடன் மேலத்தெருவில் தென்றிசைப் பார்வையாக நிற்பதைக் கும்மிப்பாடல் வாயிலாக அறியலாம். ஆகையினால் இந்தப் பாடல் பெற்ற சுடலை மாடன் இன்று ஊரின் மேற்குப் புறம் சிறப்பாக அமைந்திருக்கும் கோயிலில் உள்ள தெய்வமாகத்தான் இருக்க வேண்டும்.

நூலாசிரியர்

'மாடன் கும்மி, ஆசிரியர் யார் என்று எந்த இடத்திலும் சரி யாகக் குறிப்பிடவில்லை. ஒரு பாடலில்,

'தாலம்புகழ் வீர கேரள மால்கவி
ராச குருசாமி வாழ்ந்திடவும்
சீலன் தயாநிதி மாடனைத் தோத்திரம்
செய்துமுன் கும்மி யடியுங்கடி'[3]

என்று வரும் பகுதி சிந்தனைக்கு உரியதாக உள்ளது. கும்மிப் பாடல்கள் போன்ற சிற்றிலக்கியங்கிகளைப் பாடும் புலவர்கள் தங்கள் பெயர்களை நூலுக்குள் ஏதாவது ஒரு வழியில் புகுத்தி விடுவதைப் பெரு வழக்காகக் காண முடிகிறது. மாடன் கும்மியில் வேறு சிலருடைய பெயர்கள் வந்தாலும் இந்தப் பெயரின் இணைப்பு கருதுவதற்கு உரியதாகவே அமைந்துள்ளது. வீர கேரளம் புதூரைச் சேர்ந்த கவிராச குருசாமி என்பார் இந்தக் கும்மிப் பாடலை இயற்றிய ஆசிரியராக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

கும்மிப் பாடற்பொருள்

வளம் நிறைந்த தென் பாண்டிய நாட்டிலுள்ள குலசேகரப் பட்டினத்தில் சிறப்பாக விளங்கும் மாடனைப் புகழ்ந்து கும்மிப் பாடல் பாடுவதற்கு ஐங்கரமுடைய பிள்ளையார் அருள் பாலிக்க வேண்டுமென்று ஆசிரியர் காப்பு பாடி நூலைத் தொடங்குகிறார்.

3. மாடன் கும்மி, பாடல். 15

மாடனின் விளக்கம்

மாடன் முழுமதி போன்ற அழகான முகத்தை உடையவன். கையில் பருத்த தாடியை வைத்திருப்பான். புனுகு சவ்வாது போன்ற மணப்பொருட்களை உடலில் தடவிய வாசனையுடையவன். அவன் அனைவரையும் காத்தருளும் ஆற்றலுடையவன். நெற்றியில் கஸ்தூரிப் பொட்டு அணிந்துள்ளான். விழிகளைச் சிமிட்டுவது போன்ற தோற்றமுடையவன். அவனுடைய சிவந்த கையில் வாளும், அரையில் நாணும், காலில் சிலம்பும் அணிந்து காணப் படுகிறான்.

சிவந்த வாய்க்கு மேல் முறுக்கிய மீசை உள்ளது. கழுத்தில் முத்தாரமும் அரையில் சல்லடமும் அணிந்து மிக அழகாகத் தோன்று கிறான். வரம் கொடுக்கும் அருளாற்றலும் நவகிரகங்களை எடுக்கும் பேராற்றலும் உடையவனாக மாடன் விளங்குகிறான். தேரோடும் மேலத்தெருவில் தென்றிசைப் பார்வையுடன் அவன் வீற்றிருக் கிறான். மாடன் தமிழுக்கு உதவிய சீலன்' என்று ஆசிரியரால் சிறப்பாகக் கூறப்படுகிறான்.

மாடன் பாருக்குள் கண்கண்ட தெய்வமாகக் காணப்படுகிறான்' அவன் யாருக்கும் அடங்காத வீரன். குருதியைக் குடிப்பவன். அவனை வேண்டுவோரின் துன்பத்தைத் தடுத்து இன்பத்தைக் கொடுக்கும் அன்பன். பேய் பிசாசுகளை விரட்டி அடிக்கும் ஆற்றலும் தஞ்சமென்று அவனை அடைவோரைக் காப்பாற்றும் அருளும் இணையாக உடையவன். என்றும் நன்மையே நாடிச் செய்பவன். அவன் அனைவருக்கும் அன்னமும் அமுதமும் கொடுத்துக் காப்பவன். ஆபத்துக்களைத் தீர்ப்பவன்.

சின்னத்தம்பி என்பவர் மாடனை அன்புடன் நாடிப் பணிவுடன் வணங்கும் பெரியார். மாடனுடைய அடிகளைப் பற்றிப் பிடிப்பவர். அவனை வலம் வந்து வணங்க வேண்டும் என்று கும்மி ஆசிரியர் அனைவரையும் வேண்டுகிறார். மாடனின் நல்லருளைச் சின்னத் தம்பி மிகுதியாகப் பெற்றுள்ளார்.

பொங்கல், மது, மாமிசம் அனைத்தும் படையலாக மாடன் ஏற்றுக்கொள்வான். கடாப் பலியும் விரும்பி வேண்டுவான். சுடலை முத்து என்பார் மாடனுக்கு முன்பாகச் சந்திரான்ன தானம் கொடுப்பவர். அவரை அனைவரும் பாராட்டுவர். வீரகேரளமால் கவிராச குருசாமியும் மாடனை வாழ்த்திப் பாடுகிறார். அனைத் தையும் புகழ்ந்து பாடிக் கும்மிப் பெண்கள் ஆடி மகிழவேண்டும் என்று ஆசிரியர் விரும்புகிறார்.

அன்னக்கொடையால் சிறந்துள்ள சுடலைமாடனை ஆசிரியர் சிறப்பித்துப் பாடுகிறார். அனைவரும் நலமுடன் வாழ மாடன் அருள் செய்ய வேண்டும். அதற்காக அவனைப் போற்றிப் புகழ்ந்து கும்மிப் பெண்கள் பாட வேண்டும். நன்றாக ஆட வேண்டும். அன்பும் அருளும் மிக்க மாடன் அனைவரையும் காத்து உதவ வேண்டும் என்ற வேண்டுதலுடன் ஆசிரியர் வாழி பாடி, கும்மிப் பாடலை முடிக்கிறார்.

சிறப்புச் செய்திகள்

மாடன் பெருமை

பழம் பெருமையும் பெருமன்னர் தொடர்பும் உயர்தெய்வ வழி பாடும் மிக்க குலசேகரப்பட்டினத்தில் நாட்டுப்புறத் தெய்வமாகக் கருதப்படும் மாடனுக்கு ஒரு கும்மிப்பாடல் இயற்றப்பட்டிருப்பது அந்தத் தெய்வத்தின் சிறப்பை உயர்த்துவதாக அமைகிறது. பலர் கொடுமையாகக் கருதும் தெய்வத்துக்கு அருள் தன்மையை நிரம்பக் கொடுத்திருப்பது சிந்தனைக்கு உரியது. மது, மாமிசம், குருதி ஆகியவற்றை அருந்தினாலும் அன்பும் அருளும் மிக்கவன் மாடன் என்று சிறப்பித்துப் ஆசிரியர் பாடியுள்ளார். முன்பு அச்சத்துடன் வணங்கப் பெற்ற தெய்வத்தை அருள் ஆர்வத்துடன் மக்கள் வணங்கத் தலைப்பட்டதையே இக்கும்மிப்பாடல் காட்டுகிறது. மனித மனத்திலுள்ள சில குறிப்பிட்ட கருத்துக்கள் மாறிச் சிந்தயையினல் தெளிவு ஏற்படும்போது தெய்வ வணக்கத்தின் நாக்கமும் போக்கும் மாறுவதைக் காண முடிகிறது.

மனிதர் பெருமை

இந்தக் கும்மிப் பாடலில் சின்னத் தம்பி, சுடலை முத்து, கவிராச குருசாமி ஆகிய மூவருடைய பெயர்கள் சிறப்பாகக் குறிப் பிடப் பெற்றுள்ளன. இந்த மாடன் கோயில் சின்னத் தம்பி என்பவரால் முதலில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். அதை விளக்கவே,

‘ஆதிசின்னத் தம்பி யன்புட னேவந்து
அடிபணிந்து கொண்டாடும்
சோதி சிங்காரன் ....’ (பா. 10)

என்று மாடன் கும்மி கூறுவதாகக் கருதலாம். சின்னத்தம்பிக்கு அளவற்ற திரவியமும், அட்டாவதானம் செய்யும் திறமையும் மாடன் அருளால் கிடைத்தன என்றும் கூறப்படுகிறது.[4]

4. மேற்படி, பாடல் 12

சுடலை முத்து மகிபன் என்று கூறப்பட்டிருப்பதினால் (பா. 14) அவர் அந்த இடத்தின் சிற்றரசனாக இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். அவர் மாடன் கோயிலில் அன்னதானம் செய்வதைக் கும்மிப்பாடல் சிறப்பித்துக் கூறுகிறது. கவிராச குருசாமி இக் கும்மிப்பாடலுக்கு ஆசிரியராக இருக்கலாம் என்பது முன்பே விளக்கப் பெற்றுள்ளது.

மாடன் கும்மியின் பாடலமைப்பு கும்மியின் பொதுவான அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது. இறுதியிலுள்ள 'வாழிப்பாடு' மாத்திரம் கும்மிப்பாடல் போன்று ஏழு சீர்களை யுடைய ஈரடித் தாழிசையாகக் காணப்படுகிறது.

ஒன்று முதல் பதினொரு பாடல்கள் ஒரு அமைப்பிலும் பன்னிரண்டு முதல் இருபத்தொன்று வரையுள்ள பாடல்கள் இன்னொரு அமைப்பிலும் காணப்படுகின்றன. இரண்டு அமைப்புக் களும் இசைப் பாடலுக்கு நன்றாகப் பொருந்தும் தன்மையுடன் எழுதப்பெற்றுள்ளன. இவை சிந்து வகைப் பாடல்களுடன் பொருந்துவதாகவும் தோன்றவில்லை. இரு சீரிரட்டைப் பாடல் களான சேவற்பாட்டு புறாப்பாட்டு போன்றும் அமையவில்லை. முடுகிசையடிகள் இருப்பினும் ஒயிற்கும்மியோடு அடையாளங் காணத்தக்க அமைப்பில் இல்லை.

மாடன் கும்மியிலுள்ள முதற் பாடலை எடுத்து அதன் அமைப்பைக் காண முயலலாம்.

'திருமரு வுந்தென் குலசையில் வாழ்செய
சிங்கார மாடன் தயாநிதிமேல்
அரும்பொரு ளாகக் கும்மித் தமிழிழைப்
அற்புத மாகப் பாடுதற்கே
அதிக மாகவரங்கள் தரும்
அரனைத் தினமரு வுத்தமி
அருளப் பனைங்கர னைத்துதித்
தாடிக் கும்மி யடிப்பமடி—தமிழ்
பாடிக் கும்மி யடிப்பமடி.'

இப்பாடலில் முதல் இரண்டடியும் ஏழு சீர்களில் வந்துள்ள தாழிசையாக உள்ளது. ஒவ்வொரு அடியிலும் இறுதிச் சீர் காய்ச் சீராக வந்துள்ளது. அவ்வமைப்பு இயற்கும்மி பாடலமைப்புக்கு ஒத்துள்ளது இந்தத் தாழிசையைத் தொடர்ந்து மூன்றடி முடுகு

வருகிறது. இறுதியில் இரண்டடி மடக்காக உள்ளது. முழுநிலையில் இது இசைப்பாடலாக அமைகிறது. இதனை எழுசீர்த் தாழிசை முடுகிசைப் பாடல் என்று அழைக்கலாம்.

இன்னொரு அமைப்புடைய பாடலைப் பற்றிச் சிந்திக்கலாம். அது முன்னதிலிருந்து சிறிதளவு மாறுபட்டு முடுகு இன்றி வருவதைப் பார்க்கலாம்.

'சுந்தரனா மதியோகன் சுடலைமுத்து மகீபன்
சந்தியில் மாடனை முன்வைத்துச்
சந்தி ரான்னதா னங்கொடுத் தாரெனன்றே
சங்கீதக் கும்மி யடியுங்கடி—தோழி
இங்கிதக் கும்மி யடியுங்கடி' (பா. 14)

இப்பாடலில் முதலடி ஏழு சீர்களாகவும் அவற்றுள் இறுதிச் சீர் காய்ச்சீராகவும் உள்ளது. இரண்டாமடி நான்கு சீர்களாக மட்டும் வந்துள்ளது. இறுதி இரண்டு அடிகள் அடிமடக்காக வந்து இசையினிமையை நன்கு பெருக்கும் தன்மையுடன காணப்படுகிறது முன்னர் விளக்கப் பெற்றுள்ள இசைப்பாடலுக்கும் இதற்கும் இரு வேறுபாடுகள்ளுள்ளன. தாழிசையின் இரண்டாம் அடியில் மூன்று சீர்கள் குறைந்துள்ளன. முன்னதில் முடுகிசையாக வந்துள்ள மூன்று அடிகளும் இடையில் வரவில்லை. இத்தகைய அமைப்புடைய இசைப் பாடல்களை ஓரடி முச்சீர் குன்றிய தாழிசை மேல் மடக்கிசைப் பாடல் என்று கூறலாம்.

மாடன் கும்மியில் வந்துள்ள இருவகை இசைப்பாடல்களும் புதுமையாகவே உள்ளன. இப்பாடல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றியிருக்கலாம். இவை பின்னால் எழுந்த பலவகையான இசைப்பாடல்களுக்கு வழி வகுத்திருக்கும் என்று கருதலாம். மாடன் கும்மி இருபத்திரண்டு பாடல்களே உடைய சிறிய கும்மிப் பாடலாக இருந்தாலும் பாடலமைப்பிலும் இசை இனிமையிலும் சிறந்த கும்மியாகவே காணப்படுகிறது.

மாடன் கும்மி

1. திருமரு வுந்தென் குலசையில் வாழ்செய
சிங்கார மாடன் தயாநிதிமேல்
அரும் பொருளாகக் கும்மித் தமிழினைப்
அற்புத மாகப் பாடுதற்கே
அதிகம தாக வரங்கள் தரும்
அரனைத்தின மருவுத்தமி
அருளப்பனைங் கரனைத்துதித்(து)
ஆடிக் கும்மி யடிப்பமடி—தமிழ்
பாடிக் கும்மி யடிப்பமடி

2. பூரணச் சந்திர முகமிலங்கும்—கையில்
பொற்பு நேரந்தடி யுந்துலங்கும்
காரண போசன் புழுகுசவ்
வாதணி வாசன்—அனைவோரைக்

---

1. திருமருவும்—செல்வச் செழிப்பு மிக்க
குலசை—குலசேகரப் பட்டினம் (விளக்கவுரை காண்க)
சிங்கார மாடன்—சிறப்புமிக்க மாடனாகிய
தாயநிதி—தயவு நிறைந்த
அரன்—சிவன்
மருவும்—கூடும்; இணையும்
ஐங்கரன்—கணபதி
2. பொற்பு—அழகு; பொலிவு
தடி—மாடனின் ஆயுதங்களில் ஒன்றான குறுந்தடி
துலங்கும்—விளங்கும்

காக்கும்விலாசன்—அவனை
மனங்கனிந்து மலரணிந்து
மிகத்தணிந்து பதம்பணிந்து—தினம்
கலந்து கும்மி யடிப்பமடி—மிக
நயந்து கும்மி யடிப்பமடி

3. சுங்குருமால் கஸ்தூரிப் பொட்டும்
துலங்கு மாடன் விழிச்சிமிட்டும்
செங்கையில் வாளும் திகழரை நாளும்
சிவந்தபொற்றாளும் அதிர்சிலம்பும்
எந்நாளும் விளங்கிய—சிங்கன்
வெகுதுங்கன் கன்கனம்
தங்கும் அருள்பொங்கும் மணியனைச்
சேர்ந்து கும்மி யடிப்பமடி—மனந்
தேர்ந்துக் கும்மி யடிப்பமடி

4. செங்கனி வாய்மேல் வீசையுடன்—திகழ்
கழுத்தில் முத்தாரமுஞ் சல்லடமும்
எங்கும்பிர தாபன் மடலி லெழுதியரூபன்
மங்கைய ருக்கிசைந்த சல்லாபன்

போசன்—சிறப்புடையவன் (விளக்கவுரை காண்க)
நயந்து—பணிந்து

3. சிங்கன்—சிங்கம் போன்ற வீரன்
துங்கன்—மேன்மையுடையவன்
தேர்ந்து—அறிந்து
கன்கனம்—மிகப்பெருமை

4. செங்கனி—வாய்சிவந்தபழம் போன்ற வாய்
வீசை—மீசை (சொல் வழக்கு)
சல்லடம்—குறுங்கால் சட்டை
பிரதாபன்—புகழுடையவன்
சல்லாபன்—உரையாடுபவன்

நவக்கிர கங்களை எடுக்கும்
கலையுடுக்கும் வினை முடுக்கும்
வரங் கொடுக்கும் மாடன்
இடத்தில் கும்மி யடிப்பமடி—அன்பன்
இடத்தில் கும்மி யடிப்பமடி

5. தேர்வீதி மேலத் தெருவினி லேபார்வைத்
தென்றிசை யாகநின் றேவளரும்
ஊரினில் கோலன்—வனிதை
உமை மங்கைபாலன்—தமிழுக்
குதவிய சீலன்—இரவினில்
ஓடி விளையாடி—தமிழ்
பாடி மலர்சூடி—முனர்
உச்சமாய்க் கும்மி யடிப்பமடி—வெகு
பச்சமாய்க் கும்மி யடிப்பமடி.

6. பாருக்கும் கண்கண்ட தெய்வமா கநின்று
பாது காத்திடு கண்மணி யாம்
ஆரணி தீரன்—எவர்க்கும்
அடங்காத வீரன்—உதிரம்
அருந்துமுதாரன்—நமக்கு
அன்பன் வருதுன்பந் தவிர்த்து
இன்பந்தரு நம்பனிடம்
அன்பாய்க்கும்மி யடிப்பமடி—வெகு
பண்பாய்க் கும்மி யடிப்பமடி

நவகிரகம்—ஒன்பது கிரகம் (விளக்கவுரை காண்க)
கலை —ஆடை
வினை முடுக்கும் – செய்தொழிலை விரைவு படுத்தும்
5. வனிதை—பெண்
மங்கைபாலன்—மாடன், உமாதேவியின் மகன்
6. ஆரணிதீரன்—சுழல் காற்று போன்று வேகமாகச் செயல்படும் வீரன்; பார்வதியின் மகனான வீரன்
உதிரம்—குருதி (இரத்தம்)
உதாரன்—வீரன்; கொடையாளி
நம்பன்—கடவுள்

7. மிஞ்சிய துஷ்டப் பிசாசுகளையவன்
வீரத்துடன்வென் றடக்கியாளும்
தஞ்சமென் றோரை ரக்ஷிக்கும்
தடைகொடுப் போரைப் பக்ஷிக்குங்
தடுக்கிய தேர்நடத்துஞ் சாமன்
வருசோமன் திகழ்காமன்
வாளா லூமன் முனர்த்
தாழ்ந்து கும்மி யடிப்பமடி—ஒன்றாய்ச்
சார்ந்து கும்மி யடிப்பமடி.

8. தேவியர் வாழ்வறம்வளர்த் தம்மை பொற்கோவில்
சேர்ந்திடும் உத்தர வாசலிலே
மேவிய வாய்க்கல் மதகணையைக் காதது
ரட்சிக்கும் நீதிகள் கண்ணோட்டமாய்
பார்க்கும் தினம் எவர்க்கும்—உப
காரி பயிர்வேலி
கனபாரி திட சாலி—முனம்
கோஷ்டியாய்க் கும்மியடிப்பமடி—நாமள்
கோஷ்டியாய் கும்மி யடிப்பமடி

---

7. மிஞ்சிய—மிகுதியாகியப் போன; கட்டுப்படாத
ரக்ஷிக்கும்—காத்தருளும்
பக்ஷிக்குங்—தண்டிக்கும்
சாமன்—அறிவுமிக்க வீரன்
சோமன்—சந்திரன் (பின்னுரை காண்க)
சார்ந்து—சேர்ந்தே; இணைந்து

8. உததிரம்—வடக்கு
மேவிய—சார்ந்த
மதகு—மடை
கோஷ்டியால்—ஒன்று சேர்ந்து ஒரு கூட்டமாய்

9. நன்னய மாடன் தயாநிதி யாம்அவன்
நாளு முறுதிநல் வாக்குடையான்
அன்னமளிப்பான் நமக்கிப்போ
அமுதங் கொடுப்பான்—மனிதருக்கே
ஆபத்தைத் தீர்ப்பான்—அவனைப்
பகல் உந்தி மனம் வந்தி—யிரு
சந்தி பதம் முந்தி—வைத்து
அன்புடன் கும்மி யடிப்பமடி—உயர்ந்து
இன்புடன் கும்மி யடிப்பமடி

10. ஆதிசின்னத் தம்பி யன்புட னேவுவந்து
அடி பணிந்து கொண்டாடும்
சோதிசிங் காரன்—கணங்கள்
துதிக்கும் ஒய்யாரன்—மணிகள்
தொனிக்குங் கம்பீரன்—அவனை
வலஞ் சுத்தி மனம் பத்தி யகம்சுத்தி
கரம்பொத்தி—வெகு
சோபிதக் கும்மி யடிப்பமடி—நிறைந்
தேவிதக் கும்மி யடிப்பமடி

---

9. நன்னய மாடன்—நல்லதையே செய்யும் மாடன்
தயாநிதி—கருணைமிக்கவன்
அன்னம்— சோறு
அமுதம்— அன்னம்; அமிழ்தம்
பகல் உந்தி - தினம் உயர்த்தி
வந்தி—வணங்கி; வருந்தி; ஆராதித்து

10. உவந்து—மகிழ்ந்து
சோதி—ஒளி
ஒய்யாரன்—அழகன்
தொனிக்கும்—ஒலிக்கும்
கம்பீரன்—வீரப்பொலிவுடையவன்
சோபிதம்—சிறப்பு; சௌந்தரியம்

11. மங்கள மாட னிடத்தினி லேவாழும்
மாடத்தி உத்தமி தன்னிடத்தில்
புங்க மாய்க்கூடி—அவனைப்
புகழ்ந்து கொண்டாடி—புயல்போல்
புனித மாய்ச்சாடி—தினந்தினம்
பேரா மனம் கோரா மலர்கொடு
சீராச் சிரந்தாழ்த்தி—வினை
போகவே கும்மி யடிப்பமடி—நல
மாகவே கும்மி யடிப்பமடி

12. அள்ளித் திரவியம் தான்கொடுக்கும் மாடன்
அஷ்டாவ தானிக்கு முன்னடியாய்
துள்ளிப் பிடித்தாடும் சின்னத்தம்பி முன்னே
துதித்துக் கும்மி யடிப்பமடி—தினங்
குதித்துக் கும்மி யடிப்பமடி

13. பொங்கலைத் போல் மாமிசமும் மிக
புனிதமுள் ளகிடாய்ப் பெலியுமடி
இங்கித மாகவே சித்தரடி யார்பரவ
இன்பமுடன் கும்மி யடிப்பமடி—சின்னத்
தம்பிமுன் கும்மி யடிப்பமடி

---

11. மாடத்தி—மாடனின் துணைவி
புங்கம்—சிறப்பு; உயர்வு
புயல்—மேகம்; மழை; புயற்காற்று

12. திரவியம்—செல்வம்
அஷ்டவதானி—எட்டு அவதானம் செய்பவர்
(விளக்கவுரை காண்க)

13. மாமிசம்—புலால்; இறைச்சி
இங்கிதம்—இன்பம்
பரவ—வணங்க

14. சுந்தரனா மதியோகன் சுடலைமுத்து மகீபன்
சந்தியில் மாடனை முன்வைத்துச்
சந்தி ரான்னதா னங்கொடுத் தானென்றே
சங்கீதக் கும்மி யடியுங்கடி--தோழி
இங்கிதக் கும்மி யடியுங்கடி.

15. தாலம்புகழ் வீர கேரள மால்கவி
ராசகுருசாமி வாழ்த்திடவும்
சீலன் தயாநிதி மாடனைத் தோத்திரம்
செய்துமுன் கும்மி யடியுங்கடி—வளஞ்
செய்துமுன் கும்மி யடியுங்கடி

16. ஓங்கிய நல்ல குலசை வளாகத்தின்
ஊரில் உள்ளோர்கள் தாம்வாழ
நாங்களும் நீங்களும் வாழ்ந்திட வேகும்மி
நன்றா யடியுங்கள் தோழிப்பெண்ணே
ஒன்றா யடியுங்கள் தோழிப்பெண்ணே.

17. சொன்னப் பணிகள் அணிகுழலில்—கனிந்
தொல்விப்பரியு மடிமயில்கள்
அன்னக் கொடையாற் புரிந்திடு மாடன்முன்
கவிழ்ந் தடிங்கடி தோழிப்பெண்ணே—கரங்
குவிந் தடிங்கடி தோழிப்பெண்ணே.

---

14. சுந்தரன்—அழகன்
மகீபன்—அரசன்
சந்திரான்னம்—நிலாச்சோறு
சந்தியில்—தெருச் சந்தியில்

15. தாலம்—உலகம்

16. குலசை—குலசேகரப்பட்டிணம்

17. அணிகுழல்—அணிகலன்களுடைய கூந்தல்
ஒல்விப்பரியும்—ஒடுங்கிப் பணியும்
அன்னக்கொடை—சோற்றுக்கொடை (விளக்கவுரை காண்க)

18. முன்விழுங் கூந்தலைக் தானொதுக்கிச்—சீலை
முந்தியெடுத்துநன் றாய்ச் சொருகி
கன்னல் மொழிமாடன் தானடத்தக் கும்மி
கசிந் தடியுங்கோ தோழிப்பெண்ணே—மேல்
அசைந் தடியுங்கோ தோழிப்பெண்ணே.

19 பெண்ணர சேவேர்வை தான்துடைத்துச்—சரம்
பின்னிக் கிடந்ததைத் தானெடுத்து
மின்னிடைகள் துடிக்கவே மாடனை
வேண்டி யடியுங்கோ தோழிப்பெண்கள்—மெள்ளத்
தாண்டிபடியுங்கோ தோழிப் பெண்காள்

20. சோபனக் கும்மி யடியுங்கடி—தோழி
சூழ்ந்து கைகொடுத் தேகூடி
தீபன் தயாநிதி மாடனுக் குத்தினம்
செயசெய சோபனம் சோபனமே
மங்கள சோபனம் சோபனமே

21. சோபன மேமாடன் சோபனமே—எங்கள்
மாடத்திக் குத்தினம் சோபனமே
சோபனமே நமக் கெப்பொழுதும்
வளஞ் செய் சோபனம் சோபனமே
மங்கள சோபனம் சோபனமே

22. தேசங்கள் வாழி மழைபயிர் வாழி
செங்கோல் மன்னவன் தான்வாழி
வாசம் மிகுந்தசெங் கோட்டையில் வாழ்ந்திடும்
மாடனும் வாழி வாழியவே.

---

18. கன்னல்—கரும்பு
கசிந்து—உருகி
19. சரம்—மலர்ச்சரம்; பொற்சரம்
மின்னிடை—மின்னல்—போன்ற இடை
20. சோபனம்—வாழ்த்து
தீபன்—ஒளி மிக்கவன்

விளக்கம்

அட்டமத்துச் சனி (ஆவுடையார் கும்மி, பா. 6)

சோதிடத்தில் வரும் ஒன்பது கிரகங்களின் மிகக் கடுமை யானதாகவும் கொடுமையானதாகவும் சனியைக் கருதுவர். அது அட்டமத் தானமாகிய எட்டாமிடத்தில் இருப்பது மிகவும் கேட்டைச் செய்வதாகும் என்பது பலருடைய கருத்து மழையில்லாமல் நாட்டில் பெரும் பஞ்சம் நிலவுகிறது. மக்கள் படும் அவதிக்கு அளவே இல்லை. அதை விளக்கும் கும்மிப் பாடலாசிரியர் அந்த அந்த நாட்டுக்கு 'அட்டமத்துச் சனி, பிடித்து விட்டதாகக் கூறுகிறார். சனிக்கிரகத்தைப் பற்றிய இக்கருத்து சிறப்பாகச் சிந்திக்க வேண்டியதாகும். ஏழரை நாட்டுச் சனிபிடிப்பதையும் இவ்வாறு கடுமையாகக் குறிப் பிடுவது உண்டு. சந்திராலக்னத்திலும் அதற்குமுன் பின் வீடுகளிலும் சனி இருக்கும் ஆண்டுகளாகிய ஏழரை ஆண்டு களையும் இவ்வாறு கூறுவர். சனியினது கொடுமையானது அது இருக்கும் இடத்தையும் பார்க்குந் தன்மையையும் பொறுத்து அமைகிறது. சில சமயம் நல்ல பலன்களையும் கொடுக்கும். ஆகையினால் 'சனியைவிடக்கெடுப்பதும் இல்லை. சனியைவிட கெடுப்பதும் இல்லை என்ற முதுமொழி வழங்கு கிறது.

அட்டதிசைகள் (மருது பாண்டியன் கும்மி, பா. 63)

கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, ஆகியவை எண்டிசைகள். இந்த எட்டுத் திசைகளுக்கும் உரிய தெய்வங்களான இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போருடைய பெயர்களையும் அந்தந்த திசைகள் பெறு வதுண்டு.

அப்பண்ணன் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 28)

இராமநாதபுரம் மாவட்டத்தில், உள்ள நாட்டுப்புறத்

தெய்வங்களில் அப்பண்ண சாமி ஒன்று. சிங்கை அழகிய வம்மன் உலாவில் உடன் வரும் தெய்வங்களில் ஒன்றாக உள்ளது.

அப்புநகர் (*சீனய்யங்கார் கும்மி*, பா. 65)

அப்புநகர் பழனித் தாலுகாவிலுள்ள அப்பனூத்து என்ற இடத்தைக் குறிப்பதாகும். சீனய்யங்காரின் கொடுமைகளைத் திண்டுக்கல் சென்று கும்பினி அதிகாரியிடம் சொல்ல வேண்டும் என்று விரும்பியவர்களின் ஒருவாரன வெள்ளை யண்ண தீரன் அப்பு நகரைச் சேர்ந்தவர் 'அப்பு' என்பது தண்ணீர். இவ்வூர் அப்பு நகர் என்று முன்பு அழைக்கப் பட்டிருப்பதற்கும் இப்பொழுது அப்பனூற்று என்று சொல்வ தற்கும் காரணமாக அவ்விடத்தில் நீரூற்று இருந்திருக்க வேண்டும்.

அப்பிப்பாளையம் (*சீனய்யங்கார் கும்மி*, பா. 66)

அப்பிப் பாளையம் பழனித் தாலுகாவைச் சேர்ந்த ஒரூர். இப்பொழுது அது அப்பிச்சிப் பாளையம் என்று அழைக்கப் படுகிறது. சீனய்யங்காருக்கு எதிராகத் திண்டுக்கல் கும்பினி அதிகாரியிடம் சென்றவர்களில் ஒருவரான வீரண கவுண்டர் அந்த ஊரைச் சேர்ந்தவர். பாளையம் என்று அழைக்கப் படுவதினால் அங்கு ஒரு காலத்தில் படையிருப்பு (Garrison) இருந்திருக்கலாம்.

அயன்சிர சொன்றைத் திருகல் (*ஆவுடையார் கும்மி*, பா. 18)

அயனுக்கு (பிரம்மன்) ஐந்து முகங்கள் இருந்தன. சிவ பெருமானுக்கும் அதே ஐந்து முகங்கள் தாம் உள்ளன. அதன் பயனாக அயனுக்குச் சிறிது செருக்கு ஏற்பட்டது. அதனை அறிந்த சிவபெருமான் அயனின் ஒரு தலையைக் கிள்ளி அவனை நான் முகனாக்கினார். இதனால் சிவனுக்குப் 'பிரம்ம ஹத்தி தோஷம் ஏற்பட்டதாகவும் அது தீரும் பொருட்டு அந்தக் கபால ஓட்டில் பிச்சை ஏற்று உண்டார் என்றும் கதை கூறும்.

பிச்சை ஏற்றதை நையாண்டி செய்வதாகக் காளமேகப் புல வரின் 'அப்பன் இரந்துண்ணி' என்ற முருகன் பாடல் அமையும், மனிதன் அழியக் கூடியவன் என்பதைச் சிவனின் கையி லிருக்கும் தலையோடு காட்டும். அதில் அவர் பிச்சையேற்று உண்ணுவதைக் கொண்டு அழியும் மனிதனின் வாழ்விலுள்ள

அறச்செயல்கள் ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற தத்துவக் குறிப்பை உணர்ந்து அறியலாம்.

அய்யம் புள்ளி (*சீனய்யங்கார் கும்மி, பா. 21*)

பழனித்தாலுகாவின் ஒரு பகுதியாக அய்யம் புள்ளி அமைந்துள்ளது. மதுரையிலிருந்து பழனியில் பதவியேற்க சீனய்யங்கார் வரும்போது அய்யம் புள்ளி வழிவருவதாகக் கும்மிப்பாடல் கூறுகிறது.

அரங்கவிமானம் (சௌ. நா. பெ. கும்மி, பா. 2)

திருக்கோட்டியூர் ஆலயத்தில் இருக்கும் விமானத்தை அரங்க விமானம் என்று அழைப்பர். ரங்கம் என்பது அழகு. அந்தப் பொருளில் நோக்கினால் இது மிக அழகான விமானம் என்று பொருள்படும்.

அருணாசலராசன் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 56)

பஞ்ச கல்யாணிக் குதிரையில் பவனி வரும் ஆவுடையப்பனின் தந்தையார் அருணாசல ராசன். அவரைப் பூபதி என்றும் கூறுவர் குமாரசாமியின் பாட்டனார் என்ற முறையுடையவர் அருணாசலபூபதி.

அலங்கைநகர் (*சீனய்யங்கார் கும்மி, பா. 150*)

அலங்கை நகர் தாராபுரம் தாலுகாவில் உள்ளது. இது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த இடமாகும். இதனை இன்று அலங்கியம் என்று கூறுவர். சீனய்யங்காருடைய ஆட்சி முறையை எதிர்த்துக் கம்பெனி மேலதிகாரியிடம் முறையிட்டும் பயன் இல்லாமல் போகவே மக்கள் பழனித் தாலுக்காவை விட்டுத் தாராபுரம் தாலுகாவில் சென்று குடியேற முடிவு செய்தனர். அதற்காக அனைவரும் அலங்கை நகரில் கூடுகின்றனர்.

அழகிய சிற்றம்பலக்கவி (ஆவுடையார் கும்மி, பா. 34)

ஆவுடையார் கும்மியின் ஆசிரியரான குமாரசாமிக் கவிராயரின் தந்தையாக அழகிய சிற்றம்பலக் கவிராயர் விளங்குகிறார். இவர் குழந்தைக் கவிராயரின் மகன். வெங்களேந்திரன் பேரில் குறவஞ்சி பாடி மிதிலைப் பட்டியைத் தானசாசனமாக பெற்ற மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் பரம்பரையைச் சேர்ந்தவர். இந்தச் சிற்றம்பலக் கவிராயருக்குப் பின்னர்

வந்த மங்கைப் பாகக் கவிராயர், குழந்தைக் கவிராயர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், குழந்தைக் கவிராயர் ஆகிய நாலு தலை முறைகள் இந்தச் சிற்றம்பலக்கவிராயரின் முன்னோர்கள். இவர் சாசனம் பெற்றவரில் இருந்து ஆறாவது தலைமுறை. நூலாசிரியரான குமாரசாமிக் கவிராயர் ஏழாம் தலைமுறையைச் சேர்ந்தவர். (டாக்டர் உ.வே.சா. அவர்களின் குறிப்பு) மிதிலைப்பட்டி கவிஞர் பரம்பரை பல சிற்றிலக்கிய நூல்களை இயற்றிப் புகழ் பெற்றுள்ளது.

அன்னக் கொடை (மாடன் கும்மி, பா. 17)

சோற்றுக் கொடையினை அன்னக் கொடை என்று கூறும் வழக்கம் உண்டு. நெல்லை, குமரி மாவட்டங்களில் நடைபெறும் கோயில் விழாக்களைக் கொடை என்ற சொல்லால் பெரும்பாலும் அழைப்பர். படையல் பொருட்களை வந்திருந்தோர் அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுவதினால் இப்பெயரால் குறிப்பிட்டுச் சிறப்பித்திருக்கலாம். சில கோயில்களில் சோறு சமைத்துப் படையல் செய்து மக்களுக்கு வழங்கும் பழக்கம் உண்டு. ஆடு கோழி முதலியவற்றைப் பலியிட்டு அவற்றின் புலாலையும் சமைத்துச் சோற்றுடன் கொடுப்பதையும் காணலாம். இக்காலத்தில் உயிர்ப் பலியை நிறுத்திக் காய்கறிகளைச் சமைத்து வழங்குகிறார்கள். சோற்றைத் தானமாகக் கொடுக்கும் வழக்கத்தையே 'அன்னக் கொடை' என்று அழைக்கிறார்கள். சில இடங்களில் இதனை 'அயனக் கொடை' என்று கூறுவர்.

அஷ்டவதானி (மாடன் கும்மி, பா. 12)

ஒரே நேரத்தில் எட்டு காரியங்களில் கவனம் செலுத்துவதை அஷ்டாவதானம் என்று கூறுவர். இலாடச் சங்கிலி சேர்த்தல் ஒருவர் கேட்கும் வினாக்களுக்கு விடை கொடுத்தல், சொக்கட்டான் ஆடல், முதுகில் எறியும் பரல்களை எண்ணுதல், சதுரங்கம் ஆடல், புதிதாகக் கவிதை இயற்றிக் கூறல், கண்ட பத்திரிகை, கணிதம் கூறல், குதிரையடி கூறல் போன்றவற்றுள் எட்டு காரியங்களை ஒரே சமயம் செய்து காட்டுபவர் அஷ்டாவதானி ஆகிறார்.

ஆதிவாரம் (சீரணியம்மன் கும்மி, பா. 67)

வாரத்தில் முதல் நாளான ஞாயிறு என்பதை ஆதிவாரம் குறிக்கும். சந்திரமானம், சூரியமானம் என்ற இரு

விதமான காலக் கணக்கு உள்ளது. சந்திர மானம் சந்திரனைக் கொண்டு கணக்கிடப் பெறும். சூரிய மானம் ஞாயிறைக் கொண்டு கால்ங்களை அளவிட்டுக் காட்டும். அக்கணிதப் படி வாரத்தின் முதல் நாளாக ஞாயிற்றுக்கிழமை கருதப் படும். அதுவே ஆதிவாரம்.

ஆலம் அமுதுண்டார் (ஆவுடையார் கும்மி, பா. 7)

திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தனர் மந்தரமலை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பு நாணாகவும் பயன்படுத்தப்பட்டன. பாற்கடலில் அமுதம் திரள்வதற்கு முன்பு வாசுகி என்ற பாம்பு கொடிய ஆலகாலநஞ்சைக் கக்கி விட்டது. அதனைக் கண்டு அனைவரும் அஞ்சி ஓடினர். சிவபெருமானைச் சரணம் அடைந்தனர். அவர் அனைவரும் வாழும் பொருட்டு அந்தக் கொடிய நஞ்சினைத் தனக்கு அமுதம் எனக் கருதி உண்டுவிட்டார். அதனைக் கண்டு நடுங்கிய உமாதேவி அவருடைய கழுத்தை இறுக்கிப் பிடித்து நஞ்சைக் கீழிறங்காதவாறு தடுத்து விட்டார், அதனால் சிவபெருமானின் கழுத்துப் பகுதி கருமையானது. அது முதல் அவர் திருநீலகண்டரானார். இக்கதையின் தத்துவதைச் சிறப்பாக விளக்க விரும்பிய மணிவாசகப் பெருமான் தான் பாடிய 'நீத்தல் விண்ணப்பத்தில்,

'சிற்றுயிருக்கு இரங்கிக்
காய்சின ஆவமுண்டாய் அமுதுண்ணக் கடையவனே'

என்று மறைநிலையில் பெருமை படுத்துகிறார்.

ஆவுடையப்பன் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா, 52)

சிங்கையம்பதியைச் சேர்ந்த இரண்டு ஆவுடையப்பர் களைச் சிங்கை அழகிய அம்மன் கும்மி குறிப்பிடுகிறது. ஒருவர் அந்நாட்டை ஆளும் குமாரசாமியின் சிறிய தந்தை. இவர் பஞ்சகல்யாணிக் குதிரையில் வருபவர். இன்னொரு ஆவுடையப்பன் குமாரசாமியின் தம்பி இவர் அச்சுக் குதிரையில் வருபவர். இருவரும் குமாரசாமி உலா வரும் போது அவருக்கு இரு புறமும் வருவர்.

ஆவுடையார் (ஆவுடையார் கும்மி, பா.1)

மிதிலைப்பட்டியில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் ஆவுடைநாதர். அன்னையின் பெயர் சிவயோக வல்லி.

சிவகங்கைத் தாலுகாவில் கொல்லங்குடியிலும் ஆவுடைநாதரும் காளியாத்தாளாகிய ஆவுடையம்மனும் உள்ளனர். ஆவுடை ஊரிலுள்ள அப்பனை ஆவுடையார் என்றே கூறுவர். அங்குள்ள அம்மனான ஆவுடையநாயகியின் பாதத்தைத் தான் பத்தர்கள் வணங்க முடியும். அங்குள்ள நாயகி பூமிக்குள் பாய்ந்த நிலையில் தலை மறைந்தும் பாதம் மேல் தோன்றியும் உருவம் செய்யப்பட்டுள்ளது. அதைவிளக்க ஒரு சுவையான கதையும் கூறுவர். (சின்ன மகிபன் குளுவ நாடகம், பக். 100) சிவலிங்கத்தின் கீழ்ப்பகுதியை 'ஆவுடை' என்று கூறுவர். அது பசுவின் பின்பகுதி (இடை) போன்று இருப்பதினால் 'ஆவிடை' என்று கூறப்பட்டு பின்னர் ஆவுடையாகி இருக்கவேண்டும். இந்த அமைப்பைக் கொண்டு இறைவனை ஆவுடையார் என்று அழைத்துள்ளனர். 'ஆவுடை' என் பதைச் சக்தியின் அடையாளமாகப் பேரகராதி குறிப்பி டுகிறது.

ஆறுபடை வீடு (சிவயோக வல்லிக் கும்மி, பா. 2)

நக்கீரர் திருமுருகாற்றுப் படை மூலம் புலவரை ஆற்றுப் படுத்திய வீடுகள் ஆறுபடை வீடுகளாகி விட்டனவா என்பதைச் சிந்தித்து உணர வேண்டும். முருகன் சிறப்பாக அமர்ந்திருக்கும் ஆலயங்களை ஆறுபடை வீடுகள் என்று கூறுவதாகப் பலர் கருதுகின்றனர். அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்று தோறும்ஆடல், பழமுதிர்சோலை என்பன ஆகும். இவற் றையும் தவிர இன்னும் பல சிறப்புமிக்க முருகன் கோவில் இடங்கள் உள்ளன. இவற்றுக்குத் தனிச் சிறப்பாக நக்கீரர் ஆற்றுப் படுத்திய ஆறு புனித இடங்கள் என்று கருதலாம்.

இளசை மாநகர் (சீரணியம்மன் கும்மி, பா. 60)

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையாத்தங்குடியை இளசை மாநகர் என்று கூறுவர். திருமுகவிலாசத்தில், இளையாத்தங்குடியைச் சேர்ந்த முத்துபாலாண்டியை,

'பன்னும் இளசைப் பதியினான்' (கண்ணி 55) என்று கூறப்பட்டுள்ளது. சீரணியம்மன் கும்மியின் வாயிலாக முதன் முதலில் காவிரிப் பூம்பட்டினத்திருந்து வணிகர்கள் ஊரகன்று இளசையென்று அழைக்கப்படும். இளையாத்தங்குடியில் வந்து தங்கி இருக்கின்றனர். அவர்களுடன் அம்மனையும் கொண்டு வந்ததாகக் குறிப்பு உள்ளது.

உத்தண்டிக் கவுண்டன் (*சீனய்யங்கார் கும்மி, பா. 65*)

சீனய்யங்காரின் கடுமையான ஆட்சி முறைகளை எதிர்த்தவர்களில் ஒருவர் உத்தண்டிக் கவுண்டன். இவர் திண்டுக்கல் சென்று ஆங்கில அதிகாரியிடம் சீனய்யங்காரைப் பற்றிக் கூறுவதற்காகச் சென்றோர்களில் ஒருவர், இவர் ஒரு வேளை உத்தண்டி கிராமத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அது பழனித் தாலுகாவைச் சேர்ந்த ஓர் ஊராகும். 'இப்புவி மெச்சிய உத்தண்டிக் கவுண்டன்' என்று கூறுவதில் அவருடைய பெருமை விளங்கும்.

எழுபத்திரண்டு பாளையப்பட்டு (*சீனய்யங்கார் கும்மி, பா. 125*)

கி. பி. 14ஆம் நூற்றாண்டுடன் முடியுடை மூவேந்தருடைய ஆட்சி தமிழ் நாட்டில் முடிவடைந்தது. பின்னர் ஊர்தோறும் இருந்த பெருஞ் செல்வர்கள் பாளையக்காரர் என்ற பெயரைப் பெற்றனர். இவர்கள் ஆளும் இடம் பாளையப்பட்டு என்று அழைக்கப்பட்டது. பெரிய பாளையப்பட்டுகளில் நூற்றுக் கணக்கான சிற்றூர்கள் அடங்கி இருக்கும். எல்லாப் பாளையக்காரர்களும் தம் அளவுக்கான படையையும் கோட்டை கொத்தளங்களையும் வைத்திருந்தனர். ஆகையினால் அவற்றைப் பாளையங்கள் என்று அழைத்துள்ளனர். பின்னர் இந்தப் பாளையக்காரர்களை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் தங்களுக்குக் கீழ் கொண்டு வந்து கப்பம் செலுத்துமாறு செய்துள்ளனர். இதனைப் பாளையப்பட்டுக்களின் வம்சாவளிகள் என்ற நூலின் இரு தொகுதிகளின் வாயிலாக நன்கு அறியலாம். பாளையக்காரர்கள் ஒருவரோடு ஒருவர் மோதியதே ஆங்கில ஆதிக்கத்துக்கு மிக்க துணையாக இருந்துள்ளது. காட்டிக் கொடுக்கும் கபட நிலையும் பாளையக்காரரின் தீய பண்புகளில் ஒன்றாக உள்ளது. தமிழ் நாட்டில் 572 பாளையப்பட்டுகள் இருந்ததாக அறிகிறோம்.

ஐந்தரு (*சிவயோக வல்லிக்கும்மி, பா. 3*)

பஞ்சதருக்கள் என்றும் ஐந்தருவைக் கூறுவர். அவை அரிசந்தனம், கற்பகத்தரு, சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.

ஐயனார் (*சீரணியம்மன் கும்மி, பா. 5*)

ஐயனார் அரிகரபுத்திரர். இவருக்கு ஆயுதம் வளையும் செண்டும். ஒரு சோழன் ஐயனாரை வணங்கிச் செண்டினைப்

பெற்று மேருவிலிருந்த செல்வத்தைப் பெற்றதாக ஒரு கதை உண்டு. அரியும் அரனும் கூடியதினால் பிறந்த ஐயனாரை அரிகரபுத்திரர் என்று அழைத்தனர். இன்று மிகப்பெருமையாக வணங்கப்படும் அய்யப்பனும் இவரே.

ஸ்ரீபெரும்பூதூர் (சௌமிய நாராய... பா. 19)

ஸ்ரீபெரும்பூதூர் ஒரு சிறந்த வைணவத்தலம். வைணவ ஆச்சாரியரான இராமானுஜர் பிறந்த இடம். இவரை உடையவர், யதிராஜர் என்று கூறுவர். இது செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ளது.

கண்ணனூர் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா 72)

திருச்சி மாவட்டத்திலுள்ள சமயபுரம் பெரும் புகழ் பெற்ற மாரி அம்மன் கோவில் இருக்கும் இடமாகும். 'ராபர்ட் கிளைவ்' ஆங்கிலச் சேனையுடன் அங்கு முகாமிட்டிருந்ததாகவும், பிரஞ்சுக்காரருக்குப் பயந்து இந்த மாரியம்மன் கோவிலில் ஒளிந்திருந்ததாகவும் வரலாறு கூறும். கும்பினிப்படையின் படைவீடாகவும் இவ்வூர் திகழ்ந்தது. அங்கிருந்து சிறந்த படைவீரர் சிங்கைக்கு உதவியதாகக் குறிப்பு உள்ளது.

கண்டியக் கவுண்டன் (சீனய்யங்கார் கும்மி, பா. 127)

சீனய்யங்காரின் கொடுமைகளை மதுரையிலுள்ள பீற்றர் (peter) என்ற ஆங்கில ஆணையாளரிடம் (Collector) எடுத்துச் சொல்லச் சென்றவர்களில் ஒருவர் கண்டியக் கவுண்டன் இவரைத் 'தென்னவன் மெச்சிய கண்டியக் கவுண்டன்' என்று கும்மிப்பாடல் புகழ்ந்து கூறுகிறது. ஒரு வேளை இவரது முன்னோரில் ஒருவர் பாண்டிய மன்னரால் சிறப்பிக்கப்பட்டிருக்கலாம் அத்தகைய சிறப்புகளை வழிவழியாக நினைவு படுத்தும் மரபு உண்டு.

கந்த சுவாமி (சீனய்யங்கார் கும்மி, பா. 75)

முருகப் பெருமானைக் கந்தசாமி என்று அழைக்கும் பழக்கம் கொங்கு நாட்டில் மிகுதியாகக் காணப்படுகிறது. மக்கள் மகிழ்ச்சியால் கந்தசாமிக்கு விழா எடுத்துத் திருமுழுக்கு செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

கரடியார் (ஆவுடையார் கும்மி, பா. 10)

கரடிப்பெருமாள் என்று தெய்வத்தை இந்த கும்மிப்பாடல் கரடியார் என்று கூறுகிறது. காவல் தெய்வமாகக் கோயில்களில்

வைக்கப் பெற்றுள்ள கரடிமுகத் தெய்வமாக இது அமைகிறது. பாகவதத்திலும் இராமாயணத்திலும் இடம் பெறும் 'ஜாம்பவான்' என்ற கரடி உருவுடைய பாத்திரத்திற்கும் இந்தத் தெய்வத்துக்கும் தொடர்பு உள்ளதா என்பதைச் சிந்திக்கலாம். சேலம், நெல்லை, குமரி போன்ற மாவட்டங்களில் கரடிவுருத் தாங்கி மக்கள் நாட்டுப் புறங்களில் ஆடுகிறார்கள். அத்தகைய ஆட்டத்துக்குத் தெய்வத் தொடர்பு இருப்பதாகக் கருதுகின்றனர். கரடிப் பெருமாளுக்கும் கரடியாட்டத்துக்கும் உள்ள தொடர்பைக் காண முயலலாம்.

கரிய காளியம்மன் (சீனய். கு. பா. 195)

காளியம்மன் காடைநகரில் வாழும் மன்றாடியார்களின் குல தெய்வம். அவள் கரிய நிறமுடையவள்; அருள் நிறைந்தவள் காடை நகருக்கு அதிபதியாக விளங்குபவள். அவளுடைய அருள் நூலாசிரியரான காளியண்ண தீரருக்கு இருந்ததாக அவரே இக்கும்மிப் பாடலில் கூறுகிறார்.

கருப்பண்ணன் (சீரணியம்மன் கும்மி, பா. 7)

கருப்பண்ண சாமியை இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை கோவை முதலிய மாவட்ட மக்கள் சிறப்பாக வணங்கி வருகின்றனர். கருப்பண்ணர் ஐயனாரின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறார். தனியாகக் கருப்பர் வணக்கம் மரத்தடியில் நடைபெறுகிறது. அவருடைய உருவம் மிகப் பெரியதாக உள்ளது. மீசை, தலைப்பாகை, ஆயுதங்கள் ஆகியவற்றுடன் அச்சம் தரும் அமைப்பில் காணப்படுகிறது. கையிலிருக்கும் கதையைக் குறுமாந்தடி என்று கூறுவர். இத்தெய்வத்துக்கு ஆட்டுக்கடா பலியாகக் கொடுக்கப்படும். இதற்குத் துணை நிற்கும் சில முன்னோடித் தெய்வங்கள் உண்டு. அவற்றிற்குக் கள், சாராயம் முதலியவற்றைப் படையல் செய்வர். கருப்பரின் துணைவியாகப் பேச்சியம்மனைக் கருதுவர். அவளுக்குக் கோழியைப் பலியாகக் கொடுத்துப் பூசனை செய்வர். பல கருப்பர் இருப்பதாகக் கூறுவர். அவற்றுள் முக்கியமாகச் சின்ன கருப்பர், பெரிய கருப்பர், சங்கிலிக் கருப்பர், சப்பாணிக் கருப்பர், நொண்டிக் கருப்பர், செங்கிடாக் கருப்பர், கருங்கிடாக் கருப்பர் சந்தணக் கருப்பர், அந்திக் கருப்பார், சாமக் கருப்பர், சந்திக் கருப்பர், சுண்டக்காட்டுக்கருப்பர், திருமேனிக் கருப்பர், சிங்கைக் கருப்பர் ஆகியோரைக் கூறலாம். குமரி மாவட்டத்தில் கருங்கிடாக்காரன், செங்கிடாக்காரன் என் இரண்டு

தெய்வங்கள் வணங்கப்படுகின்றன. அவற்றை இவற்றுடன் ஒப்பிட்டுக் காண முயலலாம்.

கருப்பண்ணர் (ஆவுடையார் கும்மி, பா. 11)

கருப்பண்ண சாமியை வணங்கும் வழக்கம் இன்றும் இராமநாதபுரத்தில் மிகுதியாக உள்ளது. இதை ஐயனார் கோவில்களில் காவல் தெய்வமாக வைத்து வழிபடுவர். சில இடங்களில் பெரிய மரங்களின் அடியில் கருப்பண்ணருக்குத் தனியான கோயில்கள் உள்ளன. கருப்பண்ணரின் உருவம் மிகப்பெரிய தோற்றமும் அச்சப் பார்வையும் உடையதாகக் காணப்படுகிறது. கதை முதலிய ஆயுதங்களைக் கையில் தாங்கி முறுக்கின மீசையுடன் தோன்றும். கதையைக் குறு மாந்தடி என்று கூறுவர்

கருத்திக் கவுண்டன் (சீனய்யங்கார் கும்மி, பா. 36)

சீனய்யங்காரின் காரியக்காரர்களில் ஒருவராகக் கருத்திக் கவுண்டன் இருந்தார். இவர் சிறப்பாக விளங்கி இருந்திருக் கலாம். ஆகையினால் 'மேலாய் விளங்கிய' என்ற சிறப்புத் தொடரால் அவர் இந்தக் கும்மிப் பாடலில் குறிப்பிடப்படுகிறார்.

கல்வாயில் நாடு (சீரணியம்மன் கும்மி, பா. 9)

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையாற்றங்குடிப் பகுதியைக் கல்வாயில் நாடு என்று கூறுவதாக ஒரு பழம் பாடலைப் பாடினர். 'இளையாற்றங் குடியிருக்கும் கல்வாயில் நாடு' என்பது அந்தப் பாடல் வரி. வணிகர்கள் பூம்புகார் நகரத்தை விட்டு வெளியேறி இப்பகுதியில் முதன் முதலாகக் குடியேறியதாக அவர்களுடைய வரலாறு கூறும். அப்பொழுது அவர்கள் மாரிமுத்தம்மனைத் தங்களுடன் கொண்டு வந்ததாக இக்கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது. அந்த அம்மனையே இக் கும்மிப் பாடல் போற்றிப் புகழ்கிறது. இளையாற்றங்குடியில் இன்றும் முத்து மாரியம்மனுக்குச் சிறப்பான விழாவெடுத்துத் தேர்த்திருவிழாவும் நடைபெறுகிறது. சீரணியூர் இப்பகுயில் தான் இருக்கவேண்டும். ஒரு வேளைக் குருவிக் கொண்டான் பட்டியை அடுத்துள்ள கீரணிப்பட்டியாக இருக்குமோ என்ற ஐயமும் ஏற்படுகிறது. இங்கு சித்திரை மாதத்தில் மிகச் சிறப் பாகத் திருவீழா நடக்கும் மேலும் ஒரு கல்வாயில் நாடு இருப் பதாகவும் அறிய முடிகிறது.

புதுக்கோட்டையின் வட எல்லையில் தஞ்சை செல்லும் வழியிலிருக்கும் பகுதியை கல்வாசல் நாடு என்று கூறுவர். அது பாளையப்பட்டுகளில் ஒன்றாக விளங்கியிருக்க வேண்டும். இராஜராஜனின் கல்வெட்டு ஒன்றில் 'கல்வாயில் நாடாழ்வான்' என்ற தொடர் காணப்படுகிறது. (S.I.I., Vol. II) அந்தப் பகுதியில் செம்பூராங் கல்லைக் கொண்டு அணைக்கட்டித் தண்ணீரைத் தடுத்துப் பயிர் செய்வர். இத்தகைய தடுப்பு களில் உள்ள திறப்புக்களைக் கல்வாசல் என்று கூறுவர். கல் தடுப்புக்கள் மிகுதியாக இருப்பதினால் இந்த நாட்டைக் கல் வாயில் நாடு அல்லது கல்வாசல் நாடு என்று அழைத்திருக்க லாம். இக்கும்மிப்பாடல் குறிப்பிடும் சீரணியூர் இப்பகுதியில் இருந்திருக்க முடியாது.

கவிராசகுருசாமி (மாடன் கும்மி, பா. 15)

குருசாமிக் கவிராயர் சிறந்து வாழ மாடன் அருள் செய்ய வேண்டும் என்ற குறிப்பு கும்மிப் பாடலில் உள்ளது. (பா. 15) இவரை 'வீர கேரள மால்' என்று சிறப்பிப்பதால் இக்கவிஞர் வீர கேரளம் புதூரைச் சேர்ந்தவராக இருக்கலாம் என எண்ண லாம். இக்கும்மிப் பாடலின் ஆசிரியர் இவராக இருக்குமா? என்பது சிந்தனைக்கு உரியதாகும். சில ஆசிரியர்கள் தங்கள் பெயர்களைப் பாடல்களுக்கிடையில் புகுத்தும் மரபு உண்டு.

கன்னன் (மருதப் பாண்டியன் கும்மி, பா. 14)

பஞ்சபாண்டவர்கள் பிறப்பதற்கு முன் குந்திதேவியின் வயிற்றில் பிறந்து அவளால் ஆற்றில் விடப்பட்டவன். துரியோதனனால் நன்கு ஆதரிக்கப் பெற்றவன். அங்க நாட்டின் அரசன். யார் வந்து கேட்டாலும் இல்லை என்று கூறாது வரையாது வழங்கும் வள்ளல் ஆகையினால் இன்றும் வாரி வழங்குவோரை கர்ணனுக்கு ஒப்பிட்டுக் கூறுவது மரபு.

காடை நகர் (சீனய்யங்கார் கும்மி, பா. 195)

தாராபுரம் தாலுகாவிலுள்ள காங்கேய நாட்டின் முக்கிய ஊராகக் காடையூர் விளங்குகிறது. இதனைக் கும்மிப்பாடல் காடை நகர் என்று கூறுகிறது, கொங்கு இருபத்து நான்கு நாடுகளில் ஒன்றான காங்கய நாட்டுக் காரையூராகவும் இது விளங்கியிருக்கிறது.

'கன்னிக்கோன் ஏவலினால் காரைக்கோன் பின்தொடரப் பொன்னிக்கோன் ஓடும் பொழுது'' என்று ஒரு பழம்

பாடலில் காரையூர் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். இந்தக் கும்மிப் பாடலின் ஆசிரியரான காளியண்ணன் காடை நகரைச் சேர்ந்தவர்.

காட்டண்ணன் (சினய்யங்கார் கும்மிபா. 65).

பழனித் தாலுகாவைச் சேர்ந்த சினய்யங்காரின் கொடுமைகளைத் திண்டுக்கல்லிலிருக்கும் ஆங்கில அதிகாரியிடம் சொல்வதற்காகச் சென்ற கூட்டத்தில் காட்டண்ணன் இருந்தார்.

காண்டீபன் (சீரணியம்மன் கும்மி, பா. 86)

பஞ்ச பாண்டவர்களில் மூன்றாவது உள்ளவன் அருச்சுனன். அவன் கையில் வைத்திருக்கும் வில்லுக்குக் காண்டீபம் என்று பெயர். அருச்சுனன் இறையருளால் கிடைத்த அந்த வில்லைக் கொண்டுதான் போராடுவது வழக்கம். காண்டீபத்தை வைத்து முக்கியமாகப் போராடுவதினால் அருச்சுனனுக்குக் காண்டீபன் என்று பெயர். முத்துப் பாலாண்டி மாகாளி மகாராசனுடைய மகனான வீரப்ப வாரச்ச மாகாளி சிறந்த விற்போர் வீரனாகையினால் காண்டீபன் என்று கும்மிப் பாடல் அழைக்கிறது

காவிரிப் பூம்பட்டினம் (சீரணியம்மன் கும்மி, பா. 59)

இது சோழநாட்டின் தலைநகரமும் துறைமுகமும் ஆகும். காவிரி கடலுடன் கலக்குமிடத்தில் இருந்துள்ளது. இதைச் சோழருக்கு முன் காகந்தன் என்னும் அரசன் ஆண்டுள்ளான். ஆகையினால் இதனைக் காகந்தி என்றும் அழைப்பர். வங்காளத்தின் கோநகரான சம்பாபதியிலிருந்து வந்த தமிழ் மக்கள் தங்களுடைய பூர்வீக நகரம் மறவாதிருக்க இதற்குச் சம்பாபதி என்ற பெயரையும் சூட்டினர் என்று கருதும் ஒரு வரலாறும் உள்ளது. புகார் என்றும் கூறுவர். இந்நகரைப் பெரிப்புளூஸ் காமரம் என்றும் டாலமி என்பார் கபேரிஸ் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதைப் பற்றிய செய்திகள் சிலம்பிலும் மேகலையிலும், பட்டினப் பாலையிலும் விரிவாக உள்ளன. இது கடல் கோளால் அழிந்து சிதைந்துவிட்டதாக நம்புகின்றனர். முன்பு புகார் நகரம் இருந்ததாகக் கருதப்படும் இடத்தில் இப்பொழுது அழிந்தது போக மிஞ்சிய சிலச்சில ஊர்கள் இருக்கின்றன. பூம்புகார், மேலையூர், மணிக்கிராமம் போன்றவை அவற்றுள் சில.

காளியண்ணன் (சீனய்யங்கார் கும்மி. பா. 197)

சீனய்யங்கார் கும்மிப் பாடலின் ஆசிரியராகக் காளியண்ணன் விளங்குகிறார். இவர் மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்தவர். நாச்சிமுத்து என்பரின் நாலு மக்களில் ஒருவர்.

காளியண்ணன் (சீனய்யங்கார் கும்மி, பா. 50)

புளியம்பட்டியில் மக்கள் கூடி சீனய்யங்காரின் கொடுமைகளைத் தீர்க்க வேண்டும் என்று சிந்தித்தனர். அந்தக் கூட்டத்திற்குக் காளியண்ண தீரன் வந்திருந்தார். அவர் கருணைமிக்கவர் என்றும் புகழ் பெற்றவர் என்றும் ஒரு காவலர் என்றும் இக்கும்மிப் பாடல் விளக்குகிறது.

கானாடு (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 26)

இது இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள சிறிய நாடு சிவகங்கை நாட்டின் பக்கத்திலுள்ளது. புகழ் பெற்ற நானாட்டின் ஒன்றாக இது விளங்குகிறது. இன்றுள்ள கானாடு காத்தான் பகுதி இந்த நாட்டைச் சார்ந்தது.

கிம்புருடர் (மருதப்பாண்டியன் கும்மி, பா. 5)

கின்னரரைப் போன்றவர். இவர்களுக்கு மனிதவுடம்பும் குதிரைமுகமும் இருப்பதாகக் கூறுவர். தேவர் வகுப்பைச் சேர்ந்தவர். நான்முகனின் சாயலில் தோன்றியவர். புலகர் குமரரில் ஒருவரென்றும், அக்னிமித்ரனுக்குப் பூர்வசித்தியிடம் பிறந்தவனும் கிம்புருடன் என்று அழைக்கப்படுவான். இவனுக்கும் கிம்புருடருக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இவன் தனிப்பட்டவனாக இருக்க அவர்கள் ஓர் இனமாக உள்ளனர்.

கின்னரர் (மருதபாண்டியன் கும்மி, பா. 5)

பிரம்மனின் சாயல்தோற்றத்தில் (பிரதிபிம்பம்) பிறந்தவர் மானிடவுருவத்தையும் குதிரை முகத்தையும் பெற்ற தேவர் வகுப்பினர்

குப்பண தீரன் (சீனய்யங்கார் குப்மி, பா. 36)

சீனய்யங்கார் தனக்கு உதவியாகத் தேர்ந்தெடுத்த காரியக்காரரில் ஒருவராகக் குப்பணதீரன் விளங்கினார். இவர் பூலாம்பட்டி என்ற இடத்தைச் சேர்ந்தவர். கல்வி அறிவுடை

யவராக இருந்திருக்க வேண்டும். ஆகையினால் 'மாலா வாசகன்' என்று கும்மிப்பாடல் சிறப்பான அடைகொடுத்து அவரைக் குறிப்பிடுகிறது.

குமாரசுவாமி (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 53)

சிங்கைப்பதியின் அரசனாக இருந்தவர் குமாரசுவாமி. இவர் புதுக்கோட்டைத் தொண்டைமானின் மேலாணையை ஒப்புக் கொண்டவர். புலவர்களை ஆதரிப்பவர் நல்ல வீரர் மற்றவர்களுக்கு வரையாது கொடுக்கும் வள்ளல். அழகிய அம்மன் பேரில் நீங்காத பற்றுடையவர்.

குமாரசுவாமி (ஆவுடையார் கும்மி, பா. 36)

ஆவுடையார் கும்மியின் ஆசிரியரான குமாரசுவாமிக் கவிராயர் மிதிலைப்பட்டியில் வாழ்ந்த மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் ஏழாவது தலைமுறையைச் சேர்ந்த கவிஞராவார். இவருடைய தந்தையாரும் சிற்றம்பலக் கவிராயர் என்றே அழைக்கப்பட்டார். குமாரசாமிக் கவிராயருக்கு ஏழு மக்கள் பிறந்தாலும் சிற்றம்பலம், கந்தசாமி ஆகிய இருவருமே உயிருடன் பலவருடம் வாழ்ந்தனர். குமாரசாமிக் கவிராயருடைய பாட்டனார் திருப்புகழ் போன்ற சந்தக்கவி பாடிய குழந்தைக் கவிராயர் ஆவார்.

குமுணன் (நல்லாண்டவர் கும்மி, பா. 60)

குமணனையே குமுணன் என்று கூறும் வழக்கு இருந்துள்ளது. இவன் கடையெழு வள்ளல்களில் பிற்காலத்தில் இருந்தவன். இவன் மிக்க கொடையாளி, முதிரம் என்னும் மலைக்குத் தலைவன் இவனைப் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச் சாத்தனார் ஆகிய புலவர்கள் சிறப்பித்துப் பாடி உள்ளனர். குமணன் தம்பியால் காட்டுக்குத் துரத்தப்பட்டு பின்னர் ஒரு புலவருக்காகத் தலையைக் கொடுக்கத் துணிந்தவன் என்ற கதையும் உண்டு.

கும்பினியார் (சீனய்யங்கார் கும்மி, பா. 8)

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியை (English East India Company) கும்மிப் பாடல் 'கும்பினியார்' என்று அழைக்கிறது. 18, 19ஆம் நூற்றாண்டில் எழுந்த நூல்கள் பலவற்றில்

கும்பினியார் என்று சொல்வதைத் தான் காண முடியும் வாணிபம் செய்வதற்காக கி. பி. 1600ஆம் ஆண்டு ஆங்கில அரசியான எலிசபெத் இராணியிடம் அனுமதி பெற்று கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவில் சூரத் என்ற இடத்தில் முதன் முதல் வந்து இறங்கியது. வாணிபம் செய்ய வந்தவர்கள் இங்கிருந்து உட்பூசல் நிலையைக் நன்கு பயன்படுத்தி ஆட்சி செய்யும் அதிகார நிலைக்கு வந்து விட்டனர். கம்பெனியின் ஒரு தலைமை இடமாக மதுரை விளங்கியது. பழனிப்பகுதி மதுரைக்குக் கீழ் இருந்த இடம். அதே போன்று கோவையும் ஒரு தலைமை இடமாக இருந்துள்ளதை இந்தக் கும்மிப்பாடல் வாயிலாக அறிய முடிகிறது. மதுரையில் நியாயம் கிடைக்க வில்லை என்றதும் மக்கள் கோவைக்குச் சென்று தங்கலாம் என்ற முடிவுக்கு வருவதை இக்கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது. கோவையும் கும்பினி அதிகாரி ஒருவரின் கீழ் இருப்பதை அறிய முடிகிறது.

கும்பமுனி (மருத பாண்டியன் கும்மி, பா. 29)

தேவர்களை வருத்திய தாரகன் முதலிய அரக்கர் கடலில் ஒளிந்தனர். கடல் நீரைக் குடித்து அவர்களைக் கொல்ல அக்னி தவறியதினால் அவனை உலகில் ஒரு குடத்தில் போய்ப் பிறந்து பின்னர் கடலைக் குடிக்குமாறு இந்திரன் சபித்து விடுகிறான். அவ்வாறு குடத்தில் பிறந்தவரே அகத்திய முனிவர். குடத்தில் பிறந்ததனால் கும்பமுனி என்று அழைக்கப்பட்டார்.

குலசை (மாடன் கும்மி, பா. 1)

தென் பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூருக்குச் சுமார் எட்டு கல்தொலைவு தெற்கேயுள்ள குலசேகரப் பட்டினத்தையே குலசை என்று கூறுவர். இங்கு பல கோயில் உள்ளன. சுடலைமாடன் கோயில் ஒன்று ஊருக்கு மேற்குப் பகுதியில் உள்ளது. வடகிழக்குத் திசை யில் ஒத்தப்பனை மாடன் கோயில் உள்ளது. இவை தவிர பப்பரபுளி அம்மன் கோயில்‘ மகாதேவி கோயில், கச்சி கொண்ட பாண்டீசுவரர் கோயில் போன்றபல கோயில்கள் உள்ளன. குலசை உலா என்று ஒரு நூல் இவ்வூரில் கோயில் கொண்டுள்ள கச்சி கொண்ட பாண்டீசுவரர் மேல் பாடியதாகும். மாடன் கும்மியும் இவ்வூரிலுள்ள சுடலை மாடனைப் பற்றிப் பாடப் பெற்றதாகும்.

குழந்தை நரவாணன் (ஆவுடையார் கும்மி, பா. 34)

ஆவுடையார் கும்மியைப் பாடிய ஆசிரியரைப் பற்றிய விளக்கம் தரும் போது நரவாணனைப் பற்றிய குறிப்பு தரப் படுகிறது. இவர் வெங்களேந்திரன் பேரில் குநவஞ்சி பாடி மிதிலைப்பட்டியைத் தானசாசனமாகப் பெற்ற சிற்றம்பலக் கவிராயரின் வம்சத்தைச் சேர்ந்தவர். குழந்தை நராவணனின் மகனும் ஒரு சிற்றம்பலக் கவிராயர்தான். அவருடைய இரண்டாவது மகனான குமாரசாமிக் கவிராயர் ஆவுடையார் கும்மியின் ஆசிரியராகும். குழந்தைக் கவிராயர் திருப்புகழ் போன்ற சந்தக்கவி பாடியுள்ளார்.

குன்றைமலை (ஆவுடையார் கும்மி, பா. 16)

இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடிக்கு அண்மையில் இருக்கும் முருகன் தலமான குன்றக்குடியைக் குன்றைமலை என்று கும்மிப் பாடல் ஆசிரியர் கூறுகிறார். இதற்கு மயூர கிரிஎன்ற ஒரு பெயரும் உண்டு. இதைப் பற்றி மயூரகிரிப் புராணம், மயூரகிரிக் கோவை போன்ற நூற்கள் உள்ளன.

குன்று குடையாய் நிறுத்தல் (நல்லாண்டவர் கும்மி, பா. 9)

இந்திரன் ஆயர்பாடியில் வாழ்ந்து வந்த கிருஷ்ணனுடன் மாறு பட்டு பசுக்களை மேயாமல் வருந்தும் படி ஓயாமல் மழை பெய்வித்தான். அதனைக் கண்டு கோபங்கொண்ட கண்ணன் கோவர்த்தனகிரி என்னும் மலையைத் தூக்கிக் குடையாய்ப் பிடித்து பசுக்களை மழையுலிருந்து காப்பாற்றி னான்.

கொண்டிமாடு (ஆவுடையார் கும்மி, பா. 44)

எந்த விதக் கட்டுப்பாடுமின்றித் தன் விருப்பம் போல் அலையக் கூடிய மாடுகளைக் கொண்டி மாடு என்று கூறுவர். இவை பயிர் பச்சைகளை அழித்துக் கொண்டே திரியும்.

கோட்டைக் கிழித்தல் (சீனய்யங்கார் கும்மி, பா, 61)

கோட்டைக் கிழித்து நிறுத்தல் கிராமத்தில் நடைபெறும் வழக்கம். பணம் கடன் வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருப்பவரை ஊர்ப் பொது இடத்தில் நிறுத்தி அவரைச் சுற்றி ஒரு கோட்டைக் கிழித்து விடுவர். பணம் கொடுக்காமல் அதை விட்டு வெளியே வரக் கூடாது என்பது கட்டளையாகும். இரக்கமுடையோரும் உறவினரும் பணத்தைக் கட்டி அவரைக் கோட்டுக்குள் இருந்து மீட்பது

வழக்கம்' இந்தக் கும்மிப் பாடலில் சீனய்யங்கார் விதித்த கடுமையான வரியை மக்கள் கட்ட முடியாது தவித்தனர். இதனைக் கும்பினி அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லச் சிலர் திண்டுக்கல் சென்றனர். இதை அறிந்த சீனய்யங்கார் வெகுண்டு நாட்டாண்மைக் காரரை அழைத்து அரைநாழி கைக்குள் பணம் வாங்க வேண்டும் என்று கட்டளையிடு கிறான். தராதவர்களைக் கோட்டைக் கிழித்து நிறுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறான். இது தாசில் தாரனுடைய இரக்கமற்ற தன்மையைக் காட்டுகிறது. கோட் டைக் கிழித்து நிறுத்தல் மனிதனின் மான உணர்வைத் தொட்டு வதைக்கும் கொடுஞ்செயலாகும்.

கோதண்டபாணி (நல்லாண்டவர் கும்மி, பா. 70)

இராமனுடைய கையிலிருக்கும் வில்லைக் கோதண்டம் என்று கூறுவர். அதைக் கையில் பிடித்தும் போராடுவதினால் அவனைக் கோதண்டபாணி என்று கூறுவர். இராமன் நல்லாண்டவராகிய திருமாலுடைய அவதாரம் என்பதினால் அவரும் கோதண்டபாணி என்று அழைக்கப் படுகிறார், 'பாணி' என்பது 'கை' என்று பொருள்படும்.

கோதைவல்லி (சௌ. நா. பெ. கும்மி, பா. 2)

திருக்கோட்டியூரிலுள்ள இறைவியைக் கோதை வல்லி என்று கூறுவர். அவளைத் திருமாமகள் நாச்சியார் என்றும் அழைப்பர்.

கோயம்புத்தூர் (சீனய்யங்கார் கும்மி, பா. 131)

மதுரை மாவட்டம் போன்று கோயம்புத்தூரும் ஒரு தனி மாவட்டமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கியது. அதற்கு ஓர் ஆங்கில அதிகாரி இருந்தான் மதுரைக்குக் கீழுள்ள பழனிப் பகுதியில் வாழ விரும்பாத மக்கள் கோவைக்குக் கீழுள்ள தாராபுரத்தில் வாழ விரும்புகின்றனர். அதற்கான அனுமதியைக் கோயம்புத்தூரிலுள்ள ஆங்கில அதிகாரியிடமிருந்து பெறவேண்டும் என்று அலங்கை நகரில் அனைவரும் கூடிச் சிந்தித்தனர்.

கோனாடு (சிங்கை அழகிய அம்மன் கும்மி' பா. 26)

இராமநாதபுரம் மாவட்டத்தின் வட பகுதியும் புது கோட்டையின் தென்பகுதியும் இணைந்து நான்கு நாடுகள் உள்ளன. அவை கானாடு, கோனாடு, பூங்குன்றை நாடு,

கல்வாசல் நாடு. அவற்றுள் கோனாடு என்பது இன்று கோநகர் என்ற ஊர் உள்ள பகுதியாகும்.

சங்கிலித்தேவன் (சீனய்யங்கார் கும்மி, பா. 35)

சீனய்யங்கார் சங்கிலித்தேவனைத் தனக்கு ஆலோசனை கூறும் மந்திரியாக எடுத்து வைத்தான். இவனிடம் நீதி நியாயங்களை எதிர் பார்க்கவே முடியாது. இவனைக் 'கும்பினிக்கு ஆகாத துஷ்டன்' என்று கும்மிப் பாடல் கூறு கிறது. இப்படிப் பட்டவன் சீனய்யங்கார் செய்யும் கொடுஞ் செயல்களுக்குத் துணை நிற்பான் என்ற நம்பிக்கையில் அவனை மந்திரியாக எடுத்து வைத்துள்ளார். இறுதியில் சீனய்யங்காருக்குத் துணை செய்யாது மறைந்து கொண்டு கோழையாகக் காணப்படுகிறான்.

சங்கநிதி (சிங்கை அழகிய அம்மன் கும்மி' பா. 41)

சங்கு போன்று உரு அமைந்த நிதி என்று பேரகராதி குறிப்பிடுகிறது. சங்கம் பேரெண்களில் ஒன்று இலக்ஷம் கோடி மக்கள் என்று கூறுவர். கம்பராமயணம். யுத்த காண்டம் 1225 ஆம் பாடலின் உரையில் உள்ளது. (டாக்டர். உ. வே. சா. நூலக வெளியீடு). சங்கநிதி குபேரனிடம் உள்ளது. இது கேட்டதைக்தரும் ஆற்ற லுடையது.

சண்முக நாதன் (சீனய்யங்கார் கும்மி, பா. 7)

கும்மிப் பாடல் ஆசிரியரான காடைநகர் காளியண்ணனை ஆதரித்த வள்ளல் சண்முகநாதன் என்று தெரிகிறது, இவர் தானியமும் பொருளும் கொடுத்து ஆசிரியருக்கு உதவியுள்ளார் குடும்பக் கவலை கும்மியாசிரியரை அணுகாது ஆதரித்த வள்ளலாகச் சண்முக நாதன் விளங்குகிறார்.

சத்த கன்னியர் (நல்லாண்டவர் கும்மி, பா. 2)

பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்தி ராணி, காளி ஆகியோரைச் சத்தகன்னியர் அல்லது சத்தமாதர் என்று கூறுவர். இவர்களுக்கும் மேலான சிவசத்தியைச் சத்த கன்னித்தாய் என்று கும்மிப்பாடல் குறிப்பிட்டு வாழ்த்துகிறது.

சந்தை பார்த்தல் (சீனய்யங்கார் கும்மி, பா. 110)

இது பழனி, கோவை முதலிய பகுதிகளில் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராகக் காணப்

படுகிறது. இன்னொரு முறை அல்லது தடவை முயன்று பார்க்கலாம் என்பதை 'ஒரு சந்தை பார்க்கலாம்' என்று கூறுவர். விவசாயம் மிக்க பகுதிகளில் சந்தை முக்கிய இடம் வகிக்கும். பொருள்களைச் சரியான விலைக்கு ஒரு சந்தையில் கேட்க வில்லையானல் அடுத்த சந்தை பார்க்கலாம் என்று கூறுவது வழக்கம். அத்தகைய பழக்கத்தின் அடிப்படையில் இன்னொரு தடவை பார்க்கலாம் என்பதற்கும் அதே சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அந்தச் சொல்லாட்சியைக் கவிஞர் காளியண்ணன் சீனய்யங்கார் கும்மியில் பயன் படுத்தியுள்ளார்.

சத்த முகில் (ஆவுடையார் கும்மி, பா. 63)

இவற்றைச் சப்த மேகங்கள் என்றும் கூறுவர். அவை சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம் காளமுகி, நீலவருணம் என்பன இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ ஆகியவற்றைப் பொழியுமெனக் கூறப்பட்டுள்ளது.

சந்திவினாயகன் கும்மி (மருரு பாண்டியன்கும்மி, பா. 29)

நெல்லையப்பேந்திரன் என்பார் சந்திவினாயகன் கும்மியைப் பாடியிருப்பதாக மருத பாண்டியன் கும்மி குறிப்பிடுகிறது. ஆனால் இந்த நூல் இதுவரைக் கிடைக்கப் பெறவில்லை.

சரவணப்பட்டி (சீனய்யங்கார் கும்மி பா. 50)

சரவணப்பட்டி என்பது கோவைத் தாலுகாவைச் சேர்ந்த சிராவணம் பட்டி அல்லது சின்ன வேடன் பட்டியாக இருக்கலாம். இங்கு தண்டபாணி சுவாமிகளின் கௌமாரமடம் இருக்கிறது. இம்மடத்தின் மூலம் நூற்றுக்கு அதிகமான சிற்றிலக்கியங்கள் அச்சிடப் பெற்றுள்ளன. புளியம்பட்டியில் சீனய்யங்காரின் கொடுமையான முறையை எதிர்த்துக் கூடிய கூட்டத்தில் சரவணப்பட்டியைச் சேர்ந்த பெரிய தம்பியும் இருந்ததாகக் கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது. பழனித்தாலுகா நிருவாகத்தைப் பற்றிய கூட்டம் ஆகையினால் இது கோவைத் தாலுகாவைச் சார்ந்த சரவணப்பட்டியாக இருக்க முடியுமா என்ற ஐயம் தோன்றுகிறது.

சரவணமுத்துவேள் (மருத பாண்டியன் கும்மி, பா. 3)

இந்நூலில் பதிக்கப் பெற்றுள்ள மருத பாண்டியன் கும்மி முழுமையற்றதாகக் காணப்படுகிறது. பதிக்கப்பட்டுள்ள பகுதி பெரும்பாலும் சரவணமுத்துவேள் என்பவரைப் பற்றியே கூறுகிறது. இவர் முத்து குமரேந்திரனுடைய மூன்று மக்களுள் மூத்தவரான நெல்லையப்பேந்திரனுடைய இளைய மகனாகத் (கனிஷ்ட புதல்வன்) தோன்றியவர். இவர் தேவி உலகாளும் செஞ்சடைக் கடவுளும் தெப்பம் ஏறி உலா வருவதற்காகத் தெப்பக்குளம் வெட்டியுள்ளார். இவர் பல தான தர்மங்கள் செய்துள்ளதாகக் கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது. தென்காசி அவர் வாழ்ந்து மகிழ்ந்த இடமாகத் தோன்றுகிறது.

சன்னாசித் தெய்வம் (ஆவுடையார் கும்மி, பா. 12)

சன்னாசித் தெய்வம் சிறுவானேந்தல் என்ற இடத்திலுள்ள பெரிய கிணற்றங் கரையில் உள்ளதாகக் கும்மிப் பாடல் கூறுகிறது.

சாமியண்ணன் (சீனய்யங்கார் கும்மி பா. 49)

சீனய்யங்காரின் கொடிய ஆட்சி முறைகளுக்கு முடிவுகாண மக்கள் விரும்பிப் புளியம் பட்டியில் கூடினர் அதில் முக்கிய பங்கு பெற்றவர்களில் ஒருவர் சாமியண்ண தீரன்.

சாரங்கபாணி (நல்லாண்டவர் கும்மி, பா. 39)

சாரங்கம் என்ற வில்லைக் கையில் கொண்டு போராடும் திருமாலைச் சாரங்கபாணி என்று கூறுவர். பாணி என்றால் கை என்பது பொருள்.

சிதம்பரம் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா, 57)

சிங்கை அழகியவம்மன் கும்மியில் வரும் அரசனான குமாரசாமியின் மாமன் சிதம்பரம். இவரைச் சிறப்பாகக் கும்மிப் பாடல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சித்தர் (மாடன் கும்மி, பா. 13)

சித்து என்பதற்கு அறிவு என்பது பொருள். சித்தர் என்பது அறிவுடையாரைக் குறிப்பதாக வரினும் அவர்கள் சில சிறப்புத் தன்மைகள் உடையவர்கள் என்று கருதப்படுகிறது. அறிஞர், மேதைகள், பேரறிவாளர், நுண்ணறிவினர், விஞ்ஞான மெய்ஞ்ஞான அறிவுடையார் என்று விளக்கமாகக்

கூறுவதும் உண்டு. வாதம், மருத்துவம், யோகம், ஞானம் என்ற நான்கு நெறியில் நின்று, அணிமா முதலிய எண்வகை ஆற்றல்களைப்பெற்று அரிய செயல்களை ஆற்றுவோர் சித்தர் என்றும்விளக்கம் தரப்படுகிறது. சித்தர் ஒன்பதிமர் என்று கூறி சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வைகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர் ஆகியபெயர்களைத் தருகின்றனர். பதினெண் சித்தர் என்பது பெருவழக்காக உள்ளது. அவர்கள் அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுந்தரானந்தர், உரோமருஷி,பிரமமுனி ஆவர். இவர்களைத் தவிர தன்வந்திரி, புலஸ்தியர்.புகண்டர், கருவூரார், இராமதேவர், தேரயைர், கபிலர், ஆகியோரும் சித்தர்கள் குழுவைச் சேர்ந்தவர்களே என்ற குறிப்பும் காணப்படுகிறது.

சித்திரபானு வருஷம் (சீனய்யங்கார் கும்மி, பா. 18)

அறுபது ஆண்டுகளில் ஒன்றாகச் சித்திரபானு விளங்குகிறது. சீனய்யங்கார் கும்மியில் குறிப்பிடப்படும் சித்திரபானு ஆண்டு ஆங்கில ஆண்டுக் கணக்கில் கி.பி. 1822 ஆக இருக்க வேண்டும். அந்த ஆண்டு சீனய்யங்காரிடம் வைகாபுரிச் சீமைத் தாசில் (பழனித் தாலுகா) ஒப்படைக்கப் படுகிறது. 1800 ஆவது ஆண்டுக்கு மேல் தான் இப்பகுதியின் முழுப் பொறுப்பும் ஆங்கிலக் கம்பனிக்கு வருகிறது.

சிலாகைக் கயிறு குத்தல் (சீரணியம்மன் கும்மி, பா. 78)

முருக வணக்கம், காளி வணக்கம் ஆகியவற்றில் மக்கள் ஈடுபட்டுத் தங்களை மறந்து கடுமையான காரியங்களைச் செய்வர். அவற்றில் ஒன்று செடல் குத்துதல். உடம்பில் பல இடங்களில் ஊசியால் குத்திக் கொண்டு முதுகுத் தோலுடன் சிறுதேரைக் கட்டித் தெருத் தெருவாக இழுத்து வருவர். இவ்வாறு சிலாகைக் குத்தி கயிறு கட்டியிருப்பதைச் சிலாகைக் கயிறு குத்தல் என்று கூறலாம்.

சிவஞானம் (சீரணியம்மன் கும்மி, பா. 53)

சைவதத்துவம் பற்றிய நுட்பமான அறிவைச் சிவஞானம் என்று கூறுவர். சிவஞான சித்தியார். சிவஞானதீபம் சிவ ஞான போதம்ஆகிய நூல்களைச் சிவஞான விளக்கங்களாகக் கருதலாம்.

இந்தக் குறிப்பிட்ட பாடலில் 'சிவஞானம்' என்பது ஒருவருடைய பெயராக வருகிறது. அவர் 43 முக்கோண எந்திரத்தை வைத்து வணங்கும் முத்துமாரி அம்மனை பணியக்கூடியவர். இந்தச் சிவஞானம் இக்கும்மிப் பாடலின் ஆசிரியாகவும் இருக்க வேண்டும்.

சிவயோக வல்லி (சிவயோக வல்லிக் கும்மி, பா. 1)

மிதுலைப்பட்டியில் கோயில் கொண்டுள்ள இறைவனின் நாயகியாக விளங்குபவளைச் சிவயோகவல்லி என்று அழைக்கிறார்கள். அன்பர்களுக்கு அனைத்தும் வழங்கும் அம்மையாக அவளை நம்புகின்றனர். அந்த நாயகியின் புகழ், சிறப்பு, அருள் ஆகியவற்றைப் பாராட்டி "சிவயோக வல்லிக் கும்மி" பாடப்பட்டுள்ளது.

சிவயோக வல்லி (ஆவுடையார் கும்மி, பா. 1)

மிதிலைப்பட்டியை அடுத்துள்ள சிவயோகபுரத்திலுள்ள கோயிலில் இருக்கும் அம்மனைச் சிவயோகவல்லி என்று கூறுவர். சிவயோகபுரம் ராங்கியத்துக்குப் பக்கத்தில் உள்ளது மிதிலைப் பட்டியிலுள்ள ஆவுடை நாயகியம்மன் கும்மிப் பாடல் ஆசிரியர் சிவயோக வல்லி என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

சின்னத் தம்பி (மாடன் கும்மி, பா. 10)

குலசை மாடனின் குறிப்பிடத்தக்க பக்தனாக சின்னத் தம்பி என்பார் விளங்கினார். முதன்முதலில் அவரே இந்த மாடன் கோயிலை ஏற்படுத்தி இருக்க வேண்டும். 'ஆதி சின்னத் தம்பி' என்று குறிப்பிடுவதனால் இவ்வாறு கருத இடம் உள்ளது. அவர் மாடனைப் பணிவதுடன் பல கொடை விழாக்களும் நடத்தியுள்ளார்.

சின்னத்தம்பிக் கவுண்டன் (சீனய்யங்கார் கும்மி, பா. 50)

புளியம்பட்டியில் மக்கள் கூடி சீனய்யங்காரின் கொடுமைகளுக்கு முடிவு காண வேண்டும் என்று சிந்தித்தபோது தாளையம் ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி கவுண்டன் இருந்ததாகக் கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது.

சின்னத்தம்பிக் கவுண்டன் (சீனய்யங்கார் கும்மி, பா. 95)

சீனய்யங்காரின் கொடுமைகளை மதுரையிலுள்ள கும்பினி அதிகாரியான பீற்றரிடம் எடுத்துக் கூறச் சென்றவர்களின் தலைவராகச் சின்னத் தம்பி கவுண்டன் சென்றார். ஆங்கில

அதிகாரியிடம் மிகவும் தைரியமாகப் பேசினார். ஆனால் பீற்றர் முதலில் இவர்களை ஏமாற்றி விட்டான். பின்னர் வந்த நெல்சன் துரை சின்னத் தம்பிக் கவுண்டனின் உரையை ஏற்று பழனிக்கு வந்து உண்மையை அறிகிறார். சீனய்யங்கார் பதவிப்பிடியிலிருந்து சரிகிறார். இந்தக் கும்மிப்பாடல் சின்னத் தம்பிக் கவுண்டனுக்கு மிகவும் சிறப்பு கொடுத்துள்ளது.

சின்னமலைக் கும்மி என்று இன்னொரு நூல் உள்ளது. அது புகழ்ந்து பாடும் சின்னமலை சர்க்கரை மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்த இன்னொருவர். அவர் காலத்தால் முந்தியவர். ஆங்கிலக் கும்பினியரை எதிர்த்துப் போராடியவர். அவர் ஓடா நிலையில் கோட்டை கட்டி சில ஆண்டுகள் கோவைக் கோட்டத்தை ஆண்டவர். இறுதியில் ஒரு சதிகாரனின் செயலால் சின்னமலை தீரரை ஆங்கிலப் படை பிடித்துக் கொண்டது.

"கட்டுக் கடங்காத காளை களைப்போலக்
கட்டிப் பிடித்துக் கவலையுடன்
வெட்டிச் செயங்கொண்ட சின்ன மலைதனை
வெள்ளைக்கா ரர்கொண்டு போவதைப்பார்"

என்று இந்நிகழ்ச்சியைச் சின்னமலைக் கும்மி விளக்குகிறது. சீனய்யங்கார் கும்மி குறிப்பிடும் சின்ன தம்பிக் கவுண்டர் பழனித் தாலுகாவைச் சேர்ந்தவர்.

சீதை (சிவயோக வல்லிக் கும்மி, பா. 13)

இராமாயணக் கதைத் தலைவனான இராமனின் மனைவி சீதை. இவளைப் பூமாதேவியின் மகளென்றும் திருமகளின் மறு தோன்றல் என்றும் கருதுவர். ஜனகன் எடுத்து வளர்த்த பிள்ளையான சீதையை இராமன் மணந்தான். இலங்கை மன்னனான இராவணன் அவளைத் தந்திரமாகக் கவர்ந்து கொண்டு சென்று விட்டான். இராமன் வானரப் படையின் உதவியோடு இராவணனைக் கொன்று சீதையை மீட்டான். அயோத்திக்கு அரசனானான் கற்புக்கும் அழகுக்கும் அன்புக்கும் நல்ல எடுத்துக்காட்டாகச் சீதை இராமாயணத்தில் விளங்குகிறார்.

சீரணியூர் (சீரணியம்மன் கும்மி, பா. 1)

சீரணியூரைக் கல்வாயில் நாட்டிலுள்ள ஒரு ஊராகக் கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது. 'இளையாற்றங்குடி யிருக்கும்

கல்வாயில் நாடு' என்று ஒரு பழம்பாடலிருப்பதாகக் கூறப் படுகிறது. மேலும் புதுக்கோட்டையின் பகுதியிலும் ஒரு கல்வாயில் நாடிருப்பதாகத் தோன்றுகிறது. 'கல்வாயில் நாடாழ்வான்' என்று மன்னனை ஒரு கல்வெட்டு கூறுகிறது. (S. I. I., Vol. I!) கும்மிப் பாடலைப் பார்த்தால் சீரணியூர் இளையாற்றங்குடியின் பக்கத்தில் இருப்பதே பொருத்தமாகப் படுகிறது. கும்மிப் பாடல் வாழ்த்தும் தெய்வங்களான கைலாச நாதர், நித்தியகல்யாணி, முத்துமாரியம்மன் அனைவரும் இளையாற்றங்குடியில் சிறப்பாக இருக்கின்றார். மேலும் இந்த இடத்துக்குப் பக்கத்தில் குருவிக்கொண்டான் பட்டிக்குச் சமீபமாகக் கீரணிப்பட்டி என்ற ஊர் உள்ளது. அங்கு சித்திரை மாதம் திருவிழாசிறப்பாக நடைபெறுகிறது. கீரணிப் பட்டியே சீரணியூராக இருக்குமோ என்ற எண்ணமும் ஏற்படு கிறது. இந்த ஊர் உறுதியாக இராமநாதபுரத்தில் நகரத்தார் வாழும் பகுதியாகவே இருத்தல் வேண்டும்.

சீர்மை (ஆவுடையார் கும்மி, பா. 8)

இது சிறப்பு என்ற பொருளில் வருவதுடன் எண்வகை யூறினொன்றாகும், அது ஒப்பம், சங்கை, சிறப்பு, செம்மை, நன்னடை ஆகியவற்றைக் குறிக்கும்.

சீவகன் (சீரணியம்மன் கும்மி, பா. 92)

வீரத்துக்குப் புகழ் பெற்றவன் சீவகன். சீவகசிந்தமணி யின் பாட்டுடைத் தலைவனாக வருகிறான். இவன் எட்டு மங்கையரைத் திருமணம் செய்கிறான். இவனைச் சீரணியம்மன் கும்மிப்பாடல் ஆசிரியர் உவமையாகப் பயன் படுத்துகிறார்.

சீனய்யங்கார் (சீனய்யங்கார் கும்மி, பா. 1)

சீனய்யங்கார் புயபலமிக்க வெங்கிட்டயரின் மகன். பழனிச் சீமையை ஆளவேண்டும் என்று விரும்பி மதுரைக்குச் சென்று கும்பினி அதிகாரியான பீற்றரைக் கண்டு பழனித் தாசில்தார் பதவி பெற்றான். தீமைசெய்ய அஞ்சாதவன். லஞ்சம் வாங்கும் கொடியவன். மக்களைக் கசக்கிப் பிழிந்து பணம் பறிப்பவன் இவனை மக்கள் வெறுத்து இவனுக்கு எதிராக வெள்ளையதிகாரியிடம் தூது சென்றனர். முதலில் வெற்றி பெறாவிட்டாலும் இறுதியில் நெல்சன் துரையின் உதவியால் இவன் அகற்றப்படுகிறான். இவனுடைய இரக்கமற்ற செயல் களையும், கடுமையான ஆட்சிமுறைகளையும் விளக்கி இறுதி

யில் இவன் வீழ்ச்சியுற்றதை சீனய்யங்கார் கும்மி விளக்கு கிறது.

சுடலை முத்து (மாடன் கும்மி, பா. 14)

மாடனை வணங்கும் இன்னொருவராகச் சுடலை முத்து என்பவரைக் கருதலாம். இவரைக் கும்மிப் 'பாடல்' சுடலை முத்து மகீபன்' என்று கூறுவதினால் இவர் அப்பகுதிக்குத் தலைவராக இருந்திருக்கலாம். என்று நினைக்க இடமுள்ளது. இவர் கொடைச் சிறப்பு மிக்கவர். அன்னதானம் செய்து அன்பையும் அருளையும் வழங்கியவர்.

சூடாமணி (சீனய்யங்கார் கும்மி, பா. 66)

சூடாமணி என்பது தலையில் அணியக் கூடிய ஓர் அணிகலன். சுட்டி போன்ற அமைப்புடையது. நவ ரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கும் வேந்தர்களுக்குச் சூடாமணி போன்றவனாக வீரண கவுண்டன் விளங்கினான்.

செடில் குத்தல் (சீரணியம்மன் கும்மி, பா. 68)

அம்மன் வணக்கத்தில் பக்தர்கள் உடம்பில் சிறுசிறு ஊசி களைக் குத்திக் கொள்வதைச் செடில் குத்தல் அல்லது செடல் குத்தல் என்று கூறுவர். அவ்வாறு செய்யும் போது மஞ்சள் துணி கட்டிக் கொள்வர். சிலர் முதுகில் செடல் குத்தி அதில் ஒரு சிறு தேரை இணைத்துத் தெருவில் இழுத்து வருவதும் உண்டு. நோயால் அவதிப்பட்டவர்கள் செடல் குத்தலை நேர்த்திக் கடனாகச் செய்கிறார்கள். செடில் மரம் என்பது ன்ஒறு உண்டு. ஒரு கனத்த மரக்கம்பத்தில் துளையிட்டுச் சுழலும் துலாம் ஒன்றை நிறுத்துவர். அத்துலாத்தின் நுனியில் மனிதரைக் குத்திச் சுழலச் செய்வர்.

செல்லப்பன் (சீனய்யங்கார் கும்மி, பா. 49)

புளியம்பட்டியில் மக்கள் கூடி சீனய்யங்காரின் கொடுமை களுக்கு முடிவு காண வேண்டும்என்று சிந்தித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த முக்கியமான ஒருவர் செல்லப்ப தீரன் என்று கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது. அவரைப் 'போசன்' என்று சிறப்பித்துக் கூறுவது சிந்தனைக்கு உரியதாகும்.

சேனை நாதர் (சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி, பா. 1)

வைணவ மரபின்படிச் சக்கரத்தாழ்வாரைச் சேனை நாதர் என்று கூறுவர். சைவர்கள் பிள்ளையாரைப் பற்றிக் காப்பு

பாடுவது என்று வைணவர்கள் சேனை நாதரைப் பாடுவர். இவரை விஸ்வக்சேனர் என்றும் அழைப்பர்.

சைதுறாவுத்தர் (சீனய்யங்கார் கும்மி, பா. 37)

சீனய்யங்காரின் காரியக்காரரின் ஒருவராகச் சைது றாவுத்தர் குறிப்பிடப்படுகிறார். இவரைப் போன்ற இஸ்லாமியர் ஒருவரைச் சீனய்யங்கார் தன்னுடைய பணிக்கு ஏற்றுள்ளதி லிருந்து அவர் சமுதாயத்தில் உள்ள பல பகுதியினரைத் துணையாகக் கொள்ள விரும்பி இருப்பது தெளிவாகிறது.

சொக்க நாராயணர் (சௌ. நா. பெ. கும்மி பா. 12)

சௌமிய நாராயணப் பெருமாளைச் சொக்க நாராயணர் என்று கூறுவர். சொக்கன் என்றால் அழகன் என்று பொருள். திருமால் நின்ற கோலத்தில் சௌமிய நாராயணப் பெருமாள் என்ற திருப் பெயரில் மிகவும் அழகாகத் தோன்றுவதால் சொக்கநாராயணர் என்று அழைத்திருக்கலாம்.

சொக்கேசர் (மருத பாண்டியன் கும்மி, பா. 47)

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் இறைவனைச் சொக்கேசன் என்று அழைப்பர். "சொக்கன்" என்றால் அழகன் என்று பொருள். பணமாபுரியில் சொக்கேசர் கோயிலுக்கு முன்பாகச் சரவண முத்துவேள் ஒரு தெப்பக்குளம் வெட்டியதாகக் கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது.

சோமன் (மாடன் கும்மி, பா. 8)

சோமனைப் பற்றிப் பல வரலாறுகள் கூறப்படுகின்றன:

1. பிரசாபதிக்கும் மநஸ்வநிக்கும் சோமன் பிறந்தானென்றும் அவன் மனைவி மனோகரி என்றும் ஒரு கதை கூறுகிறது.

2. வசுக்களில் ஒருவன் 3. சந்திரன்

4. இவன் ஒரு வேதியன் என்றும் காமத்தால் இழிகுலப் பெண்களைப் புணர்ந்தவன் என்றும் இவனுடைய மனைவி சுசீலை நல்லொழுக்கமுடையவள் என்றும் ஒரு செய்தி சோமனைப்பற்றிக் காவிரிப்புராணத்தில் சொல்லப்படுகிறது.

5. சோமன் என்ற செல்வந்தர் திரிபுவனத்தைச் சேர்ந்தவர் ஒட்டக்கூத்தரைக் கொல்ல வந்த கூட்டத்தாரிடமிருந்து அவரைக் காத்தவன் என்பது ஒரு கதை.

தண்டிகேசன் (*சிவயோக வல்லிக் கும்மி*, பா. 4)

திருவாரூரில் பிறவிக்குருடராய் அவதரித்த ஒரு நாயனார். இவரைச் சமணர் வெறுத்தனர். கண்குருடாக இருப்பதுடன் தங்கள் அறிவுரை கேட்க முடியாது காதும் செவிடாக இருப்பதாகக் கூறி நகையாடினர். சிவனருளால் தான் விழி பெற்று விடுவதாக நாயனார் கூறி இறைவனை வேண்டினார். பரமனுக்கு மெய்யடியவராகிய தண்டியடிகள் நாயனார் குளத்தில் மூழ்கி எழுந்ததும் நாயனார் கண்பெற்றார். சமணர் ஒளிஇழந்து குருடாயினர். இதனைக் கண்ட அரசன் வியப்புற்று சமணரை ஊரைவிட்டுத் துரத்தினார். தண்டி நாயனார் சிவத்தொண்டு செய்து முத்தியடைந்தார்.

தாதுவருடம் (ஆவுடையார் கும்மி, பா. 25)

தமிழ் வருடங்களில் ஒன்றின் பெயர் தாது வருடம். அவ்வருடத்தில் கடுமையான பஞ்சம் தமிழ்நாட்டில் நிலவியதாக வரலாறு கூறுகிறது. அந்தத் தாது வருடத்துக்குச் சரியான ஆங்கில ஆண்டு கி.பி. 1876 ஆகும். அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த நந்தனம் ஆண்டிலும் மிகக் கடுமையான பஞ்சம் இருந்ததாக வரலாறு விளக்கிக் கூறும் அது ஆங்கில ஆண்டான கி.பி. 1892 ஆகும்.

தாராபுரம் (சீனய்யங்கார் கும்மி, பா. 131)

தாராபுரம் கோவை மாவட்டத்திலுள்ள ஒரு முக்கியமானா ஊர். அதே பெயருடைய தாலுகாவின் தலைநகரம். அமராவதி ஆற்றின் கரையிலுள்ளது. அங்குள்ள ஈஸ்வரன் கோயிலும் தொன்மையான சிறு கோட்டையும் குறிப்பிடத்தக்க சிறப்புகள் உடையன. சீனய்யங்கார் கொடுமையை மதுரையில் உள்ள ஆங்கில அதிகாரியிடம் சொல்லியும் பயனில்லாது போகவே மக்கள் கோவையைச் சேர்ந்த தாராபுரத்தில் குடியேற விரும்புகிறார்கள் அதற்கான அனுமதியைக் கோவை அதிகாரியிடமிருந்து பெறுவதற்காக அலங்கை நகரில் கூடி ஆலோசிக்கிறார்கள்.

தாளைநகர் (*சீனய்யங்கார் கும்மி*, பா. 95)

பழனியிலிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்திலிருக்கும் தாளையத்தைத் தாளை நகர் என்று கூறியிருக்கலாம். இல்லையானால் தாளையூத்து என்ற ஊரைக் குறிப்பிட்டிருக்கலாம். இரண்டும் பழனித் தாலுகாவைச் சேர்ந்த இடங்களே. சீனய்

யங்காரின் கொடுமைகளை மதுரையிலுள்ள கும்பனி அதிகாரிகளிடம் எடுத்துக் கூறச் சென்ற வீரர்களில் சிறந்தவரான சின்னத் தம்பிக் கவுண்டன் தாளை நகரைச் சேர்ந்தவர்.

தாளையம் (சீனய்யங்கார் கும்மி, பா. 50)

தாளையம் என்பது பழனியிலிருந்து மேற்கே சுமார் ஐந்து மைல் தூரத்திலிருக்கும் மிகச் சிறிய ஊர். சீனய்யங்காரை எதிர்த்துப் புளியம் பட்டியில் கூடிய கூட்டத்தில் தாளையம் ஊரைச் சேர்ந்த சின்னத் தம்பிக் கவுண்டன் இருந்ததாகச் சீனய்யங்கார் கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது.

திண்டுக்கல் பேட்டை (சீனய்யங்கார் கும்மி, பா. 60)

பழனித்தாலுகாவின் மேலதிகாரம் திண்டுக்கல்லிலுள்ள ஆங்கில அதிகாரியான ராபர்ட்டிடம் இருந்தது. ஆகையினால் பழனி தாசில்தாரின் கொடுமைகளை எடுத்துக் கூற மக்கள் திண்டுக்கல்லுக்கு வருகிறார்கள். அங்குள்ள ஒரு பேட்டையில் தங்கி இருந்தனர். பேட்டை என்பது சுற்றுச் சுவருடன் கூடிய ஒரு பாதுகாப்பான இடம். அதில் வண்டி முதலியவற்றை நிறுத்தி வைக்கலாம். மக்களும் அச்சமின்றிப் படுத்து உறங்கலாம். அதற்காகப் பேட்டையின் உரிமையாளருக்குக் கூலி கொடுக்க வேண்டும். திண்டுக்கல் மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு முக்கியமான இடம்.

திருக்கோட்டியூர் (சௌமிய நாராய...... பா. 2)

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரின் பக்கம் திருக்கோட்டியூர் இருக்கிறது. இது ஒரு சிறந்த வைணவத்தலம் இங்கு சௌமிய நாராயணப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். நாலாயிரம் திவ்வியப்பிரபந்தத்தில் திருப்பல்லாண்டுக்கு அடுத்த முதற் பாசுரத்தில் 'வண்ணமாடங்கள் சூழ் திருக் கோட்டியூர்' என்று இத்த இடம் போற்றப்படுகிறது. இது திருப்பத்தூருக்குத் தெற்கே ஐந்து கல் தொலைவில் சிவகங்கைச் சாலையில் உள்ளது. இங்குள்ள வைணவக் கோயில் வரலாற்று சிறப்புடையது. மங்கள சாசனம் பெற்றது. இலக்கியங்களில் இடம் பெற்றது. கோயில் அமைப்பில் நல்ல சிறப்பினை உடையது.

இது இராமனுஜருடன் மிகுந்த தொடர்புடைய வைணவப் பதியாகும். இவர் திருவரங்கத்திலிருந்து இங்கு வந்தார். வைணவ மந்திரமாகிய திருமந்திரத்தின் சீரிய பொருளை

நம்பியிடம் பலதடவை முயன்று அறிந்தார். இதை இராமானுஜர் வேறு யாருக்காவது கூறினால் தலை வெடித்து விடும் என்ற சாபம் இருந்தது. பிறருக்கு இம்மந்திரத்தை விளக்க விரும்பினார். தன் தலை வெடித்தாலும் சரியே மந்திரத்தைப் பலர் அறியக் கூற வேண்டும் என்று துணிந்து விட்டார். உடனே ஒரு மதிலின் மேலேறிப் பலருக்கு முன்னால் விளக்கிக் கூறினார். அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். இராமானுஜரின் தலை வெடிக்கவில்லை. இராமானுஜர் அருளுபதேசம் செய்த இடத்தில் அவருடைய திருமேனி உள்ளது.

இங்குள்ள ஆலயத்தின் கருவறையின் மேல் அரங்க விமானம் உள்ளது. இதன் நிழலும் தரையில் விழுவதில்லை. சிவனது சன்னிதி வழியாக மூலவரான திருமாலை வழிபடச் செல்ல வேண்டும். இக்கோயிலின் அடித்தளத்தில் கிடந்த கோலத்திலும், இரண்டாவது தளத்தில் நின்ற கோலத்திலும், மூன்றாவது தளத்தில் இருந்த கோலத்திலும் திருமால் காட்சி தருகிறார்.

இப்பதியைப் பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஐவரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். கோட்டியூர்க் கலம்பகம், கோட்டியூர் பிள்ளைத் தமிழ் ஆகியவை இவ்வூரைப் புகழ்ந்து பாடப்பெற்ற நூல்கள்.

நல்லந்தையார் என்ற சங்கப் புலவர் கோட்டியூரைச் சேர்ந்தவர். இராஜராஜ சோழனின் கல்வெட்டு இந்தக் கோயிலில் உள்ளது. திருக்கோட்டியூர் மகாத்மியம் கோயிற் சிறப்பை விளக்கிப் பாடுகிறது. திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்ததே இந்த ஊரில்தான் என்று கூறப்படுகிறது.

இங்குள்ள திருமாலைக் கிடந்தகோலத்தில் பள்ளி கொண்ட பெருமாள் என்றும் நின்ற கோலத்தில் சௌமிய நாரயணப் பெருமாள் என்றும் இருந்த கோலத்தில் வைகுண்ட நாதன் என்றும் அழைப்பர். இந்தக் கும்மி இவ்வூரில் உள்ள பெருமாளைச் சிறப்பித்துப்பாடுவதாகும்.

திருமலை வேலன் (மருத பாண்டியன் கும்மி, பா. 53)

குற்றாலத்துக்கு அருகிலிருக்கும் திருமலையில் கோயில் கொண்டுள்ள முருகனைத் திருமலைவேலன் என்று கும்மிப்

பாடல் குறிப்பிடுகிறது. இந்த முருகனைப் பற்றித் திருமலை முருகன் பிள்ளைத் தமிழ், திருமலை ஆண்டவர் குறவஞ்சி ஆகிய நூல்கள் உள்ளன.

திருவனந்தன் (சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி, பா, 11)

அனந்தன் என்பது பாம்பு. ஆதி சேடனைத் திருவனந்தன் என்று சிறப்பித்து கூறுவர். ஆதிசேடனுக்கு ஆயிரம் தலை இருப்பதாகப் புராணம் கூறும். அதன் மேல் திருமால் அறிதுயில் கொள்ளுவார். அந்தப் படுக்கையைத் திருவனந்த சயனம் என்று கூறுவர்,

துருவன் (சீரணியம்மன் கும்மி, பா.76)

உத்தான பாதனுக்குச் சுநீதி என்பவளிடம் பிறந்தவன் துருவன். சுருசி இவனுடைய சிற்றன்னை. அவள் இவனை வெறுத்தாள். அவளுடைய விருப்பத்துக்குக் கட்டுப்படும். தந்தையும் துருவனை வெறுத்தான் ஆகையினால் தாயாரிடம் சென்று நடந்தவை கூறித் தவம் செய்யப் புறப்படுகிறான், நாரதரால் உபதேசம் பெறுகிறான். அவனுடைய தவ வலிமையினால் அவனுக்குத் துருவபதம் கிடைக்கிறது. இவனுடைய பதம் சப்தரிஷி மண்டலத்துக்கும் பதின்மூன்று லட்சம் யோசனை தூரமுடையது. இவன் பின்னர் தாய் தந்தையரைக் கண்டு வணங்கினான், பல்லாண்டு நல்லாட்சி செய்தாகக் கதை கூறுகிறது, துருவ நட்சத்திரம் என்று அழைப்பது இவனையே என்று சொல்வர்.

தெப்பத்திருநாள் (மருதப் பாண்டியன் கும்மி, பா. 3)

பெரிய ஆலயங்களில் தேரோடும் வீதியும் தெப்பக் குளமும் இருப்பதைக் காணலாம். ஆண்டுக்கு ஒரு நாள் இறைவனைத் தெப்பத்தில் இருத்திக் குளத்தை வலம் வரச் செய்வது வழக்கம். விழாவில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக அது நடைபெறும். பெரும்பாலும் தெப்பம் ஓடும் குளத்தின் மத்தியில் ஒரு மைய மண்டபம் இருக்கும். தெப்பம் அதைச் சுற்றி மூன்று முறை வலம் வரும். இதனைத் தெப்பத்திருநாள் என்று சிறப்பித்துக் கூறுவர். பெரும்பாலும் சிவன் கோயில்களில் தான் தெப்பத்திருநாள் நடைபெறுகின்றது. மதுரையில் வண்டியூர்த்தெப்பக் குளம், சென்னை கபாலீஸ்வரர் கோயில், சுசீந்திரம் கோயில் போன்றவற்றில் இன்றும் தெப்பம் சிறப்பாக நடைபெறுன்றது. சிவனைத் 'தோணியப்பர்' என்று அழைப்பர். மகா பிரளய காலத்தில் தோணியின் மூலம் அன்பர்களைக்

காத்தவர் என்பது கதை. இதற்கும் தெப்பத் திருநாளுக்கும் தொடர்பு உண்டா என்பதைச் சிந்திக்கலாம். கும்மிப் பாடலில் 'செஞ்சடையானுக்குக் தெப்பத் திருநாள்' என்று சிவனையே குறிப்பிடுவதைக் காணலாம்.

தென்காசி (மருத பாண்டியன் கும்மி, பா. 16)

திருநெல்வேலி மாவட்டத்தின் வட பகுதியில் தென்காசி உள்ளது. திருக்குற்றாலத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. குற்றால அருவி ஆறாகி இதன் வழியாக ஓடுகிறது மிகவும் செழிப்பான இடம். வடகாசி போன்று தென்காசி சிவன் கோயிலுக்குப் பெயர் போன இடம். பாடல் பெற்ற இடம் நெல் மிகுதியாக விளைவதுடன் முக்கனிகளும் இங்கு அதிகம் கிடைக்கின்றன.

தென்பழனாபுரி (சீனய்யங்கார் கும்மி, பா. 1)

பழனிப் பகுதியைத் தென்பழனாபுரி என்று பல சிற்றி லக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'பழனம்' என்றால் வயல். பழனியைச் சுற்றிச் செழிப்பான வயல்கள் இருப்பதினால் பழனாபுரி என்று அழைத்திருக்கலாம். சங்கப் பாடலான திருமுருகாற்றுப்படை திருஆவினன்குடி என்றே குறிப்பிடு கிறது. கொங்கு மண்டல சதகம், வையாபுரிப் பள்ளு, மயில்விடு தூது ஆகியவை வையாபுரி நாடு என்று கூறுகிறது. பழனிக் கல்வெட்டு, ஐவர்மலைக்கல்வெட்டு ஆகியவை வைகாவூர், வையாவூர் என்று குறிப்பிடுகிறது. இந்தத் தென் பழனாபுரியில் சீனய்யங்கார் ஆங்கிலக் கும்பினியாரின் தாசில் தாராகப் பணியாற்றியுள்ளார்.

தேவநல்லூர் (மருத பாண்டியன் கும்மி, பா. 24)

வாசுதேவநல்லூர் என்பதை முதற்குறையாகத் தேவ நல்லூர் என்று கும்மிப்பாடல் குறிப்பிடுகிறது. இது மேற்குத் தொடர்மலையடிவாரத்தில் உள்ளது. திருநெல்வேலி மாவட் டத்தைச் சேர்ந்தது. தென்காசி மதுரைப் பெருஞ்சாலையில் உள்ளது. அங்கு ஓடும் ஆறு ஊரை இரண்டாகப் பிரிக்கிறது. கரும்பு மிகுதியாகக் கிடைக்கிறது. முன்பு இது சிவகிரி ஜமீனைச் சேர்ந்தது. வாசுதேவநல்லூர்ப் புராணம் என்ற நூல் சுவடிவடிவில் திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கீழ்த் திசைச் சுவடி நிலையத்தில் உள்ளது.

தேவர்க்கமுதளித்தல் (ஆவுடையார் கும்மி, பா. 24)

திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் அமுதம் கிடைக்கும் பொருட்டுக்கடைந்தனர். அங்கு அமுதம் தோன்று

வதற்குப் பதிலாக நாணாகப் பயன்பட்ட வாசுகி என்ற பாம்பு நஞ்சைக் கொட்டியது. அதைச் சிவபெருமான் உண்டு விடுகிறார். பின்னர் அமுதம் கிடைக்கிறது. அதனைத் தேவர்கள் உண்ணுமாறு கொடுத்து விடுகிறார். தான் நஞ்சினை உண்டு தன்னை நம்பியிருக்கும் உயிர்களுக்கு அமுதத்தைக் கொடுத்த இறைப்பண்பை எப்படிப் போற்றிப் புகழ்ந்தாலும் தகும். சிவனே மும்மூர்த்திகளில் சிறந்தவர். அவரே நந்தன ஆண்டில் மக்களை வாட்டி வதைத்த பஞ்சத்தை போக்கிக் காக்க வேண்டும் என்று கும்மி ஆசிரியர் அன்புடன் வேண்டுகிறார்.

நரவாணன் (ஆவுடையார் கும்மி, பா. 1)

மனிதர்களில் சிறந்தவர்களை 'நரவாணன்' என்று கூறுவர். இந்தக் கும்மிப் பாடல் ஆசிரியரான குமாரசாமிக் கவிராயரின் பாட்டனாரைக் குழந்தை நரவாணன் என்று அழைப்பர்.

நல்லுச் செட்டியார் (நல்லாண்டவர் கும்மி, பா. 59)

நல்லாண்டவர் கும்மி பாடுவதற்குக் காரணமாகவும் ஆதரவாகவும் இருந்த கொடை வள்ளலாக நல்லுச் செட்டியார் இருந்திருக்க வேண்டும். அவரைக் கும்மி ஆசிரியர் வானளாவப் புகழ்ந்து பாடுகிறார். அவரை வள்ளலாகவும், வில் விசையனாகவும், சொல் விசையனாகவும் ஆசிரியர் சிறப்பித்துக் கூறுகிறார்.

நவக்கிரகம் (மாடன் கும்மி, பா. 4)

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் வியாழன், சுக்கிரன் சனி, ராகு, கேது, ஆகியவை நவக்கிரகங்கள் ஆகும். இந்த ஒன்பது கிரகங்களையும் சோதிட நூல்கள் அடிப்படை அமைப்பாகக் கொண்டுள்ளன. சிவன் சூரியனாகவும், உமை சந்திரனாகவும், முருகன் செவ்வாய் அல்லது அங்காரகனாகவும், திருமால் புதனாகவும், நான்முகன் குரு அல்லது வியாழனாகவும், இந்திரன் சுக்கிரன் அல்லது வெள்ளியாகவும், யமன் சனியாகவும் பத்திரகாளி இராகுவாகவும், சித்திரகுப்தன் கேதுவாகவும் இருப்பதாக நம்புகின்றனர். இவற்றைத் தவிரவும் தூமாதி பஞ்சக் கிரகங்களும் சொல்லப் படுகின்றன.

நவக்கிரங்களின் ஆற்றலினால் சிருஷ்டி (பிறப்பு) திதி (வளர்தல்) சங்காரம் (இறத்தல்) ஆகிய மூன்றும் நடைபெறுவதாக நம்புகின்றனர். கிரகங்களின் திசாபுத்தி, உச்சம், நீசம் பகை, ஆட்சி, நட்பு, கவிப்பு, பார்வை ஆகிய அனைத்தையும் கொண்டு பலன்களைக் கணிக்கின்றனர். நவக்கிரக உதயம், போக்கு, வீடு மாறல், வக்கிரம் ஆகியவற்றையும் கணக்கிடுவர். கணக்குச் சரியானால் பலன்கள் சரியாக இருக்கும் என்று உறுதியாகச் சோதிட நூல்வல்லார் கூறுகின்றனர்.

நவபத்து (சீரணியம்மன் கும்மி. பா. 40)

பலவகையான வாத்தியக் கருவிகள் இணைந்து இசைக்கக் கூடிய கூட்டு வாத்தியமாக நவபத்து விளங்குகிறது. தற்காலத்திலுள்ள ஆர்சஸ்டிரா போன்ற கூட்டு மேளத்துடன் நவபத்தை ஒப்பிட்டுக் காணலாம். இது முற்காலத்து இஸ்லாமிய அரசர்களின் ஊர்கோலத்தில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. சீரணியம்மன் தெருவலம் வரும்போது நாதசுரம் மணிமுரசு ஆகியவை ஒலிக்கும் போது நவபத்தும் இசைக்கப்படுகிறது.

நவமணி (சீரணியம்மன் கும்மி, பா. 44)

ஒன்பது வகை சிறந்த மணிகளான கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் ஆகியவை நவமணிகளாகும்.

நாச்சிமுத்து (சீனய்யங்கார் கும்மி, பா. 196)

நாச்சிமுத்து என்பவர் மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்தவர். இவர்கள் தலையில் முடிசூட்டி ஆண்டவர் என்பதை 'மின்னுங் கிரீடம் புனைந்த மன்றாடியார்' என்ற தொடரில் ஆசிரியர் புலப் படுத்துகிறார். இவர் இனிமையாகப் பேசும் ஆற்றலுடையவராக இருந்ததினால் 'கன்னல் மொழித்துரை நாச்சிமுத்தேந்திரன்' என்று சிறப்பிக்கப்படுகிறார். இவருக்கு மக்கள் நால்வர். அவர்களில் ஒருவர் இந்நூலாசிரியரான காளியண்ணன்.

நாட்டண்மைக்காரர் (சீனய்யங்கார் கும்மி, பா. 40)

நாட்டைச் சிறிய சிறிய பகுதிகளாகப் பிரித்து அதில் வரியைப் பிரித்து அரசுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்பு நாட்டாண்மைக்காரருக்கு உண்டு. இவரே குறிப்பிட்ட

ஊருக்குத் தலைவர் போன்று செயல் படுவார். வழக்கு களைக் கேட்டுத் தீர்ப்புக் கூற வேண்டிய பொறுப்பையும் ஏற்க வேண்டிய நிலை வந்தது. அந்த ஊருக்கும் அரசுக்கும் இடையிலுள்ள இணைப்புப் பாலம் போன்று நாட்டண்மைக்காரர் செயல்படுவார். பிற்காலத்திலுள்ள கர்ணம், கிராம முன் சீப் ஆகியோர் நாட்டாண்மைக் காரர் களின் பின்தோன்றல்களாக உள்ளனர். நிலங்களை அளந்து திட்டப்படுத்துவது போன்ற பொறுப்புகளும் அவருக்கு இருந்தது. தாசில்தார் அவரைக் கலந்து ஆலோசித்த பின்னரே குறிப்பிட்ட ஊரின் நிருவாகத்தில் தலையிடுவது வழக்கம். தமிழ்நாடு முழுவதும் நாட்டாண்மைக்காரர்கள் இருந்துள்ளதாக அறியமுடிகிறது,

நானாடு (சிங்கை அழகிய அம்மன் கும்மி, பா. 26)

இராமநாதபுரம் மாவட்டத்தின் வடபகுதியிலுள்ள பகுதி முன்பு கானாடு, கோனாடு, பூங்குன்றைநாடு, கல்வாசல் நாடு என நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை நான்கையும் நானாடு என்று கும்மிப் பாடல் குப்பிடுகிறது.

நாற்பத்து முக்கோண யந்திரம் (சீரணியம்மன் கும்மி, பா .53)

சக்தியம்மனை யந்திர வழிபாடு செய்யும் வழக்கம் இந்தி யாவிலும் இலங்கையிலும் மிகுதியாக உள்ளது. யந்திரங்களில் சிறந்தது ஸ்ரீ சக்கரம். சக்தி வணக்கத்தில் மிக முக்கியமான ஸ்ரீ சக்கரத்தில் நாற்பத்தி மூன்று முக்கோணங்கள் உண்டு. இவ்வியந்திரத்தை மேரு, கைலாசம், பூ என்ற மூநிலையாக வகுப்பர். இவற்றை ஒட்டி மேருபிரஸ்தாரம் கைலாசப் பிரஸ்தாரம், பூப்பிரஸ்தாரம் என மூவகை ஸ்ரீசக்ரயந்திரங்கள் அமைகின்றன. யந்திரத்துள் சிறந்தது மேருபிரஸ்தாரம். இதன் உச்சியில் விளங்குவது பிந்து. இதன் பீடமாக அடியிலுள்ளது முக்கோணம். இதற்குக் கீழிருப்பது எண் கோணம். இதனடியில் பத்துக் கோணமும் உள்ளது. மேலும் ஒரு பத்துக் கோணம் கீழே இருக்கும். அதற்கு அடியில் பதினான்கு கேணமும், பின்னர் எட்டுத் தளங் களும் அமையும். எட்டுத் தளங்களைத் தாங்கி நிற்கப் பதினாறு தளங்கள் காணப்படும். மூன்று வட்டங்கள் இவற்றைத் தாங்கும் பூபுரங்கள் இந்த வட்டங்களின் அடியில் நான்கு பக்கங்களிலும் நெருங்கி இருக்கும். பிந்து என்பது தேவியின் இருப்பிடம் ஏனைய முக்கோணங்கள் பரிவாரத் தெய்வங்களுக்கு உரியன. பெரும்பாலான யந்திரங்கள்

செம்புத் தகடுகளில் வரையப்பட்டிருக்கும். பொன், வெள்ளித் தகடுகளும் பயன் படுத்தப்படும். சக்தி உருவங்களை நிலை நிறுத்துவதற்கு முன்னர் இத்தகைய யந்திரங்கள் நிறுவப்படும்.

நீலி (சீரணியம்மன் கும்மி, பா, 51]

நீலியை இயக்கி என்றும் கூறுவர். இவள் முற்பிறப்பில் நவஞ்ஞானி என்னும் பார்ப்பனி. தன் கணவன் தன்னையும் தன் குழந்தையையும் கொன்றதற்காக அடுத்த பிறப்பில் அவனைக் கொன்று பழிவாங்கியவள். நீலி திருவாலங்காட்டுப் புரிசைக் கிழாருக்கு மகளாகப் பிறந்தாள். அவளுடைய செயல்கள் அச்சமூட்ட அவளைப்பேயென்று அகற்றினார். அவளுடைய முற்பிறப்புக் கணவன் தரிசன செட்டியாகப் பிறந்திருப்பதை அறிந்து அவனிடம் செல்கிறாள். அவனைப் பலவாறு மயக்கி பழையனூர் வேளாளருடன் முறையிட்டு செட்டியின் மறுப்புக்கு மீறி அவனுடன் இரவில் தங்கினாள். அப்பொழுது அவனைத் துன்பப்படுத்திக் கொன்று விட்டாள். மறுநாள் அந்த ஊரையே அல்லல் படுத்தி அனைவரையும் கொன்று நீலியாகி விடுகிறாள். அவளை இயக்கியாகக் கருதி இன்னும் வழிபட்டு வருகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பழவூர். இயக்கி மிகவும் புகழ் வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறது. இந்தப் பழவூர் குறிப்பிடப்படும் பழையனூராக இருக்குமா என்பது சிந்தனைக்கு உரியதாகும். வடமாவட்டங்களிலும் பழையனூர் என்ற இடம் உள்ளது. ஆனால் நீலி அல்லது இயக்கி வணக்கம் தென்பகுதியில் இருப்பது போன்று வடபகுதியில் இல்லை என்பது கருதவேண்டிய செய்தியாகும். திருஞானசம்பந்தரும், காரைக் காலம்மையாரும் குறிப்பிட்டுள்ள நீலி (பேய்மகள்) திருவாலங் காட்டுக்கு அருகிலுள்ள பழையனூரைச் சேர்ந்தவள். வில்லுப்பாட்டில் நீலிகதை மிகச் சிறப்புடையது. நீலி முற்பிறப்பில் இலட்சுமி என்ற தாசியாக இருந்து கணவரால் கொல்லப்படுகிறாள். அடுத்த பிறப்பில் தன் கணவன் செட்டியாகப் பிறக்க அவனை நீலி பேயாக வந்து கொல் கிறாள். பின் வடக்கிலிருந்து தென்னாடு செல்வதாகக் கதை வளர்கிறது. அவள் தனது முக்கியமான இருப்பிடமாகத் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பழவூரைத் தேர்ந் தெடுத்தாக ஒரு பாடல் கதை கூறுகிறது. குமரி மாவட்டத்

தைச் சேர்ந்த முப்பந்தலும் இயக்கி வணக்கத்துக்குச் சிறந்த இடமாகும்.

நீழலுறை நாதன் (சீரணியம்மன் கும்மி, பா. 35)

கல்லால மரத்தினடியில் இருந்து சனகாதி முனிவர் நால்வருக்கு மௌன உபதேசம் செய்த இறைவனை நீழலுறை நாதன் என்று கூறுவர். இதே முறையில் திருப் பெருந்துறையில் மணிவாசகப் பெருமானுக்குக் குருந்தை மர நிழலிலிருந்து இறைவன் அருளுபதேசம் செய்தார்.

அருகக் கடவுள்

'பூமலி யசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவன் எழுத்தே'

என்னும் நன்னூல் சூத்திரப்படி சமணக்கடவுள் அசோகநிழலில் அமர்ந்தவராகக் குறிப்பிடப்படுகிறார். ஆனால் கும்மிப்பாடல் அருகக் கடவுளைக் குறிப்பிடவில்லை என்பது உறுதி.

'விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்' (திருவாசகம்,

கீர்த்தித் திருவகவல், 60—61) என்ற பாடல் இறைவன் குருந்தின் கீழிருந்ததைக் கூறும்.

'கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லா நிறைமலர்
நல்லார் புனைவரே'

என்ற சிவஞானபோதக் காப்புச் செய்யுளும் இதனை விளக்கும். திருவிளையாடற் புராணத்திலும் கல்லாலின் நிழலமர்ந்த

குறிப்பு வருவதைப் பார்க்கலாம்.

'கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்

சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்'

என ஞான விளக்கமாகவே இப்பாடல் அமைந்திருப்பதை உணரலாம்.

நெல்லீசன் துரை (சீனய்யங்கார் கும்மி, பா. 172)

நெல்லீசன் துரை (Nelson) என்பவர் மதுரையில் ஆங்கில ஆணையாளராக இருந்தவர். இவருக்கு முன் அங்கு பீத்தரு சாயபு (Peter) அதிகாரியாக இருந்தார். இவர் பழனித் தாலுகாவில் கொடுமையாக நிருவாகம் செலுத்திய சீனய்யங்காருக்கு ஆதரவாக இருந்தார், ஆகையினால் மக்கள் இவரை வெறுத்து வேறு இடத்துக்குப் போக முடிவு செய்தனர். ஆனால் நெல்லீசன் துரை பழனித் தாலுகாவில் நடக்கும் கொடுமைகளை நன்கு அறிந்து சீனய்யங்காரைப் பதவி நீக்கம் செய்தார். மக்கள் நெல்லீசன் துரையின் செயலைப் பாராட்டி மீண்டும் பழனித்தாலுகாவில் குடியேறினார்கள்.

நெல்லையப்பேந்திரன் (மருத பாண்டியன் கும்மி, பா. 18)

நெல்லையப்பேந்திரன் என்பார் சரவண முத்துவேளின் தந்தையார் காராள வம்சத்தைச் சேர்ந்த முத்துக் குமரேந்திரனுடைய மூத்த மகனாவார். இவர் சந்தி வினாயகன் பேரில் ஒரு கும்மிப்பாடல் பாடியதாக மருத பாண்டியன் கும்மி இருபத்தொன்பதாம் பாடல் மூலம் அறிய முடிகிறது. இவரைச் செந்தமிழ்க் கும்ப முனிவருக்கு இணையாகக் கருதி இக்கும்மிப் பாடல் பாராட்டுகிறது.

பகீரதன் வேண்டல் (ஆவுடையார் கும்மி, பா. 30)

இவன் திலீபனின் மகன். இவனுடைய முன்னோர்களாகிய சகரர்கள் ஆயிரவரும் துறக்கம் பெற்றுய்யக் கடும் தவம் செய்து கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான். அதன் பெருக்கைப் பூமாதேவி தாங்கமாட்டாள் எனக் கருதிச் சிவன் அதனைத் தன் சடையில் தாங்கிப் பின்னர் பூமியில் இறங்கச் செய்தார். கங்கையின் புனிதத்தால் சகரபுத்திரர் கதி பெற்றனர் என்பது கதை. பகீரதனுடைய விடாமுயற்சியே இக்கதையில் வலியுறுத்தப்பெறுவது.

பதினாறு பேறுகள் (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 40)

பெருமை, தேகதிடம், அழகு, இளமை, நோயின்மை, வாழ்நாள், நல்லூழ், கல்வி, அறிவு, துணிவு, வலி, வெற்றி, நுகர்ச்சி,

நன்மக்கட்பேறு நெல், பொன் ஆகிய பதினாறும் நற்பேறு களாகக் கருதப்படுவன.

பஞ்ச தந்திரி (சீனய்யங்கார் கும்மி, பா. 38)

மித்திரபேதம், சுகிர்லாபம், சந்திவிக்ரகம், அர்த்தநாசம், அசம்பிரேட்சியசாரித்வம் ஆகிய ஐந்தும் பஞ்சதந்திரங்களாகும். இவற்றை உணர்ந்து அறிவுக் கூர்மையோடு செயலாற்றும் திறமைசாலியைப் பஞ்சதந்திரி என்று கூறலாம். சீனய்யங் காருக்கு உதவியாக இருந்த காரியக்காரர், தானாபதி முதலி யோர் பஞ்சதந்திரத்தில் சிறந்தவர்களாக இருந்தனர்.

பரஞ்சோதி (சீனய்யங்கார் கும்மி, பா. 195)

கும்மிப்பாடலின் ஆசிரியரான காளியண்ணன் காடை நகரில் சிறப்பும் புகழும் பெற்றுள்ள மன்றாடியார் பரம்பரையில் முன்பு தோன்றிய பரஞ்சோதியின் வம்சத்தைச் சேர்ந்தவர். 'வாடை மிகுந்த பரஞ்சோதி' என்று சிறப்பித்துக் கூறியுள்ள மையால் அவர் பல வரிசைகளைப் பெற்றவராகவும் மிக்க புகழுடையவராகவும் இருந்திருக்க வேண்டும்.

பரிவார தேவர் (சீரணியம்மன் கும்மி, பா. 36)

துணையாகச் சூழ்ந்து இருப்பவர்களைப் பரிவாரம் என்று கூறுவர். சில முக்கியமான பெருந்தெய்வங்களுக்குத் துணை யாகக் காவல் தெய்வங்கள் இருப்பதாகக் கருதுவர். அவர்கள் ஆலயத்தைச் சுற்றிலும் அமைக்கப் படுவர். கோயிலுக்கு வெளியிலும் அத்தகைய பரிவாரத் தெய்வங்களுக்கு இடம் ஒதுக்கப்படும். நாட்டுப் புறங்களில் இத்தகைய பரிவாரத் தெய்வங்கள் மிகுதி. முத்தாரம்மன் கோயில்களில் அம்மனுக்கு முக்கியமான கருவறைப் பகுதியில் இடம் அமைக்கப்பட்டி ருக்கும். அவளுடைய பரிவாரத் தெய்வங்களான கருங்கிடாக் காரன், செங்கிடாக்காரன், ஒத்தை மாராப்பு, மாடன் ஆகிய வர்களுக்குக் 'கோட்டையைச் சுற்றி' இடம் கொடுக்கப்பட்டி ருக்கும்.

பல்லாண்டு கூறல் (மருதப் பாண்டியன் கும்பி, பா. 5)

பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துக் கூறுவதை மரபு முறையாகப் 'பல்லாண்டு கூறல்' என்று குறிப்பிடுவர். நாலா யிரத்திவ்யப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழியில் முதல் பத்தும் 'திருப்பல்லாண்டாகப்' பாடப் பெற்றுள்ளன. சைவத்

திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப் பல்லாண்டு ஆகும்.

பழனி (சீனய்யங்கார் கும்மி,பா. 51)

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமான புனித இடமாகப் பழனி விளங்குகிறது. இங்கு முருகக் கடவுள் ஆண்டிக் கோலத்துடன் கையில் தண்டேந்தி மலையின்மேல் கோயில் கொண்டுள்ளார். சங்க காலத்திலிருந்து இந்த இடம் புகழ் பெற்றுச் சிறந்திருந்ததாக அறிகிறோம். பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படை இதனை ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருஆவினன்குடி என்று சிறப்பித்துக் கூறுகிறது. பழனி மலைக்கல்வெட்டு, ஐவர்மலைக்கல்வெட்டு போன்றவை இதனை வைகாவூர், வையாவூர், வையாபுரி நாடு என்று குறிப் பிடுகிறது. கொங்கு மண்டல சதகம், வையாபுரிப் பள்ளு, மயில்விடு தூது ஆகியவை வையாபுரி நாடு என்று அழைக் கின்றன. சிற்றிலக்கியங்கள் பல இதனைத் தென்பழனாபுரி என்று கூறுகின்றன. சீனய்யங்கார் கும்மியில் பழனி, தென் பழனாபுரி, வைகாபுரிச் சீமை என்று பலவாறு அழைக்கப் படுகிறது. சீனய்யங்கார் பழனிச் சீமையின் தாசில்தாரனாக இருந்து பல கொடுமைகள் செய்வதை இந்தக் கும்மிப் பாடல் விளக்குகிறது.

ஏழு வள்ளல்களில் ஒருவனான வையாவிக் கோப்பெரும் பேகன் ஆவியர் குலத்தில் பிறந்தவன். அவனுடைய தலை நகர் ஆவினன்குடி. ஆவிக்கு நல்ல ஊராக இருந்ததால் இப் பெயர் பெறுவதாகக் கி.வா.ஜ. கருதுகிறார். ஆவிநன்குடியே ஆவினன்குடியாக மருவி இருக்க வேண்டும் என்பதும் அவர் கருத்தேயாகும். மேலும் விளக்கும் போது ஆவி வைகும் இடம் ஆதலின் வைகாவியூர் என்ற பெயரும் இதற்கு அமைந் தது. ஆதுவே நாளடைவில் வைகாவூர், வையாவிபுரி. வையா புரி, வையாவி என்று மாறியும் திரிந்தும் வழங்கியுள்ளது. வையாபுரியைத் தலைநகராகவுடைய நாடு வையாபுரி நாடு.

'வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு' என்று கொங்கு மண்டல ஊர்த் தொகை குறிப்பிடுகிறது.

> 'சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
> ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே'

என்று அருணகிரிநாதர் இதனை வைகாவூர் நன்னாடு என்ற திருப்பெயரில் குறிப்பிடுவதைக் காணலாம்.

'வையாவிக் கோப்பெரும் பேகனெனும்
பெருவள்ளல் தங்கு
வையா புரியெனும் கோநக
ருங்கொங்கு மண்டலமே'

என்று கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகிறது.

பழனி என்பது மலையின் பெயர். அதனுடைய பழம்பெயர் பொதினி. அப்பெயரே மாற்றங்கொண்டு பழனி ஆகியிருக்க வேண்டும்.

'நெடுவேள் ஆவி
அறுகோட் டியானைப் பொதினி'

என்ற சங்கப் பாடல் இக்கருத்தை விளக்கும்.

டாக்டர் உ.வே.சா. திருவாவடுதுறைக் கோவை நூலில் சிவஞான முனிவர் பாடியதாகத் 'திருஆவிநன்குடிப் பதிற்றுப் பத்தந்தாதி' என்ற நூற்பெயரைத் தருகிறார். இந்தத் திரு ஆவிநன்குடி பாலாற்றங்கரையில் உள்ளது.

பழனியப்பேந்திர கோப்புலி வாரச்ச மாகாளி துரை
(சீரணியம்மன் கும்மி, பா. 94)

பழனியப்பேந்திரன் வீரப்ப வாரச்சனின் மகனாகவும் கல்வாயில் நாட்டைக் காக்கும் மன்னனாகவும் இருந்தவன். இவன் பல அரசர்களால் பாராட்டப்பெற்றவன். இவன் ஆடம்பரமாக ஆண்டதை இக்கும்மிப்பாடல் விளக்குகிறது.

பாலகிருஷ்ண பிள்ளை (சீனய்யங்கார் கும்மி பா. 36)

சீனய்யங்காரின் காரியக்காரரில் ஒருவராகப் பாலகிருஷ்ண பிள்ளை குறிப்பிடப்படுகிறார். இவர் சீனய்யங்காரின் அணுக்கக் காவலராக இருந்திருக்க வேண்டும். ஆகையினால் 'மெய்க்கண்' (Body guard) என்று கும்மி ஆசிரியரால் சிறப்பிக்கப்பெறுகிறார்.

பீத்தரு சாய்பு (சீனய்யங்கார் கும்மி, பா. 98)

கும்பினியின் அதிகாரியாக மதுரையிலிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கவனித்தவன் பீற்றர் துரை. (Peter) அவனைக் கும்மி ஆசிரியர் பீத்தரு சாய்பு என்று கூறுகிறார். பீற்றர் துரை கொடியவனான சீனய்யங்காருக்கு ஆதரவாக இருந்தான். நீதியை நாடிவந்த மக்களை ஏமாற்றி விட்டான்.

ஆனால் இவனுக்குப் பின் வந்த நெல்சன் துரை நடப்பை நன்றாக அறிந்து சீனய்யங்காரைப் பதவியிலிருந்து ஓடுமாறு செய்து விட்டான்.

புளிய நகர் (*சீனய்யங்கார் கும்மி*, பா. 49)

பழனித் தாலுகாவிலிருக்கும் புளியம்பட்டி ஊரையே இக் கும்மிப்பாடல் புளியநகர் என்று குறிப்பிடுகிறது. அங்கு கூடியே சீனய்யங்காரின் கொடுமைகளைப் பற்றி மக்கள் சிந்தித்தனர். சாமியண்ண தீரன், செல்லப்ப தீரன் ஆகியோர் புளிய நகர் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பூஞ்சப்பரம் (சௌமிய நாராய...... பா. 13)

சிறிய தேர் போன்ற அமைப்பில் மரத்தினால் சப்பரம் செய்வர். அதில் சக்கரங்கள் இருப்பதில்லை. பக்தர்கள் தூக்கிச் சுமப்பதற்கேற்ற அமைப்பு இருக்கும். மலர் மாலைகளால் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். மத்தியிலுள்ள இருப்பில் இறைத்திருமேனியை அமர்த்தித் தெரு வலம் வருவர். திருக்கோட்டியூர் சௌமிய நாராயணப் பெருமாளை ஒன்றாம் திருநாள், ஏழாம் திருநாள் ஆகிய விழாக் களில் பூஞ்சப்பரத்தில் இருத்தித் தெருவலம் செய்வர்.

பூங்குன்றை நாடு (சிங்கை அழகியவம்மன் கும்மி, பா. 26)

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வேலங்குடிப் பகுதியைப் பூங்குன்றைநாடு என்று அழைத்துள்ளனர். நானாடு என்பதில் ஒன்றாக இது உள்ளது. பூங்குன்றை வேலங்குடி என்று கூறும் கல்வெட்டு அங்குள்ள சிவாலயத்தில் உள்ளது.

பூலாம்பட்டி (*சீனய்யங்கார் கும்மி*, பா. 36)

சீனய்யங்காருக்குக் காரியக்காரராக இருந்த ஒருவர் குப்பண தீரன், இவர் பூலாம் பட்டியைச் சேர்ந்தவர். இது இன்று போளுவாம் பட்டி என்று அழைக்கப்படும் இடமாக இருக்கலாம். ஆனால் அது கோவைத் தாலுகாவில் இருக்கிறது. கோவைத் தாலுகாவிலிருந்து பழனித்தாலுகாவிலுள்ள பணிக்காகச் சீனய் யங்கார் ஒருவரை எடுத்திருப்பாரா என்பது மிகவும் ஐயமாக உள்ளது.

பெரிய தம்பி (*சீனய்யங்கார் கும்மி*, பா. 50)

புளியம்பட்டியில் சீனய்யங்காருக்கு எதிராக மக்கள் கூடி ஆலோசனை நடத்திய போது அந்தக் கூட்டத்தில் சரவணப்

பட்டியைச் சேர்ந்த பெரிய தம்பி இருந்ததாகக் கும்மிப்பாடல் கூறுகிறது.

பெரியவுடையாத் தேவன் (சீரணியம்மன் கும்மி, பா. 55)

கல்வாயில் நாட்டுக்குத் தலைவனாகப் பெரியவுடையாத் தேவன் இருந்தான். அவனுக்குச் சீரணியிலிருக்கும் மாரிமுத்தம்மன் அரசு செய்ய செங்கோல் கொடுத்ததாகக் கும்மிப் பாடல் கூறுகிறது. அவன் சிறந்த நீதிமான் என்ற குறிப்பும் உள்ளது

போசன் (மாடன் கும்மி, பா. 2)

போசன் விதர்ப்ப தேசத்தரசன். அவனுடைய சிறிய தந்தையால் (அரசன்) கொலை செய்யப்படவிருந்தான். விரைவில் மனம் மாறி அவன் போசனுக்குப் பட்டங்கட்டித் தான் துறவு பூண்டான். இவன் பத்தாவது நூற்றாண்டில் ஆண்டதாக வரலாறு கூறும். மிகச் சிறப்பாக ஆட்சி செய்யும் போச மன்னன் காளிதாசனை மிகவும் விரும்பியதாகக் கூறப் படுகிறது. இவனது சபையில் பல கவிஞர்கள் இருந்தனர். அவர்களில் மிகச் சிறந்தவர்களாகக் காளிதாசன், பவபூதி, தண்டி ஆகியோரைக் கூறலாம் இவன் காலத்தில் இலக்கியம் நன்கு சிறப்படைந்ததாகக் கருதலாம்.

மங்கம்மாள் சாலை, (நல்லாண்டவர் கும்மி, பா. 5)

இராணி மங்கம்மாள் மதுரையை ஆண்டகாலத்தில் மதுரை யிலிருந்து இராமேசுவரம் வரையிலும் அவளால் சாலை அமைக்கப்பெற்றது. அது அவளுடைய பெயரால் விளங்கியது. அந்தச் சாலை மாவை நகர் வழியாகச் செல்கிறது. அங்கு நல்லாண்டவர் கோயில் உள்ளது.

மணியம் (சீனய்யங்கார் கும்மி, பா. 67)

நிலங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒருவிதமான தீர்வைக்கு மணியம் என்று பெயர். இதைப் பிரிப்போரை மணியக்காரன் என்று அழைப்பர். மணியம் வரி. வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவர் மணியக்காரர்.

மதுரை சமஸ்தானம் (சீனய்யங்கார் கும்மி, பா. 93)

வெள்ளைக்காரக் கும்பினியார் நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி வசதிக்காகச் சிறுசிறு நாடுகளாகப் பிரித்தனர். சென்னையிலுள்ள ஒரு பிரிவாக மதுரை விளங்கியது. அதைக்

கும்மி ஆசிரியர் சமஸ்தானம் என்று கூறுகிறார். பொதுவாக ராஜாக்கள் சுயமாக ஆண்ட பகுதிகளைச் சமஸ்தானம் என்று அழைப்பது வழக்கம்.

மதுரை வீரன் (நல்லாண்டவர் கும்மி, பா. 4)

காசிராஜனின் மகனான மதுரை வீரன் மாலையுடன் பிறந்ததால் சோதிடர் இவனைக்காட்டில் விட்டுவிடும்படிக் கூறினர். மன்னன் அவ்வாறே செய்தனன். இவனை ஒரு சக்கிலி எடுத்து வளர்த்தான். நாகராஜனாற் பல சித்திகள் பெற்றான். பொம்மண நாய்க்கன் மகள் பொம்மியை மணந்தான். பின்னர் விசயரங்கனிடம் சேவகத்துக்கு அமர்ந்து திருமலைநாயக்கனின் நாட்டில் கள்வரை வேரறுக்க உதவினான். வெள்ளைச்சியை மணந்து வந்து கொண்டிருந்தபோது அரசனால் கைகால் வாங்கப்பட்டான். மனைவியர் தீக்குளித்தனர். மதுரைவீரன் மீனாக்ஷியம்மன் சன்னதியில் தன் உயிரைப் போக்கித் தெய்வமாகி விட்டான். இவனுக்கு வீரக்கல் எடுக்கப்பட்டது. இவன் வணக்கத்துக்கு உரிய தெய்வமாக மதிக்கப் பெற்றான்.

மயிடன் (சீரணியம்மன் கும்மி, பா. 45)

திதி தவம் புரிந்து சுபார்சுவ முனிவரால் மகிட ரூபமாகிய இந்த அசுரனைப் பெற்று பல வரங்கள் பெறச் செய்து இவனைத் தேவரிடம் போருக்கு ஏவினான். இவனைக் கொல்ல சக்தி தேவி காளியை அனுப்பினாள். மகிடன் காளிக்கு அஞ்சி ஓர் ஏரியில் ஒளிந்து கொண்டான். காளியின் வாகனமாகிய சிங்கம் ஏரிநீரைப் பருகியதும் இவனைக் காளி கொன்றாள். இவனை எருமை வயிற்றில் பிறந்த அசுரன் என்று கூறுவதும் உண்டு.

மனு (சீரணியம்மன் கும்மி, பா. 6)

நீதிமுறை வகுத்த மன்னவன் மனு என்று கூறுவர். இக்கும்மியில் சீரணியம்மனின் அருள் பாலிக்கும் தன்மை மனுதர்மத்துடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. வைவஸ்வத மனு முதல் சூரிய குல அரச பரம்பரை தொடங்குகிறது. விவஸ்வானென்ற சூரியனின் மகன் மனு இவன்தான் இராமனின் குலமுதல்வன். மனுக்கள் 14 எனவும் அவர்களில் 7 ஆமவர் வைவஸ்தமனு என்றும் கூறப்படுகிறது. இவன் நீதி முதல்வன். பிருது என்பவன் ஆதிமனுவான சுவாயம்புவ மனுவின் வழித்தோன்றல் எனப் புராணங்கள் கூறும். பிருது என்பவர் நல்லவர். வேனன் என்ற கொடியவன்.

மன்றாடியார் (சீனய்யங்கார் கும்மி, பா. 196)

கொங்கு நாட்டில் மன்றாடியார் என்ற பரம்பரை மிகவும் புகழ் வாய்ந்ததாக இருந்துள்ளது. பெருமன்னர்களே இந்தப் பரம்பரையினருக்குச் சிறப்பு செய்துள்ள குறிப்புகள் பல உள்ளன. உத்தம சோழன் பாண்டியர் மீது படையெடுத்துச் சென்றபோது பாண்டியரின் படையைத் தாங்கிக் கரியான் சர்க்கரை என்பார் செல்கிறார். போரில் சோழரை வென்று துரத்தியடித்து விடுகிறார். வெற்றியுடன் திரும்பிய கரியான் சர்க்கரை என்ற வீரரைப் பாண்டிய மன்னன் பாரசட்டி உத்தமக் காமிண்டன் என்ற பட்டத்தை வழங்குகிறான். கொங்கு இருபத்தி நாலு நாடுகளில் ஒன்றான காங்கேய நாட்டிலுள்ள காரையூருக்கு அவரைத் தலைவனாக்கினார். இந்தக் காரையூர் நத்தக்காரையூர் என்று அழைக்கப்பட்டுள்ளது. காடையூர் என்றும் இந்தக் கும்மிப்பாடலில் குறிப்பிடப்படுகிறது. இது ஈரோட்டுக்கு 18 கல் தெற்கில் உள்ளது.

கரியான் சர்க்கரை வழிவந்தோர் பழைய கோட்டை என்னும் ஆனூரிலும் உள்ளனர். இவர்கள் சர்க்கரை அல்லது உத்தமக் காமிண்டன் என்ற பட்டப் பெயரை வழிவழி கொண்டுள்ளனர். இவர்கள் 12ஆம் நூற்றாண்டில் குருபட்டம் சூட்டப் பட்டதால் பட்டக்காரர் என்று தம்மை அழைத்துக் கொள்வதும் உண்டு. சேனாபதிச் சர்க்கரை மன்றாடியாருக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களில் இரண்டாவது தீர்த்தகிரி ஆவார். இவர் 1756 இல் பிறந்தார். இவரைத் தீரன் சின்னமலை என்று கூறுவர். இவரைப் புகழ்ந்து 'சின்னமலைக் கும்மி' என்ற நூல் பாடப் பட்டுள்ளது. பெரும்புலவர் குழந்தை, சின்னமலை (வீர வரலாறு) என்ற நூலை எழுதியுள்ளார். புலவர் புகழ்ந்து பாடும் குலமாகச் சர்க்கரை மரபு விளங்கியது. 'கொங்கதனில் சர்க்கரையைப் பாடலாம்' என்று ஒரு புலவரும், 'எப்போதும் சர்க்கரைபால் ஏற்கும் வலக்கை' என்று இன்னொருவரும் பாடியுள்ளனர். சின்னமலைக்குக் குழந்தைசாமிக் கவுண்டர் என்னும் அண்ணன் ஒருவர் இருந்தார், அந்த குழந்தை சாமிக்கு நல்லதம்பிக் கவுண்டர், சின்னண்ணக் கவுண்டர், தீர்த்தகிரிக் கவுண்டர், அப்பாச்சிக் கவுண்டர், என நான்கு மக்கள் இருந்தனர். இந் நால்வர் வழிவந்தவர்களே இன்று சர்க்கரை மன்றாடியார்க் குடும்பத்தில் வாழ்கின்றனர்.

'மன்றாடி' என்பது மிகப் பழமையான பட்டப்பெயராகத் தோன்றுகிறது. முன்காலத்தில் ஆடுமாடுகளை வளர்ப்போர்களுக்கு மன்றாடி என்ற பெயர் வழங்கி வந்தாதகத் தெரிகிறது. இதைக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் பிள்ளையார் மண்டபத்தில் உள்ள கல் வெட்டிலும் (S. I. I. Vol. I. No. 82) ராஜ சிம்மவர்மேசுவரனின் சாசனத்திலும் (S. 1. 1, Vol. I, No. 83) இத்தகைய குறிப்பு உள்ளது. திருவாலவாயுடையார் திருவிளையாற் புராணத்தில் 'கட்டி விடு மன்றாடி கான் மாறி யாடுவேன்' என்றும் மன்றாடி சொல்ல' என்று வருகிறது இவற்றிலும் ஆடு மாடு வளர்ப்போர் என்ற பொருளே விளங்குகிறது மன்றில் ஆடுவோர் மன்றாடியார் என்ற பொருளும் உண்டு. பழைய கோட்டைப் பட்டக்காரரின் முன்னோர் பயிர்த் தொழிலுடன் பசுவை ஓம்பியும் வந்துதுள்ளனர் ஆகையினால் மன்றாடி என்ற பெயரைச் சிறப்பாகப் பெற்றிருக்கலாம். மேலும் தடுத்தாட் கொண்ட புராணத்தில்,

'குழைமறை காதினானைக் கோதிலா ரூரர் நோக்கிப்
பழைய மன்றாடி போலும் வாவென்று............

என்று வருவது போன்று 'மன்றாடி' என்பது வழக்குப் பேசுவதில் கை தேர்ந்தவன் என்றும் வந்திருக்கலாம். முற்காலத்திலுள்ளது போன்று ஊர் வழக்காடு மன்றம் அமைத்து மன்றாடியார் அதற்குத் தலைவராக இருந்திருக்கலாம். மேற்கூறிய விளக்கங்களுக்குக் கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் சான்று பகரும் சுருங்கக் கூறின் மன்றாடியார் குலத்தைச் சேர்ந்தவர்கள் மிகச் சிறப்பாக வாழ்ந்துள்ளனர். மக்களால் மதிக்கப்பட்டுள்ளனர். புலவர்களால் புகழ்ந்து பாடப் பெற்றுள்ளனர். சீனய்யங்கார் கும்மிப் பாடலின் ஆசிரியரான காளியண்ணன் மன்றாடியார் பரம்பரையைச் சேர்ந்தவர்.

மாடத்தி (மாடன் கும்மி, பா. 11)

சிவனுக்கும் பார்வதிக்கும் தோன்றிய மாடனைக் கைலாயத்தில் வைக்க விரும்பாத சிவபெருமான் அவனைப் பூவுலகத்துக்கு அனுப்புகிறார். அங்கு அவனுக்குத் துணையாக மாடத்தி என்பவளையும் படைத்து அனுப்புகிறார். மாடனுக்குப் பக்கத்தில் மாடத்திக்கும் படைப்பு செய்து வணங்குவர். கும்மிப் பாடல் 'மாடத்தி உத்தமி' என்று அவளைச் சிறப்பித்துக் கூறுகிறது.

மாடன் (மாடன் கும்மி, பா. 1)

பல நாட்டுப் புற தெய்வங்களில் ஒன்றாக மாடன் உள்ளது 'மாடன்' வணக்கம் நெல்லை குமரி ஆகிய மாவட்டங்களில் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. சுடலை மாடன், மயான மாடன், சந்தி மாடன், சங்கிலி மாடன், புல மாடன், வண்ணார மாடன், பன்றி மாடன், அக்னி மாடன் எனப் பல மாடன்கள் இருப்பதைக் காணலாம். இந்தக் கும்மிப்பாடல் சுடலை மாடனையே சிறப்பித்துக் கூறுகிறது. இவனுக்குத் துணையாக மாடத்தி என்ற பெண்தெய்வம் இருப்பதாகக் கருதி அவளையும் படையல் செய்து வழிபடுவர். மாடன் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்ததாகக் கதை கூறும். அவனைக் கொடிய தெய்வமாகச் சிலர் மதிப்பர். அருள் பாலிக்கும் அற்புதத் தெய்வமாகவும் கருதுவர். இவனையே மாடன் கும்மி சிறப்பித்துக் கூறுகிறது. மாடனைத் தலை மாத்திரம் மாட்டின் உருக்கொண்டு ஒரு சூத்ரதேவதை என்றும் பஞ்சபூதங்களில் ஒன்று என்றும் அபிதான சிந்தாமணி கூறுகிறது. (பக். 1285)

மாணிக்கவல்லியம்மை (மருத பாண்டியன் கும்மி, பா. 1)

திருமாணி குழியிலே கோயில் கொண்டிருக்கும் தேவியார் பெயர் மாணிக்க வல்லியம்மை. பரசாக்தியின் நிறம் சிவப்பு. அந்த நிறம் மாணிக்கத்தைக் குறிப்பதாகும். திருவொற்றியூர் அம்மனை வடிவுடை மாணிக்கம் என்று வடலூர் வள்ளலார் பாடுகிறார். அபிராமி அந்தாதியில் 'உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்' என்று அம்மனை முதற்பாடல் கூறி விளக்குகிறது.

மாதசாங்கம் (சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி, பா, 19)

பெருமைக்குரிய பத்து அங்கங்களை மாதசாங்கம் என்று கூறுவர். அவை மலை, நதி, நாடு, நகர், ஆனை, பரி, படை, கொடி, முரசு, ஆணை என்பன.

மாதராதி மாதர், (சீரணியம்மன் கும்மி, பா. 41)

சிவனுக்கு ஏவற்குரிய மாதர்கள் பிராமி, மஹேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்திராணி, சாமுண்டி என எழுவர். சிலர் சண்டியோடு எட்டாக்கி அஷ்டமாதர் எனவும் கூறுவர்.

மாத்துகள் (சீனய்யங்கார் கும்மி, பா. 156)

'மாத்து' என்பது துணி விரிப்பைக் குறிக்கும். அலங்காரம் செய்யப் பந்தல் முதலியவற்றில் கட்டியிருக்கும் துணிகளை மாத்து என்று கூறுவர். ஊர் கூடும்போது தலைவர் அமர் வதற்கு விரிக்கப் பட்டிருக்கும் துணியையும் மாத்து என்று அழைப்பார். சீனய்யங்சார் வருவதாக அறிவித்த போது அவருக்கு அஞ்சி மக்கள் ஊரை ஒப்பனை செய்தனர். அப் போது மாத்து கட்டியதாகக் கூறப்படுகிறது.

மாரப்ப தீரன் (சீனய்யங்கார் கும்மி, பா. 65)

சீனய்யங்காரின் கொடுமைகளைத் திண்டுக்கல்லில் இருக்கும் ஆங்கில அதிகாரியிடம் எடுத்துச் சொல்லச் சென்றவர்களில் ஒருவர் மாரப்பதீரன். இவருடைய பண்பாக அன்பு சிறப் பித்துச் சொல்லப்படுகிறது.

மார்க்கண்டன் (ஆவுடையார் கும்மி, பா. 23)

மிருகண்டு முனிவரின் தவப்புதல்வனாக மார்க்கண்டன் பிறக்கிறான். அவன் தனது பதினாறு வயதில் இறக்க வேண்டும் என்ற விதியுடையவன். அதற்கு இணங்க எமன் அவனுடைய உயிரைக் கவர வருகிறான். அந்தச் சமயத்தில் மார்க்கண்டன் சிவபெருமானை வணங்கித் தன்னைக் காக்கும் படி வேண்டிக் கொண்டிருந்தான். எமனின் பாசக் கயிற்றைக் கண்டதும் சிவபெருமான் கோபாவேசம் கொண்டு காலனை எட்டி உதைக்கிறார். மார்க்கண்டன் தன்னை வணங்கிப் பணிந்ததினால் என்றும் பதினாறு வயதுடன் வாழ அவனுக்கு வரம் கொடுக்கிறார். வணங்கிய மார்க்கண்டனுடை யஉயிரைக் காத்தது போல் பஞ்சத்தில் வாடும் தங்களுடைய உயிரையும் காக்க வேண்டும் என்று ஆவுடையார் கும்மிப் பாடல் ஆசிரியர் விரும்பிப்பாடுகிறார்.

மாவிளக்கு (சீரணியம்மன் கும்மி, பா. 77)

பச்சரிசியை நனைத்து பின் இடித்து மாவாக்குவர். அதனுடன் வெல்லத்தைச் சேர்த்து விளக்காகச் செய்வார். அதில் தேங்காய் எண்ணை அல்லது நெய் இட்டுத் திரியை நனைத்துக் கொளுத்துவர். அவ்வாறு எரியும் விளக்கை மாவிளக்கு என்று கூறுவர்.

மிதுலை நகர் (ஆவுடையார் கும்மி, பா. 1)

மிதிலைநகர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் தாலுகாவில் உள்ளது. புதுக்கோட்டையைச் சேர்ந்த திருமெய்யம் (திருமயம்) என்ற ஊருக்கு அண்மையில் உள்ளது. இதனை மிதிலையூர், மதிலையம்பதி, மதிலை நகர் என்று பலவாறு கூறுவர். இந்தக் கும்மிப் பாடலில் சொல் வழக்கை ஒட்டி மிதுலைநகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தென் மிதிலை என்று சின்ன மகிபன் குளுவ நாடகம் கூறுவதைக் காணலாம். வடக்கிலுள்ள மிதிலை மாநகரைப் (இராமயணம்) பிரித்துக் காட்டுவதற்காக இவ்வாறு இது குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்திரை மோதிரம் (சீனய்யங்கார் கும்மி, பா. 18)

அரசு முத்திரையுள்ள கணையாழியைப் பதவி ஏற்போருக்கு மேலதிகாரிகள் முன் காலத்தில் கொடுப்பது வழக்கம். அது ஓர் அடையாளச் சின்னமாக விளங்கும். முடங்கல்களை முத்திரையிட்டு மேல் அதிகாரிகளுக்கு அனுப்பவும் இது பயன் படுத்தப் பெற்றுள்ளது. (முத்திரை—இலாஞ்சினை; Seal)

முத்துக் குமரேந்திரன் (மருது பாண்டியன்கும்மி, பா. 17)

தென்காசியைச் சேர்ந்த சரவணமுத்து வேளின்பாட்டன் பெயர் முத்துக் குமரேந்திரன். இவர் காராளர் வம்சத்தைச் சேர்ந்தவர். மேலும் 'கலிங்கத் தாயக் கோத்திரவான்' என்று என்று கூறப்படுகிறது. இவருக்கு மூன்று மக்கள். அவர்களில் மூத்தவரான நெல்லையப்பேந்திரரின் இளைய மகன் சரவண முத்துவேள் ஆவார். அவர் தென்காசியிலிருந்து பல அரிய செயல்களைச் செய்துள்ளார்.

முத்துப் பாலாண்டி (சீரணியம்மன் கும்மி, பா. 86)

முத்துப் பாலாண்டி என்போன் கல்வாயில் நாட்டைக் காத்தவன். சீரணியம் மனைப் பணிந்து வணங்கும் தலைவன். பாளையக்காரருக்குள் முதற் பாளையக்காரன் என்ற சிறப்புப் பெயர் எடுத்தவன். (பா. 82) குதிரையேறிப் போர்க்களம் சென்று பகைவர்களை வெல்லும் ஆற்றலுடையவன். மங்கையரின் மானங்காத்த மன்னன். குறைவற்ற செல்வமுடையவன். அறிஞர்களை (வித்துவசனங்களை பா. 85) ஆதரிக்கும் வள்ளல். மாகாளி மகாராசன் என்ற சிறப்புப் பட்டம் இந்த வம்சத்துக்கு இருந்துள்ளது.

முத்து மாரியம்மன் (சீரணியம்மன் கும்மி, பா. 1)

முத்துமாரியம்மன் ஜமதக்னிரிஷியின் மனைவியான இரேணுகை என்று பழங்கதைகள் கூறுகின்றன. ஜமதக்னிரிஷி கார்த்தவீரியனின் மக்களால் கொல்லப்படுகிறார். அவருடைய உடலைக் கொளுத்தும் போது இரேணுகை தீயில் சாடி விடுகிறாள். அதைக் கண்ட இந்திரன் வருணனைக் கொண்டு மழை பெய்வித்து தீயை அவிக்கிறான். அதனால் இரேணுகையின் உயிர் பிரியவில்லையாயினும் உடலில் தீக்கொப்புளங்கள் ஏற்பட்டன. ஆடையும் எரிந்து விட்டது. ஆகையினால் அவள் வேம்பின் தழைகளை ஆடையாக அணிந்து கொண்டு வெளியேறுகிறாள். பக்கத்திலிருந்த சிற்றூர் மக்கள் அவளுக்குப் பச்சரிசி, மா, வெல்லம், இளநீர், பானகம் முதலியன கொடுத்தனர்.

சிவபெருமானின் வரம் பெற்று இவள் அம்மை நோயை அகற்றும் மாரியம்மனாக மாறினாள். இவள் பெற்ற தீக்கொப்புளங்கள் அம்மை நோயகாவும், இவள் அணிந்த வேப்பிலை ஆடை அந்நோய்க்கு உரிய மருந்தாகவும் மாறின. இவளே முத்து மாரியம்மன் என்ற பெயரைப் பெற்று சிற்றூர் தெய்வமானாள் என்பது கதை.

இரேணுகை சித்திரநேசன் என்ற காந்தருவனின் நிழலைக் கண்டு காமுற்றதால் கணவன் வெகுண்டு மகன் பரசுராமனைக் கொண்டு அவளுடைய தலையை வெட்டச் செய்கிறார். பின் இரங்கி மந்திர நீர் தெளித்து அவளை உயிர் பெறச்செய்து சிற்றூர் மக்களுக்கு உதவும் தெய்வமாக அனுப்புகிறார். எனவே அவளை முத்துமாரியம்மன் என்று அழைக்கின்றனர். அத்தகைய கோயில்களில் தலையை மாத்திரம் வைத்து வணங்குவர்.

முன்னோடித் தெய்வங்கள் (சீரணியம்மன் கும்மி, பா. 36)

கருப்பன், ஐய்யனார் போன்ற தெய்வங்கள் நாட்டுப்புறங்களில் சிறப்பாக மதிக்கப்படுவர். இவர்கள் வீரத்துக்கு இருப்பிடமானவர்கள். போருக்குச் செல்லும் போது முன் செல்லும் படைவீர்கள் போன்று இவர்களுக்கும் முன் ஓடும் தெய்வங்கள் உண்டு, அவர்களை முன்னோடித் தெய்வங்கள் என்று கூறுவர். பொதுவாக முன்னோடித் தெய்வங்களுக்குக் கோயிலின் முன்புறம் இடம் அமைக்கப்படும்.

மெய்யணன் (சீனய்யங்கார் கும்மி, பா. 50)

புளியம்பட்டியில் மக்கள் ஒரு முகமாகக் கூடி சீனய்யங் காருக்கு எதிராகச் சிந்திக்கும் போது வந்து கலந்த வீரர்களில் ஒருவராக மெய்யணன் என்பவரைக் கும்மிப் பாடல் குறிப்பிட்டுக் கூறுகிறது.

மேகரைப்பட்டி (சீனய்யங்கார் கும்மி, பா. 94)

பழனித்தாலுகாவிலுள்ள ஓர் ஊர். அதனை இப்பொழுது மேல்கரைப்பட்டி என்று கூறுவர். சீனய்யங்காரைப் பற்றிக் குறைகூறி மதுரைக்குச் சென்ற முப்பத்திரண்டு ஊர்களில் மேகரைப்பட்டி ஒன்று.

மேங்காடு (சீனய்யங்கார் கும்மி, பா. 57)

சீனய்யங்கார் கும்மியில் தாசில்தாரனுக்கு எதிராக யாராவது நடந்தால் அவரை மேங்காட்டில் அடைப்பதாகக் கூறப்படுகிறது. தற்காலிகச் சிறை (Lock-up) போன்று மேன்காட்' (Manguard) என்பது இருந்திருக்க வேண்டும். ஆங்கிலச் சொற்களை ஒலிமழுங்கச் செய்து பல இடங்களில் கும்மிப் பாடல் ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார்.

ரதிகாந்தன் (சீரணியம்மன் கும்மி, பா. 100)

காதல் கடவுளாகிய மன்மதனை ரதிகாந்தன் என்று கூறுவர். ரதிக்குத் தலைவன் ஆனதினால் இப்பெயர் பெற்றான்.

ராமபாண்டியன் (மருத பாண்டியன் கும்மி, பா. 56)

தென்காசிக் கோயிலைக் கட்டியவர் பராக்கிரம பாண்டியன் இவர் பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தான் கட்டிய தென்காசிக் கோவில் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என மிக்க ஆவல் கொண்டுள்ளார். அதனைக் கல்வெட்டுச் சாசனமாக வடித்துள்ளார். அதில் ஒரு பாடல் இதனைச் செவ்வனே விளக்கும்.

ஆரா யினுமிந்தத் தென்காசி
மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தால்அப்
போதங்கு வந்ததனை

நேராக வேஒழித் துப்புரப்
பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன்
பராக்ரம பாண்டியனே'

பராக்கிரம பாண்டியனை வரகுண ராமபாண்டியன் என்று கூறுவர். இவர் 24-12-1463 அன்று மறைந்ததாகக் குறிப்பு உள்ளது.

வருணன் (சீரணியம்மன் கும்மி, பா. 93)

சுசிட்டுமான் என்ற சிறுவனைக் கங்கையில் நீராடும் போது ஒரு முதலை விழுங்கி விடுகிறது. இதை அவனுடைய தந்தை ஞானத்தால் உணர்ந்தார். அந்த முதலையைக் கங்கை கடலில் சேர்த்தாள். கடலரசன் முதலை விழுங்கிய சிறுவனின் பெருமை உணர்ந்து அவனுக்குரிய மரியாதை செய்து வீட்டுக்கு அனுப்புகிறான். மகன் தந்தையை வணங்கிய பின் சிவனை நோக்கித் தவம் செய்கிறான். அவனுக்கு நீருக்குத் தலைமை யான வருணபதம் அருளப்படுகிறது.

வயிரவர் (சீரணியம்மன் கும்மி, பா. 85)

பிரமன் தனக்குச் சிவ மூர்த்தியைப் போல் ஐந்து தலை கள் இருப்பதாகச் செருக்கடைந்தான். அதை அறிந்த சிவன் வயிரவராகச் சென்று அவனுடைய நடுச்சிரத்தைக் கிள்ளிஎறிந்து விட்டார். வயிரவர் சிவ மூர்த்தியின் கட்டளைப்படி அழிவுக் காலத்தில் வேத ஞாளியை (நாய்) உருவகித்து உலகங்களைத் தன் நெற்றி விழியால் தீயாக்கி உலவுவோர். அந்தகாசுரனைச் சூலத்தால் குத்தினார். அவன் பணிந்து வேண்டியதும் அவனுக்கு அனுக்கிரகம் செய்தார். வயிரவர் பலர் உண்டு. எனக் கூறப்படுகிறது. அவர்களில் முக்கியமானவர்கள் கால வயிரவர், அசிதாங்க வயிரவர், குரோதவயிரவர், கண்டவயிரவர், கபாலவயிரவர், விபூஷணவயிரவர், மார்த்தாண்ட வயிரவர், சுதந்திர வயிரவர், சுவேச்சா வயிரவர், உலோக வயிரவர், உக்கிரவ வயிரவர், பிரச்சையவயிரவர், நின்மாண வயிரவர், பூஷணவயிரவர் என்பாராகும்.

விசயன் (சீரணிம்மன் கும்மி, பா. 100)

விற்போரில் சிறந்தவர்களை விசயன் என்று கூறுவது வழக்கம். பஞ்ச பாண்டவர்களில் மூன்றாவது உள்ளவன்.

காண்டீபம் என்ற வில்லைக் கொண்டு மிகவும் நன்றாகப் போர் செய்யும் வீரனாக அருச்சுனன் என்ற பெயருடைய விசயன் விளங்கினான்.

விசைய ரெகு நாதராயர் (சிங்கை அழகிய அம்மன் கும்மி, பா. 52)

விசைய ரெகுநாத ராய பாதர் தொண்டைமான் என்ற அரசர் புதுக்கோட்டையை கி. பி. 1817 முதல் 1825 வரை அரசாண்டவர். இவர் தனது இருபத்தெட்டாவது வயதில் இறந்து விட்டார். 'பாதர்' என்பது 'பகதூர்' என்ற பட்டத்தைக் குறிப்பிடும். இவர் பல சிற்றரசர்களுக்கு மேலாக ஆணை செலுத்துபவர். சிங்கை நாட்டுக்கு மேல் இவருடைய ஆணை உள்ளது.

விருது நகர் (மருத பாண்டியன் கும்மி, பா. 48)

விருதுநகர் இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள ஊர். இங்குள்ள பத்திரகாளியம்மன் கோயில், தெப்பக்குளம் ஆகியவை புகழ்பெற்றவை.

வீமன் (மருதப் பாண்டியன் கும்மி, பா. 6)

பஞ்ச பாண்டவர்களில் இரண்டாவது உள்ளவன் வீமசேனன். இவன் உடல் பலம் மிக்கவன். கதையை ஆயுதமாகக் கொண்டு போராடுவோன், உடல் பலமும் மனத்தைரியமும் உடையவர்களை வீமனுடன் ஒப்பிடுவது உலக வழக்கம்.

வீரண கவுண்டன் (சீனய்யங்கார் கும்மி, பா. 18)

சீனய்யங்காரின் கொடுமையான ஆட்சி முறைகளைத் திண்டுக்கல்லில் இருக்கும் கும்பினி அதிகாரிக்கு எடுத்துக் கூறச் சென்றவர்களில் ஒருவர் வீரண கவுண்டர். இவர் மிகச் சிறப்புடைய தீரனாக இருந்திருக்க வேண்டும். ஆகையினால் தான் கும்மி ஆசிரியர் மிகவும் உயர்வு கொடுத்து இவரைப் புகழ்ந்து பாடுகிறார். இவர் சாந்தமான தன்மையுடன் நற்பண்பு மிக்கவர். வீரச் செயல் புரிபவர். தண்டமிழ்ப் புலவர்களை நன்கு ஆதரிக்கக் கூடியவர். அரசர்களுக்குச் சூடாமணி போன்றவர். இவருடைய ஊர் அப்பிப்பாளையம்.

வீரபத்திரன் (சிவயோக வல்லிக் கும்மி, பா. 14)

தக்கன் சிவனை மதியாது ஒரு வேள்வி செய்தான். அதற்கு உமாதேவி சிவனுடைய விருப்பத்துக்கு மாறாகச்

சென்றாள். ஆனால் அவளைத் தக்கன் ஒரு சிறிதும் மதிக்க வில்லை. அவள் மனம் வருந்தி சிவபெருமானிடம் திரும்பி வந்தாள் அவளைக் கண்டதும் கோபக்கனல் தெறிக்கத் தனது ஒரு சடைமுடியை ஓங்கிச் சிவன் தரையில் அறைந்தார். அந்த வேகத்தில்உக்கிர தோற்றமான வீரபத்திரன் தோன்றினார். அவர் பூதகணங்களுடன் சென்று தக்கனையும் அவனுக்கு உதவியவர்களையும் அழித்தார். வேள்வியும் சிதைந்தது. வீர பத்திரன் வீரமாகாளியுடன் அமர்ந்திருக்கும் மூர்த்தியாவார் வெஞ்சினத்துக்கும் வேகமான அழிவாற்றலுக்கும் சின்னமாக வீரபத்திர மூர்த்தி விளங்குகிறார்.

வீரப்ப வாரச்சன் (சீரணியம்மன் கும்மி, பா. 87)

முத்துப் பாலாண்டியின் மகன் வீரப்ப வாரச்சன் கல் வாயில் நாட்டுக்குத் தலைவன். சிறந்த விற்போர் வீரன். கொற்றவர்கள் பாராட்டும் தரமான கொடையாளி. கற்றவர்கள் போற்றும் அறிவாளி. இந்த மன்னன் நெற்றியில் வெண்ணீறு அணிந்து சீரணியம்மனை வணங்க வரும் காட்சியை இந்தக் கும்மிப் பாடல் விளக்குகிறது.

வெங்கிடாசாரி (சீனய்யங்கார் கும்மி, பா. 37)

சீனய்யங்காரின் காரியக்காரர்களில் ஒருவராக வெங்கிடாச் சாரி பணியமர்த்தப்பட்டார். இவர் ஒரு வேதியர் என்று கும்மிப் பாடல் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

வெள்ளி வில்லைக்காரன் (சீனய்யங்கார் கும்மி, பா. 136)

ஆங்கில அதிகாரிகளுக்கு எடுபிடிப் பணி செய்யும் சிற்றேவலரை மக்கள் வெள்ளி வில்லைக்காரன் என்று அழைத் துள்ளனர். அத்தகைய ஏவலருக்கு அடையாள வில்லைகள் (seal) கொடுக்கப்பட்டிருக்கும் அதை ஒரு வாரில் பொருத்தித் தோளுக்கும் இடுப்புக்குமாகக் குறுக்கே அணிவர். வில்லை கள் வெண்மையான உலோகத்தில் பளபளப்பாகச் செய்யப் பட்டிருப்பதினால் அதை வெள்ளி வில்லைகள் என்று கூறினர்

வெள்ளையண்ண தீரன் (சீனய்யங்கார் கும்மி, பா. 65)

சீனய்யங்காரின் கொடுமைகளைத் திண்டுக்கல்லுக்குச் சென்று ஆங்கில அதிகாரியிடம் சொல்வதற்காகப் பலர் சென் றனர். அதில் வெள்ளையண்ண தீரன் ஒருவர் இவர் அப்புநகரைச் சேர்ந்தவர்.

வைகாபுரிச் சீமை (சீனய்யங்கார் கும்மி, பா. 18)

பழனியை வைகாபுரிச் சீமை என்று கும்மிப் பாடல் குறிப்பிடுகிறது. பழனிக் கல்வெட்டு ஐவர் மலைக் கல்வெட்டு ஆகியவற்றில் வைகாவூர், வையாவூர் என்று பழனி குறிப்பிடப் படுகிறது. வையாபுரி நாடு என்று கல்வெட்டிலும், கொங்கு மண்டல சதகம், வையாபுரிப்பள்ளு, மயில்விடு தூது ஆகிய நூல்களிலும் கூறப் பெறுகிறது. தென்பழனாபுரி என்றும் சிற்றிலக்கியங்கள் இதனை அழைக்கின்றது.

வைகை நதி (நல்லாண்டவர் கும்மி, பா. 23)

பாண்டியருடையநாட்டில் மதுரை நகரின் வழியாகப் பாயும் நதி வைகையாகும். குண்டோதரனுக்குத் தாகம் தணிக்கச் சிவபெருமானால் வருவிக்கப் பட்டது. மாணிக்க வாசகருக்காகச் சிவபெருமானின் விருப்பத்துக்குச் இணங்கத் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது. பாண்டிய மன்னனின் ஆணைப்படி ஆற்றுக்குக் கரை கட்ட வீட்டுக்கு ஒரு ஆள் வந்தனர். பிட்டு விற்கும் பெண்ணான வந்திக்காகச் சிவனே கூலியாளரக வந்து பாண்டியன் கையினால் பிரம்படி பட்டார். வைகை கடலோடு கலவாத நதியெனப் பலரால் புகழ்ப் பட்டது. திருஞான சம்பந்தருடைய ஏடு எதிரேற வந்ததும் வைகை நீரில்தான் என்பதும் அதற்குச் சிறப்பாக அமைகிறது.

வைகை நதி (சீனய்யங்கார் கும்மி, பா. 96)

மதுரை நகர் வழியாக வைகைநதி பாய்கிறது. பழனித் தாலுகாவிலிருந்து தீரர் சிலர் சீனய்யங்காரைப் பற்றி மதுரை யில்' இருக்கும் கும்பினி ஆணையரிடம் குறைகூற வருகின் றனர். அவர்கள் வைகை சூழ்ந்த மதுரையைக் கண்டதரகக் கும்மி ஆசிரியர் கூறுகிறார். மதுரைக்கு ஒரு சிறப்பாக வைகைநதி விளங்குகிறது.

வைகையழைத்திட்ட வல்லவர் (ஆவுடையார் கும்மி, பா. 32)

வைகையை அழைத்த கதை திருவிளையாடற் புராணத் தில் உள்ளது. மீனாக்ஷியம்மையின் திருமணத்தின் போது குண்டோதரன் தாகத்தால் துடிக்கிறான். அவனுடைய தாகத்தைத் தணிப்பதற்காக இறைவன் வைகையை அழைக் கிறார். இத்தகைய ஆற்றலுடைய ஆண்டவன் மழையை அழைத்துப் பஞ்சம் தீர்க்கவேண்டும் என்று கும்மி ஆசிரியர் வேண்டுகிறார்.

பிற்சேர்க்கை I

அச்சான கும்மிப் பாடல்கள்

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
1.	அகத்தியர், வைத்தியக் கும்மி	இட்டா குப்புசுவாமி நாயுடு	—	—
2.	அதிருத்ர கும்மி	கனகராஜ அய்யர்	சென்னை	1942
3.	அந்தாதிக் கும்மி	—	—	—
4.	அர்ச் அலேக்கியர் சரித்திர ஏலேலக் கும்மி	ஜே. குருசு மேஸ்திரி	நாகர்கோயில்	1930
5.	அர்ச் அன்னம்மாள் திருப்பதியில் பிரசங்க வியாக்கியானக் கும்மி	அன்றோனிஸ்	யாழ்ப்பாணம்	1885
6.	அரிச்சந்திர மகாராஜன் பேரில் மனோன்மணி கும்மி	நரசிம்மையர்	தொட்டிக்கலை	1880
7.	அரிச்சந்திர மகாராஜன் பேரிற் கும்மி	ஆறுமுக சுவாமிகள்	திருவெண்காடு	1882
8.	அரிச்சந்திரன் கும்மி	மு. பொன்னுசாமி முதலியார்	—	1874
9.	அரிச்சந்திரன் கும்மி	—	மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம்	1880
10.	அரிச்சந்திரன் கும்மி	(பதி) ஏ. ரங்கசாமி முதலியார்	பூமகள் விலாசம் பிரஸ் சென்னை	1935

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
11.	அரிச்சந்திரன் கொம்மி	(பதி) இராசு நாயகர்	வித்தியா விநோத அச்சுக்கூடம்	1877
12.	அரிச்சந்திரன் கொம்மி	பெ. சுப்பிரமணிய செட்டியார்	திருமகள் விலாச அச்சுக்கூடம்	1875
13.	அருட்பிரகாசக் கும்மி	கணபதி ஸ்வாமி	நாடியம்மன் பிரஸ் பட்டுக்கோட்டை	1934
14.	அறுவடைத் திருநாள் கும்மி	எஸ். பாலய்யர்	எஸ்.பி.சி.கே. பிரஸ் சென்னை	1893
15.	அலங்காரக் கும்மி	—	—	—
16.	ஆண்டாள் கல்யாணக் கும்மி	—	—	—
17.	ஆரிய தேசாபிமானக் கும்மி	—	கே. ஆர். வி பிரிண்டர்ஸ் கோயமுத்தூர்	1893
18.	ஆவிடையார் கும்மி	குழந்தைக் கவிராயர்	உ.த,ஆ. நிறுவனம்	1932
19.	ஆனந்தக் கும்மிப் பாடல்	—	—	—
20.	ஆஷனாருக் காரணக் கும்மி	முகமதுக் கண்ணு	கொழும்பு	1827
21.	இண்டியா சக்ரவர்த்தினி விக்டோரியா இராஜாத்தியின் திருமுடி ஜுபிலித் திருநாள் அலங்காரப் பதம்சிங்காரக் கும்மி	அப்பாவுப் பிள்ளை	சென்னை	1887
22.	இராமாயணக் கும்மி	சிங்காரம்மாள்	ஸ்ரீ வேலன் பிரஸ் சிதம்பரம்	1935
23.	இராமாயணக் கும்மி	வெங்கட்ட ராமையர்	—	—

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
24.	இராமாயணக் கொம்மி	(பதி) அழகிய சொக்கநாத பிள்ளை	ஸன் ஆப் இந்தியா அச்சுக் கூடம், சென்னை	1923
25.	இராயபுரம் ரெயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மி	—	திருநெல்வேலி	1870
26.	இராவணன் கும்மி	முனிசாமி முதலியார்	சிரோன்மணி விலாச அச்சுக்கூடம்	3393
27.	இளையாத்தங்குடி நித்திய கல்யாணி கும்மிப்பாட்டு	அம்பிகாபதி பாரதி	—	—
28.	உருக்குமணி கல்யாணக் கும்மி	ஸ்ரீநிவாசய்யங்கார்	கலாரத்னாகரம் அச்சுக் கூடம், சென்னை	1896
29.	உலக விரட்சகர் வண்ணச் சந்த ஒயில் கும்மி	தோமஸ் புலவர்	திரிசிரபுரம்	1888
30.	உலாக் குழுக் காட்சிக் கும்மி	டி.பி. சாமிநாததேசிகர்	திருவிடை மருதூர்	1932
31.	உஷா கல்யாணக் கும்மி	வேம்பு அம்மாள்	செங்கல்வராய நாயகர் அர்பனேஜ் அச்சுக்கூடம்	
32.	கங்கள வேடக் கும்மி	வேம்பு அம்மாள்	செங்கல்வராய நாயகர் அர்பனேஜ் அச்சுக்கூடம் சென்னை	1896
33.	கட்டபொம்மு கும்மி	வி. எ. குமரையாகவிராயர்	சச்சிதானந்தம் அச்சுக் கூடம், விருதுநகர்	1931

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
34.	கலிங்காயி அம்மன் என்ற கலிங்க முடையாள் சந்தக் கும்மி	டி. ஆர். வேதாசலம்	—	—
35.	காந்திமதியம்பிகை பேரிற் கும்மிப் பாடல்	அழகிய சொக்கநாத பிள்ளை	சிந்தாமணி இயந்திரசாலை பாளையங்கோட்டை	1883
36.	காந்தியடிகள் தென்னிந்தியாவைப் பார்வையிட வந்தபோது அதனைப் புகழ்ந்து பாடிய கும்மிப் பாடல்கள்	—	—	—
37.	காரணக் கும்மி	முத்துச்சாமிக் கவிராயர் சர்க்கரைக் கவிராயர்	பரப்பிரமமுத்திரா சாலை	1878
38.	கிருஷ்ணலீலைக் கும்மிப் பாடல்	—	சங்கநிதி விளக்க அச்சுக் கூடம், சென்னை	1923
39.	கிருஷ்ணலீலை கும்மிப் பாடல்	—	—	—
40.	கிருஷ்ணன் கும்மி	(பதி) துரைசாமி பிள்ளை	ஆரிய பிரகாசினி அச்சுக் கூடம், திருநெல்வேலி	1886
41.	கும்மிப் பாட்டு	ஓ. காதிறு முகியித்தீன்	புதுச்சேரி	1882
42.	கும்மிப் பாட்டு	(பதி) காதிறு நயினா லெப்பை	வாணிவிலாச அச்சுக் கூடம்	1888
43.	கும்மிப் பாட்டு	(பதி) அல்லாப் பிள்ளை புலவர்	பரப்பிரம முத்திராச்சாலை	1883
44.	கும்மிப் பாட்டு	எம். பீட்டர்	—	1900

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
45.	கொம்மிப் பாட்டு	காசி விஸ்வநாத முதலியார்	சென்னை	1870
46.	கோப்பிக் கிருஷிக் கும்மி	ஜோஸப்	யாழ்ப்பாணம்	1869
47.	கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி	—	—	—
48.	கோயிற் கொம்மி என்னும் ஸ்ரீரங்கக் கொம்மி	மா. வாசுதேவப்பிள்ளை	மா. வாசுதேவப்பிள்ளை அமிர்தகுணபோதினி அச்சுக்கூடம், சென்னை	1937
49.	கோவிலின் கொடுமைக்கும்மி	(பதி) சுயமரியாதை இயக்க இளைஞர் கழகம்	தாய்நாடு பிரஸ், திருச்செங்கோடு	1933
50.	சாத்தனாள் சமூக வாலைக் கும்மி	(பதி) பாச்சகோ	யாழ்ப்பாணம்	1885
51.	சாவித்திரி அம்மன் கொம்மிப் பாட்டு	இராஜசேகர முதலியார்	—	1884
52.	சாஸ்திரக் கும்மி	வேதநாயக சாஸ்திரியார்	ஏ.எம்.பி. சென்னை	1884
53.	சிங்காரக் கும்மி	அண்ணாமலைக் கவிராயர்	அப்ஸர்வர் அச்சுக்கூடம் கோயம்பத்தூர்	1890
54.	சிங்கை அழகியவம்மன் கும்மி	—	உ.த.ஆ. நிறுவனம்	1982
55.	சிதம்பரக் கும்மி	கோபாலக்கிருஷ்ணபாரதி	ஆனைத்தாண்டாபுரம்	1869
56.	சிவ கங்கைச் சரித்திரக்கும்மி	முத்துசாமி (பதி) சந்திர சேகரன்	சென்னை	1954
57.	சிவகாமியம்மன் கும்மி	—	பிரேஸர் அச்சுக்கூடம் (குன்னூர்)	—
58.	சிவசுப்ரமணியர் சொருபாலங்காரக் கும்மி	ஏகாம்பர பரதேசி	சிதம்பரம்	1881
59.	சிவயோக வல்லிக் கும்மி	குழந்தைக் கவிராயர்	உ.த.ஆ. நிறுவனம்	1982

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
60.	சிறுத்தொண்ட நாயனார் திவ்விய சரித்திரக் கும்மி	பரங்கிரிவேல்	சுந்தர விலாச அச்சுக் கூடம்	1890
61.	சீரணியம்மன் கும்மி	குமாரசாமிக் கவிராயர்	உ.த.ஆ. நிறுவனம்	1982
62.	சீனய்யங்கார் கும்மி	காளியண்ணன் கவிராயர்	உ.த. ஆ. நிறுவனம்	1982
63.	சுதந்திரக் கும்மி	மாதவையா	சென்னை	1981
64.	சுப்பிரமணியர் வள்ளியம்மையைச் சிறையெடுத்தக் கொம்மிப் பாட்டு	—	பெரியநாயகியம்மன் அச்சுக்கூடம், சென்னை	1923
65.	சென்னைக் கந்தர் கும்பாபிஷேகக் கொம்மி	வி. சுந்தர முதலியார்	கிச்சினர் அச்சுக்கூடம் சென்னை	1981
66.	சௌமியநாராயணப் பெருமாள் கும்மி	—	உ த ஆ. நிறுவனம்	1882
67.	ஞான அக்தாக் கும்மி	அப்துற்றஹ்மான்	—	—
68.	ஞானக் கண்மணிக் கும்மி	அப்பா நாயகம்	—	—
69.	ஞானக் கும்மி	செ. மு. செய்யிது முகம்மது மவுலானா	மட்டக்களப்பு	1911
70.	ஞானக் கும்மி	ஷெய்குத்தம்பி ஞானியார் சாகிபு	கோட்டாறு	—
71.	ஞானக் கும்மி	ஷெய்குமுஹம்மது அப்துல்லா சாகிபு	—	—
72.	ஞானக் கும்மி	மதுரை வாலை சாமீ	—	—
73.	ஞானக் கும்மி	ஆர்.டி. சையப்ப முதலியார்	—	—
74.	ஞானக் கும்மி	பாலவானந்த சுவாமிகள்	—	—

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
75.	ஞானக் கும்மி	முத்துக்குமார கவிராஜர்	யாழ்ப்பாணம்	1891
76.	ஞானக் கும்மி	சையட் ஆபுபக்கர் புலவர்	—	—
77.	ஞானக் கும்மி	வேதநாயக சாஸ்திரியார்	சர்ச்சு மிஷன் அச்சுக்கூடம் பாளையங்கோட்டை	1873
78.	ஞானப் பெண் கும்மி	ஹமீது சாகிப் துரை	கேல்லி	1892
79.	ஞானரத்தினக் கும்மி	ஆசியம்மாள்	கீழக்கரை	—
80.	ஞானோபதேசப் பேரின்பக் கும்மி	சுப்பராயலு நாயகர்	சென்னை	1 890
81.	தசாவதாரத் திருவிளையாடல் சங்கிரகக் கும்மி	கோவிந்தசாமி முதலியார்	கோயமுத்தூர்	1882
82.	தத்துவ ஞானக் கும்மி	சிவகுமார மௌன குருசுவாமி	—	—
83.	திருஞானக் கும்மி	தேசிக ஐயங்கார்	சிதம்பரம்	1899
84.	திருப்போர்க்களம் கூத்தாண்டவர் கும்மி	சு. பொன்னுசாமி பத்தர்	சிதம்பரம்	1900
85.	திருப்போரூர் முருகர் சந்தக் கொம்மி	—	—	—
86.	திருமங்கை ஆழ்வார் சரித்திர கும்மி	—	—	—
87.	திருமணிக் கும்மி	திரவிய நாடார்	தூத்துக்குடி	1899
88.	திருமுருகன் அரஹரோஹராக் கும்மி	—	—	—
89.	திருவாசகக் கும்மி	—	ஈ. எல். மிஷன் பிரஸ் தரங்கம்பாடி	1869

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
90.	திருவிளையாடல் கும்மி	—	—	—
91.	திருவையாறு ஸ்ரீ ஆட்கொண்டார் கும்மி	நரசிம்ம பாரதியார்	திருவாதி	1895
92.	தில்லை மாகாளியம்மன் பேரில் கும்மி	குருசாமி தேசிகர்	கும்பகோணம்	1890
93.	தீக்கோள் கும்மி	மு. பொன்னுசாமி முதலியார்	—	—
94.	தீனெறி மானிடக் கும்மி	முகம்மது ஹம்சா லெப்பை	—	—
95.	தென்னமரக் கும்மி	—	பெரியநாயகி அம்மன் அச்சுக்கூடம், சென்னை	1923
96.	நடராஜர் கும்மி	—	பிரேஸர் அச்சிக்கூடம் குன்னூர்	—
97.	நபிபுல்லா பேரிற் காரணக்கும்மி	(பதி) அல்லாபிச்சை புலவர்	மனோன்மணி விலாச அச்சுக் கூடம்	1874
98.	நபிபுல்லா பேரிற் காரணக் கும்மியும் பதமும்	(பதி) முகம்மது இபுராகீம் சாகிபு ச. ஆதம்ராவுத்தர்	சுகரஞ்சனி முத்திராகஷா சாலை, திருச்சி	1876
99.	நம்மாழ்வார் சரித்திரக் வைபவக் கும்மி	இரங்கநாயகி அம்மாள் விகட குஞ்சரம்	திருச்சி	1922
100.	நல்லாண்டவர் கும்மி	—	உ.த.ஆ. நிறுவனம்	1982
101.	நவீனக் நாகரிகக் கும்மி	விகடகுஞ்சரம்	டவுன்பிரஸ், காஞ்சிபுரம்	1933
102.	நளச் சர்க்கரவர்த்தி கும்மி	நாராயண பிள்ளை	பிரபாகர அச்சுக்கூடம்	1874
103.	நன்னெறிக் கும்மி	—	ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ் சென்னை	1922

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
104.	நாகூர் மீராசாகிபு அலங்காரக் கும்மி	முனிசாமிப் பிள்ளை	—	1922
105.	நாலு மந்திரி கும்மி	நல்லூர் சின்னத்தம்பி புலவர்	ஞான சித்தியந்திர சாலை யாழ்ப்பாணம்	1934
106.	நௌகா சரிதமென்னும் கண்ணன் லீலை காக்ஷி ஓடக் கும்மி	—	—	—
107.	பத்திரசக் கும்மி	வேதாம்பாள் அம்மையார்	நாடியம்மன் பிரஸ் பட்டுக்கோட்டை	1934
108.	பக்திரஸ கும்மி	எஸ்.கே. ஸ்ரீனிவாசத் தேவர்	யதார்த்த வசனி பிரஸ் கும்பகோணம்	1934
109.	பஞ்சபாண்டவர் வைகுந்தக் கும்மி	—	ஆர் ஜி. பதி கம்பனி, சென்னை	1875
110.	பரிபூரணானந்தக் கும்மி	குருஸ்வாமி	சிதம்பரம்	1893
111.	பாத்திமா நாயகி தோத்திரம் மெஞ்ஞான அருளானந்த கீர்த்தனைக் கும்மி	முகமது முகைதீன் மஸ்தான் லெப்பை	மீனாம்பிகை பிரஸ் திருநெல்வேலி	1934
112.	பாதிரிகள் வாயாப்புக் கும்மி	(பதி) ஜீவரக்ஷார்த்த சித்தர் சபையார்	இந்து தியலாஜிக்கல் அச்சி யந்திர சாலை, சென்னை	1894
113.	பார்வதிக் கல்யாணக் கும்மி	ராமு அம்மாள்	இராமரனுஜம் அச்சகம் தென்காசி	1931
114.	பாழ்மனதுக்கறிவு கும்மி	—	கலைக்கியான முத்திராக்ஷர சாலை, திருப்பதி	1897
115.	புட்டுத் திருவிழாயாக மண்டபச் சிங்காரக் கும்மி	பழனியப்ப செட்டியார்	மதுரை	1896

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
116.	புதுமைக் கும்மி	ஹாதிசாகிப்	குகன் பிரஸ், சிதம்பரம்	1933
117.	புலிசுட்ட புகழ்க்கும்மி	எஸ். முத்துரத்தினம் பிள்ளை	கோபால விலாச பிரஸ், பொள்ளாச்சி	1935
118.	புவனாம்பிகை யாகக் கும்மி	சேஷய்யர்	சென்னை	1896
119.	பூர்வீக மகிமைக் கும்மி	பொன்னையா கோன்	விநாயகன் அச்சகம், பரமக்குடி	1931
120.	பெண்கல்விக் கும்மிப் பாட்டு	சையது முகமது சாகிப்	சரசுவதி விலாச மிஷன் பிரஸ், பரமக்குடி	1934
121.	போத்து ராஜ ஸ்வாமிகள் கொம்மி	சௌந்தர ராஜ உடையார்	—	—
122.	மகாபாரதக் கும்மி	இராமசாமி கவிராயர்	திருமகள் விலாச அச்சுக்கூடம்	1877
123.	மகாமகக் கும்மி (தொகுப்பு)	—	—	—
124.	மதறாஸ் கும்மி	—	எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை	1888
125	மதுரை பிட்டுத்திருநாள் கும்மி	நடேச பாரதியார்	வெங்கடேஸ்வரர் பிரஸ் மதுரை	1935
126.	மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் திருவிளையாடல் கோலட்டக்கும்மி	வையை இராமசுவாமி ஐயர்	—	—
127.	மதுரை மீனாக்ஷி பேரில் சந்தக்கும்மி	ஆர். துரைசாமி நாயுடு	ஹரி சமய திவாகரம் பிரஸ், மதுரை	1935
128.	மருதப் பாண்டியன் கும்மி	—	உ.த.ஆ. நிறுவனம்	1982

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
129.	மாடன் கும்மி	கவிராச குருசாமி	உ.த.ஆ. நிறுவனம்	1982
130.	மாதர் நீதிக் கும்மி	வீ. வைத்திய நாதஸ்வாமி ஸ்தபதியார்	நித்யானந்தா பிரஸ் திருவாரூர்	1938
131.	மாம்பழக்கொம்மி	அம்புஜத்தம்மாள்	சென்னை	1917
132.	மாமாங்க சரித்திரக் கும்மி	முனுசாமி முதலியார்	பாரதி பிரஸ், சென்னை	1933
133.	மார்க்கண்டேயர் சங்கீத சார ஓயிற் கும்மி	அப்பாவு முதலியார்	மெமோரியல் அச்சுக்கூடம் சென்னை	1887
134.	மான்மியக் கும்மி	—	—	—
135.	மானிடக் ம்மி	கிருஷ்ணையர்	ஆர்.ஜி. பதி கம்பனி, சென்னை	—
136.	மீனாட்க்ஷி அம்மன் கொம்மிகள்	கிருஷ்ணையர்	கோயமுத்தூர்	1887
137.	முத்துக் கருப்பாசாரியவர்கள் பேரில் பல சந்தக் கும்மி	சிதம்பர பாரதி	சென்னை	1880
138.	முத்துமாரியம்மன் கும்பாபிஷேகக் கும்மி.	தையல்நாயகி அம்மாள்	செட்டிநாடு பிரஸ் காரைக்குடி	1935
139.	முருகர் ஒயிற் கொம்மிப் பாட்டு	(பதி) மதுரை மூதலியார்	சற்குண நிதி அச்சுக்கூடம்	1881
140.	முருகைய பங்கஜாக்ஷி கும்மி	—	—	—
141.	மெய்ஞ்ஞானக் கும்மி	கச்சிப்பிள்ளையம்மாள்	இளையான்குடி	—
142.	மெய்ஞ்ஞானக் கும்மி	ஞானக்கொடி பாவா	நம்புதாளை	—
143.	மெய்ஞ்ஞானக் கும்மி	ஷெய்கனாஷெய்கு உதுமான் அலி	கடையநல்லூர்	—

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
144.	மெய்ஞ்ஞானக் கும்மி	மௌனம் சிவானந்த சுப்பிரமணிய சுவாமிகள்	—	—
145.	ருக்மணி கல்யாணக் கும்மி	இரங்கநாயகி அம்மன்	திருச்சி	1924
146.	வாக்காஸ்பத்திரி கும்மி	—	பூமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை	1923
147.	வடிவுடையம்மன் கும்மிப்பாடல்	நாராயணசாமி பிள்ளை	—	1887
48.	வயித்தியக் கும்மி	அகத்திய முனிவர்	சென்னை	1888
149.	வள்ளிக் கல்யாணக் கும்மி	வ.சு. செங்கல்வராய பிள்ளை	சென்னை	—
150.	வள்ளியம்மன் கும்மி	(பதி) அருணாசல முதலியார்	சுகவிரஞ்சனி முத்திராக்ஷர சாலை கோலாபுரம்	1878
151.	வாலைக் கும்மி	கொங்கன நாயனார்	—	1878
152.	வானமாமலை அலங்காரக் கொம்மிப் பாடல்	தெய்வநாயகப் பெருமாள் நாயகர்	ஸ்ரீ நிகேதன அச்சுக்கூடம்	1873
153.	விடுதலைக் கும்மி	—	—	—
154.	விபரீதக் கும்மி	மைதீன்ஷா ராவுத்தர்	விவேகபானு அச்சுக்கூடம் கரநூர்	1931
155.	விலைமாதர் கும்மி	—	ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ், சென்னை	1922
156.	விஸ்வநாதச் செல்வி கும்மி	தி. முத்துக்குமார பிள்ளை	திருநெல்வேலி	1898
157.	வீர நாராயணன் விஜய ஒயிற் கும்மி	பழனியப்ப முதலியார்	கேசவவிலாஸ் பிரஸ் ஜெயங்கொண்டான்	1934

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
158.	வேங்கைக் கும்மி	கவிகுஞ்சர பாரதி	திருவாதி	1894
159.	வேதாந்தக் கும்மி	நா.பெ.நா.மு. முத்து ராமையா	எஸ்டேட் பிரஸ் தேவகோட்டை	1920
160.	வேளூர் கும்பாபிஷேகக் கும்மி	அய்யாக்கண்ணு ஓதுவார்	பிரம்மவித்தியா யந்திர சாலை, வைத்தீசுரன் கோயில்	1890
161.	வைத்தியக் கும்மி	(பதி) கருணானந்த சுவாமிகள்	—	—
162.	ஜெகதீஸ்வரி சந்தக் கொம்மைப் பாடல்	தம்பா உபாத்தியாயர்	அம்பா சமுத்திரம்	1885
163.	ஸ்ரீஅன்னபூரணியம்மன் அட்ட பிரபந்தக் கும்மிப்பாட்டு	ஸ்ரீமாணிக்கவாசக சரணாலய சுவாமிகள்	கல்லல்	—
164.	ஸ்ரீஆட்கொண்டார் கும்மி	நரசிம்ம பாரதி	—	—
165.	ஸ்ரீகண்ணபிரான் கொம்மி	பொ.மு. கேசவ சுப்பராவ்	—	—
166.	ஸ்ரீபத்மாவதி கல்யாணக் கும்மி	சீதாலக்ஷ்மி அம்மாள்	சாரதா பிரிண்டிங் பிரஸ், அருப்புக்கோட்டை	1934
167.	ஸ்ரீ பிருந்தாவனக்காட்சி கும்மி	வேம்பம்மாள்	அம்பாள் விலாச அச்சு கூடம், கும்பகோணம்	1894
168.	ஸ்ரீரங்கத்திலெழுந்தருளிய ஸ்ரீரங்க நாயகர் கொம்மிப் பாடல்	வெங்கடாசல உபாத்தியார்	பாஸ்டர் அச்சுக் கூடம் சென்னை	1884

வரிசை எண்	பெயர்	ஆசிரியர்	பதிப்பிடம்	ஆண்டு
169.	ஸ்ரீரங்க நாராயணதாஸ சரித்திரமாகிய ஸம்பரதாயக் கும்மிப்பிரபந்தம்	வேங்கடா ராமானுஜ தாசர்	சந்திரவதானி அச்சுக்கூடம் திரிசிரபுரம்	—
170.	ஸ்ரீரங்கம் வழிநடை அலங்காரக் ஓயிற்கும்மி	—	—	—
171.	ஸ்ரீவரமங்கை கல்யாணக் கும்மி	—	—	—
172.	ஸ்ரீவல்லிப் புத்தூர் கோதை கும்மிப் பாடல்	—	ஆரியப்பிகாசினி	—
173.	ஸ்ரீவைகுண்ட ஏகாதசி விரதக் கும்மி	முனிசாமி முதலியார்	—	—

பிற்சேர்க்கை II

சுவடியுருவில் கும்மிகள்

1. அரிச்சந்திரன் கும்மி
2. கட்டப் பொம்மன் கும்மி
3. கட்டப் பொம்மன் சண்டைக் கும்மி
4. கன்னிவாடி முத்து மீனாம்பாள் கும்மி
5. கிருஷ்ணன் கும்மி
6. குன்றகுக்டி குமரன் கும்மி (குமாரசாமிக் கவிராயர்)
7. கூத்தக்குடி சிவகாமி அம்மன் கும்மி (கருப்பையா பாவலர்)
8. சந்திரானந்தக் கும்மி
9. சாத்திரக் கும்மி (கிருத்தவக் கும்மி)
10. சிறுத்தொண்டன் கும்மி
11. சுந்தரி கல்யாணக் கும்மி
1 . சுப்புத் தேவர் கும்மி (சுப்பண்ண தேவர்)
13. சுப்ரமணியர் கும்மி (குழந்தைக் கவிராயர்)
14. சௌமிய மூர்த்திக் கும்மி
15. ஞானக் கும்மி
16 ஞானக் வைகுண்டக் கும்மி
17. தாது வருஷத்துப் பஞ்சக் கும்மி
18. திருக்குருக்கை யானைக் கும்மி
19. திருட்டுக் கும்மி (குழந்தை கவிராயர்)
20. நந்திக் கும்மி
21. பற்பவாசனன் கும்மி
22. பாகவதக் கும்மி
23. பாண்டியன் கும்மி
24. பாலையானந்த சுவாமி ஞானக் கும்மி
25. மார்கழித் திருநாள் கும்மி
26. முத்தணைந்த முதலியார் கும்மி
27. முத்துக் குமார சுவாமி கும்மி
28 வீரபாண்டிய கட்டப் பொம்மன் கும்மி

அருஞ்சொல் அகராதி

அ

அக்னிமாடன் 291
அகநானூறு 4
அங்கப்பிரதக்ஷணம் 152
அங்காளம்மன் 295
அச்சுக்குதிரை 95, 112
அச்சுமட்டம் 94, 110
அஞ்சலித்தட்டு 12, 16
அட்டதிசைகள் 289
அட்டமச்சனி 73
அட்டாவதானம் 296
அடப்பை வரிசை 147
அடவு முறைகள் 8
அத்தியூத்து 268, 278
அதிவீரராமபாண்டியன் 268
அப்பிப் பாளையம் 165, 170
அப்பு நகர் 165, 170, 198
அபிசேக மண்டபம் 277
அபிடேகம் 152
அய்யம்பள்ளி 165, 220
அர்ச் அலேச்சியர் ஏலேலக்கும்மி 47
அரிச்சந்திரன் கும்மி 19, 25, 35
அருணாசல பூபதி 95, 113
அருணாசல ராசன் 93, 108
அலங்கை நகர் 165, 174
அழகிய அம்மன் 93
அழகிய நாயகி 89, 91, 117, 123
அழகிய சிற்றம்பலக் கவிராயர் 64, 65, 80, 243
அறம் வளர்த்த அம்மன் 293
அறம் வளர்த்த நாயகி 293
அனந்த பத்மநாபன் 229

ஆ

ஆதிவாரம் 154
ஆய்ச்சியர் குரவை 7
ஆரிய தேசாபிமானக் கும்மி 18
ஆவிடை நாயகி 86
ஆவிடையப்பன் 111
ஆவுடை 64
ஆவுடை நாதர் 64, 7,8 69, 73, 82, 87, 116,117, 121
ஆவுடை நாயகி 71, 116, 117,112, 121, 122, 123, 124, 125
ஆவுடை நாயகி கும்மி 118
ஆவுடையப்பன் 93, 94, 95, 96, 108, 110, 112
ஆவுடையம்மன் 118
ஆவுடையார் 66, 67, 75
ஆவுடையார் கும்மி 44, 64, 66, 72, 243

இ

இசக்கி 292
இடாகினி 150
இண்டாசு 214
இயற்கும்மி 17, 41, 43
இரட்டைக்கும்மி 44
இராமச்சந்திர தொண்டைமான் 93
இராமநாதபுரம் மாவட்டம் 64, 89, 116, 128, 226
இராயபுரம் ரயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மி 22, 33
இராமலிங்க அடிகள் 9
இராமானுஜர் 227, 230
இராமாயணக் கும்மி 21, 26
இராவண்டை போடல் 10
இராவணக் கும்மி 21
இராஜ கோபாலத் தொண்டைமான் 96
இராஜராஜ சோழன் 227
இராஜராஜன் 89
இரு சீரிரட்டைப் பாடல் 297
இருதயாலய மருதப்பர் 263, 268, 269, 270 272, 273, 274, 290
இருளாண்டி 203
இளசை நகர் 152, 155
இளையாற்றங்குடி 88, 89, 129
இஸ்லாமியக் கும்மிப்பாடல் 3

உ

உச்சி மாகாளியம்மன் 292
உத்தண்டிக்கவுண்டன் 170, 198
உத்தம நாயகர் 138
உபதேசக் காண்டம் 39
உள்ளங்கைத் தட்டு 12

ஊ

ஊற்றுமலை 262, 263, 264, 268, 269, 270
ஊற்றுமலைப் பிரபந்தத்திரட்டு 262

ஐ

ஐயாறப்பன் 293

எ

எழுசீர் தாழிசை முடுகிசைப் பாடல் 298
எழுபத்திரெண்டு பாளையப் பட்டு 210

ஏ

ஏலேலக்கும்மி 17, 25

ஒ

ஒத்தைப்பனை மாடன் கோவில் 293
ஒயிற்கும்மி 7, 17, 41, 297

ஓ

ஓரடிக்கும்மி 17, 43
ஓரடி முச்சீர் குன்றிய தாழிசைமேல் மடக்கிசைப் பாடல் 298

க

கச்சிகொண்ட பட்டீசுவரன் 293
கட்டபொம்மன் கும்மி 22, 46, 51

கட்டியக்காரன் 149
கடிகை முத்துப் புலவர் 263
கண்டிய கவுண்டன் 174, 210
கதைப் பாடல் 3, 12, 39
கந்தசாமி 177 219, 225
கந்த சுவாமி கோயில் 170
கந்தப்ப செட்டியார் 22
கர்நாடக நவாபு 163
கர்பா 50
கர்பா நடனம் 10
கரடிப் பெருமாள் 67, 117
கருத்திக் கவுண்டன் 168, 129
கருப்பண்ண சாமி67, 91, 104, 133, 169
கருப்பண்ணன் 75, 117, 122, 140, 250
கல்வாசல் நாடு 88, 89, 91, 103, 129, 132, 134, 136, 138,141, 146
கலிவெண்பா மாலை 262
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 9
கவிராச குருசாமி 296, 297
கன்றார்ப்பூர்க் கவிராயர் 262
கனகாபிசேகம் 189

கா

காங்கேயம் நாடு 165
காங்கையன் 157
காசிக்காண்டம் 39
காஞ்சிபுரம் காமாட்சியம்மன் 293
காட்டணன் 198
காடை நகர் 165,224
காண்டீபன் 158
காதிறு முஹிய்யத்தீன் 32
காமிலொலி நயினாமுகம்மது சாகிப் 22
காரணக் கும்மி 22
காரியக்காரர் 168, 192, 201 214
காரைச் சூராம்பட்டி 65
காவிரிப்பூம்பட்டினம் 129, 134 152
காளியண்ண தீரன் 169, 195
காளியண்ணன் 166, 225
கானாடு 88, 89,91, 103, 138
கானாடு காத்தான் 88

கி

கின்னரர் கிம்புருடர் 276

கீ

கீர்த்தனைக்கும்மி 17
கீரிப்பிள்ளையின் கதை 39
கீழையூர் வீரபத்திரன் 26

கு

குதித்தலடவு 16
குப்பண தீரன் 168, 192
கும்மாயம் 6
கும்மார் 50
கும்மார் ஆடல் 10
கும்மி கொட்டுதல் 4
கும்மியடித்தல் 3, 4
கும்மியாடுதல் 4
கும்மி கொட்டுதல் 5
குமரிச் செழியன் 9
குமரி மாவட்டம் 291
குமரேச சவுந்திரம் 94
குமாரசுவாமி6 4, 80,89, 935, 95, 96, 112, 113, 114, 11, 271, 281
குமாரசுவாமிக் கவிராயர் 65, 66, 67, 243
குமாரலெக்கையன் 245, 256, 258
குமுக்கு 6

குயப்பட்டராயர் 137, 160
குரவைக் கூத்து 6
குருசு மேஸ்திரி 25
குருவிக்கொண்டான் பட்டி 128
குலசேகரப்பட்டிணம் 292, 293, 294, 295, 296
குலசேகரம் 292
குலசை உலா 293
குழந்தைக் கவிராயர் 65, 242, 243, 247
குழந்தை நரவாணன் 65, 66
குழுமி கொட்டுதல் 5
குறுந்தொகை 4
குன்றக்குடி குமரன் கும்மி 4, 8

கெ

கெவுரி வல்வேந்திரராசன் 28

கே

கேரளன் 262

கை

கை கொட்டிக் களி 10, 50
கைலாகு கொடுத்து ஆடல் 16

கொ

கொடி மண்டபம் 239
கொண்டான் கொட்டுதல் 6
கொண்டி மாடு 82
கொப்பி கொட்டுதல் 3
கொம்மி அடி 4
கொம்மி கொட்டுதல் 3
கொம்மை 5
கொம்மை கொட்டல்

கோ

கோட்டியூர்க் கலம்பகம் 227
கோட்டியூர்ப் பிள்ளைத் தமிழ் 227
கோடிக்குமார சாமி 93, 108, 109, 114
கோதண்டபாணி 261
கோதை வல்லி 237
கோநகர் 88
கோப்புலி 160
கோப்புலி வார்க்க மாகாளித் துரை 159
கோபால கிருஷ்ண பாரதி 9, 20
கோயம்புத்தூர் 211
கோயிற் கொம்மி 4
கோலாட்டக் கும்மி 17
கோவை 164, 165
கோவை மாவட்டம் 163
கோனாடு 88, 89, 91, 103, 138

ச

சங்கிலித் தேவன் 168, 171, 192, 201
சங்கிலி மாடன் 291
சங்கீதக் கும்மி 17
சண்முகற் கொம்மி 9
சந்தக்கவி 41, 42
சந்தக்கும்மி 17
சந்தி மாடன் 291
சப்பாணிப் பருவம் 2
சம்போகவல்லி 252
சல்லாபவல்லி 251
சலவாத்துப்பாட்டில் கும்மி 12
சரச வல்லி 251, 252
சரவணப்பட்டி 165, 195

சரவணப்பட்டி பெரிய தம்பி 169
சரவண முத்தையன் 266, 267, 268, 271, 272, 273, 274, 278, 280, 284
சரவண முத்து 285, 286, 288
சரவண முத்துவேல் 265, 275
சரவண முத்தேந்திரன் 277, 280
சன்னாசித் தெய்வம் 67, 752

சா

சாமியண்ண தீரன் 169, 194

சி

சிகரம் 16
சிங்கப் பிடாகை 88
சிங்கம் புணரி 88
சிங்க மைய மண்டபம் 239
சிங்காரக் கும்மி 21, 22
சிங்கை அழகியம்மன் 88, 91
சிங்கை அழகியம்மன் கும்மி 95, 98
சிங்கை அழகிய தேவி 98, 115
சிங்கை அழகிய நாயகி 91, 98, 101, 106
சிங்கை அழகிய வல்லி 113
சிங்கை நாடு 88, 93, 96
சிங்கைப் பதி 123
சித்திரபானு வருஷம் 164, 169
சிதம்பரக் கும்மி 9, 20, 33
சிதம்பரம் 93
சித்தியல் மடக்கிசைப் பாடல்கள் 43
சிலப்பதிகாரம் 4, 13
சிலாகைக் கயிறு 135
சிவகங்கை 88
சிவகங்கைக் கும்மி 51
சிவகங்கை சரித்திரக் கும்மி 22, 28, 34, 49
சிவகங்கைச் சாலை 226
சிவகங்கை தாலுகா 128
சிவஞானம் 129, 151
சிவயோகவல்லி 64, 67, 72, 73 82, 116, 119
சிவயோக வல்லிக் கும்மி 44, 116
சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக்கொம்மி 8
சிறுத்தொண்ட நாயனார் திவ்விய சரித்திரக் கும்மி 20
சிறுநலூர் 128
சின்னத்தம்பி 173, 174, 207, 211, 212, 295, 296, 303, 304
சின்னத்தம்பிக் கவுண்டன் 169, 174, 184, 195, 204, 208, 209, 210
சின்னத்தம்பித் தீரன் 172, 205, 206, 214
சின்னமலை 165
சின்னமலைக் கும்மி 18, 22
சின்னய்யன் 170, 198

சீ

சீரணியம்பதி 146
சீரணியம்மன் 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 136, 137
சீரணியம்மன் கும்மி 128, 129, 130
சீரணியூர் 123, 128, 129, 131, 132, 134, 137, 139, 151 161,

சீவக சிந்தாமணி 4, 5
சீவகன் 159
சீனய்யங்கார் 164, 165, 166, 167, 168, 169, 170, 171, 172, 173, 176, 177, 179, 185, 186, 188, 189, 190, 191, 192, 193, 194, 195, 196, 197, 199, 200, 201, 202, 203, 204, 206, 207, 208, 212, 214, 215, 217, 218, 221, 222, 223, 224, 225
சீனய்யங்கார் கும்மி 22, 27, 49, 51, 164, 166, 181, 184
சீனய்யங்கார் கும்மிப்பாடல் 165
சீனுபாண்டியன் 192

சு

சுடலை மாடன் 291, 292, 293, 294
சுடலை முத்து 295, 296
சுடலைமுத்து மகிபன் 297
சுதந்திர முதலியார் 38
சுந்தராஜ்ஜீயா அம்மன் 292
சுப்பிரமணிய பாரதி 9
சுப்பிரமணியன் 272, 280, 281
சுப்புத் தேவர் 22
சுப்பையா 263
சுரதலெச்சணம் 148
சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயர் 21, 38

செ

செடில்குத்தி 154,
செம்பூராங்கல் 89
செல்லப்பதிரன் 169, 194
செவாஹூரணி 128
சென்னைக் கந்தர் திருவிழாக் கொம்மி 38

சே

சேலம் 163
சேவற்பாட்டு 297
சேனைநாதர் 227
சேனையர்கோன் 230, 240

சை

சையது ராவுத்தர் 168, 192

சொ

சொக்க நாராயணர் 229, 232

சோ

சோபன மண்டபம் 239

சௌ

சௌமிய நாராயணர் 229
சௌமிய நாராயணப் பெருமாள் 226, 227, 228, 230, 231
சௌமிய நாராயணப் பெருமாள் கும்மி 16, 43, 52, 226, 231 232,

ஞா

ஞானக்கும்மி 21, 28, 38
ஞானோபதேசப் பேரின்பக் கும்மி 21

டா

டாக்டர் உ.வே.சா. 263, 264

த

தட்டடவு 16
தட்டியங்கொட்டுதல் 6
தடியடி ஞாயம் 174
தண்டிகேசன் 120
தண்ணீர்தொண்டு 11
தமிழ் ஆழ்வார் 230, 240

தா

தாது வருடம் 78
தாது வருடப் பஞ்சம் 66, 71
தாது வருஷத்துப் பஞ்சக் கும்மி 22
தாராபுரம் 165, 175
தாளையம் 165, 195
தானாபதிகள் 168, 192

தி

திண்டுக்கல் 164, 169, 170, 178, 199
திண்டுக்கல் பேட்டை 165, 197
திப்பு 163, 164
திருக்குறள் 89
திருக்கோட்டி நகர் பெருமாள் 238
திருக்கோட்டியூர் 226, 227, 228 229, 230, 231, 234, 237
திருக்கோட்டியூர் நம்பி 227, 230 240
திருக்கோட்டியூர் மகாத்மியம் 226
திருச்சிற்றம்பலக் கவிராயர் 117
திருந்திய கலைகள் 2
திருந்திய பாடல் 3
திருநெல்வேலி 282
திருநெல்வேலி மாவட்டம் 88, 292
திருவேங்கடநாதன் 263, 264
திருப்பத்தூர் 88, 226
திருப்புகழ் 88
திருமங்கையாழ்வார் 227
திருமணிக்கும்மி 21
திருமலை வேலன் 273
திருமழிசையாழ்வார் 227
திருவரங்கம் 227
திருவாசகக் கும்மி 21
திருவாடனைத் தாலுகா 128
திருவையாறு 293
திருவையாறு ஸ்ரீஆட் கொண்டான் கும்மி 20
தில்லை மாகாளியம்மன் கும்மி 21

தீ

தீரன் சின்னத்தம்பி 180, 210
தீரன் சின்னமலை 165

து

தும்புரு நாரதர் 148

துரிதம் 17
துருவன் 155

தெ

தெய்வ சிகாமணி 255
தென்காசி 298,273, 279, 287
தென்பழனாபுரி 181, 185
தென்னை மரக் கும்மி 19, 27,43

தே

தேவணன் 170, 198
தேவ நல்லூர் 272, 281

தொ

தொன்னூற்று மலை 269

தோ

தோரணவாயில்

ந

நடராசர் கும்மி 45,
நடேசர் கொம்மி 9
நந்தன ஆண்டு 66, 71
நந்தன ஆண்டுப் பஞ்சம் 66
நந்தனத் தாண்டு 72, 75, 80
நபியுல்லா பேரில் காரணக் கும்மி 21
நம்பிக் கோவில் மலை 11
நரவாணன் 66, 72, 80
நல்லாண்டவர் 242, 244, 245 248, 249, 250, 254, 256, 258, 260, 261
நல்லாண்டவர் கும்மி 242,243 248
நல்வாசல் நாடு 146
நவநீத கிருட்டிண சுவாமி 263 264, 268, 270, 288
நவபத்து 148
நளன் கும்மி 19
நன்னன்னா கொட்டுதல் 6
நன்னெறிக் கும்மி 18, 29

நா

நாகலாபுரத்துக் கோடாங்கி 292
நாச்சி முத்தேந்திரன் 224
நாட்டாண்மைக்காரர் 168,170, 193, 194, 197, 200, 218
நாட்டுப் புறக்கலை1, 2, 3.10, 49
நாட்டுப்புறத் தெய்வம் 291, 296
நாட்டுப்புறப் பாடல் 6, 9
நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை 9
நாலடியார் 39
நாலு செட்டியார் 259
நாலு மந்திரிகள் கும்மி 19, 38
நாற்பத்து முக்கோண எந்திரம் 129, 151
நாற்பத்து முக்கோண சக்தி எந்திரம் 134
நானாடு 88, 103

நீ

நீதிக் கும்மி 38
நீர்ப்படு காதை 14
நீலாம்புச வேணி 252

நெ

நெல்சன் 165, 180
நெல்சன் துரை 177, 178
நெல்லித் தோப்பு 11
நெல்லீசன் துரை 182,220, 221
222, 224, 2
நெல்லை 266, 273, 280, 291
நெல்லையப் பேந்திரன் 265,
271, 272, 280, 281

நை

நைடதம் 4
நைமித்தியம் 152

ப

பகவதி அம்மன் 10
பணமாபுரி 268, 286
பத்திரகாளி அம்மன் 292
பதாகம் 16
பதிணெண் கீழ்க்கணக்கு 4
பப்பரப்புளி அம்மன் 292
பரஞ்சோதி 165
பள்ளி கொண்ட பெருமாள் 226
பன்றி மாடன் 291
பனங்காய் உருளி 11
பஞ்ச கல்யாணி 94, 95, 111,
113
பஞ்ச தந்திரி 192
பஞ்சலக்கணப்பரி 289
பழமொழி 4
பழனாபுரி 165
பழனி 164, 169. 171, 173,
179, 181, 195, 201
பழனிச் சீமை 172, 177, 178
203, 225
பழனிக் கிராமங்கள் 221
பழனித் தாலுகா 164, 165,
167, 178, 190
பழனி நகர் 207
பழனிப்பதி 223
பழனியப் பேந்திர கோப்புலி 136
பழனியாண்டவர் 177, 219

பா

பாண்டிக் கவிராயர் 243
பாண்டுக் கவிராயர் 65
பாதிரிகள் வாய்ப்புக் கும்மி 21,
28
பாரதிதாசன் 9
பாலகிருட்டிணப் பிள்ளை 168
பாழ்மனத்துக் கரவுக் கும்மி 18,
29
பாளையக்காரர் 157, 163
பாஸ்கரன் 265

பி

பிரதட்சணம் 161

பில்கணீயத்தழுவல் 9
பிள்ளைத் தமிழ் 2

பீ

பீத்தரு சாய்பு 182, 188, 201, 205, 208, 209, 210 211, 213
பீற்றர் 165, 167, 171, 172, 173. 174, 191

பு

புதுக்கோட்டை 89, 95, 96
புலவர் காதிறு முஷிய்யத்தீன் 25
புலவர் முத்துசாமி 7
புளியங்குடி 270
புளிய நகர் 165, 168, 170, 194
புறப் பாட்டு 297
புனித நீதர் 230, 240

பூ

பூங்குன்றை நாடு 88, 89, 91 103, 138
பூதத்தாழ்வார் 227
பூதாதி பூத கணங்கள் 148
பூம்புகாரி 89
பூவம் பட்டி 165
பூலாம் பட்டி 168, 192

பெ

பெரிய உடையாத் தேவன் 192
பெரிய தம்பி 195
பெரியாழ்வார் 227
பெல மாடன் 291

பொ

பொங்கல் பண்டிகை 10

பே

பேயாழ்வார் 227

ம

மகாதேவி 293
மகா பாரதக் கும்மி 21
மகாமாயி 150, 151, 152, 153
மகிடா சுரன் 133
மகிழ்மாலை மாறன் 227
மங்கம்மாள் சாலை 249
மங்கைப் பாகக் கவிராயர் 242
மத்தியம் 17
மதறாஸ் கும்மி 22
மதுரை 163, 164, 165, 167, 174, 178, 179, 189, 202, 205, 208
மதுரை மாவட்டம் 178
மயான மாடன் 291
மராமரங்கள் 168
மருங்காபுரி ஜமீன்தார் 65
மருதப்ப சீவலன் 263
மருதப்பப் பாண்டியர் 262
மருதப்ப ராசேந்திரன் 289
மருதப்பன் 265, 262, 264
மருதப்பன் திருவருட் பாமாலை 262
மருத பாண்டியன் 271
மருதப் பாண்டியன் கும்மி 22, 51, 262, 264, 272, 275
மருதை வீரன் 248

மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் 242
மலையாள நாடு 292
மலையாள மாவட்டம் 193
மன்றாடியார் 166, 224
மனுநீதர் 227

மா

மாகாளி 151
மாகாளி மகராசன் 136, 158
மாடத்தி 291, 304
மாடன் கும்மி 17, 21, 52, 291, 292, 294, 297, 298
மாடன் கோயில் 296
மாணிக்கவல்லி 275
மாதர் நீதிக்கும்மி 29, 31, 38 39
மாமணி மண்டபம் 293
மார்க்கண்டன் 77, 110, 113
மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் 96
மாரப்பதீரன் 170, 174, 198, 210
மாரிமுத்தம்மன் 117, 131, 132, 133, 134, 137, 139, 140, 141, 142, 144, 146, 149, 150, 161
மாரிமுத்தாள் தேவி 158
மாரிமுத்து 123
மாரியம்மன் 10
மாவடி 4
மாவிசக்கி 292
மாவிளக்கு 156
மாவிளக்கேற்றல் 10
மாவை நகர் 244, 245
மாவையம்பதி 249
மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் 293
மான் விடு தூது 65, 242
மானிடக் கும்மி 18

மி

மிதிலைப்பட்டி 64, 65, 88, 116, 241

மீ

மீனாட்சியம்மன் 21, 167, 188, 189

மு

முடுகியலடி 41
முத்தாரம்மன் 296
முத்தாலம்மன் 10
முத்திரை மோதிரம் 164, 189
முத்துக் கருப்பன் 147
முத்துக் குமரேந்திரன் 265 271, 272
முத்துப் பாலாண்டி 136, 158
முத்து மாரியம்மன் 128, 130, 139, 140, 141, 151, 161
முத்துக் வீரக்கவிராயர் 271
முத்து வீரப் புலவர் 270
முத்து வீராயி கும்மி 18
முப்பிடாரியம்மன் 292
முருகன் ஒயிற்கும்மி 36
முழுக்கைத்தட்டு 12
முளைப்பாரி 11, 14
முளைப்பாரியிடல் 10
முன்கைத்தட்டல் 16
முன்னோடித் தெய்வங்கள் 147

மெ

மெட்டடவு 16
மெய்யண்ணன் 166, 195

மே

மேகப்பட்டி 204
மேகரைப்பட்டி 165, 172
மேங்காடு 169, 202, 203, 206

மொ

மொய்யணன் 224

மோ

மோகன் குமாரலெக்கையன் 256

ர

ரதிகாந்தன் 161
ரவிகுலராமன் 158

ரா

ராபர்ட் 165, 170, 179, 180, 182
ராச சிங்கைப்பதி 103
ராச விசய ரகுநாதராய பாதர் தொண்டைமான் 108
ராம பாண்டியன் 288

ல

லக்காஸ்பக்திரி கும்மி 29
லட்சுமணன் 203

வ

வட்டார வழக்கு 182
வட ஆற்காடு 6
வண்ணார மாடன் 291
வயித்தியக் கும்மி 19, 33
வரலாற்றுக் கும்மிப்பாடல் 164
வள்ளியம்மன் கும்மி 20

வா

வாசுதேவ நல்லூர் 266, 272
வாய்மொழிப்பாடல்கள் 3
வாரக்க மாகாளித்துரை 160
வாலைக் கும்மி 21

வி

விக்கிரமசிங்கபுரம் 88
விசய ரகுநாத ராயர் 93, 95
விசய ரகுநாதராய பாதர் தொண்டைமான் 114, 115
விடுதலைக் கும்மி 22
விரல் தட்டு 12
விராலிமலை 82
விருது நகர் 264
விருதுப் பட்டி 264
விலைமாதர் கும்மி 18, 27, 29
விளம்பம் 17
விஸ்வக்சேனர் 227

வீ

வீரகாளியம்மன் 292
வீரகேரளமால் கவிராச குருசாமி 294, 295
வீரகேரளம் புதூர் 262

வீரகேரளம் புதூர் தெப்பத் திரு நாள் 262
வீரணக் கவுண்டன் 170, 198
வீரப்ப வாரச்ச மாகாளி 136, 137 158
வீரபத்திரன் 147
வீரன் குமாரசாமி 109
வீரைவளநாடு 293

வெ

வெங்கலேந்திரன் 65
வெங்கிட்டய்யர் 167, 188
வெங்கிடாச்சாரி 168, 184, 192 223
வெள்ளிவில்லைக்காரன் 183, 212
வெள்ளையண்ணதீரன் 170, 198

வே

வேதாந்தக் கும்மிகள்
வேலங்குடி 88
வேலூர் கும்பாபிசேகக் கும்மி 22

வை

வைகாபுரி 164, 181, 189
வைகாவூர் 135
வைகைநதி 204, 252
வைகுண்டப் பெருமாள் 226
வைகுண்டக் கும்மி 21, 31
வையாளி 16

ஜீ

ஜீபிலித் திருநாள் கும்மி 22

ஜெ

ஜெகதீஸ்வரி சந்தக் கொம்மிப் பாடல் 21

ஸ்ரீ

ஸ்ரீ பிருந்தாவனக் காட்சிக் கும்மி 33
ஸ்ரீ பெரும்புதூர் 230
ஸ்ரீ பெரும்புதூரின் நாதர் 240
ஸ்ரீ ரங்கநாதர் கும்மி 204
ஸ்ரீரங்க கொம்மிப் பாடல்

நிறுவன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	12	00
2.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—III	8	00
3.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—IV	10	00
4.	தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு	15	00
5.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—V	12	00
6.	தமிழ் இலக்கியக் கொள்கைகள்—	16	00
7.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	14	00
8.	தமிழர் ஆடைகள்	16	00
9.	தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	16	00
10.	தமிழர் கண்ட மனம்	9	00
11.	தமிழர் தோற்கருவிகள்	10	00
12.	தமிழர் உணவு	12	00
13.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	10	00
14.	தந்திவனபுராணம்	15	00
15.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	10	00
16.	தொல்காப்பியம்—நூன்மரபு	9	00
17.	தொல்காப்பியம்—மொழிமரபு	9	00
18.	தொல்காப்பியம்—மரபியல்	10	50
19.	தொல்காப்பியம்—பிறப்பியல்	8	00
20.	தொல்காப்பியம்—புணரியல	10	00
21.	தொல்காப்பியம்— தொகைமரபு		
22.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	12	00
23.	கருவூரார் பலதிரட்டு	12	00
24.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	7	50
25.	பணவிடு தூது	6	00
26.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	5	00
27.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர்!	6	00
28.	கூவநூல்	7	00
29.	பிரபந்தத் திரட்டு	16	00
30.	மனைநூல்	15	00
31.	A Study of Perunkatai	12	00
32.	Papers on Tamil Studies	15	00
33.	Thiru Murugan	5	00
34.	Dissertations on Tamilology	10	00
35.	Tamil Research through Journal	7	50
36.	Dr. Mu. Va.	20	00
37.	The Tamil writers Directory	10	00
38.	Tamil Drama	20	00
39.	Cultural Heritage of the Tamils	20	00
40.	Literary Heritage of the Tamils	50	00
41.	Heritage of the Tamils— Language and Grammer	22	00
42.	Epigraphical Evidences for Tamil Studies	10	00

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி. டி. டி. ஐ. தரமணி சென்னை— 600 113.

Wrapper printed at PONMANI ART PRINTERS, MADRAS-5.